D
V2ll,31 N73
31N73; 43;7
61628

வெளியீடு—10—1—1974]
Issued—10—1—1974]

தமிழ்நாடு சட்டப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES

# பணித்துறை வெளியீடு

## OFFICIAL REPORT

திங்கட்கிழமை 1973 நவம்பர் 19

Monday 19th November 1973

தொகுதி XLIII—எண் 1

Volume XLIII—No. 1


©
தமிழ் நாடு அரசு
1973

GOVERNMENT OF TAMIL NADU
1973



சட்டப் பேரவைத் துறை
சென்னை-9.

*Legislative Assembly Department*
*Fort St. George, Madras-9*

விலை 50 காசுகள்]
PRICE 50 PAISE]

# Tamil Nadu Legislative Assembly Debates

NINTH SESSION OF THE FIFTH LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

(19th to 22nd November 1973)

VOLUME XLIII (Nos. 1 to 4)

TABLE OF CONTENTS

*Monday, 19th November 1973.*


| | Pages |
|---|---|
| Personnel of the Government of Tamil Nadu ... | i-vi |
| Principal Officers of the Tamil Nadu Legislative Assembly ... ... ... ... | vii-viii |
| List of Members of the Tamil Nadu Legislative Assembly with their Constituencies ... ... | ix-xvi |
| 1. Obituary References ... ... ... | 1-2 |
| 2. Questions and Answers ... ... ... ... | 2-33 |
| 3. Points of Order— | |
| (a) Opportunities to put more supplementary questions ... ... ... ... ... | 33-35 |
| (b) Expunction of irrelevant points of order ... | 48-50<br>51-54<br>55-57 |
| (c) Non-allotment of seat to Thiru K. A. Mathialagan in the front row ... ... ... | 50-51 |
| (d) Arrest of Thirumathi T. N. Anandanayaki and some others ... ... ... ... | 82-84 |

61628


PAGES.

Monday, 19th November 1973 *cont.*

4. Anouncement—

Panel of Chairmen ... 54–55

Government Motion—

Taking up of Resolution re-inclusion of Neyveli Second mine cut in Fifth Plan ... ... 5

6. Government Resolution—

Inclusion of Neyveli Second mine cut in Fifth Plan ... — ... ... ... ... 57–74

7. Discussion on Annual Financial Statement of Electricity Board for the year 1973–74 ... 74–97

8. Papers laid on the Table ... ... ... 97–113

Tuesday, 20th November 1973

1. Questions and Answers ... ... ... 151–193

2. Privilege Matter—

Arrest of Thirumathi T. N. Anandanayaki while proceeding to the Assembly ... ... 194–199
206–209

3. Point of Order—

Opportunites to Members to speak in the absence of Leader or Deputy Leader of the parties ... 199–206

4. Adjournment Motion—

Enquiry into the misappropriation of Madras Corporation funds ... ... ... ... 209–224

5. Announcement—

Business of the House ... ... ... 225

6. Discussion on Anual Financial Statement of the Electricity Board for the year 1973–74—contd. 225–280

7. Papers laid on the Table ... — ... 281





PAGES

Wednesday, 21st November 1973.

1. Questions and Answers ... ... ... 293–348

2. Privilege Matters—

(*a*) Arrest of Thirumathi T. N. Anandanayaki while proceeding to the House—*cont.* ... 348–350

(*b*) Demonstration in front of the house of Thirumathi T. N. Anandanayaki, ... 350–366

(c) Publication in 'Thennagam' casting reflections on the Speaker ... ... ... 366–368

3. Privilege Motion—

Remarks by Dr. H. V. Hande while withdrawing from the House ... ... ... ... 364–365

4. Adjournment Motions—

(*a*) Strike in the State Transport Department in Kanyakumari district ... ... ... 369–384

(*b*) Strike by workers in Harvey Mills, Vikramasingapuram ... ... 384–385

5. Presentation of Report—

First Report of the Public Undertakings Committee on the Audit Report of accounts of the Housing Board ... ... ... ... 385–386

6. Discussion on the Annual Financial Statement of the Electricity Board for the year 1973–74—cont. ... ... ... ... ... ... 386–430

7. Papers laid on the Table ... ... ... 430–431

Thursday, 22nd November 1973

1. Questions and Answers ... ... ... 441–502

2. Privilege Matter—

Demonstration in front of the house of Thirumathi T. N. Anandanayaki—*cont.* ... ... ... 502–503

PAGES

Thursday, 22nd November 1973—*cont.*

3. Adjournment Motion—
   Closure of Government Arts Colleges in Tiruchirapalli, Thanjavur, South Arcot and North Arcot districts due to fast by hostel students ... 503–510

4. Announcements—
   (*a*) The Tamil Nadu Excise (Amendment) Bill, 1973 ... ... ... ... ... 510
   (*b*) The Tamil Nadu Prohibition (Suspension of Operation) Amendment Bill, 1973 ... ... 511

5. Bills—
   (a) The Tamil Nadu Excise (Amendment) Bill, 1973 ... ... ... ... ... 510
   (*b*) The Tamil Nadu Prohibition (Suspension of Operation) Amendment Bill, 1973 ... ... 511
   (*c*) The Tamil Nadu Cultivating Tenants Protection (Amendment) Bill, 1973 ... ... 511–512
   (*d*) The Tamil Nadu Motor Vehicles (Tamil Nadu Amendment) Bill, 1973 ... ... ... 512

6. Non-official Business—
   (*a*) Bills—
   The Tamil Nadu Dowry Prohibition Bill, 1973 512–541
   (*b*) Resolutions—
   Fixation of Prices of essential commodities under the Essential Commodities Act ... ... 542–573

7. Papers laid on the Table .. ... ... 573–574

# தமிழ் நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்

---

## தமிழ் நாடு ஆளுநர்.

## மேதகு திரு. கோதர்தாஸ் காளிதாஸ் ஷா

---

அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. **மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (முதலமைச்சர்)** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : பொதுத் துறை, நிதி, திட்டம், பொது நிர்வாகம், இந்திய சிவில் பணியாளர் தொகுதி (ஐ.சி.எஸ்.), இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதி (ஐ.ஏ.எஸ்.) அதிகாரிகள், மாவட்ட வருவாய்த் துறை அதிகாரிகள், காவல் துறை, தேர்தல்கள், படச்சுருள் தொழில் நுட்பவியல்.

2. **மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (கல்வி–சுற்றுலாத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : தொழில் நுட்பக் கல்வி உட்பட கல்வி, ஆட்சி மொழி, சட்டமன்றம், சுற்றுலா, சுற்றுலா அபிவிருத்திக் கழகம்.

3. **மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : பொதுச் சுகாதாரம், மருத்துவம், தமிழ்நாடு கழிவு நீர்—குடிநீர் வாரியம், நகர அமைப்பு.

4. **மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** (பின் தங்கிய வகுப்பினர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : பின் தங்கிய வகுப்பினர் நலன், செய்தி–விளம்பரம், பத்திரப் பதிவு, முன்னாள் இராணுவ வீரர்கள், சீரணி, இளைஞர் அணி, பூதான—கிராமதான இயக்கங்கள்.

5. **மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** (அரிசன நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : அரிசன நலம், மகளிர்–சிறுவர் நலம், மீனளம், இரவலர்கள் விடுதி, அனாதை இல்லங்கள், சீர்திருத்தப் பள்ளிகள், கண்காணிப்புப் பணிகள், வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், இடம் பெயர்ந்தவர்கள், பத்திரிகைக் காகிதக் கட்டுப்பாடு, பயண அனுமதி சீட்டுகள்.

6. **மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** (பொதுப்பணித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : பொதுப் பணிகள், சிறு பாசன சிறப்புத் திட்டங்கள் உட்பட சிறு பாசனம், நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள்.

7. **மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (தொழில் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : தொழில்கள், ஆலைத் துணிகள், நூல், கைத்தறி, கனிப் பொருள்கள், சுரங்கங்கள், இரும்பு—உருக்குக் கட்டுப்பாடு, வேலை வாய்ப்பும் பயிற்சியளித்தலும், கம்பெனிகள், சட்டம், நீதி மன்றங்கள், சிறைச்சாலைகள்.

8. **மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (வருவாய்த் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : வருவாய், வருவாய்த் துறை வாரியம், மாவட்ட வருவாய் நிறுவனங்கள், மாவட்டத் துணை ஆட்சித் தலைவர்கள், வணிக வரிகள், மதுவிலக்கு, ஆயத் துறை வருவாய், முகம்மதியர் அறக் கட்டளைகள்.

9. **மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் :** (வேளாண்மைத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : வேளாண்மை, உணவு உற்பத்தி, வேளாண்மைப் பொறியியற் பிரிவு, கால்நடை வளர்ப்பு.

10. **மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** (உள்ளாட்சித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : நகராட்சி நிர்வாகம், சமுதாய நல வளர்ச்சி ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள்.

11. **மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** (உணவு—கூட்டுறவுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : உணவு, கூட்டுறவு, வேளாண்மை, மறு நிதி உதவி.

12. **மாண்புமிகு திரு. க. இராசாராம் :** (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : தொழிலாளர், வீட்டு வசதி-இட வசதிக் கட்டுப்பாடு, எடைகள்—அளவைகள் குறித்த சட்டம், புள்ளிவிவரம், குடிசை மாற்று வாரியம்.



13. **மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** (மின்சாரத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : மின்சாரம், கடன் கொடுத்தல் குறித்த சட்டம், கிராமவாசிகள் கடன்பட்டிருத்தல், சீட்டுகள் குறித்த சட்டம், காடுகள், சின்கோனு, திரைப்படச் சட்டம்.

14. **மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** (போக்குவரத்துத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் வரி, எழுதுபொருள்—அச்சுத்துறை, அரசு அச்சகம்.

15. **மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** (அறநிலையத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : அறக் கட்டளைகள், கதர்-கிராமத் தொழில்கள், கிராமத் தொழில்கள் திட்டம், பால் வழங்குத் துறை, பால்வள முனைப்புத் திட்டங்கள் திட்டம், தமிழ்நாடு பாற்பண்ணை வளர்ச்சிக் கழகம்.

## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR OF TAMIL NADU.

THIRU KODARDAS KALIDAS SHAH.

---

*Members of the Council of Ministers.*

1. THE HON. DR. M. KARUNANIDHI (Chief Minister), in-charge of Public, Finance, Planning, General Administration, Matters relating to Indian Civil Service and Indian Administrative Service Officers, District Revenue Officers, Police, Elections and Film Technology.

2. THE HON. DR. V. R. NEDUNCHEZHIYAN (Minister for Education and Tourism), in-charge of Education including Technical Education, Official Language, Legislature and Tourism and Tourist Development Corporation.

3. THE HON. THIRU K. ANBAZHAGAN (Minister for Health), in-charge of Public Health, Medicine, Tamil Nadu Drainage and Water Board and Town-Planning.

4. THE HON. THIRU N. V. NATARAJAN (Minister for Backward Classes) in-charge of Backward Classes, Information and Publicity, Registration, Ex-Servicemen, Prosperity Brigade, Youth Service Corps, Bhoodan and Gramdan.

5. THE HON. THIRUMATHI SATHYAVANIMUTHU (Minister for Harijan Welfare), in-charge of Harijan Welfare, Women's and Children's Welfare, Fisheries, Beggars' Home, Orphanages, Approved Schools and Vigilance Services, Indian Overseas and Refugees and Evacuees, Newsprint Control and Passports.

6. THE HON. THIRU P. U. SHANMUGAM (Minister for Public Works), in-charge of Public Works, Minor Irrigation including Special Minor Irrigation Programme Works, Highways and Ports.

7. THE HON. THIRU S. MADHAVAN (Minister for Industries), in-charge of Industries, Textiles, Yarn, Handloom, Mines and Minerals, Iron and Steel Control, Employment and Training, Companies, Law, Courts and Prisons.

8. The Hon. Thiru S. J. SADIQ PASHA (Minister for Revenue), in-charge of Revenue, Board of Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Commercial Taxes, Prohibition and Excise Revenue and Waqfs.

9. The Hon. Thiru Si. Pa. ADITANAR (Minister for Agriculture), in-charge of Agriculture, Food Production, Agricultural Engineering, Wing and Animal Husbandry.

10. The Hon. Thiru A. P. DHARMALINGAM (Minister for Local Administration), in-charge of Municipal Administration, Community Development and Panchayats and Panchayat Unions.

11. The Hon. Thiru MANNAI P. NARAYANASWAMY (Minister for Food and Co-operation), in-charge of Food, Co-operation and Agricultural Refinance.

12. The Hon. Thiru K. RAJARAM (Minister for Labour) in-charge of Labour, Housing and Accommodation Control, Legislation on Weights and Measures, Statistics and Slum Clearance Board.

13. The Hon. Thiru O. P. RAMAN (Minister for Electricity), in-charge of Electricity, Legislation on Money Lending, Rural Indebtedness, Legislation on Chits, Forests, Cinchona and Cinematograph Act.

14. The Hon. Thiru S. RAMACHANDRAN (Minister for Transport), in-charge of Transport, Nationalised Transport, Motor Vehicles Tax, Stationery and Printing and Government Press.

15. The Hon. Thiru M. KANNAPPAN (Minister for Religious Endowments), in-charge of Religious Endowments, Khadi and Village, Industries and Rural Industries Project, Milk Operation Flood, Project and Tamil Nadu Dairy Development Corporation.

## தமிழ் நாடு சட்டப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்

---

### பேரவைத் தலைவர் :

மாண்புமிகு புலவர் கா. கோவிந்தன், பி.ஓ.எல்., எம்.ஏ.

### பேரவைத் துணைத் தலைவர் :

மாண்புமிகு திரு. பெ. சீனிவாசன், எம்.ஏ., பி.எல்.

### மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

1. திரு. க. சுப்பு
2. திரு. என். கணபதி
3. திரு. மு. பழனிவேல்
4. திரு. ஜே. ஜேம்ஸ்
5. திரு. பெ. சௌந்தரபாண்டியன்
6. திரு. கே. கந்தசாமி

### சட்டப் பேரவைச் செயலாளர்.

திரு. மா. சண்முகசுப்பிரமணியம், பி.ஏ., பி.எல்.

### துணைச் செயலாளர்.

திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்.

### உதவிச் செயலாளர்கள்.

திரு. ந. இராதாகிருஷ்ணன் (எஸ்டேட் அதிகாரி).
திரு. பெஞ்சமின் நெல்சன், பி.ஏ.
திரு. கே. பாலகுரு, பி.ஏ.
திரு. டி. ஜே. சைமன், பி.ஏ.

### விவாதப் பதிப்பாளர்.

திரு. கே. சுந்தரராசன்.

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டப் பேரவை உறுப்பினர்களின் (அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 1 அண்ணமலை, திரு. சி.வி. எம். .. .. | காஞ்சிபுரம். |
| 2 அபுசாலி, திரு. எம். ஏ. .. .. .. | புவனகிரி. |
| 3 அப்துல் ஜப்பார், திரு. வா. மை .. .. | அரவக்குறிச்சி. |
| 4 அரங்கண்ணல், திரு. இராம. .. .. | எழும்பூர். |
| 5 அழகமுத்து, திரு. து. ப. .. .. (அரசாங்க தலைமைக் கொறடா). | உப்பிலியப்புரம். |
| 6 அழகர்சாமி, திரு. சோ. .. .. .. | கோவில்பட்டி. |
| 7 அழகுத் தேவர், திரு. எஸ். .. .. | சாத்தூர். |
| 8 அனந்தநாயகி, திருமதி தி. ந. .. .. | மயிலாப்பூர். |
| 9 அன்பழகன், மாண்புமிகு திரு. க. (அமைச்சர்). | புரசைவாக்கம். |
| 10 அன்புச்செழியன், திரு. நீ. .. .. | பெரியகுளம். |
| 11 ஆண்டி அம்பலம், திரு. எ.ப. .. .. | மேலூர் வடக்கு. |
| 12 ஆண்டி என்ற குருசாமி, திரு. கு. .. | ஸ்ரீவில்லிபுத்தூர் (செ. வ.) |
| 13 ஆதித்தனார், மாண்புமிகு திரு. சி. பா. (அமைச்சர்). | ஸ்ரீவைகுண்டம். |
| 14 ஆலடி அருணா, திரு. வி. .. .. | ஆலங்குளம். |
| 15 ஆல்டா எம். பௌலர், திருமதி .. | நியமன உறுப்பினர் |
| 16 ஆறுமுகம், திரு. அ. .. .. .. | எடப்பாடி. |
| 17 ஆறுமுகம், திரு. எஸ். .. .. | வீரபாண்டி |
| 18 ஆறுமுகம், திரு. சி. .. .. .. | மதுராந்தகம். |
| 19 இரத்தினசபாபதி, திரு. மு. .. .. | விளாத்திக்குளம். |
| 20 இராசகோபால், திரு. க. மு. .. .. | உத்திரமேரூர். |
| 21 இராசகோபால், திரு. வீ. .. .. | வந்தவாசி. |
| 22 இராசமாணிக்கம், திரு. அ. .. .. | நாகப்பட்டினம். |
| 23 இராசமாணிக்கம், திரு. கு. .. .. | ஆடுதுறை. |
| 24 இராசரத்தினம், திரு. டி. .. .. | ஸ்ரீபெரும்புதூர். |
| 25 இராசாராம், மாண்புமிகு திரு. க. (அமைச்சர்). | சேலம்-2. |
| 26 இராசு, திரு. ஜே. எஸ். .. .. .. | பெரம்பலூர் (செ. வ. |
| 27 இராதாகிருட்டிணன், திரு. எம். .. | தண்டராம்பட்டு. |
| 28 இராமச்சந்திரன், திரு. எம். ஜி. .. | பரங்கிமலை. |
| 29 இராமச்சந்திரன், மாண்புமிகு திரு. ச. (அமைச்சர்). | பண்ருட்டி. |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 30 இராமநாதன், திரு. சி. .. .. | அறந்தாங்கி. |
| 31 இராமலிங்கம், திரு. இரா. .. .. | தூத்துக்குடி. |
| 32 இராமலிங்கம், திரு. செ. .. .. | கடலாடி (செ.வ.). |
| 33 இராமன், மாண்புமிகு திரு. ஓ. பி. (அமைச்சர்). | மேலூர் தெற்கு (செ.வ.). |
| 34 இராமன், திரு. மூ. .. .. .. | கண்டமங்கலம் (செ.வ.). |
| 35 இராஜாங்கம், திரு. என். .. .. | குறிஞ்சிப்பாடி (செ.வ.). |
| 36 இராஜாப்பிள்ளை, திரு. வீ. கே. .. .. | கன்னியாகுமரி. |
| 37 இளங்கோவன், திரு. கோ. .. .. | திருவையாறு. |
| 38 இளஞ்செழியன், திரு. வீ. சா. .. .. | விராலிமலை. |
| 39 எட்டியப்பன், திரு. பூ. .. .. .. | பெரணமல்லூர். |
| 40 எட்மண்ட், திரு. க. உரொ. .. .. | திருச்செந்தூர். |
| 41 கணபதி, திரு. என். .. .. .. | பாபநாசம். |
| 42 கணபதி, திரு. டி. .. .. .. | நாங்குனேரி. |
| 43 கணேசன், திரு. எல். .. .. | ஒரத்தநாடு |
| 44 கணேசன், திரு. சி. .. .. .. | குற்றாலம். |
| 45 கண்ணப்பன், மாண்புமிகு திரு. மு. (அமைச்சர்). | கிணத்துக்கடவு. |
| 46 கண்ணன், திரு. எம். ஆர். .. .. | பேஸின் பிரிட்ஜ். |
| 47 கதிரவன், திரு. கா. மு. .. .. .. | தென்காசி. |
| 48 கந்தசாமி, திரு. கே. .. .. .. | உசிலம்பட்டி. |
| 49 கந்தசாமி, திரு. கே. பி. .. .. .. | சாத்தான்குளம் |
| 50 கந்தசாமி, திரு. எம். .. .. .. | குளித்தலை. |
| 51 கந்தப்பன், திரு. செ. .. .. .. | திருச்செங்கோடு. |
| 52 கரிவேங்கடம், திரு. மா. வெ. .. .. | பாலக்கோடு. |
| 53 கருணாநிதி, மாண்புமிகு டாக்டர் மு. (முதல் அமைச்சர்). | சைதாப்பேட்டை. |
| 54 கருணாநிதி, திரு. தாழை மு. .. .. | திருவாரூர் (செ.வ.) |
| 55 கருணைநாதன், திரு. சோ. .. .. | கூனூர். |
| 56 கருப்பையா, திரு. ஆ. .. .. .. | கங்கைகொண்டான் (செ.வ.) |
| 57 காசிராமன், திரு. நா. .. .. .. | கும்பகோணம். |
| 58 காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி .. | முதுகளத்தூர். |
| 59 காமாட்சி, திரு. கு. .. .. .. | திருவரம்பூர். |
| 60 கார்த்திகேசன், திரு. வீ. .. .. .. | இராதாபுரம். |
| 61 காவேரிமணியம், திரு. சொ. .. .. | திருப்பரங்குன்றம். |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 62 காளிமுத்து, திரு. கா. .. .. .. | சிவகாசி. |
| 63 கிட்டப்பா, திரு. என். .. .. .. | மாயூரம். |
| 64 கிருட்டிணன், திரு. நா. .. .. .. | பேரணம்பட்டு (செ. வ.). |
| 65 கிருஷ்ணமூர்த்தி, திரு. வி. .. .. | நெல்லிக்குப்பம். |
| 66 கிருஷ்ணமூர்த்தி, திரு. வ. .. .. | திருச்சிராப்பள்ளி-1. |
| 67 கிருஷ்ணன், திரு. கே. ஆர். .. .. | ஊத்தங்கரை. |
| 68 குப்பல் ராமகிருஷ்ணன், திரு. கே. எஸ். | மதுரை (கிழக்கு). |
| 69 குமாரசாமி, திரு. அ. சே. .. .. | திருக்கோயிலூர். |
| 70 குமாரசாமி, திரு. கே. என். .. .. | பல்லடம். |
| 71 குருசாமி, திரு. நா. வெ. .. .. | ஆண்டிப்பட்டி. |
| 72 கேசவலு, திரு. தே. .. .. .. | கள்ளக்குறிச்சி. |
| 73 கோதண்டராமய்யா, திரு. கே. எஸ். .. | உதனப்பள்ளி. |
| 74 கோபால், திரு. எம். .. .. .. | குன்னத்தூர் (செ. வ.). |
| 75 கோபால், திரு. கே. பி. .. .. .. | கம்பம். |
| 76 கோவிந்தசாமி, திரு. வி. செ. .. .. | காவேரிப்பட்டினம். |
| 77 கோவிந்தராசன், திரு. ஆர். .. .. | கடலூர். |
| 78 கோவிந்தராசன் துரை, திரு. .. .. | கந்தர்வகோட்டை. |
| 79 கோவிந்தன், புலவர் கா. (மாண்புமிகு பேரவைத் தலைவர்). | செய்யாறு. |
| 80 கோவை செழியன், திரு. .. .. | காங்கேயம். |
| 81 சகாதேவன், திரு. எஸ். .. .. | செஞ்சி. |
| 82 சங்குமுத்து தேவர், திரு. ச. .. .. | அம்பாசமுத்திரம். |
| 83 சதாசிவம், திரு. செ. .. .. .. | ஆண்டிமடம். |
| 84 சண்முகசுந்தரம், திரு. அ. ப. .. .. | பொள்ளாச்சி. |
| 85 சண்முகம், மாண்புமிகு திரு. ப. உ. (அமைச்சர்). | திருவண்ணாமலை. |
| 86 சண்முகம், திரு. பெரி. .. .. .. | திருவாடானை. |
| 87 சண்முகம், திரு. மு. .. .. .. | விழுப்புரம். |
| 88 சத்தியமூர்த்தி, திரு. மு. .. .. | புதுக்கோட்டை. |
| 89 சத்தியவாணிமுத்து, மாண்புமிகு திருமதி (அமைச்சர்). | பெரம்பூர் (செ.வ.). |
| 90 சத்தியேந்திரன், திரு. எம்.எஸ். கே. .. | இராமநாதபுரம். |
| 91 சம்பத், திரு. டி. வி. .. .. .. | செம்பனூர் கோவில். |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 92 சாதிக் பாட்சா, மாண்புமிகு திரு. எஸ்.ஜே. (அமைச்சர்). | உடுமலைப்பேட்டை. |
| 93 சாரதி, திரு. மா. பா. | வேலூர். |
| 94 சிதம்பரம், திரு. சித. | காரைக்குடி. |
| 95 சிவப்பிரகாசம், திரு. தி. சி. ஆ. | சேரன்மகாதேவி. |
| 96 சிவபெருமாள், திரு. கோ. | அரியலூர். |
| 97 சிறைமீட்டான், திரு. தொ. க. | பரமக்குடி (செ.வ.) |
| 98 சீனிவாசன், மாண்புமிகு திரு. பெ. (துணைத் தலைவர்). | விருதுநகர். |
| 99 சீனிவாசன், திரு. தொ. ப. | போளூர். |
| 100 சின்னசாமி, திரு. அ. | செயங்கொண்டம் (செ.வ.) |
| 101 சின்னசாமி, திரு. ஆர். | தர்மபுரி. |
| 102 சின்னசாமி திரு. மு. | மொடக்குறிச்சி. |
| 103 சின்னசாமி, திரு. வ. | ஏற்காடு (ஆ. வா.) |
| 104 சின்னராசு, டாக்டர் ச. அ. | ஹரூர் (செ. வ.) |
| 105 சின்னவெள்ளையன், திரு. சி. | சேந்தமங்கலம் (ஆ. வா.) |
| 106 சுந்தரம், திரு. ஒ. என். | திண்டுக்கல். |
| 107 சுப்பிரமணியம், திரு. எ. | சிங்கநல்லூர். |
| 108 சுப்பிரமணியம், திரு. எஸ். கே. | சத்யமங்கலம். |
| 109 சுப்பிரமணியம், திரு. கே. எம். | தியாகராயநகர். |
| 110 சுப்பிரமணியன், திரு. மா. | ஈரோடு. |
| 111 சுப்பிரமணியன், திரு. வீ. | உளுந்தூர்பேட்டை. |
| 112 சுப்பு, திரு. க. | ராஜபாளையம். |
| 113 சுப்பையா, திரு. ஆ. கு. | கோட்டூர் (செ. வ.) |
| 114 சுப்பையா, திரு. கே. வி. | ஆலங்குடி. |
| 115 சுப்பையா, திரு. ச. | சங்கரன்கோயில் (செ. வ.) |
| 116 சுப்பையா, திரு. எ. ஆர். | கடயநல்லூர். |
| 117 சுருளிவேல், திரு. மு. | போதிநாயக்கனூர். |
| 118 சுரேந்திரன், திரு. எம். | மேட்டூர். |
| 119 சுவாமிதாஸ், திரு. எ. | பத்மநாபபுரம். |
| 120 செபமாலை, திரு. கோ. | மங்களூர் (செ. வ.) |
| 121 ஜெயராமன், திரு. இ. | சேலம்-1. |
| 122 செல்லத்துரை, திரு. வீ. | ஓமலூர். (செ. வ.) |
| 123 செல்லையா, திரு. குழ. | பேராவூரணி. |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 124 செல்வராஜ், திரு. எம். | விருத்தாசலம். |
| 125 சேதுராமன், திரு. பி. | சிவகங்கை. |
| 126 சோனையா, திரு. க. | மானாமதுரை. |
| 127 சோமசுந்தரம், திரு. ந. | வலங்கைமான் (செ. வ.) |
| 128 சௌடி சுந்தரபாரதி, திரு. எஸ். | அருப்புக்கோட்டை. |
| 129 சௌந்தரபாண்டியன், திரு. பெ. | கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |
| 130 டென்னிஸ், திரு. என். | கிள்ளியூர். |
| 131 தங்கமணி, திரு. கே. டி. கே. | மதுரை-மேற்கு. |
| 132 தர்மலிங்கம், மாண்புமிகு திரு. அ. பெ. (அமைச்சர்). | திருச்சிராப்பள்ளி-2. |
| 133 தருமலிங்கம், திரு. ந. | ரிஷிவந்தியம் (செ.வ.) |
| 134 தவமணித்தேவர், திரு. வி. | சேடப்பட்டி. |
| 135 திம்மராயக் கவுண்டர், திரு. டி. சி. | நாட்றாம்பள்ளி |
| 136 தியாகராசன், திரு. அ. | திருமயம். |
| 137 தியாகராசன், திரு. இ. எஸ். | திருத்தணி. |
| 138 திருப்பதி, திரு. கு. | மதுரை (சென்ட்ரல்). |
| 139 துரைசாமி திரு. எ. க. | குடியாத்தம். |
| 140 துரைசாமி, திரு. சு. | திருப்பூர். |
| 141 துரைமுருகன், திரு. | காட்பாடி. |
| 142 துரைராஜ், திரு. சு. ம. | திருவள்ளூர் (செ.வ.) |
| 143 தூயமணி, திரு. மே. பி. | மேட்டுப்பாளையம். |
| 144 தேவராசன், திரு. எம். | உதகமண்டலம். |
| 145 தேவேந்திரன், திரு. அ. | நன்னிலம் (செ. வ.) |
| 146 தோப்பூர் திருவேங்கடம், திரு. | கணியம்பாடி. |
| 147 நடராசன், திரு. ஈ. எம். | அந்தியூர். |
| 148 நடராசன், திரு. எஸ். | தஞ்சாவூர். |
| 149 நரசிம்மன், திரு. எ. சி. | ஆரணி. |
| 150 நல்லசாமி, திரு. எஸ். | கரூர். |
| 151 நாகராஜன், திரு. க. | வடமதுரை. |
| 152 நாகலிங்கம், திரு. பா. | பொன்னேரி (செ.வ.) |
| 153 நாச்சிமுத்து, திரு. நா. | ஒட்டன்சத்திரம். |
| 154 நாச்சியப்பன், திரு. எ. எம். டி. | ஆத்தூர். |
| 155 நாச்சியப்பன், திரு. ந. | சங்கராபுரம். |
| 156 நாராயணசாமி, திரு. மா. வே. | திருவொற்றியூர். |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 157 நெடுஞ்செழியன், மாண்புமிகு டாக்டர் இரா. (அமைச்சர்). | திருவல்லிக்கேணி. |
| 158 நைனுமலை, திரு. இரா. | ராசிபுரம். |
| 159 பத்மநாபன், திரு. பொ. | திருநெல்வேலி. |
| 160 பத்மாவதி, திருமதி. எ. கோ. | முகையூர். |
| 161 பரந்தாமன், திரு. ஆ. | கடம்பத்தூர். |
| 162 பரமசிவம், திரு. எம். | தாரமங்கலம். |
| 163 பலராமன், திரு. என். எஸ். | அரக்கோணம். |
| 164 பழனிசாமி, திரு. நா. | பொங்கலூர். |
| 165 பழனிசாமி, திரு. என். கே. | பெருந்துறை. |
| 166 பழனிசாமி, திரு. மு. | வெள்ளக்கோயில். |
| 167 பழனிச்சாமி, புலவர் சி. | பழனி (செ.வ.) |
| 168 பழனியப்பன், டாக்டர் ச. மு. | கோபிசெட்டிபாளையம். |
| 169 பழனியம்மாள், திருமதி வி. ப. | தாராபுரம். |
| 170 பழனிவேலன், திரு. க. | வரகூர். |
| 171 பழனிவேலன், திரு. மு. | நாமக்கல். |
| 172 பழனிவேலு, திரு. பி. | ஆத்தூர். |
| 173 பழனிவேல் ராஜன், திரு. | தேனி. |
| 174 பன்னீர் செல்வம், திரு. எம். | ஆம்பூர் (செ. வ.) |
| 175 பாண்டுரங்கம், திரு. சி. | செங்கம் (செ. வ.) |
| 176 பாலகிருட்டிணன், திரு. கு. | மன்னார்குடி. |
| 177 பாலசுந்தரம், திரு. வை. | அச்சரபாக்கம் (செ.வ.). |
| 178 பாலையா, திரு. எ. | கொளச்சல். |
| 179 பெரியசாமி, திரு. கு. | கொடவாசல். |
| 180 பெரியசாமி, திரு. தி. ஒ. | அவினாசி. |
| 181 பெருமாள், திரு. செ. | காட்டுமன்னார்கோயில். |
| 182 பெருமாள், திரு. எ. ஆர். | காரியப்பட்டி. |
| 183 பொம்மன், திரு. கு. அ. | கூடலூர் (செ. வ.) |
| 184 பொன் சொக்கலிங்கம், திரு. பி. | சிதம்பரம். |
| 185 பொன்னப்ப நாடார், திரு. ஆர். | விளவங்கோடு. |
| 186 பொன்னுமலை, திரு. தி. | பனைமரத்துப்பட்டி. |
| 187 பொன்னுரங்கம், திரு. எ. எம். | சோளிங்கபுரம். |
| 188 மணலி கந்தசாமி, திரு. சி. | திருத்துறைப்பூண்டி. |
| 189 மணியன், திரு. பி. எஸ். | சோழவந்தான். |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 190 மதியழகன், திரு. கே.எ. | ஆயிரம் விளக்கு. |
| 191 மருதாசலம், திரு. என். | பேரூர் (செ. வ.). |
| 192 மலைக்கண்ணன், திரு. வீ. | இளையாங்குடி. |
| 193 மன்னியப்பன், திரு. சி. | கிருஷ்ணகிரி. |
| 194 மாணிக்கம், திரு. என். | பென்னகரம். |
| 195 மாணிக்கவாசகம், திரு. இரா. | தொண்டாமுத்தூர். |
| 196 மாதவன், மாண்புமிகு திரு. செ. (அமைச்சர்). | திருப்பத்தூர். (இராமனுதபுரம் மாவட்டம்) |
| 197 மாரிமுத்து, திரு. எ. ஆர். | பட்டுக்கோட்டை. |
| 198 மாரிமுத்து, திரு. மூ. | தலைவாசல் (செ.வ.) |
| 199 மீனாட்சிசுந்தரம், திரு. மா. | வேதாரண்யம். |
| 200 முகமது கோதர் முகைதீன், திரு. எஸ். | மேலப்பாளையம். |
| 201 முத்தமிழ்ச் செல்வன், திரு. வெ. ந. | லால்குடி. |
| 202 முத்து, திரு. வ. | சங்கரி (செ. வ.) |
| 203 முத்துசாமி, திரு. ப. | வேடசந்தூர். |
| 204 முத்துச்செல்வன், திரு. பு. செ. | முசிறி. |
| 205 முத்துவேல், திரு. ந. | வானூர் (செ. வ.) |
| 206 முத்தையா, திரு. கே. கே. | கடலூர். |
| 207 முத்தையா, திரு. எம். | ஒட்டப்பிடாரம் (செ. வ.) |
| 208 முருகையன், திரு. எஸ். | கலசப்பாக்கம். |
| 209 முனியாண்டி, திரு. ஆ. | நிலக்கோட்டை (செ. வ.) |
| 210 முனு ஆதி, திரு. மு. | திருப்போரூர். |
| 211 முனுசாமி, திரு. ரா. ரா. | மேல்மலையனூர். |
| 212 மொய்தீன், திரு. திருப்பூர் எ. எம். | துறைமுகம் (சென்னை நகரம்). |
| 213 மோசஸ், திரு. ம. | நாகர்கோயில். |
| 214 ரங்கநாதன், திரு. கே. | கோயம்புத்தூர் (கிழக்கு). |
| 215 ராமசாமி, திரு. இ. | வால்பாறை. |
| 216 ராமசாமி, திரு. ஜி. | திருப்பத்தூர் (வட ஆர்க்காடு மாவட்டம்). |
| 217 ராமராசன், திரு. வ. க. | பவானிசாகர் (செ. வ.) |
| 218 ராஜா, திரு. எ. எம். | பவானி. |
| 219 ராஜாராம், திரு. ஜி. | திண்டிவனம். |
| 220 ரெத்தினசாமித் தேவர், திரு. மு. சி. ஆ. | திருமங்கலம். |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 221 லத்தீப், திரு. எம். எ. | வாணியம்பாடி. |
| 222 வகாப், திரு. கே. எ. | ராணிப்பேட்டை. |
| 223 வடிவேலு, திரு. சி. க. | தொட்டியம். |
| 224 வடிவேல், திரு. எஸ். | சீர்காழி (செ. வ.) |
| 225 விசுவநாதன், திரு. செ. கோ. | செங்கல்பட்டு. |
| 226 வீராசாமி, திரு. நா. | ஆற்காடு. |
| 227 வெங்கடசாமி, திரு. பி. | ஹோசூர். |
| 228 வெள்ளைத்துரை, திரு. அ. | வாசுதேவநல்லூர். |
| 229 வேதாசலம், திரு. மு. | வண்ணாரப்பேட்டை (சென்னை நகரம்). |
| 230 வேலப்பன், திரு. சி. வே. | கபிலமலை. |
| 231 வேழவேந்தன், திரு. கா. | கும்மிடிபூண்டி. |
| 232 ஜேம்ஸ், திரு. ஜே. | திருவட்டார். |
| 233 ஜோதி வெங்கடாசலம், திருமதி. | ஸ்ரீரங்கம் (செ. வ.) |
| 234 ஹாண்டே, டாக்டர், எச். வி. | பார்க் டவுன் (சென்னை நகரம்). |
| 235 வெற்றிடம் | கோயம்பத்தூர்—மேற்கு. |

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்.

1 மாண்புமிகு திரு. என். வி. நடராசன்—அமைச்சர்.

2 மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி—அமைச்சர்

3 திரு. கோவிந்த சாமிநாதன்—தலைமை வழக்கறிஞர்.

# தமிழ் நாடு சட்டப் பேரவை.

---

**திங்கட்கிழமை, 1973 நவம்பர் 19.**

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 10-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. நீத்தார் நினைவுக் குறிப்பு.

சட்டப்பேரவையின் முன்னாள் உறுப்பினர்கள், திருவாளர்கள் என். பி. எம். சின்னையாக் கவுண்டர், கே. அப்பாவுப் பிள்ளை, அல்லாடி ஆரோன் ராவ், ஆர். கிருஷ்ணசாமி நாயுடு, டி. எல். சசிவர்ணத் தேவர், பெரியகருப்பன் அம்பலம், தர்மலிங்க நாயக்கர் ஆகியோர் மறைவு குறித்தும், இராஜஸ்தான் மாநிலத்தின் முதலமைச்சராக இருந்த திரு. பர்க்கத்துல்லா கான் மறைவு குறித்தும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணப்பாறை தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, 1957-ம் ஆண்டு முதல் 1967-ம் ஆண்டுவரை தமிழ்நாடு சட்டப் பேரவை உறுப்பினராக இருந்த திரு. என். பி. எம். சின்னையாக் கவுண்டர் அவர்கள் 13--8--1973-ம் நாளன்று மறைந்ததைக் குறித்தும்,

ஹோசூர் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, 1957-ம் ஆண்டு முதல் 1962-ம் ஆண்டுவரை தமிழ்நாடு சட்டப் பேரவை உறுப்பினராக இருந்த திரு. கே. அப்பாவுப் பிள்ளை அவர்கள் 1--10--1973-ம் நாளன்று மறைந்ததைக் குறித்தும்,

குண்டூர் மற்றும் நெல்லூர் இந்திய கிறிஸ்துவர்கள் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, 1946-ம் ஆண்டு முதல் 1952-ம் ஆண்டுவரை அன்றைய ஒருங்கிணைந்த தமிழ்நாடு சட்டப் பேரவையில் உறுப்பினராக இருந்த திரு. அல்லாடி ஆரோன் ராவ் அவர்கள் 17—10—1973-ம் நாளன்று மறைந்ததைக் குறித்தும்,

1952-ம் ஆண்டு முதல் 1957-ம் ஆண்டுவரை எதிர்க்கோட்டை தொகுதியிலிருந்தும், 1957-ம் ஆண்டு முதல் 1962-ம் ஆண்டுவரை ஸ்ரீவில்லிபுத்தூர் பொதுத் தொகுதியிலிருந்தும், 1962-ம் ஆண்டு முதல் 1967-ம் ஆண்டுவரை இராசபாளையம் தொகுதியிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்டு தமிழ்நாடு சட்டப் பேரவை உறுப்பினராக இருந்தவரும், 21--4--1968-ம் நாள் முதல் சட்டமன்ற மேலவையின் உறுப்பினராக இருந்தவருமான திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் 30--10--1973-ம் நாளன்று மறைந்ததைக் குறித்தும்,

முதுகுளத்தூர் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, 1957-ம் ஆண்டு முதல் 1967-ம் ஆண்டுவரை தமிழ்நாடு சட்டப்பேரவை உறுப்பினராக இருந்த திரு. டி. எல். சசிவர்ணத் தேவர் அவர்கள் 7—11—1973-ம் நாளன்று மறைந்ததைக் குறித்தும்,

மேலூர் பொதுத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, 1957-ம் ஆண்டு முதல் 1962-ம் ஆண்டுவரை தமிழ்நாடு சட்டப் பேரவை உறுப்பினராக இருந்த திரு. பெரியகருப்பன் அம்பலம் அவர்கள் 9—11—1973-ம் நாளன்று மறைந்ததைக் குறித்தும்,

செய்யார் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு 1952-ம் ஆண்டு முதல் 1957-ம் ஆண்டுவரை தமிழ்நாடு சட்டப் பேரவை உறுப்பினராக இருந்த திரு. தர்மலிங்க நாயக்கர் அவர்கள் 15—11—1973-ம் நாளன்று மறைந்ததைக் குறித்தும்

இப்பேரவையின் இரங்கலையும் ஆழ்ந்த வருத்தத்தையும் அன்னாரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு நான் இப்பேரவையின் சார்பில் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மேலும், இராஜஸ்தான் மாநிலத்தின் முதலமைச்சராக இருந்த திரு. பர்க்கதுல்லா கான் அவர்கள் 11—10—1973-ம் நாளன்று மறைந்ததைக் குறித்தும் இப்பேரவையின் இரங்கலையும் ஆழ்ந்த வருத்தத்தையும் அவரது குடும்பத்தினருக்கு இப்பேரவையின் சார்பில் நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மறைந்தவர்களுக்கு மரியாதை அளிக்கும் வகையில் எல்லோரும் ஒரு நிமிடம் மவுனமாக எழுந்து நிற்கும்படி வேண்டிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து ஒரு நிமிடம் மவுனமாக நின்றனர்.)

## 2. வினாக்கள்—விடைகள்.

### வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.

### கடவுளர் சிலை திருட்டுகள்

*149 வினா—திரு. அ. தேவேந்திரன் :
திரு. என். கே. பழனிசாமி : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

கோவில் சிலைகள் களவாடப்படுவதைத் தடுப்பதற்கென காவல் துறையில் தனியாக ஒரு பிரிவு அமைக்கும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா ?



மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : கடவுளர் சிலை திருட்டுகளைக் குறித்துப் புலனாய்வு செய்வதற்குக் காவல் துறையில் ஏற்கெனவே தனிப்பிரிவு ஒன்று உள்ளது.

* 150 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டத்தில் 1970-71-ம் ஆண்டில் கோவில் சிலைகள் திருடியது சம்பந்தமாகக் கைது செய்யப்பட்டவர்கள் யார் யார் ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அவை முன் ஒரு விவர அறிக்கை@ வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். கே. பழனிசாமி : தலைவர் அவர்களே, இதுவரையில் சுமார் எத்தனை விக்கிரகங்கள் களவாடப்பட்டிருக்கின்றன ? களவாடப்பட்ட விக்கிரகங்கள் அமெரிக்கா போன்ற வெளி நாடுகளில் இருப்பதாகச் சொல்லப்படுகிறதே, அவைகளை மீட்பது குறித்து மத்திய அரசாங்க அதிகாரிகளிடம் விவாதித்தது உண்டா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள், அமெரிக்காவிற்குக் கொண்டுசெல்லப்பட்ட சிலைகளை மீட்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று கேட்டார்கள். அமெரிக்காவில் ஒரு பெரிய தொழிலதிபர் ; கலைப் பொருள்களைச் சேகரிப்பவர் ; அவருடைய பெயர் நார்ட்டன் ஸைமன் என்பதாகும். சிவபுரத்திலிருந்து கடத்திச் செல்லப்பட்ட நடராசருடைய சிலையொன்று அவரிடத்தில் இருப்பதாகத் தெரிந்து, அதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று மத்திய அரசுக் கல்வி-சமூகத் துறையை மாநில அரசு கேட்டுக் கொண்டது. அது மாத்திரம் அல்லாமல், இந்த விஷயத்தில் உடனடியாக அமெரிக்க அரசோடு தொடர்புகொண்டு, இதிலே தலையிட்டு அந்தச் சிலையை மீட்டுத் தருமாறு நான் பிரதம மந்திரிக்கு 2-7-1973 அன்று ஒரு கடிதம் எழுதினேன். அதற்குப் பிரதம மந்திரி அவர்கள் 2-8-1973 அன்று பதில் எழுதியனுப்பியுள்ளார். தேவையான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்று அந்தக் கடிதத்தில் பிரதமர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் கோயில்களில் உள்ள சிலைகள் பெருவாரியாகக் களவாடப்படுவதைத் தவிர்க்கும் பொருட்டு, தஞ்சை மாவட்டத்தில் திருக்குவளையில் உள்ள கோயிலில் எல்லாச்

---

@ 114-118-ம் பக்கங்களில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.

சிலைகளையும் ஒன்றாகச் சேர்த்துவைத்துப் பாதுகாப்பதென அரசு ஏற்கெனவே அறிவித்திருந்ததே, அதுபற்றி என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிவிக்க இயலுமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அப்படிப்பட்ட சிலைகள் கிடைக்கக் கிடைக்க, அப்படிக் காப்பாற்றப்பட வேண்டிய தொன்மையான சிலைகளை ஒரு கோயிலில் மட்டுமல்லாமல் பல்வேறு பகுதிகளிலே வைத்துப் பாதுகாப்பதற்கான முயற்சிகள் படிப்படியாக மேற்கொள்ளப்படுகின்றன.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** அமெரிக்காவிலுள்ள நார்ட்டன் ஸைமன் அவர்கள் அந்தச் சிலையைத் திருப்பிக் கொடுக்க வேண்டுமானால், பணம் கொடுக்கவேண்டும் என்று கேட்டிருப்பதாகக் கேள்விப்படுகிறேன். அப்படி ஏதாவது தகவல் நமது அரசுக்கு வந்திருக்கிறதா ? அப்படியிருந்தால், அதன் விவரங்கள் என்ன ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அதுபற்றிய தகவல் எதுவும் இப்பொழுது அரசுக்கு வரவில்லை. ஆனால், அமெரிக்கத் தூதருடன் மத்திய அரசு இதுபற்றித் தொடர்பு கொண்டிருக்கிறது.

## *I.A.S. Officers selected from Tamil Nadu*

*151 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Chief Minister be pleased to state the total number of candidates from this State who have been selected for the Indian Administrative Service during the calendar year 1972 from the open market and promotion quota ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** (1) 1972-ல் ஐ.ஏ.எஸ். பதவிக்குத் தமிழ்நாட்டிலிருந்து பதினொரு பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இவர்களுள் தமிழ்நாட்டுக்கு ஆறு அதிகாரிகள் ஒதுக்கப்பட்டனர்.

(2) 1972-ல் பதவி உயர்வுப் பங்களவு மூலமாக ஐ.ஏ.எஸ். பதவிக்கு இம் மாநில அரசு அதிகாரிகள் பணியிலிருந்து பதினான்கு அதிகாரிகள் தெரிந்தெடுக்கப்பட்டனர்.

**திரு. என். டென்னிஸ் :** தலைவர் அவர்களே, ரெவின்யூ துறையில் உள்ளவர்களுக்கு மட்டுமல்லாமல் மற்றத் துறைகளில் உள்ளவர்களுக்கும் ஐ.ஏ.எஸ். பதவி உயர்வு கொடுக்க அரசு சிபார்சு செய்துள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன். இவ்வாறு பதவி உயர்வு கொடுக்கும்போது ஸ்ட்ரிக்ட் ஸீனியாரிடி முறை கையாளப்படுகிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அதிலும் 'கோட்டா' க்கள் வழங்கப்படுகின்றன.



### ஆரம்பக் கல்வி இயக்குநர் பதவி

*152 வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரம்பக் கல்வி நிர்வாகத்திற்கென டைரக்டர் ஒருவரை நியமிக்கும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது முதல் நடைமுறைக்கு வரும் ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) & (இ) : அரசின் ஆய்வில் உள்ளது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவர் அவர்களே, ஆரம்பக் கல்வி நிர்வாகம் பலவாறாகச் சிதறுண்டிருக்கிறது. ஆகவே, அதை ஒருங்கிணைப்பதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அது பற்றித்தான் அரசு ஆய்ந்து வருகிறது என்று குறிப்பிட்டேன். துவக்கப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகளைப் பொறுத்த வரையில் சிலபல சிக்கல்கள் இருக்கின்றன. அவை தனித் தனியாக இயங்க முடியுமா என்று ஆராய வேண்டும். அவற்றைக் கண்காணிப்பதற்கிருக்கிற தன்மைகள், மாவட்டத் தலைமைக் கல்வி அதிகாரி, மாவட்டக் கல்வி அதிகாரி ஆகியவர்களுக்குள்ள பொறுப்புக்கள் எப்படி ஒப்படைக்கப்பட வேண்டும் என்பதில் பல சிக்கல்கள் எழுகின்றன. உயர்நிலைப் பள்ளியில் 6-வது முதல் 11-வது வகுப்பு வரையில் வைத்திருக்கிறோம். துவக்கப்பள்ளியில் 1-வது முதல் 5-வது வகுப்பு வரையில் வைத்திருக்கிறோம். இந்த இரண்டையும் இணைத்து வைத்திருக்கிறோம். உயர்நிலைப் பள்ளிகளை ஒருவரிடமும், துவக்கப்பள்ளிகளை மற்றொருவரிடமும் ஒப்படைக்கலாமா என்கிற திட்டத்தைக் கொண்டுவரும்போது 9--10--11 வகுப்புகளை என்ன செய்வது என்ற பிரச்சினை வருகிறது. ஆகவேதான், அரசாங்கம் இதுபற்றி ஆராய்ந்து வருகிறது. ஒரு சுமுகமான தன்மை ஏற்படுமானால் இது பற்றி விரைவில் முடிவு எடுக்கப்படும்.

## *Job Oriental Education System.*

*153 *Q.*—THIRU A. PARANDHAMAN : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to change the present Educational system as job oriented; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) பள்ளிகளுக்கான திருத்திய பாடத் திட்டத்தை உருவாக்க அரசு அமைத்துள்ள வல்லுநர் குழுக்கள் இதுகுறித்து நாட்டம் செலுத்தி வருகின்றன.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவர் அவர்களே, வேலை வாய்ப்பு தேடித் தருகின்ற கல்வி முறையை டில்லி போன்ற பல்கலைக் கழகங்கள் மிகத் தீவிரமாகச் செயல்படுத்தி வருகின்றன. அதன் விளைவாக, இந்தியாவில் வேலை வாய்ப்புகள் உருவாகும் நேரத்தில் வட மாநிலத்தில் உள்ளவர்கள் அவற்றை அதிகமான அளவுக்குப் பயன்படுத்திக்கொள்ளுவார்கள் என்ற அச்சம் தமிழ்நாட்டில் இருந்து வருகிறது. அதைப் போக்குகின்ற வகையில் மிகத் தீவிரமாக இந்தத் திட்டத்தைத் தமிழ்நாட்டிலும் செயல்படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப்பினர் கூறுகின்ற நோக்கத்தின் அடிப்படையில்தான் இந்தப் பாடத் திட்டங்கள் திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்ற முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. கோத்தாரி கமிஷன் எடுத்துக் கூறிய கருத்துக்களை உள்ளடக்கியும், பல்வேறு கல்வி வல்லுநர்கள் எடுத்துக்கூறிய கருத்துக்களை உள்ளடக்கியும், 1 முதல் 5 வகுப்புகள் வரையில் பாடத் திட்டங்கள் ஓரளவுக்குத் திருத்தியமைக்கப்பட்டிருக்கின்றன. 6 முதல் 10 வகுப்புகள் வரையிலும் உள்ள பாடத் திட்டங்கள் திருத்தியமைக்கப்படுவதற்குக் குழுக்கள் பரிந்துரைத்திருக்கின்றன. எற்கெனவே அறிவியல் பாடத்தை நாம் 6-ஆம் வகுப்பிலிருந்துதான் துவங்கினோம். இப்பொழுது அதை மூன்றாவது வகுப்பிலிருந்து துவங்கலாம் என்றும், புதிய கணக்கியல் பாடத்தை மூன்றாவது வகுப்பிலிருந்து துவங்கலாம் என்றும் புதிய பாடத் திட்டத்தில் சேர்த்திருக்கிறது. 6 முதல் 10 வகுப்புகள் வரையிலும் நாம் மாற்றியமைக்கும் திட்டத்தில், 9--10--11 வகுப்புகளில் கற்றுத்தரப்பட்ட கல்வியைத் தந்து, எதிர்காலத்தில் வேலை வாய்ப்புப் பெறுவதற்கேற்ற வகையில் அமையவேண்டும் என்று வலியுறுத்தி இருக்கிறார்கள். ஆகவே, அதற்கான முயற்சிகள் மேற்கொண்டு, பாடத் திட்டங்களை உருவாக்கி, அத்தகைய கல்வி நடைமுறையில் கொண்டுவரப்படும்.





## பள்ளிகளுக்கு விஞ்ஞான ஆய்வுக் கூடங்கள்

* 154 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்
திரு. ஆ. பரந்தாமன் மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மோட்டார் வானில் அமைக்கப்பட்டுள்ள பரிசோதனைக் கூடங்களை அறிவியல் பரிசோதனைக் கூடம் இல்லாத பள்ளிகளுக்கு அனுப்பி வைத்து வசதி செய்து தரும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறதா ?

(இ) ஆம் எனில், தற்போது எந்தெந்தக் கல்வி மாவட்டங்களில் அவ்வாறு செயல்படுத்தப்பட்டு வருகிறது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) சென்னை, திருச்சி, தஞ்சாவூர், மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கோயம்புத்தூர், சேலம், வட ஆற்காடு, தென் ஆற்காடு ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

* 155 வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் ஊராட்சி ஒன்றியம், அய்யன்காளி பாளையம் அரசினர் உயர்நிலைப் பள்ளியில் விஞ்ஞான ஆய்வுக் கூடம் கட்டும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) இப்பள்ளியில் மாணவர்களின் எண்ணிக்கை போதிய அளவு இல்லாததால் இச்செயற்குறிப்பைப் பரிசீலிக்க இயலவில்லை.

* 156 வினா—திரு. எம். எஸ். இராதாகிருட்டிணன் : மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

செங்கம் வட்டம், தாணிப்பாடியில் உள்ள அரசினர் உயர்நிலைப் பள்ளியில் விஞ்ஞான ஆய்வுக் கூடம் ஒன்று ஏற்படுத்தும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

[1973 நவம்பர் 19

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** ஒவ்வோராண்டும் இத் திட்டத்தின் கீழ் 60 பள்ளிகள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. இப்பள்ளியின் தேவையும் உரிய காலத்தில் பரிசீலிக்கப்படும்.

**திரு. எம். சுரேந்திரன் :** விஞ்ஞானக் கூடங்கள் ஆரம்பிக்க, தனியார் பள்ளி களில் இருந்து எவ்வளவு விண்ணப்பங்கள் வந்திருக்கின்றன ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தனியார் பள்ளிகளில் இருந்தும் விண்ணப்பங்கள் வருகின்றன. இந்தத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஆண்டும் 60 பள்ளிகள் தான் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. ஆயிரத்து ஐநூறு பிள்ளைகளுக்கு மேற்பட்ட பள்ளிகளாக எடுத்து வருகிறோம். 500-க்கும் அதிக மான மாணவர்கள் உள்ள பள்ளிக்கூடங்கள் அரசாங்கப் பள்ளியாக தேர்ந் தெடுக்கப்பட்டும் வருகின்றன.

### புதுக்கோட்டை மாதிரிப்பள்ளிக்குக் கட்டடங்கள்

*157 வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டையில் இயங்கி வருகின்ற மாதிரிப் பள்ளிக்கு புதிய கட்டடமும், ஹாஸ்டலும் கட்டிடும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், விவரம் என்ன ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(இ) ரூ. 22.70 லட்சம் மொத்தச் செலவில் ஓர் பள்ளிக் கட்டிடமும் ஓர் மாணவர் விடுதியும் கட்டுவிப்பது பற்றிய முதன்மைப் பொறியாளரின் கருத்து பள்ளிக் கல்வி இயக்குநரின் ஆய்வில் உள்ளது.

**திரு. என். கிட்டப்பா :** அந்த வேலை எப்போது துவங்கப்படும் என்பதை அறிவிக்க இயலுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இதற்கான இடவசதி தேவைப் படுகிற புதுக்கோட்டையில் இருந்து 3 கிலோ மீட்டர் தூரத்தில் வன இலாக்கா வுக்குச் சொந்தமான 30 ஏக்கரா நிலம் கேட்கப்பட்டிருக்கிறது. அந்த நிலம் வன இலாக்காவின் அனுமதியுடன் கிடைத்துவிட்டால் மாதிரிப் பள்ளிக் கட்டிடம் 10 லட்சத்து 80 ஆயிரத்திலும், மாணவர்கள் விடுதி 11 லட்சத்து 90 ஆயிரத்திலும் கட்ட நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பள்ளியில் 250 மாணவர்கள் பயில வசதி உண்டு. அந்த 250 மாணவர்களுக்குமே விடுதியில் தங்க இடம் தரப்பட்டிருக்கிறது.



1973 நவம்பர் 19]

**டாக்டர் ச. மு. பழனியப்பன் :** புதுக்கோட்டையிலுள்ள மாதிரிப் பள்ளி யைப் போல, விடுதியுடன் ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் ஏற்படுத்த அடுத்த ஆண்டாவது ஏற்பாடு செய்யப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அதற்கு நிதி வசதி இடம் தரவேண்டும். புதுக்கோட்டை மாதிரிப் பள்ளியைச் சிறப்பாக அமைத்து, அதன் பிறகு மற்ற மாவட்டத் தலைநகரிலும் வைப்பதுபற்றி யோசிக்கலாம்.

### அரசிதழ் பதிவுறு அலுவலர்களுக்கென தனி மருந்தகங்கள்

*158 வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) என்.ஜி.ஜி.ஓக்களுக்கு தனி மருந்தகங்களைத் திறக்க அரசு உத்திரவு ஏதேனும் பிறப்பித்துள்ளதா ?

(இ) ஆம் எனில், தற்போது எங்கெங்கே திறக்கப்பட்டுள்ளது ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) ஆம்.

(இ) ஒரு விவரப் பட்டியல் @ அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** என்.ஜி.ஓ.க்களுக்கு என்று தனி மருந்த கங்களைத் திறக்க அவசியம் என்ன என்று அறியலாமா

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** என்.ஜி.ஓ.க்களுக்கு என்று மருத்துவ மனை தனியாக இல்லை. அவர்கள் பொது மருத்துவமனைக்குச் சென்று குறிப் பிட்ட நேரத்திற்குள் அலுவலகத்திற்குத் திரும்புவதற்கு வசதியாக—பொது மருத்துவமனையில் ஒரு தனிப் பிரிவில் ஒரு டாக்டர் இருந்து கவனிக்க ஏற்பாடு இருக்கிறது. இது 1960-ம் ஆண்டிலேயே அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப் பட்ட ஒரு முடிவு. அந்த முடிவின்படியே பொது மருத்துவமனையில் ஒரு டாக்டர், அவர்களைத் தனியாகக் கவனித்து அனுப்பும் ஏற்பாடு இருக்கிறது. என்.ஜி.ஓ.-க்கள் நேரத்தில் அலுவலகத்திற்கு வர இது அவசியமான ஒரு ஏற்பாடு என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்தாகும்....

**திரு. கே. டி. கே. தங்கமணி :** அமைச்சர் கொடுத்துள்ள விவர அறிக்கை யின்படி 26 இடங்களில் என்.ஜி.ஓ.க்களுக்கு தனி மருந்தகங்கள் ஏற்பாடு செய் திருப்பதாகச் சொல்கிறார்கள். மதுரையில் 1961-லேயே உத்தரவு போட்டு

---

@ 118-119-ம் பக்கங்களில் இணைப்பு 2-ஆக அச்சிடப்பட்டுள்ளது.

திறக்கப்பட்ட பிரிவு இன்னும் வளர்ச்சி அடையாமல் அப்படியே இருக்கிறது, 60, 61-ல் ஆரம்பிக்கப்பட்ட தனி மருந்தகங்கள் எவ்வளவு மேற்கொண்டு விரிவு படுத்தப்பட்டிருக்கின்றன என்பதைச் சொல்லமுடியுமா? இல்லையானால் இனியேனும் விரிவுபடுத்த நடவடிக்கை எடுப்பார்களா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** என்.ஜி.ஓ.க்கள் புற நோயாளிகளாக—அவுட் பேஷண்டு—களாக பொது மருத்துவ மனைக்குப் போகிறபோதுதான் உடனடியாக அவர்களைக் கவனித்து அலுவலகங்களுக்கு அனுப்ப வேண்டும் என்கிற நோக்கத்தில் இந்தத் தனிப் பிரிவுகள் அங்கே ஏற்படுத்தப்படுகின்றன. அவர்கள் உள்நோயாளிகளாக இருந்து சிகிச்சை பெறவேண்டுமானால் மருத்துவ மனைகளில் சேர்த்துக்கொள்ளப்பட்டு மற்ற டாக்டர்களால் கவனிக்கப்படுகிற நிலையும் இருக்கிறது. ஆகவே, தனி மருந்தகங்கள் விரிவு படுத்தப்பட வேண்டும் என்கிற நிலை இல்லை. எல்லா மாவட்ட மருந்தகங்களிலும் இத்தகைய தனிப் பிரிவு ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதுதான் நிலை. அப்படி ஏற்படுத்தப்பட்டு வருகிறது. வருகிற ஆண்டில் புதுக்கோட்டை, ஈரோடு ஆகிய இடங்களிலும் ஏற்படுத்த ஆலோசனை இருக்கிறது.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார் :** என்.ஜி.ஓ.க்களுக்காக ஏற்படுத்தப்பட்ட இந்தத் தனி மருந்தகங்களில் குறிப்பிட்ட நோக்கில் தொழிற்சாலைகளில் வேலை பார்ப்பவர்களும், ஆசிரியர்களும் சிகிச்சை பெற வசதி ஏற்படுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** என்.ஜி.ஓ.க்களுக்கு அளிக்கப்பட்ட சலுகைகள் யார் யாருக்கு அளிக்கப்பட்டிருக்கின்றனவோ அவர்கள் இங்கே சிகிச்சை பெறலாம். தொழிலாளர்களுக்குத் தனியாக இ.எஸ்.ஐ. மருந்தகங்கள் இருக்கின்றன. அவை மூலமாக அவர்களுக்கு சிகிச்சை வழங்கப்படுகிறது.

### கோவையில் குழந்தைகளுக்கென தனி மருத்துவ மனை

* 159 வினா—திரு. ... துரைசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவையில் குழந்தைகளுக்கு தனி மருத்துவ மனை துவக்கும் செயற் குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** இல்லை.





**டாக்டர் ச. மு. பழனியப்பன் :** கோவையில் குழந்தைகளுக்கு என்று தனி மருத்துவமனை துவக்க திட்டம் இல்லை என்று சொன்னார்கள். கோவை பொது மருத்துவ மனையிலாவது குழந்தைகளுக்கு என்று தனியாகக் கவனித்து சிகிச்சை அளிக்கும் பிரிவை ஏற்படுத்துவார்களா? குழந்தைகளுக்கு வரும் நோயை டையக்னோஸ் செய்வதற்குக் கூட அங்கே சிறந்த நிபுணர்கள் இல்லை என்று சொல்லப்படுகிறது.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** மருத்துவத் துறையில் மேலே படிக்கிறவர்களுக்கு, 'பெடியாட்ரிக்' துறையில் தனிப்படிப்புக்கு வசதி அளிக்க—மருத்துவக் கல்லூரியோடு இணைந்து சிறப்புப் படிப்புக்காக குழந்தைகளுக்கு என்று தனி மருத்துவ மனையும் கல்லூரியும் ஏற்படுத்துவது மரபு. இங்கே குழந்தை மருத்துவத்தில் நன்கு பயிற்சி பெற்ற டாக்டர்கள் மற்ற இடங்களில் நியமிக்கப்படுகிறார்கள். கோயம்புத்தூரிலும் நியமிக்கப்பட்டிருக்கிறார். கோவையில் ஏற்பட்டிருக்கிற வளர்ச்சி காரணமாக அங்கே தனியாகவே உள்ள பிரிவு விரிவாக்கப்பட வேண்டுமானால் அரசாங்கம் அதனைப் பரிசீலித்து நிறைவேற்ற முயற்சிக்கும்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** மாவட்டங்களில் தனியாகக் குழந்தைகளுக்கு என்று தனி மருத்துவ மனை ஏற்படுத்த இப்போது திட்டம் இல்லை என்று சொன்னார்கள். மாவட்டங்களில் உள்ள தலைமை மருத்துவ மனைகளிலாவது குழந்தைகளுக்கு என்று தனிப் பிரிவை ஏற்படுத்த அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** அந்தக் கருத்து அரசாங்கத்திற்கு உண்டு. நிதி நிலையும், பயிற்சி பெற்ற டாக்டர்களும், இடவசதியும் ஏற்பட ஏற்பட அது போன்று தனியாகவே உருப்பெற்றுவிடும்.

### சிங்காநல்லூர் கஸ்தூரிபாய் மருத்துவ மனை

* 160. வினா—திரு. கே. என். குமாரசாமி : மாண்புமிகு மக்கள் ...
துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடைஸ் பிரச்சினை நெடு

(அ) சிங்காநல்லூர் கஸ்தூரிபாய் ஆஸ்பத்திரியை அ... வெளியாகும் கழிவு
வேண்டுமென்று, நகரமன்றத்தின் மூலமும் சம்பந்தப்பட்ட... அரசு செயல்படுத்துமா
பினர் மூலமும் மகஜர்கள் வந்தனவா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நட...ளே, இந்தக் கேள்வி
அது நிறைவேற்றப்

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) & (இ) : இலயிலே இருந்து வெளி

## B&C மில்லிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீர்

*** 161 வினு—திருமதி த. ந. அனந்தநாயகி :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) B & C மில்லிலிருந்து வெளியேற்றப்படும் கழிவு நீர் கூவம் ஆற்றில் விழுவதுடன் எண்ணூர் பகுதியிலும் செல்வதால் அப்பகுதியிலுள்ள மீன்கள் செத்து விடுகின்றன என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. கே. எ. வகாப் :** பொதுவாக சுற்றுப்புற சூழ்நிலையை சுத்தப்படுத்த மத்திய சர்க்கார் ஒரு கமிட்டி அமைத்திருப்பதாக அறிகிறோம். அப்படி இருக்குமானுல் அதன்மூலம் சுற்றுப்புறச் சூழ்நிலையைச் சுத்தப்படுத்த திட்டம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** காற்றுத் தூய்மை கெடுதல், நீர்த் தூய்மை கெடுதல் ஆகியவற்றைக் கவனிக்க அரசாங்கத்தில் ஒரு குழு இருக்கிறது. நகரில் அதற்குரிய நடவடிக்கைகள் முடிந்த அளவுக்கு நிறைவேற்றப் படுகின்றன. பி. அண்டு சி. மில்லில் இருந்து வெளியேற்றப்படும் கழிவு நீர் கூவம் ஆற்றில் கலக்கப்படுகிறதா என்பது கேள்வி. அதுதான் இல்லை என்று சொன்னேன். கார்ப்பரேஷன் சூவேஜிலும், பக்கிங்ஹாம் கால்வாயிலும்தான் கலக்கப்படுகிறது.

## திருச்சி டிஸ்ட்லரீஸ் அண்ட் கெமிகல்சிலிருந்து வெளியேற்றப்படும் கழிவு நீர்

கோவை— திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்

*** 159 வினு—திரு.** தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

**அமைச்சர் தயவு செய்து**ள்ள 'டிஸ்ட்லரீஸ் அண்ட் கெமிகல்ஸ்' தொழிற்சாலையி

கோவையில் குழந்ப்படும் கழிவுப் பொருளினுல் தண்ணீரும் காற்றும் அசுத்

**குறிப்பு அரசு** பரிசீலனைப்பதற்கான திட்டம் ஏதேனும் மாவட்ட ஆட்சியாளரால்

**மாண்புமிகு திரு. க.** பப்பட்டுள்ளதா ?

'ல், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை ?



**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) ஆம்.

(இ) திருச்சி டிஸ்டலரீஸ் அண்ட் கெமிக்கல்ஸ் நிறுவனமானது, நீர் மற்றும் சாக்கடை கழிவை தூய்மைப்படுத்துதல் பற்றிய குழுவின் பரிந்துரைப் படி, கழிவு நீர் சம்பந்தமான திட்டம் ஒன்றைச் செயல்படுத்தி வருகிறது. இந்த நிறுவனத்திலிருந்து வெளியேற்றப்படும் கழிவு நீரை அப்பகுதியில் விவசாய பாசனத்திற்குப் பயன்படுத்துதல் பற்றி திருச்சி மாவட்ட ஆட்சியாளர் தெரிவித்த கருத்தை அதிலுள்ள சில இடர்ப்பாடுகள் காரணமாக பிறகு கவனிக்கலாம் என்று தலைமைச் செயலரின் தலைமையில் கூடிய கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

**திரு. என். கிட்டப்பா :** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலில் இத்திட்டத்தை நிறைவேற்றுவதில் சில இடர்ப் பாடுகள் இருப்பதாக அறிவித்தார்கள். அத்தகைய இடர்ப்பாடுகள் என்ன என்பதையும் அவைகள் எப்பொழுது தவிர்க்கப்படும் என்பதையும் அறிவிக்க இயலுமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, அது முடியுமா என்றே தெரியவில்லை. காரணம் அங்கிருந்து வெளி வரக்கூடிய கழிவு நீரை மாத்தூர் என்ற கிராமத்திற்கு—பல மைல் தூரம்—கொண்டு சென்று நெல் விளைச்சலுக்குப் பயன்படுத்தலாமா என்று ஆலோசனை செய்யப்பட்டது. எவ்வளவு செலவாகும் என்று ஆலோசனை செய்யப்பட்டு, முதலீட்டுக்குத் தேவைப்படும் தொகை ரூபாய் ஒரு கோடியே நாற்பது லட்சம் என்றும் ஒவ்வொரு ஆண்டும் அதை நிர்வகிக்க ஆகும் செலவு ரூபாய் பதின்மூன்று லட்சம் என்றும் அதன்மூலம் விளைகிற அரிசியின் அடக்க விலை ஒரு டன்னுக்கு ரூ. 8,000 ஆகும் என்றும் கணக்கிடப்பட்டுள்ளது. இவ்வளவு முதலீடு தேவையாகும் என்பதை எண்ணிப்பாராது சொல்லப்பட்ட ஆலோசனை என்பதால் தான் அது இயலாத காரியம் என்று நான் கருதுகிறேன்.

**திரு. கு. காமாட்சி :** தலைவர் அவர்களே, இந்த டிஸ்டிலரீஸ் பிரச்சினை நெடு நாளாக இருந்து வருகிற ஒன்று. ஆகவே, அதிலிருந்து வெளியாகும் கழிவு நீரை அதிகமாக சூடுபடுத்தி ஆவியாகும் திட்டத்தை அரசு செயல்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி மாவட்ட ஆட்சித் தலைவர் சொன்ன ஆலோசனை குறித்து. அது நிறைவேற்றப் படக் கூடியதாக இல்லை. ஆனுல், அந்தத் தொழிற்சாலையிலே இருந்து வெளி

வருகிற கழிவு நீரை சுத்தப்படுத்துவதற்காக வழங்கப்பட்டிருக்கிற ஒரு திட்டம் ஏறத்தாழ ஒரு ஆண்டிற்கு முன்னால் எடுத்துக்கொள்ளப்பட்டு, 2/3 பங்கு கடமைகள் நிறைவேறியிருக்கின்றன. மிச்சப் பகுதியை டிசம்பருக்குள்ளாக முடிக்க உத்தரவிடப்பட்டுள்ளது. நீரேற்றக் கருவிகளை நிறுவி இத்திட்டத்தை இவ்வாண்டு டிசம்பர் 31-ம் தேதிக்குள் முடிக்குமாறு இத்திட்டத்தை நிறைவேற்ற அமைக்கப்பட்ட குழு உத்தரவிட்டுள்ளது. அதை அவர்கள் நிறைவேற்றுவார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** அந்தக் கழிவு நீரை சீர்செய்வதற்காக ரூ. 75 இலட்சம் செலவிலே ஒரு திட்டத்தை பரிந்துரை செய்திருப்பதாக நான் அறிகிறேன். அந்த மாதிரி கழிவு நீரை சீர் செய்ய திட்டங்கள் கொடுத்திருக்கிறார்கள். அந்தப் பகுதியிலுள்ள கிராமங்களுக்கும், அங்கு போகிறவர்களுக்கும் அக்கழிவு நீர் இப்பொழுதும் தொல்லையாக இருக்கிற காரணத்தால் உடனடியாக அதற்கு வேண்டிய 'ஃபாலோ-அப் ஆக்ஷன்' எடுத்து, ஆவன செய்வார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, இது திருவரும்பூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினரால் திரும்பத் திரும்ப வலியுறுத்தப்பட்டு 1½ ஆண்டிற்கு முன்னரே தலைமைச் செயலாளர் தலைமையில் ஒரு குழு நியமிக்கப்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் இணைக்கப்பட்டு தொடர்ந்து பரிசீலனை செய்து 3 மாதங்களுக்கு ஒரு முறை கூட்டம் கூட்டி நடவடிக்கை எடுத்து வந்திருக்கிறார்கள். அந்த நடவடிக்கை விரைவிலே வெற்றி பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**திரு. எம். சுரேந்திரன் :** தலைவர் அவர்களே, இந்தக் கழிவு நீரை நெல் விளைச்சலுக்குப் பயன்படுத்தலாமா என்பதுபற்றியும் அமைச்சர் அவர்கள் பதில் கூறினார்கள். ஆனால் கெமிக்கல்ஸ் போன்ற தொழிற்சாலைகளிலிருந்து வெளி வருகிற கழிவு நீரால் விவசாயம் கெட்டுப் போய் பல ஏக்கர்கள் நாசம் ஆகி இருக்கின்றன. அம்மாதிரி இடங்களிலே அந்நீரை சுத்தப்படுத்துவதற்கு அல்லது அதனால் நஷ்டம் அடைந்த விவசாயிகளுக்கு நஷ்டஈடு அளிக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** நஷ்டஈடு அளிப்பதால் பிரச்சினைகள் தீராது. அதற்குப் பதிலாக சுத்தப்படுத்துகிற காரியத்திற்குத்தான் நமது சக்தி முழுவதையும் பயன்படுத்தி நிறைவேற்றியாகவேண்டும். இந்தத் தொழிற்சாலையைப் பொறுத்தவரையிலும் கட்டாய விதிகள் ஏற்படுத்தப்பட்டு நிறைவேற்ற சில காலம் தேவைப்பட்டது. இப்பொழுது நிறைவேறி வருகிறது. விளக்கமாகச் சொல்ல வேண்டுமானால், கழிவு நீர் தேங்குவதற்கு



3 ஆரம்ப தேக்கங்கள், அதற்குப் பின்னர் மூன்று இரண்டாவது கட்ட தேக்கங்கள் ஏற்படுத்த வேண்டும். அங்கு கழிவு நீரின் தரம் மாற்றப்படும். பிறகு இரண்டு திறந்த வெளி தேக்கங்கள் அமைந்து அதற்குப் பின்னர் நீரேற்றுக் கருவிகளை அமைத்து மற்ற தண்ணீரை கலக்குகிறபொழுது, கழிவு நீரின் அசுத்தத்தின் விகிதாசாரத்தைக் குறைத்து அதன்மூலம் கெடுதல் தவிர்க்கப்படுவதற்கு வழி செய்யப்பட்டு வருகிறது.

### *Sub-Registry Office for Tiruvalangadu.*

* 163 *Q.*—Thiru A. PARANDHAMAN : Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to open a Sub-Registry Office at Tiruvalangadu in Tiruttani taluk ; and

(*b*) if so, when it will be opened ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. ஆ. பரந்தாமன் :** தலைவர் அவர்களே, திருத்தணி வட்டத்தில் 4 ஊராட்சி ஒன்றியங்கள் இருக்கின்றன. அவற்றில் 3 ஊராட்சி ஒன்றியங்களில் சார் பதிவாளர் அலுவலகங்கள் உள்ளன. திருவாலங்காட்டில் மட்டுமில்லை. ஆகவே, அங்கு ஒரு அலுவலகம் உருவாக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** தலைவர் அவர்களே, ஒரு சார் பதிவாளர் அலுவலகம் திறக்கப்பட அதற்கு 1,500 பதிவுகள் இருக்கவேண்டும். ஆனால், திருவாலங்காட்டில், 1,284 பதிவுகள்தான் பதிவு செய்யும் நிலையிலிருக்கிறது. எனவே, முதலில் குறிப்பிட்ட நிலையை அடையும்போது அரசு இதனைப் பரிசீலனை செய்யும்.

### *Buildings for Government Offices in Madras.*

* 164 *Q.*—Thiru N. K. PALANISWAMY :
Thiru R. R. MUNUSWAMY : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether there is any proposal to construct buildings to house the Government Offices in the City of Madras now functioning in rented buildings ; and

(*b*) the amount of monthly rent paid for these offices at present ?

[1973 நவம்பர் 19

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** (அ) அரசாங்க அலுவலகங்கள் கட்டுவதற்கான பல திட்டங்கள் அரசின் பரிசீலனையில் இருக்கின்றன.

(இ) மாதமொன்றுக்கு ஒரு லட்சத்து அறுபத்திரண்டு ஆயிரத்து நானூற்று முப்பத்து நான்கு ரூபாய் அளவில் அரசாங்க அலுவலகங்களின் வாடகைக்குச் செலவிடப்படுகிறது.

**திரு. என். கே. பழனிசாமி:** சார், இப்பொழுது மத்திய சர்க்கார் பாங்குகள் எதுவும் 1974-வது ஆண்டு மார்ச் மாதத்திலிருந்து வாடகைக் கட்டிடத்தில் இருக்கக் கூடாது என்ற வகையில் முழுவதையும் சொந்தக் கட்டிடத்தில் நடத்த திட்டம் போட்டிருப்பதுபோல், நம் சர்க்கார் உடனடியாக இதற்கு ஏதாவது திட்டம் போட்டிருக்கிறதா? கனம் மந்திரி அவர்கள் சொன்னார்கள், பரிசீலனையில் இருக்கிறது என்று. என்னென்ன விதத்திலே அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது? அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, அரசாங்கத்தில், பல கட்டிடங்கள் கட்டுவதற்கான திட்டங்கள் இருக்கின்றன என்று நான் சொன்னேன்.

1. Construction of a multi-storeyed building in the Director of Medical Services Office compound, Teynampet, at an estimated cost of Rs. 80 lakhs;

2. Construction of a multi-storeyed building in Government Branch Press compound at Anna Salai at a cost of Rs. 94.60 lakhs;

3. Construction of a multi-storeyed building near Park Station in Poonamallee High Road, at a cost of Rs. 19.20 lakhs;

4. Government House Estate, Anna Salai, Shopping Centre, in the area from the main entrance up to the entrance near Kalaivanar Arangam at a cost of Rs. 364 lakhs;

5. Construction of multi-storeyed building in Government House Estate in Wallajah Road in the area east of Kalaivanar Arangam at a cost of Rs. 140 lakhs;

6. Construction of shopping centre in Kalmandapam in Royapuram at a cost of Rs. 55 lakhs;

7. Construction of multi-storeyed building in Hood Wharf at a cost of Rs. 64.60 lakhs.

**இப்படிப் பல திட்டங்கள் அரசின் பரிசீலனையில் இருக்கின்றன. விரைவிலே முடிவு எடுக்கப்படும்.**



1973 நவம்பர் 19]

**திரு. ரா. ரா. முனுசாமி:** தலைவர் அவர்களே, சொந்தக் கட்டிடம் இல்லாமல், தமிழகமெங்கும் அரசாங்க நிர்வாக அலுவலகங்கள் வாடகைக் கட்டிடத்தில் இருப்பதை அமைச்சர் அவர்கள் ஒப்புக்கொண்டார்கள். இப்பொழுது அமைச்சர் அவர்கள் சொன்ன திட்டங்கள் எல்லாம் சிட்டிக்குத்தான். மாவட்ட வாரியாகவும் வட்ட வாரியாகவும் பல அலுவலகங்கள் வாடகைக் கட்டிடத்தில் இருந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, மாவட்ட வாரியாகவும், வட்ட வாரியாகவும் இத்திட்டங்களை அரசு நிறைவேற்றுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** கேள்வியில் சென்னையைப்பற்றி கேட்டதால், சென்னையைப் பற்றி விவரங்கள் தரப்பட்டன. வட்டங்கள், மாவட்டங்கள் பற்றி கேட்டால், அவைபற்றி பதில் அளிக்கப்படும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தலைவர் அவர்களே, போர்ட் ஆப் ரெவின்யூ ஆபிஸ்களுக்காக எவ்வளவு வாடகை கொடுக்கப்படுகிறது? அவை உள்ள கட்டிடங்களை கவர்ன்மெண்ட்டே ஆர்ஜிதம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகிறதா? அதன் விவரங்களை அமைச்சர் அவர்கள் தருவார்களா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, தனிக் கேள்வி வேண்டும்.

**திரு. எஸ். வடிவேல்:** தலைவர் அவர்களே, மாதம் ஒன்றுக்கு லட்சம் ரூபாய்க்கு மேலே வாடகை மூலமாக வருவாய் போகிறது. இப்படிக் கொடுக்கின்ற வாடகைக்குப் பதிலாகச் சொந்தமாக வைத்துக்கொள்ள அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** அரசு அலுவலகங்கள் வாடகைக் கட்டிடத்திலே இருப்பதைப்பற்றிய கேள்வி இது. புதிய கட்டிடங்கள் கட்டுவது பற்றிய செயற்குறிப்பு ஆய்விலே இருக்கிறது என்று நான் சொன்னேன். அரசாங்க சார்பிலே ஒரு கட்டிடக் கார்ப்பரேஷன் கூட அமைக்கலாமா என்பதைப்பற்றி அரசாங்கம் ஆலோசித்து வருகிறது. பது விலே முடிவெடுக்கப்பட்டு வேலை தொடங்கும். ... வரைவு

**திரு. எம். ஏ. லத்தீப்:** தலைவர் அவர்களே, தலை அந்த அரசின் புதிய கட்டிடம் கட்ட திட்டம் இருக்கிறதா? இ கட்டிடம் மத்திய அரசாங்கத்திற்குச் சொந்தமாக அரசு மத்திய அரசுக்கு வாடகை கொடுப்பதாக whether our State is உண்மையா? அப்படி என்றால், சொந்தக் கட் ...iginal terms of agree- கத்தை அங்கு வைக்க அரசு முயலுமா என்று ...ıot, the reasons for the

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைமைச் செயலக அலுவலகத்தைப் பற்றி தனிக் கேள்வி போட்டால், விவரங்கள் முழுவதையும் தரத் தயாராக இருக்கிறேன்.

**திரு. கே. எம். சுப்பிரமணியம்:** வாடகைக்காக ரூபாய் ஒரு லட்சத்து 60 ஆயிரம் கொடுப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கட்டிடம் பூராவையும் சொந்தமாகக் கட்ட 'செவரல் குரோர்ஸ்', ரூ. 600, ரூ. 800 கோடி ஆகும் என்று சொல்கிறார்கள். அதற்கு வட்டியை மட்டும் கணக்குப் பார்த்தால் எத்தனையோ லட்சம் சேரும். அதைவிட இப்பொழுது உள்ளதைப்போல இருந்துகொண்டு .....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி கேளுங்கள், ஆலோசனை கூறு கிறீர்கள்.

**திரு. கே. எம். சுப்பிரமணியம்:** ரூ. 600 கோடி, ரூ. 700 கோடியை வீடுகள் கட்டி ஏழைகளுக்கு வசதிகள் பண்ணினால் நன்றாக இருக்கும் என்று மாண்புமிகு அமைச்சர் நினைக்கிறாரா என்று கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி கேட்க வேண்டும். யோசனை சொல்லக் கூடாது. வினா எண் 165. மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் கட்டிடங்கள் கட்ட ரூ. 600 கோடி, ரூ. 700 கோடி ஆகுமென்று சொன்னார்கள். மொத்த வாடகை லட்சத்திற்கு மேல் ஆகிறது என்று விவரம் கொடுத்தேன். இப்படிக் கட்டிடங்கள் கட்டுவதன்மூலம் வாடகை கொடுப்பது மிச்சமாகும். மேலும் வருவாயைத் தேட முடியும் என்ற நிலையில் 'ஷாப்பிங் சென்டர்ஸ்' வைக்க முடியுமா என்பதையும் அரசாங்கம் ஆலோசித்து வரு கிறது. ஏழைகளுக்கு வீடு கட்டிக் கொடுத்து வருகின்ற இந்த அரசு எடுத்த முயற்சியை அங்கத்தினர் பாராட்டினால் பெருந்தன்மையோடு பாராட்டினார் என்று கருதி இருப்பேன். அவர் அப்படிப் பாராட்டாதது, இந்த அரசு ஏழை களுக்கு வீடு கட்டிக் கொடுத்தது அங்கத்தினருடைய கவனத்தில், நினைவில் ...விட்டது என்றுதான் நான் கருதுகிறேன்.

[முற்பகல் 10-30]

House

Arangam

6. Construction o...
puram at a cost of Rs.

7. Construction of ...
a cost of Rs. 64.60 lakhs

N. DENNIS : Will the Hon. the Minister for ...ased to state—
construction of tiffin rooms, latrines and
...nment office building at Chepauk has been
Works Department ; and
...s thereof ?

இப்படிப் பல திட்டங்கள் அரசின் ...
முடிவு எடுக்கப்படும்.





**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தமிழக அரசு ரூ. 2.50 லட்சம் மதிப்பில் சேப்பாக்கத்தில் அமைந்துள்ள அரசு அலுவலகங்களில் சிற்றுண்டி அறைகள், கழிப்பிடங்கள் மற்றும் மிதி வண்டிகள் வைப்பதற்கான கொட்டகைகள் கட்டுவதற்காக ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இதற்கான விரிவான மதிப்பீடு தயார் செய்யப்பட்டு வருகிறது. 1974 ஏப்ரல் மாதத்தில் வேலை துவங்கப்படவிருக்கிறது.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவர் அவர்களே, செகரட்டரியேட்டிலே பணியாற்று கின்ற ஊழியர்கள்கூட டிபன் சாப்பிடுவதற்கு இடம் இல்லாமல் ஆங்காங்கே உள்ள ரோடு ஓரங்களிலே சாப்பிட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அவர் களுக்கும் டிபன் சாப்பிடுவதற்குத் தனியான இடம் ஏற்படுத்தித் தருவதற்கு அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, போர்டு ஆபீஸ் பற்றித்தான் கேள்வி. அங்கத்தினர் அவர்கள் கூறுவதுபற்றித் தனியாகக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்துத் தரப்படும்.

### *Sharing of water from Neyyaru.*

*166 *Q.*—Thiru N. DENNIS: Will the Hon. the Minister for Public Works be pleased to state the details of the agreement reached between the Governments of Tamil Nadu and Kerala in regard to the sharing of Neyyar Waters ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** நெய்யாறு பாசனத் திட்ட அமைப்பிலிருந்து தண்ணீர் வழங்குவதை முறைப்படுத்துவதற்காகக் கேரள அரசு அனுப்பியுள்ள உத்தேச விதிகளின்படி கேரள அரசு தமிழ் நாட்டுக்கு வினாடிக்கு 150 கன அடி தண்ணீர் வழங்கும். எனினும், தண்ணீர் வழங்கு வதை முறைப்படுத்துவதற்கு விதிகள் இயற்றினால் மட்டும் போதாது என்றும் இரு மாநிலங்களுக்கு இடையே முறையான ஒப்பந்தம் ஒன்று செய்து கொள்ளப்படவேண்டும் என்றும் இந்த அரசு கருதியுள்ளது. ஒப்பந்த வரைவு ஒன்றும் கேரள அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அந்த அரசின் இசைவு எதிர்பார்க்கப்படுகிறது.

Thiru N. DENNIS: **May I know, Sir, whether our State is getting full quantity of water as per the original terms of agreement with the Kerala Government ? If not, the reasons for the same may be indicated.**

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, ஏற்கெனவே செய்துகொண்ட ஒப்பந்தத்தின்படி நமக்கு அவர்கள் 150 க்யூசெக்ஸ் தண்ணீர் கொடுக்கவேண்டும். ஆனால் அவர்கள் 115 க்யூசெக்ஸ் தண்ணீர்தான் கொடுக்க முடியும் என்று சொல்கிறார்கள். கீழே எவ்வளவு நீர் வருகிறது என்ற கணக்கைப் பார்க்கின்றபொழுது 72 கியூசெக்ஸ்தான் வருகிறது என்று கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அரசுக்குத் தெரிவித்து இருக்கிறார்கள். எனவே, இதுகுறித்து கேரள அரசுக்கு நாம் எழுதியிருக்கிறோம். அவர்களுடைய பதிலை எதிர்பார்த்துக்கொண்டு இருக்கிறோம்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** அவர்கள் நமக்குத் தண்ணீர் 150 க்யூசெக்ஸ் தருவதாகச் சொல்லியிருந்தும் இப்பொழுது—அதற்காகப் பணமும் வாங்கியிருக்கிறார்கள்—நமக்கு 72 க்யூசெக்ஸ் அளவுக்குத்தான் தண்ணீர் கொடுக்கிறார்கள் என்று கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அறிக்கை அனுப்பியிருக்கிறார்கள். அந்த மாவட்டத்தில் பல பகுதிகளிலே தண்ணீர் பாசனத்திற்குச் சரியாகக் கிடைக்கவில்லை. அங்கேயுள்ள விவசாயிகள் எல்லாம் தண்ணீர் கிடைக்காமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவே, உடனடியாக இது குறித்து இரண்டு அரசாங்கங்களும் அமைச்சர்கள் அளவிலே பேச்சுவார்த்தை நடத்திட அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, கேரள அரசோடு மற்ற நீர் பங்கீடு பிரச்சினைகளைப்பற்றி பேச்சு வார்த்தை நடத்தும்பொழுது இதுபற்றியும் பேச்சுவார்த்தை நடத்தலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவர் அவர்களே, நெய்யாறு நீர்ப் பாசன சேனலுக்குத் தண்ணீர் தருவதாகக் கேரள அரசாங்கம் சொல்லி, நமக்குத் தேவைப்படுகின்ற பொழுது தண்ணீர் கொடுப்பதாகச் சொல்லி இருக்கிறார்கள். ஆனால் நமக்குத் தேவைப்படுகின்றபோது தண்ணீர் திறந்துவிடாததால் கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே இன்றைய நிலையில் பல ஏக்கர் நிலங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. எனவே, நமக்குத் தேவையானபொழுது தண்ணீர் திறந்து விடக்கூடிய ஏற்பாட்டை அரசு செய்ய முன்வருமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, அதற்காகத்தான் கேரள அரசு சில விதிமுறைகளை வகுத்து இருக்கிறது. நாம் சொல்கிறோம், அது மட்டும் போதாது என்று. ' எனவே, அதற்காக ஒரு ஒப்பந்த வரைவை நாம் அவர்களுக்கு அனுப்பியிருக்கிறோம். விரைவிலே அதற்குப் பதில் வரும் என்று எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம்.





### *Supply of water for tanks in Erode taluk.*

* 167 *Q*.—Thiru N. K. PALANISWAMY: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether detailed survey has been conducted for the construction of an anicut near Tiruppur across Noyyal river to divert a portion of water to Palathulvu tank and other tanks in Erode taluk; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** (அ) ஆம்.

(இ) திருப்பூர் அருகே நொய்யல் ஆற்றின் குறுக்கேயுள்ள மன்னரை அணையை நான்கு அடிகள் உயர்த்தி பாசன வாய்க்கால் வெட்டி ஈரோடு தாலுகாவில் ஏற்கனவே உள்ள மூன்று ஏரிகளுக்கும் மேலும் புதிய ஆறு ஏரிகளுக்கும் பாசன வசதியளிப்பது இந்தத் திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தினால் பயனடையும் பழைய ஏரிகளில் 'புஞ்சை பாலதொலவு' ஏரியும் ஒன்றாகும். இத்திட்டம் விரிவான ஆய்வில் உள்ளது.

**திரு. என். கே. பழனிசாமி:** தலைவர் அவர்களே, சமீபத்திலே சிறுபாசனத் திட்டங்கள் என்று சர்க்கார் அறிவித்த 10 திட்டங்களிலே இந்தத் திட்டம் சேர்க்கப்படவில்லையே, அதைச் சேர்ப்பதற்கு சர்க்கார் முயற்சிக்குமா?

The Hon. Thiru P. U. SHANMUGAM: Sir, I said that the Scheme is under detailed investigation. After the detailed investigation is over, it will be definitely included.

**திரு. சு. துரைசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, நொய்யல் ஆற்றிலே அணை கட்டுவதன் மூலமாக பாசன வசதி கிடைக்கும் என்பதைவிட நல்லூர், முதலிபாளையம் ஆகிய இடங்களிலே உள்ள மக்கள் குடிநீர் இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுடைய குடிநீர் கஷ்டத்தைப் போக்குவதற்கு முக்கியமாகப் பயன்படும் என்கிற காரணத்தினால் இந்தத் திட்டத்தை விரைவாகக் கொண்டு வருவதற்கு அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவாகளே, இந்தத் திட்டம் பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னேன். பரிசீலனை செய்யப்படும் பொழுது கனம் அங்கத்தினர் அவர்கள் சொன்ன யோசனையும் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார்:** தலைவர் அவர்களே, எனது தொகுதியிலே பாமந்திப் பகுதியில் நொய்யல் ஆற்றில் ஒரு அணை கட்டும் திட்டம் ஏற்கனவே அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. இப்பொழுது இந்தக்

கேள்வியில் சொல்லப்பட்ட ஏற்பாடுகள் செய்யப்படும்பொழுது அங்கே கட்டப்படவிருக்கிற அந்தத் திட்டத்திற்குப் பாதகம் ஏதாவது இருக்குமா? அப்படி பாதகம் எதுவும் இல்லாமல் அதைச் செய்வதற்கு அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, அதைப்பற்றிய விவரங்கள் என்னிடத்திலே இல்லை. தனிக்கேள்வி போட்டால் விவரம் சொல்லலாம்.

### *Surplus water from Kallanai Canal.*

*168 *Q.*—THIRU N. K. PALANISWAMY: Will the Hon. the Minister for Public Works be pleased to state whether there is any proposal to utilise the surplus water of the Cauvery released from the Kallanai Canal in Thanjavur district?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** கல்லணைக் கால்வாயில் காவிரி ஆற்றின் உபரி நீர் செல்வதற்கு வழியில்லை. எனவே, இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. என். கே. பழனிசாமி:** தலைவர் அவர்களே, ஏராளமான தண்ணீர் வீணாகப் போவதன் காரணமாக நஷ்டம் ஏற்படுகிறதே அதுபற்றி பரிசீலனை செய்யப்பட்டதா? அதுபற்றி என்ன முடிவு செய்யப்பட்டது?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** கல்லணைக் கால்வாயில் நீர் வீணாகப் போவதில்லை. அதனுடைய கொள்ளளவிலே உள்ள தண்ணீரில் பாசனத்திற்குத் தேவையான தண்ணீர்தான் திறந்துவிடப்படுகிறது. தண்ணீர் வீணாகப் போகிறது என்ற கேள்வி எழவில்லை என்றுதான் சொன்னேன்.

### பரம்பிக்குளம்—ஆளியாறு பாசனத் திட்டம்

***வினா 169—திரு. மு. பழனிசாமி:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரம்பிக்குளம்-ஆளியாறு பாசனத் திட்டத்தினை மேலும் விரிவுபடுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(இ) ஆம் எனில், எத்தனை ஏக்கர்களுக்கு எந்த பகுதிகளுக்கு விஸ்தரிக்கப்படும்?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** (அ) இதுபற்றிய செயற்குறிப்பு பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்தின் தலைமைப் பொறியாளரின் தொடக்க நிலை ஆய்வில் உள்ளது.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.



**திரு. மு. பழனிசாமி:** தலைவர் அவர்களே, பரம்பிக்குளம்-ஆளியாறு பாசனத் திட்டத்தை எல்லங்கோயில் வட்டத்திற்கு விஸ்தரிக்க வேண்டுமென்று நீண்ட நெடுங்காலமாகக் கேட்கப்பட்டு வருகிறது. அமைச்சர் அவர்கள் அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு ஏற்பாடுகளை உடனடியாகச் செய்வார்களா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்தின் ஆயக்கட்டு நிலங்களை அதிகமாக்குவதற்கு ஆன செயற்குறிப்பு தலைமைப் பொறியாளரின் விரிவான ஆய்விலே இருக்கிறது என்று சொன்னேன். அந்த அறிக்கை வந்ததற்குப் பிறகு போர்டு ஆப் ரெவின்யூவினுடைய ஆலோசனை கேட்கப்பட்டதற்குப் பிறகு அதுபற்றி நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. நா. பழனிசாமி:** தலைவர் அவர்களே. இந்த பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்தை குண்டடம் பகுதிக்கும் விஸ்தரிக்கும் உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தனிக்கேள்வி போட்டால் பதிலளிக்கலாம்.

**திரு. கோவை செழியன்:** தலைவர் அவர்களே, ஐக்கிய நாடுகள் நிபுணர்கள் குழுவொன்று தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம் செய்துவிட்டு ஐ.சி.ஏ.ஆர்.-க்கு ஒரு அறிக்கை கொடுத்திருக்கிறது. அந்த அறிக்கையில் இந்த பரம்பிக்குளம் ஆளியாறு திட்டத்தின் பகுதிகளில் ஆண்டுக்கொரு முறை என்பதற்குப் பதிலாக ஆண்டுக்கு இரண்டு முறைகள் சாகுபடி செய்யக்கூடிய முறையில் 2 லட்சத்து 75 ஆயிரம் ஏக்கர் அதிகமாகப் பாசனம் செய்யலாம் என்று பரிந்துரை செய்திருக்கிறார்கள். அதன்படி அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** இப்பொழுது 2 லட்சத்து 45 ஆயிரம் ஏக்கர் பாசனம் செய்யப்படுகிறது. இதை 4 லட்சமாக ஆக்கலாமா என்பதைப்பற்றி பரிசீலனை நடந்து வருகிறது. பரிசீலனை முடிந்ததற்குப் பிறகு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

**திரு. சு. துரைசாமி:** அந்தத் திட்டத்திலே ஆனைமலை ஆறுத் திட்டம் சேர்க்கப்பட்டிருக்கிறதா? அப்படிச் சேர்க்கப்பட்டால் எவ்வளவு ஏக்கருக்கு தண்ணீர் கொடுக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தனிக்கேள்வி போட்டால் பதில் தரலாம்.

### Feeder Industries in Tuticorin area.

* 170 Q.—Thiru N. DENNIS: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government to locate feeder industries near the Tuticorin Petrochemical Project in the private and public sectors; and

(b) if so, the details thereof ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (அ) & (இ) தூத்துக்குடி உரத் தொழிற்சாலைக்கு அருகில் பின்வரும் தொழிற்சாலைகள் அமைக்கப்படும் :—

(1) சோடா சாம்பல், அமோனியம் குளோரைடு தொழிற்சாலை.

(2) கனநீர் தொழிற்சாலை (heavy water project) ) சதர்ன் பெட்ரோ கெமிக்கல்ஸ் இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பொரேஷன், தனது உரத் தொழிற்சாலைக்கு அருகில் பின்வரும் துணைத் தொழிற்சாலைகளை அமைப்பதற்கான வாய்ப்புகள் உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளது :—

(1) உரப்பைகள் தயாரிப்புத் தொழிற்சாலை.

(2) சோடியம் சிலிகோ ஃபுளோரைடு/கிரயோலைட் தொழிற்சாலை.

(3) ஜிப்சம் போர்டு (Heavy water project) தொழிற்சாலை.

(4) தொழில்களுக்குத் தேவையான நோக்கப்பட்ட சுண்ணாம்புக் காளவாய்.

(5) பொறியியல் பிரிவுகள் (இயந்திர உதிரிப் பாகங்கள் தயாரிப்பதற்கானவை, ரப்பர் உள்வரித்தையல், கெட்டியான குரோமிய முலாம் பூசும் தொழிற்சாலை, வெப்பந்தாங்கிக் கற்கள், மசக்கெண்ணெய் எடுத்தல் முதலியன).

மேற்படித் தொழிற்சாலைகள் அமைப்பதற்கான வாய்ப்புகள் பற்றி ஆய்வு செய்யுமாறும் அறிக்கைகள் தயாரிக்குமாறும், பொருத்தமான தொழிற்சாலைகளை அமைக்க ஏற்பாடு செய்யுமாறும் தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனமும், சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளன.

**திரு. என். டென்னிஸ்:** தலைவர் அவர்களே, இவை எப்பொழுது ஆரம்பிக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** அங்கே உரத் தொழிற்சாலை தொடங்கப் படுவதற்கு முன்னாலேயே இந்தத் தொழிற்சாலைகள் அங்கே உருவாக வேண்டு மென்ற முறையிலே நாம் அறிக்கைகள் தயாரித்து அந்தப் பகுதி மக்களோடு கலந்து பேசி அதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும்.

### *New Industries for Tiruchirappalli.*

* 171 Q.— Thiru N. DENNIS: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether any survey has been undertaken by the Government to examine the scope of industrial growth in and around Tiruchirappalli district in 1973 ; and

(b) if so, the details thereof ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (அ) சென்னையிலுள்ள சிறுதொழில்கள் பணிக்கழகம் 1972 ஆம் ஆண்டு நவம்பர்-டிசம்பர் மாதங்களில் திருச்சி மாவட்டத்தில் தீவிர ஆய்வுக்கான முன் ஆய்வு செய்தது.

(ஆ) ஆய்வு அறிக்கை இன்னும் வரைவு நிலையில் இருக்கிறது.

**திரு. கு. காமாட்சி:** தலைவரவர்களே, கொதிகலன் தொழிற்சாலை அருகில் அனல் மின் நிலையம் அமைக்கும் உத்தேசம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** அனல் மின் நிலையம் அங்கே இல்லை. தூத்துக்குடியில் அண்மையில் அனல் நிலையம் நாட்டப்பட்டிருக்கிறது.

### சிறு தொழில்கள் துவக்க விதிவிலக்குகள்

*** 172 வினா—திரு. கி. ஜெயராமன்:** மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சிறுதொழில் வளருவதற்கு உதவுகின்ற முறையில் தொழிற்சாலைகள் அமைத்து நடத்துவதற்கு அனுமதி வழங்குகின்ற சட்டத்திலிருந்தும், விதி முறைகளிலிருந்தும் குறிப்பிட்ட முறைகளில் விதிவிலக்கு அளிக்க வேண்டு மென்று சேலம் மாவட்ட தொழில் நடத்த அனுமதி கொடுப்பதை துரிதப் படுத்த உதவும் கமிட்டியின் தீர்மானத்தின்மீது அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: மேற்கண்ட சேலம் மாவட்ட அனுமதி கொடுப்பதை துரிதப்படுத்த உதவும் குழுவின் தீர்மானத்தை தொழில் நடத்த நிர்வாக சீர்திருத்தக்குழு மற்ற தீர்மானங்களோடு பரிசீலித்து குறிப்பிட்ட சில சட்டத்திலிருந்தும், விதிமுறைகளிலிருந்தும் விதிவிலக்கு அளிக்க சிபாரிசு செய்துள்ளது. நிர்வாக சீர்திருத்தக் குழுவின் மேற்படி சிபாரிசுகளை அரசு ஒப்புக்கொண்டு அரசு ஆணை நிலை எண் 511 (தொழில்) தேதி 26—3—1973-ல் ஒருசில சிபாரிசுகளை செயலாக்க உத்தரவு பிறப்பித்துள்ளது.

## கைவினைப் பொருள்கள் வளர்ச்சிக் கழகம்

* 173 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்:

திரு. ரா. ரா. முனுசாமி: மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கைவினைப் பொருட்களுக்காக கார்ப்பரேஷன் ஒன்று துவக்கும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தமிழ்நாடு கைவினைப் பொருள்கள் வளர்ச்சிக் கழகம் 1—8—1973-ம் தேதி பதிவு செய்யப்பட்டுள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, இந்தப் பதிவுக் கழகத்தைப் பதிவு செய்த பிறகு மேற்கொண்டு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் விபரம் அறியலாமா? அது எப்பொழுது செயல்படும்?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இப்பொழுதே செயல்படத் துவங்கியிருக்கிறது. இது சம்பந்தமாக ஒவ்வொரு மாவட்டத்திலும் அவர்கள் பணிகளைத் தொடங்க வேண்டுமென்றும், ஒவ்வொரு மாவட்டத் தலைநகரத்திலும் அவர்களுடைய விற்பனைக் கூடத்தை அமைத்து, உற்பத்தியாகும் பொருள்களை வாங்கி விற்க வேண்டுமென்றும் அரசு முடிவெடுத்துள்ளது.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: தலைவரவர்களே, இந்த கார்ப்பரேஷனில் இருக்கும் அங்கத்தினர்கள் யார் யார்? அவர்கள் இதுவரையில் என்ன சிபாரிசுகளைச் செய்திருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இப்பொழுதுதான் போடப்பட்டிருக்கிறது. இது 'அட்டானமஸ் கார்ப்பரேஷன்' என்ற முறையிலே அவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள். கீழ்க்கண்டவர்கள் அங்கத்தினர்கள்:—



Director of Industries, Deputy Secretary, Finance, Deputy Secretary, Industries, a representative of the All-India Handicrafts Board, a representative of the Handicrafts Industrial Co-operative Society, a representative of the Artisans and a Member of the Legislative Assembly.

## உப்பு உற்பத்தி

* 174 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் நவீன முறையில் உப்புத் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றினை அமைக்கும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம்.

(இ) தமிழ்நாட்டில் முகவை மாவட்டத்தில் மாரியூர் சதுப்பு நிலத்திலும் செங்கல்பட்டு மாவட்டத்தில் கோவளம் பகுதியிலும், நெல்லை மாவட்டத்தில் வைப்பார்-வேம்பார் பகுதியிலும் தூத்துக்குடி துறைமுகத்திற்குத் தென் பகுதியிலும் பெரிய உப்பளங்கள் நவீன முறையில் அமைக்கும் திட்டங்கள் பரிசீலனையில் உள்ளன.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, இந்தத் திட்டங்களுக்கு எவ்வளவு ரூபாய் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: முதலீடு பற்றிய விவரம் தற்பொழுது இல்லை.

## தீப்பெட்டி தயாரிக்கும் தொழிற் பிரிவுகளுக்கு உதவி

* 175 வினா.—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் தீப்பெட்டித் தொழிலை ஊக்குவிக்க அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தமிழ்நாட்டில் கையால் தீப்பெட்டி தயாரிக்கும் தொழிற்சாலைகள் ஏறத்தாழ ஆயிரம் உள்ளன. சிம்புகள்—மருந்து பூசிய பாகங்கள், நீலநிற தீப்பெட்டிக் காகிதம், தீக்குச்சி, மெழுகு,

பொட்டாசியம் குளோரேட், சிவப்பு பாஸ்வரம் ஆகிய மூலப்பொருட்களைப் பெறுவதில் இந்தத் தொழிற்பிரிவுகளுக்குத் தமிழ்நாடு அரசு உதவுகின்றது. தீப்பெட்டித் தொழிலாளருக்காகக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப் பட்டுள்ளன. "பணி" தீப்பெட்டி சங்கங்கள் ஐந்து அமைக்கப்பட்டுள்ளன. அவை தமது உறுப்பினர்-சங்கங்களுக்கு மூலப்பொருட்களை வழங்குவதுடன், அவற்றின் சரக்குகளையும் விற்பனை செய்கின்றன. தீப்பெட்டிச் சங்கங்களுக்கு அரசு, நிதியுதவியையும், நிர்வாக உதவியையும் வழங்குகின்றது. இச்சங்கங் களால் வழங்கப்படும் மூலப்பொருட்களுக்கு விற்பனைவரி செலுத்துவதனின்றும் விலக்களிக்கப்பட்டுள்ளது. தீப்பெட்டித் தொழில் ஆலோசனைக் குழு ஒன்றை அரசு அமைத்துள்ளது. அவ்வப்போது இத்தொழிலில் ஏற்படும் பிரச்சினைகள் குறித்து விவாதித்து அவற்றைத் தீர்க்க அவசியமான நடவடிக்கைகளை மேற் கொள்வதற்கென தீப்பெட்டித் தொழில் கழகம் (Match Chamber) தொழிற்சங்கங்கள் ஆகியவற்றிற்குத் தீப்பெட்டித் தொழில் ஆலோசனைக் குழுவில் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, தமிழகத்தில் தீப்பெட்டித் தொழிற் சாலை பெரும்பாலும் இராமநாதபுரம் மாவட்டத்தில் இருப்பதாகக் கூறப்படு கிறது. அதனை தஞ்சை மாவட்டத்திலும் விஸ்தரிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தஞ்சை மாவட்டத்தில் அறந்தாங்கி அருகே ஆரம்பிக்கப்பட்டு, அதில் பல தவறுகளும், நஷ்டங்களும் ஏற்பட்டன. இப்பொழுதுகூட எங்கெங்கே கூட்டுறவு முறையிலே ஆரம்பிக்க முன்வருகிறார் களோ அதற்கு உதவி செய்யப்படும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், சமீபகாலத்தில் தீப்பெட்டி தொழிற் சாலைக்கு வேண்டிய பொட்டாஷியம் குளோரேட் கிடைக்கவில்லை. இதை அதிக அளவில் தயார் செய்யும் விம்கோவிலிருந்தும் போதுமான அளவில் சப்ளை இல்லை என்று சொல்லப்படுகிறது. அப்படியானால் அவர்களுக்குத் தேவையான அளவில் தகுந்த முறையில் சப்ளை செய்ய தமிழக அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்த நிலைமை உண்மை. இதைப்பற்றி மத்திய அரசுக்கு நாம் தெரிவித்திருக்கிறோம். இதை அதிகமாக உற்பத்தி செய்யும் விம்கோ மாராட்டிய மாநிலத்தில் இருக்கிறது. மத்திய அரசுக்கு நாம் சொல்லியிருக்கிற யோசனை என்னவென்றால், தமிழ்நாட்டில் அளிக்கப்பட வேண்டிய பொட்டாஷியம் குளோரைடை தமிழக அரசிடம் ஒப்படைத்து,



விநியோகிக்கின்ற உரிமையைக் கொடுக்க வேண்டுமென்று கூறியிருக்கிறோம். இதற்கிடையிலே நாமே தொழிற்சாலை துவங்க உத்தேசித்து விரைவில் உற்பத்தி துவங்க இருக்கிறது.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, in view of the fact that many, many match factories are coming up as small-scale industries, whether this Government will think of curbing the production of big and giant match industries like Wimco with the help of the Central Government, just as they have limited it in the case of the mill cloth so that small-scale industries will prosper ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தீப்பெட்டி தொழிற்சாலையை சிறிய தொழில் வளர்ச்சியிலே அனுமதிக்கப்பட வேண்டுமென்ற கருத்து நல்ல கருத்து. இதை இந்த அரசும் விரும்புகிறது. ஆனால் விம்கோ தொழிற்சாலை வெளிநாட்டினருக்கு உரிமையான தொழிற்சாலையாதலால், இதைப்பற்றி மத்திய அரசுதான் முடிவெடுக்க வேண்டும்.

## *Collection of Agricultural Income Tax.*

* 176 Q.—THIRU R. R. MUNUSWAMY : Will the Hon. the Minister for Revenue be pleased to state the details of the steps taken to intensify the collection of and to check evasion of Agricultural Income-tax in this State ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, விவர அறிக்கை@ ஒன்று அவைமுன் வைக்கப்பட்டிருக்கிறது.

## *Visit of working group on Land Reforms to Madras.*

* 177 Q.—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Revenue be pleased to state whether the working group on Land Reforms set up by the National Agricultural Commission has visited Madras during 1973 ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இல்லை.

திரு. என். கே. பழனிசாமி : இந்தக் கமிஷன் சென்னைக்கு விஜயம் செய்து நம்முடைய குத்தகைதாரர் பாதுகாப்புச் சட்டம், குத்தகை பதிவுச் சட்டம் போன்ற சட்டங்களைப் பரிசீலனை செய்ததா ? அப்படியானால் அதில் குறைபாடு இருக்கிறது என்று அறிக்கை விட்டார்களா ?

---

@ 119-125-ம் பக்கங்களில் 3-ஆம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

[1973 நவம்பர் 19

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இந்த கமிஷன், 'நேஷனல் கமிஷன் ஆன் அக்ரிகல்சர்', மத்திய அரசால் நியமிக்கப்பட்டது. இந்த கமிஷன் சென்னைக்கு வந்ததா என்பது கேள்வி, வரவில்லை என்று பதில் சொன்னேன். இந்த கமிஷன் மூலம் 'வேண்ட் ரிஃபார்ம்ஸ் அண்ட் அக்ரிகல்சரல் ப்ரொடக்ஷன்' பற்றி 'ஒர்க்கிங் குரூப்' 'ஃபார்ம்' செய்யப்பட்டிருக்கிறது. அவர்கள் 'கொஸ்டினியர்' அனுப்பி, அரசாங்கத்தின் பதிலை அனுப்பியிருக்கிறோம்.

## இனாம் நில விவசாயிகள்

*178 வினா—திரு. ச. சங்குமுத்து தேவர்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இனாம் ஒழிப்புச் சட்டத்தின்கீழ் நோட்டிபை செய்யப்பட்ட இனாம் நிலங்களில் உள்ள விவசாயிகளிடமிருந்து அந்த இனாம்தாரர்கள் மாற்று அடையோலை போடுவதும் மேல்வாரம் வசூலிப்பதும் குறித்து எடுத்த நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தமிழ்நாடு 1963-ஆம் ஆண்டு இனாம் எஸ்டேட்டுகள் (நீக்குதல்—ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டத்தின் கீழ் (தமிழ்நாடு சட்டம் 26/1963 அறிவிக்கப்பட்ட தேதி முதற்கொண்டு எஸ்டேட் முழுவதும் அரசுக்கு மாற்றப்பட்டு எவ்வித வில்லங்கமுமின்றி அதன் உரிமை அரசிடம் நிலைபெற்றதாகிவிடும். அறிவிக்கப்பட்ட தேதிக்கு பிறகு இனாம் எஸ்டேட்டுகள் நீக்குதல் சட்டத்தின் விதித் துறைகளின்படி அரசால் மேற்கொள்ளப்பட்ட அறிவிக்கப்பட்ட எஸ்டேட்டைப் பொறுத்தவரை மேல் வாரம் (குத்தகை) வசூலிக்க நில உடைமையாளருக்கு உரிமையில்லை. தகுதி வாய்ந்த நீதிமன்றம் அல்லது அதிகாரமன்றம் ஒன்றினால் அத்தகைய அறிவிப்புக்கும், எஸ்டேட்டை அரசு மேற்கொண்டதற்கும் தடை ஆணை விதிக்கப்பட்டால் அந்த எஸ்டேட் தொடர்ந்து நில உடைமையாளரின் பொறுப்பில் இருக்கும். இந்நிலையில் நில உடைமையாளர் தனக்குச் சேரவேண்டிய மேல் வாரம் (குத்தகை) வசூலிப்பதைத் தடுக்க இயலாது.

குத்தகைகாரர்கள் (பயிரிடும் குத்தகைக்காரர்கள்) உரிய தேதியில் குத்தகையைச் செலுத்தத் தவறினால் அக்குத்தகைக்காரர்களை வெளியேற்ற தமிழ்நாடு 1955 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைக்காரர்கள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் தகுதியான அதிகார மன்றத்திடம் நில உடைமையாளர் விண்ணப்பித்துக் கொள்ளலாம். இங்கு அவருக்குப் பாதகமான தீர்ப்பு கூறப்பட்டால் நில உரிமையைத் திரும்பப் பெறுவதற்காக பொருத்தமான மேல் முறையீட்டு அதிகாரமன்றத்திடம் திரும்பவும் விண்ணப்பிக்க வேண்டும்.



1973 நவம்பர் 19]

*179 வினா—திரு. ச. சங்குமுத்து தேவர்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை சட்டம்

The Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act 26/63-ன்படி எத்தனை விவசாயிகளுக்குப் பட்டா கிடைத்திருக்கிறது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: 28—2—1973 வரையில் 2,50,112 விவசாயிகளுக்குப் பட்டா கிடைத்திருக்கிறது.

திரு. ச. சங்குமுத்து தேவர்: தலைவரவர்களே, அரசாங்கத்திற்கு 'வெஸ்ட்' ஆனதற்குப் பிறகு, இனாம்தாரர்கள் கோர்ட்டு மூலம் எவிக்ஷன் செய்து வேறு நபர்களுக்கு அடையோலை போடுகிறார்கள். இந்த நிலைமை திருநெல்வேலி மாவட்டத்திலே இருக்கிறது. ஆகவே இதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தேன். இனாம்தாரர்கள் வசூல் செய்வதை தடுக்க அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்பதுதான் என் கேள்வி.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அரசாங்கத்தில் 'வெஸ்ட்' ஆன பிறகு இனாம்தார் குத்தகை வசூல் செய்ய முடியாது. அவர்கள் மேல் கோர்ட்டுக்குச் சென்று தடை ஆணை பெற்றுவிட்டால் ஒன்றும் செய்ய முடியாது. திருநெல்வேலியில் உள்ள சில வழக்குகளைப் பற்றி அவர்கள் குறிப்பிடுகிறார்கள் என்று கருதுகிறேன். ஏற்கனவே அரசாங்கத்திடம் 'வெஸ்ட்' ஆகி இருந்தால் எவிக்ஷன் செய்ய முடியாது. குறிப்பிட்ட விவரங்களை உறுப்பினர் அவர்கள் கொடுத்தால் அரசு கவனித்து நடவடிக்கை எடுக்கும். ஏற்கனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தக் கருத்தைத் தெரிவித்து அதனபேரில் அவருக்குகூட அரசாங்கத்தின் மூலம் பதில் விளக்கமாக அனுப்பப்பட்டிருக்கிறது.

திரு. ச. சங்குமுத்து தேவர்: இருந்தாலும், பட்டா யாருக்கு என்று கோர்ட்டில் முடிவு செய்யாமல் இருக்கும்போது, நடுவில் இந்த மாதிரி நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இப்போது நடுவிலே எவிக்ஷன் செய்து வேறு நபருக்கு மாற்றிவிட்டால் மீண்டும் அவர்களுக்குப் பட்டா கிடைக்காத நிலைமை ஏற்பட்டுவிடும். ஆகவே, அரசு இதுபற்றி உடனடியாக உத்தரவு பிறப்பிக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: உத்தரவுகள் தெளிவாக இருக்கின்றன. ஏற்கனவே, அரசாங்கத்திடம் 'வெஸ்ட்' ஆகி இருந்தால் குத்தகைதாரர்களை வெளியேற்ற முடியாது. மேல் கோர்ட்டில் வழக்கு இருக்குமானால் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க இயலாது.

[1973 நவம்பர் 19

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** இந்த கமிஷன், 'நேஷனல் கமிஷன் ஆன் அக்ரிகல்சர்', மத்திய அரசால் நியமிக்கப்பட்டது. இந்த கமிஷன் சென்னைக்கு வந்ததா என்பது கேள்வி, வரவில்லை என்று பதில் சொன்னேன். இந்த கமிஷன் மூலம் 'லேண்ட் ரிஃபார்ம்ஸ் அண்ட் அக்ரிகல்சரல் ப்ரொடக்ஷன்' பற்றி 'ஓர்க்கிங் குரூப்' 'ஃபார்ம்' செய்யப்பட்டிருக்கிறது. அவர்கள் 'கொஸ்டினியர்' அனுப்பி, அரசாங்கத்தின் பதிலை அனுப்பியிருக்கிறோம்.

## இனாம் நில விவசாயிகள்

*178 **வினா—திரு. ச. சங்குமுத்து தேவர்:** மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இனாம் ஒழிப்புச் சட்டத்தின்கீழ் நோட்டிபை செய்யப்பட்ட இனாம் நிலங்களில் உள்ள விவசாயிகளிடமிருந்து அந்த இனாம்தாரர்கள் மாற்று அடையோலை போடுவதும் மேல்வாரம் வசூலிப்பதும் குறித்து எடுத்த நடவடிக்கைகள் யாவை?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** தமிழ்நாடு 1963-ஆம் ஆண்டு இனாம் எஸ்டேட்டுகள் (நீக்குதல்—ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டத்தின் கீழ் (தமிழ்நாடு சட்டம் 26/1963 அறிவிக்கப்பட்ட தேதி முதற்கொண்டு எஸ்டேட் முழுவதும் அரசுக்கு மாற்றப்பட்டு எவ்வித வில்லங்கமுமின்றி அதன் உரிமை அரசிடம் நிலைபெற்றதாகிவிடும். அறிவிக்கப்பட்ட தேதிக்கு பிறகு இனாம் எஸ்டேட்டுகள் நீக்குதல் சட்டத்தின் விதித் துறைகளின்படி அரசால் மேற்கொள்ளப்பட்ட அறிவிக்கப்பட்ட எஸ்டேட்டைப் பொறுத்தவரை மேல் வாரம் (குத்தகை) வசூலிக்க நில உடைமையாளருக்கு உரிமையில்லை. தகுதி வாய்ந்த நீதிமன்றம் அல்லது அதிகாரமன்றம் ஒன்றினால் அத்தகைய அறிவிப்புக்கும், எஸ்டேட்டை அரசு மேற்கொண்டதற்கும் தடை ஆணை விதிக்கப் பட்டால் அந்த எஸ்டேட் தொடர்ந்து நில உடைமையாளரின் பொறுப்பில் இருக்கும். இந்நிலையில் நில உடைமையாளர் தனக்குச் சேரவேண்டிய மேல் வாரம் (குத்தகை) வசூலிப்பதைத் தடுக்க இயலாது.

குத்தகைகாரர்கள் (பயிரிடும் குத்தகைக்காரர்கள்) உரிய தேதியில் குத்தகையைச் செலுத்தத் தவறினால் அக்குத்தகைக்காரர்களை வெளியேற்ற தமிழ்நாடு 1955 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைக்காரர்கள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் தகுதியான அதிகார மன்றத்திடம் நில உடைமையாளர் விண்ணப்பித்துக் கொள்ளலாம். இங்கு அவருக்குப் பாதகமான தீர்ப்பு கூறப்பட்டால் நில உரிமையைத் திரும்பப் பெறுவதற்காக பொருத்தமான மேல் முறையீட்டு அதிகாரமன்றத்திடம் திரும்பவும் விண்ணப்பிக்க வேண்டும்.



1973 நவம்பர் 19]

*179 **வினா—திரு. ச. சங்குமுத்து தேவர்:** மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை சட்டம்

The Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act 26/63-ன்படி எத்தனை விவசாயிகளுக்குப் பட்டா கிடைத்திருக்கிறது?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** 28—2—1973 வரையில் 2,50,112 விவசாயிகளுக்குப் பட்டா கிடைத்திருக்கிறது.

**திரு. ச. சங்குமுத்து தேவர்:** தலைவரவர்களே, அரசாங்கத்திற்கு 'வெஸ்ட்' ஆனதற்குப் பிறகு, இனாம்தாரர்கள் கோர்ட்டு மூலம் எவிக்ஷன் செய்து வேறு நபர்களுக்கு அடயோலை போடுகிறார்கள். இந்த நிலைமை திருநெல்வேலி மாவட்டத்திலே இருக்கிறது. ஆகவே இதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தேன். இனாம்தாரர்கள் வசூல் செய்வதை தடுக்க அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்பதுதான் என் கேள்வி.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** அரசாங்கத்தில் 'வெஸ்ட்' ஆன பிறகு இனாம்தார் குத்தகை வசூல் செய்ய முடியாது. அவர்கள் மேல் கோர்ட்டுக்குச் சென்று தடை ஆணை பெற்றுவிட்டால் ஒன்றும் செய்ய முடியாது. திருநெல்வேலியில் உள்ள சில வழக்குகளைப் பற்றி அவர்கள் குறிப்பிடுகிறார்கள் என்று கருதுகிறேன். ஏற்கனவே அரசாங்கத்திடம் 'வெஸ்ட்' ஆகி இருந்தால் எவிக்ஷன் செய்ய முடியாது. குறிப்பிட்ட விவரங்களை உறுப்பினர் அவர்கள் கொடுத்தால் அரசு கவனித்து நடவடிக்கை எடுக்கும். ஏற்கனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தக் கருத்தைத் தெரிவித்து அதன்பேரில் அவருக்குகூட அரசாங்கத்தின் மூலம் பதில் விளக்கமாக அனுப்பப்பட்டிருக்கிறது.

**திரு. ச. சங்குமுத்து தேவர்:** இருந்தாலும், பட்டா யாருக்கு என்று கோர்ட்டில் முடிவு செய்யாமல் இருக்கும்போது, நடுவில் இந்த மாதிரி நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இப்போது நடுவிலே எவிக்ஷன் செய்து வேறு நபருக்கு மாற்றிவிட்டால் மீண்டும் அவர்களுக்குப் பட்டா கிடைக்காத நிலைமை ஏற்பட்டுவிடும். ஆகவே, அரசு இதுபற்றி உடனடியாக உத்தரவு பிறப்பிக்குமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** உத்தரவுகள் தெளிவாக இருக்கின்றன. ஏற்கனவே, அரசாங்கத்திடம் 'வெஸ்ட்' ஆகி இருந்தால் குத்தகைதாரர்களை வெளியேற்ற முடியாது. மேல் கோர்ட்டில் வழக்கு இருக்குமானால் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க இயலாது.

*Community Development and Panchayats.*

* 180 Q.—Thiru N. K. PALANISWAMY: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether the Union Ministry of Agriculture has forwarded any communication to this State during 1973 on the reorganisation of Community Development Programme and suggested reorientation and strengthening the existing block agency and Panchayat Raj; and

(b) if so, the action taken thereon ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** (அ) ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சிப் பணிகளில், சமுதாய வளர்ச்சித் துறையும் ஊராட்சி நிறுவனமும் திறம்படச் செயல்புரியும் வண்ணம், வளர்ச்சி வட்டார முகவர் நிறுவனம் சீரமைந்துப் பலப்படுத்தப்பட வேண்டும் என்று 17—2—1973 ஆம் நாள் நடைபெற்ற தனது கூட்டத்தில் சமுதாய வளர்ச்சித்துறை, ஊராட்சி நிறுவனம் குறித்த ஆலோசனைக் குழு பரிவுரை ஒன்றைச் செய்துள்ளது. இந்தப் பரிவுரை குறித்து தேவையான நடவடிக்கை எடுப்பதற்காக, இந்திய அரசின் வேளாண்மை அமைச்சகம் இதனை இந்த அரசுக்கு அனுப்பி வைத்துள்ளது.

(இ) வளர்ச்சி வட்டாரம், சமுதாய வளர்ச்சித் துறை ஆகியவற்றின் நிதி வாயில்களை ஒருங்கிணைப்பதற்கும், வளர்ச்சி வட்டாரத்தில் ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டத்தைக் கொண்டு வருவதற்கும் இயலும் வண்ணம், தமிழ் நாட்டில், வளர்ச்சி வட்டார முகவர் நிறுவனம், ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ளது. எனவே, இப்பரிவுரை குறித்து நடவடிக்கை ஏதும் எடுக்க அவசியமில்லை என்று கருதப்பட்டது.

* 181 வினா.—**திரு. ஆ. பரந்தாமன்:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள ஊராட்சி ஒன்றியங்களைச் சீரமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** வருவாய்த் துறை நிர்வாகத்தை மாற்றியமைப்பது குறித்து நிர்வாக சீர்திருத்த ஆணைக்குழு தற்போது ஆராய்ந்து வருகிறது. எனவே, வட்டாரங்களின் எல்லைகளை மாற்றியமைப்பது குறித்தும் ஆராய்ந்து பரிவுரை செய்வதற்காக இப் பிரச்சினையை நிர்வாகச் சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு அரசு தெரிவித்துள்ளது. நிர்வாகச் சீர்திருத்த ஆணைக்குழு தனது கருத்தை தற்போது வழங்கியுள்ளது. அவை அரசின் பரிசீலனையில் இருந்து வருகின்றன.





**திரு. என். கே. பழனிசாமி:** சமீபத்தில் ஸ்டேட் அட்மினிஸ்ட்ரேட்டிவ் ரிபார்ம்ஸ் கமிஷன் சர்க்காருக்குக் கொடுத்துள்ள அறிக்கையின்படி ஆர்.டி. ஓ. போன்ற வட்டார வளர்ச்சி அதிகாரிகளை நீக்கி அதற்குப் பதிலாக கலெக்டருடைய உதவியாளரை வைத்துக் கொண்டே பஞ்சாயத்து யூனியன்களைக் கவனித்துக் கொள்ளும் திட்டங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றனவா ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** அவர்களுடைய கருத்து இப்போது தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அது பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

**திரு. ஆ. பரந்தாமன்:** தமிழ்நாட்டில் இன்றைக்குச் சில ஊராட்சி ஒன்றியங்கள் எண்ணிக்கையிலே அதிகமான ஊராட்சி மன்றங்களையும், சில ஊராட்சி ஒன்றியங்கள் எண்ணிக்கையிலே குறைவான ஊராட்சி மன்றங்களையும் பெற்றிருக்கிறது. அதன் விளைவாக, நிர்வாகத்தில் பல சங்கடங்கள் இருந்து வருகின்றன. இதைத் தவிர்க்கும் வகையில் விரைவில் சீரமைக்க அரசு முன் வருமா ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** ஏற்கனவே, இந்தத் திட்டம் அமல் செய்யப்பட்ட நேரத்தில் தமிழ்நாட்டுக்கு 375 ஒன்றியங்கள்தான் அமைக்கப்பட வேண்டுமென்று மத்திய அரசு ஆணை பிறப்பித்திருந்தது. அதிலும், கல்விராயன் மலைப்பகுதி நீங்கலாக 374 ஒன்றியங்கள்தான் போடப்பட்டிருக்கின்றன. அந்த 374 ஒன்றியங்களிலே அவ்வப்போது ஏற்பட்ட அந்தந்தச் சூழ்நிலைகளுக்கேற்ப ஊராட்சி மன்றங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. இது அடுத்த ஆண்டிலிருந்து மாநிலத் திட்டமாக மாற்றப்பட்டு பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு இதுபற்றிப் பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து கேள்வி எண் 182. . . .

3. நடைமுறைக் கேள்விகள்

(அ) அதிகத் துணை வினாக்கள் கேட்க அனுமதிப்பது குறித்து.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** பாயிண்ட் ஆப் ஆர்டர் சார். முன் இரண்டு கேள்விகளும் முக்கியமான கேள்விகள். ஆகவே, மேலும் அதிகமான துணைக் கேள்விகள் அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது பாயிண்ட் ஆப் ஆர்டர் அல்ல.

**திரு. ஜே ஜேம்ஸ்:** எவ்வளவு தடவை கை தூக்கினாலும் துணை கேள்விகள் கேட்க அனுமதி தாராதது வருத்தத்தக்க விஷயம்.

(திரு. எஸ். வடிவேலும் எழுந்து நின்று கொண்டிருந்தார்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கிட்ட தட்ட 1,200 கேள்விகளுக்கு விடைகள் அளிக்கப்பட வேண்டியுள்ளன. இந்தப் பத்து நாட்களில் 1,200 கேள்விகளையும் இந்த அவையில் வைக்க முடியுமா என்ற நிலை இருந்து கொண்டிருக்கும்போது இன்று 50 கேள்விகள் வினாப் பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. முக்கியமான சில கேள்விகளுக்குத் துணைக் கேள்விகள் கேட்க அனுமதி அளித்துக் கொண்டுதான் வருகிறேன். இப்போதே ஒரு மணி நேரம் முடியப் போகிறது. இன்னும் 18 கேள்விகள் இருக்கின்றன. ஒரு மணி நேரம் ஆனவுடன் மற்ற அவைகளில் கடைப்பிடிப்பது போன்று மீதி இருக்கும் வினா-விடைகளை உறுப்பினர்களுக்கு அச்சடித்துக் கொடுத்து விடலாமா அல்லது அதிக நேரம் ஒதுக்க வேண்டுமா என்பது பற்றி உறுப்பினர்கள் முடிவு செய்ய வேண்டும். எதிர்க் கட்சித் தலைவர்கள் இதுபற்றிக் கருத்துக்களைக் கூறட்டும்.

THIRU R. PONNAPPA NADAR: Sir, some more time may be allowed for questions so that Members who are desirous to put supplementaries may be permitted to do so. This is a question of an important nature and that is the reason why, we would once again request the Hon. Speaker to be more indulgent.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் நேரம் கொடுத்துக் கொண்டுதான் வருகிறேன். அடுத்து கேள்வி எண் 182. . . .

**திரு. ஜே. ஜேம்ஸ்:** பாயிண்ட் ஆப் ஆர்டர் சார் Our suggestion is that this question is very important and so we would request the Hon. Speaker to give us time so that we may put more supplementary questions.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அப்படி ஒரு முறை இல்லை. மேலும், துணைக் கேள்விகள் கொடுங்கள் என்று கேட்க முடியாது. முக்கியத்துவம் உள்ள கேள்வி, மேலும் விளக்கம் பெற வேண்டுமென்றால் 'அரை மணி நேர விவாதம்' வேண்டுமென்று கேளுங்கள். அதுபற்றிப் பேரவைத் தலைவர் எப்படி முடிவு செய்கிறார் என்று பிறகு பார்க்க வேண்டும்.

**திரு. ஜே ஜேம்ஸ்:** மேலும் துணைக் கேள்விகள் கேட்க அனுமதி கொடுங்கள் என்று கேட்கக் கூடாது என்றால் வேறு என்ன முறையைக் கையாள வேண்டுமென்று சொல்லுங்கள்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குறிப்பிட்ட கேள்விக்கு மேலும் விளக்கங்களைப் பெற வேண்டியிருப்பதால் போதிய விளக்கம் பெறும் வகையில் 'அரை மணி நேரம் விவாதம் வேண்டும்' என்று கேட்க வாய்ப்பு இருக்கிறது.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவர் அவர்களுக்குப் போதிய சமயம் இல்லையென்று சொன்னால் அப்போது அரை மணி நேரம் விவாதம் வைத்துக் கொள்ளலாம். மற்ற நேரங்களில் முக்கியமான கேள்விகளுக்கு அதிகமான துணைக் கேள்விகள் கேட்க நேரத்தை ஒதுக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பிஸினஸ் அட்வைசரி கமிட்டியில் இது பற்றி பிறகு முடிவு செய்து கொள்ளலாம்.

அடுத்து கேள்வி எண் 182.

2. வினுக்கள்—விடைகள்.—தொடர்ச்சி.

(1) வெள்ளிக் குறியிட்ட வினுக்கள்—தொடர்ச்சி.

**ஊராட்சி ஒன்றியங்களுக்குப் பரிசுத் திட்டம்**

* 182 வினு.—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒவ்வொரு மாவட்டத்திலும் சிறந்த பஞ்சாயத்து யூனியனைத் தேர்ந்தெடுத்து பரிசு வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறதா?

(இ) ஆம் எனில், எந்த அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகிறது?

**மாண்புமிகு அ. பெ. தர்மலிங்கம்:** (அ) ஆம்.

(இ) சிறந்த ஊராட்சி ஒன்றியத்தை தேர்ந்தெடுப்பதில் பல துறைகளில் அவ் வொன்றியத்தின் சாதனைகள் கருத்தில் கொள்ளப்படுகிறது. அவைகளில் முக்கியமானவை வேளாண்மை, கால்நடை, மீன்வளம், சிறுபாசனம், கல்வி, சமூகக் கல்வி, மகளிர் மற்றும் குழந்தைகள் திட்டம், கூட்டுறவு, கிராமத் தொழில் கிராம வேலைத்திட்டம் முதலியன. இதற்கான மதிப்பெண் மற்றும் தெறிநிலை (Indicator) அரசு நிர்ணயித்துள்ளது. அந்தப் பெருக்க அடக்குக் குறியின் அடிப்படையில் அதிக மதிப்பெண் பெற்ற ஊராட்சி ஒன்றியத்தை அந்த மாவட்டத்தின் அவ் வருடத்தின் சிறந்த ஊராட்சியாக ஊரக வளர்ச்சி இயக்நர் தேர்ந்தெடுக்கிறார்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** ஒவ்வொரு மாவட்டத்திலும் சிறந்த ஊராட்சி ஒன்றியங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவற்றுக்குப் பரிசுகள் தற்போது வழங்கப்படுகின்றன. இதைத் தவிர அதற்குக் காரணமாக இருந்த அதிகாரிகளுக்குப் பதவி உயர்வு கொடுத்தால் தமிழகம் முழுவதும் போட்டி மனப்பான்மை ஏற்பட்டு மேலும் பல நல்ல ஊராட்சி ஒன்றியங்கள் உருவாக வாய்ப்பு இருக்கும். இதை அரசாங்கம் பின்பற்றுமா ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** தற்போது அப்படி ஒன்றும் உத்தேசம் இல்லை.

**திரு. எம். சுரேந்திரன் :** ஊராட்சி ஒன்றியங்களில் சிறந்த ஊராட்சி ஒன்றியங்களுக்குப் பரிசு வழங்கப்படுகிற நிலையில் சில ஊராட்சி ஒன்றியங்கள் பெரிதாகவும் எண்ணிக்கையில் அதிகமான ஊராட்சிகளைக் கொண்டதாகவும், சில குறைந்த ஊராட்சிகளைக் கொண்டதாகவும், மற்றும் பண வசதி போன்றவற்றிலும் வேறு வேறு மாதிரியான நிலைமையிலிருக்கும்போது பரிசு வழங்கும் போது இவற்றையெல்லாம் கணக்கிலெடுத்துக் கொண்டு செயல்படுத்தப் படுமா ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** ஒவ்வொரு துறைக்கும் எவ்வளவு மதிப்பெண்கள் என்று வரையறுக்கப்பட்டிருக்கின்றன.

வேளாண்மை 25 ; கால்நடை மற்றும் மீன்வளம் 10 ; சிறு பாசனம் 5 ; கல்வி 5 ; சமூகக் கல்வி 10 ; மகளிர் மற்றும் குழந்தைகள் திட்டம் 10 ; கூட்டுறவு 5 ; கிராமத் தொழில் 5 ; கிராம வேலைத் திட்டம் 15 ; மற்றவை 10—ஆக மொத்தம் 100.

இந்த மார்க்குகள் விகிதாசாரப்படி ஊராட்சி ஒன்றியங்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன.

## *Subsidy for electricity charges to Panchayats*

*183 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether the Government have examined the proposals to offer subsidy to the Panchayat Unions in the State for their power consumption; and

(b) if so, the details thereof ?





**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** (அ) ஊராட்சிகள் தாம் பயன்படுத்தும் மின்சாரத்திற்கான கட்டணங்களுக்காகும் தொகையைச் செலுத்தும் பொருட்டு, அவற்றுக்கு மின்சாரக் கட்டணங்களில் 75 சதவிகிதத்தை உதவித் தொகையாகக் கொடுக்குமாறு தமிழ்நாடு ஊராட்சிகள் சங்கம் அரசைக் கேட்டுள்ளது.

(இ) அரசு, இவ் வேண்டுகோளைப் பரிசீலித்த பின்னர் அதனை ஏற்க இயலாதென்று தமிழ்நாடு ஊராட்சிகள் சங்கத்திற்குத் தெரிவித்துள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் அனுமதியோடு கேள்வி நேரத்தை சிறிது நீட்டித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-30)

**திரு. என். டென்னிஸ் :** பொருளாதார நிலையில் பின்னணியில் இருக்கும் ஊராட்சிகளுக்கு இதில் பங்கு கிடைக்குமாதலால் இந்த உதவித் தொகை அளிப்பதில் இருந்து ஊராட்சிகளில் தெரு விளக்குகளை விஸ்தரிக்க அது உதவியாக இருக்குமல்லவா ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** இப்போதே பல சலுகைகள் வழங்கப்பட்டு வருகின்றன. ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. சிறப்பாக ஒன்றியங்களில் பெரும்பாலும் எரிகிற, எரியாதவற்றிற்கும் கூட கணக்கெடுக்கப்பட்டு இன்றையதினம் ஆங்காங்கு ஒன்றியங்களிலிருந்து மீட்டர்கள் பொருத்தலாமா என்ற யோசனை அரசின் பரிசீலனையில் இருக்கிறது. அப்படிப் பொருத்திவிட்டால் இது மிகவும் குறையும் என்று கருதப்படுகிறது.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** கழிந்த மாதம் கன்னியாகுமரி மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் சில பஞ்சாயத்துக்களில் . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது பொதுவான கேள்வி. எனவே குறிப்பிட்ட இடத்தைப் பற்றிக் கேட்டால் அமைச்சர் அவர்களிடம் விடையிருக்காது.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** பொதுவாகக் கேட்கிறேன். கழிந்த மாதம் ஏதாவது மாவட்ட வளர்ச்சி மன்றங்களிலிருந்து மின்சார சார்ஜஸ் செலுத்த வசதி இல்லாத பஞ்சாயத்துக்களுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட வேண்டுமென்று அரசுக்கு ஏதாவது விண்ணப்பங்கள் வந்துள்ளனவா ? அப்படி வந்திருந்தால் அதன்மீது அரசு ஏதாவது நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளதா ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** தகவல் தற்போது இல்லை. தனிக் கேள்வி போட்டால் விடை அளிக்கப்படும்.

சித்தர்காடு ஊராட்சியில் திருமண மண்டபம்

* 184 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் ஊராட்சி ஒன்றியம் சித்தர்காட்டிலுள்ள (பஞ்சாயத்து) அறிஞர் அண்ணா திருமண மண்டபம் கட்டுவதற்கான வேலை எப்போது துவங்கப்பட்டது?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** 24—9—1970-ல் துவங்கப்பட்டு, 4—8—1973-ல் முடிக்கப்பட்டது.

*Share capital of members in Land Development Banks.*

* 185 Q.—THIRU A. PARANDHAMAN: Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(a) whether there is any proposal under the consideration of the Government to charge the procedure of collecting share capital from the loanees in the Primary Land Development Banks in Tamil Nadu; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** (அ) ஆம்.

(இ) இந்தக் குறிப்பு அரசின் பரிசீலனையில் இருக்கிறது.?

திரு. ஆ. பரந்தாமன்: தமிழ் நாட்டில் இப்படிப்பட்ட தொடக்க நிலவள வங்கிகள் தொடங்கும்போது விவசாயிகளுக்குக் கடன் கொடுக்கிற நேரத்தில் அவர்களிடமிருந்து 5 சதவிகிதம்தான் பங்குத் தொகை வசூலித்தோம். ஆனால் இன்று அதை 10 சதவிகிதமாக மாற்றியிருக்கிறார்கள். எனவே அந்தச் சங்கடத்தைப் போக்க மீண்டும் 5 சதவிகிதமாக மாற்றி யமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** அதுதான் அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்று விடை அளித்திருக்கிறேன்.

பல்லடம் வட்டத்தில் கிணறுகள் வெட்ட கடன்கள்

* 186 வினா—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

பல்லடம் வட்டத்தில் புதிய கிணறுகள் வெட்ட நிலவள வங்கிகள் பணம் கொடுக்க மறுப்பதற்கான காரணங்கள் யாவை?





**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** பல்லடம் வட்டத்தில் புதிய கிணறுகள் தோண்டுவதற்கு போதிய நிலநீர் இல்லை யென்று நிலநீர் இயக்குநர் தற்சமயம் கருதுகிறார். இருப்பினும், மேற்கொண்டு நிலநீர் அளவை நிர்ணயிக்க விரிவாகப் பரிசீலனை நடத்த முயற்சிகள் நடக்கின்றன. அதுவரை மேற்படி வட்டத்தில் புதிய கிணறுகள் தோண்ட நிலவள வங்கிகளிலிருந்து கடன் கொடுக்க இயலாத நிலை இருந்து வருகிறது.

திரு. சு. துரைசாமி: பல்லடம் வட்டத்தில் பொங்கலூர், சுல்தான்பேட்டை ஒன்றியப் பகுதிகளில் பரம்பிக்குளம்-ஆளியாறு திட்ட வாய்க்கால்கள் இருக்கின்றன. நொய்யல் ஆற்றின் இடையில் பல்வேறு அணைகள் இருப்பதால் ஆங்காங்கு புதுக் கிணறுகள் வெட்டினால் தண்ணீர் வருவதற்கு வாய்ப்பிருக்கிறது. ஆகவே அரசாங்கம் அதைக் கணக்கிலெடுத்து பல்லடம் வட்டத்தில் புதுக் கிணறுகள் வெட்ட விவசாயிகளை ஊக்கப்படுத்த கடன் கொடுக்க முன் வருமா?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** இப்போது 50 கிணறுகள் புதிதாக வெட்ட ஒரு திட்டத்தை அனுமதித்திருக்கிறது. அஃதன்றி பழைய கிணறுகள் 22-க்கான ஆராய்ச்சி நடந்து கொண்டிருக்கிறது. கோவை மாவட்டத்தைப் பொறுத்த வரையில், தமிழ் நாட்டிலுள்ள மொத்த மோட்டார் களில் 18 சதவிகிதம் மோட்டார் அங்கு ஓடுகிற காரணத்தால் தண்ணீர் முன் இருந்ததைவிட இப்போது 45 அடி கீழே இறங்கிக் கொண்டு வருகிறது. ஆகவே அதுபற்றிய ஏற்பாடுகள் நடந்துகொண்டிருக்கின்றன. புதிதாக நண்பர் அவர்கள் சொல்கிறபடி அந்தத் திட்டம் வந்தால், அதுபற்றியும் பரிசீலிக்கப்படும்.

*Lift Irrigation Societies.*

* 187 Q.—THIRU A. PARANDHAMAN: Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(a) the number of "Small Farmers' Lift Irrigation Societies" functioning in Tamil Nadu as on this date; and

(b) the total amount of loan advanced so far?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** (அ) தமிழ்நாட்டில் 30—6—1973 முடிய, 2094 சிறு விவசாயிகள் இறைவைப் பாசனச் சங்கங்கள் இயங்கி வருகின்றன.

(இ) அவைகளுக்கு 30—6—1973 முடிய, நிலவள வங்கிகள் மூலமாக வழங்கப்பட்ட கடன் தொகை ரூ. 53,23,672.

[1973 நவம்பர் 19

## நீர்ப்பாசன கூட்டுறவுக் கழகங்கள்

* 183 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உணவு-கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இதுவரையில் தமிழ்நாடு அரசு துவங்கியுள்ள நீர்ப்பாசனக் கூட்டுறவுக் கழகங்களின் எண்ணிக்கை என்ன ?

(இ) இவற்றால் பயன்படும் நிலக்கிழார்கள் எத்தனை பேர் ?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** (அ) 30—6—1973 முடிய தமிழ்நாட்டில் துவக்கப்பட்டுள்ள நீர்ப்பாசனக் கூட்டுறவுக் கழகங்களின் எண்ணிக்கை 2,289 ஆகும்.

(இ) இவற்றால் பயன்பெறும் விவசாயிகளின் எண்ணிக்கை 42,887.

**திரு. சோ. அழகர்சாமி :** இப்படிப்பட்ட நீர் ஏற்றப் பாசனச் சங்கங்கள் மாவட்டவாரியாக எவ்வளவு தொடங்கப்பட்டிருக்கின்றன என்று அறிவிக்க முடியுமா ?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** அந்த விவரங்களுக்குத் தனிக் கேள்வி போடவும்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** அமைச்சர் அவர்கள் 187-வது வினாவிற்கு பதில் அளிக்கும்போது லிப்ட் இரிகேஷன் சொசைட்டீஸ் எண்ணம் இரண்டாயிரத்து சொச்சம் என்று கூறினார்கள். இந்த லிப்ட் இரிகேஷன் சொசைட்டிகளால் பயனடைகிற நிலப்பரப்பு எவ்வளவு என்று கூற முடியுமா ?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** நிலப் பரப்பளவு கிட்டத்தட்ட 94,074 ஏக்கர் இப்போது பயன்பெறப்படுகிறது.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** I am raising a point of order. இந்தக் மூலக் கேள்வியே 'the number of Co-operative Irrigation Societies started so far in Tamil Nadu' என்பதாகும். அதிலிருந்து எழக்கூடியதுதான் மாவட்டவாரியாக எவ்வளவு என்பது. ஒன்று அவர்கள் அந்த அறிக்கையை இங்கு சமர்ப்பித்திருக்க வேண்டும். அதற்காகத் தனி நோட்டீஸ் கொடுக்க வேண்டுமென்று சொன்னால் என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. கேள்வி ஒவ்வொரு மாவட்டத்திற்கும் எவ்வளவு இருக்கின்றன என்ற விஷயத்தைத் தெரிந்து கொள்வதற்காகத்தான் மாநிலம் பூராவும் என்று கேட்கப்பட்டிருக்கிறது. அதுபற்றிய விவர அறிக்கையைக் கொடுத்திருக்க வேண்டும். தனி நோட்டீஸ் வேண்டுமென்றால்



1973 நவம்பர் 19]

இதற்கு எவ்வளவு நாட்களாகும் என்று புரியவில்லை. ஆகவே அதற்குப் பதில் சொல்ல ஏற்பாடு செய்யவேண்டும். அல்லது இம்மாதிரி மூலக் கேள்விகளில் இருந்து எழக்கூடிய உப கேள்விகளுக்குப் பதில் கொடுப்பதற்கு வற்புறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** தமிழ்நாட்டில் எவ்வளவு என்றுதான் கேள்வி கேட்கப்பட்டிருக்கிறது. அதற்கான பதிலைச் சொல்லியிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தமிழ்நாட்டில் எத்தனை சிறு விவசாயிகள் இறைவைப் பாசனச் சங்கங்கள் இயங்கி வருகின்றன என்றிருக்கிறதே தவிர மாவட்ட வாரியாக என்று போடவில்லை. கேள்வியில் அப்படி இல்லை. மாவட்ட வாரியாக என்று இல்லை.

**திரு. எம். சுரேந்திரன் :** தமிழ்நாட்டில் என்றால் மாவட்ட வாரியாக விவரங்கள் கொடுக்கப்பட வேண்டும்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** ஒரு குறிப்பிட்ட மாவட்டத்தைப் பற்றிக் கேட்டால் அதைப் புரிந்துகொள்ள முடியும். ஆனால் தமிழ்நாட்டில் என்று கேட்கும்போது இந்த விவரங்கள் அவர்களிடம் இருக்கும். ஒன்று உப கேள்விகள் கேட்காமலே இருக்கலாம். அல்லது அப்படி உப கேள்வி கேட்கும் போது நேரமாகிற தென்றால் விவர அறிக்கை கொடுக்கப்படும் என்று சொல்லலாம் அல்லது விவர அறிக்கையையே கொடுத்திருக்கலாம். தமிழ்நாடு என்று வரும்போது முழு விவரங்களையும் அந்த அதிகாரிகள் கண்டிப்பாகக் கொடுத்திருக்க வேண்டும். ஒன்று அமைச்சர் அவர்கள் தயார் பண்ணாமல் வந்திருக்க வேண்டும். எனவே உப கேள்விகளுக்காக கண்டிப்பாக அதிகாரிகள் விவரங்களைக் கொடுக்கவேண்டும் என்றாவது தாங்கள் டைரக்ட் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** தனிக் கேள்வி போடலாம் என்று சொல்லியிருக்கிறேன். வேண்டுமானால் தனிக் கேள்வி போட்டால் விவர அறிக்கை கொடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தமிழ்நாடு முழுவதும் என்று கேட்கும் போது மாவட்ட வாரியாக தனித்தனித் கேள்வி போடுவது என்றால் அதற்கான விவரங்களைப் பெறுவதற்கு ரொம்ப நாளாகிறது. ரொம்ப பணச் செலவாகிறது. எனவே இந்த நேரத்தில் எல்லாவற்றிற்கும் ஆன்சர் செய்வதுமாதிரி இருக்கலாமே !

### நீர்ப்பாசன கூட்டுறவுக் கழகங்கள்

*183 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உணவு-கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இதுவரையில் தமிழ்நாடு அரசு துவங்கியுள்ள நீர்ப்பாசனக் கூட்டுறவுக் கழகங்களின் எண்ணிக்கை என்ன ?

(இ) இவற்றால் பயன்படும் நிலக்கிழார்கள் எத்தனை பேர் ?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** (அ) 30—6—1973 முடிய தமிழ்நாட்டில் துவக்கப்பட்டுள்ள நீர்ப்பாசனக் கூட்டுறவுக் கழகங்களின் எண்ணிக்கை 2,289 ஆகும்.

(இ) இவற்றால் பயன்பெறும் விவசாயிகளின் எண்ணிக்கை 42,887.

**திரு. சோ. அழகர்சாமி :** இப்படிப்பட்ட நீர் ஏற்றப் பாசனச் சங்கங்கள் மாவட்டவாரியாக எவ்வளவு தொடங்கப்பட்டிருக்கின்றன என்று அறிவிக்க முடியுமா ?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** அந்த விவரங்களுக்குத் தனிக் கேள்வி போடவும்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** அமைச்சர் அவர்கள் 187-வது வினாவிற்கு பதில் அளிக்கும்போது லிப்ட் இரிகேஷன் சொசைட்டீஸ் எண்ணம் இரண்டாயிரத்து சொச்சம் என்று கூறினார்கள். இந்த லிப்ட் இரிகேஷன் சொசைட்டிகளால் பயனடைகிற நிலப்பரப்பு எவ்வளவு என்று கூற முடியுமா ?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** நிலப் பரப்பளவு கிட்டத்தட்ட 94,074 ஏக்கர் இப்போது பயன்பெறப்படுகிறது.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** I am raising a point of order. இந்தக் மூலக் கேள்வியே 'the number of Co-operative Irrigation Societies started so far in Tamil Nadu' என்பதாகும். அதிலிருந்து எழக்கூடியதுதான் மாவட்டவாரியாக எவ்வளவு என்பது. ஒன்று அவர்கள் அந்த அறிக்கையை இங்கு சமர்ப்பித்திருக்க வேண்டும். அதற்காகத் தனி நோட்டீஸ் கொடுக்க வேண்டுமென்று சொன்னால் என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. கேள்வி, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் எவ்வளவு இருக்கின்றன என்ற விஷயத்தைத் தெரிந்து கொள்வதற்காகத்தான் மாநிலம் பூராவும் என்று கேட்கப்பட்டிருக்கிறது. அதுபற்றிய விவர அறிக்கையைக் கொடுத்திருக்க வேண்டும். தனி நோட்டீஸ் வேண்டுமென்றால் இதற்கு எவ்வளவு நாட்களாகும் என்று புரியவில்லை. ஆகவே அதற்குப் பதில் சொல்ல ஏற்பாடு செய்யவேண்டும். அல்லது இம்மாதிரி மூலக் கேள்விகளில் இருந்து எழக்கூடிய உப கேள்விகளுக்குப் பதில் கொடுப்பதற்கு வற்புறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** தமிழ்நாட்டில் எவ்வளவு என்றுதான் கேள்வி கேட்கப்பட்டிருக்கிறது. அதற்கான பதிலைச் சொல்லியிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தமிழ்நாட்டில் எத்தனை சிறு விவசாயிகள் இறைவைப் பாசனச் சங்கங்கள் இயங்கி வருகின்றன என்றிருக்கிறதே தவிர மாவட்ட வாரியாக என்று போடவில்லை. கேள்வியில் அப்படி இல்லை. மாவட்ட வாரியாக என்று இல்லை.

**திரு. எம். சுரேந்திரன் :** தமிழ்நாட்டில் என்றால் மாவட்ட வாரியாக விவரங்கள் கொடுக்கப்பட வேண்டும்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** ஒரு குறிப்பிட்ட மாவட்டத்தைப் பற்றிக் கேட்டால் அதைப் புரிந்துகொள்ள முடியும். ஆனால் தமிழ்நாட்டில் என்று கேட்கும்போது இந்த விவரங்கள் அவர்களிடம் இருக்கும். ஒன்று உப கேள்விகள் கேட்காமலே இருக்கலாம். அல்லது அப்படி உப கேள்வி கேட்கும் போது நேரமாகிற தென்றால் விவர அறிக்கை கொடுக்கப்படும் என்று சொல்லலாம் அல்லது விவர அறிக்கையையே கொடுத்திருக்கலாம். தமிழ்நாடு என்று வரும்போது முழு விவரங்களையும் அந்த அதிகாரிகள் கண்டிப்பாகக் கொடுத்திருக்க வேண்டும். ஒன்று அமைச்சர் அவர்கள் தயார் பண்ணாமல் வந்திருக்க வேண்டும். எனவே உப கேள்விகளுக்காக கண்டிப்பாக அதிகாரிகள் விவரங்களைக் கொடுக்கவேண்டும் என்றுவது தாங்கள் டைரக்ட் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** தனிக் கேள்வி போடலாம் என்று சொல்லியிருக்கிறேன். வேண்டுமானால் தனிக் கேள்வி போட்டால் விவர அறிக்கை கொடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தமிழ்நாடு முழுவதும் என்று கேட்கும் போது மாவட்ட வாரியாக தனித்தனிக் கேள்வி போடுவது என்றால் அதற்கான விவரங்களைப் பெறுவதற்கு ரொம்ப நாளாகிறது. ரொம்ப பணச் செலவாகிறது. எனவே இந்த நேரத்தில் எல்லாவற்றிற்கும் ஆன்சர் செய்வதுமாதிரி இருக்கலாமே !

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: மாவட்டவாரியாக தகவல் வந்திருந்தால் அதை வெளியிடுவதில் என்ன கஷ்டம் ஏற்படும் என்பதை என்னைப் போன்றவர்களால் புரிந்து கொள்ளமுடியவில்லை. ஆகவே மாவட்டவாரியாக விவரங்களைத் தெரிவிப்பது பொருத்தமாக இருக்கும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தமிழ்நாட்டில் மாவட்ட வாரியாக எவ்வளவு சங்கங்கள் என்று கேட்கப்பட்டிருந்தால் அதற்கான குறிப்புகளை அதிகாரிகள் எடுத்து வைத்திருக்க முடியும். சில நேரங்களில் அமைச்சர்கள் இப்படிப் பொதுவாகக் கேள்வி வருகிற நேரத்தில் மாவட்ட வாரியாகக் குறிப்புகள் வேண்டும் என்று கேட்டுப் பெறுவதும் உண்டு. நேரமில்லாத காரணத்தால் அதைப் பெற்றிருக்காமல் இருக்கக்கூடும். ஆகவே தனிக்கேள்வி போட்டால் விவரங்கள் சேகரிக்க முடியும் என்று சொல்லியிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்த விவரம் இல்லை என்று சொன்னார். இருந்தும் கொடுக்கவில்லை என்று சொல்லவில்லை.

### *Huts in Island Ground area.*

*189 Q.—Thiru N. DENNIS: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether a large number of huts have been removed from the Island grounds around March 1973 by the Slum Clearance Board; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) ஆம்.

(இ) 1973 மார்ச் மாதத்தில் தீவுத் திடலின் அருகாமையிலுள்ள கூவம் நதிக் கரையோரத்தில், புதிதாகப் பலர் குடிசைகளை அமைக்கத் தொடங்கினர். குடிசை மாற்று வாரியத்தின் மூலம் அருகாமையில் கட்டப்படும் புதிய கட்டிடங்களில் குடியிருப்புகளைப் பெறுவதே அவர்களது நோக்கமாக இருந்தது. ஆகவே அவர்களை குடிசை மாற்று வாரியம் 24—3—1973 அன்று மேற்படி இடத்திலிருந்து வெளியேற்றியது. அப்படி வெளியேற்றப்பட்ட சுமார் 55 குடும்பங்களுக்கு கோட்டூர்புறத்தில் தீப்பிடிக்காத வீடுகளில் இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

Thiru N. DENNIS: Sir, may I know whether steps of this kind would be taken in other similar places ?



மாண்புமிகு திரு. க. இராசாராம்: ஏற்கனவே குறிப்பிட்டதுபோல் 55 குடும்பங்களுக்கு கோட்டூர்புரத்தில் தீ பிடிக்காத வீடுகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

### *Visit of World Bank Officials.*

*190 Q.—Thiru R. R. MUNUSWAMY: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether the officials of the World Bank visited the Projects of Slum Clearance Board in December 1972; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) & (இ) 1972-ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம் எட்டாம் தேதியன்று உலக வங்கியைச் சேர்ந்த திரு. ஜோஷென்கிராஸ்கே அவர்களும், திரு. பில்செல் எச். அலிஸ்பா அவர்களும் தங்களுடைய சென்னை சுற்றுப் பயணத்தின்பொழுது குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் திட்டப் பகுதிகளைப் பார்வையிட்டார்கள். வாரியத்தின் பணியை மிகவும் பாராட்டியுள்ளார்கள். அதற்குரிய சான்றுகளும் அளித்திருக்கிறார்கள்.

திரு. ரா. ரா. முனுசாமி: தலைவரவர்களே, சிட்டி பகுதிகளைப் பார்வையிட்டு, சான்றுகள் வழங்கியிருப்பதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். சிட்டியில் கட்டப்பட்டிருக்கும் வீடுகளைப் பார்வையிட்டுத்தான் அவர்கள் பாராட்டியிருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் அவர்களோடு பேச்சுவார்த்தை நடத்தி மாவட்ட வாரியாக அந்தத் திட்டத்தை விரிவுபடுத்த ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, குடிசை மாற்று வாரியம் சென்னையில் தான் பணியாற்றுகிறது. வீட்டு வசதி வாரியம் மாவட்ட அளவில் முடிந்த அளவுக்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகையின் மூலம் குடிசைப் பகுதிகளை மாற்றி வீடுகளைக் கட்டிக் கொடுத்துக் கொண்டிருக்கிறது.

### *Lands for Slum Clearance schemes.*

*191 Q.—Thiru S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) the details of lands given free to the Slum Clearance Board ;

(b) the extent of land given ; and

(c) their value ?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) இல்லே.

(இ) & (உ) கேள்விகளுக்கு இடமில்லே.

*Posts of Statistical Inspectors.*

* 192 *Q.*—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) the total number of post-graduates at present working as Assistant Statistical Investigators in the department of Statistics ;

(*b*) whether they are considered for promotion to higher posts, whenever vacancy arises;

(*c*) if so, the details thereof ; and

(*d*) if not, the reasons therefor ?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) 23.

(இ) ஆம்.

(உ) புள்ளி விவர ஆய்வாளர் பதவித் தரத்தில் காலியிடம் எழுகின்ற போது, அப் பதவிக்குப் பதவி உயர்வு செய்யப்படுவதற்கு, செயலில் உள்ள விதிகளின் படி, மற்ற உதவிப் புள்ளி விவர ஆய்வாளர்களுடன் சேர்ந்து பட்ட மேற்படிப்புப் பட்டதாரிகளும் கருதிப் பார்க்கப்படுகின்றனர்.

(எ) இவ்வினு எழவில்லே.

Dr. H. V. HANDE : May I know, Sir, whether the Government is aware of the fact that there is a large-scale discontentment among the Statistical Inspectors because they do not have adequate promotional opportunities in that department in spite of the fact that they have been serving for quite some time?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, அங்கேயுள்ள புள்ளி விவர ஆய்வாளர்கள் சில கோரிக்கைகளைக் கொடுத்திருக்கிறார்கள். அதன்படி செய்யப்படுகிற காரியங்கள் ஒரு வரையறைக்குட்பட்டு செய்யப்படுகிறது என்று நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைபட்டிருக்கிறேன். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் எம். ஏ. போன்ற பட்டதாரிகளைப் பற்றிக் கேட்டிருக்கிறார்கள். அவர்களைப் பொறுத்த வரையில் இந்தப் பதவிக்கு 40 சதவீதம் நேரடித் தேர்வின் மூலமும். 60 சதவீதம் பதவி உயர்வு மூலமும் தரப்படுகிறது. பட்ட மேற்படிப்பு படித்திருக்கிறார்கள் என்பதற்காகத் தனிச் சலுகை கிடையாது. பட்டதாரியோடு சேர்ந்து தான் அவர்களுக்கும் பதவி உயர்வு தரப்படுகிறது என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.



*Financial assistance from Rural Electrification Corporation.*

* 193 *Q.*—Thiru N. DENNIS : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether the Rural Electrification Corporation has financed the State Electricity Board; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவரவர்களே, (அ) ஆம்.

(இ) 1970-71-ல் வழங்கிய கடன் தொகை ரூ. 211.940 லட்சம். 1971-72-ல் வழங்கிய கடன் தொகை ரூ. 184.538 லட்சம். 1972-73-ல் வழங்கிய கடன் தொகை ரூ. 136.566 லட்சம். ஆக மொத்தம் ரூ. 533.044 லட்சம்.

Thiru N. DENNIS : May I know, Sir, whether that amount is used for agricultural production or for lighting ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவரவர்களே, ஒவ்வொரு திட்டத்திற்கும் ரூரல் எலக்டிரிசிடி கார்ப்பரேஷனிடமிருந்து கடன் பெறுகிறபோது, அவர்கள் இந்தக் கடன் வேளாண்மைக்கு, இந்தக் கடன் தெருவிளக்குகள் போடுவதற்கு என்று குறிப்பிட்டு அறுதியிட்டுக் கொடுக்கிறார்கள். அப்படி வாங்கப்படுகிற தொகை அந்தந்தக் காரியங்களுக்குப் பயன்படுத்தப்படுகின்றது.

*Thermal Power Stations.*

* 194 *Q.*—Thiru N. K. PALANISWAMY : Will the Hon the Minister for Electricity be pleased to state the reasons for the delay in setting up Thermal Stations in Tuticorin and Mettur ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவரவர்களே, 400 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட தூத்துக்குடி அனல் மின்சார நிலையம் அமைக்க 12—11—1973-ம் தேதியன்று திட்டக்குழு அனுமதி வழங்கியுள்ளது. மேட்டூர் அனல் மின்சார நிலையத் திட்டம் திட்டக் குழுவின் ஆய்வில் உள்ளது.

திரு. என். கே. பழனிசாமி: தலைவரவர்களே, ஒவ்வொரு திட்டத்தையும் சர்க்கார் எடுத்துக் கொள்வதற்கு முன்பாக ஒரு 30 பர்சன்டேஜ் வேலை முடித்திருப்பார்கள். கிட்டதட்ட ஒரு அனல் மின்சார நிலையம் அமைக்க 4, 5 வருஷம் ஆகும். சர்க்கார் அதை விரைவில் முடிக்க, 'டாப் பிரையாரிடி' கொடுத்து 1 வருட காலத்தில் முடிக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, குறைந்தது 6 ஆண்டு காலம் ஆகும். 5 ஆண்டு காலத்திற்குள் முடிக்க நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவரவர்களே, தூத்துக்குடி, மேட்டூர் திட்டத்திற்குக் கிட்டத்தட்ட 70 கோடி, 65 கோடி ஒதுக்கப்பட்டது. ஆனல் சென்ற ஆண்டு 4 கோடி செலவிடப்பட்டிருக்கிறது. ஏன் ஒதுக்கிய தொகையைவிடக் குறைவாகச் செலவு செய்திருக்கிறார்கள். தூத்துக்குடி திட்டம் 78-ல் தான் முடியும் என்று சொல்கிறார்கள். அதற்கு முன்னல் முடிக்க ஏற்பாடுகள் செய்யப்படுமா? அதேமாதிரி மேட்டூர் திட்டம் 6-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் தான் வரும் என்று சொல்கிறார்கள். அதையும் 5-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் கொண்டு வருவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப் படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, தூத்துக்குடி அனல் மின்சார நிலையம் அமைக்க அனுமதி பெற்று இருக்கிறோம். ஏற்கனவே அதற்கு வேண்டிய பாயிலர்கள் வாங்க அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. பூர்வாங்க வேலைகள் சென்ற ஆண்டு முதலே நடைபெற்று வருகின்றன. மேட்டூர் மின்சார நிலையத்தைப் பொறுத்த வரையில் நிலக்கரி எடுத்து வருவதில் சிரமம் இருக்கிறது என்று திட்டக்குழுவினர் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். மேற்கு வங்காளத்திலிருந்து தூத்துக்குடிக்கு நிலக்கரி கொண்டு வருவதற்குச் சிரமம் இருக்காது என்பதால், அதற்கு உடனடியாக அனுமதி வழங்கியிருக்கிறார்கள். ஆனல் ஆந்திராவிலிருந்து போதிய அளவிற்கு நிலக்கரி கொண்டு வரமுடியுமா என்பதை பரிசீலனை செய்து கொண்டிருக்கிறார்கள். நாம் அனுமதி கொடுக்க வேண்டுமென்று தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம்.

(திரு. கே. டி. கே. தங்கமணி எழுந்தார்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதற்கு அடுத்து மின்சார வாரியத்தின் நிதி நிலை அறிக்கை வரப் போகிறது. அப்போது விரிவாகப் பேசிக் கொள்ளலாம்.

*Vigilance cell in Religious Endowments Department.*

* 195 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) whether any Vigilance Cell is functioning in the Hindu Religious and Charitable Endowments department ; and

**(b) if so, the details thereof ?**



மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

*Theft of jewels from Gunaseelam temple.*

* 196 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) whether it is a fact that jewels belonging to the Gunaseelam temple in Tiruchirappalli district were stolen about the 7th April 1973 ; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, (அ) ஆம், 2—4—1973-அன்று நகைகள் களவாடப்பட்டன.

(இ) 1960-ம் ஆண்டு மதிப்பீட்டின்படி ரூ. 4,393-80 மதிப்புக் கொண்ட 15 நகைகள் களவாடப்பட்டன. கல் இழைத்த திருமண் மதிப்பு ரூ. 200, மூலவர் கண்மலர் ஜோடி ரூ. 147, இப்படி கிட்டத்தட்ட 15 நகைகள் ஒட்டு மொத்தமாக ரூ. 4,393-80க்குக் களவாடப்பட்டுள்ளன.

THIRU N. DENNIS : May I know, Sir, whether any step has been taken against the servants of the temple who failed in their duties to safeguard the jewels ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, அங்கேயுள்ள கோவில் ஊழியர்கள் பகல் 12 மணி வரை அன்று கோவில் காரியங்களை யெல்லாம் செய்து இருக்கிறார்கள். பிற்பகலில் கோவிலுக்குள் ஒரு பகுதியில் ஓய்வு எடுத்துக் கொண்டிருந்த நேரத்தில் உள்ளே நுழைந்து களவாடிச் சென்றிருக்கிறார்கள். போலீசார் புலன் விசாரணை மேற்கொண்டு, வழக்குப் பதிவு செய்து இருக்கிறார்கள்.

*Idols unearthed in Guddur.*

* 197 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) whether it is a fact that a number of idols were traced in the fields in Guddur in Dharmapuri district about 25th April 1973 ; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) & (இ) தர்மபுரி மாவட்டத்தில் குட்டூர் கிராமத்தில் சர்வே எண் 70/1-ல் ஒரு வருடத்திற்கு முன்னால் நிலச் சொந்தக்காரர் நிலத்தைச் சீர்படுத்தும்பொழுது கண்டெடுக்கப்பெற்ற வெண்கலத்தினாலான பெருமாள் சிலை ஒன்றும், அம்மன் சிலைகள் இரண்டும் புதையல் சட்ட விசாரணை முடியும் வரை தர்மபுரி மாவட்டக் கருவூலத்தில் தக்க பாதுகாப்புடன் வைக்கப்பட்டுள்ளது.

THIRU N. DENNIS: May I know, Sir, whether any survey will be conducted in the State to explore the areas where such idols are discovered?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, அது பற்றிய விவரம் தற்போது என்னிடத்தில் இல்லை.

*Chairman of Khadi and Village Industries Board.*

* 198. *Q.*—THIRUMATHI T. N. ANANDANAYAKI: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state whether there is any proposal to amend the Tamil Nadu Khadi and Village Industries Board Act, 1959 with a view to appoint a non-official as Chairman for the Board?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: இல்லை.

DR. H. V. HANDE: Since the Question Hour is over, I want to raise a Point of Order.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் இன்னும் சொல்லவில்லையே. . . .

வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(3) நடைமுறைக் கேள்விகள்.

(ஆ) நடைமுறைக் கேள்விகள் அல்லாதவற்றை நடைமுறைக் கேள்விகளாக எழுப்பினால் அவற்றை நீக்கிவிடுவது குறித்து.

DR. H. V. HANDE: Sir, on a point of order. * * * நான்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். ஒரு உறுப்பினர் பாயிண்டு ஆப் ஆர்டர் எழுப்பி, அது பாயிண்டு ஆப் ஆர்டர் இல்லை என்று ரூலிங் கொடுத்து

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



விட்டால் அது நிகழ்ச்சிக் குறிப்பில் ஏறாது, பத்திரிகையிலும் வெளியிடக் கூடாது என்று சொல்லியிருக்கிறேன். இதிலே எந்தவிதமான பாயிண்டு ஆப் ஆர்டரும் இல்லை. ஆகவே, இது அவையின் நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கப்படும் என ஆணையிடுகிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: செகண்டு பாயின்ட் ஆப் ஆர்டர். நீங்கள் இப்பொழுது ஒரு தீர்ப்புக் கொடுத்திருக்கிறீர்கள். அதைப்பற்றி நான் சொல்லவில்லை. இனிமேல் தொடர்ந்து பாயிண்டு ஆப் ஆர்டர் இல்லை என்றால் சபை நடவடிக்கையிலிருந்து அது நீக்கப்பட்டுவிடும், பத்திரிகையிலும் வராது என்று தீர்ப்புக் கொடுத்திருக்கிறீர்கள். ஆகவே பாயின்ட் ஆப் ஆர்டர் நாங்கள் எழுப்பி, அது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை என்று தாங்கள் சொல்லி விட்டால், அதைச் சபை நடவடிக்கையில் போட முடியாது என்ற நிலைமை ஏற்பட்டுவிடுகிறது.

The rights of the entire House are completely taken away by the Hon. Speaker. Once it is declared that it is not a point of order—

அது ஒழுங்குப் பிரச்சினை இல்லை என்று சொல்லிவிட்டால், அப்படிப்பட்ட நிலைமை வரும்பொழுதெல்லாம் அதைச் சபை நடவடிக்கையிலிருந்து எடுத்து விட வேண்டும் என்று ஏற்படுகிறது. எதற்காக அதை எடுக்கவேண்டும்? நான் ஏதாவது தவறான வார்த்தைகளை உபயோகப்படுத்தினேனா? விளக்கம் தானே கேட்டேன்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தவறான வார்த்தைகள் என்பது இல்லை. பாயின்ட் ஆப் ஆர்டர் என்று சொல்லிவிட்டு எழுந்து, பாயின்ட் ஆப் ஆர்டரில் இல்லாத கருத்துக்களைச் சொன்னால்தான் அந்த நிலைமை ஏற்படும்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: இந்தச் சபையில் எதிர்க் கட்சி நண்பர்கள் பலவிதமான நிலைமைகளை எடுத்துச் சொல்லி பாயின்ட் ஆப் ஆர்டர் கிளப்புவார்கள். அப்பொழுது நீங்கள் அது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை என்று தீர்ப்புக் கொடுத்துவிட்டால், உடனே சபை நடவடிக்கையிலிருந்து அது நீக்கப் பட்டுவிடும். இந்த மாதிரி விதி லோக் சபாவிலும் கிடையாது. எந்த ரூலிலும் கிடையாது. தயவு செய்து தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். இந்த மாதிரி ஒரு தீர்ப்பு கொடுத்தால்

It will be a bad precedent and it will have far-reaching consequences. ஆகவே, இந்தத் தீர்ப்பை தாங்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை என்று

சொன்னால் பரவாயில்லை. தவறான வார்த்தைகளைப் பயன்படுத்தினால் எக்ஸ்பஞ்ச் பண்ணலாம்.

But you are expunging the entire proceedings.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* Rule 83 (8) says—

'The Speaker may order the expunction of any portion of proceedings of the House relating to any point of order by the members, when in his opinion it is an abuse of the right of raising a point of order'. இது விதி.

*டாக்டர் எச். வி. ஹாண்டே :* இனிமேல் தாங்கள் பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை என்று தீர்ப்புச் சொல்லிவிட்டால், அது நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டுவிடும். அது பயங்கரமான உத்தரவாக அமைகிறது. லோக் சபாவில் இது போன்று ஒரு பிரஸீடெண்டும் கிடையாது.

There is not a single precedent either in the May's Parliamentary Practice or in the House of Commons.
எந்த இடத்திலும் கிடையாது.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* நான் சொன்ன தீர்ப்பு பேரவைத் தலைவர் தானாகச் சொல்லவில்லை. விதிமுறையில் அவ்வாறு இருக்கிறது. விதி முறையைத்தான் எடுத்துச் சொன்னேன். இந்த முறையானது, உரிமையை பறிக்கக்கூடியது என்றெல்லாம் நீங்கள் சொல்கிறீர்கள். விதிமுறைக்குத் திருத்தம் கொண்டுவர வேண்டும் என்று ஒரு தீர்மானம் கொடுங்கள். இப்பொழுது விதியில் தெளிவாக இருக்கிறது.

"The Speaker may order the expunction of any portion of proceedings of the House relating to any point of order by the members, when, in his opinion, it is an abuse of the right of raising a point of order". என்று தெளிவாக இருக்கிறது. இந்த விதி முறையை மாற்றுங்கள்.

There is no point of order.

### (இ) திரு. கே. ஏ. மதியழகனுக்கு முன்வரிசையில் இடம் ஒதுக்காதது குறித்து

*திரு. ஜே. ஜேம்ஸ் :* தலைவர் அவர்களே, இன்னொரு பாயிண்டு ஆப் ஆர்டர். இந்த அவையிலே இருப்பவர்களுக்கு இருக்கைகளை தாங்கள் ஒதுக்குகிறீர்கள். சாதாரணமாக இங்கு ஒரு மரபு இருக்கிறது. முன்னாள் ஸ்பீக்கர்கள், முன்னாள் அமைச்சர்கள் எதிர்க் கட்சி முன்வரிசையில் அமர்த்தப்படுவார்கள். ஆனால்



திரு. மதியழகன் அவர்கள் அப்படி முன்வரிசையில் இடம் கொடுக்கப்படாமல் பின்னால் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு முன்னால் இடம் ஒதுக்கப் படுமா, அல்லது அவர்கள் பின்னால்தான் இருக்கவேண்டுமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* இதிலே பாயின்ட் ஆப் ஆர்டர் ஒன்று மில்லை. அவர்கள் முதல் இடத்தில்தான் உட்கார்ந்திருக்கிறார்கள். 'ஸீட் நெம்பர் ஒன்'.

### (3-ஆ) நடைமுறைக் கேள்விகள் அல்லாதவற்றை நடைமுறைக் கேள்விகளாக எழுப்பினால் அவற்றை நீக்கிவிடுவது குறித்து—தொடர்ச்சி.

*திரு. கே. எம். சுப்பிரமணியம் :*
You have read the rule. It relates to your discretionary power.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* டிஸ்கிரஷனரி பவர் இல்லை.

*திரு. கே. எம். சுப்பிரமணியம் :*

"The Speaker may order the expunction of any portion of proceedings of the House.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* ஸ்பீக்கருக்கு இருக்கிற தனிப்பட்ட அதிகாரம் இல்லை. விதிமுறையில் அப்படித் தான் இருக்கிறது.

*திரு. கே. எம். சுப்பிரமணியம் :* நாம் போட்டிருக்கிற வார்த்தைகளைக் கேளுங்கள்.

"The Speaker may expunge a portion", and not the entire speech. It does not say— பாயின்டு ஆப் ஆர்டர் இல்லை என்று சொன்னால் அப்படியே ரிமூவ் செய்ய வேண்டும் என்று இல்லை, எக்ஸ்பஞ்ச் பண்ணவேண்டுமென்றும் இல்லை. அப்படியிருந்தால் நாம் ஜனநாயக முறையில் டெமாக்ரடிக்காக நடத்த முடியாது. அது சொல்வதெல்லாம் 'டிஸ்கிரஷனரி பவர் டு தி ஸ்பீக்கர்'. ஏதாவது தவறாக உபயோகப்படுத்தியிருந்தால், அந்தப் பவரை யூஸ் பண்ணலாம். பாயின்டு ஆப் ஆர்டர் இல்லை என்று தாங்கள் சொல்லி, விட்டால் அதற்கு மேலே பப்ளிஸிடி கூடாது, எக்ஸ்பஞ்ச் செய்யப்பட வேண்டும் என்று சொல்லப்படவில்லை.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை என்று தீர்ப்பு வழங்கப்பட்டு விட்டால் மட்டும் அம்மாதிரி நிலை இல்லை . . .

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** ஒழுங்குப் பிரச்சினை எழுப்புகின்ற நேரத்தில் ஒழுங்குப் பிரச்சினை இல்லை என்று சொல்லிவிட்டால், அவையெல்லாம் நடவடிக்கைக் குறிப்பிலிருந்து எடுக்கப்பட்டுவிடும் என்று ஆகாது. அதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அப்படி ஒழுங்குப் பிரச்சினை எழுப்பப்படும்பொழுது

"When in his opinion it is an abuse of the right of raising a point of order."

என்று தலைவருக்குப் பட்டால், அந்தப் பகுதியை மட்டும் நீக்கலாம் என்றுதான் இருக்கிறது. ஒழுங்குப் பிரச்சினை இல்லை என்று தீர்ப்புக் கொடுத்துவிட்டால், அப்படிப்பட்ட ஒழுங்குப் பிரச்சினைகளெல்லாம் நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டுவிடும் என்று பொருள் படாது.

**திரு. கே. எம். சுப்பிரமணியம் :** அவை முன்னவரின் விளக்கத்திற்கு நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விதிமுறைகளில் என்ன இருக்கிறது என்பதைச் சொன்னேன். பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்று சொல்லி, சிலபேர் அதற்குச் சம்பந்தப்படாத வேறுசில விளக்கங்களைச் சொல்கிறார்கள். அப்படி இருக்கும்போது அவர்கள் எழுப்பியது பாயின்ட் ஆஃப் ஆர்டர் இல்லை என்றால், அது அவை நடவடிக்கைக் குறிப்பில் ஏறாது. அதைத்தான் நான் சொன்னேன்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) :** சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர். உறுப்பினர்கள் தங்களுடைய உரிமையை துஷ்பிரயோகம் செய்து, பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்ற முறையில் சில கருத்துக்களைச் சொல்லி, அதனால் சபையின் கௌரவம் பாதிக்கப்படுமானால், அப்படிப்பட்ட பாயின்ட் ஆஃப் ஆர்டரை அவை நடவடிக்கைக் குறிப்பில் இருந்து நீக்கிவிடலாம். இந்த நடைமுறை பாராளுமன்றத்திலும் இருக்கிறது. ஆனால் பாயின்ட் ஆப் ஆர்டரை எழுப்பக் 'கூடாது' பேசக் கூடாது என்று இல்லை. ஆகவே, உறுப்பினர்கள் பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்று சொல்லி, அது சபையின் கௌரவத்தைப் பாதிக்குமானால் அப்படிப்பட்ட வார்த்தைகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடலாம். மற்ற விவகாரங்களை—அது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை என்று தாங்கள் தீர்ப்பு வழங்கிவிட்டால் போதும். அவைகளை எக்ஸ்பஞ்ச் செய்ய வேண்டுமென்று அவசியம் இல்லை. அந்த வகையிலே விதிமுறைகளை அமைத்துக் கொள்ள வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. முனு ஆதி :** தலைவரவர்களே, உறுப்பினர்களாக இருக்கின்ற எங்களுக்கு ஒரு தெளிவு வேண்டும். தாங்கள் தீர்ப்பு வழங்கியபோது, ஒழுங்குப் பிரச்சினை இல்லை என்று தீர்ப்புத் தந்துவிட்டால் அது எக்ஸ்பஞ்ச் செய்யப்படும்





என்று சொன்னீர்கள். அப்படியானால் எதையுமே கேட்க முடியாது என்ற பயம் எங்களுக்கு ஏற்பட்டுவிட்டதால்தான் நாங்கள் அதைப்பற்றி மீண்டும் மீண்டும் கேட்கிறோம். இப்போது அவை முன்னவர் அவர்கள் அளித்த விளக்கத்திற்குப் பின்னால் ஓரளவுக்குப் பயம் குறைந்திருக்கிறது. ஒழுங்குப் பிரச்சினை இல்லை என்று சொன்னவுடனே அது குறிப்பிலிருந்து நீக்கப்படும் என்று சொன்னால், அது எங்களுடைய உரிமையை பறிப்பதாகும். ஆகவே, அப்படிச் செய்யக் கூடாது.

**திரு. எம். ஏ. லத்தீப் :** தலைவரவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர்.

* * * *

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நாம் இப்போது பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்புவதைப்பற்றி பேசிக் கொண்டிருக்கிறோம்.

**திரு. எம். ஏ. லத்தீப் :** டாக்டர் ஹாண்டே அவர்கள் எழுப்பியது பாயின்ட் ஆப் ஆர்டரா இல்லையா என்பதுபற்றி இப்போது சர்ச்சை நடந்து கொண்டிருக்கிறது. தங்களுடைய தீர்ப்பைச் சொல்லிவிட்ட பிறகு இந்த பாயின்ட் ஆப் ஆர்டரைப் பற்றிய வார்த்தைகளை நீக்க வேண்டுமா, வேண்டாமா என்பதைப் பற்றி என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

* * * *

**திரு. கே. எம். சுப்பிரமணியம் :** சார், பாயின்ட் ஆப் ஆர்டர்.

**திரு. எம். ஏ. லத்தீப் :** தலைவரவர்களே, இது என்ன பாயின்ட் ஆப் ஆர்டர்? நான் பாயின்ட் ஆப் ஆர்டரில் பேசிக்கொண்டிருக்கிறேன். பாயின்ட் ஆப் ஆர்டருக்கு ஒரு பாயின்ட் ஆப் ஆர்டரா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** எக்ஸ்பஞ்ச் செய்யப்பட்ட 'மேட்டரைப்' பற்றி ரெஃபர் பண்ணக் கூடாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைத் தலைவர் எதைப் பேரவை நிகழ்ச்சிக் குறிப்பிலிருந்து நீக்கலாம் என்பதற்குப் போன தொடர் கூட்டத்தில் சொல்லியிருக்கிறேன். சில உறுப்பினர்கள் பாயின்ட் ஆப் ஆர்டர் என்று சொல்லி, பாயின்ட் ஆப் ஆர்டருக்குச் சம்பந்தப்படாதவற்றை எல்லாம் சொல்லி, அவையின் காலத்தை வீணாக்குகிறார்கள். ஆகவே, பாயின்ட் ஆப் ஆர்டர் என்று சொல்லி, அது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை என்று தெரிந்தால், அது அவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கப்படும் என்று அப்போதே

---

† மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

தெரிவித்திருக்கிறேன். எல்லா பாயின்ட் ஆப் ஆர்டர்களையும் நீக்கிவிடுவேன் என்று சொல்லவில்லை.

* * * *

ஆகவே,

நான் அவ்வாறு தீர்ப்பு வழங்கினேன். (திரு. முனு ஆதி குறுக்கீடு) பாயின்ட் ஆப் ஆர்டரைப் பயன்படுத்தி, அதற்குச் சம்பந்தப்படாதவற்றை எல்லாம் சொல்லிக் கொண்டிருந்தால் அது பாயின்ட் ஆப் ஆர்டர் ஆகாது. அது நிகழ்ச்சிக் குறிப்பில் ஏறாது என்பது தீர்ப்பு. (திரு. முனு ஆதி, திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி, திரு. கே. டி. கே. தங்கமணி ஆகியோர் ஒரே நேரத்தில் எழுந்தார்கள்) திரு. தங்கமணி தன்னுடைய கருத்தைச் சொல்லட்டும்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** இந்த பாயின்ட் ஆப் ஆர்டரைப்பற்றி விதி 83-ல் தெளிவாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. சென்ற தடவை சில திருத்தங்களைக் கொண்டு வந்தோம். அவற்றில் சில, சபாநாயகருக்கு அதிக அதிகாரத்தைக் கொடுப்பதாகவும், சில அவருக்கு இருக்கின்ற அதிகாரத்தை குறைப்பதாகவும் இருந்தன. சபாநாயகருடைய அதிகாரத்தைக் குறைப்பது தவறு என்று அப்போதே வாதிட்டோம். சபையை நடத்திச் செல்வதில் சபாநாயகருக்கு ஏதாவது சிக்கல் ஏற்படுமானால், சிக்கல் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளலாம் என்று சொன்னார்கள். குறிப்பாக அமைச்சர்கள் பேசிக் கொண்டிருக்கும்போது பலர் பாயின்ட் ஆப் ஆர்டர் என்று சொல்லி அடிக்கடி குறுக்கிடக் கூடாது என்பதற்கான பாயின்ட் ஆப் ஆர்டர் பற்றி விதி 83 பிற்பகுதியில் தங்களுக்கு இந்த அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. சபையின் நேரம் வீணாகாமலிருக்கத் தங்களுக்கு இந்த அதிகாரம் கொடுக்கப் பட்டிருக்கிறது. உறுப்பினர்கள் சொல்வது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை என்றால் 'தெயர் இஸ் நோ பாயின்ட் ஆப் ஆர்டர்' என்று சொல்லி விடலாம்; குறிப்பிலிருந்து நீக்க வேண்டியதில்லை.

* * * *

## (4) அறிவிப்பு

### மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தமிழ்நாடு சட்டமன்ற நடைமுறை விதிகள் 6 (1)-ன் கீழ் கீழ்க்கண்ட உறுப்பினர்களை நான் மாற்றுத் தலைவர்களாக நியமிக்கிறேன்.

(1) திரு. க. சுப்பு

(2) திரு. என். கணபதி

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



(3) திரு. மு. பழனிவேலன்

(4) திரு. ஜே. ஜேம்ஸ்

(5) திரு. பெ. சௌந்தரபாண்டியன்

(6) திரு. கே. கந்தசாமி.

## (3-ஆ) நடைமுறைக் கேள்விகள் அல்லாதவற்றை நடைமுறைக் கேள்விகளாக எழுப்பினால் அவற்றை நீக்கிவிடுவது குறித்து—தொடர்ச்சி.

**திரு. முனு ஆதி :** நாங்கள் கேட்டுக்கொண்டே இருக்கிறோம். நீங்கள் உங்கள்பாட்டுக்கு கடகடவென்று அடித்துக் கொண்டே போகிறீர்கள். (ஒரு குரல் : அடித்துக்கொண்டு அல்ல; படித்துக் கொண்டு போகிறார்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உங்களுக்கு இன்னும் சந்தேகம் தீர வில்லையா ?

**திரு. முனு ஆதி :** உங்களுடைய பதில் இன்னும் எங்களுக்குத் திருப்தி யளிக்கவில்லை. தீர்ப்பைத் தெளிவாகச் சொல்ல வேண்டும். இன்னும் எங்களுக்குச் சந்தேகம் இருக்கிறது. ஒழுங்குப் பிரச்சினை ஆகாது என்று தீர்ப்புச் சொல்லிவிட்டால், அது சபைக் குறிப்பில் ஏறுமா ஏறாதா என்பதற்குத் தெளிவான தீர்ப்புத் தரவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** என்னுடைய தீர்ப்பை முதலிலேயே சொல்லி விட்டேன். இந்த அவையினுடைய நேரத்தை வீணாக்குகின்ற முறையிலே வேண்டுமென்றே பாயின்ட் ஆப் ஆர்டர் என்று சொல்லி, சம்பந்தப்படாத வேறுபல கருத்துக்களைச் சொன்னால் அவை நடவடிக்கைக் குறிப்பில் ஏறாது என்று தீர்ப்பு வழங்கினேன். அது எல்லா பாயின்ட் ஆப் ஆர்டர்களும் குறிப்பில் ஏறாது என்று தீர்ப்பு அல்ல.

**திரு. க. உரொ. எட்மண்ட் :** சார் ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். உறுப்பினர்கள் எழுப்புகின்ற ஒழுங்குப் பிரச்சினையின் மீது, அது ஒழுங்குப் பிரச்சினை இல்லை என்று பேரவைத் தலைவர் தீர்ப்பளித்துவிட்டால் அது சட்டசபை நடவடிக்கைக் குறிப்பில் ஏறாது என்று தாங்கள் தீர்ப்பளித்தீர்கள். சட்டமன்ற விதிமுறைகளிலே பேரவை நடவடிக்கைக் குறிப்பில் இருந்து எவை எவை நீக்கப்படும் என்பதற்குத் தனி விதியே இருக்கிறது . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் சொன்னது அப்படி இல்லை.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, அவைத் தலைவராகிய தாங்கள் சொன்னதற்குப் பிறகும், அவை முன்னவர் எடுத்துச் சொல்லிய பிறகும், அவை உறுப்பினர்கள் எழுப்பிய ஐயங்களுக்குத் திரும்பத் தாங்கள் விளக்கம் அளித்துவிட்ட பிறகும் இதுபற்றி உறுப்பினர் எழுப்பிய

காரணத்தால் மீண்டும் தாங்கள் சொன்னது என்ன என்பதைச் சொல்லி விடுகிறேன். ஒழுங்குப் பிரச்சினை என்று எழுப்பி தாங்கள் அது ஒழுங்குப் பிரச்சினை இல்லை என்று மட்டும் தீர்ப்பளித்துவிட்டால் அவை அவைக் குறிப்பில் ஏறும். அது ஒழுங்குப் பிரச்சினை இல்லை என்று சொல்வதோடு, அது சட்டசபைக் குறிப்பில் ஏருது என்று சொல்லிவிட்டால் அது ஏருது.

திரு. க. உரொ. எட்மண்ட்: எந்த உறுப்பினர் பேசுகின்ற எந்தப் பேச்சையும் சட்டசபை நடவடிக்கைக் குறிப்பில் ஏறக் கூடாது என்று உத்தர விட வேண்டுமென்றுல் அதற்கு விதி 235 இருக்கிறது.

"If the Speaker is of opinion that a word or words has or have been used in debate which is or are defamatory or indecent, or unparliamentary or undignified or grossly irregular he may in his discretion, order that such word or words be expunged from the official report of the proceedings of the House and all consequential alterations made in such report and make an announcement in the Assembly of the fact of his having made such order."

இந்த விதிமுறைகளுக்கு உட்பட்டே வர வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது பொதுவான விவாதத்திலே.

**திரு. நா. வீராசாமி:** சார், ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர்.

THIRU G. R. EDMUND: Sir, I have not completed my point of order and you have not given your ruling on it. How can another Member raise a point of order?

ஒரு ஒழுங்குப் பிரச்சினையை டாக்டர் ஹாண்டே கொண்டு வந்தார். அது ஒழுங்குப் பிரச்சினை அல்ல என்று தாங்கள் தீர்ப்பளிக்கலாம். ஆனுல் அவர் பேசிய பேச்சையே சட்டமன்ற நடவடிக்கைக் குறிப்பில் இருந்து எடுத்துவிட தாங்கள் உத்தரவிடுவது என்றுல் அது விதி 235-க்கு உட்பட்டு வர வேண்டும். எதை எதை அப்படி சட்டசபைக் குறிப்பில் இருந்து நீக்கிவிட தாங்கள் உத்தர விடலாம் என்பதற்குத்தான் விதி 235 இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 235-வது விதி, விவாதத்தில் வரக்கூடிய சொற்கள், சொற்றொடர்கள், கருத்துக்கள் பற்றியதாகும். 'பாயின்ட் ஆப் ஆர்டர்'-ன் கீழ் பேரவைத் தலைவர் எவற்றை நீக்கலாம் என்பதற்குத் தனி விதியே இருக்கிறது. அதைத்தான் முன்பு சொன்னேன், இப்போதும்



சொல்கிறேன். பாயின்ட் ஆப் ஆர்டர் என்பதன் கீழ் எழுப்பக்கூடிய விவாதம் இந்த அவையின் நேரத்தை வீணுக்கக் கூடியதாய், அவையின் கண்ணி யத்தைக் குறைக்கக்கூடியதாய் இருந்தால் பேரவைத்தலைவர் அது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை என்று தீர்ப்பளித்தால் அது அவைக் குறிப்பில் ஏருது. இதற்கு நம் விதிமுறைகளில் இடம் இருக்கிறது. இனி அடுத்து அவை முன்னவர் அவர்கள் ஒரு தீர்மானம் கொண்டுவருவார்கள்.

### (5) அரசினர் தீர்மானம்.

**நெய்வேலி இரண்டாவது சுரங்க வேலையை ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக்கொள்ளுவதுபற்றிய முதலமைச்சரின் தனித் தீர்மானத்தை எடுத்துக்கொள்ளுவது குறித்து**

THE HON. DR. V. R. NEDUNCHEZHIYAN: Mr. Speaker, Sir, under Rule 244 of the Legislative Assembly Rules, I move—

"That the relevant rules of procedure be suspended and the House do now proceed to take up the resolution of the Hon. Chief Minister in regard to inclusion of the second mine cut at Neyveli in the draft Fifth Plan".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு ஒருமனதாக நிறைவேற்றப் பட்டது.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** பேரவைத் தலைவர் அவர்களே, ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறேம். அவற்றை எடுத்துக் கொண்ட பின் முதல்வர் அவர்களுடைய தீர்மானத்தைக் கொண்டுவரலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒத்திவைப்புத் தீர்மானங்கள் நாளைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

### (6) அரசினர் தனித் தீர்மானம்.

**நெய்வேலியில் இரண்டாவது சுரங்கத் திட்டத்தையும் ஆயிரம் மெகோ வாட் அனல் மின் உற்பத்தித் திட்டத்தையும் ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்து நிறைவேற்ற வேண்டும் என்பது குறித்து**

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அவைத் தலைவர் அவர்களே,

"தமிழகத்தின் பொருளாதார வளர்ச்சி, நாள்தோறும் பெருகி வரும் மின் சக்தி தேவையை நிறைவு செய்யவில்லையெனில் பெரிதும் பாதிக்கப்பட்டு விடும். தமிழ்நாட்டில் நீர் மின் வாய்ப்புக்கள் முழுவதுமாக பயன்படுத்தப் பட்டுவிட்ட நிலையில், அனல் மின் நிலையங்களை உருவாக்குவது இன்றியமையாத

தாகும். நிலக்கரி பற்றாக்குறை உள்ளதால் தமிழகத்தில் கிடைக்கும் நெய்வேலி பழுப்பு நிலக்கரியை முழுமையாகப் பயன்படுத்தி அனல் மின் சக்தி உற்பத்தியைப் பெருக்கிவிடுவது மிகவும் அவசியமாகிறது. எனவே, நெய்வேலி 2-வது சுரங்கத் திட்டத்தையும் 1,000 மெகோ வாட் அனல் மின் உற்பத்தித் திட்டத்தையும் உடனடியாக ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்து நிறைவேற்ற வேண்டுமென்று மத்திய அரசை இந்தப் பேரவை வலியுறுத்திக் கேட்டுக்கொள்ளுகிறது."

என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தலைவர் அவர்களே, இது மிகமிக முக்கியமான ஒரு தீர்மானம் ஆகும். இரண்டொரு நாட்களில் மத்தியிலே 5-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் என்னென்ன திட்டங்களைச் சேர்ப்பது என்கிற ஒரு இறுதி முடிவு எடுப்பதற்கு முன்னால் இந்தத் தீர்மானத்தின் மூலம், அனைத்துக் கட்சித் தலைவர்களின் சார்பாக இந்த மாமன்றம் தமிழ்நாடு மக்களின் குரலை எதிரொலிக்கின்ற வகையில் இந்தத் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற வேண்டுமென்று நான் விரும்புகிறேன். இதே விருப்பத்தை எல்லாக் கட்சிகளின் தலைவர்களும், உறுப்பினர்களும் கொண்டு இருப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. தீர்மானத்தில் கூறப்பட்டிருப்பது, நெய்வேலியில் 2-வது சுரங்கத் திட்ட வேலை தொடங்கப்பட வேண்டும் என்பதாகும். இது தொடங்கப்பட்டு முற்றுப் பெறுமானால் அதன் மூலமாக ஆயிரம் மெகாவாட் மின் உற்பத்தித் திறன் நமக்குக் கிடைக்கக்கூடும். தமிழகத்தின் தொழில் வளர்ச்சிக்கு இது மிகமிகப் பயன்படக் கூடிய ஒன்றாகும். இது இந்தக் கட்டத்தில் நிறைவேற்றப்படாவிட்டால் ஏறத்தாழ பத்துப் பதினைந்து ஆண்டுகளுக்குள் தமிழகத்தின் பொருளாதார வளர்ச்சியில் ஒரு பெரிய தேக்க நிலை ஏற்பட்டுவிடக்கூடும் என்ற அச்சத்தை நான் இந்த நேரத்தில் குறிப்பிட்டுக் காட்டுவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். எடுத்துள்ள கணக்கின்படி 1978-79-ஆம் ஆண்டில் நமக்குத் தேவையான மின்சாரத்தின் மொத்த அளவு 3,620 மெகோவாட் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. ஆனால் நமக்கு இப்போதுள்ள மின்சாரத் திறன் சுமார் 1,400 மெகோ வாட்டாகத்தான் இருக்கிறது என்பதை இந்த மாமன்றத்தி லுள்ள உறுப்பினர்கள் அனைவரும் நன்றாக அறிவார்கள். வர இருக்கின்ற நீர் மின் நிலை உற்பத்தியும் தூத்துக்குடி திட்டமும், எண்ணூர் விரிவுத் திட்டமும் ஆகிய அனைத்தும் முடிவு அடைந்தால் கூட நமது மின் உற்பத்தித் திறன் 2,200 மெகோ வாட்டாகத்தான் கூடும் என்று நினைக்கிறேன். ஆகவேதான் நெய்வேலி 2-வது சுரங்கவேலை ஆரம்பிக்கப்பட்டு, தொடர்ந்து ஆயிரம் மெகோ வாட் மின்சார உற்பத்தியும் அங்கு நடைபெறவேண்டுமென்று நாம் விரும்புகிறோம்.





நெய்வேலியில் மின்சார உற்பத்தியைப் பெருக்க, அதற்கான மின் நிலையத்தை அமைக்கின்ற வகையில் நிறைய வசதிகள் அங்கே இருக்கின்றன. முதலில் நிலக்கரி அங்கே கிடைக்கிறது. அதன் காரணமாக போக்குவரத்துப் பிரச்சினை எழுவில்லை என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

உற்பத்திச் செலவைப் பொறுத்தவரையில், தூத்துக்குடி, எண்ணூரில் இந்தத் திட்டங்களைவிட, இங்கே உற்பத்திச் செலவு சற்று அதிகமானாலும் கூட, நம்முடைய தேவையினுடைய இன்றியமையாமையை முன்னிட்டு இந்தச் செலவைப் பொருட்படுத்தக் கூடாது என்பதையும் மத்திய அரசாங்கத்திடம், திட்டக் குழுவினுடைய தலைவரிடம், தொடர்புடைய அமைச்சர் பெருமக்களிடம், இந்தியத் தலைமையமைச்சரிடம் தமிழக அரசின் சார்பாகப் பல முறையும் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. இப்பொழுது திட்டத்தை எடுத்துக்கொண்டாலே அது நிறைவேறுவதற்கு 7 அல்லது 8 ஆண்டுக் காலம் ஆகும். இது முன்பே, நான்காவது திட்டத்திலே ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தால், கூட, ரூ. 100 கோடி செலவிலே அது முடிவடையக் கூடும் என்று அப்பொழுது கணக்கிடப்பட்டது. இந்த ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே ஏற்றுக்கொள்ளலாம் என்றால், ரூ. 300 கோடி ஆகும் என்றும், ஐந்தாவது திட்டத்திலே மாத்திரம் செலவு ரூ. 200 கோடி என்றும் கணக்கிடப்பட்டிருக்கிறது. ஐந்தாவது திட்டத்திலே விடப்பட்டு, ஆறாவது திட்டத்திற்குக் கொண்டுசெல்லப்படுமேயானால், செலவினுடைய தொகையும் அதிகமாகும். அது மாத்திரமல்ல, ஆறாவது திட்டக் காலத்திலே இந்தத் திட்டத்தைச் சேர்த்துக் கொண்டாலும், இதனுடைய பயனை ஆறாவது திட்டக் காலத்திலே நம்முடைய தமிழ்நாட்டு மக்கள் நிச்சயமாக அடைந்திட இயலாது என்பதையும் நாம் மனத்திலே கொள்ளவேண்டும். இதுபற்றி நம்முடைய தொழில் அமைச்சர் அவர்கள் டெல்லிக்கு அண்மையிலே சென்றிருந்தபொழுது அங்கே இருக்கிற மத்திய அமைச்சர்களைச் சந்தித்துப் பேசி இருக்கிறார்கள். மத்திய அமைச்சர் திரு. தார் அவர்களிடத்திலும் இதுபற்றி நான் வலியுறுத்திக் கூறியிருக்கிறேன். நேற்றையதினம், மத்திய அமைச்சர் திரு. சுப்பிரமணியம் அவர்களோடு தொடர்புகொண்டு நான் பேசி இந்தத் திட்டம் எப்படியாவது சேர்க்கப்பட வேண்டுமென்று நான் அவர்களிடத்திலே வலியுறுத்திக் கேட்டுக் கொண்டிருக்கிறேன்.

இன்றையதினம் இப்படிப்பட்ட தீர்மானத்தை நாம் நிறைவேற்றுவதன் மூலம் தமிழ்நாட்டு மக்கள் ஏகோபித்தக் குரலில் இந்தத் திட்டத்தை விரும்புகிறார்கள் என்பதை மத்திய அரசுக்குத் தெரிவிப்பதற்கு ஏதுவாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

அது மாத்திரமல்ல, ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே நம் மத்திய அரசு தமிழ்நாட்டிலே நடத்தவேண்டிய திட்டங்கள் சிலவற்றைக் குறித்துக் கேட்டிருக்கிறோம் என்றாலும், இந்தத் திட்டத்தை மத்திய அரசு ஏற்றுக் கொள்ளாவிட்டால், மத்திய அரசின் திட்டங்கள் என்று ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே எதுவுமே இல்லாமல் போய்விடும். ஆகவே, அந்தக் குறையைப் போக்க, எதிர் காலத்திலே தமிழ்நாட்டில் மின்சாரப் பற்றாக்குறை சீர்படுகின்ற வகையில், மத்திய அரசு உடனடியாக இத்திட்டத்திற்கு ஒப்புதல் அளித்து, நெய்வேலி இரண்டாவது சுரங்கமுண்டு என்ற செய்தியினை, தமிழ்நாட்டு மக்களுக்கு மகிழ்ச்சிகரமான செய்தியினை, இரண்டொரு நாளிலே அவர்கள் தந்திட வேண்டுமென்று அவையிலே இருக்கிற அனைத்துக் கட்சித் தலைவர்களுடைய, உறுப்பினர்களுடைய அன்பான ஆதரவோடு கேட்டு, நான் அமர்கிறேன்.

THIRQ K. T. K. THANGAMANI: Sir, I am raising a point of order. I am not in any way trying to play-down the importance of this Resolution. But we are governed by certain rules. Even though the Leader of the House has got the approval of this House that this particular matter should have precedence over all other things, there is a rule which clearly says that 'after questions and before the further business set down in the list of business for the day is entered upon :. the adjournment motions should be considered. There are a lot of adjournment motions given notice of by us. I would like to know what is the direction of the Hon. Speaker. The Speaker may reject or give a direction in that behalf. So that records may be complete, the Speaker could say that many adjournment motions have been received and they would be taken up tomorrow. This Resolution also has got the status of an adjournment motion. We could have certainly brought a matter of this nature and that could have got precedence. A ruling could be given on it, that it will be in order. When we have got certain rules, we should follow them. If we do not follow, then the rules can be thrown over in a minute. At least we must conform to certain rules when the rules are here. That is all my submission.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, நாளையதினம் மத்திய அரசாங்கத்தினுடைய 'காபினெட் மீட்டிங்' நடைபெற இருக்கிற காரணத்தினால், இந்தத் தீர்மானம் மெத்தவும் பயன்படும் என்பதற்காக நாம் வேறு அலுவல்களிலே இன்றையதினம் கவனத்தைச் செலுத்துவது இயலாத



அளவிலே இருக்கிறது என்ற அளவிலே எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. 'அட்ஜர்ன்மென்ட் மோஷன்' களை நாளையதினம் எடுத்துக்கொள்வதுபற்றி எங்களுக்கு எந்தவிதமான ஆட்சேபனையும் கிடையாது. தாங்கள் அதைக் கவனத்தில் கொண்டு தீர்ப்பு அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

DR. H. V& HANDE : On a point of ordre, Sir. We fully accept what the Hon. Chief Minister has brought forward. We are all going to support it fully. How much time will this Resolution take? At the most, half an hour. Adjournment motions could have been taken and that would have taken just half an hour or 45 minutes. The Hon. Speaker has refused permission to two or three motions given notice of. Communication has been received and I should not disclose the contents. We have given a number of adjournment motions. There are burning problems and we are meeting after a lapse of many days. There is the affair of the Corporation of Madras. My submission that if they can be discussed, this Resolution also could have been taken afterwards. I am quite sure we are all going to support it and each will speak only 5 or 10 minutes. I am not playing down the Resolution. This Resolution should be passed and will be passed today itself. It is only 12 o'clock now. I once again appeal to the Hon. Speaker to reconsider his order and see to it that we are given a chance to take up the adjournment motions.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஒத்திவைப்புத் தீர்மானங்கள் சிலவற்றிக்கு உறுப்பினர்களுக்குத் தகவல் கொடுத்தாயிற்று. தகவல் கொடுக்காமல் இருக்கிற ஒத்திவைப்புத் தீர்மானங்கள் நாளைக்கு எடுத்துக் கொள்ளப்படும். அரை மணியிலே முடித்து விடலாம் என்று சொன்னார். ஒத்திவைப்புத் தீர்மானத்தைப் பொறுத்த அளவில், கேள்வி நேரத்திற்குப் பிறகு மற்ற அலுவல்களை எடுப்பதற்கு முன்னாலே எடுத்துக்கொள்ளவேண்டுமென்று விதி இருக்கிறது. கேள்வி நேரம் முடிந்து, இன்னொரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, இரண்டாவது தீர்மானம் முன்மொழியப்பட்ட அளவிலே இருக்கிறது. இந்த நேரத்திலே ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுப்பது நல்லதல்ல. உறுப்பினர்களுக்குத் தகவல் கொடுக்காத தீர்மானங்கள் நாளைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

**திரு. எம். சுரேந்திரன் :** ஒரு சபை கூட்டத்துக்கும் அடுத்த சபை கூட்டத்துக்கும் இடையிலே இருக்கிற 'கேப்பிலே' நிறைய நிகழ்ச்சிகள் நடக்கின்றன. கூட்டம் கூடியபொழுது, அவற்றை எடுக்கவில்லையென்றால்,

கொடுத்தவர்களுக்குப் பெரிய ஏமாற்றத்தை உண்டாக்கும். அதைவிட ரொம்பப் பிரதானமான கார்ப்பரேஷன் சம்பந்தமான விவகாரங்களிலே கொடுத்தவற்றை எடுக்காவிட்டால், அவசரம் என்று சொல்லுவதிலே பொருள் இல்லாமல் போய் விடும். ஆகவே இருக்கிற நிலைமைக்கு வேறு மாதிரியாக இருப்பது சரியாக இல்லை.

***மாண்புமிகு பேரவைத் தலைவர் :*** திருப்பிக் கொடுக்கப்பட்டிருக்கின்ற வற்றைத் தவிர மற்ற தீர்மானங்கள் நாளைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

***திரு. ஆர். பொன்னப்ப நாடார் :*** தலைவர் அவர்களே, மிக முக்கியமான இந்தத் தீர்மானத்தை ஆமோதித்து ஓரிரு வார்த்தைகள் சுருக்கமாகப் பேச முற்படுகிறேன். இன்று நமது தமிழ்நாட்டிலே இருக்கிற நிலைமையைப் பார்க்கின்றபொழுது மின்சாரப் பற்றுக்குறை வெகுவாக இருந்துகொண்டே இருக்கிறது. நமக்குத் தொழில் துறையானாலும் சரி, மற்ற துறைகளானாலும் சரி, பெரிய தேக்க நிலை ஏற்படுகிற அவல நிலை நாட்டை எதிர்நோக்கிக்கொண்டிருக்கிறது. அந்தச் சந்தர்ப்பத்திலே, ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட வடிவத்தைப் பூர்த்தி செய்கின்ற இந்த நேரத்திலே, நெய்வேலியிலே இரண்டாவது சுரங்கத் திட்டத்தையும், அதோடு ஒட்டி, அந்த 1,000 மெகோ வாட் நிலையத்தை நிறுவுவது சம்பந்தமாக அரசாங்கம் கொண்டுவந்திருக்கிற தீர்மானமானது மிகவும் வரவேற்கத்தக்க ஒன்று நான் கூறவிரும்புகிறேன்.

தமிழக மக்கள், நாம், இந்தத் திட்டத்தை நீண்ட நெடுங்காலமாக எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம். முன்பு ஒரு முறை இரண்டாவது மைன் கட்ட வேண்டுமென்று மத்திய அரசாங்கத்தை வலியுறுத்தினார்கள். ஆனால், இன்னும் அது நிறைவேறவில்லையென்ற நிலைமை இருக்கிற காரணத்தினால் இந்தத் திட்டத்தினை உடனடியாக உருவாக்குவதற்கு நமது மாநில அரசாங்கமும் மத்திய அரசாங்கமும் வேண்டிய காரியங்களை மேற்கொள்ள வேண்டுமென்று வலியுறுத்துகிறேன்.

எதற்காக இந்தத் திட்டம் தேவை என்று சொன்னால், இன்று நமக்கு மின்சாரமானது மிகவும் பற்றுக்குறையாக இருக்கிறது. நீர் மின்சாரம் நமக்கு அதிகம் இல்லை. பல இடங்களிலே எல்லாத் திட்டங்களையும் நிறைவேற்றுகின்ற ஒரு நிலையிலே இருக்கிறோம். இனி, நமக்குத் தேவைப்படுவது அனல் மின் சாரம், மற்ற மின்சாரம். அது மிகவும் தேவையாக இருக்கிற காரணத்தால், இந்தத் திட்டத்திற்கு முதலிடம் கொடுக்க வேண்டும். ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே நியாயமான பங்கினைத் தமிழகம் பெற்றுக்கொள்வதிலே நாம் எல்லோரும் முனைந்திருக்க வேண்டும். அதற்குத் தீவிரமாக இருக்கவேண்டும். அக்கறையும் காட்டவேண்டும். நாமெல்லாரும் ஏமாந்த சோணகிரிகளாக



இருக்கக் கூடாது. தமிழக மக்கள் நம்மைப் பழிக்கக்கூடிய நிலையிலே நாம் இருந்துவிடக் கூடாது. ஆதலால், எல்லாக் கட்சிகளும் இதனை வரவேற்கின்றன என்று நமக்கு நன்றாகத் தெரியும். அரசாங்கத் தரப்பிலே இதனைக் கொண்டு வந்ததற்காக நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். எங்கள் கட்சியின் சார்பாக இதனை வரவேற்று, ஐந்தாவது ஐந்து வருஷத் திட்டத்திலே இது நிச்சயமாக இடம் பெறும் என்ற நம்பிக்கையோடு நான் என்னுடைய வார்த்தைகளை முடிக்கிறேன்.

[12-00 நண்பகல்]

**** திரு. பெ. சௌந்தரபாண்டியன் :*** தலைவர் அவர்களே, தமிழகத்தின் இன்றைய சூழ்நிலையிலே மின்சாரம் மிக மிகத் தேவையானது, அவசியமானது என்பதை இந்த நாட்டு மக்களும் நாமும் நன்றாக உணர்ந்திருக்கிறோம். எந்த ஒரு நாட்டை எடுத்துக்கொண்டாலும் இன்றைய சூழ்நிலையிலே அதனுடைய பொருளாதார வளர்ச்சியும் சமுதாய முன்னேற்றமும் மின்சாரத்தை நம்பித்தான் இருக்கிறது என்பதையெல்லாம் நாம் நன்றாக அறிவோம். ஆகவே, இந்த நிலையில் அனல் மின் நிலையங்கள் அதிகமாகத் தேவை என்பதிலே நாட்டு மக்களுக்கும் சட்ட மன்ற உறுப்பினர்களுக்கும் அமைச்சர்களுக்கும் எந்த அளவிற்கு ஆர்வமும் அக்கறையும் இருக்கிறது என்பதைக் காட்டுவதற்காக இந்தத் தீர்மானம் மிகவும் முக்கியமானதாக அமைந்திருக்கிறது. அந்த அளவிலே நானும் நான் சார்ந்திருக்கின்ற அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் இதனை ஆதரிக்கிறோம்.

நெய்வேலி அனல் மின்நிலையத்தைப் பொறுத்தவரையில் எவ்வளவு கால தாமதம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதையும், அதற்காக மத்திய அரசு என்ன என்ன சாக்குபோக்குகளைச் சொல்லிக் கொண்டிருக்கிறது என்பதையும் நாம் நன்றாக அறிவோம். இந்த நல்ல தீர்மானத்தை வலியுறுத்தக்கூடிய முறையில் இந்த ஐந்தாண்டுத் திட்டத்திலேயே இந்தத் திட்டத்தைச் சேர்க்க வேண்டுமென்றும் அதன்மூலம் இந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றுவதற்கு மத்திய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டுமென்கின்ற ஒருமித்த கருத்தை நாம் மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்கிற முறையில் இந்தத் தீர்மானத்தை நான் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வரவேற்று ஆதரிக்கிறேன் என்று கூறி, இந்த அளவோடு முடிக்கிறேன். வணக்கம்.

[1973 நவம்பர் 19

**திரு. ஏ. ஆர். பெருமாள் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள இந்த முக்கியமான தீர்மானத்தை பார்வர்ட் பிளாக் கட்சியின் சார்பாக வரவேற்று ஒன்றிரண்டு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இந்த நாட்டிலே மின்சாரப் பற்றுக்குறை எந்த அளவிற்கு இருக்கிறது என்பதை அனைத்துக் கட்சித் தலைவர்களும் நன்றாக அறிவார்கள். நெய்வேலியில் இரண்டாவது கட்ட வேலை தொடங்கினால் சுமார் ஆயிரம் மெகோ வாட் மின்சாரம் கிடைக்கும் என்று சொன்னார்கள். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதுபோல நமக்குத் தேவை மூவாயிரத்துச் சில்லரை மெகோ வாட். அப்படியிருக்கும்பொழுது நமக்கு இன்றைக்குக் கிடைப்பது ஆயிரம் மெகோ வாட் தான். நாம் எதிர்பார்ப்பது 1,400 மெகோ வாட் ஆகும். ஆகவே இதனைச் செய்தால்கூட இரண்டாயிரத்து ஐநூறு மெகோ வாட் தான் கிடைக்கும், மீதி ஆயிரம் மெகோ வாட் தேவைப் படுகிறது, ஆகவே மத்திய சர்க்கார் இந்தத் திட்டத்தை ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே சேர்க்கவேண்டுமென்று முறையிலே இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள்.

இந்தத் தீர்மானம் மிகவும் முக்கியமானது. இதை முக்கியமான கட்டத் திலேதான் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிறார்கள். இந்த ஐந்தாண்டுத் திட்டத்திலே இந்தத் திட்டத்தைச் சேர்க்கவேண்டும், அப்படி இந்தத் திட்டத்தை அதில் சேர்க்காதுபோனால் தமிழகத்தில் எந்த ஒரு திட்டமும் சேர்க்கப்படவில்லை என்று ஆகிவிடும் என்பதை அவர்கள் தெளிவாக எடுத்துக்காட்டினார்கள். தமிழகத்திலே மின்சாரத்தை அடிப்படையாக வைத் துத்தான் பொருளாதார வளர்ச்சி ஏற்படவேண்டும், எனவே அந்த முறையிலே இந்த முக்கியத்துவம் வாய்ந்த தீர்மானத்தை நான் ஃபார்வர்ட் பிளாக் கட்சி யின் சார்பாக முழுமையாக ஆதரித்து அமர்கிறேன். வணக்கம்.

* **திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** மதிப்பிற்குரிய முதல்வர் அவர்கள் கொண்டு வந்துள்ள இந்தத் தீர்மானத்தை எங்களுடைய கட்சியின் சார்பாக நான் ஆத ரிக்கிறேன். தமிழகத்திலே மின்சார அபிவிருத்தி ரொம்ப அதிகமாக வேக மாகச் செயல்படவேண்டும் என்பதைக் கடந்த மின்சாரப் பற்றுக்குறையின் போது தமிழக மக்கள் தெளிவாக உணர்ந்துகொண்டார்கள். ஆகவே மின்சார உற்பத்திக்கு முதலிடம் கொடுத்து இந்தத் திட்டத்தை அமலாக்கவேண்டியது மிகவும் அவசியம். மத்திய அரசு இதை உணர்ந்து இதை எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற கருத்தை நாங்கள் ஆதரிக்கிறோம். வருங்காலத்திலே மட்டு மல்ல, இன்றைக்கு இருக்கக்கூடிய தொழில் வளர்ச்சிக்கு மின்சாரப் பற்றுக்



1973 நவம்பர் 19] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

குறை இருக்கும்பொழுது மேலும் மேலும் ஏற்படுகின்ற பொருளாதார வளர்ச் சிக்கும் தொழில் வளர்ச்சிக்கும் மின்சாரம் இன்றியமையாத் தேவை என்பதை நாம் ஏற்றுக்கொள்கிறோம். தமிழகத்திலே உள்ள நிலையை உணர்ந்து இந்தத் திட்டத்தை ஐந்தாவது ஆண்டுத் திட்டத்திலே சேர்த்து அனுமதிகொடுத்து, உடனடியாக ஆரம்பிக்க வேண்டும் என்பதை நானும் வரவேற்கிறேன். இதற்கு முன்பு, நான் சொல்வது பத்திரிகையிலே வந்த செய்தியாகும். இதற்கு மத்திய அரசு அனுமதி கொடுக்கலாம் என்று சொல்லியிருப்பதாகத் தெரிகிறது, ஆனால் இந்த ஐந்தாவதுத் திட்டத்திலே இதைச் சேர்க்கமுடியுமா என்பதைப் பற்றித் தெளிவாக முடிவு எடுக்கவேண்டியிருக்கிறது. ஆகவே, இந்த ஐந்தாண்டுத் திட்டத்திலே சேர்க்கவேண்டுமென்ற கருத்தை நானும் ஆதரித்து என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

THIRU B. VENKATASWAMY : Sir, on behalf of the Swatantra Party, I welcome the Hon. Chief Minister's Resolution to have the Second Mine Cut at Neyveli included in the Fifth Five-Year Plan.

As it is, in Tamil Nadu, we are suffering a lot because of power cut. For example, you can take agricultural side. There are so many people waiting for a long time even after installing pumpsets to get power connection. Due to power cut, in many cases, the connections have not been given. On the industrial side also, I may say actually we are in a mess.

If we want to overcome the power crisis in Tamil Nadu, we must have power from the Neyveli Second Mine Cut. According to the statement made by the Hon. the Chief Minister, I understand that we are going to get nearly 1,000 M.W. more by having this second mine cut. Regarding our requirements, the Hon. Chief Minister was telling that we must have at least 36.20 M.Ws. by the end of 1979. Except the second mine cut at Neyveli, we have no other source to augment electricity in Tamil Nadu. Therefore, we must impress upon the Central Government to feel that the second mine cut at Neyveli is a must and it should be included in the Fifth Five Year Plan.

Our Hon. Chief Minister is an intelligent man and he knows how to tackle the issue. I understand he has already contacted the Union Minister Thiru C. Subramaniam in this regard. I am sure he will also take up the issue in the Cabinet meeting and plead

for the inclusion of the second mine cut in the Fifth Five-Year Plan. If the second Mine Cut is not included in the Fifth Five-Year Plan, Tamil Nadu is going to face a critical position in agricultural and industrial sectors. Already Tamil Nadu is facing unemployment problem. It will be increased to a maximum extent. By taking into consideration all these aspects, I hope the Central Government will consider the genuine request of Tamil Nadu. I am also sure the Union Minister Thiru C. Subramaniam, on behalf of Tamil Nadu, will take up the matter and press for its inclusion in the Fifth Five Year Plan.

On behalf of the Swatantra Party, I fully support this Resolution of the Hon. Chief Minister.

**திரு. கே. எ. வகாப்:** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் தன்னுடைய பொருளாதார முன்னேற்றத்திற்கு அடிப்படைக் காரணமாகக் கொண்டுள்ள மின்சார அபிவிருத்திபற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டுள்ள மிக முக்கியமான தீர்மானத்தின்பேரிலே நான் சார்ந்திருக்கின்ற முஸ்லீம் லீக் கட்சியின் சார்பிலே, இங்கே பேசிய எல்லாக் கட்சிகளும் ஒரே குரலாக ஒலிக்கின்ற வகையிலே தமிழகத்தின் ஒருமித்த ஒரே குரலாக மத்திய அரசுக்கு எடுத்துச்சொல்லுகின்ற முறையிலே என்னுடைய உரையைத் துவங்குகின்றேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மிகத் தெளிவாக எடுத்துக் காட்டினார்கள், இந்தத் திட்டம் இந்த ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே எடுத்துக் கொள்ளப்படவேண்டும், சென்ற ஐந்தாண்டுத் திட்டத்திலேயே எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தால் இதற்கு 100 கோடி ரூபாய்தான் ஆகியிருக்கும், இந்த ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எடுத்துக்கொண்டால் 200 கோடி ரூபாய் ஆகும், ஒருவேளை ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எடுத்துக்கொண்டால் இன்னும் அதிகமாகும், அல்லது எடுத்துக்கொள்ளாமல் போய்விட்டால் எதிர்காலப் பொருளாதாரத்தில் சீர்கேடுகள் ஏற்படும் என்று எடுத்துக்காட்டினார்கள். இந்தத் திட்டத்தின் மூலம் 1,000 மெகாவாட் மின்சாரம் கிடைக்கும். இரண்டாவது சுரங்க வேலையை உடனடியாக ஆரம்பித்துவிடக்கூடிய முறையிலே இதனை இந்த ஐந்தாண்டுத் திட்டத்திலேயே சேர்த்துக்கொள்ளவேண்டுமென்ற முறையிலே இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கிறோம். இந்தத் தீர்மானத்திற்கு மத்திய அரசும், மத்திய அரசிலே உள்ள தமிழகத்தினைச் சார்ந்த பாராளு மன்ற உறுப்பினர்களும், அமைச்சர்களும் ஆக்கமும் ஊக்கமும்



தருவார்கள் என்று நம்புகிறோம். ஏற்கனவே அவர்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் ஆதரித்துப்பேசியது மட்டுமல்ல, சூசகமாக முதலமைச்சர் அவர்கள் தெரிவித்ததைப்போல் அங்கே இருக்கிற தமிழகத்தைச் சேர்ந்த அமைச்சர்கள் இதிலே அதிக அக்கறை காட்டுவார்கள் என்று தெரிகிறது. அது நிறைவேற்றப்பட்டால், அது தமிழகத்தின் மாண்புமிகு முதல்வரவர்களுக்குக் கிடைக்கும் வெற்றி மட்டுமல்ல, தமிழக மக்கள் அத்தனை பேருக்கும் கிடைக்கும் பெரும் வெற்றியாக அமையும் என்று கூறிக்கொள்கிறேன். அதே நேரத்தில் இப்பொழுது நெய்வேலியில் 600 மெகோவாட் உற்பத்தி செய்யப்படும் நிலைமையை மாற்றி இன்னும் 1,000 மெகோவாட் அளவில் உற்பத்தி செய்ய வேண்டும். கடந்த காலத்தில் மின்சாரக்கோளாறுகள் அல்லது குறைபாடுகள் ஏற்பட்ட காலத்திலெல்லாம் மின்சார வாரியம் அதிகத் தொகை கொடுத்து நெய்வேலி கழகத்திடமிருந்து பெற்றார்கள். அதேநேரத்தில் அந்தக் கழகத்தைச் சேர்ந்தவர்களும் அங்கேயுள்ள தொழிற்சாலைகள், செங்கல் தொழிற்சாலை, யூரியா தொழிற்சாலை போன்றவற்றை நிறுத்தி விட்டு நம்முடைய மின் வாரியத்திற்கு அதிக மின்சாரத்தைக் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, தமிழகத்திலே இப்படிப்பட்ட ஒரு பெரிய நிலைமை ஏற்பட்டிருக்கும் இந்த நேரத்திலே மின்சார வாரியம் தங்களுக்கு எவ்வளவோ பொருளாதார நெருக்கடிகள் இருந்தாலும் அதையெல்லாம் சமாளித்து வந்திருக்கும் சூழ்நிலையில் இதை நாம் வரப்பிரசாதமாகப் பெற வேண்டியவர்களாக இருக்கிறோம். நம்முடைய தேவைகளைப் பற்றி முதலமைச்சரவர்கள் விளக்கமாகத் தெரிவித்தார்கள். தேவையான அளவிற்கு இல்லை, பாதி அளவுதான் மின்சாரத்தைப் பெற்றிருக்கிறோம், ஆனால் நம்முடைய அருமை நண்பர் சுதந்திராக் கட்சித் தலைவரவர்கள் சொன்னதைப்போன்று, நம்முடைய முதலமைச்சரவர்கள் சமயோசிதமாக, நம்முடைய மாநிலத்தில் அதிகமாக இருக்கும் பொருள்களைக் கொடுத்து, அங்கேயிருந்து பெற வேண்டிய பொருள்களை அண்டை மாநிலங்களிலிருந்து பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். மத்திய அரசு கூறிக் கொண்டிருக்கிறார்களே ஒருமைப் பாட்டைப்பற்றி, அந்த ஒருமைப்பாட்டிற்கு இப்படிப்பட்ட திட்டங்களை அவர்கள் நிறைவேற்றுவது சாலச்சிறந்ததாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். இந்தத் தீர்மானத்தை எங்கள் கட்சியின் சார்பாக மனப்பூர்வமாக வரவேற்று அமர்கிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** சபாநாயகரவர்களே, இங்கு கொண்டுவரப்பட்டிருக்கும் தீர்மானத்தை நான் சார்ந்திருக்கும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் ஆதரிக்கிறேன். அதேநேரத்திலே இது மின்சார சம்பந்தமான பிரச்னையாக இருப்பதால் சில விஷயங்களை நான் குறிப்பிடலாம் என்று நினைக்கிறேன்.

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1973 நவம்பர் 19

இந்தத் தீர்மானத்திலே கூறப்பட்டிருக்கும் முக்கியமான விஷயம், நமது மின்சாரத் தேவை அதிகமாகிக்கொண்டே வருகிறது, நிலக்கரி பற்றாக்குறை உள்ளதன் காரணமாகச் சில காரியங்கள் ஏற்பட முடியவில்லை என்றும், நெய் வேலி 2-வது சுரங்கத் திட்டத்தை அமல் நடத்துவதோடு இன்றைக்கு அவர்கள் உற்பத்தி செய்யும் மின்சாரத்தையும் அதிகப்படுத்த வேண்டுமென்றும் கூறப்பட்டிருக்கிறது. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே இரண்டாவது சுரங்கத் திட்டத்தைச் சேர்க்க வேண்டுமென்று தமிழக சட்டமன்றத்திலே தீர்மானம் நிறைவேற்றுவது மிகவும் பொருத்தமானதாகும். காரணம் என்னவென்றால், முதலாவது சுரங்கமே இன்னும் முழுமையாக, ஒழுங்காகச் செயல்படவில்லை. அதற்குக் காரணம் எந்த அளவிற்குப் பழுப்பு நிலக்கரி எடுக்க வேண்டுமோ அந்த அளவிற்கு எடுக்க சில மிஷின்கள் பயனில்லாமல் இருக்கின்றன. ஆகவே, அதையும் பூர்த்தி செய்ய வேண்டுமென்ற முறையிலே, மத்திய அரசுதான் வைபநல்டம் பார்ப்பதாக இருந்தாலும், தமிழகத்தில் இருக்கும் முக்கியமான தொழில் என்ற முறையிலே அதை வற்புறுத்த வேண்டும்.

இந்த இரண்டாவது சுரங்கம் வந்தால் அதன்காரணமாக சேலத்திலே வரும் உருக்குத் தொழிற்சாலைக்குப் பேருதவியாக இருக்கும் என்று ஏற்கெனவே சொல்லியிருக்கிறார்கள். ஆகவே அதற்கும் உதவியாக இருக்கும்.

அதேநேரத்திலே, பழுப்பு நிலக்கரியிலேயிருந்து நமக்குக் கிடைப்பது மின்சாரம் மட்டுமல்ல, நமக்குத் தேவையாக இருக்கும் யூரியா உரமும் கிடைத்திருக்கிறது. அந்த யூரியா உரத்தையும் அதிகப்படுத்த வேண்டுமென்பது முக்கியமான விஷயம். எனக்கு வந்திருக்கிற ஒரு சந்தேகம் என்னவென்றால், இங்கே 1971-72 ஆம் ஆண்டுக்கான நிர்வாக அறிக்கை வந்திருக்கிறது. அந்த அறிக்கையிலே என்ன கூறப்பட்டிருக்கிறது என்றால், பக்கம் 17-இலே "இவ்வாண்டில் உற்பத்தி செய்யப்பட்டதும், வாங்கியதுமான மொத்த மின் சக்தி 6,816 மில்லியன் யூனிட்டுகளாகும். இவற்றில் 3,749 மில்லியன் யூனிட்டுகள் அல்லது 55 சதவிகிதம் நீர் மின் நிலையங்களிலிருந்தும், 618 மில்லியன் யூனிட்டுகள் அல்லது 9 சதவிகிதம் வாரியத்தின் அனல் மின் நிலையங்களி லிருந்தும், மிச்சமுள்ளதில் 1,922 மில்லியன் யூனிட்டுகள் அல்லது 28 சதவிகிதம் நெய்வேலி அனல் மின் உற்பத்தி நிலையத்திலிருந்தும், 527 மில்லியன் யூனிட்டுகள் அல்லது 6 சதவிகிதம் மைசூர், கேரளம், ஆந்திரா மாநிலங்களின் மின்சார வாரியங்களிலிருந்தும் பெறப்பட்டன. நிலையங்கள் வாரியாக உற்பத்தி செய்யப்பட்ட மின்சக்தி பற்றிய விவரங்கள் இந்தப் பிரிவின் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன", என்று அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.



1973 நவம்பர் 19] [திரு. கே. டி. கே. தங்கமணி]

எனக்கு தோன்றியிருக்கும் ஐயப்பாடு என்னவென்றால், அன்றைக்கு 1,922 மிலியன் யூனிட்டுகள் நமக்குக் கிடைத்ததே இப்பொழுது இந்த ஆண்டில், 1973-74 இல் அல்லது 1972-73 இல் அந்த அளவிற்கு நமக்குக் கிடைத்ததா அல்லது குறைவாகக் கிடைத்ததா என்று அறிய விரும்புகிறேன். காரணம் என்னவென்றால், இரண்டாண்டுகளுக்கு முன்பு நாங்கள் அங்கே சென்றபொழுது அவர்கள் என்ன சொன்னார்கள் என்றால், நெய்வேலியில் உற்பத்தி செய்யும் மின் சாரத்தை எந்த அளவிற்கு தமிழக அரசுக்கு சப்ளை செய்வோம் என்று சொன்னோமோ அதையெல்லாம் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டோம், அவர்கள், உற்பத்திச் செலவு ஜாஸ்தியாக இருக்கிறது, கேரளம், மைசூரிலிருந்து குறைந்த அளவிற்குக் கிடைப்பதால் பரிபூர்ணமாகத் தேவையில்லை என்று சொல்லிவிட்டார்கள். ஆகவே, அதிகமாக உற்பத்தி செய்வதில் சிரமம் இருக்கிறது என்று சொன்னார்கள். எனவே, 1,922 மிலியன் யூனிட்டுகள் இந்த ஆண்டும் கிடைத்ததா அல்லது அதிக அளவில் கிடைத்ததா என்று தெரிய வேண்டும்.

அதைப்போல அடுத்து, "நெய்வேலி மற்றும் பிற ஆதாரங்களிலிருந்து வாங்கப்பட்ட மின் சக்தியின் அளவு மாநிலத்தில் உற்பத்தி செய்யப்படும் மின் சக்தியின் அளவில் 36 சதவிகிதமாகும். மேலே குறிப்பிட்ட வாங்கப்படும் மின் சக்தியையும் சேர்த்து உற்பத்தி செய்யப்பட்ட மின் சக்தியின் தின சராசரி அளவு 18.6 மிலியன் யூனிட்டுகளாகும். கடந்த ஆண்டு உற்பத்தியைவிட இது 10.1 சதவிகிதம் அதிகமாகும் என்று விவரங்களைக் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, நாம் நெய்வேலியைக் கேட்கும்பொழுது இன்னும் மின்சார உற்பத்தி அதிகமாகும், அப்படி அதிகமாகும் நேரத்தில் முழு மின்சாரத்தையும் நாம் பெறுவோம். அதிலே ஒரு யூனிட்டிற்கு 10 பைசாகூட ஆகலாம். ஏனென்றால் பி. எச். பாபா அவர்கள் சொன்னதாக இந்த வருஷத்திலே நம்முடைய கவர்னர் அவர்கள், 'No power is costlier than no power' என்று சொன்னார்கள். பவர் இல்லாமல் இருக்கும் நேரத்தில், பண நஷ்டத்தைப் பார்க்காமல், பவருக்கு எவ்வளவு அதிகமாகச் செலவழித்தாலும் பரவா யில்லை. ஒரு யூனிட்டிற்கு 10 பைசா, 15 பைசா, ஏன் 20 பைசாகூடக் கொடுக்க வேண்டியிருக்கும். அப்படிக் கொடுத்தாலும் பரவாயில்லை, அதனால் தமிழகத்திலே தொழில் வளர்ச்சி அடையும். அனல் மின் நிலையத்தையும் விற்கக்கூடிய போக்கு இருந்த காரணத்தால் நான் இதைச் சொல்கிறேன்.

இப்பொழுது எண்ணூரிலே நமக்கு உற்பத்தி பாதிக்கப்படவில்லை என்று சொன்னார்கள். அது பாதிக்கப்பட வில்லையா? எண்ணூரிலே பரிபூரணமாக நடக்கிறதா என்று தெரிய வேண்டும், மத்திய அரசை வற்புறுத்துவதிலே

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1973 நவம்பர் 19

நாங்களும் உங்களோடு சேர்ந்திருக்கிறோம். குறிப்பாக மேட்டூர், தூத்துக்குடி சம்பந்தமாக ஆமை வேகத்திலே போகிறது. தூத்துக்குடியிலே 73 கோடி ரூபாய்க்கான திட்டம் 1977-78, 1978-79 இல் எப்படியாவது கமிஷன் பண்ணி விடுவோம் என்று சொல்லப்படுகிறது. அந்த அளவிற்கு அதை நீடிக்க வேண்டுமா? இதற்காகச் சில சாமான்கள் வாங்குவதற்காக 1973-74 இல் 4 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தால் என்ன அர்த்தம்? 4 கோடி என்பது 10 கோடியானால் தீவிரமாக இருக்கிறது என்று அர்த்தம். இப்படி தூத்துக்குடி, மேட்டூர் திட்டங்களில் குறைந்ததற்கு என்ன காரணம்? அதற்கு நாம் காரணமா அல்லது மத்திய சர்க்கார் காரணமா என்று தெரிய வேண்டும். அனல் மின் நிலையத்தை விரைவில் ஆரம்பிக்க வேண்டுமென்பதில் அரசியல் வேறுபாடு இருக்காது. ஏன் துரிதமாக்கப் போகவில்லை, என்ன குறை என்று சொல்லியாக வேண்டும். மின்சார பவர் பற்றிய விவாதமாக இருந்தாலும், We must tone up and see that there is maximised production கோதையாறு, இன்னும் மற்ற இடங்களில் பல கோளாறுகள் இருப்பதாகச் சொல்லப்பட்டது. ஆகவே, நம்முடைய சக்தி முழுவதையும் பயன்படுத்தும் வகையில் மின்சார உற்பத்தியைப் பெருக்க வேண்டும்.

நெய்வேலியைப் பொறுத்தவரையில் மின்சாரம் பிரதானமாக இருந்தாலும், இந்தத் தீர்மானத்திலே 2-வது சுரங்கத்தைப்பற்றியும் இருக்கிறது. ஏற்கெனவே இருந்த கமிட்டி நல்ல முறையிலே செயல்படுத்த தமிழக அரசையும் கலந்துகொள்கிறார்களா?

இரண்டாவது சுரங்கத்தை வெட்டுகின்ற நிலையில் முதல் சுரங்கத் திட்டத்திலிருந்து கிடைக்கின்ற பழுப்பு நிலக்கரியின் அளவு தெர்மல் பவருக்கு அதிகப்படியாக ஒதுக்க வேண்டும். 1972-73, 1973-74-ல் நெய்வேலியிலிருந்து மின்சாரம் பெறப்பட்டதன் அளவு என்ன என்ற விவரங்களைக் கொடுக்க வேண்டும். ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நெய்வேலித் திட்டம் பூரணத்துவம் ஆகும் முறையில் எந்த அளவுக்கு அமைகிறதோ அந்த அளவுக்கு தமிழகத்தில் மின்சாரப் பற்றுக்குறை தீரும். அங்கு உற்பத்தியாகிற மின்சாரத்தை மற்ற மாநிலங்களுக்கு சப்ளை செய்ய வேண்டாம், முழுமையும் நாமே எடுத்துக் கொள்ளும் அளவுக்கு வரவேண்டும். மத்திய சர்க்கார் இந்தப் பழுப்பு நிலக்கரியை ஒட்டியிருக்கும் அம்சங்கள் பூராவையும் செயல்படுத்த வேண்டுமென்று வற்புறுத்தி இந்தத் தீர்மானத்தை வரவேற்று என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.



1973 நவம்பர் 19]

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் மின்சார உற்பத்தி பற்றிப் பல கருத்துக்களைச் சொன்னார்கள். மின்சார விவாதம் வரும்போது அவை பற்றி விரிவாகப் பேசலாம். நெய்வேலி பற்றி எழுப்பிய பிரச்சினை பற்றி மட்டும் கூற விரும்புகிறேன். நெய்வேலி அனல் மின்சார நிலையத்தின் தலைவராக புதிதாக ஒருவர் பொறுப்பேற்று பின்னால் மிக நல்ல முறையில் உற்பத்தி பெருக தமிழக அரசோடு ஒத்துழைப்புத் தந்து அவர்களால் முடிந்த அளவுக்கு மின்சாரத்தை உற்பத்தி செய்து நமக்கு மின்சாரத்தைத் தர வேண்டுமென்ற முயற்சியில் அவர்கள் ஈடுபட்டு வருகிறார்கள். அவர்களுக்கு நன்றி கூற நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அங்கிருக்கிற பிரச்சினை இப்போது நடைபெறுகிற முதலாவது நிலக்கரிச் சுரங்கத்தில் உற்பத்திப் பெருக்கத்திற்காக ஏற்கெனவே பயன்படுத்தப்பட்டு வருகிற இயந்திரங்கள் பழுதடைந்திருக்கின்றன, அதற்குப் பதிலாக இயந்திரங்கள் வாங்க 36 கோடி ரூபாய் அதிகம் போட்டால் மேலும் உற்பத்தியை அதிகமாக்க முடியும் என்பது அவர்களுடைய ஒரு கோரிக்கை. இரண்டாவது கோரிக்கை, இரண்டாவது சுரங்கத் திட்டத்தைத் தொடங்க வேண்டுமென்பது.

அவர்கள் உற்பத்தி செய்கிற மின்சாரத்தை நாம் முழுவதும் வாங்கவில்லை என்ற கருத்து சொல்லப்பட்டது. அவர்கள் எவ்வளவு உற்பத்தி செய்தாலும் நாம் வாங்கத் தயாராக இருக்கிறோம். அதிலே எந்தவிதமான ஆட்சேபனையும் கிடையாது. அவர்களோடு நம் அலுவலர்கள் கூடிப் பேசி, எவ்வளவு மின்சாரம் அவர்களால் தரமுடியும் என்ற புள்ளி விவரத்தைப் பெற்று அந்தப் புள்ளி விவரத்தைக் கணக்கில் எடுத்துக் கொண்டுதான் மின்சார விநியோகத்தை முடிவு கட்டுகிறார்கள். அந்த வகையில்தான் 15 சதவிகித மின்சார வெட்டு கூடப் போட்டிருக்கிறோம். அவர்களை அழைத்துப் பேசி, அமைச்சர்களை கலந்து பேசி அவர்கள் தருகிற மின்சாரத்தைக் கணக்கில் எடுத்துக்கொண்டு பிறகுதான் 15 சதவிகித மின்சார வெட்டு என்ற முடிவுக்கு வந்தோம். ஆகவே, அவர்கள் கொடுத்த மின்சாரத்தை வாங்கவில்லை என்று சொன்ன கருத்து சரியல்ல என்று மட்டும் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

சில சமயங்களில் நம்முடைய ஹைடல் பவர் அதிகமாக உற்பத்தி ஆகிற போது அதைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டியிருக்கிறது. ஹைடல் பிராஜக்ட் இரிகேஷன் பிராஜக்டோடு சேர்ந்து செயல்பட வேண்டியிருப்பதால் அந்தச் சந்தர்ப்பத்தில் அவர்களுடைய அனல் மின் உற்பத்தியைக் கொஞ்சம் குறைத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டால் அது "வாங்க மறுப்பதாகாது" என்பதை மட்டும் தெளிவாகச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

[திரு. சே. மாதவன்] [1973 நவம்பர் 19

இந்த அரசு பொறுபேற்ற பின்னுல் அந்த அனல் மின் நிலையத்தில் உற்பத்தியாகிற மின்சாரம் முழுவதும் நமக்குத் தேவை, அத்தனையும் வாங்கிக் கொள்கிறோம், அத்தனையையும் வாங்கத் தயார் என்றுதான் எப்போதும் சொல்லி வருகிறோம். விலையைப் பற்றிப் பேச்சு வார்த்தை நடத்த முடிவு செய்திருக்கிறோமே தவிர, விலையைக் காரணமாக வைத்து அனல் மின்சாரம் வேண்டாம் என்று எப்போதும் சொல்லவில்லை, சொல்லப் போவதும் இல்லை. நெய்வேலி மின் உற்பத்தியில் நாமே அக்கறை காட்டி அவர்கள் தருகிற மின்சாரத்திற்கு விலையை நிர்ணயித்து வாங்குவதற்கு எப்போதும் தயாராக இருக்கிறோம், வாங்கவில்லை என்ற குற்றச்சாட்டு சரியல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**மணலி திரு. சி. கந்தசாமி :** தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பிரேரேபித்திருக்கக்கூடிய தீர்மானத்தை எனது கட்சியின் சார்பாக மனப்பூர்வமாக ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். மின்சாரம் தமிழகத்து வாழ்வின் அச்சாணியாக இருக்கிறது. குறிப்பாக, நெருக்கடி ஏற்பட்டிருக்கக்கூடிய கால கட்டத்தில் எந்த அளவுக்கு தமிழகத்தின் மின்சாரத்தை அதிகமாக உற்பத்தி செய்ய முடியுமோ அந்த அளவுக்கு உற்பத்தி செய்ய வேண்டுமென்ற அடிப்படையில் நெய்வேலி இரண்டாவது சுரங்கத்தை வெட்டி, அதைப் பயன்படுத்தி 1,000 மெ. வா. அனல் மின்சாரத்தை உற்பத்தி செய்ய வேண்டுமென்பது இந்தத் தீர்மானத்தின் நோக்கம். இந்தத் தீர்மானம் மிக முக்கியத்துவம் வாய்ந்தது, தமிழகத்தின் வருங்காலத் தலை விதியை நிர்ணயிக்கக்கூடிய முக்கியமான தீர்மானம்.

இந்தத் தீர்மானத்தை நாம் நிறைவேற்றுவதன் மூலமாக நிச்சயமாக மத்திய சர்க்கார் தமிழகத்தின் தேவையை உணர்ந்து இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவார்கள் என்ற நம்பிக்கையோடு இந்தத் தீர்மானம் இங்கு நிறைவேற்றப்பட இருக்கிறது. மின்சாரம் இல்லையென்றால் வாழ்வே போய்விடும். நெருக்கடி பெரிய கோர உருவத்தில் ஆரம்பமாகி, பொருளாதார நெருக்கடியாக வளர்ந்து, அரசியல் நெருக்கடியாக முற்றி தமிழ்நாட்டின் வாழ்வே குலைந்துவிடும் நிலை ஏற்பட்டுவிடும். ஒருகாலத்தில் போல்ஷ்விக் கட்சிக் கூட்டத்தில் இதனை லெனின் சொன்னர்—'சோஷலிசம் மின்சாரத்தைப் போன்றது' என்றூர். அந்த வகையில் இந்தத் தீர்மானம் மிக முக்கியமான தீர்மானம்; தமிழக மக்கள் இதன் முக்கியத்துவத்தை நிச்சயமாக உணர்வார்கள். இது வெற்றிபெற வேண்டுமென்று விரும்பி இந்தத் தீர்மானத்தை மனப்பூர்வமாக ஆதரிக்கிறேன்.



1973 நவம்பர் 19]

**திரு. இ. எஸ். தியாகராசன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற இந்தத் தீர்மானத்தை எங்கள் கட்சியின் சார்பில் மனப்பூர்வமாக வரவேற்று சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். மின்சாரம் நம் நாட்டுக்கு மிகவும் முக்கியமானது. மின்சாரப் பற்றுக்குறையால் நாட்டு மக்கள் மிகவும் தவிக்கிறூர்கள் என்பதை நாம் அனைவரும் அறிவோம். நெய்வேலியில் இரண்டாவது சுரங்கத் திட்டத்தை நிறைவேற்றி அதிகமான மின் உற்பத்தி செய்ய வேண்டுமென்பதை வற்புறுத்துவதற்காக இந்தத் தீர்மானம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தை ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்து நிறைவேற்றுவதன் மூலம் ஆயிரம் மெகோ வாட் மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியும். இதுபற்றி ம்த்திய அரசை வற்புறுத்தும் வகையில் கொண்டுவரப்பட்டிருக்கிற இந்தத் தீர்மானத்தை ஆதரித்து வரவேற்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, இந்த அவைமுன் வைக்கப்பட்ட மிக முக்கியமான இந்தத் தீர்மானத்தை வரவேற்று, ஆதரித்து அனைத்துக் கட்சியின் சார்பிலும் கருத்துக்கள் வழங்கப்பட்டுள்ளன, இந்தக் கருத்துக்களை வழங்கிய அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும், உறுப்பினர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் தீர்மானத்தை ஒருமித்த கருத்தோடு இந்த அவை நிறைவேற்றுவதோடு, அதனை மத்திய அரசுக்கு உடனடியாக அனுப்பி வைப்பது மாத்திரமல்லாமல், நம்முடைய தமிழக அமைச்சர்களில் ஒருவரான நண்பர் ராஜாராம் அவர்கள் இந்தத் தீர்மானத்தை இன்று மாலையில் எடுத்துக்கொண்டு டில்லி சென்று அங்குள்ள மத்திய அமைச்சர்களைச் சந்தித்து இந்தத் தீர்மானம் செயல் வடிவம் பெறுவதற்கான வழிவகைகளை மேற்கொள்வார்கள் என்பதையும் தெரிவித்து இந்தத் தீர்மானத்தை இந்த அவை முழு மனதோடு, ஒத்த கருத்தோடு நிறைவேற்றித் தரவேண்டுமென்று கூறி அமைகிறனே.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி—

"தமிழகத்தின் பொருளாதார வளர்ச்சி, நாள்தோறும் பெருகிவரும் மின் சக்தி தேவையை நிறைவு செய்யவில்லையெனில் பெரிதும் பாதிக்கப்பட்டுவிடும். தமிழ் நாட்டில் நீர் மின் வாய்ப்புக்கள் முழுவதுமாக பயன்படுத்தப்பட்டுவிட்ட நிலையில், அனல் மின் நிலையங்களை உருவாக்குவது இன்றியமையாததாகும். நிலக்கரி பற்றுக்குறை உள்ளதால் தமிழகத்தில் கிடைக்கும் நெல்வேலி பழுப்பு நிலக்கரியை முழுமையாகப் பயன்படுத்தி அனல் மின் சக்தி உற்பத்தியைப் பெருக்கிடுவது மிகவும் அவசியமாகிறது. எனவே, நெய்வேலி 2 வது சுரங்கத் திட்டத்தையும் 1000 மெகோ வாட் அனல் மின் உற்பத்தித்

திட்டத்தையும் உடனடியாக ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்து நிறைவேற்ற வேண்டுமென்று மத்திய அரசை இந்தப் பேரவை வலியுறுத்திக் கேட்டுக் கொள்ளுகிறது"

[பிற்பகல் 12-30]

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஒருமனதாக நிறைவேற்றப் பட்டது.

### (7) மின் வாரியத்தின் 1973-74-ம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையின் மீதான விவாதம்

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாடு மின்சார வாரியத்தின் 1973-74-ம் ஆண்டு நிதி நிலை அறிக்கையும், 1972-73-ம் ஆண்டு துணை நிதி நிலை அறிக்கையும் இம் மன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ளன. இவற்றை, இம் மன்றம் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென வேண்டுகின்றேன்.

1948-ம் ஆண்டு மின்சார (வழங்கல்) சட்டத்தின் 61-வது பிரிவின்படி, தமிழ் நாடு மின்சார வாரியக் கருத்துரைக் குழுவின் ஒப்புதலைப் பெற்றபின், இந்த நிதி நிலை அறிக்கைகளை, அரசுக்கு தமிழ் நாடு மின்சார வாரியம் அனுப்பியது. ஆண்டு நிதி நிலை அறிக்கையும், துணை நிதி நிலை அறிக்கையும், சட்டமன்றத்தினால் விவாதிக்கப்படலாம் என்றாலும், இவை வாக்கெடுப்புக்கு உட்பட்டவை அல்ல. எனினும், இவ்வறிக்கைகள் குறித்து சட்டமன்றத்தில் கூறப்படும் கருத்துக்களை, மின்சார வாரியம் ஆழ்ந்து சிந்தித்து ஆவன செய்யும். கடந்த ஆண்டு மின்சார வாரியத்தின் நிதி நிலை அறிக்கைகளின் பேரில் நடந்த விவாதத்தில் எடுத்துக் கூறப்பட்ட கருத்துக்களின் பேரில், மின்சார வாரியம் எடுத்துள்ள நடவடிக்கைகளை விவரிக்கும் அறிக்கை ஒன்று மாண்புமிகு உறுப்பினர்களுக்கு தனியாக அனுப்பப்பட்டுள்ளது.

பொருளாதார வளர்ச்சிக்கு இன்றியமையாத அடித் தளமாகத் திகழ்கிறது மின்சாரம். மனித வாழ்வின் எல்லா அம்சங்களிலும் மின்சாரம் தேவைப்படுகிறது. தொடர்ந்து ஏற்பட்டு வரும் வளர்ச்சிக்கு, குறிப்பாக, தொழில் துறையிலும் வேளாண்மைத் துறையிலும் காணப்படும் வளர்ச்சிக்கு உறுதுணையாக மின்சக்தியும் வளர்ச்சி பெற்று இருக்கவேண்டும் என்பதிலே இந்த அரசு மிகுந்த அக்கறை எடுத்துக் கொண்டுள்ளது.

பதினேழு நீர் மின் உற்பத்தி நிலையங்களின் 1,224 மெகாவாட்டுகளும், நெய்வேலி அனல் மின் நிலையத்தின் 600 மெகாவாட்டுகளையும் சேர்த்து, எண்ணூர், பேசின் பிரிட்ச் ஆகிய இரு அனல் மின் நிலையங்களின் 430 மெகாவாட்டுகளையும்





உள்ளடக்கி, தமிழ் நாடு மின் இணைப்பின் இன்றைய நிறுவனத் திறன் 2,254 மெகாவாட்டுகளாகும். 1951-ல் இருந்த நிறுவனத் திறனைவிட இது 14.45 மடங்கு அதிகமானதாகும். பாசனத்துடன் தொடர்பு கொண்டுள்ள நிலையங்கள் கோடை மாதங்களில் மூடப்படும் பொழுது, சேமிப்புகளையும் சேர்த்து, தேவைப்படும் சுமார் 2,010 மெகாவாட்டுக்கு எதிராக உற்பத்தித் திறன் 1,371 மெகாவாட்டாக இருக்கும். கட்டுப்படுத்த முடியாத நிலையில் உள்ள எதிர்பார்க்கப்படுகிற 1,675 மெகாவாட்டு உச்சத் தேவையைச் சமாளிக்க வேண்டியுள்ளது. ஆகவே நடப்பாண்டில் உச்சத் தேவையைச் சமாளிக்க, மின் உற்பத்தித் திறனில் ஏற்படுகின்ற பற்றாக்குறை 639 மெகாவாட்டுகளாக இருக்கும்.

சென்ற ஆண்டு நவம்பரில், இந்த மாமன்றத்தின் முன்னால் நிதி நிலை அறிக்கையானது விவாதத்திற்கு வைக்கப்பட்டபொழுது, 25 சதவிகித மின் வெட்டானது அமுலிலிருந்தது. அதைத் தொடர்ந்து மிக நெருக்கடியான ஒரு நிலை ஏற்பட்டு, 75 சதவிகித வெட்டு அமுல்படுத்தப்பட்டது. இப்படிப்பட்ட ஒரு நிலை உருவாக முக்கிய காரணங்கள் யாவை என்பதையெல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் மறந்திருக்க மாட்டார்கள். தமிழ் நாட்டில் மட்டுமல்ல, அண்டை மாநிலங்களான கேரளம், கர்நாடகம், ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களிலும் தென்மேற்கு பருவமழை பொய்த்து விட்டது. நெய்வேலியிலிருந்து கிடைக்கும் மின்சாரத்தின் அளவும் குறைந்துவிட்டது. தொடர்ந்து மின்சாரத்தின் தேவை பெருகிக்கொண்டே போவதினால், வெளியிலிருந்து கணிசமான அளவுக்கு உதவியினையும் நாம் பெற முடியாமல் போய்விட்டது. இந்த மின் நெருக்கடி தமிழகத்தில் மட்டும் ஏற்படவில்லை. மத்தியப் பிரதேசம் தவிர, நாடு பூராவுமே இந்த நெருக்கடியான நிலை ஏற்பட்டது என்பதையும் உறுப்பினர்கள் அறிவார்கள்.

மிக நெருக்கடியான மின்வெட்டு இருந்தபொழுது, வாரியத்தின் அனல் மின் நிலையங்களில் மின் உற்பத்தியை எவ்வளவு பெருக்க முடியுமோ அந்த அளவுக்குப் பெருக்குவதற்காக மின்சார வாரியமும், அரசும் இயன்ற எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொண்டன. 1973-ம் ஆண்டின் மிக நெருக்கடியான கோடை மாதங்களில் நெய்வேலி அனல் மின் நிலையத்தின் மின் உற்பத்தியானது கணிசமான அளவுக்கு உயர்த்தப்பட்டது. வாரியமும் அரசும் கேட்டுக்கொண்டதன் பேரில், நெய்வேலி நிலக்கரிக் கழகத்தின் நிலக்கரித் தூளிலான செங்கல் பாளங்கள் தயாரிக்கும் நிலையத்தையும், உரம் உற்பத்தி நிலையத்தையும் மூடிவிடுவதன் மூலமாக, நெய்வேலி நிலக்கரிக் கழகமானது அதிக அளவுக்கு மின்சாரத்தை நமக்குத் தந்தது. நெய்வேலியில் இரண்டு யூனிட்டுகளில் எண்ணெய் மூலமாக எரியவிட்டு மின் உற்பத்தி செய்யவும் நெய்வேலி நிலக்கரிக் கழகம் ஒத்துக்கொண்டது, இதன் விளைவாக, 1974-ம் ஆண்டின் முதல் இரண்டு காலா

ஆண்டுகளில் கூடுதல் மின்சாரம் கிடைக்க ஏதுவாகும். இந்த மாற்றத்தினால் கிடைக்கப்பெறும் மின் உற்பத்திக்காகும் அதிகப்படியான செலவினை தமிழ் நாடு மின்வாரியம் ஏற்றுக்கொள்ளும். பண்டமாற்று முறையில் மற்ற மாநிலங்களிலிருந்தும் கூடுதலாக மின்சாரம் பெறப்பட்டது. சிமெண்ட், நூல், டயர் ஆகியவற்றிற்குப் பதிலாக கேரளத்திலிருந்தும், டயருக்குப் பதிலாக கர்நாடகத்திலிருந்தும், சிமெண்ட், துணி பொறி வண்டியின் அடிச் சட்டங்களுக்குப் ( chassis ) பதிலாக மகாராஷ்டிரத்திலிருந்தும் மின்சாரம் பெறப்பட்டது. இந்த ஏற்பாடுகளின் விளைவாக, 1973 மார்ச்-ஏப்ரலிலிருந்து தொடர்ந்து ஜூலை 1973 வரையிலும் ஒரு நாளைக்கு சுமார் 5 இலட்சம் யூனிட்டுகள் என்ற அளவுக்கு மின்சாரம் பெறப்பட்டது. மகாராஷ்டிரம் மட்டும் 1972 மே திங்கள் முடிவில் தன் சப்ளையை நிறுத்திக்கொண்டது.

இந்த ஆண்டு தென்மேற்கு பருவமழை வலுப்பெற்று, அதன் விளைவாக, நீர் மின் தேக்கங்களின் நீர்க் கொள்ளளவு நிறைவான முறையில் இருந்தது. இதனால் சிறு தொழில்களுக்கான 75 சத விகித மின்வெட்டினை, 1973 ஜூலைத் திங்களில் 50 சத விகிதமாகக் குறைக்க நம்மால் முடிந்தது. அத்துடன், பாதுகாப்புச் சம்பந்தமான தொழில்கள், சிமெண்ட், துணி ஆலைகள் போன்ற குறிப்பிடத்தக்க பெரிய முக்கிய தொழில்களுக்கும், எண்ணெய் ஆலைகள், அரிசி மாவு ஆலைகளுக்கும் கணிசமான அளவுக்கு உதவி செய்யமுடிந்தது. வாரியத்தின் அனல் மின் நிலையங்களிலும், நெய்வேலி அனல் மின் நிலையத்திலும் மின் உற்பத்தியானது பெருகியது; நீர்த் தேக்கங்களில் நீரின் கொள்ளளவு நிறைவு அளிக்கும் வகையில் இருக்கவே, எல்லாப் பயனீட்டாளர்கள்மேல் விதிக்கப்பட்டிருந்த மின் வெட்டானது 1973 ஜூலை 17 முதல் அறவே எடுக்கப்பட்டது.

1972-73-ல் மின் சக்தியின் உச்சத் தேவையானது 1,190 மெகாவாட்டை எட்டியது. 1971-72-ல் பதிவான உச்சத் தேவையான 1,326 மெகாவாட்டைவிட இது 10.2 சத விகிதம் குறைவு. இந்தச் சமயத்தில் பல்வேறு கட்டுப்பாடுகள் மட்டும் விதிக்கப்படாமலிருந்தால், 1972-73-ன் உச்சத் தேவையானது பதிவான உச்சத் தேவையைவிட நிச்சயம் அதிகமாக இருந்திருக்கும். 1960-61-லிருந்து 1971-72-ம் ஆண்டு வரை உள்ள காலத்தில் இருந்த விகித சராசரி உயர்வு உச்சத் தேவை 12.2 சத விகிதமும், பயன்படுத்தப்பட்ட மின்சார அளவின் உயர்வு 10.7 சத விகிதமும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் குறிப்பிடுவது பொருந்தமுடையதாக இருக்கும் என நினைக்கிறேன். இந்த உயர்வினைக் கணக்கில் கொண்டு பார்த்தால், 1972-73-ம் ஆண்டுக்கு கட்டுப்படுத்த முடியாத தேவையானது 7,500 மிலியன் யூனிட்டுகள், 1,480 மெகாவாட்டுகளாக இருந்திருக்க வேண்டும். 1972-73-ல் மின் இணைப்பில் பயன்படுத்தப்பட்ட மின்சாரத்தின் அளவு 6,964 மிலியன் யூனிட்டுகளாகும்.



1973 ஜூன் திங்களிலிருந்து 1974 மே திங்கள் வரையிலான காலத்திற்கு நிலைமையானது ஆய்வு செய்யப்பட்டபோது, தென்மேற்கு பருவ மழை அனுகூலமாக இருந்தது என்றாலும், மின்சக்தி உற்பத்தி குறைந்துள்ளது என்பது தெரியவந்தது. இருந்தாலும், பாசனத்துடன் இணைக்கப்பட்டுள்ள நீர் மின் நிலையங்கள் முழு அளவில் இயங்கி வந்த படியாலும், இரவு நேரங்களில் கர்நாடகத்தில் கொஞ்சம் மின்சாரத்தை நாம் சேமித்து வைக்க முடிந்தபடியாலும், செப்டம்பர் 1972 வரை எந்தவிதமான கட்டுப்பாடுகளும் விதிக்கப்படவில்லை. கடந்த 5 ஆண்டுகளின் சராசரி அளவினை விட செப்டம்பரில் நீர்க் கொள்ளளவு குறைவாகி விட்டது. அடுத்த தென்மேற்குப் பருவ மழைக்காலம் வரையில் கிடைக்கின்ற நீரினைத் தேக்கி வைத்துக் கொள்ள வேண்டும். அத்துடன், நெய்வேலி நிலக்கரிக் கழகத்திலிருந்து கிடைக்கின்ற மின்சாரத்தின் அளவு குறைந்து விட்டது. 1973 ஜூலை 31-ம் நாளன்று ஏற்பட்ட தீ விபத்தினால் எண்ணூரில் உள்ள 110 மெகாவாட் நான்காவது பிரிவு ஓடவில்லை. அத்துடன் நாட்டின் பொருளாதாரத்தை முழுமையான அளவில் கருத்தில் கொண்டு, 1972 அக்டோபரிலிருந்து மின்சப்ளை வேண்டும் என்று காத்துக் கொண்டிருப்பவர்களுக்கு சப்ளை வழங்கப்பட வேண்டியது அவசியம் என அரசு கருதியது.

முக்கியமாகத் தொழில் வளர்ச்சியும், வேளாண்மைத் துறையில் வளர்ச்சியும் தடைபடாமல் தொடர்ந்து இருப்பதற்காக வேண்டி, 1973-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 1-ம் நாள் முதல் குறைந்த அளவில் 15 சதவிகித மின் வெட்டானது விதிக்கப்பட்டது. மின் வெட்டு விதிக்கப்பட்ட பொழுது நமது நீர்த் தேக்கங்களில் இருந்த நீர்க் கொள்ளளவு 1971-ல் எந்த நிலையில் இருந்ததோ அதே அளவினதாகத்தான் இருந்தது. ஆனால், ஒவ்வொரு ஆண்டும் 10 சதவிகித உயர்வு என்று எடுத்துக்கொண்டு, இவ்வாண்டு எதிர் பார்க்கப்படுகிற மின்சாரத்தின் தேவையோ 1971-ம் ஆண்டில் இருந்ததை விட சுமார் 21 சதவிகிதம் அதிகமாக இருக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. மின் வெட்டு உள்ள காலத்திலும் புதிய மின் தொடர்புகள் கொடுக்கப் படுகின்றன. அப்படிக் கொடுப்பது இதுதான் முதல் தடவையாகும். வடகிழக்கு பருவ மழை ஏமாற்றம் அளிக்காமல் வழக்கம்போல் இருந்து அதனால் 1971-ல் இருந்தது போல நீர்த் தேக்கங்களில் நிறைவு தரும் வகையில் நீர்க் கொள்ளளவு இருக்கும் என வைத்துக்கொண்டாலும், எண்ணூரில் நான்காவது யூனிட் சீக்கிரமே செயல்பட்டாலும், கேரளத்திலிருந்து 300 மிலியன் யூனிட் மின்சாரம் கிடைத்தாலும், அத்துடன் எண்ணூர், பேசின் பிரிட்ஜ் அனல் மின் நிலையங்கள் திருப்திகரமான நிலையில் இயங்கினாலும், இத்தனை இருந்தும், அக்டோபர் 1973 முதல் 1973 மே வரையிலான காலத்திற்கு 536 மிலியன் யூனிட்டுகள் பற்றாக்குறை இருக்கும் என்பதால், இந்த 15 சதவிகித மின் வெட்டு விதிக்கப்பட்டதற்கான காரணங்கள் நியாயமானவையேயாகும் எனத் தெளிவாகப் புரிந்துகொள்ளலாம்.

[திரு. ஓ. பி. இராமன்] [1973 நவம்பர் 19

1973 டிசம்பர் மத்தியில் மின் நிலையை பரிசீலித்துப் பார்த்து, எதிர்பார்ப்பதை விட நிலைமைகள் திருப்திகரமானதாக இருப்பதாகத் தெரிந்தால், கட்டுப்பாடுகள் தளர்த்தப்படும்.

கேரளம், ஆந்திரப் பிரதேசம், மற்ற மாநிலங்களிலிருந்தும் மின்சாரத்தைப் பெற சிறப்பு ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகின்றன. இருபது சதவிகித மின் வெட்டு தொடர்ந்து கர்நாடக மாநிலத்தில் உள்ளதால், எந்த வித உதவியையும் அளிக்கத் தன்னால் இயலாது என்று கூறி விட்டது. கொத்தகூடம் 3-வது நிலை 110 மேகாவாட்யூனிட் நிலையானதும், ஆந்திரப் பிரதேசத்திலிருந்து எவ்வளவு மின்சாரம் பெற முடியுமோ அதைப் பெற நாம் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறோம். 1974 மே வரை 300 மிலியன் யூனிட்டுகள் பெறுகின்ற வகையில் நவம்பர் 1973-ல் கேரளத்துடன் நாம் ஓர் உடன்பாட்டுக்கு வந்துள்ளோம், ஆந்திரப் பிரதேசம், கேரள மாநிலங்கள் பண்டமாற்று முறையில் நமக்கு மின்சாரம் வழங்க உறுதி அளித்துள்ளன. டயர்களுக்குப் பதிலாக 45,000 யூனிட்டுகள் தர ஆந்திரப் பிரதேசமும், இந்தப் பருவக் காலத்தில் கேரளத்திற்குத் தேவையான சிமெண்ட், நூல், டயர்கள், பொறி வண்டியின் அடித்தளங்களின் கூடுதல் உற்பத்திக்குத் தேவையான மின்சாரத்தினை முழுமையாகத்தர கேரளாவும் உறுதி அளித்துள்ளன. இரண்டு அரசுகளையும் மின்வாரியங்களையும் சேர்ந்த அதிகாரிகளினால் இதற்கான விவரங்கள் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.

1973-ம் ஆண்டு ஜூலை திங்கள் 31-ம் நாள் அன்று எண்ணூரில் உள்ள அனல் மின் நிலையத்தில் ஏற்பட்ட தீ விபத்தின் காரணமாக நான்காவது யூனிட்டின் மின் மாற்றி பழுதடைந்து மின்சார உற்பத்தி தடைப்பட்டது. மூன்றாவது யூனிட்டின் மின் மாற்றியின் புஷ்ஷிங்குகளையும் சோதனை செய்துதான் மறுபடி இயங்கவேண்டும் என்பதனால், இந்த யூனிட்டிலும் ஓரளவு தாமதம் ஏற்பட்டது. தீ விபத்தின் காரணங்களை அறிந்து அவற்றைத் தவிர்க்க, திரு. மகாலிங்கம் அவர்களின் தலைமையில் இன்னும் இரண்டு நிபுணர்களைக் கொண்ட குழு ஒன்றை அரசு நியமித்தது. குழுவின் அறிக்கை வரப்பெற்று, அதன் ஆலோசனைகளை நடைமுறைக்குக் கொண்டுவரவும், அவர்கள் கண்டறிந்த குறைகளுக்குப் பொறுப்பானவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும் மின் வாரியம் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது. போபாலில் உள்ள ஹெவி எலக்டிரிகல்ஸ் (இந்தியா) லிமிடெட் நிறுவனத்தின்மூலம் சேதமடைந்துபோன மின் மாற்றியை பழுது பார்த்து சரி செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. 1974 முதல் கால் ஆண்டில் இந்தப் பொறி மறுபடியும் இயங்குகின்ற நிலையில் தயாராகிவிடும் என எதிர்பார்க்கலாம். எண்ணூர் அனல் மின் நிலையத்தில்; கடல் நீரினை உப்பங்கழிக்குள் செல்லவிடாமல் தடுத்துவிடுகின்ற முறையில் மணல்



1973 நவம்பர் 19] [திரு. ஓ. பி. இராமன்]

தடுப்பு ஏற்பட்டு அதனால் ஏற்படும் சிரமங்களைப் பற்றி என்னுடைய கடந்த ஆண்டு வரவு-செலவுத் திட்ட உரையில் நான் குறிப்பிட்டிருந்தது மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நினைவிருக்கலாம். அங்கு நிறுவப்பட்டுள்ள இரண்டு மணல் ஏற்றுக்குழாய்களில் சில கருவி மாற்றங்கள் செய்வதன் மூலம் மணலை ஓரளவு எடுப்பதற்கான ஏற்பாடுகள் முன்பே செய்யப்பட்டுள்ளன. இந்த மணல் தடுப்பினை நீக்கத் தகுந்த டிரெட்ஜர் கருவி ஒன்றினை வாங்குவதற்காக வேண்டி, ஐரோப்பாவுக்கும், இங்கிலாந்து நாட்டுக்கும் மின் வாரியத் தலைவரும் வாரியத்தின் சம்பந்தப்பட்ட தலைமைப் பொறியாளரும் '1973 ஆகஸ்டில் அனுப்பப்பட்டனர் என்பதைக் குறிப்பிட விழைகிறேன். இந்த முயற்சிகளின் விளைவாக, ஹாலந்து நாட்டிலிருந்து சுமார் 70 இலட்சம் ரூபாய் விலை மதிப்புள்ள ஒரு டிரெட்ஜர் கருவியினை வாங்குவதற்கான பேச்சு வார்த்தைகள் இறுதி வடிவம் பெற்று வருகின்றன. இந்தக் கருவி வாங்குவதின் மூலம், எண்ணூரில் உள்ள மணல் தடுப்புப் பிரச்னை அறவே போக்கப்பட்டு விடலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த உரையை முழுமையாகப் படிப்பது என்றால் அதிக நேரம் ஆகும் என்பதால் முக்கியமானவற்றை மட்டும் படிக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த உரையை @ முழுமையாகப் படித்ததாக ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மின் வாரியம் கடந்த ஆண்டில் தன்னுடைய பணியாளர்கட்கு மனமுவந்து வழங்கியுள்ள சலுகைகளைக் கோடிட்டுக் காட்ட விழைகிறேன்.

(1) 1972-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31-ம் நாள் அன்று நான்கு ஆண்டுக் காலம் பணியில் இருந்து வந்துள்ள தற்காலிக தினக் கூலி வேலையாட்களின் பணிகளை ஒழுங்குபடுத்தி சனவரி 1973-ல் வாரியம் ஆணை பிறப்பித்தது. இவ்வாணையின்படி, 1973-ம் ஆண்டு சனவரி திங்கள் 1-ம் நாள் முதல் சுமார் 9,000 தற்காலிக தினக்கூலி வேலையாட்கள் முறையான பணி அமைப்பில் சேர்த்துக் கொள்ளப்படும் சலுகையை அடைந்துள்ளனர். 1973 மார்ச் திங்கள் 31-ம் நாள் அன்றைய நிலவரப்படி, வாரியத்தின்கீழ் பணியாற்றும் தற்காலிக தினக்கூலி வேலையாட்கள் 29,923 பேர் ஆகும். அவர்களுடைய பணிகளை படிப்படியாக ஒழுங்குபடுத்துவதை, தேவை அடிப்படையை ஒட்டி, வாரியம் நிறைவேற்றி வைக்கும்.

(1) (அ) 1971-ஆம் ஆண்டு கடைசியாக உயர்வு அளிக்கப்பட்ட தேதியிலிருந்து ஓராண்டுப் பணிக்குப் பிறகு, 1972-ல் 25 பைசா அவர்களுடைய ஊதியத்தில் அதிகமாக தற்காலிக தினக்கூலி வேலையாட்களுக்கு கொடுக்கப்

---

@ 125-149-ம் பக்கங்களில் இணைப்பு 4-ஆக அச்சிடப்பட்டுள்ளது.

பட்டுள்ளது. 1972-ம் ஆண்டு கடைசியாக ஊதிய உயர்வு அளிக்கப்பட்ட தேதியிலிருந்து மேலும் ஓராண்டுப் பணிக்குப் பிறகு அவர்களுக்கு அவர்களுடைய ஊதியத்தில் மேலும் 25 பைசா கூடுதலாக கொடுக்கப்பட்டுள்ளது.

(2) வாரியத்தின் எல்லா இடங்களிலும் உள்ள ரூ. 65--3--95--4--115--5--125 என்ற சம்பள விகிதத்தில் உள்ள லஸ்கர்கள் கிரேட் II மஸ்தூர்கள் ஆகியோர்களின் பதவி இடங்கள், 1973-ஆம் ஆண்டு சனவரி திங்கள் 1-ஆம் நாள் முதல் ரூ. 84--4--120--5--150 என்ற சம்பள விகிதத்தில் 'ஹெல்பர்' களாகவும், கிளீனர்கள் கிரேட் II கிளீனர்கள் கிரேட் I ஆகவும் அதே அதிக சம்பளத்திற்கு உயர்த்தப்பட்டுள்ளனர்.

(3) வீட்டு வாடகைப்படி.—அரசு அளிப்பது போலவே அதே விகிதத்தில் தங்களுக்கும் வீட்டு வாடகைப்படி அளிக்கப்படல் வேண்டும் என்று வாரியத்தின் பணியாளர்கள் கேட்டுக்கொண்டு வந்துள்ளனர். மேற்சொன்ன கோரிக்கையை வாரியம் கனிவுடன் பரிசீலித்து, 1973-ஆம் ஆண்டு சனவரி திங்கள் 1-ஆம் நாள் முதல், கூடுதல் வீட்டு வாடகைப்படி அளிக்க உத்தரவிட்டது. 1973-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ஆம் நாள் முதல் மேலும் அதை உயர்த்தியது. சென்னை நகர எல்லைக்கு 32 கிலோ மீட்டர்களுக்குள் உள்ள பணியாளர்கட்கும், மதுரை, கோயமுத்தூர் நகரங்களைச் சுற்றி 16 கிலோ மீட்டர்களுக்குள் உள்ளவர்களுக்கும், சென்னை, மதுரை, கோயமுத்தூர் நகரங்களுக்கு மாநில அரசு ஊழியர்களுக்கு என்ன வீட்டு வாடகைப்படி அளிக்கப்படுகிறதோ, அதே அளவு வீட்டு வாடகைப்படி வாரியத்தின் பணியாளர்களுக்கும் வழங்கப்பட்டிருக்கிறது.

(4) அகவிலைப்படி.—மாதம் ரூ. 750 வரையில் சம்பளம் பெறும் எல்லாப் பணியாளர்களுக்கும் 1972-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ஆம் நாள் முதல் ரூ. 4.50 அகவிலைப்படியில் உயர்த்தப்பட்டது. 1973-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ஆம் நாள் முதல் மேலும் அது ரூ. 9.00 கூடுதலாக உயர்த்தப்பட்டது.

(5) 1971-72-ஆம் ஆண்டுக்கு பணியாளர்களின் சம்பளம், அகவிலைப்படியில் 8-1/3 சதவிகிதம், பூரிப்புத் தொகையாக 1972 நவம்பர் திங்களில் கொடுக்கப்பட்டது.

(6) 1972 நவம்பரில் இளநிலைப் பொறியாளர்கள் II -வது பணிப் பிரிவு (Class II Status Gazetted) நிலைக்கு உயர்த்தப்பட்டனர். அவர்களைப் போலவே மேற்பார்வையாளர்கள் கிரேட் I (மின்சாரம், பொறியியல், கட்டடவியல்), மார்ச் 1973-ல் II-வது பணிப் பிரிவுக்கு உயர்த்தப்பட்டனர்.



(7) வாரியப் பணியாளர்களின் குடும்பத் திருமணங்களுக்கு ரூ. 2,000 விதம் 1972-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 14-ஆம் தேதியிலிருந்து கடன் கொடுக்கப்பட்டு வருகிறது.

(8) இடைநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி, கல்லூரிகளில் படிக்கும் தங்களுடைய குழந்தைகளின் சிறப்புத் தொகை, புத்தகங்கள் வாங்குதல் போன்ற செலவுகளுக்காக, இரண்டாண்டுப் பணியில் இருந்து, மாதம் 500 ரூபாய்க்குக் கீழ் அடிப்படைச் சம்பளம் உள்ளவர்களுக்கு, வட்டியில்லா முன்பணமாக ரூ. 100 அளிக்கப்படுகிறது.

(9) விநியோகப் பிரிவில் உள்ள லைன்மேன், ஒயர்மேன் ஆகியோர்கட்கு வழங்கப்படும் சைக்கிள்படியானது, ரூ. 4-லிருந்து ரூ. 6-க்கு உயர்த்தப்பட்டுள்ளது. விநியோகப் பிரிவில் உள்ள ஹெல்பர்களுக்கும் இப்பொழுது இச் சலுகை வழங்கப்படுகிறது.

(10) துணைப் பண்டகசாலைகளில் பணியாற்றும் பண்டகசாலைப் பணியாளர்களின் வேலைச் சுமை அளவு (work load) நிர்ணயிக்கப்பட்டு கூடுதல் பணியாளர் இடங்களுக்கு (additional staff) அனுமதி வழங்குவது குறித்து சங்கத்துடன் ஓர் உடன்பாடு பெறப்பட்டது. இதனால் பண்டகசாலைப் பணியாளர்கள் பதவி உயர்வுக்கான சாத்தியக் கூறுகள் அதிகம் ஏற்படும்.

(11) பணியாட்களின் மனமகிழ் மன்றங்களுக்கு கட்டுப்பாடுகளை தளர்த்தி தொடர் மானியங்களும், தொடரா மானியங்களும் அளிப்பதின் மூலமாக, வாரியமானது தன்னுடைய பணியாளர்களின் விளையாட்டு வசதிகளை (recreation facilities) ஊக்குவித்து வருகிறது.

(12) வேலையாள் கல்வித் திட்டத்தின்கீழ், வேலையாட்களுக்கு கல்வி அளிப்பதைப் பெருக்குவதில் வாரியம் தொடர்ந்து அக்கறை காட்டி வருகிறது. யூனிட் அளவு வகுப்புகளில் அதிகமான அளவில் வேலையாள்-ஆசிரியர் பயிற்சியாளர்கள் உள்ளார்கள் என்பதற்காகவும், வேலையாள் கல்வி பெறுவதிலும், வாரியமானது முதல் பரிசினையும் கேடயத்தையும் ஈட்டியுள்ளது.

வாரியத்தின் பணிகள் பெருகிக் கொண்டே போகின்றன. பணிகள் உடனுக்குடன் கவனிக்கப்பட்டு வேகமாகச் செயல்படுத்தப்பட வேண்டும்; இதைக் கருத்தில் கொண்டு உயர் மட்டத்தில், நிர்வாக அமைப்பு முறையை வாரியம் திருத்தி அமைத்துள்ளது.

நிர்வாகம்-பணி அமைப்பு கணக்குகள் குறித்து எல்லாக் காரியங்களைக் கவனிக்க தலைமை பொறியாளர் (பொது நிர்வாகம்) என்ற பதவியையும், விநியோகம், இயக்கம், பொருள்கள் வாங்குதல்-பண்டகசாலை, திட்டங்கள்-கட்டுமானம் ஆகியவற்றைக் கவனிக்க, தனித்தனியே ஒரு தலைமைப் பொறியாளர் என 5 பதவி இடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

பொதுமக்கள் நலனுக்காக வேண்டி, தனியார் மின் வழங்கு நிறுவனங்களை எடுத்துக் கொள்வது என்ற அரசின் கொள்கைக்கேற்ப, "1973-ம் ஆண்டு தமிழ் நாடு தனியார் மின் வழங்கு நிறுவனங்கள் (கையகப்படுத்துதல்) சட்டம்" என்ற புதிய சட்டம் ஒன்றினை தமிழ் நாடு அரசு நிறைவேற்றியுள்ளது. கீழ்க் கண்ட ஏழு தனியார் மின் நிறுவனங்கள் இன்னும் எடுக்கப்படாமல் உள்ளன :—

(1) கும்பகோணம் மின் நிறுவனம்.

(2) நாகப்பட்டிணம் மின் நிறுவனம்.

(3) செங்கோட்டை மின் நிறுவனம்.

(4) வேலூர் மின் நிறுவனம்.

(5) சேலம்-ஈரோடு மின் நிறுவனம்.

(6) திருநெல்வேலி-தூத்துக்குடி மின் நிறுவனம்.

(7) திருச்சிராப்பள்ளி-ஸ்ரீரங்கம் மின் நிறுவனம்.

புதிய சட்டத்தின் விதிமுறைகளுக்கொப்ப, 1973 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 1 ஆம் நாள் இந்த நிறுவனங்களை அரசு ஏற்கும்.

(திரு. பெ. சௌந்தரபாண்டியன் தலைமை)

மின்சார வாரியத்தை எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள் பற்றியும், அப்பிரச்சினைகளைப் போக்க தேவைப்படுபவை பற்றியும் நான் இந்த உரையில் விவரித்துக் காட்டியுள்ளேன். நிதி நிலை அறிக்கை பற்றி விவாதிக்கும்பொழுது, இந்த மாமன்றமானது தன்னுடைய அறிவுசால் கருத்துக்களையும் ஆலோசனைகளையும் வழங்குமுகத்தான் மின் வாரியம் மேலும் மேலும் பயன் உள்ள முறையில் ஆக்கரீதியாக மக்களுக்குப் பணியாற்ற உறுதுணையாக இருக்கும் என்ற என் நம்பிக்கையைத் தெரிவித்துக் கொண்டு, அவைத் தலைவர் அவர்கட்கும், மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்து, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை கூற விவாதத்தைத் தொடங்கலாம் என்று அவைத் தலைவர் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### 3. நடைமுறைக் கேள்விகள் (தொடர்ச்சி).

### (ஈ) திருமதி த. ந. அனந்தநாயகி அவர்களும் மற்றும் சிலரும் கைதானது குறித்து

DR. H. V. HANDE : Sir, before we go to the next item in the agenda, I want to raise a point of order. We just now understand that Thirumathi T. N. Anandanayaki and a few others have been arrested. It is the normal procedure in this House that when





Members of Assembly are arrested, when the House is in session, immediately the members are informed of it; it is done because we do not know about the happenings outside. Therefore I would like to know whether it is a fact whether hon. Members of this House have been arrested at a time when the House is sitting in session. Normally, it may be argued as a question of privilege also, because when the House is in session, it is very important that members of the Legislative Assembly are allowed the right to participate in the Assembly proceedings. That is the privilege we have got. I would like to know whether it would be proper to arrest Members of this House when the House is in session. There are Hon. Ministers other than Hon. Chief Minister who can give an answer. When the House is in session, why should a Member be arrested? He has a right to come to House. It is said now that outsiders should not come within the precincts of the House when the Assembly is in session and if people come they would be stopped at a particular place.

அந்த ஒரு இடத்தில் தடை உத்தரவு என்பது பொருந்தும். அதைத் தாண்டி வரக்கூடாது.

My point is members can come to the Assembly. No one can bar Members from coming to the House. How can a member, who wanted to come to the Assembly, even if it is to present a memorandum, be prevented from coming to the House? A Member can come with two reasons. He can come to participate in the discussion and give a memorandum to the Hon. Minister. One of the two things is possible. My submission is this. Even in Lok Sabha, when it is in session, members can come and sit in Parliament. Those who want to come, even if they want to give memorandum, they are not prohibited from coming to the House. Those conventions should be followed here also. Tomorrow when I come to Assembly, it is quite possible I may face the same thing. It can be said " it is possible you are going to give memorandum and you cannot go beyond a particular place '. What I want to stress is the rights and privileges of Members should be protected. They should not be prevented like this. Their privileges and rights should not be affected. I would request the Chair to consult the views of not only members and leaders of parties but also those of the Hon. Chief Minister.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பெ. சௌந்தரபாண்டியன்) :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்ன கருத்தினை எடுத்துச் சொல்கிறார்கள் என்பதை இந்த அவையும் புரிந்திருக்கிறது. அவைத் தலைவரும்

புரிந்திருக்கிறார். ஆகவே, எந்த ஒரு உறுப்பினரும் கைது செய்யப்பட்டார் என்றால், அதன் விவரம் முறைப்படி அவைத் தலைவருக்கு வரும். அவைத் தலைவர் அதை அவைக்கு அறிவிப்பார். ஆகவே, இதில் எந்தவிதமான பிரச்னையும் எழவில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (கரவொலி).

மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்களை மின்சார வாரியத்தின் நிதி நிலை அறிக்கையின் மீது விவாதத்தைத் துவங்கி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

### (7) மின் வாரியத்தின் 1973-74-ம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கை மீதான விவாதம்—தொடர்ச்சி.

DR. H. V. HANDE : Hon. Mr. Chairman, I would like to state at the very outset that the rosy picture painted either by the Hon. Chief Minister or the Hon. Minister for Revenue, is far from facts. For, for the past two years or more, under the guidance of our Hon. Minister for Electricity, Mr. O. P. Raman, the Electricity Department has gone progessively from bad to worse and the state of affairs is far from satisfactory. The height of incompetence that is reached in the Electricity Department under the stewardship of the Hon. Minister O. P. Raman is unparallelled in the history of the Electricity Department. That is the point that every one of us must remember before we start any discussion on this subject. In the past two years, almost every department and every section of the Electricity Board has been messed up, has been confused and has been made completely ineffective by our Hon. Chief Minister and the Hon. Minister for Electricity.

Sir, this Department is supposed to be an autonomous body. The very purpose of making it an autonomous body is completely negatived and there is negation of autonomy and everything is ordered from the Electricity Minister's place and Chief Minister's place. That is how things are happening. The introduction of autonomy was only to emphasise the commercial and developmental aspects and minimise, if not totally eradicate, interference. Unfortunately, this particular department has become the cess pool of all sorts of politics and problems have arisen—problem of small projects, problem of major projects, problem of casual labour and such problems. Even the transfer of a labourer, the transfer of a junior assistant from one seat to another, even such problems



most effectively controlled by the Hon. Minister for Electricity from Fort St. George. That is my submission. (Interruption). Let me have my say. I am prepared for a dialogue. This is my charge number one that the Electricity Board has ceased to be an autonomous body.

Charge number two is this. There are frequent transfers and inefficient functioning in the Board. There is none to safeguard the viability of the Board. The Board's constitution itself is peculiar. There is the Chairman. The Chairman may come and go Any surplus I.A.S. Officer is put there. This is not done according to the needs. An I.A.S. man is brought in there who is subjected to expulsion somewhere else and who is surplus and unwanted, and rejected in some other department. For such people the last refuge is this Electricity Board. He is pushed finally into this department.

Again, they make frequent visits to Delhi and one or two trips abroad also at the Board's expense. The so-called inspection by a lay-man Chairman is ineffective. In the few months he remains in the Board, he goes to Delhi and it seems his only job is to fly to Delhi often. Absolutely he has no technical knowledge to do the inspections.

And then, how many times the Board meets? In the last two years, the Board has not met for more than 10 or 15 times. What is the business of the Board? The Board should meet frequently and take decisions after discussion. There is nothing like that there. Everything is decided in Fort St. George, not even by the benign Minister for Electricity, but by somebody else. That is my second charge against this Board.

Then there is the Finances of the Board. That is another story. I have no time. Otherwise, I will relate all the details. This is a profit earning department of the Government and it was started with Rs. 23 crores of capital in July 1957. That has now swelled to a giant position with 500 crores, with disproportionately low revenues very high interest charges even for borrowings from Nationalised Banks and ever increasing operating expenses. Besides, the Board has been put to the shameful necessity of pledging almost its entire assets, sometimes a second loan even

with Nationalised Banks and L.I.C. Then they give electricity to certain other companies and they make profits while these people pledge their assets, and incur continuous losses. Therefore, this has to be properly rectified.

We see the phenomenon of industries consuming 45 per cent of the total power but yielding less than 25 per cent of the total revenue. How is it? All the products produced by these companies are going up four or five times. Yet, the Electricity Board is sitting, looking at things nicely. They are getting only 25 per cent of the revenues. This is another charge I make.

The financial position is deplorable and that has to be attended immediately. What are the causes for this poor finances? One of the causes is the bloated expenditure arising out of the wayward purchases at wayward prices encouraging rings and rackets among suppliers and the unchecked expenditure towards construction and operation and maintenance of works. There is no purchase committee functioning in the Board. Time and again I have been saying this from 1961 onwards. They simply purchase whatever appears in the brilliant mind, in the pigment of imagination of some officer as necessary. There is no inspection of the materials before purchase. Nobody inspects the materials. It is just bought and nobody knows what is bought and where it is stored, etc. That is what is happening there. Purchases should be made by a committee composed of unimpeachable persons. That is absolutely necessary.

There is no technical audit. I have referred to this several times in the Legislative Council also and the then Minister, Mr. R. Venkataraman promised to look into that. But nothing has been done. There is no technical audit even today.

[பிற்பகல் 1-00]

Take the Ennore Plant. They are now using hydrogen coolers at fantastic cost. Would anybody send a small child to school insead of in a rickshaw or small car, in a huge lorry? In the same way the coolers have been put up. Water coolers were not functioning properly and they have started using hydrogen coolers at fantastic rates. What is the Hon. Minister for Electricity doing? He has got his own method of doing things. He will say that everything was done in such a way because there was not enough production.



Just now we have passed a Resolution requesting the Central Government to include the Second Power Mine Cut at Neyveli in the Fifth Five-Year Plan. We all supported the Resolution. The Hon. Minister should not think that by passing such a Resolution he can take refuge for all the omissions and commissions. He cannot run away and take refuge. On that score he cannot sidetrack the commissions and omissions of the Government. There has been a lot of commissions and omissions in the Electricity Board and in the administration. For example take the Ennore Power mishap. Such mishaps have occurred in Ennore in March 1972 and later on in May this year. In fact, presumably, the Government themselves realised the need for such an incisive analysis and appointed a Committee with Thiru N. Mahalingam as its Chairman to investigate and submit a report to the Government. It was done because serious charges were levelled against the mishap in Ennore Power Plant. The report of the Committee and their findings have not been placed on the table for the information of the members. Such a Committee could be constituted as a permanent measure and the officers may justify the technical failure, etc., before the Committee just as the P.A.C. sits in final judgment in audit reports.

In the general administration, a lot of politics has crept in. The general administration has completely collapsed in various system offices. Thanks to the partisan attitude taken by the D.M.K. to the Accounts Subordinate Union which owes allegiance to the ruling party, the office staff and the Superintending Engineers have to obey the dictates of the office bearers of this particular Union. The cleavage is brought out by one majority of workers against a small group of workers. They are completely ruling and dominating the Electricity Board. They are getting all sorts of patronages from the D.M.K. Government. No Superintending Engineer is able to take any action for any serious indiscipline. The branches of this Union are given all facilities because they owe allegiance to the ruling party. The Superintending Engineer cannot even transfer a person from one seat to another seat. That is the position in the Electricity Board. Actually half-a-dozen people are manning the Electricity Board affairs. Even the Hon. Minister for Electricity is terribly afraid of them. The Hon. Minister cannot pass orders. He has to receive instructions from those particular employees. The persons who are not owing allegiance to the Ruling Party Union are ill-treated. Their bills

are not paid properly. The bills are not prepared properly. The Personal Assistants to certain Ministers are indirectly exercising control over the Electricity Board. I can quote their names and prove all the facts. I can mention them whenever the Hon. Minister wants those particulars. This is how things are going on in the Electricity Board. There are 101 things. I can go on quoting them. The Hon. Minister for Electricity himself knows the growing indiscipline in the Electricity Board. He himself is aware of the hopeless indiscipline in the Department.

There was a conference of the Superintending Engineers to discuss the serious power-cut situation. The conference was not held in the Electricity Board Office. But it was held in the Polytechnic at Adayar because the Hon. Minister is afraid of the office bearers of the Association. The Union is so powerful that the management dare not hold this conference in its own premises in Anna Salai but had to select a venue in Adayar in Polytechnic even on working days for that institution. What a pathetic and tragic situation- It is because there is a lot of power politics and a lot of Ministerial interference. I know cases where the Personal Assistants to Hon. Ministers interfered and madt requests such as:

'இவரை மாற்று, அவரை இங்கே கொண்டு வந்து போடு, அதைச் செய், இதைச் செய்'

This is how things are going on in the Electricity Board.

Then I would like to refer to Ennore Thermal Station. In this House itself, the Hon. Minister for Electricity gave a statement during the last session. At that time, he mentioned—

'இதனால் எந்தவிதமான உற்பத்தியும் பாதிக்காது. என்றார் அனல் மின் திட்டத்தில் ஏற்பட்டிருக்கக்கூடிய சேதத்தினால் எந்தவிதமான உற்பத்தியும் பாதிக்காது' என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்.

He has given a categorical assertion because at that time he knew that we will shout. In order to gag our mouths, he has given such an assurance. The same standard and political attitude was adopted to serious problems. We are here to raise some important issues. But they are replied by the Hon. Ministers in such a way. On a previous occasion, the Hon. Minister said that it will not affect the power situation in the State. But on the 17th October 1973, I am surprised to find the Hon. Minister for Industries blaming the fire accident for the low output from Ennore. He had forgotten the previous statement.



பற்றாக்குறை என்கிறார்கள். எதனால்?

Because the Plant is not producing enough power. It is because the plant has been spoiled, they are not able to get power. Even in the speech of the Hon. Minister he has not mentioned about the report submitted by Thiru N. Mahalingam. The Government should take the House into confidence. There is no use in giving such rosy pictures.

Then I would like to refer to dredger scandal. The whole State is laughing at it. A dredger has been working at Ennore on hire basis for cooling water and this is costing the Board in all over 94 lakhs for six months. Why should the dredger be working and foreign staff paid when the generation at Ennore had been only 30 to 40 Mega Watt from the beginning of August to-date. The Hon. Minister is not aware of the exact generating power of that plant. He cannot say what was the generation yesterday or what was the generation day-before-yesterday. He does not know the difficulties in producing more power. The House will be surprised to know this. The Board is contemplating to buy another dredger in order to please some politicians and wants to continue the existing contract with Belgium firm without justification. This has to be investigated. For buying the new dredger which is essentially a mechanical equipment, I understand that the Civil Engineer and an I.A.S., Chairman of the Board went abroad for purchases. The seniormost technical people were not taken. They are just going there for 'thamasha'. They are surprised to know how I get all this information. I have got my own method of collecting information from workers. The workers in the Electricity Board are on my side and give all the details because they know that I will voice their grievances. Unfortunately, the full fun plan by the Chairman could not be realised as the trip to Japan planned by the Chairman was negatived by the Chief Secretary. I understand plans are afoot to depute an I.A.S. Officer to Canada for purchasing some equipments for the Knnda Project.

The Superintending Engineers of the Electricity Board have been humiliated because they have to get their tour programmes approved by the Chairman. The present Chairman has ordered that the Superintending Engineers should send their tour programmes one week in advance through the Secretary. The Superintending Engineers have to take permission from

the Chief Engineer. The Chief Engineer has to take permission from the Chairman. The Chairman has to take permission from the Hon. Minister. The Hon. Minister for Electricity need not take permission from the Department but he has to take permission from the Hon. Chief Minister. The Chairman goes often to foreign countries like England, America and Japan. He is always in the I.A.C. planes. If there is any strike in the I.A.C., he will be in the plane at that time also. Due to his absence, there is enormous delay in the disposal of files. The recent Committee appointed by the Government has stated that more frequent inspections by the Chief Engineer would ensure generating stations functioning properly.

There are a number of points. What is the use of telling them? I am mentioning them because the members will appreciate them. The Hon. Minister is not aware of many serious problems.

There is black-marketing in power. I have got facts and figures to prove them. Already a formula has been published in a newspaper. I do not want to quote that formula. According to the orders issued with regard to Restriction and Exemption the Government may exempt any person or owners from such an order. சரணம் exempted; வணக்கம் exempted and அடியேன் exempted. The Hon. Minister can exempt anybody. There is a mischievous clause in that order which says : ' The Government can exempt any person or persons in respect of supply or consumption of energy for any purpose '.

Then in ' The Hindu ' the following news item was published :

' Surplus power generation at night—Tamil Nadu's problem '

This means that they are not able to utilise that surplus power but they have enforced a power cut and that is fantastic. Then in " The Indian Express " the following news item was published :—

' Power cut proposal stake Meteorological Department by surprise '.

I do not know who is feeding this kind of information. They must check it up with the Meteorological Department, before announcing it.





Then what is the total production of electricity and what is the reduction in revenue? The reduction in revenue is only 8 per cent. But what is the percentage of cut? 75 per cent or 80 per cent. This clearly and categorically proves that this Department under the great leadership of the Hon. Thiru O.P. Raman has indulged in black-marketing in power. I, therefore, demand that a representative of the Central Water and Power Commission must come and investigate into the actual cut and the actual power received.

Then, according to the Government, as against normal sales of 22.5 million units a day, 15 million units are being sold even after the power cut was raised to 75 per cent. This means that although the cut is 75 per cent on paper, the effective cut is only 33.3 per cent. Out of 22.5 million units a day, only 15 million units are being sold even after the power cut was raised to 75 per cent. The official explanation for this discrepancy is that there is no uniform power cut of 75 per cent applicable to all categories of consumers.

Then, I come to another interesting matter. What is the industrial production during that time? The industrial production has not suffered at all in spite of the power cut. If there was really power cut, the industrial production could have come down. It is significant that even after the 75 per cent power cut was enforced in the case of all industries, several factories and mills reported near normal production and the explanation was that they were able to manage this with the help of power produced in their own generating units. But actually in several units the generators have not worked and this is not my casual statement but a statement made by the ex-Central Minister Dr. K. L. Rao and this has been corroborated and quoted in a number of newspapers. My point is that even responsible associations of manufacturers are not in a position to state exactly how many generators have actually been used. But the fact remains that substantial quantity of power was produced. This clearly shows that power was purchased in black. On the basis of the above facts, the inescapable conclusion is that the gap between generation and sale of power is not wholly accounted for by transmission loss. According to official sources, the transmission loss is the highest in Tamil Nadu. Even after conceding it, there is necessarily a gap which has not been accounted for.

[Dr. H. V. Hande] [1973 நவம்பர் 19

Then, on account of violent fluctuations most of the instruments can be completely destroyed and what steps the Government have taken to prevent it?

Then I come to schemes given clearance by the Central Water and Power Commission. Why there is an inordinate delay in implementing the schemes sanctioned already by the Central Water and Power Commission and that is a point on which the Hon. Minister should give clarification.

Sir, my submission is that when people are suffering due to want of power and when the whole State was in the grip of power famine, what was this Government doing? Why have they indulged in black-marketing? In this connection, I wish to point out that even when there was a lot of coal, what was the percentage of power produced in the Ennore Thermal Plant. It is about 40 to 45 per cent. But in the case of the Thermal Plant at Kothekudam, it is 85 to 90 per cent. When it is possible for the Plant at Kothekodam to attain a production of 85 to 90 per cent, why is there such a deplorable state of affairs here? I expect the Hon. Minister to give his reply in regard to this matter.

Then, they want to bifurcate production and distribution of power and probably they want to have separate Departments or 'variams'. They want to bring in many 'variams'. I am raising the voice of thousands of workers who are employed in the Electricity Board and they feel that this will completely affect their conditions of service which are already deplorable. They plead that this bifurcation should be done only after consulting the Leaders of the majority union.

Once again, I want the Hon. Minister to properly answer this question. Why did this Government indulge in black-marketing in power? The Hon. Minister is smiling, thinking that I am indulging in a joke. It is not a joke. It is the suffering of the people that I am voicing in this House. Therefore, I accuse this Government and also the Hon. Minister that they are making a total and perfect mess of the production and distribution of electricity in Tamil Nadu. They have indulged in widespread black-marketing irregular supply, sub-standard production, deplorably high degree of voltage fluctuation, frequent failure of power, etc, and also introduced D.M.K. Party politics among the workers, thereby demoralising all the good workers. A decent and honest thing that



1973 நவம்பர் 19] [Dr. H. V. Hande]

my distinguished Friend Thiru O. P. Raman, can do is to gracefully quit his office. At the end of the discussion, he should say, 'I admit the total failure and therefore I gracefully quit my office'. It is in his own interest I am saying this, not to be little our good relationship. It is the feeling of everybody after the present Ministry has taken up office, there has been such a perfect mess. Therefore I say that he must quit office. This morning we have passed the resolution. It is all right. The Hon. Minister may go in aeroplane with that resolution and give it to the Hon. Minister concerned at the Centre. But what is happening here is far from truth. What is the point? What is the Hon. Minister trying by bringing this resolution. Of course, it may be said that the Hon. Chief Minister and not the Minister for Electricity has brought forward that resolution. Nowadays everything goes on in the name of Chief Minister. But what I say is, what have you done with facilities already given to you? Why have you made a mess of the whole thing? Have you not indulged in black-marketing power? What about production loss? Is it to cover up all these, to cover up your inefficiency, this resolution has come? What all you had done has created an impact on the public mind. Whatever things you do, the public is convinced that the Ministry has become a laughing stock of Tamil Nadu and they have failed in their duty. The way in which the Hon. Minister for Electricity has been handling his portfolio has resulted in a mess of the whole thing. He cannot do anything. Ultimately there is the Chief Minister. People go over the head of the Minister. The only thing the Hon. Minister for Electricity can do is to quit office. With these words I conclude. Thank you.

**திரு. சொ. காவேரிமணியம்:** தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் நம்முடைய அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய 1973-74-ம் ஆண்டு மின்சார வாரிய நிதிநிலை அறிக்கையை வரவேற்று என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைக் கூற விழைகின்றேன். பொதுவாக, இந்தத் துறையிலே பொறுப்பேற்றிருக்கக்கூடிய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கடந்த ஆண்டுகளில் எந்த அளவிற்குத் திறம்பட சமாளித்திருக்கிறார்கள் என்பது இங்கே இருக்கக்கூடிய உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றாகத் தெரியும். சிறப்பாக, தமிழகத்திலே இருக்கக் கூடிய பொதுமக்கள் அந்தத் துறையினை ஏற்றிருக்கக் கூடிய அமைச்சர் அவர்களையும், நம்முடைய டாக்டர்

[திரு. சொ. காவேரிமணியம்] [1973 நவம்பர் 19

முதல்வர் அவர்களையும் அவர்கள் ஆற்றியிருக்கிற பணிகளுக்காக எந்த அளவுக்குப் பாராட்டுகிறார்கள் என்பதை நான் ஒருசில வார்த்தைகளின்மூலம் கூற ஆசைப்படுகிறேன்.

குறிப்பாக, சாதாரண சிறு கிராமங்களாக இருந்தாலும் சரி, அல்லது 20 அல்லது 30 வீடுகள் இருக்கக்கூடிய அரிசனக் குடியிருப்புகளாக இருந்தாலும் சரி, அவைகளிலே கிடைக்கக்கூடிய வருவாயைப்பற்றி சிறிது கூடக் கவலைப் படாது மக்களின் எண்ணங்களைப் புரிந்து, மக்களுக்கு நல்லது செய்ய வேண்டுமென்ற அடிப்படைத் திட்டத்தை நிறைவேற்றுகின்ற தமிழக அரசு, அதுவும் டாக்டர் கலைஞர் அவர்கள், ஒரு சிறப்புத் திட்டத்தை ஏற்பாடு செய்து, அங்கெல்லாம் மின் ஒளி, விளக்குகள் வழங்கவேண்டுமென்ற திட்டத்தை கடந்த சில ஆண்டுகளாக, 1968-69-லே ஆரம்பித்து, நடத்தி, இப்பொழுது பூர்த்தியாகக் கூடிய நிலையிலே இருக்கிறது. அதிலே இருக்கக் கூடிய முக்கியத்துவம் எங்கோ ஓரத்திலே இருக்கக்கூடிய சாதாரணக் குடிமக்கள் மின் வசதி பெறவேண்டுமென்ற சிறந்த திட்டத்தின்கீழ் தான் தமிழக அரசு பணியாற்றி வருகிறது. ஆக, இந்த அரசைப் பாராட்டுவதை விட்டுவிட்டு, தன்னுடைய மனதிலே காழ்ப்புத் தன்மையை வைத்துக் கொண்டு ஒருசிலர் வீண் குறைகூறலாம்.

நான் ஒன்றைக் கூறவிரும்புகிறேன். 2,000 ஆண்டுகளுக்கு முன்னாலே வள்ளுவர் மிகத்தெளிவாகக் கூறினார்.

"தூங்காமை கல்வி துணிவுஉடைமை இம்மூன்றும்
நீங்கா நிலன்ஆள் பவற்கு"

என்று மிகத் தெளிவாகச் சொன்னார். அந்த மூன்று குணப் பண்புகளுக்கும் எடுத்துக்காட்டாக இருக்கக் கூடிய டாக்டர் கலைஞர் அவர்கள் நல்ல சந்தர்ப்பத்தை, எதிர்த்தரப்பிலே இருக்கக்கூடிய எதிர்க்கட்சி உறுப்பினர்களுடைய அன்பையும், ஆதரவையும் பெற்று, தமிழகத்திற்கு இன்று மட்டுமல்ல, 10 ஆண்டுக்காலம் தேவைப்படுகிற சிறந்த திட்டத்தை, 5-வது ஐந்தாண்டுத் திட்டம் தயாரிக்கிற இந்த நேரத்தில் மத்திய அரசுக்கு வலியூட்டும் முகத்தான் ஒரு நல்ல தீர்மானத்தை முன்கூட்டியே இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள். மற்ற அலுவல்கள் சிலவற்றை ஒதுக்கிவிட்டு, இந்த அவையிலே இருக்கக்கூடிய மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனை பேருடைய ஆதரவோடு இந்தத் தீர்மானமானது இன்றைக்கு நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இது எதைக் காட்டுகிறது என்றால், இந்த அரசு, தமிழக மக்கள் மீது கொண்டிருக்கிற பற்றையும், 10 ஆண்டுகளுக்கப்பால் ஏற்படக்கூடிய பற்றாக்குறை இவைகளைப் போக்கவேண்டுமென்ற காரணத்தினாலும் கொண்டுவரப்பட்டிருப்பதைக் காட்டுகிறது.



1973 நவம்பர் 19] [திரு. சொ. காவேரிமணியம்]

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

இந்தத் தீர்மானத்தை தக்க நேரத்தில் மத்திய அரசினுடைய கவனத்திற்கு கொண்டு வரவேண்டுமென்ற விதத்தில் வலியுறுத்த வேண்டுமென்று ஒருமுகமாக நிறைவேற்றப்பட்டிருக்கிறது. ஆக, இங்கே பேசக்கூடிய நண்பர்கள் நிச்சயமாக தமிழக அரசுக்குப் பாராட்டு தெரிவிப்பார்கள். வேண்டுமானால், எனக்கு முன்னால் பேசிய பெருமதிப்பிற்குரிய ஹாண்டே அவர்கள் எதைப் பார்த்தாலும் குறை சொல்லக் கூடியவர்கள், நூற்றுக்கு நூறு லட்சணங்கள் பொருந்தியிருந்தாலும் அதிலே ஏதாவது குறை சொல்லக் கூடியவர். எங்களுடைய அமைச்சர்மீது என்ன காழ்ப்பு ஏற்பட்டதோ, அவர்தான் என்று கையைக் காட்டிச் சொன்னார்கள். ஆக்சிடென்ட் என்பது சொல்ல முடியாமல் ஏற்படுவது. எண்ணூரிலே ஏற்பட்டது அந்த வகையிலே ஏற்பட்டது. அதற்கு யார் பொறுப்பு? அதற்கு யார் காரணம்? அது நெக்லிஜன்ஸா? இவற்றை ஆராய்வதற்கும் தக்க நடவடிக்கை எடுப்பதற்கும் குழு அமைக்கப்பட்டுள்ளது. அவர்களது அறிக்கைகள் பரிசீலனை செய்யப் பட்ட பிறகு, தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று நம்முடைய அமைச்சர் அவர்கள் தெளிவாகச் சுட்டிக் காட்டினார்கள். ஆக, இந்த அரசு மிகவும் கண்ணும் கருத்துமாக இருக்கிறது என்பதைத்தான் நான் இந்த நேரத்திலே தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கை ஏறத்தாழ ரூ. 47 கோடி மூலதனத்தை வைத்து தயாரிக்கப்பட்டதாக இருக்கிறது. அந்த ரூ. 47 கோடி எந்த எந்த வகையிலே செலவிடப்பட்டிருக்கிறது என்பதும் அந்த அறிக்கையிலே சுட்டிக்காட்டப் பட்டிருக்கிறது. அவ்வாறு செலவிடுகின்ற நேரத்தில் நமக்குக் கிடைக்கக்கூடிய பயன்கள் என்னென்ன என்பவையும் தெளிவாகச் சுட்டிக்காட்டப் பட்டிருக்கின்றன. ஆனால், நான் மிகப் பணிவோடு தெரிவித்துக் கொள்ளக் கூடிய இன்னொரு கருத்து என்னவென்றால், பொதுவாக இந்த வாரியத்தைப் பற்றி சொன்னார்கள். மேலதிகாரிகள் மிகத் தகுந்த முறையிலே, பாராட்டக் கூடிய முறையிலே பணிபுரியக்கூடியவர்களாக இருக்கிறார்கள். அந்தந்த மாவட்டத்திலே இருக்கக்கூடிய எஸ். ஈ. க்கள் ஆனாலும் சரி, அல்லது தலைமை அலுவலகத்திலே பணிபுரியக்கூடிய அதிகாரிகளானாலும் சரி, மிகச் சிறந்த முறையிலே பணிபுரிகிறார்கள். அரசினது கோட்பாடுகளை, எண்ணங்களை மனதிலே கொண்டு திட்டங்கள் தயார் செய்தும், அப்படித் தயாரித்த திட்டங்களை விரைவுபடுத்துகின்ற அளவிலே பணி புரிந்தும், விரைவுபடுத்தப்பட திட்டங்களை சேர்த்து நிறைவேற்றியும் வருகிறார்கள்.

ஆனால், அவர்களுக்கு ஒரு இடைஞ்சல் என்னவென்றால், நம்முடைய பெருமதிப்பிற்குரிய உறுப்பினர் ஹாண்டே அவர்கள் குறிப்பிட்டது போல், இங்கே இருக்கக்கூடிய சில ஊழியர்கள்—ஊழியர்கள் என்று நான் சொல்

இன்ற நேரத்தில், அவர்கள் ஏதோ இந்த அரசுக்கு சாதகமான 'ஊழியர்கள் அல்ல. இந்த அரசைப் பிடிக்காதவர்கள், காழ்ப்புத் தன்மை கொண்டவர்கள், எப்பொழுதும் போராட்ட உள்ளத்தைப் பெற்றவர்கள், வேண்டாதவற்றிற்கும் விரும்பாதவற்றிற்கும் போராட்டத்தை மையமாகக் கொண்டவர்கள்—இந்த அரசினுடைய வேகத்தை தணிக்கவேண்டும், நல்ல அதிகாரிகளுடைய வேகத்தைக் குறைக்கவேண்டும், செயல்திட்ட வேகத்தைக் குறைக்கவேண்டுமென்ற கருத்தோடு இந்த அரசுக்கு தொந்தரவு கொடுத்து வருகிறார்கள். வேண்டுமானால், நமது மதிப்பிற்குரிய ஹாண்டே அவர்கள் சொன்னது போல், அப்படிப்பட்ட தொழிலாளர்கள் தண்டிக்கப்பட வேண்டியவர்கள், இந்த அரசால் கண்காணிக்கப்பட வேண்டியவர்கள் என்று நான் மிகத்தெளிவாகக் கூறிக்கொள்ளவிரும்புகிறேன். அந்த அறிக்கையிலே 4 பக்கங்கள் வாரியத்திலே பணி புரியக்கூடிய தொழிலாளர்களுடைய நலன்கள் எந்த அளவு பாதுகாக்கப்பட்டிருக்கின்றன, அவர்களுக்கு எந்த அளவு சலுகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன, மற்ற கடன் உதவிகள் எவ்வளவு அளிக்கப்பட்டிருக்கின்றன என்பவை சுட்டிக் காட்டப்பட்டிருக்கின்றன.

அது மட்டுமல்ல, 4 ஆண்டுக்காலம் பணி புரிந்த தொழிலாளர்கள் இன்று நிரந்தரமான ஊழியர்களாக ஆக்கப்பட்டிருக்கிறார்கள். பல ஆயிரக்கணக்கான ஊழியர்கள் தங்களுக்கு நிரந்தரம் இல்லையென்ற கூக்குரலை எழுப்பிக் கொண்டிருந்ததைக் கேட்டு, 4 ஆண்டுக்காலம் பணி புரிந்த அத்தனை தொழிலாளர்களையும் நிரந்தரமாக ஆக்கியிருக்கிறது. அதனால் ஏற்பட்டிருக்கக் கூடிய 'கமிட்மென்ட்ஸ்', 'ஆப்ளிகேஷன்ஸ்' அவைகளை அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது. இந்தத் துறையிலே எந்த அளவு செய்ய வேண்டுமோ, அவைகளையெல்லாம் தக்க நேரத்தில் செய்துவருகிறது.

கிராமப்புறங்களில் இருக்கக்கூடிய விவசாயத் துறை சம்பந்தமாக, மின் விசை ஏற்றங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து, அவற்றிற்கு எலெக்ட்ரிக் கனெக்ஷன் கொடுத்துக்கொண்டு வருகிறது. ஆகவே, இந்த அறிக்கையை இன்னும் நாம் துருவி ஆராய்ந்தோமானால் தீவிரமான திட்டங்கள் எல்லாம் இங்கே சுட்டிக்காட்டப்பட்டிருப்பது தெரியும்.

[பிற்பகல் 1-30]

ஆக, நான் முன்கூட்டியே சொன்னது போல்,

'தூங்காமை கல்வி துணிவுஉடைமை இம்மூன்றும்
நீங்கா நிலன்ஆள் பவற்கு'

என்பதற்கு ஒப்ப, நம்முடைய முதல்வர் அவர்கள் மிகச்சிறந்த தீர்மானத்தை இங்கே கொண்டு வந்து 10 ஆண்டுகளுக்குப்பின் தமிழகம் இருக்க வேண்டிய



நிலையை வலியுறுத்தியுள்ளார். அதற்கு மத்திய சர்க்கார் நிச்சயமாக ஆதரவு தரவேண்டுமென்று அனைத்துக்கட்சி நண்பர்களுடைய ஆதரவைப்பெற்று இந்தத் தீர்மானத்தை இந்த நல்ல நேரத்திலே அங்கே அனுப்புகிறோம்.

அதற்காக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்கும், இந்தத் துறையில் பொறுப்புவகிக்கின்ற அமைச்சருக்கும், ஏனையவர்களுக்கும் நன்றி கூறி என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இந்த அளவோடு முடிவுற்று மீண்டும் நாளைக் காலை 9 மணியளவில் பேரவை கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.31 மணியளவில் ஒத்திவைக்கப்பட்டது.

## 8. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders*

@ 1. Notification issued with G.O. Ms. No. 247, Home, dated the 29th January 1973, in regard to certain amendments to the Tamil Nadu Motor Vehicles Rules, 1940. [Laid on the table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]

@ 2. Notification issued with G.O. Ms. No. 1000, Home, dated the 11th April 1973, in regard to an amendment to the Tamil Nadu Cinemas (Regulation) Rules, 1957. [Laid on the table of the House under section 10 (3) of the Tamil Nadu Cinemas (Regulation) Act, 1955 (Tamil Nadu Act IX of 1955).]

@ 3. Notification issued with G.O. Ms. No. 2969, Revenue, dated the 29th May 1973, in regard to certain amendments to the Tamil Nadu Urban Land Tax Rules, 1966. [Laid on the table of the House under section 45 (2) of the Tamil Nadu Urban Land Tax Act, 1966 (Tamil Nadu Act 12 of 1966).]

@ 4. Notification issued with G.O.R. No. 1080, Revenue, dated the 6th June 1973, in regard to exemption from liability to surcharge on the exhibition of the Cinematograph film ' Mahatma ' a biographical documentary on the life of Mahatma Gandhi. [Laid on the table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]

@ 5. Notification issued with G.O. Ms. No. 578, Rural Development and Local Administration, dated the 28th March 1973, in regard to an amendment to the Rural Development and Local Administration Department Notification II-2 No. 174 of 1963, published at page 4 of Part II-Section 2 of the Extraordinary issue of the *Tamil Nadu Government Gazette*, dated the 6th April 1963. [Laid on the table of the House under section 199 (2) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

@ 6. Notification issued with G.O. Ms. 581, Rural Development and Local Administration, dated the 28th March 1973, in regard to amendment to the Rural Development and Local Administration Department Notification II-2 No. 180 of 1963, published at page 6 of Part II—Section 2 of the Extraordinary issue of the *Tamil Nadu Government Gazette*, dated the 6th April 1963. [Laid on the table of the House under section 199 (2) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

@ 7. Notification issued with G.O. No. 580, Rural Development and Local Administration, dated the 28th March 1973, in regard to an amendment to the Rural Development and Local Administration Department Notification II-2 No. 479 of 1964, published at pages 523–524 of Part II—Section 2 of the *Tamil Nadu Government Gazette*, dated the 28th October 1964. [Laid on the table of the House under section 199 (2) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

@ 8. Notification issued with G.O. Ms. No. 156, Rural Development and Local Administration, dated the 29th January 1973, in regard to certain amendments to the rules published with the Rural Development and Local Administration Department Notification S.R.O. No. A-193 of 1965, published at pages 193 to 197 of Part V of the *Tamil Nadu Government Gazette*, dated the 17th February 1965. [Laid on the Table of the House under section 199 (2) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

@ 9. Notification issued with G.O. Ms. No. 283, Excise and Prohibition, dated the 13th October 1972 read with Government Memorandum No. 6260/E & P IV/73-1, Excise and Prohibition, dated the 28th April 1973 making the Tamil Nadu Spirituous Essences Rules, 1972. [Laid on the Table of the House under section 34 (5) of the Tamil Nadu Excise Act, 1971 (Tamil Nadu Act 34 of 1971).]



@ 10. Notification issued with G.O. Ms. No. 2905, Revenue, dated the 26th May 1973, in regard to amendment to the Revenue, Department Notification II-1 No. 3987 (b) of 1971, dated the 7th September 1971, published at page 2 of Part II—Section I of the Tamil Nadu Government Gazette Extraordinary, dated the 8th September 1971, as subsequently amended. [Laid on the Table of the House under section 18 (4) of the Tamil Nadu Agricultural Lands Record of Tenancy Rights Act, 1969 (Tamil Nadu Act 10 of 1969).]

@ 11. Notification issued with G.O. Ms. No. 1279, Public (Services-A), dated the 8th May 1973, in regard to an amendment to the Tamil Nadu Public Service Commission Regulations, 1954 for exclusion of the post of Tourism Promotion Officer in Public Tourism Department from the commission purview. [Laid on the Table of the House under article 320 (3) of the Consiitution of India).]

@ 12. Notification issued with G.O. Ms. 422, Home, dated the 15th February 1973, in regard to amendments to rules 456 and 458-A of the Tamil Nadu Motor Vehicles Rules, 1940. [Laid on the Table of the House under section 133 (3) of the Motor Vehicles Act 1939 (Central Act IV of 1939).]

@ 13. Notification issued with G.O. Ms. No. 209, Home, dated the 6th March 1973 in regard to an amendment to rule 194-A of the Tamil Nadu Motor Vehicles Rules, 1940. [Laid on the Table of the House under section 133(3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]

@ 14. Notification issued with G.O. Ms. No. 614, Home, dated the 6th March 1973 in regard to an amendment to Rule 395 of the Tamil Nadu Motor Vehicles Rules, 1940. [Laid on the Table of the House under section 133(3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]

@ 15. Notification issued with G.O. Ms. No. 263, Revenue, dated the 5th February 1973, in regard to amendments to the Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Rules, 1965, the Madras Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Rules, 1965, the Madras Lease-hold (Abolition and Conversion into Ryotwari) Rules, 1965 and the Madras Inams (Supplementary) Rules, 1965. [Laid on the Table of the House under sections 73(5), 48(5) 50(5) and 13(4) of the Tamil Nadu Inam Estates (Abolition and Conversion into Ryotwari)

Act, 1963 (Tamil Nadu Act 26 of 1963) the Tamil Nadu Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Tamil Nadu Act 30 of 1963), the Tamil Nadu Lease-holds (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Tamil Nadu Act 27 of 1963) and the Tamil Nadu Inams (Supplementary) Act, 1963 (Tamil Nadu Act 31 of 1963) respectively).]

@ 16. Notification issued with G.O. Ms. No. 949, Industries, dated the 25th June 1973, in regard to an amendment to the Tamil Nadu Small-Scale and Cottage Industries Loans and Subsidy Rules, 1956. [Laid on the Table of the House under section 19(d) of the Tamil Nadu State Aid to Industries Act, 1922 (Tamil Nadu Act V of 1923).]

@ 17. Notification issued with G.O. Ms. No. 598, Rural Development and Local Administration, dated the 29th March 1973, in regard to an amendment to the Tamil Nadu Panchayats Building Rules, 1970. [Laid on the Table of the House under section 199(2) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

@ 18. Notification issued with G.O. R. No. 3511, Revenue, dated the 15th June 1973, in regard to exemption from liability to additional surcharge in respect of all the films produced for exhibition to children and certified by the Children's Film Society, New Delhi. [Laid on the Table of the House under section 16(4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]

@ 19. Notification issued with G.O. Ms. No. 1274, Rural Development and Local Administration, dated the 29th June 1973, in regard to an amendment to the Rural Development and Local Administration Department—Notification II-2 No. 108 of 1966, published at page 140 of Part II—Section 2 of the *Tamil Nadu Governmen tGazette*, dated the 26th April 1966. [Laid on the Table of the House under section 199 (2) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

@@ 20. Notification issued with G.O. Ms. No. 1866, Revenue, dated the 11th April 1973, in regard to certain amendments to the Tamil Nadu Agricultural Lands Record of Tenancy Rights Rules, 1969. [Laid on the Tabe of the House under section 18 (4) of the Tamil Nadu Agricultural Lands Record of Tenancy Rights Act, 1969 (Tamil Nadu Act 10 of 1969)].



@@ 21. Notification issued with G.O. Ms. No. 868, Rural Development and Local Administration, dated [illegible] in regard to amendment to Rural Development and Local Administration Department Notification II-2 No. 479 of [illegible], published at pages 523–524 of Part II— Section 2 of the *Tamil Nadu Government Gazette*, dated the 28th October 1964, as subsequently amended [Laid on the Table of the House under section 199(2) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958)].

@@ 22. Notification issued with G.O. Ms. No. 577, Rural Development and Local Administration, dated the 28th March 1973, in regard to an amendment to the Rural Development and Local Adminisration Department Notification II-2 No. 449 of 1964, published at page 2 of Part II—Section 2 of the Extra-ordinary issue of the *Tamil Nadu Government Gazette*, dated the 30th September 1964. [Laid on the Table of the House under section 199 (2) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958)].

@@ 23. Notification issued with G.O. Ms. No. 3197, Revenue, dated the 5th June 1973 in regard to certain amendments to the Tamil Nadu Agricultural Income-Tax Rules, 1955. [Laid on the Table of the House under section 61 (3) of the Tamil Nadu Agricultural Income-tax Rules, 1955)].

@@ 24. Notification issued with G.O. Ms. No. 743, Revenue, dated the 22nd February 1973 in regard to appointment of Thiru V. P. Ethirajan, Principal Subordinate Judge, Erode to be the Judicial Member, Sales Tax Appellate Tribunal, Coimbatore. [Laid on the Table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959)].

@@ 25. Notification issued with G.O. Ms. No. 582, Rural Development and Local Administration, dated the 28th March 1973, in regard to an amendment to the Rural Development and Local Administration Department Notification II-2 No. 171 of 1963, published at pages 3–4 of Part II—Section 2 of the Extra-ordinary issue of the *Tamil Nadu Government Gazette*, dated the 6th April 1963. [Laid on the Table of the House under section 199 (2) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958)].

@@ 26. Notification issued with G.O. P. No. 3627, Revenue, dated the 19th June 1973 in regard to an amendment to the Tamil Nadu Sales Tax (Surcharge) Rules, 1971. [Laid on the Table of the House under section 7 (3) of the Tamil Nadu Sales Tax (Surcharge) Act, 1971 (Tamil Nadu Act 21 of 1971)].

@@ 27. Notification issued with G.O. Ms. No. 740, Agriculture, dated the 22nd March 1973, in regard to certain amendments to the Tamil Nadu Agricultural Produce Markets Rules, 1962. [Laid on the Table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959)].

@@ 28. The Balance Sheet and Profit and Loss Account of the Tamil Nadu Warehousing Corporation, Madras for the year 1970-71. [Laid on the Table of the House under section 31 (11) of the Warehousing Corporation Act, 1962 (Central Act 58 of 1962)].

@@ 29. Notification issued with G.O. Ms. No. 612, Home, dated the 8th March 1973 in regard to an amendment to the Rules for the Management of the Government Reception Homes, Madras, 1957, published at pages 428 to 434 of the Rules Supplement to Part I of the *Tamil Nadu Government Gazette*, dated the 10th July 1957. [Laid on the Table of the House under section 44 (4) of the Tamil Nadu Children Act, 1920 (Tamil Nadu Act IV of 1920)].

@@ 30. Notification issued with G.O. Ms. No. 1301, Rural Development and Local Administration, dated the 2nd July 1973. in regard to an amendment to the Tamil Nadu Khadi and Village Industries Board Rules, 1960. [Laid on the Table of the House under section 29 (3) of the Tamil Nadu Khadi and Village Industries Board Act, 1959 (Tamil Nadu Act 18 of 1959)].

@@ 31. Notification issued with G.O. Ms. No. 1302, Rural Development and Local Administration, dated the 2nd July 1973, in regard to extension of term of office of the members of the Tamil Nadu Khadi and Village Industries Board for a further period of one month from 3rd July 1973. [Laid on the Table of the House under section 29 (3) of the Tamil Nadu Khadi and Village Industries Board Act, 1959 (Tamil Nadu Act 18 of 1959).]



@@ 32. Notification issued with G.O. Ms. No. 1086, Agriculture, dated the 2nd May 1973, in regard to regulation of trade over the purchase and sale of groundnut, gingelly, caster, cotton, etc., in the Salem district. [Laid on the Table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959)].

@@ 33. Notification issued with G.O. Ms. No. 764, Agriculture, dated the 23rd March 1973, in regard to an amendment relating to inclusion of Paddy at the market at Andimadam in Tiruchirappalli district, published at pages 2100-2101 of Part II—Section 1 of the *Fort St. George Gazette*, dated the 4th September 1963. [Laid on the Table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959)].

@@ 34. Notification issued with G.O. Ms. No. 1458, Revenue, dated the 3rd August 1973 in regard to exemption from liability to entertainments tax, show tax and additional surcharge on the benefit film show organised by the Muthuamizh Mandram, Indian Institute of Technology, Madras. [Laid on the Table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939)].

@@ 35. Notification issued with G.O. Rt. No. 1345, Revenue, dated the 19th July 1973, in regard to exemption from liability to entertainments tax, show tax, and additional surcharge on the benefit film show organised by Mathar Nala Sangham, West Mambalam, Madras. [Laid on the Table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939)].

@@ 36. Notification issued with G.O. Ms. No. 274, Co-operation, dated the 21st July 1973 in regard to an amendment to the Tamil Nadu Co-operative Societies Rules, 1968. [Laid on the Table of the House under section 119 (4) of the Tamil Nadu Co-operative Societies Act, 1961 (Tamil Nadu Act 53 of 1961)].

£ 37. Notification issued with G.O. Ms. **No. 1926,** Home, dated the 17th July 1973, in regard to exemption from payment of motor vehicles tax in respect of all vehicles belonging to the non-commercial departments of the Government of Tamil Nadu.

[Laid on the Table of the House under section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Act, 1931 (Tamil Nadu Act III of 1931)].

£ 38. Notification issued with G.O. Ms. No. 1166, Rural Development and Local Administration, dated the 18th June 1973, in regard to certain amendments to the rules relating to the establishments under the Municipal Councils, published at pages 316 to 318 of Part I-A of the *Tamil Nadu Government Gazette*, dated the 16th June 1936 as subsequently amended. [Laid on the Table of the House under section 304 (*d*) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920)].

£ 39. Notification issued with G.O. Ms. No. 4023, Revenue, dated the 7th July 1973, in regard to reduction in the rate of sales tax on the sales of importe dforeign liquor from bonded warehouses to ships calling at Madras Port. [Laid on the Table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959)].

£ 40 Notification issued with G.O. Ms. No. 585, Rural Development and Local Administration, dated the 28th March 1973, in regard to an amendment to the Rural Development and Local Administration Department Notification II-2 No. 195 of 1963, published at page 2 of Part II—Section 2 of the Extraordinary issue of the *Tamil Nadu Government Gazette*, dated the 11th April 1963. [Laid on the Table of the House under section 199 (2) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958)].

£ 41. Notification issued with G.O. Rt. No. 1674, Revenue, dated the 7th September 1973, in regard to exemption from liability to entertainments tax, show tax and additional surcharge on the benefit film show organised by the Regional Sports Committee, Food Corporation of India, Madras at 10 a.m. on 8th September 1973 at Rajkumari Theatre, Madras. [Laid on the Table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]

£ 42. Notification issued with G.O. Ms. No. 4170, Revenue, dated the 11th July 1973 in regard to exemption from liability to additional surcharge on all films conducted by the Information and Public Relations Department of the Government of Tamil



Nadu for the benefit of children at the Children's Theatre (Anna Kalai Arangam), Vellore. [Laid on the Table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]

£ 43. Notification issued with G.O. Rt. No. 1508, Revenue, dated the 4th August 1973, in regard to exemption from liability to Entertainments Tax, Show Tax and additional surcharge on the exhibition of eight films organised by the Madras Film Society in connection with the Film Festival. [Laid on the Table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]

£ 44. Notification issued with G.O. Rt. No. 1469, Revenue, dated the 4th August 1973, in regard to exemption from liability to Entertainments Tax, Show Tax and Additional Surcharge on the benefit film show organised by the Iswari Prasad Dettatreya Orthopaedic Centre, Madras at 10 a.m. on 12th August 1973 at Shanthi Theatre, Madras. [Laid on the Table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]

£ 45. Notification issued with G.O. Rt. No. 1457, Revenue, dated the 3rd August 1973 in regard to exemption from liability to Entertainments Tax, Show Tax and Additional surcharge on the benefit film shows organised by the Indian Institute of Technology Employees' Association, Madras. [Laid on the Table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]

£ 46. Notification issued with G.O. Ms. No. 587, Rural Development and Local Administration, dated the 28th March 1973, in regard to an amendment to the Rural Development and Local Administration Department Notification II-2 No. 177 of 1963, published at pages 4–5 of Part II—Section 2 of the Extraordinary issue of the *Tamil Nadu Government Gazette*, dated the 6th April 1963. [Laid on the Table of the House under section 199 (2) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

£ 47. Notification issued with G.O. Ms. No. 249, Co-operation, dated the 2nd July 1973, in regard to an amendment to rule 85-NC of the Tamil Nadu Co-operative Societies Rules, 1963. [Laid on the Table of the House under section 119 (4) of the Tamil Nadu Co-operative Societies Act, 1961 (Tamil Nadu Act 53 of 1961).]

£ 48. Notification issued with G.O. Ms. No. 1935, Public (Services-A), dated the 18th July 1973, in regard to an amendment to the Tamil Nadu Public Service Commission Regulation, 1954 for exclusion of the post of Reception Officer in Public Information and Public Relations Department from the Commissions' purview. [Laid on the Table of the House under Article 320 (5) of the Constitution of India.]

£ 49. Notification issued with G.O. Ms. No. 467, Home, dated the 20th February 1973, in regard to certain amendments to the Tamil Nadu Motor Vehicles Rules, 1949. [Laid on the Table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]

£ 50. Notification issued with G.O. Ms. No. 751, Home, dated the 17th March 1973, in regard to reduction in the rate of motor vehicles tax in respect of the Truck-trailer, bearing registration number MDY 1702, belonging to the Vivekananda Rock Memorial Committee, Madras. [Laid on the Table of the House under section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]

£ 51. Notification issued with G.O. Ms. No. 957, Rural Development and Local Administration, dated the 11th May 1973, in regard to certain amendments to the Tamil Nadu Municipal Service Rules, 1970. [Laid on the Table of the House under section 304 (d) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

£ 52. Notification issued with G.O. Ms. No. 1557, Rural Development and Local Administration, dated the 2nd August 1973, in regard to an amendment to the Tamil Nadu Municipal General Service Rules, 1970, published with Rural Development and Local Administration Department in S.R.O. No. A-372 of 1973, in the *Tamil Nadu Government Gazette*, dated the 9th May 1973. [Laid on the Table of the House under section 304 (d) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

£ 53. Notification issued with G.O. Ms. No. 1581, Agriculture, dated the 4th July 1973, in regard to an amendment to the Tamil Nadu Agricultural Produce Markets Rules, 1962. [Laid on the Table of the House under section 29 (4) of the (Tamil Nadu Agricultural Produce Markets Rules, 1962).]



£ 54. Notification issued with G.O. Ms. No. 3998, Revenue, dated the 4th July 1973, in regard to date of coming into force of the Kanyakumari Sreepadam Lands (Abolition and Conversion into Ryotwari) Act, 1972 and the appointment of Director of Settlement, Settlement Officer and Assistant Settlement Officers under the said Act. [Laid on the Table of the House under section 43 (5) of the Kanyakumari-Sreepadam Lands (Abolition and Conversion into Ryotwari) Act, 1972 (Tamil Nadu Act II of 1973.)]

£ 55. Notification issued with G.O. Ms. No. 1531, Agriculture, dated the 28th June 1973, in regard to an amendment to the Tamil Nadu Agricultural Produce Markets Rules, 1962. [Laid on the Table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

££ 56. Notification issued with G.O. Ms. No. 486, Rural Development and Local Administration, dated the 16th March 1973, in regard to dissolution of the Sivakasi Panchayat Union Council of Ramanathapuram district with effect on and from the 17th March 1973 and reconstitution with effect on and from the 17th June 1973. [Laid on the Table of the House under section 199 (2) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

££ 57. Notification issued with G.O. Ms. No. 1903, Rural Development and Local Administration, dated the 14th September 1973, in regard to date of coming into force of certain provisions of the Tamil Nadu Town and Country Planning Act, 1971. [Laid on the Table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).]

££ 58. Notification issued with Roc. No. 1239/73-E4, dated the 26th July 1973, in regard to extension of certain provisions relating to water-supply under the Tamil Nadu District Municipalities Act, 1920, in the entire area of the Jayankondam Town Panchayat in Tiruchirappalli district. [Laid on the Table of the House under section 199 (2) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

££ 59. Notification issued with G.O. Ms. No. 1561, Rural Development and Local Administration, dated the 2nd August 1973, in regard to extension of term of office of the members of

the Tamil Nadu Khadi and Village Industries Board for a further period of one month from the 3rd August 1973. [Laid on the Table of the House under section 29 (3) of the Tamil Nadu Khadi and Village Industries Board Act, 1959 (Tamil Nadu Act 18 of 1959).]

££ 60. Notification issued with R. Dis. No. 44718/72, dated the 26th May 1972, in regard to extension of certain provisions relating to Building Regulations under the Tamil Nadu District Municipalities Act, 1920, in the entire area of Anumandanpatti Town Panchayat in Madurai district. [Laid on the Table of the House under section 199 (2) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

££ 61. Notification issued with R. Dis. No 64317/72, dated the 26th May 1972, in regard to extension of certain provisions relating to Building Regulations under the Tamil Nadu District Municipalities Act, 1920, in the entire area of Vallam Town Panchayat in Thanjavur district. [Laid on the Table of the House under section 199 (2) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

££ 62. Notification issued with G.O. Ms. No. 583, Rural Development and Local Administration, dated the 28th March 1973, in regard to an amendment relating to term of office of the Yercaud Township Committee, published at page 2 of Part II—Section 2 of the Extraordinary issue of the *Tamil Nadu Government Gazette*, dated the 10th February 1966. [Laid on the Table of the House under section 199 (2) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

££ 63. Notification issued with G.O. Ms. No. 1439, Agriculture, dated the 15th June 1973, in regard to exclusion of certain villages in the Lalgudy Market of Tiruchirappalli district for the purposes of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959, in respect of Paddy and gingelly. [Laid on the Table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

££ 64. Notification issued with G.O. Ms. No. 1530, Agriculture, dated the 28th June 1973, in regard to establishment of a market at Usilampatti in Madurai district to provide facilities for the purchase and sale of Paddy Cotton, Groundnut and Chillies,



[Laid on the Table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

££ 65. Notification issued with G.O. Ms. No. 1292, Agriculture, dated the 25th May 1973 in regard to exclusion and inclusion of certain villages from and in the notified market area of the Perundurai market of Coimbatore district for the purpose of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959, in respect of cotton, groundnut and tobacco. [Laid on the Table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

££ 66 Notification issued with G.O. Ms. No. 1442, Agriculture, dated the 15th June 1973, in regard to regulation of trade over the purchase and sale of paddy and gingelly at the nine markets in Coimbatore district. [Laid on the Table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

££ 67. Notification issued with G.O. Ms. No. 169, Excise and Prohibition, dated the 2nd May 1973, in regard to levy of excise duty at the rate of rupees four for proof litre (Rupees two and paise sixty only) for bulk litre on 35 under proof arrack for the period from 1st September 1973 to 31st August 1973. [Laid on the Table of the House under section 34 (5) of the Tamil Nadu Excise Act, 1971 (Tamil Nadu Act 34 of 1971).]

££ 68. Notification issued with G.O. Ms. No. 276, Co-operation, dated the 23rd July 1973, in regard to certain amendments to the Tamil Nadu Co-operative Societies Rules, 1963. [Laid on the Table of the House under section 119 (4) of the Tamil Nadu Co-operative Societies Act, 1961 (Tamil Nadu Act 53 of 1961).]

69. The Second Annual Report of the Tamil Nadu Agricultural University, Coimbatore, for the year 1972–73. [Laid on the Table of the House under section 49 (3) of the Tamil Nadu Agricultural University Act, 1971 (Tamil Nadu Act 8 of 1971).]

70. The Annual Report of the Tamil Nadu Public Service Commission 1971-72 issued with G.O. Ms. No. 1715, Public (Services-A), dated 21st June 1973. [Laid on the Table of the House under Article 323 (2) of the Constitution of India).]

71. First Annual Report of the Pallavan Transport Corporation Limited for the year 1973. [Laid on the Table of the House under section 619-A of the Companies Act, 1956 (Central Act 1 of 1956).]

72. First Annual Report of the Tamil Nadu Theatre Corporation Limited, Madras for the year ended 31st March 1973, containing the Audit Report and Comments upon the audit report made by the Comptroller and Auditor-General of India. [Laid on the Table of the House under section 619-A of the Companies Act, 1956 (Central Act I of 1956).]

73. Fifteenth Annual Administration Report of the Tamil Nadu Electricity Board for the year 1971-72 (Tamil). [Laid on the Table of the House under section 75 (I-A) of the Electricity Supply Act, 1948 (Central Act 54 of 1948).]

& 74. The Tamil Nadu Governments Review and the Twenty-Third Annual Report and Statement of Accounts of the Tamil Nadu Industrial Investment Corporation Limited for the year ended 30th June 1972. [Laid on the Table of the House under section 619-A of the Companies Act, 1956 (Central Act I of 1956).]

& 75. First Annual Report of the Pandiyan Roadways Corporation Limited for the year 1972. [Laid on the Table of the House under section 619-A of the Companies Act, 1956 (Central Act I of 1956).]

& 76 Second Annual Report of the Cheran Transport Corporation Limited for the year 1973. [Laid on the Table of the House under section 619-A of the Companies Act, 1956 (Central Act I of 1956).]

*B. Reports, Notifications and other Papers.*

@ 1. Notification, issued with G.O. Ms. No. 73, Labour and Employment, dated the 27th January 1973, in regard to an amendment to the Madras Shops and Establishments Rules, 1948.



@2. Notification issued with G.O. R. No. 285, Revenue, dated the 10th February 1973 in regard to exemption from liability to Central Sales Tax in respect of the sale of a Music Relay Equipment to Gandhi Hill Society, Vijayawada by Thiruvalargal Phillips India Limited, Madras.

@@ 3. Notification issued with G.O. Ms. No. 297, Labour and Employment, dated the 27th April 1973, making the Tamil Nadu Payment of Wages (Deductions for National Defence Fund and Defence Savings Scheme) Rules, 1973.

@@ 4. Resume of work transacted by the Tamil Nadu Legislative Assembly from the 26th February to 5th April 1973. (Fifth Assembly—Seventh Session).

@@@ 5. The Tamil Nadu Prohibition (Suspension of Operation) Amendment Ordinance 1973 (Tamil Nadu Ordinance No. 4 of 1973).

@@@ 6. The Tamil Nadu Excise (Amendment) Ordinance, 1973 (Tamil Nadu Ordinance No. 5 of 1973.)

£ 7. Notification issued with G.O. Ms. No. 3206, Revenue, dated the 5th June 1973, in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 in respect of the reconveyance deeds to be executed in favour of Thiru Sikka-narasingayyan Gramani, Sri Rajagopalaswami temple represented by its Executive Officer and Thiru Manishankar Pandojian and Thirumathi Rudrani.

£ 8. Notification issued with G.O. Ms. No. 3497, Revenue, dated the 13th June 1973 in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 in respect of the sale deed in favour of Begum Shafia Nazir Hussain Trust.

£ 9. Notification issued with G.O. Ms. No. 408, Labour and Employment, dated the 12th June 1973 in regard to certain amndements to the Tamil Nadu Plantations Labour Rules, 1955.

£ 10. Erratum issued with Memo. No. 46768/VI/73-1, Revenue, dated the 6th June 1973 to the Revenue Department Notification II-1 No. 5518 of 1972, published at page 982 of Part II—Section 1 of the *Tamil Nadu Government Gazette*, dated the 29th November 1972.

£ 11. Notification issued with G.O. Ms. No. 4530, Revenue, dated the 30th July 1973, in regard to remission of stamps duty chargeable under the Indian Stamp Act, 1899 in respect of the gift deed to be executed by Thiru R. K. Rangachariar in favour of the Panchayat Union, Mandapam, Ramanathapuram district.

£ 12. Notification issued with G.O. Ms. No. 4532, Revenue, dated the 30th July 1973, in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899, in respect of the bonds to be executed by trained nurses who undergo training in family planning at the Regional Family Planning Centres for being appointed as Health Visitors.

+ 13. The Tamil Nadu General Sales Tax (Amendment) Ordinance, 1973 (Tamil Nadu Ordinance No. 6 of 1973).

+ 14. The Madras City Municipal Corporation and Tamil Nadu District Municipalities (Amendment and Extension of term of office) (Amendment) Ordinance, 1973. (Tamil Nadu Ordinance No. 7 of 1973).

££ 15. Notification issued with G.O. Ms. No. 4881, Revenue, dated the 13th August 1973, in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899, in respect of the indemnity bond to be executed by the Commissioner, Thellar Panchayat Union, North Arcot district for the purpose of issue of duplicate National Defence Certificates.

16. Tamil Nadu—An Economic Appraisal 1973 (Part I—Review and Part II—Statistical Tables).

17. Speech of Hon. Thiru O. P. Raman, Minister for Electricity initiating the discussions on the Annual Financial Statement for 1973-74 and the Supplementary Financial Statement for 1972-73 of the Tamil Nadu Electricity Board. (English and Tamil).

18. Statement of action taken on the suggestions made by the Members of the Tamil Nadu Legislature during the discussions on the Annual Financial Statement of the Tamil Nadu Electricity Board for the year 1972-73. (English and Tamil)



19. Report of Thiru T. C. R. Kothandarama Raju, B.A., B.L., Commission of Inquiry (Principal District and Sessions Judge, Tirunelveli) on the incidents from the assault on Professor A. Srinivasan at Palayamkottai on the night of 19th November 1972 to the death of student Lourdhunathan in Thambaraparani River at Palayamkottai on 21st November 1972. (English and Tamil).

20 Report of Thiru C. M. Kuppannan, B.Sc., B.L., Commission of Inquiry (District and Sessions Judge, West Thanjavur, Thanjavur) on the undesirable clashes between the students, busmen and the Police on 2nd, 3rd and 4th December 1972, at Tiruchirappalli. (English and Tamil).

---

@ Despatched to Members on 5th September 1973.

@@ Despatched to Members on 20th September 1973.

@@@ Despatched to Members on 4th September 1973.

£ Despatched to Members on 8th October 1973.

+ Despatched to Members on 9th October 1973.

££ Despatched to Members on 1st November 1973.

& Laid on the Table of the Legislature Library with reference to the proviso to Rule 21 (5) of the Tamil Nadu Legislative Assembly Rules.

## இணைப்பு 1

[3-ம் பக்கத்தில் 150-ஆம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

The following 56 persons were arrested in Thanjavur district during 1970--71 in connection with idol thefts :—

| | |
|---|---|
| 1 Dakshinamurthy | Involved in Valangaiman Police Station Cr. No. 187/70. |
| 2 Kulandaivelu<br>3 Murugaiya<br>4 Dakshinamurthy<br>5 Dandapani | Involved in Kodavasal Police Station Cr. No. 124/70. |
| 6 Perumal | Involved in Papanasam Police Station Cr. No. 135/70. |
| 7 Gulam Kadar<br>8 Krishnan<br>9 Santiyagu | Involved in Ayyampettai Police Station Cr. No. 453/70. |
| 10 Krishnamurthy<br>11 Madurai Mani | Involved in Peralam Police Station Cr. No. 272/70. |
| 12 Subramaniam<br>13 Kaliaperumal<br>14 Ganesan<br>15 Mani alias Nagappan<br>16 Subramaniam<br>17 Thangavelu<br>18 Krishnamoorthy | Involved in Kuthalam Police Station Cr. No. 157/70. |
| 19 Swedarajan<br>20 Kaliaperumal | Involved in Thiruvengadu Police Station Cr. No. 305/70. |
| 21 Chinnaiyan<br>22 Rathinam | Involved in Kivalur Police Station Crime No. 380/70. |
| 23 N. Vadivel Pandaram<br>24 Moorthy | Involved in Aranthangi Police Station Crime No. 578/70. |
| 25 Jaganatha Pathar<br>26 Jayaraman<br>27 Kalian alias Kaliamoorthy | Involved in Tiruvarur Rural Police Station Crime No. 328/70. |
| 28 Sambandam | Involved in Papanasam taluk Police Station Crime No. 240/70. |



| | |
|---|---|
| 29 Mani<br>30 Kalyanasundaram | Involved in Porayar Police Station Crime No. 445/70. |
| 31 Rahamathullah<br>32 Nagalingam | Involved in Needamangalam Police Station Crime No. 222/70. |
| 33 Pandiyan<br>34 Nagarajan | Involved in Tiruvarur Town Police Station Crime No. 433/70. |
| 35 Chinnakkolandai<br>36 Balakrishnan | Involved in Kuthalam Police Station Crime No. 232/70. |
| 37 Chinnadurai | Involved in Kandarvakottai Police Station Crime No. 174/70. |
| 38 Dharman<br>39 Arumugam | Involved in Manalmedu Police Station Crime No. 398/70. |
| 40 Ekambaram<br>41 Maruthamuthu | Involved in Thiruvaiyaru Police Station Crime No. 392/70. |
| 42 Balakrishnan<br>43 Thirugnanasambandam | Involved in Thalainayaru Police Station Crime No. 273/70. |
| 44 Venkatachalam<br>45 Venkittu | Involved in Alivalam Police Station Crime No. 187/70. |
| 46 Gopala Iyengar | Involved in Thiruvaiyaru Police Station Crime No. 523/70. |
| 47 Rangasamy | Involved in Valivalam Police Station Crime No. 875/70. |
| 48 Paramasivam | Involved in Thiruvarur Rural Police Station Crime No. 898/70. |
| 49 Mani alias Subramaniyan | Involved in Thanjavur West Police Station Crime No. 1497/70. |
| 50 N. L. C. Muthalagu<br>51 Manickam | Involved in Peravoorani Police Station Crime No. 43/71. |
| 52 Mohan<br>53 Subramaniam<br>54 Kaliaperumal | Involved in Ayyampettai Police Station Crime No. 73/71. |
| 55 Govindapattar<br>56 Dhanapakkiam | Involved in Kumbakonam South Police Station Crime No. 97/71. |

சில திருட்டுகள் சம்பந்தமாக 1970–71-ஆம் அண்டில் தஞ்சாவூர் மாவட்டத்தில் பின்வரும் 56 பேர்கள் கைது செய்யப்பட்டனர் :—

| | |
|---|---|
| 1 தட்சிணுமூர்த்தி .. .. | மலங்கைமான் காவல் நிலையம் 187/70–ம் எண் குற்றத்தில் சம்பந்தபபட்டவர். |
| 2 குழந்தைவேலு .. ..<br>3 முருகையா .. ..<br>4 தட்சிணுமூர்த்தி .. ..<br>5 தண்டபாணி .. .. | குடவாசல் காவல் நிலையம் 124/70–ம் எண் குற்றத்தில் சம்பந்தப்பட்டவர்கள். |
| 6 டெருமாள் .. .. | பாபனுசம் காவல் நிலையம் 135/70–ம் எண் குற்றத்தில் சம்பந்தப்பட்டவர். |
| 7 குலாம் காதர் .. ..<br>8 கிருஷ்ணன .. ..<br>9 சாண்டியாகு .. .. | அய்யம்பேட்டை காவல் நிலையம் 453/70–ம் எண் குற்றததில் சம்பந்தப்பட்டவர்கள். |
| 10 கிருஷ்ணமூர்த்தி .. ..<br>11 மதுரை மணி .. .. | போளம் காவல் நிலையம் 272/70–ம் எண் குற்றததில் சம்பந்தப் பட்டவர்கள். |
| 12 சுப்பிரமணியம் .. ..<br>13 கலியபெருமாள .. ..<br>14 கணேசன் .. ..<br>15 நாகப்பன் என்கிற மணி ..<br>16 சுப்பிரமணியம் .. ..<br>17 தங்கவேலு .. ..<br>18 கிருஷ்ணமூர்த்தி .. .. | குத்தாலம் காவல் நிலையம் 157/70–ம் எண் குற்றததில் சம்பந்தப்பட்டவர்கள். |
| 19 ஸ்வேதராஜன் .. ..<br>20 கலியபெருமாள் .. .. | திருவெங்காடு காவல் நிலையம் 305/70-ம் எண் குற்றத்தில் சமபந்தப்பட்டவர்கள் |
| 21 சின்னையன் .. ..<br>22 ரத்தினம் .. .. | கிவளூர் காவல் நிலையம் 380/70-ம் எண் குற்றத்தில் சம்பந்தப்பட்டவர்கள் |
| 23 என். வடிவேல் பண்டாரம் ..<br>24 மூர்த்தி .. .. | அறந்தாங்கி காவல் நிலையம் 578/70-ம் எண் குற்றத்தில் சமபநதப்பட்டவர்கள் |
| 25 ஜகன்னாத பக்தர் .. ..<br>26 ஜயராமன் .. ..<br>27 கலியமூர்த்தி என்கிற கலியன் | திருவாரூர் கிராமக் காவல் நிலையம் 328/70-ம் எண் குற்றத்தில் சம்பந்தடபட்டவர்கள். |
| 28 சம்பந்தம் .. .. | பாபனுசம் வட்டக் காவல் நிலையம் 240/70-ம் எண் குற்றத்தில் சம்பந்தப்பட்டவர்கள். |





| | |
|---|---|
| 29 மணி .. ..<br>30 கல்யாண சுந்தரம் .. | பொறையார் காவல் நிலையம் 445/70-ம் எண் குற்றத்தில் சம்பந்தப்பட்டவர்கள். |
| 31 ரஹமதுல்லா .. ..<br>32 நாகலிங்கம் .. .. | நீடாமங்கலம் காவல் நிலையம் 222/70–ம் எண் குறறத்தில் சம்பந்தப்பட்டவர்கள். |
| 33 பாண்டியன் .. ..<br>34 நாகராஜன் .. .. | திருவாரூர் நகரக் காவல் நிலையம் 433/70–ம் எண் குற்றத்தில் சம்பந்தப்பட்டவர்கள். |
| 35 சின்ன கொழந்தை ..<br>36 பாலகிருஷ்ணன் .. .. | குத்தாலம் காவல் நிலையம் 232/70–ம் எண் குற்றத்தில் சம்பந்தப்பட்டவர்கள். |
| 37 சின்னதுரை .. .. | கந்தர்வகோட்டை காவல் நிலையம் 174/70–ம் எண் குற்றத்தில் சம்பந்தப்பட்டவர்கள். |
| 38 தர்மன் .. ..<br>39 ஆறுமுகம் .. .. | மணல்மேடு காவல் நிலையம் 398/70–ம எண் குற்றததில் சம்பந்தப்பட்டவர்கள். |
| 40 ஏகாம்பரம் .. ..<br>41 மருதமுத்து .. .. | திருவையாறு காவல் நிலையம் 392/70–ம் எண் குற்றத்தில் சம்பநதபபட்டவர்கள். |
| 42 பாலகிருஷ்ணன் .. ..<br>43 திருஞானசம்பந்தம் .. | தலைஞாயிறு காவல் நிலையம் 273/70–ம் எண் குற்றத்தில் சம்பந்தப்பட்டவர்கள் |
| 44 வெங்கடாசலம் .. ..<br>45 வெஙகிட்டு .. .. | அலிவலம் காவல் நிலையம் 187/70–ம் எண் குற்றத்தில் சம்பந்தப்பட்டவர்கள். |
| 46 கோபால் ஐயங்கார் .. | திருவையாறு காவல் நிலையம் 523/70–ம் எண் குற்றத்தில் சம்பந்தப்பட்டவர். |
| 47 ரங்கசாமி .. .. | வலிவலம் காவல் நிலையம் 875/70–ம் எண் குற்றத்தில் சம்பந்தப்பட்டவர். |
| 48 பரமசிவம் .. .. | திருவாரூர் கிராமக் காவல் நிலையம் 898/70–ம் எண் குற்றத்தில் சம்பந்தப்பட்டவர். |
| 49 சுப்ரமணியன் என்கிற மணி | தஞ்சாவூர் மேற்குக் காவல் நிலையம் 1497/70–ம் எண் குற்றத்தில் சம்பந்தப்பட்டவர்கள். |

| | | |
|---|---|---|
| 50 என். எஸ். சி. முத்தழகு<br>51 மாணிக்கம் | .. | பேராவூரணி காவல் நிலையம் 43/71-ம் எண் குற்றத்தில் சம்பந்தப்பட்டவர்கள். |
| 52 மோஹன்<br>53 சுப்பிரமணியம்<br>54 கலியபெருமாள் | .. | அய்யம்பேட்டை காவல் நிலையம் 73/71-ம் எண் குற்றத்தில் சம்பந்தப்பட்டவர்கள். |
| 55 கோவிந்த பத்தர்<br>56 தனபாக்கியம் | .. | கும்பகோணம் தெற்குக் காவல் நிலையம் 97/71-ம் எண் குற்றத்தில் சம்பந்தப்பட்டவர்கள். |

## இணைப்பு 2

[9-ம் பக்கத்தில் 158-ஆம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

கீழே சொல்லப்பட்டுள்ள இடங்களில் அரசிதழ் பதிவுறு அலுவலர்க்கென தனி மருந்தகங்களை அரசு திறந்துள்ளது.

| தொடர் எண். | தனி மருந்தகம் இணைக்கப்பட்டுள்ள அரசு மருத்துவ மனை | தனி மருந்தகம் திறக்க அரசு ஆணை பிறப்பிக்கப்பட்ட ஆண்டு. |
|---|---|---|
| 1. | அரசு பொது மருத்துவமனை, சென்னை | 1961 |
| 2. | அரசு ஸ்டான்லி மருத்துவமனை, சென்னை | 1961 |
| 3. | அரசு கஸ்தூரிபா காந்தி தாய் சேய் நல மருத்துவமனை, சென்னை | 1961 |
| 4. | அரசு இராசா மிராசுதார் மருத்துவமனை, தஞ்சை | 1961 |
| 5. | அரசு எர்ஸ்கின் மருத்துவமனை, மதுரை | 1961 |
| 6. | அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை, திருச்சிராப்பள்ளி | 1964 |
| 7. | அரசு பென்ட்லண்ட் மருத்துவமனை, வேலூர் | 1964 |
| 8. | கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி, மருத்துவமனை, கோயம்புத்தூர் | 1964 |
| 9. | திருநெல்வேலி மருத்துவக்கல்லூரி மருத்துவமனை, பாளையங்கோட்டை | 1965 |
| 10. | அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை, கடலூர் | 1965 |
| 11. | அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை, சேலம் | 1965 |
| 12. | அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை, உதகமண்டலம் | 1971 |



| தொடர் எண். | தனி மருந்தகம் இணைக்கப்பட்டுள்ள அரசு மருத்துவ மனை | தனி மருந்தகம் திறக்க அரசு ஆணை பிறப்பிக்கப்பட்ட ஆண்டு. |
|---|---|---|
| 13. | அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை, நாகர்கோவில் | 1971 |
| 14. | அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை, காஞ்சீபுரம் | 1972 |
| 15. | அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை, தர்மபுரி | 1972 |
| 16. | அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை, இராமநாதபுரம் | 1972 |
| 17. | அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை, திண்டுக்கல் | 1973 |
| 18. | அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை, நாகப்பட்டினம் | 1973 |
| 19. | அரசுமாவட்ட தலைமை மருத்துவமனை, தூத்துக்குடி | 1973 |

**சென்னை நகரில் கீழே சொல்லப்பட்டுள்ள இடங்களிலும் அரசிதழ் பதிவுறு அலுவலர்க்கென தனி மருந்தகங்களை அரசு திறந்துள்ளது.**

| | | |
|---|---|---|
| 20. | அரசு தலைமைச் செயலகம், புனிதர் ஜியார்ஜ் கோட்டை | 1968 |
| 21. | அரசு எஸ்டேட், அண்ணாசாலை | 1960 |
| 22. | அரசு அலுவலகம், சேப்பாக்கம் | 1965 |
| 23. | நாடண்டர் நகர், சைதாப்பேட்டை | 1965 |
| 24. | அரசு ஊழியர் குடியிருப்பு, பட்டினப்பாக்கம் | 1965 |

**சென்னை நகரில் கீழே சொல்லப்பட்டுள்ள இடங்களில் அரசிதழ் பதிவுறு அலுவலர்க்கென தனி சித்த மருந்தகங்களை அரசு திறந்துள்ளது.**

| | | |
|---|---|---|
| 25. | அரசு தலைமைச் செயலகம், புனிதர் ஜியார்ஜ் கோட்டை | 1968 |
| 26. | அரசு அலுவலகம், சேப்பாக்கம் | 1971. |

## இணைப்பு 3.

[29-ம் பக்கத்தில் 176-ம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

### 1. *Steps taken to intensify collection:*

Agricultural Income-tax is being levied on the agricultural income of assessees by the Agricultural Income-tax Officers. Notices of Demand are issued to the assessees for the sums levied

directing them to pay the tax demanded within 21 days from the date of receipt. If the assessees fail to pay the tax within 21 days from the date of service of notices of demand, the Agricultural Income-tax Officer sends a certificate under section 41 (1) of the Tamil Nadu Agricultural Income-Tax Act, 1955 to the Collector of the District concerned to recover the tax from the assessees under the provision of the Revenue Recovery Act, as if it were an arrear of land revenue, as the Agricultural Income-Tax Officers themselves are not vested with the powers under the Revenue Recovery Act for the collection of the tax as arrears of land revenue. Even though certificates under section 41 (1) of the Act are sent to the Collector for recovery of the arrears of tax under the Revenue Recovery Act, the Agricultural Income-tax Officers also continue their efforts and try to collect the arrears by persuasive methods by contacting the assessees in person during their camps. The progress of collection is critically reviewed by the Commissioner of Agricultural Income-tax by getting monthly and fortnightly reports from the Assistant Commissioners of Agricultural Income-tax. The Commissioner and the Assistant Commissioners of Agricultural Income-tax also during their camps review the progress of collection of Agricultural Income-tax and give instructions to them regarding the steps to be taken for the early realisation of arrears of tax.

The progress of collection of arrears of Agricultural Income-tax by the Revenue officials under the Revenue Recovery Act in cases for which certificates have been sent to the Collector by the Agricultural Income Tax Officers is being critically reviewed every month by the Board of Revenue (Agricultural Income-tax) and instructions are issued by the Board to the Collectors and the District Revenue Officers concerned if there are heavy arrears in their districts. Instructions are also issued by the Commissioner at frequent intervals to the Assistant Commissioners and Agricultural Income-Tax Officers to launch a special drive as and when the need for such steps are found necessary. For watching the collection of long pending arrears, a special fortnightly periodical has been prescribed and the collection work is being critically reviewed by the Commissioner.

Besides this, during his tours, the Commissioner of Agricultural Income-tax contacts, the Collectors and the District Revenue Officers and requests them in person, to step up the progress of



collection of agricultural income-tax arrears under the provision of Revenue Recovery Act in cases in which they have been approached under section 41 (1) of the Act.

Consequent on the above measures taken, there has been improvement in the collection of Agricultural Income-tax during the past three years as indicated below :—

| *Year.* | *Amount collected.* |
|---|---|
| | RS. |
| 1970–71 ... ... ... ... | 1,93,83,147 |
| 1971–72 ... ... ... ... | 2,15,13,000 |
| 1972–73 ... ... ... ... | 2,26,34,803 |

2. *Steps taken to check tax evations.*

From the assessment year 1972–73 onwards, a special register is being prepared every year for each village showing the names of probable ryots who were likely to come under the purview of the Tamil Nadu Agricultural Income-tax Act, 1955 and details of lands held by them. The names of other villages where these ryots hold lands in addition are also indicated in this register. The entries in this register are also verified by the Agricultural Income-tax Officers, Assistant Commissioners and the Commissioner during their camps to the villages, so that the Karnams may not omit any of the probable assesses. Having this register as a basic record, the Agricultural Income-tax Officers proceed to make detailed enquiries and bring the new cases to the General Index Register for the purposes of levy of Agricultural Income-tax. The Agricultural Income-tax Officers also compare the entries in the register of different villages to find out the names of assessees who are having lands in different villages. Every month, the Assistant Commissioners of Agricultural Income-tax send reports to the Commissioner of Agricultural Income-tax showing the progress in the detection of evasion cases.
The Commissioner reviews the work critically and gies instructions wherever necessary.

The number of new cases detected during 1972–73 and from 1st April to 30th June 1973 are furnished below :—

| Period | | New cases detected. |
|---|---|---|
| 1st April 1972 to 31st March 1973 | ... ... | 12,656 |
| 1st April 1973 to 30th June 1973 | ... ... | 1,836 |

Further, in order to intensify the work on detection of tax evasion, a new scheme has recently been envisaged by this department. According to this scheme all the Agricultural Income-tax Officers have to prepare a list of land owners from the Agricultural Census Register in the alphabetical order for each taluk. Each Assistant Commissioner of Agricultural Income-tax will convene a meeting of all the Agricultural Income-tax Officers in his jurisdiction, compare the lists prepared by the Agricultural Income-tax Officers and locate the individuals holding lands in more than one Taluk or one District and aggregate their holdings for the purpose of levy of Agricultural Income-tax. Then at the State level a similar comparison and check of the lists is made to detect evasion.

1. வரி வசூலை மும்முரப்படுத்துவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்.—வேளாண்மை வருமான வரி, வரி விதிக்கப்படுபவரின் வேளாண்மை வருமானத்தின்மீது வேளாண்மை வருமான வரி அதிகாரிகளால் விதிக்கப்பட்டு வருகிறது. விதிக்கப்பட்ட வரித் தொகை குறித்து வரி விதிக்கப்பட்டவர்களுக்கு கேட்பு அறிவிப்புகள் அனுப்பப்படுகின்றன. அந்த கேட்பு அறிவிப்பு கிடைக்கப்பெற்ற நாளிலிருந்து 21 நாட்களுக்குள் வரியைச் செலுத்துமாறு அதில் உத்தரவிடப்பட்டிருக்கும். கேட்பு அறிவிப்புகள் கொடுக்கப்பட்ட நாளிலிருந்து 21 நாட்களுக்குள் வரி விதிக்கப்பட்டவர் வரியைச் செலுத்தத் தவறினல், வரி வசூல் சட்டத்தின் விதித் துறைகளின் கீழ் அந்த வரியை நிலவரிப் பாக்கியைப் போன்று வரி விதிக்கப்பட்டவர்களிடமிருந்து வசூலிக்குமாறு, வேளாண்மை வருமான வரி அதிகாரி தமிழ்நாடு 1955-ஆம் ஆண்டு வேளாண்மை வருமான வரிச் சட்டத்தின் 41 (1) பிரிவின்கீழ் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவருக்குச் சான்றிதழ் ஒன்றை அனுப்புகிறார். ஏனெனில், வேளாண்மை வருமான வரியை நிலவரிப் பாக்கி போன்று வசூலிக்க வரி வசூல் சட்டத்தின்கீழ் வேளாண்மை வருமான வரி அதிகாரிகளுக்கு அதிகாரங்கள் வழங்கப்படவில்லை. வரி வசூல் சட்டத்தின்கீழ் வரிப் பாக்கியை வசூலிக்குமாறு மேற்படி சட்டத்தின் 41 (1) பிரிவின்கீழ் மாவட்ட ஆட்சித் தலைவருக்குச் சான்றிதழ்கள் அனுப்பப்பட்ட போதிலும், வேளாண்மை



வருமான வரி அதிகாரிகள் தங்களது முகாம்களின்போது வரி விதிக்கப்பட்டவர்களை நேரடியாகச் சந்தித்து தூண்டுதல் முறைகள் மூலம் வரிப் பாக்கியை வசூலிக்கும் முயற்சிகளை மேற்கொள்கின்றனர். வேளாண்மை வருமான வரித்துறையின் உதவி ஆணையாளர்களிடமிருந்து மாதாந்திர அறிக்கைகளையும் மாதத்திற்கு இருமுறை அனுப்பப்படும் அறிக்கைகளையும் பெறுவதன் மூலம் வேளாண்மை வருமான வரி ஆணையாளர், வரி வசூலிப்பதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து நுண்ணாய்வு செய்கிறார். வேளாண்மை வருமான வரி ஆணையாளரும் உதவி ஆணையாளர்களும் கூட, தங்களது முகாம் காலங்களில், வேளாண்மை வருமான வரி வசூலிப்பில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்து, வரிப் பாக்கியை விரைவில் வசூலிப்பதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அவர்களுக்கு உத்தரவிடுகிறார்கள்.

வேளாண்மை வருமான வரி அதிகாரிகளினல் மாவட்ட ஆட்சித் தலைவருக்குச் சான்றிதழ்கள் அனுப்பப்பட்டுள்ள நேர்வுகளில், வரி வசூல் சட்டத்தின்கீழ் வருவாய்த்துறை அதிகாரிகள் வேளாண்மை வரிப் பாக்கியை வசூலிப்பதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து வருவாய்த்துறை வாரியம் (வேளாண்மை வருமான வரி) ஒவ்வொரு திங்களும் நுண்ணாய்வு செய்து, எந்த மாவட்டங்களிலேனும் அதிகப் பாக்கி இருப்பின் அந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள், சம்பந்தப்பட்ட மாவட்ட வருவாய்த்துறை அதிகாரிகள் ஆகியோருக்கு உத்திரவுகள் பிறப்பிக்கிறது. சிறப்பு நடவடிக்கைகள் எடுக்க வேண்டியது அவசியமெனத் தெரியவரும்பொழுதெல்லாம், ஆணையாளர், உதவி ஆணையாளர்களுக்கும் வேளாண்மை வருமான வரி அதிகாரிகளுக்கும் அடிக்கடி உத்தரவுகள் பிறப்பிக்கிறார். நீண்ட காலப் பாக்கித் தொகை வசூலிக்கப்படுவதைக் கவனித்து வருவதற்காக, சிறப்பு இருவார விவரக் கணக்கு ஒன்று வரையறுக்கப்பட்டுள்ளது. வசூலிப்புப் பணியை ஆணையாளர் நுண்ணாய்வு செய்கிறார்.

இதைத் தவிர, வேளாண்மை வருமான வரித் துறை ஆணையாளர் தனது சுற்றுப்பயணத்தின்போது, மாவட்ட ஆட்சித் தலைவர்களையும், மாவட்ட வருவாய்த்துறை அதிகாரிகளையும் நேரடியாகச் சந்தித்து, வரி வசூலிப்புச் சட்டத்தின் 41 (1) பிரிவின்கீழ் எந்தெந்த நேர்வுகளில் அவர்களுக்குக் கடிதம் எழுதப்பட்டுள்ளதோ அந்த நேர்வுகளில் மேற்படி சட்டத்தின் விதித்துறைகளின்கீழ் வேளாண்மை வருமான வரிப் பாக்கிகள் வசூலிப்பதை விரைவுபடுத்துமாறு கேட்டுக்கொள்கிறார்.

மேற்படி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதன் பயனாக, கடந்த மூன்று ஆண்டுகளில் வேளாண்மை வருமான வரி வசூலில், முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. அதன் விவரம் வருமாறு :—

| ஆண்டு | வசூலிக்கப்பட்ட தொகை ரூபாய் |
|---|---|
| 1970—71 | 1,93,83,147 |
| 1971—72 | 2,15,13,000 |
| 1972—73 | 2,26,34,803 |

2. வரி ஏய்ப்பைத் தடுக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்.—1972—73-ஆம் வரி மதிப்பீட்டு ஆண்டிலிருந்து, தமிழ்நாடு 1955-ஆம் ஆண்டு வேளாண்மை வருமான வரிச் சட்டத்தின் வரம்பிற்குள் வரக்கூடிய உழவர்களின் பெயர்களையும் அவர்கள் வைத்து வருகிற நிலங்கள் பற்றிய விவரங்களையும் காட்டும் தனிப்பதிவேடு ஒன்று ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒவ்வோர் ஆண்டும் தயாரிக்கப்பட்டு வருகிறது. இந்த நிலங்களைத் தவிர இவர்கள் நிலங்கள் வைத்துள்ள பிற கிராமங்களின் பெயர்களும் கூட இந்தப் பதிவேட்டில் குறிப்பிடப்படுகின்றன. வரி விதிக்கப்படக்கூடிய உழவர் எவரையும் கர்ணம் விட்டுவிடாத வகையில், வேளாண்மை வருமான வரி அதிகாரிகள் உதவி ஆணையாளர்கள், ஆணையாளர் ஆகியோரும் தாங்கள் அக் கிராமங்களில் முகாமிடும் காலங்களில் இப்பதிவேட்டில் உள்ள பதிவுகளைச் சரிபார்க்கின்றனர். இந்தப் பதிவேட்டை அடிப்படை ஆவணமாகக் கொண்டு, வேளாண்மை வருமான வரி அதிகாரிகள் விரிவாக விசாரணை நடத்தி வேளாண்மை வருமான வரி விதிக்கப்படுவதற்காக புதிய உழவர்களின் பெயர்களை பொதுக் குறியீட்டுப் பதிவேட்டில் பதிவு செய்கின்றனர். வெவ்வேறு கிராமங்களில் நிலங்கள் வைத்துள்ள வரி விதிக்கப்பட்டவர்களின் பெயர்களைக் கண்டறியும் பொருட்டு, வெவ்வேறு கிராமங்களின் பதிவேடுகளில் உள்ள பதிவுகளையும் வேளாண்மை வருமான வரி அதிகாரிகள் ஒப்பிட்டுப் பார்க்கின்றனர். வரி ஏய்ப்புகளைக் கண்டு பிடிப்பதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தைக் காட்டும் அறிக்கைகளை ஒவ்வொரு திங்களும் வேளாண்மை வருமான வரி உதவி ஆணையாளர்கள் வேளாண்மை வருமான வரி ஆணையாளருக்கு அனுப்பி வைக்கிறார்கள். ஆணையாளர் இதனை நுண்ணாய்வு செய்து அவசியமாயுள்ள நேர்வுகளில் உத்தரவுகள் பிறப்பிக்கிறார்.



1972-73 ஆம் ஆண்டிலும் 1—4—1973 முதல் 30—6—1973 வரையிலும் கண்டுபிடிக்கப்பட்ட புதிய நேர்வுகளின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| காலம் | கண்டுபிடிக்கப் பட்டவை |
|---|---|
| 1—4—1972 முதல் 31—3—1973 வரை | 12,656 |
| 1—4—1973 முதல் 30—6—1973 வரை | 1,836 |

மேலும் வரி ஏய்ப்பைக் கண்டுபிடிக்கும் பணியை மும்முரப் படுத்துவதற்காக புதிய திட்டம் ஒன்றை இத்துறை வகுத்துள்ளது. இத்திட்டத்தின்படி, வேளாண்மை வருமான வரி அதிகாரிகள் அனைவரும், வேளாண்மைப் புள்ளி விவரப் பதிவேட்டிலிருந்து அகர வரிசைப்படி ஒவ்வொரு வட்டத்திற்கும் நிலச் சொந்தக்காரர்கள் பட்டியல் ஒன்றைத் தயாரிக்க வேண்டும். வேளாண்மை வருமான வரி உதவி ஆணையாளர் ஒவ்வொருவரும் தனது ஆட்சி வரம்பிற்குட்பட்ட வேளாண்மை வருமான வரி அதிகாரிகளைக் கூட்டி, வேளாண்மை வரி அதிகாரிகளினால் தயாரிக்கப்பட்ட பட்டியல்களை ஒப்பிட்டுப் பார்த்து, ஒன்றுக்கு மேற்பட்ட வட்டங்களில் அல்லது மாவட்டங்களில் நிலங்கள் வைத்துள்ளவர்களைக் கண்டுபிடித்து வேளாண்மை வருமான வரி விதிப்பதற்காக அவர்களின் உடைமைகளை ஒன்றாகக் கூட்டுகின்றனர். பின்னர், மாநில அளவில் ஒருமுறை இதே போன்று ஒப்பு நோக்கப்பட்டு, வரி ஏய்ப்பைக் கண்டுபிடிப்பதற்காகப் பட்டியல்கள் சரிபார்க்கப்படுகின்றன.

## இணைப்பு 4.

[79-ம் பக்கத்திலுள்ள அடிக் குறிப்பைக் காண்க.]

தமிழ் நாடு மின்சார வாரியத்தின் 1973-74-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கை குறித்தும், 1972-73-ம் ஆண்டு துணை நிதிநிலை அறிக்கை குறித்தும், 19 நவம்பர் 1973 ஆம் நாளன்று தமிழ் நாடு சட்டப் பேரவையில் விவாதத்தைத் தொடங்கி வைத்து, மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் திரு. ஓ. பி. இராமன் அவர்கள் ஆற்றிய உரை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ் நாடு மின்சார வாரியத்தின் 1973-74-ம் ஆண்டு நிதி நிலை அறிக்கையும் 1972-73-ம் ஆண்டு துணை நிதிநிலை அறிக்கையும் இம்மன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ளன. இவற்றை, இம்மன்றம் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென வேண்டுகின்றேன்.

2. 1948-ம் ஆண்டு மின்சார (வழங்கல்) சட்டத்தின் 61-வது பிரிவின்படி, தமிழ் நாடு மின்சார வாரியக் கருத்துரைக் குழுவின் ஒப்புதலைப் பெற்றபின் இந்த நிதி நிலை அறிக்கைகளை, அரசுக்கு தமிழ் நாடு மின்சார வாரியம் அனுப்பியது. ஆண்டு நிதி நிலை அறிக்கையும், துணை நிதி நிலை அறிக்கையும், சட்டமன்றத்தினுல் விவாதிக்கப்படலாம் என்றாலும், இவை வாக்கெடுப்புக்கு உட்பட்டவை அல்ல. எனினும், இவ்வறிக்கைகள் குறித்து சட்டமன்றத்தில் கூறப்படும் கருத்துக்களை, மின்சார வாரியம் ஆழ்ந்து சிந்தித்து ஆவன செய்யும். கடந்த ஆண்டு மின்சார வாரியத்தின் நிதி நிலை அறிக்கைகளின் பேரில் நடந்த விவாதத்தில் எடுத்துக் கூறப்பட்ட கருத்துக்களின் பேரில் மின்சார வாரியம் எடுத்துள்ள நடவடிக்கைகளை விவரிக்கும் அறிக்கை ஒன்று மாண்புமிகு உறுப்பினர்களுக்கு தனியாக அனுப்பப்பட்டுள்ளது.

3. பொருளாதார வளர்ச்சிக்கு இன்றியமையாத அடித்தளமாகத் திகழ்கிறது மின்சாரம். மனித வாழ்வின் எல்லா அம்சங்களிலும் மின்சாரம் தேவைப்படுகிறது. தொடர்ந்து ஏற்பட்டு வரும் வளர்ச்சிக்கு, குறிப்பாக, தொழில் துறையிலும் வேளாண்மைத் துறையிலும் காணப்படும் வளர்ச்சிக்கு உறுதுணையாக மின்சக்தியும் வளர்ச்சி பெற்று இருக்க வேண்டும் என்பதிலே இந்த அரசு மிகுந்த அக்கறை எடுத்துக் கொண்டுள்ளது.

4. பதினேழு நீர் மின் உற்பத்தி நிலையங்களின் 1,224 மெகாவாட்டுகளும், நெய்வேலி அனல் மின் நிலையத்தின் 600 மெகாவாட்டுகளையும் சேர்த்து, என்னூர், பேசின் பிரிட்ஜ் ஆகிய இரு அனல் மின் நிலையங்களின் 430 மெகாவாட்டுகளையும் உள்ளடக்கி, தமிழ் நாடு மின் இணைப்பின் இன்றைய நிறுவனத் திறன் 2,254 மெகாவாட்டுகளாகும். 1951-ல் இருந்த நிறுவனத் திறனைவிட இது 14.45 மடங்கு அதிகமானதாகும். பாசனத்துடன் தொடர்பு கொண்டுள்ள நிலையங்கள் கோடை மாதங்களில் மூடப்படும் பொழுது. சேமிப்புகளையும் சேர்த்து, தேவைப்படும் சுமார் 2,010 மெகா வாட்டுக்கு எதிராக உற்பத்தித் திறன் 1.371 மெகாவாட்டாக இருக்கும். கட்டுப்படுத்த முடியாத நிலையில் உள்ள எதிர்பார்க்கப்படுகிற 1,675 மெகா வாட்டு உச்சத் தேவையைச் சமாளிக்க வேண்டியுள்ளது. ஆகவே நடப்பாண்டில் உச்சத் தேவையைச் சமாளிக்க, மின் உற்பத்தித் திறனில் ஏற்படுகின்ற பற்றாக்குறை 639 மெகாவாட்டுகளாக இருக்கும்.

5. சென்ற ஆண்டு நவம்பரில், இந்த மாமன்றத்தின் முன்னால் நிதி நிலை அறிக்கையானது விவாதத்திற்கு வைக்கப்பட்டபொழுது, 25 சதவிகித மின் வெட்டானது அமுலிலிருந்தது. அதைத் தொடர்ந்து மிக நெருக்கடியான ஒரு நிலை ஏற்பட்டு, 75 சதவிகித வெட்டு அமுல்படுத்தப்பட்டது. இப்படிப்பட்ட ஒரு நிலை உருவாக முக்கிய காரணங்கள் யாவை என்பதையெல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் மறந்திருக்க மாட்டார்கள். தமிழ் நாட்டில் மட்டுமல்ல. அண்டை மாநிலங்களான கேரளம், கர்நாடகம், ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களிலும் தென்மேற்குப் பருவமழை பொய்த்து விட்டது. நெய்வேலியிலிருந்து கிடைக்கும் மின்சாரத்தின் அளவும் குறைந்து விட்டது. தொடர்ந்து மின்சாரத்தின் தேவை பெருகிக்கொண்டே போவதினால், வெளியிலிருந்து கணிசமான அளவுக்கு உதவியினையும் நாம் பெற முடியாமல் போய்விட்டது. இந்த மின் நெருக்கடி தமிழகத்தில் மட்டும் ஏற்படவில்லை. மத்தியப் பிரதேசம் தவிர, நாடு பூராவுமே இநத நெருக்கடியான நிலை ஏற்பட்டது என்பதையும் உறுப்பினர்கள் அறிவார்கள்.





6. மிக நெருக்கடியான மின்வெட்டு இருந்தபொழுது, வாரியத்தின் அனல் மின் நிலையங்களில் மின் உற்பத்தியை எவ்வளவு பெருக்க முடியுமோ அந்த அளவுக்குப் பெருக்குவதற்காக மின்சார வாரியமும், அரசும் இயன்ற எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொண்டன. 1973-ம் ஆண்டின் மிக நெருக்கடியான கோடை மாதங்களில் நெய்வேலி அனல் மின்நிலையத்தின் மின் உற்பத்தியானது கணிசமான அளவுக்கு உயர்த்தப்பட்டது. வாரியமும் அரசும் கேட்டுக் கொண்டதன் பேரில், நெய்வேலி நிலக்கரிக் கழகத்தின் நிலக்கரித் தூளிலான செங்கல் பாளங்கள் தயாரிக்கும் நிலையத்தையும், உரம் உற்பத்தி நிலையத்தையும் மூடிவிடுவதன் மூலமாக, நெய்வேலி நிலக்கரிக் கழகமானது அதிக அளவுக்கு மின்சாரத்தை நமக்குத் தந்தது. நெய்வேலியில் இரண்டு யூனிட்டுகளில் எண்ணெய் மூலமாக எரியவிட்டு மின் உற்பத்தி செய்யவும் நெய்வேலி நிலக்கரிக் கழகம் ஒத்துக்கொண்டது. இதன் விளைவாக, 1974-ம் ஆண்டின் முதல் இரண்டு கால் ஆண்டுகளில் கூடுதல் மின்சாரம் கிடைக்க ஏதுவாகும். இந்த மாற்றத்தினால் கிடைக்கப்பெறும் மின் உற்பத்திக்காகும் அதிகப்படியான செலவினைத் தமிழ் நாடு மின்வாரியம் ஏற்றுக்கொள்ளும். பண்டமாற்று முறையில் மற்ற மாநிலங்களிலிருந்தும் கூடுதலாக மின்சாரம் பெறப்பட்டது. சிமெண்ட், நூல், டயர் ஆகியவற்றிற்குப் பதிலாக கேரளத்திலிருந்தும், டயருக்கு பதிலாக கர்நாடகத்திலிருந்தும் சிமெண்ட் துணி பொறி வண்டியின் அடிச் சட்டங்களுக்குப் ( chassis ) பதிலாக மகாராஷ்டிரத்திலிருந்தும் மின்சாரம் பெறப்பட்டது. இந்த ஏற்பாடுகளின் விளைவாக, 1973 மார்ச்-ஏப்ரலிலிருந்து தொடர்ந்து ஜூலை 1973 வரையிலும் ஒரு நாளைக்கு சுமார் ஐந்து இலட்சம் யூனிட்டுகள் என்ற அளவுக்கு மின்சாரம் பெறப்பட்டது. மகாராஷ்டிரம் மட்டும் 1973 மே திங்கள் முடிவில் தன் சப்ளையை நிறுத்திக் கொண்டது.

7. இந்த ஆண்டு தென்மேற்கு பருவமழை வலுப்பெற்று அதன் விளைவாக, நீர் மின் தேக்கங்களின் நீர்க் கொள்ளளவு நிறைவான முறையில் இருந்தது. இதனால் சிறு தொழில்களுக்கான 75 சத விகித மின்வெட்டினை, 1973 ஜூலைத்

திங்களில் 50 சத விகிதமாகக் குறைக்க நம்மால் முடிந்தது. அத்துடன், பாதுகாப்புச் சம்பந்தமான தொழில்கள், சிமெண்ட், துணி ஆலைகள் போன்ற குறிப்பிடத்தக்க பெரிய முக்கிய தொழில்களுக்கும், எண்ணெய் ஆலைகள் அரிசி மாவு ஆலைகளுக்கும் கணிசமான அளவுக்கு உதவி செய்ய முடிந்தது. வாரியத்தின் அனல் மின் நிலையங்களிலும், நெய்வேலி அனல் மின் நிலையத்திலும் மின் உற்பத்தியானது பெருகியது; நீர்த் தேக்கங்களில் நீரின் கொள்ளளவு நிறைவு அளிக்கும் வகையில் இருக்கவே, எல்லாப் பயனீட்டாளர்கள்மேல் விதிக்கப்பட்டிருந்த மின் வெட்டானது 1973 ஜூலை 17 முதல் அறவே எடுக்கப் பட்டது.

8. 1972-73-ல் மின் சக்தியின் உச்சத் தேவையானது 1,190 மெகாவாட்டை எட்டியது. 1971-72-ல் பதிவான உச்சத் தேவையான 1,326 மெகாவாட்டை விட இது 10.2 சத விகிதம் குறைவு. இந்தச் சமயத்தில் பல்வேறு கட்டுப் பாடுகள் மட்டும் விதிக்கப்படாமலிருந்திருந்தால், 1972-73-ன் உச்சத் தேவை யானது பதிவான உச்சத் தேவையைவிட நிச்சயம் அதிகமாக இருந்திருக்கும். 1960-61-லிருந்து 1971-72-ம் ஆண்டு வரை உள்ள காலத்தில் இருந்த விகித சராசரி உயர்வு உச்சத் தேவை 12.2 சதவிகிதமும், பயன்படுத்தப்பட்ட மின்சார அளவின் உயர்வு 10.7 சத விகிதமும் என்பதை இந்தச் சந்தர்ப் பத்தில் குறிப்பிடுவது பொருத்தமுடையதாக இருக்கும் என நினைக்கிறேன். இந்த உயர்வினைக் கணக்கில் கொண்டு பார்த்தால், 1972-73-ம் ஆண்டுக்கு கட்டுப்படுத்த முடியாத தேவையானது 7,500 மில்லியன் யூனிட்டுகள், 1,480 மெகாவாட்டுகளாக இருந்திருக்க வேண்டும். 1972-73-ல் மின் இணைப்பில் பயன் படுத்தப்பட்ட மின்சாரத்தின் அளவு 6,964 மில்லியன் யூனிட்டுகளாகும்.

9. 1973 ஜூன் திங்களிலிருந்து 1974 மே திங்கள் வரையிலான காலத்திற்கு நிலைமையானது ஆய்வு செய்யப்பட்டபோது, தென்மேற்குப் பருவ மழை அனுகூலமாக இருந்தது என்றாலும், மின்சக்தி உற்பத்தி குறைந்துள்ளது என்பது தெரியவந்தது. இருந்தாலும், பாசனத்துடன் இணைக்கப்பட்டுள்ள நீர் மின் நிலையங்கள் முழு அளவில் இயங்கி வந்தபடியாலும், இரவு நேரங் களில் கர்நாடகத்தில் கொஞ்சம் மின்சாரத்தை நாம் சேமித்து வைக்க முடிந்த படியாலும், செப்டம்பர் 1973 வரை எந்தவிதமான கட்டுப்பாடுகளும் விதிக்கப் படவில்லை. கடந்த 5 ஆண்டுகளின் சராசரி அளவினைவிட செப்டம்பரில் நீர்க் கொள்ளளவு குறைவாகி விட்டது. அடுத்த தென்மேற்கு பருவ மழைக்காலம் வரையில் கிடைக்கின்ற நீரினைத் தேக்கி வைத்துக் கொள்ள வேண்டும். அத்துடன் நெய்வேலி நிலக்கரிக் கழகத்திலிருந்து கிடைக்கின்ற மின்சாரத்தின் அளவு குறைந்து விட்டது. 1973 ஜூலை 31-ம் நாளன்று ஏற்பட்ட தீ விபத்தினால் எண்ணூரில் உள்ள 110 மெகாவாட் நான்காவது





பிரிவு ஓடவில்லை. அத்துடன் நாட்டின் பொருளாதாரத்தை முழுமையான அளவில் கருத்தில் கொண்டு, 1972 அக்டோபரிலிருந்து மின் சப்ளை வேண்டும் என்று காத்துக் கொண்டிருப்பவர்களுக்கு சப்ளை வழங்கப்பட வேண்டியது அவசியம் என அரசு கருதியது.

10. முக்கியமாகத் தொழில் வளர்ச்சியும், வேளாண்மைத் துறையில் வளர்ச்சியும் தடைபடாமல் தொடர்ந்து இருப்பதற்காக வேண்டி, 1973-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 1-ம் நாள் முதல் குறைந்த அளவில் 15 சதவிகித மின் வெட்டானது விதிக்கப்பட்டது. மின் வெட்டு விதிக்கப்பட்ட பொழுது நமது நீர்த்தேக்கங்களில் இருந்த நீர்க் கொள்ளளவு 1971-ல் எந்த நிலையில் இருந்ததோ அதே அளவினதாகத்தான் இருந்தது. ஆனால், ஒவ்வொரு ஆண்டும் 10 சதவிகித உயர்வு என்று எடுத்துக்கொண்டு, இவ்வாண்டு எதிர்பார்க்கப்படுகிற மின்சாரத்தின் தேவையோ 1971-ம் ஆண்டில் இருந்ததை விட சுமார் 21 சதவிகிதம் அதிகமாக இருக்கலாம் என எதிர்பார்க்கப் படுகிறது. மின் வெட்டு உள்ள காலத்திலும் புதிய மின் தொடர்புகள் கொடுக்கப்படுகின்றன. அப்படிக் கொடுப்பது இதுதான் முதல் தடவை யாகும். வடகிழக்கு பருவ மழை ஏமாற்றம் அளிக்காமல் வழக்கம்போல் இருந்து அதனால் 1971-ல் இருந்தது போல நீர்த் தேக்கங்களில் நிறைவு தரும் வகையில் நீர்க் கொள்ளளவு இருக்கும் என வைத்துக்கொண்டாலும். எண்ணூரில் நான்காவது யூனிட் சீக்கிரமே செயல்பட்டாலும், கேரளத்தி லிருந்து 300 மில்லியன் யூனிட் மின்சாரம் கிடைத்தாலும், அத்துடன் எண்ணூர் பேசின் பிரிட்ஜ் அனல் மின் நிலையங்கள் திருப்திகரமான நிலையில் இயங்கினாலும், இத்தனை இருந்தும், அக்டோபர் 1973 முதல் 1974 மே வரை யிலான காலத்திற்கு 536 மில்லியன் யூனிட்டுகள் பற்றாக்குறை இருக்கும் என்பதால், இந்த 15 சதவிகித மின் வெட்டு விதிக்கப்பட்டதற்கான காரணங் கள் நியாயமானவையாகும் எனத் தெளிவாகப் புரிந்துகொள்ளலாம். 1973 டிசம்பர் மத்தியில் மின் நிலையைப் பரிசீலித்துப் பார்த்து, எதிர்பார்ப்பதைவிட நிலைமைகள் திருப்திகரமானதாக இருப்பதாகத் தெரிந்தால், கட்டுப்பாடுகள் தளர்த்தப்படும்.

11. கேரளம், ஆந்திரப் பிரதேசம், மற்ற மாநிலங்களிலிருந்தும் மின்சாரத்தைப் பெற சிறப்பு ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகின்றன. இருபது சதவிகித மின் வெட்டு தொடர்ந்து கர்நாடக மாநிலத்தில் உள்ளதால், எந்த வித உதவியையும் அளிக்கத் தன்னால் இயலாது என்று கூறிவிட்டது. கொத்தகூடம் 3-வது நிலை 110 மெகாவாட் யூனிட் நிலையானதும், ஆந்திரப் பிரதேசத்திலிருந்து எவ்வளவு மின்சாரம் பெற முடியுமோ அதைப் பெற நாம் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறோம். 1974 மே வரை 300 மில்லியன்

யூனிட்டுகள் பெறுகின்ற வகையில் நவம்பர் 1973-ல் கேரளத்துடன் நாம் ஓர் உடன்பாட்டுக்கு வந்துள்ளோம். ஆந்திரப் பிரதேசம், கேரள மாநிலங்கள் பண்டமாற்று முறையில் நமக்கு மின்சாரம் வழங்க உறுதி அளித்துள்ளன. டயர்களுக்குப் பதிலாக 45,000 யூனிட்டுகள் தர ஆந்திரப் பிரதேசமும், இந்தப் பருவக் காலத்தில் கேரளத்திற்குத் தேவையான சிமெண்ட், நூல், டயர்கள், பொறி வண்டியின் அடித்தளங்களின் கூடுதல் உற்பத்திக்குத் தேவையான மின்சாரத்தினை முழுமையாகத்தர கேரளாவும் உறுதி அளித்துள்ளன. இரண்டு அரசுகளையும் மின்வாரியங்களையும் சேர்ந்த அதிகாரிகளினால் இதற்கான விவரங்கள் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.

12. 1973-ம் ஆண்டு ஜூலை திங்கள் 31-ம் நாள் அன்று எண்ணூரில் உள்ள அனல் மின் நிலையத்தில் ஏற்பட்ட தீ விபத்தின் காரணமாக நான்காவது யூனிட்டின் மின் மாற்றி பழுதடைந்து மின்சார உற்பத்தி தடைபட்டது. மூன்றாவது யூனிட்டின் மின் மாற்றியின் புஷ்ஷிங்குகளையும் சோதனை செய்து தான் மறுபடி இயங்கவேண்டும் என்பதனால், இந்த யூனிட்டிலும் ஓரளவு தாமதம் ஏற்பட்டது. தீ விபத்தின் காரணங்களை அறிந்து அவற்றைத் தவிர்க்க, திரு மகாலிங்கம் அவர்களின் தலைமையில் இன்னும் இரண்டு நிபுணர்களைக் கொண்ட குழு ஒன்றை அரசு நியமித்தது. குழுவின் அறிக்கை வரப் பெற்று, அதன் ஆலோசனைகளை நடை முறைக்குக் கொண்டுவரவும், அவர்கள் கண்டறிந்த குறைகளுக்குப் பொறுப்பானவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும் மின் வாரியம் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது. போபாலில் உள்ள ஹெவி எலக்ட்ரிகல்ஸ் (இந்தியா) லிமிடெட் நிறுவனத்தின் மூலம் சேதமடைந்து போன மின் மாற்றியை பழுது பார்த்து சரி செய்ய ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன. 1974 முதல் கால் ஆண்டில் இந்தப் பொறி மறுபடியும் இயங்கு கின்ற நிலையில் தயாராகிவிடும் என எதிர்பார்க்கலாம். எண்ணூர் அனல் மின் நிலையத்தில் கடல் நீரினை உப்பங்கழிக்குள் செல்லவிடாமல் தடுத்து விடுகின்ற முறையில் மணல் தடுப்பு ஏற்பட்டு அதனால் ஏற்படும் சிரமங்களைப் பற்றி என்னுடைய கடந்த ஆண்டு வரவு-செலவுத் திட்ட உரையில் நான் குறிப்பிட்டிருந்தது மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நினைவிருக்கலாம். அங்கு நிறுவப்பட்டுள்ள இரண்டு மணல் ஏற்றுக் குழாய்களில் சில கருவி மாற்றங்கள் செய்வதன் மூலம் மணலை ஓரளவு எடுப்பதற்கான ஏற்பாடுகள் முன்பே செய்யப்பட்டுள்ளன. இந்த மணல் தடுப்பினை நீக்கத் தகுந்த டிரெட்ஜர் கருவி ஒன்றினை வாங்குவதற்காக வேண்டி, ஐரோப்பாவுக்கும், இங்கிலாந்து நாட்டுக்கும் மின் வாரியத் தலைவரும் வாரியத்தின் சம்பந்தப்பட்ட தலைமைப் பொறியாளரும் 1973 ஆகஸ்டில் அனுப்பப்பட்டனர் என்பதைக் குறிப்பிட விழைகிறேன். இந்த முயற்சிகளின் விளைவாக, ஹாலந்து நாட்டிலிருந்து





சுமார் 70 இலட்சம் ரூபாய் விலை மதிப்புள்ள ஒரு டிரெட்ஜர் கருவியினை வாங்குவதற்கான பேச்சு வார்த்தைகள் இறுதி வடிவம் பெற்று வருகின்றன. இந்தக் கருவி வாங்குவதின் மூலம், எண்ணூரில் உள்ள மணல் தடுப்புப் பிரச்னை அறவே போக்கப்பட்டு விடலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

13. ஒவ்வோர் ஆண்டும் சராசரி 12.5 சத விகித உச்சத் தேவை ( peak demand ) உயர்வு ஏற்படலாம் என்றுள்ள நிலையில், ஐந்தாவது திட்டக் காலமுடிவில் (1978-79) நம்முடைய தேவை 3,620 மெகாவாட்டுகளாக இருக்கும். ஐந்தாவது திட்ட முடிவில் உற்பத்தியாகின்ற மின்சாரத்தின் அளவுக்கும் நம்முடைய தேவைக்கும் இடையே உள்ள இடைவெளி 2,189 மெகாவாட்டுகளாக இருக்கும். இந்தப் பற்றுக்குறை நிலையினைச் சமாளிக்க பல புதிய மின் திட்டங்கள் தீட்டப் பட்டுள்ளன. பாசனம், மின்சக்தி அமைச்சகத்தினால் செயல் படுத்த யோசனைகூறப்பட்டுள்ள மின் உற்பத்தித் திட்டங்கள் வருமாறு :—

| | மெகாவாட். |
|---|---|
| 1. எண்ணூர் ஐந்தாவது யூனிட் | 110 |
| 2. குந்தா நான்காவது நிலை | 110 |
| 3. கல்பாக்கம் அணு மின் நிலையம் (400 மெகாவாட்டில்). | 3000 |
| 4. சுருளியாறு | 35 |
| 3. கல்பாக்கம் அணு மின் நிலையம் (400 மெகாவாட்டில்). திட்டம். | 300 |
| 6. தூத்துக்குடி அனல் மின் திட்டம். | 400 |
| 7. நெய்வேலியில் 2 யூனிட்டுகளை எண்ணெய் மூலமாக எரிய வைக்கும் முறைக்கு மாற்றுவதின் விளைவாகக் கிடைக்கும் கூடுதல் பயன். | 100 |
| மொத்தம் | 1,155 |

14. ஆண்டுதோறும் 12.5 சத விகித உயர்வு இருக்கும் என்று வைத்துக் கொண்டு பார்த்தால், 1978-79-ல் நம்முடைய மின்சாரத் தேவை 15,490 மிலியன் யூனிட்டு களாகவும், 1983-84-ல் 27,920 மிலியன் யூனிட்டுகளாகவும் இருக்கும் என கணக்கிடப் பட்டுள்ளது. இப்பொழுது பணி நடைபெற்று வரும் அனுமதிக்கப்பட்டதுமான மின் உற்பத்தித் திட்டங்களைக் கணக்கில் கொண்டு பார்த்தால், மொத்தம் பற்றுக்குறை 1978-79-ல் 2,215 மிலியன் யூனிட்டுகளும் 1983-84-ல் 14,645 மிலியன் யூனிட்டுகளுமாகவும் இருக்கும்.

[1973 நவம்பர் 19

17. முன்பே அனுமதி வழங்கப்பட்டு பணிகள் நடை பெற்று வருகின்ற திட்டங்கள்—அவை எந்தெந்த ஆண்டுகளில் செயல்படத் துவங்கும் என்பது பற்றிய விவரங்கள் வருமாறு :—

| ஆண்டு. | மெகாவாட். |
|---|---|
| 1976-எண்ணூர் 5-வது யூனிட் (2-வது நிலை). | 110 |
| 1977-குந்தா 4-வது நிலை | 110 |
| கல்பாக்கம் அணு மின் நிலையம் 1-வது யூனிட் | 235 |
| 1978-சுருளியாறு நீர் மின் திட்டம் | 35 |
| 1978 கல்பாக்கம் அணு நிலையம் 2-வது நிலை. | 235 |
| 1979-காடம்பாறை குழாய் நீரேற்று மின் உற்பத்தித் திட்டம் I-வது யூனிட். | 100 |
| மொத்தம் — | 400 |
| 1979-சேர்வலாறு நீர் மின் திட்டம் | 20 |
| 1979-நெல்லித்துறை நீர் மின் திட்டம் | 50 |
| 1979-தூத்துக்குடி அனல் மின் திட்டம் | 400 |

### மின் உற்பத்திக் கழகம்.

மின்சாரத்தின் பலன்களைக் கால தாமதமின்றி நுய்க்கின்ற வகையில், பெரிய மின் திட்டங்களில் ஆழ்ந்த அக்கறையும் கவனமும் செலுத்தி நடைமுறைப்படுத்தவும், நிறுவனங்களிலிருந்து எவ்வளவு நிதி வசதி கிடைக்குமோ அதைப் பெறுவதற்காகவும் மின்சார உற்பத்திக் கழகம் ஒன்றினை அமைப்பது என மாநில அரசு முடிவு செய்துள்ளது. இதற்கென்று தனி அலுவலர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். இந்த மின் உற்பத்திக் கழகத்தினை அமைக்கின்ற பணியானது அவரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

18. மேட்டூர் பகுதியில் ஏற்பட்டுள்ள பெரியதொரு தொழில் வளர்ச்சிக்கு நாம் மின்சாரம் வழங்க வேண்டியுள்ளது. அத்துடன் சேலம் இரும்பாலைத் திட்டமும் உள்ளது. இந்த நிலையில் மேட்டூர் அனல் மின் திட்டத்திற்கு மத்திய அரசின் ஒப்புதல் இன்னும் கிடைக்கப்பெறவில்லை. இந்தச் சூழ்நிலையில், மத்திய அரசுத் துறையின்கீழ் நெய்வேலியில் இரண்டாவது



1973 நவம்பர் 19]

சுரங்கம் வெட்டுவதற்காக அனுமதி உடனடியாக வழங்கப்பட்டாக வேண்டும். 1,000 மெகாவாட் திறன் கொண்ட இரண்டாவது அனல் மின் திட்டத்திற்கான முன்கூட்டிய தொடர் நடவடிக்கையினை துவக்குவதற்காக வேண்டி, இந்த இரண்டாவது சுரங்கம் வெட்டப்படல் வேண்டும். நெய்வேலி நிலக்கரிக் கழகம் தயாரித்துள்ள சாத்தியக் கூறு அறிக்கையின்படி, ஒவ்வொன்றும் 200 மெகாவாட்டுகள் திறன் கொண்ட 5 யூனிட்டுகளும் (அத்துடன் 200 மெகாவாட் யூனிட் பின்னால்) செயல்படத் தொடங்கக் கூடிய கால அளவு பின்வருமாறு அமையலாம் என வகைப்படுத்தப்பட்டுள்ளது :—

முதல் பிரிவு இயங்க : அக்டோபர் 1978.

இரண்டாவது பிரிவு இயங்க : ஜூலை 1979.

மூன்றாவது பிரிவு இயங்க : பிப்ரவரி 1980.

நான்காவது பிரிவு இயங்க : ஜூலை 1980.

ஐந்தாவது பிரிவு இயங்க : பிப்ரவரி 1981.

இந்தத் திட்டமானது உடனடியாக அனுமதிக்கப்பட்டால், 5-வது திட்டக் காலத்தில் 200-லிருந்து 400 மெகாவாட்டுகள் வரை நிறுவனத் திறன் கொண்ட ஒன்று அல்லது இரண்டு யூனிட்டுகள் செயல்படத் துவங்கும்; அதனால் தமிழ் நாட்டிற்கு 180-லிருந்து 360 மிலியன் யூனிட்டுகள் மின்சாரம் கூடுதலாக கிடைக்கும் என நாம் எதிர்பார்க்கலாம். 1968-ம் ஆண்டில் மாநில அரசின் நான்காவது திட்ட வரைவின் செயற்குறிப்புகளை இந்த சந்தர்ப்பத்தில் உங்களுடைய நினைவிற்கு கொண்டுவருவது பொருத்தமுடையதே எனக் கருதுகிறேன். அந்தத் திட்ட வரைவில், கல்பாக்கம் அணு மின் நிலையத்தின் 2-வது பிரிவு துவங்கப்பட வேண்டும்; தூத்துக்குடி பகுதியில் இரண்டாவது அணு மின் உற்பத்தி நிலையம் துவங்கப்பட வேண்டும்; நெய்வேலியில் இரண்டாவது சுரங்கம் வெட்டுதல்; நெய்வேலியில் இரண்டாவது அனல் மின் நிலையம் ஏற்படுத்த வேண்டும் என்பதற்கான செயல் குறிப்புகளை மாநில அரசு வலியுறுத்தியுள்ளது. பம்பாய் அணுயியல் துறையின் இடம் தேர்வுக் குழுவானது, மின்சார வாரியமும் மாநில அதிகாரிகளும், திருநெல்வேலி மாவட்டம் நாங்குநேரி வட்டத்தில் கூடங்குளத்தில் அணு மின் நிலையம் அமைப்பதற்கு வாய்ப்பான இடம் உள்ளது என்று தந்துள்ள விவரங்களை இப்பொழுது ஆய்வு செய்து கொண்டிருக்கிறது. வசதிகள் நிலையை முழுமையாக எடுத்துக்கொண்டாலும், தென் மாநிலங்களில் மின் நிலையங்களை அமைப்பதற்கான வாய்ப்புகளையும் வசதிகளையும் கருத்தில் கொண்டு பார்க்கும் பொழுது, 5-வது திட்டக் காலத்தில் புதிதாக அணு மின் திட்டங்கள்

அமைப்பது குறித்து பரிசீலிப்பதற்கில்லை என இந்திய அரசு அண்மையில் பதில் அனுப்பியுள்ளது. இருந்தாலும், தமிழ் நாட்டின் தென் மாவட்டங்களில் இரண்டாவது அணு மின் நிலையத்தை அமைப்பது குறித்து சாதகமான ஒரு முடிவினை இந்திய அரசு விரைவில் எடுக்க வேண்டுமென தமிழ் நாடு அரசு மீண்டும் வலியுறுத்தும். இது மிகமிக இன்றியமையாத ஒன்றாகும்.

அதே அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்தது, நெய்வேலியில் இரண்டாவது சுரங்கம் வெட்டுவதும். மேலும் மின்சார உற்பத்திக்கான சாத்தியக் கூறுகள். வசதிகள் இந்த மாநிலத்தை பொறுத்தவரையில் மகிழ்ச்சி அளிப்பதாக இல்லை. இந்த மாநிலத்தில் கிடைக்கின்ற எரிபொருள் நெய்வேலி நிலக்கரி ஒன்று தான். மாநிலத்தின் அவசரத் தேவைகளைச் சமாளிக்கவும், எதிர்கால மின் தேவையைச் சமாளிக்கவும், அதற்காக வேண்டி, இந்த நிலக்கரியானது மின் உற்பத்திக்கு அப்படியே முழுமையாகப் பயன்படுத்தப்படவேண்டும். அணு மின் நிலையங்களையும், புதிய அனல் மின் நிலையங்களையுமே அதுவும் குறிப்பாக பெரிய அளவிலான அனல் மின் திட்டங்களையுமே இந்த மாநிலம் நம்ப வேண்டியுள்ளது. இத்துடன் குறுகிய கால நடவடிக்கையாக 300 மெகா வாட் வரையில் திறனுக்கு கேஸ்டர் பென்களை நிறுவுவதற்கான தமிழ் நாடு மின்சார வாரியத்தின் செயற் குறிப்புகளையும் மத்திய அரசு ஒரு சிறப்பு நேர் வாகப் பரிசீலனை செய்து, அதற்குத் தேவையான இறக்குமதிப் பொருட் களுக்கு அனுமதியினை வழங்கிடல் வேண்டும்.

19. மின்சாரத்தினை அனுப்புதல், மின் விநியோகம் செய்தல் திட்டத்தில் ஒரு மிகப் பெரிய பின்னிப் பிணைக்கப்பட்ட மின் இணைப்புத் தொடரை தமிழ் நாடு மின்சார வாரியம் தன்னகத்தே கொண்டுள்ளது. 1973 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாள் அன்றுள்ள நிலவரப்படி, 63,328 கிலோ மீட்டர் நீளமுள்ள கூடுதல் உயர் அழுத்த, உயர் அழுத்தக் கம்பித் தொடர்களும், 1,78,605 கிலோ மீட்டர் நீளமுள்ள குறைவு அழுத்தக் கம்பித் தொடர்களும் உள்ளன. இவற்றில் 3,442 கிலோ மீட்டர் கூடுதல் உயர் அழுத்த, உயர் அழுத்தக் கம்பித் தொடர்களும், 17,451 கிலோ மீட்டர் நீளமுள்ள குறைவு அழுத்தக் கம்பித் தொடர்களும் 1972-73-ல் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளன. 1972-73 ஆம் ஆண்டு இறுதியில், தமிழக மின் இணைப்பில் 262 கூடுதல் உயர் அழுத்த, உயர் அழுத்த துணை மின் நிலையங்கள் உள்ளன.

மின் அழுத்தம் போதிய அளவு இல்லாது குறைந்துள்ள நிலையையும், மற்றும் மின் இணைப்பில் திருப்திகரமில்லாத சப்ளை நிலைமைகளையும் மின் வாரியம் கருத்தில் கொண்டு, பெருந்திட்டம் ஒன்றின்கீழ், ஷண்ட் கெபா சிட்டர்களை நிறுவும் பணியினையும், புதிய துணை மின் நிலையங்களையும் கம்பித்





தொடர்களையும். ஏற்படுத்துவதற்கான பணியினையும் முன்பே ஏற்றுக் கொண்டு செயல்படுத்தி வருகிறது. புதிதாக மின் உற்பத்தி நிலையங்கள் செயல்படத் துவங்கும் நிலையில் மொத்தமாக மின் சக்தியை அனுப்புவதற்கு வழிவகை செய்வதற்காகவேண்டி, 230 கே. வி. அமைப்புக்கென மற்றொரு பெருந்திட்டத்தினைச் செயல்படுத்துவது என வாரியம் கருத்து கொண்டுள்ளது. கொண்டுள்ளது.

மின்சக்தி அனுப்புதல், மின் விநியோகம் ஆகிய பணிகளில் வாரியம் தொடர்ந்து கவனம் செலுத்தி வருகிறது. 1973-74-ம் ஆண்டுக்கு ரூபாய் 11.00 கோடியில் ஏற்றுச்செயல்படவிருக்கும் மின்சக்தி அனுப்புதல், மின் விநியோகம் திட்டத்திலே மேலும் கூடுதலாக 230 கே. வி., 110 கே. வி. 11 கே.வி. மின் அனுப்புக் கம்பித் தொடர்கள், துணை மின் நிலையங்கள், மின் பங்கீட்டுக் கம்பித் தொடர்களை நிறுவும் பணிகளும் நடைபெறும். துணை நிலையங்களில் அதிகத் திறனுள்ள மின்மாற்றிகளை நிறுவுதல், தொடர்புப் பணிகளுக்காக கூடுதலாக கேரியர் வி. எச். எஃப். தொடர்புச் சாதனங்களை அமைத்தல் ஆகியவையும் இந்தத் தலைப்பின் கீழ் செய்யப்படும். 1973-74-ல் 2,600 கிலோ மீட்டர் கூடுதல் உயர் அழுத்த, உயர் அழுத்த கம்பிகள் புதிதாகச் சேர்க்க திட்டமிடப்பட்டுள்ளது.

20. மற்ற மாநிலங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, மிகப் பரந்த அளவிலான மின் அமைப்பு முறை உள்ளதும், மிகப் பிரம்மாண்டமான எண்ணிக்கை அளவில் மின் விசையேற்றங்களைத் தன்னகத்தே கொண் டுள்ள நமது மாநிலத்தில், கம்பிகளில் ஏற்படும் இழப்புகள் அவ்வளவாகப் பொருட் படுத்தக்கூடியதாக இல்லை என்றாலும், வாரியமானது, இந்த இழப்புகளை மிகக் குறைந்த அளவுக்குக் குறைக்கவும், அதற்கான சரியான ஏற்பாடுகளை மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுத்து வருகிறது. மின் விநியோகத்தில் ஏற்படுகின்ற கம்பி இழப்புகளைப் பற்றி ஆய்ந்தறிய இந்திய விஞ்ஞானக் கழகத்தின் சார்பில் பெங்களூரில் நடைபெற்ற விநியோக அமைப்பு ஆய்வுக் குழுக் கூட்டத்தில், வாரியம் கலந்து கொண்டது. துணை நிலையங்களிலும், பயனீட்டாளர்கள் முனைகளிலும் ஷண்ட் கெபாசிட்டர்களை நிறுவுகின்ற பணியினை படிப்படியாகச் செய்கின்ற ஏற்பாடுகளையும் மின் வாரியம் ஏற்றுக்கொண்டுள்ளது. மூன்றாவது அனைத்துலக வளர்ச்சி ஏஜென்சி International Development Agency) யிலிருந்து கிடைக்கும் கடன் வசதியினைப் பயன்படுத்திக்கொண்டு, மின் இணைப்பின் முக்கிய பாயிண்டுகளில் மின் கடத்திகளை நிறுவுவதற்கு வாரியம் நடவடிக்கைகள் எடுத்துள்ளது. ஐந்தாவது திட்டத்தில் 'மின் அனுப்புதல்-பங்கிடுதல்' என்ற

திங்கள் 30-ம் நாள் வரையில் மொத்தம் ரூ. 11.21 கோடி ரூபாய்க்கான திட்டங்களுக்கு அக் கழகம் அனுமதி வழங்கியுள்ளது. 1973 ஜூன் திங்கள் 30-ம் நாள் வரையில் ரூ. 6.23 கோடி ரூபாயினை அக் கழகம் அளித்துள்ளது.

துணை நிலையங்கள் மேம்பாட்டுத் திட்டம், மின் அனுப்புச் சிறப்புத் திட்டம் என்ற இரண்டு புது வகையான திட்டங்களுக்கும் கடன் வழங்க கிராம மின் வசதிக் கழகம் முன்வந்துள்ளது. முதல் வகையின்கீழ் ரூ. 52 இலட்சம் செலவில் இரண்டு திட்டங்களுக்கு அக் கழகம் அனுமதி வழங்கியதுடன், அதற்காக வேண்டி 35 இலட்சம் ரூபாயினை வழங்கியுள்ளது. இரண்டாவது வகையின்கீழ், செயல் திட்டக் குறிப்புகள் தமிழ் நாடு மின் வாரியத்தினால் உருவாக்கப்பட்டு, அவை கிராம மின் வசதிக் கழகத்தின் பரிசீலனையில் உள்ளன.

25. 1973-74-ம் ஆண்டில் ரூ. 43 கோடி ரூபாய் மூலதனச் செலவுக்கு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு வழி வகை செய்துள்ளது. மின் உற்பத்தித் திட்டங்களுக்கு 25 கோடி ரூபாய், மின் அனுப்புதல்-பங்கீடுதலுக்கு ரூ. 11 கோடி, கிராம மின் வசதித் திட்டத்திற்கு 6½ கோடி ரூபாய், கையகப்படுத்துவதற்கு 50 இலட்சம் ரூபாய் ஆகிய இவை, இந்த 43 கோடி ரூபாயினுள் அடங்குவனவாகும். மின் உற்பத்தி, கிராம மின் வசதிக்கான மதிப்பீட்டுத் தொகை மேலும் உயரலாம்.

26. ஆண்டு நிதி நிலை அறிக்கையில் உள்ள விவர அறிக்கைகள் அ-III அ-IV களில், 1973-74-ம் ஆண்டுக்கான மின் வாரியத்தின் மதிப்பீட்டு வருவாய் வரவினங்கள், வருவாய்ச் செலவினங்கள் பற்றிய விவரங்கள் தரப்பட்டுள்ளன.

91.28 கோடி ரூபாய் வருவாய் வரவினம் என எதிர்ப்பார்ப்பது, 1973 மே வரையில் மின் வெட்டு அமுலில் இருக்கும் என்ற உத்தேசத்தின் பேரில்தான், மின் வெட்டின் விளைவாக வாரியத்தின் வருவாயானது ஓரளவு பாதிக்கக் கூடும். வருவாயினைப் பெருக்க எடுக்கப்பட்ட புதிய ஏற்பாடுகளின் விளைவாக, அதிகமாக 6 கோடி ரூபாய்க்கு வழி வகை செய்யப்பட்டுள்ளது.

27. செலவினங்களைப் பொறுத்த வரை, நெய்வேலி, கேரளம், கர்நாடகம் ஆகிய இடங்களிலிருந்து வாங்கப்பட்ட மின்சக்திக்கான செலவுத் தொகை 1972-73 தொடக்கத்தில் இருந்த விலை விகிதத்தின் அடிப்படையில் கணக்கிடப்பட்டு. அதற்கும் வழி வகை செய்யப்பட்டுள்ளது (அதாவது நெய்வேலியிலிருந்து பெற்றதற்கு ஒரு யூனிட்டுக்கு 8.1 பைசா; கேரளத்திலிருந்து பெற்ற மின்சாரத்திற்கு முதல் 150 மில்லியன் யூனிட்டுகளுக்கு ஒரு யூனிட்டுக்கு 6.25 பைசா; 150 மில்லியன் யூனிட்டுகளுக்கு மேல் சப்ளை செய்யப்பட்டதற்கு ஒரு யூனிட்டுக்கு 6 பைசாவாகும்). கேரளத்திலிருந்து பெறப்படும் மின்சாரத்திற்கு, இவ்வாண்டில், முதல் 100 மில்லியன் யூனிட்டுகளுக்கு 7.8 பைசாவாகவும், 100 மில்லியன் யூனிட்டிலிருந்து 300 மில்லியன் யூனிட் வரையில் யூனிட்டுக்கு 8 பைசாவாகவும் உயர்ந்துள்ளது. இதனால் தமிழ்நாடு மின்வாரியத்திற்கு கூடுதல் செலவு ஏற்படும்.





28. வழக்கம்போல், தேய்மானக் காப்புக்கும், மற்றக் காப்புகளுக்கும் ஒதுக்கியது போக, ஆயுள் காப்பீட்டுக் கழகம், வங்கிகள், பொதுமக்கள் ஆகியோரிடமிருந்து பெறப்பட்ட கடன்களுக்கான வட்டி, மற்றும் நிர்ணயிக்கப்பட்ட வரிசைக் கிரமத்தில் மற்ற இனங்களுக்கும் வழி வகை செய்த பிறகு, வாரியத்திற்கு அரசு கொடுத்துள்ள கடன்களின் பேரில், அரசுக்கு வட்டி செலுத்துவதற்காக வேண்டி ரூபாய் 1.19 கோடி மீதமாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. வருவாயில் குறைவும் செலவினங்களில் அதிகரிப்பும் ஏற்படுவதால், அரசுக்கு வட்டி செலுத்துவதற்காக வேண்டிய தொகை சற்றுக் குறையும்.

29. மின்வாரியம் கடந்த ஆண்டில் தன்னுடைய பணியாளர்கட்கு மனமுவந்து வழங்கியுள்ள சலுகைகளைக் கோடிட்டுக் காட்ட விழைகிறேன்.

(1) 1972 ஆண்டு டிசம்பர் திங்கள் 31-ம் நாள் அன்று நான்கு ஆண்டுக் காலம் பணியில் இருந்து வந்துள்ள தற்காலிக தினக் கூலி வேலையாட்களின் பணிகளை ஒழுங்குபடுத்தி சனவரி 1973-ல் வாரியம் ஆணை பிறப்பித்தது. இவ்வாணையின்படி, 1973 ஆண்டு சனவரி திங்கள் 1-ம் நாள் முதல் சுமார் 9,000 தற்காலிக தினக்கூலி வேலையாட்கள் முறையான பணி அமைப்பில் சேர்த்துக் கொள்ளப்படும் சலுகையை அடைந்துள்ளனர். 1973 மார்ச் திங்கள் 31-ம் நாள் அன்றைய நிலவரப்படி, வாரியத்தின்கீழ் பணியாற்றும் தற்காலிக தினக் கூலி வேலையாட்கள் 29,923 பேர் ஆகும். அவர்களுடைய பணிகளை படிப்படியாக ஒழுங்குபடுத்துவதை, தேவை அடிப்படையை ஒட்டி, வாரியம் நிறைவேற்றி வைக்கும்.

(1) (அ) 1971-ம் ஆண்டு கடைசியாக உயர்வு அளிக்கப்பட்ட தேதியிலிருந்து ஓராண்டுப் பணிக்குப் பிறகு, 1972-ல் 25 பைசா அவர்களுடைய ஊதியத்தில் அதிகமாக தற்காலிக தினக் கூலி வேலையாட்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளது. 1972-ம் ஆண்டு கடைசியாக ஊதிய உயர்வு அளிக்கப்பட்ட தேதியிலிருந்து மேலும் ஓராண்டுப் பணிக்குப் பிறகு அவர்களுக்கு அவர்களுடைய ஊதியத்தில் மேலும் 25 பைசா கூடுதலாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

(2) வாரியத்தின் எல்லா இடங்களிலும் உள்ள ரூ. 65–3–95–4–115–5–125 என்ற சம்பள விகிதத்தில் உள்ள லஸ்கர்கள் கிரேட் II மஸ்தூர்கள், ஆகியோர்களின் பதவி இடங்கள், 1973-ம் ஆண்டு சனவரி திங்கள் 1-ம் நாள் முதல் ரூ. 84–4–120–5–150 என்ற சம்பள விகிதத்தில் 'ஹெல்பர்' களாகவும், கிளீனர்கள் கிரேட் II கிளீனர்கள் கிரேட் ஆகவும் அதே அதிக சம்பளத்திற்கு உயர்த்தப்பட்டுள்ளனர்.

(3) வீட்டு வாடகைப்படி—அரசு அளிப்பது போலவே அதே விகிதத்தில் தங்களுக்கும் வீட்டு வாடகைப்படி அளிக்கப் படல் வேண்டும் என்று வாரியத்தின் பணியாளர்கள் கேட்டுக் கொண்டு வந்துள்ளனர். மேற் சொன்ன கோரிக்கையை வாரியம் கனிவுடன் பரிசீலித்து, 1973-ம் ஆண்டு சனவரி திங்கள் 1-ம் நாள் முதல், கூடுதல் வீட்டு வாடகைப்படி அளிக்க உத்தரவிட்டது. 1973-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ம் நாள் முதல் மேலும் அதை உயர்த்தியது. சென்னை நகர எல்லைக்கு 32 கிலோ மீட்டர்களுக்குள் உள்ள பணியாளர்கட்கும், மதுரை கோயமுத்தூர் நகரங்களைச் சுற்றி 16 கிலோ மீட்டர்களுக்குள் உள்ளவர்களுக்கும் சென்னை, மதுரை, கோயம்புத்தூர் நகரங்களுக்கு, மாநில அரசு ஊழியர்களுக்கு என்ன வீட்டு வாடகைப்படி அளிக்கப்படுகிறதோ, அதே அளவு வீட்டு வாடகைப்படி வாரியத்தின் பணியாளர்களுக்கும் வழங்கப்பட்டிருக்கிறது.

(4) அகவிலைப்படி—மாதம் ரூ. 750 வரையில் சம்பளம் பெறும் எல்லாப் பணியாளர்களுக்கும் 1972-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ம் நாள் முதல் ரூ. 4.50 அகவிலைப்படியில் உயர்த்தப்பட்டது. 1973-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ம் நாள் முதல் மேலும் அது ரூ. 9.00 கூடுதலாக உயர்த்தப் பட்டது.

(5) 1971-72-ம் ஆண்டுக்கு, பணியாளர்களின் சம்பளம், அகவிலைப் படியில் 8-1/3 சதவிகிதம், பூரிப்புத் தொகையாக 1972 நவம்பர் திங்களில் கொடுக்கப்பட்டது.

(6) 1972 நவம்பரில் இளநிலைப் பொறியாளர்கள் II -வது பணிப் பிரிவு Class II—Status Gazetted ) நிலைக்கு உயர்த்தப்பட்டனர். அவர்களைப் போலவே மேற்பார்வையாளர்கள் கிரேட் I (மின்சாரம், பொறியியல், கட்டிடவியல்), மார்ச் 1973-ல், II-வது பணிப் பிரிவுக்கு உயர்த்தப்பட்டனர்.

(7) வாரியப் பணியாளர்களின் குடும்பத் திருமணங்களுக்கு ரூ. 2,000 வீதம் 1972-ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 14-ம் தேதியிலிருந்து கடன் கொடுக்கப்பட்டு வருகிறது.



(8) இடைநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி, கல்லூரிகளில் படிக்கும் தங்களுடைய குழந்தைகளின் சிறப்புத்தொகை, புத்தகங்கள் வாங்குதல் போன்ற செலவுகளுக்காக, இரண்டாண்டுப் பணியில் இருந்து மாதம் 500 ரூபாய்க்குக்கீழ் அடிப்படைச் சம்பளம் உள்ளவர்களுக்கு, வட்டியில்லா முன் பணமாக ரூ. 100 அளிக்கப்படுகிறது.

(9) விநியோகப் பிரிவில் உள்ள லைன்மேன், ஒயர்மேன் ஆகியோர்கட்கு வழங்கப்படும் சைக்கிள்படியானது, ரூ. 4-லிருந்து ரூ. 6-க்கு உயர்த்தப் பட்டுள்ளது. விநியோகப் பிரிவில் உள்ள ஹெல்பர்களுக்கும் இப்பொழுது இச்சலுகை வழங்கப்படுகிறது.

(10) துணைப் பண்டகசாலைகளில் பணியாற்றும் பண்டக சாலைப் பணி யாளர்களின் வேலைச் சுமை அளவு (Work Load) நிர்ணயிக்கப்பட்டு கூடுதல் பணியாளர் இடங்களுக்கு (Additional Staff) அனுமதி வழங்குவது குறித்து சங்கத்துடன் ஓர் உடன்பாடு பெறப்பட்டது. இதனால் பண்டகசாலைப் பணியாளர்கள் பதவி உயர்வுக்கான சாத்தியக் கூறுகள் அதிகம் ஏற்படும்.

(11) பணியாட்களின் மனமகிழ் மன்றங்களுக்கு கட்டுப்பாடுகளை தளர்த்தி தொடர் மானியங்களும், தொடரா மானியங்களும் அளிப்பதின் மூலமாக, வாரியமானது தன்னுடைய பணியாளர்களின் விளையாட்டு வசதிகளை ( Recreation facilities ) ஊக்குவித்து வருகிறது.

(12) வேலையாள் கல்வித் திட்டத்தின்கீழ், வேலையாட்களுக்கு கல்வி அளிப்பதைப் பெருக்குவதில் வாரியம் தொடர்ந்து அக்கறை காட்டி வருகிறது. யூனிட் அளவு வகுப்புகளில் அதிகமான அளவில் வேலையாள்-ஆசிரியர் பயிற்சியாளர்கள் உள்ளார்கள் என்பதற்காகவும், வேலையாள் கல்வி பெறுவதிலும், வாரியமானது முதல் பரிசினையும் கேடயத்தையும் ஈட்டியுள்ளது

30. வாரியத்தின் பணிகள் பெருகிக் கொண்டே போகின்றன. பணிகள் உடனுக்குடன் கவனிக்கப்பட்டு வேகமாகச் செயல்படுத்தப்பட வேண்டும்; இதைக் கருத்தில் கொண்டு உயர் மட்டத்தில், நிர்வாக அமைப்பு முறையை வாரியம் திருத்தி அமைத்துள்ளது.

நிர்வாகம்-பணி அமைப்பு கணக்குகள் குறித்த எல்லாக் காரியங்களைக் கவனிக்க தலைமைப் பொறியாளர் (பொது நிர்வாகம்) என்ற பதவியையும், விநியோகம், இயக்கம், பொருள்கள் வாங்குதல்-பண்டகசாலை, திட்டங்கள்-கட்டு மானம் ஆகியவற்றைக் கவனிக்க, தனித்தனியே ஒரு தலைமைப் பொறியாளர் என 5 பதவி இடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

31. பொதுமக்கள் நலனுக்காக வேண்டி, தனியார் மின்வழங்கு நிறுவனங்களை எடுத்துக் கொள்வது என்ற அரசின் கொள்கைக்கேற்ப, "1973-ம் ஆண்டு தமிழ்நாடு தனியார் மின் வழங்கு நிறுவனங்கள் (கையகப்படுத்துதல்) சட்டம்" என்ற புதிய சட்டம் ஒன்றினை தமிழ் நாடு அரசு நிறைவேற்றியுள்ளது. கீழ்க்கண்ட ஏழு தனியார் மின் நிறுவனங்கள் இன்னும் எடுக்கப்படாமல் உள்ளன:—

(1) கும்பகோணம் மின் நிறுவனம்.

(2) நாகப்பட்டினம் மின் நிறுவனம்.

(3) செங்கோட்டை மின் நிறுவனம்.

(4) வேலூர் மின் நிறுவனம்.

(5) சேலம்-ஈரோடு மின் நிறுவனம்.

(6) திருநெல்வேலி-தூத்துக்குடி மின் நிறுவனம்.

(7) திருச்சிராப்பள்ளி-ஸ்ரீரங்கம் மின் நிறுவனம்.

புதிய சட்டத்தின் விதிமுறைகளுக்கொப்ப, 1973-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 1-ம் நாள் இந்த நிறுவனங்களை அரசு ஏற்கும்.

32. மின்சார வாரியத்தை எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள் பற்றியும், அப்பிரச்சினைகளைப் போக்க தேவைப்படுபவை பற்றியும், நான் இந்த உரையில் விவரித்துக் காட்டியுள்ளேன். நிதி நிலை அறிக்கை பற்றி விவாதிக்கும் பொழுது, இந்த மாமன்றமானது தன்னுடைய அறிவுசால் கருத்துக்களையும் ஆலோசனைகளையும் வழங்குமுகத்தான் மின் வாரியம் மேலும் மேலும் பயன் உள்ள முறையில் ஆக்கரீதியாக மக்களுக்குப் பணியாற்ற உறுதுணையாக இருக்கும் என்ற என் நம்பிக்கையைத் தெரிவித்துக் கொண்டு, அவைத் தலைவர் அவர்கட்கும், மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்து முடிக்கிறேன்.

ஓ. பி. இராமன்,
மின்துறை அமைச்சர்.



## இணைப்பு-1.

### கடந்த திட்டக் காலங்களில் தமிழ் நாட்டில் மின்சக்தி உற்பத்தி.

| எண் விவரங்கள். | முதலாவது திட்டத்தின் தொடக்கத்தில் (1951 ஏப்ரல் 1-ம் நாள்). | முதலாவது திட்டத்தின் இறுதியில் (1956 மார்ச் 31-ம் நாள்). | இரண்டாவது திட்டத்தின் இறுதியில் (1961 மார்ச் 31-ம் நாள்). | மூன்றாவது திட்டத்தின் இறுதியில் (1966 மார்ச் 31-ம் நாள்). | 1973 மார்ச் 31-ம் நாள் நிலவரப்படி (உத்தேசமாக). |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| உற்பத்தி. | | | | | |
| 1. நிறுவப்பட்ட திறனளவு (மெகாவாட்டில்) .. .. | 156 | 256 | 560 | 1,070 +300 (நெய்வேலி). | 1,571 —600 (நெய்வேலி). |
| 2. மின்சக்தி உச்சத் தேவை (மெகாவாட்டில்) .. | 110 | 172 | 381 | 717 | *1,190 |
| 3. உற்பத்தி செய்த மின்சாரமும் வாங்கப்பட்ட மின்சாரமும் (பத்து இலட்சம் யூனிட்டுகளில்). | 630 | 1,053 | 2,214 | 4,041 | 6,964 |
| அனுப்புதலும் வழங்குதலும். | | | | | |
| 1. உயர் அழுத்தக் கம்பிகளின் நீளம் (கிலோ மீட்டர்களில்). | 6,936 | 11,479 | 24,194 | 39,806 | 63,328 |
| 2. குறைந்த அழுத்தக் கம்பிகளின் நீளம் (கிலோ மீட்டர்களில்). | 5,728 | 13,055 | 35,352 | 73,198 | 1,78,605 |
| 3. கூடுதல் உயர் அழுத்த மின்சக்தித் துணை நிலையங்கள். | 31 | 48 | 70 | 98 | 143 |
| 4. உயர் அழுத்த மின்சக்தித் துணை நிலையங்கள் .. | 25 | 41 | 73 | 103 | 119 |
| 5. பகிர்ந்து அளிக்கும் நிலையங்களின் எண்ணிக்கை .. | 1,591 | 3,773 | 10,004 | 17,360 | 33,548 |

இணைப்பு-1—தொடர்ச்சி

கடந்த திட்டக் காலங்களில் தமிழ் நாட்டில் மின்சக்தி உற்பத்தி.

| எண் விவரங்கள். | முதலாவது திட்டத்தின் தொடக்கத்தில் (1951 ஏப்ரல் 1-ம் நாள்). | முதலாவது திட்டத்தின் இறுதியில் (1956 மார்ச் 31-ம் நாள்). | இரண்டாவது திட்டத்தின் இறுதியில் (1961 மார்ச் 31-ம் நாள்). | மூன்றாவது திட்டத்தின் இறுதியில் (1966 மார்ச் 31-ம் நாள்). | 1973 மார்ச் 31-ம் நாள் நிலவரப்படி (உத்தேசமாக). |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 6. மின்சக்தி பயன்படுத்துவோர் எண்ணிக்கை (இலட்சக் கணக்கில்). | 2·5 | 4·3 | 7·7 | 13·6 | 25·45 |
| 7. நபர் ஒருவர் பயன்படுத்தும் அளவு (யூனிட்டுகளில்). | 12 | 21 | 60 | 92 | 133 |
| கிராமங்களுக்கு மின்சார வசதி. | | | | | |
| 1. மின்சார வசதி அளிக்கப்பட்ட நகரங்கள், கிராமங்கள், சிற்றூர்கள் ஆகியவற்றின் எண்ணிக்கை. | 1,813 | 3,543 | 10,760 | 22,137 | †60,325 |
| 2. மின் இணைப்பு அளிக்கப்பட்டவேளாண்மை விசை யேற்றங்களின் எண்ணிக்கை. | 14,373 | 32,440 | 1,17,695 | 2,56,594 | 6,49,241 |
| செலவும் வருவாயும். | | | | | |
| 1. மூலதனச் செலவு (ரூபாய் கோடிக் கணக்கில்) .. | 23·82 | 54·01 | 133·21 | 253·28 | 523·35 |
| 2. மொத்த வருவாய் (ரூபாய் கோடிக் கணக்கில்)‡ .. | 3·18 | 5·94 | 15·82 | 34·57 | ‡78·71 |

* 75 சத விகித மின்வெட்டின் விளைவாக நிறுத்தி வைக்கப்பட்ட தேவையின் அளவு.

† தெரு விளக்கு கொண்டு மின்வசதி செய்யப்பட்டது.

‡ (அரசு உதவித் தொகை நீங்கலாக, மத்திய நிதி சரிக்கட்டலையும் சேர்த்து).



இணைப்பு 2.

1969–70, 1970–71, 1971–72, 1972–73, 1973–74 ஆண்டுகளில் சேர்க்கப்பட்டுள்ள மின் திட்டங்களுக்கான செலவு (ரூபாய் இலட்சத்தில்).

| எண். | திட்டத்தின் பெயர். | 1969-70-ல் ஏற்பட்ட செலவு. | 1970-71-ல் ஏற்பட்ட செலவு. | 1971-72-ல் ஏற்பட்ட செலவு. | 1972-73-க்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடு. | 1972-73-ம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு. | 1972-73-ம் ஆண்டில் ஏற்பட்ட செலவு. (உத்தேசமாக). | 1973-74-ம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடு. |
|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| | உற்பத்தித் திட்டங்கள் தொடர்ந்து வரும் திட்டங்கள். | | | | | | | |
| 1. | குந்தா நீர் மின்சாரத் திட்டம் 3-ம் நிலை | —35·23 | 7·56 | 25·21 | 27·59 | 4·84 | —3·78 | 13·25 |
| 2. | பரம்பிக்குளம்-ஆழியாறு நீர் மின்சாரத் திட்டம். | 1,41·29 | 1,60·99 | 51·97 | —60·03 | 57·92 | 71·92 | 63·18 |
| 3. | கோதையாறு நீர் மின்சாரத் திட்டம் .. | 2,73·98 | 2,03·89 | 78·90 | —25·76 | 45·72 | 32·77 | 81·51 |
| 4. | சென்னை மின்சார நிலையம் விரிவு படுத்துதல் 4-ம் நிலை | 80·77 | 43·37 | 36·22 | 9·94 | 24·68 | 44·18 | 0·00 |
| 5. | எண்ணூர் அனல் மின் நிலையம் .. | 17,41·99 | 4,61·01 | 3,31·28 | 3,39·05 | 4,24·33 | 4,16·84 | 5,12·67 |
| 6. | எண்ணூர் அனல் மின் நிலையத்தை விரிவுபடுத்துதல்: | .. | 50·00 | 67·10 | 2,18·53 | 2,98·26 | 2,99·11 | 11,65·77 |
| 7. | பாண்டியாறு புன்னம்புழா நீர் மின் திட்டம். | 44·29 | 7·02 | —33·09 | —1·84 | 3·70 | —0·96 | 10·00 |
| 8. | குந்தா நீர் மின் திட்டம் 4-ம் நிலை .. | .. | .. | .. | 50·00 | 75·00 | 74·42 | 1,00·0 |

1969–70, 1970–71, 1971 72, 1972–73, 1973–74 ஆண்டுகளில் சேர்க்கப்பட்டுள்ள மின் திட்டங்களுக்கான செலவு (ரூபாய் இலட்சத்தில்).

| எண். | திட்டத்தின் பெயர். | 1969 –70-ல் ஏற்பட்ட செலவு. | 1970 –71-ல் ஏற்பட்ட செலவு. | 1971 –72-ல் ஏற்பட்ட செலவு. | 1972 –73-க்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடு. | 1972 –73-ம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு | 1972 –73-ம் ஆண்டில் ஏற்பட்ட செலவு (உத்தேசமாக). | 1973 –74-ம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடு. |
|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| | புதிய திட்டங்கள். | | | | | | | |
| 1. | நவேட்டம் நீர்த்திருப்புத் திட்டம் .. | 5·12 | 13·95 | 56·96 | 35·88 | 51·94 | 55·11 | 53·61 |
| 2. | சோழட்டிப்புழா நீர் மின் திட்டம் .. | .. | .. | .. | 5·00 | 0·001 | .. | .. |
| 3. | காடம்பாறை நீர் மின் திட்டம் .. .. | .. | .. | 0·73 | 5·00 | 11·50 | 4·03 | 1,50·00 |
| 4. | மேல் தாமிரவருணி நீர் மின் திட்டத்தின் கீழ் செர்வலாறு மின் நிலையம். | .. | 0·95 | 12 15 | 15·61 | 25·24 | 33·70 | 25·00 |
| 5. | நெல்லித்துறை நீர் மின் திட்டம் .. | .. | 2·12 | 19·35 | 29·39 | 21·43 | 13·39 | 20·00 |
| 6. | பாளையாறு நீர் மின் திட்டம் .. .. | .. | .. | .. | 5·00 | .. | .. | 5·00 |
| 7. | சுருளியாறு நீர் மின் திட்டம் .. .. | .. | 0·80 | 20·04 | 50·00 | 50·00 | 66·92 | 2,00·00 |
| 8. | தூத்துக்குடியிலும், மேட்டூர் அணையிலும் அனல் மின் நிலையங்கள் அமைத்தல். | .. | .. | .. | .. | 4,00·00 | .. | 1,00·00 |
| | மொத்தம்—1. உற்பத்தித் திட்டங்கள் .. | 22,52·21 | 9,51·66 | 6,66·82 | 7,03·37 | 14,94·56 | 11,07·45 | 25,00·00 |
| | மின்சக்தி அனுப்புதல்—பங்கிட்டு வழங்குதல் திட்டம். | 5,79·07 | 1098·85 | 7,89·03 | 10,00·00 | 11,00·00 | 9,53·22 | 11,00·00 |
| | கிராமப்புறங்களுக்கு மின்சக்தி அளித்தல் | 8,75·00 | 8,75·00 | 8,75,00 | 13,00·00 | 16,50·00 | 14,00·00 | 6,50·00 |
| | மின்சார நிறுவனங்களைக் கையகப்படுத்துதல் | —0·10 | 74·01 | 0·28 | 50·00 | 50·00 | 53·29 | 50·00 |
| | புதுத் திட்டங்கள் குறித்து ஆய்வு .. .. | 4·75 | 13·03 | 10·62 | 10·50 | 14·90 | 14·90 | 12·50 |
| | மின்சக்தி நிறுவனம்—ஆராய்ச்சிகள் .. | 0·33 | 0·48 | 0·56 | 2·00 | 2·00 | 1·02 | 2·00 |
| | மொத்தம்—1-லிருந்து 6 வரை .. | 37,11·26 | 30,13·03 | 23,42·31 | 30,65·87 | 43,11·46 | 35,29·88 | 43,14·50 |
| | கிராமப்புறங்களுக்கு மின்சக்தி அளிக்கும் திட்டத்திற்கு திட்டத்தில் சேர்க்கப்படாது செலவிடப்படும் தொகை. | 4,95·50 | 10,49·09 | 17,72·58 | 500·00 | ... | 6,89·87 | .. |
| | பெரு மொத்தம் .. | 42,06.76 | 40,62·12 | 41,14·89 | 35,65.87 | 43,11·46 | 42,19·75 | 43,14·50 |

1969–70, 1970–71, 1971 72, 1972–73, 1973–74 ஆண்டுகளில் சேர்க்கப்பட்டுள்ள மின் திட்டங்களுக்கான செலவு (ரூபாய் இலட்சத்தில்).

| எண். | திட்டத்தின் பெயர். | 1969 –70-ல் ஏற்பட்ட செலவு. | 1970 –71-ல் ஏற்பட்ட செலவு. | 1971 –72-ல் ஏற்பட்ட செலவு. | 1972 –73-க்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடு. | 1972 –73-ம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு | 1972 –73-ம் ஆண்டில் ஏற்பட்ட செலவு (உத்தேசமாக). | 1973 –74-ம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடு. |
|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| | புதிய திட்டங்கள். | | | | | | | |
| 1. | நடுவட்டம் நீர்த்திருப்புத் திட்டம் .. | 5·12 | 13·95 | 56·96 | 35·88 | 51·94 | 55·11 | 53·61 |
| 2. | சோழயட்டிப்புழா நீர் மின் திட்டம் .. | .. | .. | .. | 5·00 | 0·001 | .. | .. |
| 3. | காடம்பாறை நீர் மின் திட்டம் .. .. | .. | .. | 0·73 | 5·00 | 11·50 | 4·03 | 1,50·00 |
| 4. | மேல் தாமிரவருணி நீர் மின் திட்டத்தை ஒட்டி செர்வலாறு மின் நிலையம். | .. | 0·95 | 12 15 | 15·61 | 25·24 | 33·70 | 25·00 |
| 5. | நெல்லித்துறை நீர் மின் திட்டம் .. | .. | 2·12 | 19·35 | 29·39 | 21·43 | 13·39 | 20·00 |
| 6. | பரளியாறு நீர் மின் திட்டம் .. .. | .. | .. | .. | 5·00 | .. | .. | 5·00 |
| 7. | சுருளியாறு நீர் மின் திட்டம் .. .. | .. | 0·80 | 20·04 | 50·00 | 50·00 | 66·92 | 2,00·00 |
| 8. | தூத்துக்குடியிலும், மேட்டூர் அணையிலும் அனல் மின் நிலையங்கள் அமைத்தல். | .. | .. | .. | .. | 4,00·00 | .. | 1,00·00 |
| | மொத்தம்—1. உற்பத்தித் திட்டங்கள் .. | 22,52·21 | 9,51·66 | 6,66·82 | 7,03·37 | 14,94·56 | 11,07·45 | 25,00·00 |
| | மின்சக்தி அனுப்புதல்—பங்கிட்டு வழங்குதல் திட்டம். | 5,79·07 | 1098·85 | 7,89·03 | 10,00·00 | 11,00·00 | 9,53·22 | 11,00·00 |
| | கிராமப்புறங்களுக்கு மின்சக்தி அளித்தல் | 8,75·00 | 8,75·00 | 8,75,00 | 13,00·00 | 16,50·00 | 14,00·00 | 6,50·00 |
| | மின்சார நிறுவனங்களைக் கையகப்படுத்துதல் | —0·10 | 74·01 | 0·28 | 50·00 | 50·00 | 53·29 | 50·00 |
| | புதுத் திட்டங்கள் குறித்து ஆய்வு .. .. | 4·75 | 13·03 | 10·62 | 10·50 | 14·90 | 14·90 | 12·50 |
| | மின்சக்தி நிறுவனம்—ஆராய்ச்சிகள் .. | 0·33 | 0·48 | 0·56 | 2·00 | 2·00 | 1·02 | 2·00 |
| | மொத்தம்—1-லிருந்து 6 வரை .. | 37,11·26 | 30,13·03 | 23,42·31 | 30,65·87 | 43,11·46 | 35,29·88 | 43,14·50 |
| | கிராமப்புறங்களுக்கு மின்சக்தி அளிக்கும் திட்டத்திற்கு திட்டத்தில் சேர்க்கப்படாது செலவிடப்படும் தொகை. | 4,95·50 | 10,49·09 | 17,72·58 | 500·00 | .. | 6,89·87 | .. |
| | பெரு மொத்தம் .. | 42,06.76 | 40,62·12 | 41,14·89 | 35,65.87 | 43,11·46 | 42,19·75 | 43,14·50 |

# தமிழ்நாடு சட்டப் பேரவை.

---

*செவ்வாய்க்கிழமை, 1973 நவம்பர் 20.*

---

*சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.*

## 1. வினாக்கள்-விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

*Loans from Punjab National Bank*

* 199 *Q.*—THIRU N. K. PALANISWAMY :
THIRU N. DENNIS : } Will the Hon. the Chief Minister be pleased to state the amount of loan obtained by the Government from the Punjab National Bank for various schemes in the State during 1972?

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : 1972-73-ம் ஆண்டில் பஞ்சாப் நேஷனல் வங்கியிடமிருந்து உணவு தானியங்கள், சர்க்கரை ஆகியவற்றிற்காக ரூ. 322.00 லட்சமும், பயிர் பூச்சிக் கொல்லி மருந்திற்காக ரூ. 175.00 லட்சமும் கடனாகப் பெறப் பட்டது.*

*திரு. என். கே. பழனிசாமி : தலைவர் அவர்களே, நமது மாநில நிதி நிலைமையை அனுசரித்து, மாநில சர்க்கார் வாங்கிய கடனை ரத்து செய்ய வேண்டுமென்று சொல்லப்பட்டபோது இந்தக் கடனும் சேர்க்கப்பட்டதா? அப்படியானால், நிதிக் கமிஷனுடைய அறிக்கைக்குப் பிறகு மத்திய சர்க்கார் எந்த அளவிற்கு மாநில சர்க்காருடைய கடனைக் குறைப்பதாகச் சொல்லி இருக்கிறார்கள்?*

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இது வங்கிகள் மூலமாகப் பெறப்படுகிற கடனாகும். அதற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. நிதி உதவி வேண்டுமென்று இந்திய அரசை நாம் அணுகியபோது, வணிக வங்கிகளிடமிருந்து நாம் கடன் பெறுவதற்கு அவர்கள் ஆட்சேபிக்கவில்லை. ஒப்புதலோடுதான் அந்த*

அளவில் வணிக வங்கியிடமிருந்து கடன் பெற்றிருக்கிறோம். மத்திய அரசு மாநில அரசினுடைய கடன்களை ரத்து செய்வதற்கும் அல்லது தள்ளி வைப்பதற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** அரசாங்கத்தின் மூலமாகத் தொழில் புரிபவர்களுக்கு அரசாங்கம் பணம் கொடுக்கும்போது இந்த வங்கிகள் மூலமாகக் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இது அரசாங்கமே அந்த வங்கிகளிடமிருந்து கடன் வாங்கும் விஷயத்தைப் பொறுத்தது. தனிக் கேள்வி போட்டால் அதுபற்றிய விவரங்கள் அளிக்கிறேன்.

**திருமதி ஜோதி வெங்கடாசலம் :** தலைவர் அவர்களே, இந்த வங்கியின் மூலமாக வாங்கிய பணத்திலிருந்து செலவிடப்பட்ட தொகை எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தேவைக்காகத்தான் அந்தக் கடனை வாங்கப்பட்டிருக்கிறது. இந்த வங்கியிடமிருந்து வாங்கிய தொகை உணவுத் தானியங்கள், சர்க்கரை, பயிர்ப் பூச்சி கொல்லி மருந்துகள் ஆகியவற்றுக்காகக் கடனைப் பெறப்பட்டதில், உணவுத் தானியங்களுக்காக வாங்கப்பட்ட பணம் முழுவதும் திருப்பித் தரப்பட்டுவிட்டது. பூச்சி கொல்லி மருந்து வாங்குவதற்காகப் பெறப்பட்ட கடன் மாத்திரம் ரூ. 175 இலட்சம் திருப்பிச் செலுத்தப்பட வேண்டியிருக்கிறது.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** புதிதாகத் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளெல்லாம் உணவுத் தானியங்களின் பேரில் கடன் கொடுப்பதில்லை என்று சொல்லியிருந்தார்களே. நெல், அரிசி போன்றவைகளுக்காக மாநில அரசு நேரடியாகக் கடன் வாங்க விதிவிலக்குக் கொடுத்து இருக்கிறார்களா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அந்த வங்கிகளே மாநில சர்க்காரை அணுகி, கடன் தருவதாக ' அப்ரோச் ' செய்த காரணத்தினால்தான் அவர்களிடமிருந்து நாம் கடன் வாங்கியிருக்கிறோம். இதிலே விதி விலக்கு இருப்பதைப் பற்றித் தகவல் என்னிடம் இல்லை.





### வ. உ. சிதம்பரனார் குடும்பத்திற்குத் தனி ஓய்வூதியம்

*** 200 வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு முதலமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வ. உ. சிதம்பரனார் குடும்பத்திற்கு நிதி உதவி அளிப்பது குறித்த செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** ஆம். மறைந்த திரு. வ. உ. சிதம்பரனாரின் மகள் திருமதி ஆனந்தவல்லி அவர்களுக்கும், மூத்த மகன் திரு. வ. உ. சி. ஆறுமுகம் அவர்களுக்கும் முறையே 20—10—1972, 1—10—1973-லிருந்து தமிழ்நாட்டின் விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வு ஊதியம், தனிச் சலுகையாக, மாதம் ரூ. 75 வீதம் வழங்கப்படுகிறது.

**திரு. என். கிட்டப்பா :** தலைவர் அவர்களே, கப்பலோட்டிய தமிழன் வ. உ. சிதம்பரனார் அவர்களுடைய இல்லத்தினை அரசே ஏற்றுக்கொண்டு நினைவுச் சின்னமாக உருவாக்குவதற்கு அரசு ஆவன செய்யுமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** ஏற்கெனவே அது நினைவுச் சின்னமாகத்தான் அமைக்கப்பட்டிருக்கிறது.

**திரு. த. சோனையா :** தலைவர் அவர்களே, இந்தத் தியாகிகளுக்குக் கொடுக்கப்படும் மானியம் எல்லோருக்கும் ஒரே மாதிரியாக இருக்கிறதா ? அல்லது, வித்தியாசம் இருக்கிறதா ? வித்தியாசம் இருக்குமானால், கூடுதல் எவ்வளவு, குறைவு எவ்வளவு என்று அறியலாமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** எல்லாருக்கும் ஒரே மாதிரியாகத்தான் தரப்படுகிறது.

### தமிழில் கல்லூரிப் பாட நூல்கள்

*** 201 வினா—திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கல்லூரிப் பாடநூல்களைத் தமிழில் வெளியிடுவதற்கு அரசால் மேற்கொள்ளப்பட்டிருக்கின்ற சிறப்பு நடவடிக்கைகள் யாவை ?

[1973 நவம்பர் 20

(இ) இதற்கென, 1973-74-ம் ஆண்டுக்கு மத்திய அரசு நிதியுதவி ஏதேனும் அளித்துள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) இதுவரை 483 கல்லூரிப் பாடநூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. இன்னும் 417 நூல்கள் வெளியிடுவதற்கான நடவடிக்கைகளை தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் எடுத்து வருகிறது.

(இ) மைய அரசிடமிருந்து 1973-74-ம் ஆண்டிற்கான நிதி உதவி பெற தக்க சமயத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. கா. வேழவேந்தன் :** தலைவர் அவர்களே, மத்திய அரசு இந்தி மொழி வளர்ச்சிக்காக—பாட நூல்கள் வெளியிடுவது போன்று பல வகைகளிலே—ஏராளமான அளவு பணம் ஒதுக்குகிறது. அதே வகையில் தமிழ்ப் பாட நூல்களை வெளியிட நிதி உதவி தருவதற்கு நம்முடைய அரசு மேலும் வலியுறுத்துமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுகின்ற கருத்து பொதுவாக வலியுறுத்தப்பட்டு வருகிறது. ஒவ்வொரு மாநிலத்திற்கும் அந்த அந்த மாநில மொழி வளர்ச்சிக்கென்று ஒரு கோடி ரூபாய் தருவது என்ற திட்டத்தின் அடிப்படையில்தான் இந்த நிதி வழங்கப்பட்டு வருகிறது. ஆனால், இந்தி மொழி அகில இந்திய ஆட்சி மொழி என்ற முறையில் அதற்கு இருபது கோடி ரூபாய்க்குமேல் ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒதுக்கப்படுகிற நிலைமைகள் யெல்லாம் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இந்தி மொழிக்கு எவ்வளவு சலுகை தரப்படுகிறதோ அதே சலுகை எல்லா தேசிய மொழிகளுக்கும் தரப்பட வேண்டும் என்றுதான் கல்வி அமைச்சர்கள் மாநாட்டிலும் வேறு பல மாநாடுகளிலும் வற்புறுத்தப்பட்டு வருகிறது.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, may I know from the Hon. Minister for Education whether there is any proposal to publish College text-books for non-Tamil languages, namely, for minority languages also?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அதுபற்றிக் குறிப்புகள் இல்லை. தனிக் கேள்வி போடவும்.



1973 நவம்பர் 20]

**திரு. எஸ். வடிவேல் :** கல்லூரிப் பாட நூல்களெல்லாம் தமிழில் கொண்டுவரும் வேலை இன்னும் எவ்வளவு நாளில் பூர்த்தியாகும் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, எவ்வளவு நாள் என்று வரையறுத்துச் சொல்ல முடியாது. ஆனால், இப்பொழுது 483 கல்லூரிப் பாட நூல்கள், பி.ஏ., பி.எஸ்ஸி., புகுமுக வகுப்பு ஆகியவற்றுக்காக வெளியிடப்பட்டிருக்கின்றன. இன்னும் 417 நூல்கள் வெளியிடுவதற்கான முயற்சிகள் பல்வேறு கட்டங்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஆண்டுக்காண்டு அது விரிவுபடுத்தப்படும். பொருளாதாரம், அரசியல், வரலாறு ஆகிய சில பிரிவுகளுக்கு மேல் பட்டப் படிப்பைப் பொறுத்த வரையில் எம்.ஏ. வகுப்புக்குப் பாட நூல்கள் தமிழில் வெளியிடுவதற்கான முயற்சியினைத் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் மேற்கொண்டிருக்கிறது.

## நூல்கள் வாங்க நிதியுதவி

*202 வினா—**திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு கல்வி சுற்றுலாத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புகுமுக வகுப்பில் தமிழைப் பயிற்சி மொழியாக ஏற்றுப் படிக்கும் மாணவர்களுக்கு நூல்கள் வாங்க வழங்கப்படும் தொகையை உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இல்லை. தமிழ் நூல்களை வாங்க இப்பொழுது தரப்படும் தொகையான ரூ. 50 போதுமானது.

**திரு. கா. வேழவேந்தன் :** தலைவர் அவர்களே, இப்படி நூல்கள் வாங்குவதற்கு அளிக்கப்படும் தொகை எந்தத் தேதியிலே இருந்து அளிக்கப்படுகிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, தமிழில் பாடம் எடுத்துப் படிக்கும் மாணவர் ஒவ்வொருவருக்கும் பி.ஏ., பி.எஸ்ஸி. வகுப்பிற்கு—ஆண்டொன்றுக்கு ரூ. 180 வீதம் மூன்று ஆண்டுகளுக்குத் தரப்படுகிறது. புகுமுக வகுப்பில்

[1973 நவம்பர் 20

ஏற்கெனவே சம்பளச் சலுகை இருந்து வருவதன் காரணமாக புத்தகம் வாங்க ரூ. 50 தரப்படுகிறது. சென்ற இரண்டு ஆண்டுக் காலமாக இந்த உதவி அளித்து வரப்படுகிறது.

**திரு. வை. பாலசுந்தரம் :** தலைவர் அவர்களே, தமிழைப் பயிற்சி மொழியாக எடுத்துப் படிக்கும் மாணவர்கள் எண்ணிக்கை ஆண்டுக்காண்டு அதிகரிக்கிறதா ? குறைகிறதா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, ஓரளவு ஆண்டுக்காண்டு அதிகரித்து வருகிறது. 1969-70-ம் ஆண்டில் 19 ஆயிரம் சில்லறை மாணவர்கள் தமிழைப் பாட மொழியாக எடுத்துப் பயின்றார்கள். 1970-71-ம் ஆண்டில் இருபதாயிரம் சில்லறை மாணவர்கள் பயின்றார்கள். 1971-72-ம் ஆண்டில் இருபத்தொரு ஆயிரம் சில்லறை மாணவர்கள் தமிழைப் பாட மொழியாக எடுத்துப் பயின்றிருக்கிறார்கள். ஆக, ஆண்டுக்காண்டு இதனுடைய எண்ணிக்கை பெருகி வருகிறது.

## *Institute of Epigraphy*

*203 Q.—Thiru N. DENNIS : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government to set up an Institute of Epigraphy in this State; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) & (இ) ஆம்.

பண்டைய எழுத்துக்களையும், கல்வெட்டுகளில் உள்ள எழுத்துக்களையும் படிப்பதற்கும், அவற்றின் அடிப்படையிலே வரலாற்றை அறிவதற்கும் மாணவர்களுக்கு உரிய பயிற்சி அளிக்கக் கல்வெட்டுப் பயிற்சி நிறுவனம் ஒன்றை இம்மாநிலத்தில் தொல்பொருள் ஆய்வுத் துறையின்கீழ் அமைக்க அரசு ஆணையிட்டுள்ளது.

THIRU N. DENNIS : May I know, Sir, whether any trainee is taken in this State?



1973 நவம்பர் 20]

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அதற்கான ஓராண்டு கால பயிற்சி தர, 8 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். தமிழ், வரலாறு, வடமொழி, இந்தியப் பண்பாடு, தொல்பொருள் ஆகியவற்றில் எம்.ஏ., பட்டம் பெற்ற எட்டு நபர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு உதவித் தொகையாக 125 ரூபாய் ஸ்டைபண்ட் வழங்கப்படுகிறது.

## *Additions to Madras Museum*

*204 Q.—Thiru N. DENNIS : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(a) the steps taken to procure new additions to the Government Museum at Egmore, Madras during the calendar years 1970, 1971 and 1972; and

(b) the cost of the new additions?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) 1970 முதல் 1972 வரை கலைப்பொருள்கள் புதைபொருள்களிலிருந்தும், அன்பளிப்பாக பெறப்பட்ட வகையிலும், இதர மாநிலங்களிலிருந்தும், பிற நாடுகளிலிருந்தும் அனுப்பப்பெற்ற பொருள்களைக் கொண்டும் மேலும் ஆங்காங்கு அருங்காட்சியக அலுவலர்கள், பல பொருள்கள் சேகரித்தும் நேரடியாக வாங்கப்பட்டும், அரும்பொருள்காட்சி சாலையில் சேர்க்கப்பட்டன.

(ஆ) புதிய சேர்க்கைக்கான மொத்தச் செலவு விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| | ரூ. | பை. |
|---|---|---|
| 1970–71 | | |
| 1. புதைபொருள் நாணயங்கள் | 1,198 | 60 |
| 2. மற்ற புதை பொருட்கள் | 10,212 | 18 |
| 3. விலைக்கு வாங்கப்பட்டவை | 317 | 00 |
| 1971–72 | | |
| 1. புதை பொருள் நாணயங்கள் | 1,948 | 30 |
| 2. மற்ற புதை பொருள்கள் | 1,931 | 34 |
| 3. விலைக்கு வாங்கப்பட்டவை | 4,229 | 00 |

THIRU N. DENNIS : May I know the proposals for new additions in 1973?

[1973 நவம்பர் 20

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அதற்கான புதுச் சேர்க்கைகள் சேர்க்கப்பட்டுள்ளன. ஆனால் தனியாகக் கேள்வி கேட்டால் விவரம் கொடுக்கலாம்.

### மருந்து வாழ் மலையில் கிடைக்கும் மூலிகைகள்

*** 205 வினா—திரு. அ. தேவேந்திரன் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நாகர்கோவில் பகுதியில் மருந்துவாழ் மலையில் கிடைக்கும் மூலிகைகள்குறித்து ஆய்வு ஏதேனும் மேற்கொள்ளப்பட்டு உள்ளதா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** பாளையங்கோட்டை இந்திய முறை மருத்துவக் கல்லூரியில் அமைந்துள்ள மூலிகைச் செடிகள் ஆய்வுப் பிரிவினால் (Survey of Medicinal Plants Unit) மருந்துவாழ் மலையின்கண்ணுள்ள மூலிகைச் செடிகளைப்பற்றி முன் ஆய்வு (Preliminary Survey) ஒன்று மேற்கொள்ளப்பட்டது. அம்மலையிலுள்ள மூலிகைச் செல்வத்தின் நிலை ஊக்கமூட்டுவதாகவும், குறிப்பிடத்தக்கதாகவும் இல்லையென அவ்வாய்விலிருந்து அறியப்பட்டது.

**திரு. அ. தேவேந்திரன் :** தலைவரவர்களே, அந்த மலையிலேயிருக்கும் மூலிகைகள் தொழுநோயைக்கூடச் சரிப்படுத்துவதாகச் சொல்லப்படுகிறது. எனவே, மீண்டும் அதைப்பற்றித் தீவிரமாக அரசு கவனம் செலுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, அது என்ன மூலிகை என்று பெயரையும் சொல்ல வேண்டும். ஏனென்றால் தொழுநோயைக் குணப்படுத்தும் மூலிகை என்று இரண்டு, மூன்று மூலிகைகளைப் பல சித்த மருத்துவர்கள் குறிப்பிடுவது அறிந்திருக்கக்கூடியதாகும். அங்கேயிருந்து கிடைக்கும் மூலிகைகள் மற்ற இடங்களிலும் கிடைக்கும் சாதாரண மூலிகைகளே என்றும் தெரிவித்திருக்கிறார்கள். கிடைத்த மூலிகைகளின் பெயரை வேண்டுமானால் கூறுகிறேன். ஆங்கிலத்திலே தரப்பட்டுள்ள அந்த விஞ்ஞானப் பெயர்களைப் படித்தால்கூட நமக்கு விளங்கப் போவதில்லை. தமிழில் சிவனார்வேம்பு, இருப்பு மூறி, செப்பு நெரிஞ்சில், சிறுபுள்ளடி, வெண்கொடி வேலி, கருடநகம், நஞ்சறுப்பான் என்ற இந்த மூலிகைகள் மட்டும் கிடைக்கின்றன என்றும், இவையும் மற்ற மலைகளிலும், மற்ற இடங்களிலும் கிடைக்கும் மூலிகைகள்தான் என்பதால் தனியாக அந்த மலைப்பகுதி சிறப்பு மூலிகைக்குரிய இடம் என்று ஏற்றுக்கொள்ளப்படவில்லை. மேலும் ஏதாவது மூலிகைகள் கிடைத்தால் அதைப்பற்றிப் பரிசீலிக்கலாம்.



1973 நவம்பர் 20]

**டாக்டர் ச. மு. பழனியப்பன்:** தலைவரவர்களே, இந்த மூலிகை ஆராய்ச்சியிலே பலன் அதிகம் கிட்டாது என்று சொன்னார்கள், அந்த ஆராய்ச்சியை யார் நடத்தினார்கள்? முறைப்படி அலோபதி மருத்துவர்களால் நடத்தப்பட்டதா அல்லது சித்த வைத்தியர்களால் நடத்தப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** இப்படிப்பட்ட ஆராய்ச்சியில் அலோபதி மருத்துவர்களாகயிருந்தாலும், சித்த வைத்தியர்களாக இருந்தாலும், தாவர நூல் அறிஞர் துணை கொண்டே ஈடுபட வேண்டும். ‘பொட்டானிகல் சயின்ஸ்’-ல் பயிற்சி பெற்ற, தாவர நூல் பயிற்சி பெற்ற துணைப் பேராசிரியர் பாளையங்கோட்டை மருத்துவக் கல்லூரியில் இருக்கிறார், அவரோடு சித்த மருத்துவர்களும் இணைந்து, கிடைத்த மூலிகைகளைப் பரிசீலித்திருக்கிறார்கள்.

### மதுரைக்கு இந்திய முறை மருத்துவ மனை

*** 206 வினா—திரு. நா. வெ. குருசாமி :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாநகரில் பெரிய அளவில் இந்திய முறை மருத்துவ மனை ஒன்று ஆரம்பிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா ?

(இ) ஆம் எனில், அது குறித்த விவரங்கள் யாவை ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

### ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கு பெண் மருத்துவர்கள்

*** 207 வினா—திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பிரதம சுகாதார நிலையங்களில் பணியாற்றும் இரு மருத்துவர் பதவிகளுள், ஒரு பதவிக்குப் பெண் மருத்துவரையே நியமிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா ?

[1973 நவம்பர் 20

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** பொதுவாக பிரதம சுகாதார நிலையம் ஒவ்வொன்றிற்கும் இரண்டு உதவி மருத்துவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். ஒருவர் பொதுப் பிரிவிற்கும் மற்றொருவர் கிராமக் குடும்பக்கட்டுப்பாடு பிரிவிற்கும் ஆவர். கிராமக் குடும்பக் கட்டுப்பாடு பிரிவு அலுவலர் இடங்கள் பொதுவாக பெண் மருத்துவர்களால் நிரப்பப்படும். ஆனால் பெண் உதவி மருத்துவர்கள் கிடைக்காத காரணங்களால் ஆண் உதவி மருத்துவர்கள் சில ஆரம்ப சுகாதார நிலையங்களில் உள்ள கிராமக் குடும்ப கட்டுப்பாடு பிரிவுகளில் நியமிக்கப்பட்டனர். இப்பிரிவுகளில் இருந்து வரும் ஆண் உதவி மருத்துவர்களுக்குப் பதிலாக பெண் உதவி மருத்துவர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. கா. வேழவேந்தன் :** தலைவரவர்களே, கிராமங்களில் மகப்பேறு போன்றவற்றைக் கவனிப்பதற்கும்; குடும்பக் கட்டுப்பாடு போன்றவற்றைக் கவனிப்பதற்கும் எப்படியும் இரண்டு மருத்துவர்களில் ஒருவரைப் பெண் மருத்துவராக நியமிக்கலாம். இனியாகிலும் அப்படி நியமிக்கும் நேரத்தில் பெண்களை அதிகமாகத் தேர்ந்தெடுக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, பெண்களுக்கு என்று சிறப்பான உரிமையும் இருக்கிறது. அதேபோல பெண்களுக்கு என்று தனியான தொல்லைகளும் இருக்கின்றன. படிக்கின்ற பெண்கள் அத்தனைபேரும் வேலைக்கு வர விரும்புவதில்லை. மேலும் நியமிக்கப்பட்ட இரண்டு மூன்று ஆண்டுகளில் இரண்டு மூன்று மாத காலத்திற்கான விடுமுறையை—ஆண்கள் பெறாத விடுமுறையை, பெண்களுக்கே உரிய விடுமுறையை—அவர்கள் பெறுவதால் பெண் டாக்டர்கள் பற்றாக்குறை ஏற்படுகிறது.

**திருமதி ஜோதி வெங்கடாசலம் :** தலைவரவர்களே, பல பெண் மருத்துவர்கள் தேர்ச்சி பெற்று வேலையில்லாமல் இருக்கிறார்கள். அவர்கள் அப்ளை செய்தும் வேலை கிடைக்கவில்லை. இந்த பிரைமரி ஹெல்த் சென்டர்களில் போட வேண்டுமென்று உத்தரவு இருக்கிறது. போடுவதற்கு பெண் உதவி மருத்துவர்கள் கிடைக்கவில்லை என்று அமைச்சரவர்கள் கூறுவதற்குப் பதிலாக அவர்களைப் போட முன்வருவார்களா ? அதுமட்டுமல்லாமல், திருமணமான



1973 நவம்பர் 20]

பெண்களாகயிருந்தால், கணவர் ஒரு பிரைமரி ஹெல்த் சென்டரிலும், மனைவி மற்றொரு மருத்துவ மனையிலும் இருக்கிறார்கள். அவர்களை இணைத்துப் போட அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, அம்மையார் அவர்கள் நல்வாழ்வுத் துறையிலே அமைச்சராகயிருந்த காலத்தில் இருந்தே டாக்டர்களை நியமிக்க வேண்டுமென்றால் ரெஜிஸ்ட்ரேஷன் டேட் படி நியமிக்க வேண்டுமென்ற முறையிருக்கிறது. மேலும், வேலைக்குப் பதிவு செய்துகொண்டவர்களில் ஆண்கள் 500 பேர்களும், பெண்கள் 127 பேர்களுமாகப் பெண்கள் பதிவு குறைந்து போயிருக்கிறது. அந்த வரிசைப்படி போட ஆரம்பித்தால் ஆண்களைத்தான் பத்தில் எட்டு பேர்களாக நியமிக்க வேண்டிய நிலையிருக்கிறது. கடந்த காலத்தில் 100 பெண்களைத் தனியாக அரசாங்கத்தின் அனுமதி பெற்று நியமித்தோம். ஆனால் ஆண் டாக்டர்கள், எங்கள் வாய்ப்பைத் தவிர்க்கக்கூடாது என்று வலியுறுத்துகிறார்கள். மற்றொன்று, கணவனும் மனைவியும் ஒரே யூனிட்டில் பணியாற்றக்கூடாது என்பது அவர்கள் காலத்திலேயிருந்து உள்ள விதியாகும். ஒரே ஊரிலே இருக்கலாமேதவிர, Not in the same Unit. ஒரே பிரைமரி ஹெல்த் சென்டரில் கணவனும், மனைவியும் ஒன்றாக இருக்கக்கூடாது. அப்படி ஒரே ஊரிலே இருந்தாலும் ஒரே மருத்துவ மனையில் இல்லாமல் வெவ்வேறு மருத்துவ மனைகளில் பணியாற்ற வேண்டுமென்றுதான் முறையிருக்கிறது. அதை மாற்ற முடியுமா என்பதுபற்றி நிலைமைகளையொட்டித்தான் பரிசீலிக்க வேண்டும்.

## பூவந்தி ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம்

*208 வினா—**திரு. த. சோணையா :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம்—பூவந்தி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கான கட்டட வேலை எப்போது முடிவடையும் ?

(இ) அதன் மதிப்பீடு எவ்வளவு ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) பூவந்தி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கான கட்டடம் கட்டுவதற்கு அரசு ஆணை பிறப்பிக்கவில்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

## தஞ்சை மருத்துவ மனையில் கொசுப் பெருக்கத்தை அகற்றும் பணி

* 209 வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் கொசுத் தொல்லையினை அகற்றிட அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தஞ்சை மருத்துவக் கல்லூரி, மற்றும் மருத்துவமனைப் பகுதிகளில் கொசுப் பெருக் கத்தை ஒழிக்கும் பொருட்டு ரூ. 39,900 செலவில் வடிகால்கள் கட்டு வதற்கு அரசு அண்மையில் ஆணை பிறப்பித்திருக்கிறது.

**திரு. என். கிட்டப்பா :** தலைவரவர்களே, கடந்த இரண்டாண்டு காலமாக சென்னை பொது மருத்துவமனை, ஸ்டான்லி மருத்துவ மனை, தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை போன்றவற்றில் தொடர்ந்து உடல் நலக் குறைவு காரணமாகச் சிகிச்சை பெற்றவன் என்ற முறையிலே, இங்கெல்லாம் உள்ள கொசுத் தொல்லைகளைவிட, தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அதிகமாக கொசுத் தொல்லை உள்ளபடியே இருப்பதால், மாண்புமிகு அமைச்சரவர்கள் குறிப்பிட்ட அந்த மதிப்பீட்டுத் தொகையில் விரைவாக நடவ டிக்கை எடுத்து, ஒரு சிறப்பு நடவடிக்கையாவது எடுத்து, விரைவில் அது கைகூட அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, தஞ்சை மருத்துவமனை தஞ்சை நகரசபையின் எல்லைக்குள் இல்லை. வேறு பகுதியில் இருப்பதால் நகரசபையினர் இதற்கு நடவடிக்கை எடுக்க முன்வரவில்லை. ஆகவே, அந்த மருத்துவமனைக்குத் தனியாகத் திட்டம் நிறைவேற்ற வேண்டியிருக்கிறது. தஞ்சை மாவட்டத்தில் குடந்தையிலுள்ள பைலேரியா ஒழிப்பு அலுவலர்





அல்லது மலேரியா ஒழிப்பு அலுவலர் மூலமாகத் தஞ்சை மருத்துவமனை வட்டாரத்திலுள்ள கொசுத் தொல்லையை ஒழிக்க கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது. அதே நேரத்தில், வடிகால் கட்ட வேண்டுமென்பதை ஏற்று பொதுப்பணித் துறையினரை நிறைவேற்றுமாறு கேட்டிருக்கிறோம்.

**திரு. எம். தேவராசன் :** இந்தக் கொசுக்கள் என்றும் இல்லாத அளவில் இப்போது உலகத்தில் பெருகி இருப்பதாகவும் டி.டி.டி. போன்ற மருந்துகளுக்கும் இம்யூன் ஆகிவிடுவதாகவும் கூறுகிறார் கள். இது உண்மையா2 ? இதனால் மலேரியா அதிகமாக இருப் பதும் உண்மையா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** எந்த ஒரு மருந்தும் முதலில் அதனுடைய உரிய பலனைத் தந்தாலுங்கூட அதையே தொடர்ந்து பயன்படுத்துகிறபோது அதனுடைய பலன் குறைந்து விடுகிறது. அந்த முறையில் கொசு ஒழிக்கப் பயன்படுத்தப்படுகிற மருந்துகள் சில இடங்களில் முழுப் பலன் தராமல் போய்விடுகிறது. அதனால் மலேரியா போன்றவை அதிகமாகி இருக்கிறது என்பது முழு உண்மை அல்ல. மலேரியா செகரிங்காக—திரும்பத் திரும்ப வரக்கூடிய நோய். அதைத் தடுப்பதற்கு முயற்சிகள் தொடர்ந்து நடைபெறத்தான் வேண்டும்.

## *Use of radio-active atoms to diagnose diseases*

* 210 *Q.*—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether there is any proposal to use radio-active atoms in the Madras City Hospitals to diagnose the diseases of abnormalities in the brain, thyroiod glands, lungs, heart, etc.; and

(*b*) if so, the details of the same?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** சென்னை அரசினர் பொது மருத்துவமனை, அரசினர் ஸ்டான்லி மருத்துவமனை நீங்கலாக ஏனைய மருத்துவ மனைகளில் கதிரியக்க ஓரக தனிமங்கள் (Radio-active isotopes) பயன்படுத்தும் செயற்குறிப்புகள் எதுவு மில்லை, இவ்விரு மருத்துவமனைகளிலுங்கூட இவற்றைப் பயன் படுத்தும் முறை தொடக்க நிலையில்தான் உள்ளது.

**திரு. என். கே. பழனிசாமி :** கடுமையான நோய்களை எல்லாம் கண்டு பிடிக்கும் அளவுக்கு மற்ற நாடுகளைப் போல் நம்முடைய நாட்டிலுள்ள அரசு மருத்துவ மனைகளில் இந்தக் கதிரியக்கத் தனி மங்களை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** மற்ற நாடுகளைப் போல என்று சொல்லும்போதே, மற்ற நாடுகளுடைய பொருளாதார நிலைமை என்ன நம்முடைய நாட்டுப் பொருளாதார நிலைமை என்ன என்பதை நினைவில் கொள்ளவேண்டும். திறமையுள்ளவர்கள் நம்மிடம் இருந்தால்கூடப் போதுமான கருவி வசதிகள் நம்மிடத்தில் இல்லை. இது வெளிநாட்டுச் செலாவணி அனுமதியுடனேயே நிறைவேற்றப்பட வேண்டும். அப்படிப்பட்ட நிலையில் தற்போது சென்னை பொது மருத்துவ மனையிலும், ஸ்டான்லி மருத்துவ மனையிலும் இதைப் பயன்படுத்தும் முறை ஓரளவு நடைபெறுகிறது. இங்கும் தொடக்க நிலையில்தான் இருக்கிறோம். எதிர்காலத்தில் அதற்குத் தேவையான வசதிகள் செய்தாகவேண்டும்.

### பின்தங்கிய வகுப்பு மாணவர் விடுதிகள்

*** 211 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பின்தங்கிய மாணவர் விடுதிகளுக்கு நிரந்தரமாகக் கட்டடம் கட்டித் தரும் திட்டத்தின்கீழ் இந்த நிதி ஆண்டில் திருச்சி மாவட்டத்தில் எத்தனை விடுதிகளுக்குக் கட்டடம் கட்டித்தர உத்தேசிக்கப்பட்டுள்ளது ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** திருச்சி மாவட்டத்தில் பின்தங்கிய மாணவர் விடுதிகளுக்கு நிரந்தரமாகக் கட்டடம் கட்டித் தரும் திட்டத்தின்கீழ் 15 விடுதிகளுக்குக் கட்டடம் கட்டித் தர அரசு உத்தேசித்துள்ளது.

*** 212 வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரத்தில் பிற்பட்ட மாணவர்களுக்கு தங்கும் விடுதி அமைக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையிலுள்ளதா ?





**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** இல்லை. ஆனால், மாயூரத்தில் பிற்பட்ட மாணவிகளுக்காக தங்கும் விடுதி ஒன்று இந்த ஆண்டு துவக்கப்பட்டுள்ளது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** கட்ட உத்தேசிக்கப்பட்ட விடுதிக் கட்டடங்கள் எந்தெந்த இடங்களில் கட்ட திட்டமிடப் பட்டுள்ளன?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** கல்லூரி மாணவர் இல்லம், திருச்சி ; மாணவர் உணவு இல்லங்கள்—விராலிமலை ; குன்னக்குடி, கண்ணனூர், லாலாபேட்டை, பஞ்சப்பட்டி, மணப்பாறை, ஜெயங்கொண்டான், பொன்பரப்பி, மருவத்தூர், பெரம்பலூர், திருவெரம்பூர், மேல்மாயனூர், புதுக்கோட்டை, பொன்னமராவதி ஆகிய இடங்களாகும்.

**திரு. என். கிட்டப்பா :** மாயூரம் நகரத்தில் ஐந்தாறு உயர் நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. அங்கு மாணவர்களுக்குத் தங்கும் விடுதி இல்லை. மாணவிகளுக்குத் தங்கும் விடுதி அமைக் கப்பட்டிருப்பதாகக் கூறினார்கள். ஆண்டவனே அர்த்தநாரீ சுவரராக—ஆண் பாதி பெண் பாதி உடம்பாக வைத்துக் கொண் டிருக்கிற நிலையில் மாணவிகளுக்கு விடுதி கட்டிக் கொடுத்திருப் பது போல் மாணவர்களுக்கும் விடுதி அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** நிதிநிலை நமக்கு அனு கூலமாகும் வரையில் இப்போதுள்ள நிலை நீடித்து வரும். நிதி நிலை அனுகூலமானால் மாண்புமிகு உறுப்பினருடைய யோசனையை அரசு பரிசீலனை செய்யும்.

### *Watershed Management Board*

* 213 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the State Government have constituted the Watershed Management Board for the State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) ஆம்.

(இ) பாசன நீர்த்தேக்கங்களில் வண்டல் படிவது குறித்த பிரச்சினையைக் கருதிப் பார்க்கவும், மண்வளப்பாதுகாப்பு நடவடிக்கைகளை நிறைவேற்றவும் மத்திய பாசன-மின்சக்தி வாரியம் அமைத்த நீர்த்தேக்க வண்டல் படிமம் பற்றிய குழு, நீர்த்தேக்கங்களின் பயன்பாட்டை ஒருங்கிணைத்து, திட்டமிட்டு நிர்வகிப்பதற்காக, அந்தந்த மாநிலங்களில் ஆற்றுப் பள்ளத்தாக்குத் திட்டங்களுக்கான நீர்த்தேக்க நிர்வாகக்குழுக்களை அமைக்குமாறு மாநில அரசுகள் கேட்டுக் கொள்ளப்படலாமென்று பரிவுரை செய்திருந்தது. மத்திய பாசன-மின்சக்தி வாரியம் கருத்து தெரிவித்துள்ளபடி, உணவு உற்பத்தி ஆணையாளர் தலைமையில் தமிழ்நாட்டில் ஆற்றுப் பள்ளத்தாக்குத் திட்டங்களுக்கான நீர்த்தேக்க நிர்வாகக்குழு ஒன்றை இம்மாநில அரசு அமைத்துள்ளது.

Thiru N. DENNIS: May I know whether the Board would conduct research into the water resources and also utilisation of the same?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: நீரைப் பயன்படுத்துவது பற்றியல்ல இது. வண்டல் படிவதை எப்படி அகற்றுவது என்பது பற்றியதாகும் இது. நீரைப் பயன்படுத்துவது பற்றித் தனிக் கேள்வி போட வேண்டும்.

*Structural Engineering Research Centre*

*214 Q.—Thiru N. DENNIS: Will [illegible] the Minister for Public Works be pleased to state—

(a) whether any Structural Engineering Research Centre is functioning in this State; and

(b) if so, the details thereof?

The Hon. Thiru P. U. SHANMUGAM: (a) & (b):

The Structural Engineering Research Centre is a Unit of the Central Scientific and Industrial Research of the Government of India and the Regional Office of the Structural Engineering Research Centre, Roorkee (U.P.) is functioning at Adayar,



Madras. The Regional Centre will shortly be equipped with an electoronic digital computer. It is expected to pay special attention to the following:—

(1) Development of minimum weight design for transmission line, micro-wave and television towers.

(2) Precasting–Prefabrication and systems building.

(3) Prestressed concrete sleepers.

(4) Partially prestressed concrete.

(5) Nuclear Structural Engineering.

*Traffic survey in Madras*

*215 Q.—Thiru R. R. MUNUSWAMY: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether any traffic survey was conducted by the Highways Research Station in Madras in January 1973; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: 1973 சனவரி மாதத்தில் சென்னையில் ஒரு கணிப்பு நடத்தப்பட்டது. தெற்கு கடற்கரைச் சாலையில், அனைத்திந்திய வானொலி நிலையத்திற்கு எதிராகப் பிரிந்து ஓஷியானிக் ஓட்டலுக்கு எதிராக மீண்டும் தெற்கு கடற்கரைச்சாலையில் சேரும் பக்கச் சாலையை பயன்படுத்தும் வாகனங்களின் எண்ணிக்கையை கணக்கிடவும் இச்சாலையில் எத்தனை வாகனங்கள் திருப்பிவிடலாம் என்பதனை அறிவதற்காகவும் இக்கணிப்பு நடத்தப்பட்டது.

சென்னை—கோவை விரைவு இரயில்.

*216 வினா—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவைக்கும் சென்னைக்கும் இடையில் துரித ரெயில் வண்டி விடுவது பற்றி மாநில அரசு பரிந்துரை ஏதேனும் செய்துள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரமென்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) இல்லை.

(இ) இல்லை.

[1973 நவம்பர் 20

திரு. சு. துரைசாமி: கோவையிலிருந்து நிறையப் பேர் சென்னைக்கு வரவேண்டிய அவசியம் இருக்கிறது. இப்போதுள்ள வண்டிகள் இரவு நேரங்களில் வரும் வண்டிகள் கோவையிலிருந்து இங்கு வந்து வேலைகளை முடித்துச் செல்ல துரித வண்டி அமைப்பது தேவை என்று நம்முடைய மாநில அரசு மத்திய அரசுக்குச் சிபாரிசு செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மத்திய அரசுக்கு மாநில அரசு சிபாரிசு செய்திருக்கிறதா என்று கேட்டதற்கு இல்லை என்று சொன்னேன். கன்சல்டேட்டிவ் கமிட்டியில் இதுபற்றி விவாதிக்கப்பட்டு திரு. ஏ. என். நாயக் அவர்கள் கோவைக்கும் சென்னைக்கும் இடையே சூபர் எக்ஸ்பிரஸ் விடலாம் என்ற யோசனையைச் சொல்லியிருக்கிறார்கள். அதுபற்றிப் பரிசீலனை செய்து கொண்டிருப்பதாகவும் தகவல் வந்திருக்கிறது.

## இரட்டை இரயில் பாதைகள்.

* 217—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் முக்கிய இரயில் பாதைகளில் இரட்டை இரயில் பாதை அமைக்கக் கோரி அண்மையில் நமது அரசு மத்திய அரசினை வலியுறுத்தி உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இல்லை.

திரு. என். கிட்டப்பா: நமது அரசு இதுவரை வலியுறுத்தவில்லை என்றாலும் தமிழகத்தைப் பொறுத்தவரை இரட்டை இரயில் பாதைகள் அமைப்பதற்கு மத்திய அரசு ஏதேனும் திட்டம் வைத்திருக்கிறதா? நம்முடைய அரசுக்கு அதுபற்றிய முழு விவரம் தெரியுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இரட்டை ரயில் பாதை போட மணவாளநகர்—திருவொற்றியூர்—கூடூர்; அரக்கோணம்—ரேணிகுண்டா; அரக்கோணம்—சோலையாறு; சோலையாறு—ஈரோடு; போத்தனூர்—மதுக்கரை அகியவை. இரட்டை ரயில் பாதை போடும் பணி நடந்து கொண்டிருப்பது—ஈரோடு—ஊத்துக் குழி; ஊத்துக்குழி—இருகூர்.



1973 நவம்பர் 20]

## *Production of cycle rickshaws*

* 218 Q.—Thiru N. DENNIS: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether Tamil Nadu Small Industries Corporation Limited have commenced production of cycle-rickshaws; and

(b if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம்.

(ஆ) 1973 மே மாதம் முதல் 15—7—73 வரை 765 சைக்கிள் ரிக்ஷாக்கள் உற்பத்தி செய்யப்பட்டு, 707 சைக்கிள் ரிக்ஷாக்கள் விற்பனையானது.

Thiru N. DENNIS: May I know the total investment for the same?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இது நம்முடைய டான்சி தொழிற்சாலை செய்வது. தனியாக முதலிட்டு தொழில் செய்ய வில்லை.

## *Small Car Project*

* 219 Q.—Thiru N. K. PALANISWAMY: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether it is a fact that the Government have addressed the Centre requesting the location in Tamil Nadu of a small car project during 1972; and

(b) if so, whether any reply has been received therefor?

மாண்புமிகு திரு செ. மாதவன்: (அ) ஆம்.

(இ) பயணிகள் கார் தொழிற்சாலையை பொதுத் துறையில் நிறுவுவதற்கு எந்த முடிவும் எடுக்கப்படவில்லையாதலால் அமைப்பிடம் பற்றிய கேள்வி எழவில்லை என்று மத்திய அரசு கூறியுள்ளது.

[முற்பகல் 9-30]

திரு. என். கே. பழனிசாமி: இம்மாதிரி ஒரு தொழிற்சாலை ஏற்பட்டால் அதற்கு எவ்வளவு மூலதனம் வேண்டும்? அதை ஜாயின்ட் செக்டாரில் நிறுவ ப்ரப்போஸல் அனுப்பப்பட்டதா? அல்லது சர்க்காரில் இருந்து நிறுவ ப்ரப்போஸல் அனுப்பப் பட்டதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: முதல் கேள்விக்குப் பதில், அப்புள்ளி விவரம் என்னிடம் இல்லை. இந்தத் தொழிற்சாலையை பொதுத் துறையில் ஆரம்பிக்க வேண்டும் என்ற ஒரு பரிசீலனையை மத்திய அரசு செய்து வந்தது. அதைத் தமிழ் நாட்டுக்குக் கொடுக்க வேண்டும் என்று வற்புறுத்தி வந்தோம். ஆனால் அந்தப் பிரச்னையை கைவிட்டுவிட்டார்கள். இதற்கிடையில் தனியார் சிலபேர்கள் வெளிநாட்டுத் தொழில் நுட்ப உறவு இல்லாது இங்கேயே ஆரம்பிப்பதற்காக முன் அனுமதி பெற்றிருந்தார்கள். கடைசியில் அவர்களும் இதுபோன்ற பெரிய தொழிற்சாலைகள் ஏற்படுத்துவதற்குத் தொழில் நுட்ப அறிவு பெறவில்லை என்று முடிவெடுத்திருப்பதால் மேற்கொண்டுதான் முயற்சி எடுக்கப்பட வேண்டும்.

திரு. கே. டி. கே. தங்கமணி: இந்த ஸ்டான்டேர்ட் மோட்டார் ஆலையை மூடியபோது தமிழக அரசு மத்திய அரசிடம் அவர்களே அதை ஏற்று நடத்துவதற்கு ஒரு ஆலோசனை சொன்னார்களே, அந்த ஆலோசனையை எந்த அளவிற்கு மத்திய அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது? அல்லது அதை மாநில அரசு கைவிட்டு விட்டதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அதை அப்போதே மத்திய அரசு ஏற்கவில்லை. இப்போது தொழிற்சாலை நடந்து வருவதால் அப்பிரச்னை எழவில்லை.

THIRU K. M. SUBRAMANIAM: Sir, in view of the extreme shortage of petrol in the country and the consequent administrative breakdown due to non-availability of petrol, will this Government recommend to the Centre not to embark upon any further expansion of the Motor Car Industry or start any new industries till we are able to conquer this problem of petrol?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: பெட்ரோல் பிரச்னை புதுப் பிரச்னை. அதை மத்திய அரசு எப்போது பரிசீலிக்கப் போகிறது என்பதைப் பொறுத்திருந்து பார்க்க வேண்டும். இந்தச் சிறிய கார் தொழிற்சாலையைப் பொறுத்தவரையில் ஏற்கனவே மத்திய அரசு இதை கைவிட்டுவிட்டது.



திரு. சு. துரைசாமி: கோவையில் இருக்கிற டெக்ஸ்டூல் கம்பெனியை அரசு ஏற்று நடத்துகிறது. பாலசுந்தரம் அவர்கள் ஐந்தாறு ஆண்டுகளுக்கு முன்பே ஒரு சிறிய கார் தயாரித்தார். அதை மீண்டும் தயாரிப்பதற்கு அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுப்பதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அதைப்பற்றிய தகவல் இல்லை.

### திருநெல்வேலி நீதி மன்றங்கள்.

* 220 வினா—திரு. சங்கமுத்து தேவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் (கொக்கிரகுளம்) மாவட்ட நீதிமன்றம் மற்றும் அதைச் சார்ந்த மற்ற நீதி மன்றங்களையும் தற்போது கொக்கிரகுளத்திலிருந்து வேறு இடத்திற்கு மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) & (இ) கொக்கிரகுளத்தில் இப்போது செயல்பட்டு வருகின்ற எல்லா நீதிமன்றங்களும் ஒருங்கே அமையும் வகையில் கட்டிடம் ஒன்றை பாளையங்கோட்டை மருத்துவக் கல்லூரி வளவில் கட்டுவது பற்றிய செயற்குறிப்பை அண்மையில் அரசு ஆராய்ந்தது. நிதி நெருக்கடியை முன்னிட்டு அந்தச் செயற்குறிப்பு தள்ளி வைக்கப்பட்டுள்ளது.

திரு. ச. சங்குமுத்து தேவர்: இப்போது நடத்தப்படுகிற இந்தயிடத்திலேயே மேற்படி கட்டடங்களை நல்லமுறையில் கட்டுவதற்கான வசதி இருப்பதாகத் தெரிகிறதே, இந்த இடத்திலேயே அவற்றை அமைப்பதற்கு அரசாங்கம் பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அந்த இடம் ஆற்றோரத்தில் இருக்கிறது. அந்த இடம் நல்ல இடமா அல்லது பாளையங்கோட்டை மருத்துவமனைக்குப் பக்கத்தில் உள்ள இடம் நல்ல இடமா என்பதில் கருத்து வேறுபாடு இருக்கிறது. திட்டமே தள்ளி வைக்கப்பட்டிருப்பதால் இப்பிரச்னை இப்போது எழவில்லை.

[1973 நவம்பர் 20

அரியலூருக்கு துணை நீதி மன்றம்.

*221 வினா—திரு. செ. சதாசிவம் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், அரியலூரில் சப்-கோர்ட் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) நீதிமன்றங்களின் அதிகார வரம்பு குறித்த குழு அளித்துள்ள அறிக்கையைப் பரிசீலித்த பின்னர், அரியலூரில் துணை நீதிமன்றம் (சப்-கோர்ட்) ஒன்றை ஏற்படுத்துவது குறித்து முடிவெடுக்கப்படும்.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இந்த அறிக்கை வருவதற்கு காலதாமதமாகுமா ? அல்லது அறிக்கை வந்து பரிசீலனையில் இருக்கிறதா ? என்ற விவரத்தை அமைச்சர் அவர்கள் கூறுவார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அறிக்கை வந்துவிட்டது. ஆனால் நாம் நல்ல நோக்கத்தோடு எங்கெங்கு நீதிமன்றங்கள் பரவலாக அமைக்கப்பட வேண்டும் என்று பரிசீலித்தோம். பெரிய அறிக்கை, ஏராளமான நீதிமன்றங்களுக்கு பரிந்துரை செய்யக்கூடிய நிலை இருப்பதால் நிதிப் பிரச்னை வந்திருக்கிறது. ஆகவே எதெதை "ஃபேஸ்ட் ப்ரோக்ராமாக" முன் உரிமை கொடுத்து எடுக்கலாம் என்பதை பரிசீலித்து வருகிறோம்.

டாக்டர் ச. மு. பழனியப்பன் : சப்-கோர்ட்கள் அமைக்க வேண்டும் என்று பல்வேறு பகுதிகளில் இருந்து இந்த அரசுக்கு கோரிக்கைகள் வந்திருக்கின்றன. எனவே, இந்த அறிக்கையை விரைவில் பரிசீலனை செய்து இதற்கான முடிவை விரைவில் மேற்கொள்ள இந்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : உறுப்பினர் அவர்களுடைய தொகுதியில் இருந்தும் அப்படிப்பட்ட ஒரு கோரிக்கை இருக்கிறது. ஆனால் குழு அதுபற்றி மாறாகத்தான் பரிந்துரை செய்திருக்கிறது.



1973 நவம்பர் 20]

திருவில்லிபுத்தூருக்கு துணை நீதி மன்றம்.

*222 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவில்லிபுத்தூரில் சப்-கோர்ட் ஏற்படுத்த அரசு ஆலோசித்து வருகின்றதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நீதிமன்றங்களின் அதிகார வரம்பு குறித்த குழுவின் அறிக்கையைப் பரிசீலனை செய்த பின்னர் திருவில்லிபுத்தூரில் சப்-கோர்ட் அமைப்பது குறித்து முடிவெடுக்கப்படும்.

திரு. என். கிட்டப்பா : அதன் பணிகள் எப்போது துவங்கப்படும் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அரசாங்க உத்தரவு போட்டவுடன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : ஸ்ரீவில்லிபுத்தூரில் சப்-கோர்ட் அமைப்பது சம்பந்தமாக ஹைகோர்ட்டில் இருந்து விசேஷ பரிந்துரை ஏதாவது வந்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : உயர்நீதிமன்றம் அப்படிப்பட்ட சிபார்சு ஒன்றை செய்தது. நாம் அதை இந்தக் குழு பரிசீலிக்க வேண்டுமென்று அனுப்பித்தோம். குழு பரிசீலனை செய்து இப்போது முடிவை அனுப்பியிருக்கிறது. அதை நாம் மறுபரிசீலனை செய்ததற்குப் பின்னால் எல்லா நீதிமன்றங்கள் பற்றியும் முடிவு எடுக்கும்போது முன் உரிமை கொடுத்து எடுக்க முடியுமா என்பது பற்றி ஆலோசிக்கலாம்.

திரு. கே. டி. கே. தங்கமணி : இந்தக் குழுவின் தலைவராக இருந்தவர் இப்போது ஹைகோர்ட் நீதிபதியாகி விட்டார். ஆகவே இந்தக் குழுவின் சிபார்சு எப்போது அமுலாக்கப்படும் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அதுதான் விளக்கம் சொன்னேன். ஏராளமான சிபார்சுகள் இருப்பதால் ஒட்டுமொத்தமாக எடுத்தால் நிதிப்பிரச்னை வருகிறது. ஆகவே முன் உரிமை கொடுத்து, மக்களுக்கு நன்மை செய்யத்தக்க அளவில்

எது எதை முதலில் எடுத்துக்கொள்ளலாம் என்று பரிசீலனை நடைபெற்று வருகிறது. நிதிநிலைக்கேற்றவாறு பரிசீலனை செய்து ஒவ்வொன்றாக எடுத்துக்கொள்ளப்படும்.

### புதுக்கோட்டை மாவட்டம்

* 223—திரு. வா. மை. அப்துல் ஜப்பார்
திரு. என். கிட்டப்பா
மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உத்தேச புதுக்கோட்டை மாவட்ட அமைப்பில் கரூர் வட்டம், அரவக்குறிச்சி பகுதிகள் ஏதும் இணைக்கப்படுவதற்கான உத்தேசம் ஏதேனும் ஆய்வில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** இல்லை.

**திரு. வா. மை அப்துல் ஜப்பார்:** இந்த உத்தேச புதுக்கோட்டை மாவட்டம் இப்போது இருப்பதைப் போல் தர்மபுரி, ராமனாதபுரம் மாவட்டங்களைப் போன்று பிற்பட்ட பகுதியாக அறிவிக்கப்பட்டு மத்திய அரசிடமிருந்து ஏதாவது விசேஷ சலுகைகள் பெற அரசுக்கு உத்தேசமுண்டா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** இப்போதே சில பகுதிகள் பிற்பட்ட பகுதிகளாக கருதப்பட்டு வருகின்றன. புதுக்கோட்டை மாவட்டம் அமைக்கப்பட்ட பிறகு அதைப்பற்றி பரிசீலிக்கலாம்.

**திரு. என் கிட்டப்பா:** புதுக்கோட்டை மாவட்டத்தினுடைய துவக்கம் வருகிற தமிழர் திருநாளாகிய பொங்கல் நாள் அன்று துவங்கப்பட இருப்பதாக அரசு அறிவித்துள்ளதாக அறிகிறேன். துவங்கப்பட இருக்கிற புதுக்கோட்டை மாவட்டத்தில் பக்கத்தில் உள்ள எந்தெந்த மாவட்டங்களில் இருந்து எந்தெந்தப் பகுதிகள், குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் இருந்து எந்தெந்தப் பகுதிகள் இணைக்கப்பட இருக்கின்றன என்பதையும் அறந்தாங்கிப் பகுதி அதில் சேர்த்துக்கொள்ளப்பட இருக்கிறதா என்பதையும் அறிவிக்க இயலுமா?



THE HON. THIRU S. J. SADIQ PASHA: The new district will be constituted with effect from 14th January 1974. A Special Officer has been appointed to work out details and also make preliminary arrangements in connection with the formation of the Pudukottai District.

The proposed Pudukottai District will comprise of the following areas:—

1. Thirumayam;
2. Kulathur;
3. Alangudi;
4. The present Pudukottai sub-taluk will be upgraded into a main taluk and Gandharvakottai and Kallakottai firkas taken away from Orathanadu will be added to the Pudukottai District;
5. Aranthangi taluk;
6. Twenty-one Revenue Villages in Keeramangalam firka of Pattukottai taluk in Thanjavur district will be attached to the Alangudi taluk;
7. Five Revenue Villages taken from Thanjavur taluk will be added to Thirumayam taluk.

Subsequently, the Government consider that the villages covered by the C.M.P. area in Aranthangi taluk should remain in Thanjavur district itself so that the agriculturists will continue to enjoy the benefits and concessions extended by the Government. However, a final decision has not been taken.

### வக்பு போர்டால் தொழிற்பயிற்சிப் பள்ளி துவக்கம்

* 224 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வக்பு போர்டால் திருச்சியில் ஒரு தொழிற் கல்விக் கூடம் துவக்கும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** ஆம்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** துவக்கப்படயிருக்கிற தொழிற் கல்விக் கூடம் எந்த இடத்தில் அமைக்க உத்தேசிக்கப் பட்டுள்ளது?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** அந்தக் கல்விக் கூடம் அமைப்பதற்கு பத்து ஏக்கர் நிலம் தேவையாக இருக்கிறது. பத்து ஏக்கர் நிலம் இப்போது வாங்குவதற்கு ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஜமால் முகமது கல்லூரியைச் சேர்ந்த ஒரு ஆசிரியர் ஐந்து ஏக்கர் நிலத்தை இனமாகவும் ஐந்து ஏக்கர் நிலத்தை குறைந்த விலையில் கொடுப்பதாகவும் சொல்லியிருக்கிறார்கள். இதைப் பெறுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அந்த நடவடிக்கைகள் முடிந்த பிறகு இடம் தீர்மானிக்கப்படும்.

திரு. கே. ஏ. வகாப் : வக்ப் வாரியம் சார்பில் ஒரு மருத்துவக் கல்லூரி ஏற்படுத்துவதற்கு யோசனை இருந்ததாக அறியப் படுகிறது. அது சம்பந்தமாக ஏதாவது நடவடிக்கைகள் எடுக்கப் பட்டிருக்கின்றனவா ? அப்படி அமைக்கிற செயற்குறிப்பு வாரியத்தினிடம் இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** வாரியம் அமைப்பதற்கு முன்னால் கருதப்பட்ட கருத்து. மருத்துவக் கல்லூரி அமைக்க ஏராளமான பணம் தேவையென்ற நிலையில் அத்திட்டத்தை இந்த அரசின் சார்பாக வலியுறுத்தவில்லை.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : வக்ப் வாரியத்தால் அமைக்கப்பட இருக்கும் இத்தொழிற் கல்விக் கூடத்தில் ஏழை முஸ்லீம் மாணவர்களுக்கு அதிகம் இடம் தருவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஏழை மாணவர்களின் நன்மையைக் கருதித்தான் இதுபோன்ற கல்விக் கூடங்கள் அமைக்கும் முயற்சியினை வக்ப் வாரியம் எடுத்து வருகிறது.

*Deaths on account of consuming poisonous toddy at Mathur.*

* 225 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether a number of persons had died after drinking toddy at Mathur village near Tranquebar about the 29th April 1973; and

(*b*) if so, the details thereof?





THE HON. TVIRU S. J. SADIQ PASHA : (a) & (b): Four persons are reported to have died, after consuming toddy in Mathur village in Thanjavur District. They are (1) Muthiah Thevar, (2) Ramalingam, (3) Mani and (4) Chinnathorai. After attending a festival celebrated at the Mariamman Koil on 28th April 1973, they returned to the house of Muthia Thevar at about 10 p.m. and consumed half-a-bottle of toddy brought by him. Immediately after, all the four fell down unconscious and died during midnight. Selvaraj, brother of Ramalingam, who also consumed a small quantity was sent to the Government Hospital, Mayuram for treatment and was discharged on 30th April 1973. Investigation by the Police has disclosed that they were addicts and that they might have purchased the toddy from a shop or committed theft of toddy from a cocoanut tree. It is likely that the toddy would have contained poison. In spite of best efforts, the source of the toddy could not be located. The chemical analysis of the viscera of the four deceased persons has shown the presence of "Parathion", a poisonous substance.

*Visit of World Bank Team to Tamil Nadu*

* 226 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Agriculture be pleased to state the places visited by the World Bank Team during May 1973 to study Farm Projects in this State?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** பேரவை முன் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

THIRU N. DENNIS: May I know whether any report has been submitted by the Team?

THE HON. THIRU Si. Pa. ADITANAR : A preliminary report has been submitted by the Team. But the final report has not yet been submitted by the Team.

---

@ 282-284-ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப் பட்டுள்ளது.

## Visit of Food and Agriculture team to Tamil Nadu.

* 227 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether any Team of Food and Agriculture Organisation visited this State about the 25th March 1973; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) ஆம்.

(இ) ஐக்கிய நாடுகளின் உணவு, மற்றும் வேளாண்மை நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் 21—3—1973 முதல் 23—3—1973 வரை தமிழ்நாட்டிற்கு வருகை தந்து போளம்பாக்கம் கிராமத்திற்குச் சென்று பார்வையிட்டனர். 22—3—1973 அன்று காலை 10 மணி அளவில் சென்னை தலைமைச் செயலகத்தில் தலைமைச் செயலாளரை, அமைச்சரைச் சந்தித்து பேசினார்கள்.

THIRU N. DENNIS : May I know the suggestions or recommendations made by them and if so, whether they have been implemented ?

THE HON. THIRU Si. Pa. ADITANAR : Sir, this particular FAO team made merely a study visit. They have made no recommendaions. But the World Bank Team in its preliminary report has suggested an aid of nearly Rs. 6 crores for agricultural education and research.

THIRU R. PONNAPPA NADAR : Sir, did the Team make specific recommendation regarding agricultural study ?

THE HON. THIRU Si. Pa. ADITANAR : In its preliminary report, recommendations have been made with regard to study of Agriculture. Agriculture includes Animal Science, Fisheries and many other things. This particular Team has recommended that the Veterinary College in Madras City should be transferred to the Agricultural University.

## மானாவாரி சாகுபடித் திட்டம்

* 228 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மானாவாரி சாகுபடித் திட்டம் தமிழ் நாட்டில் எந்தெந்த மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டுள்ளது ?



மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : மானாவாரி சாகுபடித் திட்டம், தற்போது திருநெல்வேலி மாவட்டம், கோயில்பட்டி தாலுக்காவிலும், திருச்சி மாவட்டம், புதுக்கோட்டைத் தாலுக்காவிலும் "ஒருங்கிணைந்த புஞ்சை நில மேம்பாட்டுத் திட்டம்" என்ற பெயரில் மத்திய அரசின் முழு உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, இந்த மானாவாரி திட்டத்தை மேலும் ஊக்குவிப்பதற்காக தமிழக அரசு மேற்கொண்டு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்னென்ன என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, நடவடிக்கைகள் எல்லாம் தமிழக அரசுதான் எடுத்துக்கொண்டு வருகிறது. ஆனால், பண உதவி மட்டும் மத்திய அரசிலிருந்து பெற்று வருகிறோம்.

THIRU B. VENKATASAMI : May I know from the Hon. Minister for Agriculture, whether Dharmapuri district has been included in the Dry Farming Scheme ?

THE HON. THIRU Si. Pa. ADITANAR : As Dharmapuri district has been given a sum of Rs. 2 crores under the Drought Prevention Scheme, Dharmapuri and Ramanathapuram districts have not been included in the Dry Farming Scheme.

திரு. எம். சுரேந்திரன் : சார், மானாவாரி சாகுபடி திட்டத்திற்கு எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டு, செலவிடப் பட்டிருக்கிறது ? எந்தெந்த மாவட்டங்களில் இது செயல்படுத்தப் பட்டு வருகிறது ? மாநிலம் பூராவும் இத்திட்டத்தை விரிவுபடுத்த வாய்ப்பு இருக்கிறதா ? அப்படியிருந்தால், அது எப்போது நடைபெறும் ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, மொத்தம் இதற்காக உதவித் தொகை ஏறத்தாழ 1½ கோடி ரூபாய் கோவில்பட்டித் தாலுக்காவிற்கும், இன்னொரு 1½ கோடி ரூபாய் புதுக்கோட்டை தாலுக்காவிற்கும் இதுவரை செலவிடப் பட்டிருக்கிறது. இன்னும் எவ்வளவு செலவாகும் என்ற விவரம்

[1973 நவம்பர் 20

என் கையில் இல்லை. தனி வினா எழுப்பினால் சொல்ல முடியும். இது 4—5 ஆண்டு காலம் தொடர்ந்து நடைபெற வேண்டிய திட்டமாக இருக்கிறது. ஏனெனில், ஆராய்ச்சி தொடர்ந்து இதில் நடைபெற வெண்டியிருப்பதால்.

**திரு. சோ. அழகர்சாமி:** தலைவரவர்களே, இந்த மானாவாரி சாகுபடி திட்டத்தின்கீழ் எந்தெந்தப் பணிகள் மேற்கொள்ளப் பட்டு, செயல்பட்டு வருகின்றன? அதிலே விவசாயிகளுக்கு என்னென்ன விதமான உதவிகள் அளிக்கப்பட்டு வருகின்றன என்பதையும் அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** தலைவரவர்களே, இந்த மானாவாரி திட்டம் குறிப்பாக மழை குறைவாக பெய்யும் பகுதிகளில் எப்படி வேளாண்மை வளர்ச்சியைப் பெருக்குவது என்பதை அடிப்படை நோக்கமாக வைத்து செயல்பட்டு வருகிறது என்றாலும், குறிப்பாக இதிலே மண் வளம், நில வளம், வறட்சிப் பகுதிகளில் எப்படி வளர்ச்சியைப் பெருக்குவது என்பதும், ஆராய்ச்சியின் அடிப்படையாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

### *Experiments on artificial rain making*

*229. Q.—THIRU N. K. PALANISWAMY: Will the Hon. the Minister for Agriculture, be pleased to state—

(a) whether the State Government have requested the Institute of Tropical Meteorology to conduct artificial rain making in Madras; and

(b) if so, the details of the same?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

### *Poultry Development Corporation*

*230 Q.—THIRU N. K. PALANISWAMY: Will the Hon. the Minister for Agriculture, be pleased to state—

(a) whether there is any proposal to set up a Poultry Development Corporation in this State; and

(b) if so, the details of the same?



1973 நவம்பர் 20]

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** (அ) விவர அறிக்கை @ ஒன்று பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. என். கே. பழனிசாமி:** தலைவரவர்களே, இந்த அறிக்கையில் லொகேஷன் ஆபீசிற்காக ரூ. 25,000 ஒதுக்கப் பட்டுள்ளதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இதிலே கோழிக்காக எவ்வளவு செலவு செய்யப் போகிறார்கள்? கோழிப் பண்ணையில் மிகவும் முக்கியமான விஷயம், முட்டையை எப்படி விற்பது என்பதுதான். அதுமட்டுமல்ல, போண்டா கோழி என்று சொல் கிறார்களே, அதற்கு தீவனம் மிகவும் முக்கியமானது. அதற்குத் தகுந்த தீவனம் இல்லையென்றால் கோழிப்பண்ணை நடத்த முடியாது. ஆகவே, கோழிக்கான தீவன உற்பத்தியைச் செய்வ தற்கு, முட்டைகள் சரியான வகையில் வருவதற்கு, இன்னும் அதிகமான பணம் ஒதுக்கிச் செலவிட அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** இந்த பௌல்டிரி டெவலப்மெண்ட் கழகத்தின் கணக்கு வழக்குகள் பேரவைமுன் விரைவில் வைக்கப்படும். இதற்காக தற்போது ரூ. 25,000 ஒதுக்கப்பட்டிருந்தாலும். எவ்வளவு தொகை இதுவரை செலவு செய்யப்பட்டிருக்கிறது என்பது, அதைப் பார்த்தால் தெரியும். தீவனம் என்பது மிகவும் முக்கியம் தான். இருப்பினும், தீவனச் செலவு அதிகமானால் கோழிப் பண்ணை நடத்த முடியாது என்பது என்னுடைய திடமான நம்பிக்கை பலமுறை நான் அந்தத் தீவன உற்பத்திச் செலவைக் குறைப்பதற்கு வழி சொல்லி இருக்கிறேன். முட்டை விற்பனையைப் பற்றி இப்போது பிரச்னை எழவில்லை. விற்க வேண்டிய நேரம் வருகிறபோது, சென்னை நகரத்தில் மட்டுமல்ல, மற்ற நகரங்களில் மட்டுமல்ல, வெளி மாநிலங்களில் கூட விற்க முடியும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தலைவரவர்களே, கோழி இல்லாத கோழிப்பண்ணைகள் பலயிடங்களில் இருக்கின்றன. முதலில் அந்த இடங்களில் கோழிகள் வைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா?

---

@285-291-ம் பக்கத்தில் இணைப்பு II-ஆக அச்சிடப் பட்டுள்ளது.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: இது பௌல்ட்ரி டெவலப்மெண்ட் பற்றியது. கோழி இல்லாத இடங்களில் கோழிப் பண்ணை வைப்பது என்பதுபற்றி அல்ல. தரமான கோழிக் குஞ்சுகளைத் தயாரித்து, கோழி வளர்க்க விரும்புகிறவர்களுக்குக் கொடுப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட நிறுவனம் இது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 231.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: It is a very important question. As egg is selling at 42 P., people are suffering a lot. When such an important question is answered, members should be given an opportunity to put supplementaries. We are raising our hands, but we are not able to catch the eye of the Hon. Speaker. We feel really sorry for it.

*Levy of Pilgrim tax in Thiruvarangam.*

* 231 Q.—THIRU N. K. PALANISWAMY: Will the Hon. the Minister for Local Administration, be pleased to state whether this Government have recommended to the Centre to permit the Srirangam Municipality to levy pilgrim tax throughout the year during 1972?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: இல்லை.

தொழில் வரி வசூல்

* 232 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தொழில் வரியை வேலை செய்யும் ஊழியர்களின் சம்பளத்திலேயே பிடித்துக் கொள்வது பற்றி அரசு ஆலோசித்து வருகின்றதா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: ஆம்.

திரு. என். கிட்டப்பா: அமைச்சர் அவர்கள் ஆம் என்று பதில் அளித்தார்கள். எந்த வகையிலே செயல்படுத்த இருக்கிறார்கள் என்பதை அறிவிக்க இயலுமா?





மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: மதுரை மாநகராட்சிச் சட்டம் 1971-ல் தொழில் வரியை, பணியாளரின் ஊதியத்தில் கழிவு செய்து, அதனை மாநகராட்சி அதிகாரியிடம் செலுத்த வேண்டும் என்று வரையறுக்கப்பட்டுள்ளது. அம்முறையை சென்னை மாநகராட்சி சட்டம் 1919-லும், தமிழ்நாடு நகராட்சிச் சட்டம் 1920-லும் கொண்டு வர உத்தேசிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு ஊராட்சி சட்டம் 1958, பிரிவு 121 கீழ் வேலை கொடுப்பவர் தொழில் வரிக்குட்பட்ட பணியாளரின் குடியிருப்பு முகவரியைத் தெரிவிக்க வேண்டுமெனவும், உள்ளாட்சி அதிகாரிக்குச் செலுத்த வேண்டிய தொழில் வரியினைப் பணியாளரின் சம்பளத்திலோ அல்லது ஊதியத்திலோ பிடித்தம் செய்து அதனை மேற்கூறிய அதிகாரியிடம் செலுத்த வேண்டுமென விதிகள் கொண்டுவரத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. சட்டத்தில் தேவையான மாற்றங்கள் விரைவில் செயலாக்கப்படும்.

THIRU K. M. SUBRAMANIAM: Sir, in view of the fact that so many new taxes have come up and the total amount of the professional tax collected is so small and also the collection charges are so high, will the Government think of dropping the professional tax completely, as many other State Governments are reported to have done?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தற்சமயம் அப்படிப்பட்ட உத்தேசம் எதுவும் இல்லை.

மெரீனா கடற்கரையருகே சுரங்கப் பாதை

* 233 வினா—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை மாநகர் மெரீனா கடற்கரைச் சாலையில் சுரங்கப் பாதை அமைக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: அச் சுரங்கப் பாதையை ரூ. 7.67 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் சென்னை மாநகராட்சி மன்றம் அமைக்க நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

திரு. சு. துரைசாமி: அந்தச் சுரங்கப் பாதையினுடைய வேலை எப்பொழுது துவங்கும், எப்பொழுது முடிவுறும் என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: அவ் வேலையைச் செய்ய ஒப்பந்த மனு பெறப்பட்டு அது தொடர்பான நெடுஞ்சாலை கிராமப் பணிக் தலைமைப் பொறியாளருடைய அறிவுரை எதிர் பார்க்கப்படுவதாக சென்னை மாநகராட்சி ஆணையாளர் தெரிவித்துள்ளார். இது சம்பந்தமாக உடனே நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி: சென்னையில் இப்படிப் பல இடங்களில் நெரிசல் இருக்கிறது. எங்கெங்கெல்லாம் சர்வே அமைப்பது என்று ஏதாவது இன்வெஸ்டிகேஷன் நடத்தப்பட்டிருக்கிறதா? இப்படியிருந்தால் மற்ற இடங்களிலும் இதற்கான வேலைகளை ஆரம்பிப்பதற்கான வழிவகைகளை அரசு செய்யுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: எங்கெல்லாம் நெரிசல் ஏற்படுகிறதோ அங்கெல்லாம் நெரிசல் ஏற்படுகின்ற பகுதிகளாக அறிவிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. வை. பாலசுந்தரம்: அண்ணா சாலை நெரிசலைத் தவிர்ப்பதற்கு ஜெமினியிலிருந்து பிராட்வே வரையில் ஒரு நீண்ட சுரங்கப் பாதை அமைக்கின்ற யோசனையேதும் அரசாங்கத்திடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தற்சமயம் ஒன்றும் இல்லை.

### *New buildings in Thousand Lights area.*

* 234 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether the Madras Corporation has proposed to construct buildings at Thousand Lights in Madras; and

**(b) if so, the details thereof ?**



மாண்புமிகு திரு. அ. பெ தர்மலிங்கம்: (அ) ஆம்.

(இ) ஆயிரம் விளக்குப் பகுதியில் அண்ணா சாலையும் திரு.வி.க. சாலையும் சந்திக்கும் இடத்தில் பல மாடிகள் கொண்ட கட்டிட மொன்றை ரூ. 50,00,000 செலவில் கட்ட சென்னை மாநகராட்சி மன்றம் உத்தேசித்துள்ளது.

THIRU K. M. SUBRAMANIAM: Since most of the costly Government lands in the City are occupied by private Manrams and persons belonging to political parties, whether this Government have taken steps to evict and construct such remunerative buildings in those areas ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: ஏற்கனவே மாநகராட்சி யினால் நடவடிக்கை எடுக்கப்பட்டு அப்புறப்படுத்தப்பட்டுள்ளன. கட்டப்பட வேண்டிய இடங்கள் அதிகமாக இருக்குமானால் அவை பற்றியும் நடவடிக்கை எடுக்கப்படும்.

### *Taxi stands in Madras City.*

* 235 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether the right to collect fees at Taxi stands in Madras City have been leased out to private parties; and

(b) if so, the parties to whom and the details of the amount for which the right has been leased out ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) ஆம்.

(இ) திரு. பி. எ. வெங்கடேசலு நாயுடு என்பாருடன் சென்னை மாநகராட்சி மன்றம், மூன்று ஆண்டுக்கு (1—4—1972 முதல் 31—3—1975 வரை) ரூ. 1,25,000-க்கு அவ்வுரிமையை அளித்து ஒப்பந்தம் செய்துள்ளது.

திரு. என். டென்னிஸ்: கார்ப்பரேஷன் டாக்ஸ் கலெக்டர் களின் மூலமாக நேரடியாக இந்தக் கட்டண வசூலைச் செய்தால் அதிக வருமானம் கிடைக்கலாமே?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: அதுபற்றி பல டெண்டர் பார்ட்டிகள் இருக்கின்றன என்பது தெரிந்ததற்குப் பின்பு தான், அந்தப் பணி ஒப்பந்தத்திற்கு விடப்பட்டிருக்கிறது. மேற்கூறிய

[1973 நவம்பர் 20

இந்தக் கட்டணம் வசூலிக்கும் உரிமையை சென்னை ஆட்டோ ரிக்ஷா ஓட்டுநர்கள் சங்கத்திற்கு அல்லது அதுபோன்ற சங்கத்திற்கு அளிக்கும் வகையில் சென்னை மாநகராட்சிச் சட்டப் பிரிவு 285-ஏ-ஐத் திருத்தலாமா அல்லது அதற்கு வழி செய்யும் விதிகளை வகுக்கலாமா அல்லது வேண்டாமா என்பது பரிசீலனையில் உள்ளது.

*Accident due to fall of sign board near Anna Salai.*

* 236 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether any sign board of shops projecting outside a commercial establishment collapsed in Mount Road, near Anna Statue resulting in casualties about the 28th April 1973; and

(b) if so, the details thereof ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** (அ) ஆம்.

(இ) அண்ணா சாலையில் "பிளாக்கர்ஸ் சாலை" வந்து சேரும் இடத்தில் நிர் 9 ('பி') என் கொண்ட கட்டிடத்தில் அமைந்துள்ள ஜானிக் கடையின் விளம்பரப் பலகை 28—4—1973 நண்பகல் 1.30 மணிக்கு கீழே விழுந்தது. அச்சமயம் அவ் வழியாகச் சென்று கொண்டிருந்த ஏழு பாதசாரிகளுக்குக் காயம் ஏற்பட்டது. அவர்கள் வந்து தங்கும் நோயாளிகளாக மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டனர். கட்டிட சேதம் எதும் இல்லை. மேற்படி பலகை சரியாகப் பொருத்தப்படாததால் கீழே விழுந்தது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்விகள் 237, 238, 239, 240, 241, 242 ஆகியவை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் வேண்டுகோளின்படி ஒத்தி வைக்கப்படுகின்றன.

*Concessional tickets for students in State Transport buses.*

* 243 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government to issue tickets at concessional rates for students in the State Transport Undertakings for their journeys to their native places during vacations; and

(b) if so, the details thereof?



1973 நவம்பர் 20]

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

**திரு. என். டென்னிஸ் :** டிரையினில் வழங்கப்படும் கன்செஷன் போன்ற கன்செஷன் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாணவர்களுக்குக் கட்டணச் சலுகை அளிப்பது பள்ளிகளுக்குப் போவதற்கே தவிர, வீட்டிற்குப் போவதற்கு அல்ல.

**விரைவுப் பேருந்துகளில் பழுது பார்க்கும் கருவிகள்**

* 244 **வினா—திரு. சோ. அழகர்சாமி :** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசு விரைவுப் பேருந்துகள் எதிர்பாராத விதத்தில் பஞ்சர் போன்ற சிறு ரிப்பேர் ஏற்படும் காலத்தில் உடன் சீர்செய்யத் தேவைப்படும் தளவாடங்கள் (tools bit) கொடுக்கப்பட்டுள்ளதா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** ஆம்.

**திரு. சோ. அழகர்சாமி :** தலைவர் அவர்களே, பல நேரங்களில் சிறு ரிப்பேர் இருந்தால் கூட, டயர் அல்லது ட்யூப் பஞ்சர் ஆனால் கூட அதை மாற்றுவதற்கு அல்லது சரி செய்வதற்குத் தேவையான உபகரணங்கள், டூல்ஸ் வண்டிகளில் இருப்பதில்லை. அந்த நிலைமையை மாற்றுவது பற்றி அரசு பரிசீலனை செய்யுமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** எதிர்பாராமல் ஏற்படுகின்ற பிரேக் டவுன்களை சரிபார்ப்பதற்குத் தேவையான கருவிகள் பொதுவாக விரைவுப் பேருந்துகளில் கட்டாயம் வைக்கப்பட வேண்டும் என்று அரசு உத்தரவு பிறப்பித்திருக்கிறது. எங்கேனும் அப்படியில்லை என்றால், அதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், நிச்சயமாக நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** ஒரு பஸ் வாங்கும்போது ஒரு டூல் கிட் வண்டியை விற்பவர்கள் கொடுக்கிறார்கள். அந்த

டூல் கிட்கள் ஒழுங்காக பஸ்களுக்கு வந்து சேருகின்றனவா என்று ஒரு ஆராய்ச்சி நடத்தி, அப்படியல்லை என்றால் அந்த டூல் கிட்கள் எங்கே போகின்றன என்பது பற்றி விசாரணை நடத்தப்படுமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** அப்படி ஒரு ஆராய்ச்சி நடத்த வேண்டிய அவசியமில்லை. ஆனால் அந்த டூல் கிட்கள் எவ்வளவு நாட்களுக்கு வருகின்றன என்பது தான் பிரச்னை.

**திரு. சி ஆறுமுகம்:** அரசுப் பேருந்துகள் வழியில் பழுதடைந்தால் சிறிய சிறிய ரிப்பேர்களைச் சரி செய்வதற்கு கூட ஒரு நாள் ஆகிவிடுகிறது. தனியார் துறை பேருந்துகளில் அவ்வப்பொழுது அவர்கள் சரி செய்து கொண்டு விடுகிறார்கள். அந்த மாதிரி அரசாங்கப் பேருந்துகளிலும் வசதி செய்து கொடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** அது அந்தக் காலம்.

**திரு எம். சுரேந்திரன்:** சிறு ரிப்பேர்களை அவர்களே சரி செய்து கொள்வது என்பது சாதாரணமாக நடைபெறுவதில்லை. ரிப்பேர் ஏற்பட்டவுடன் வண்டியை நிறுத்திவிட்டு, மற்றவர்களுக்குத் தகவல் கொடுத்து, வேறு வண்டி வருவதற்கு ஏற்பாடு செய்கிறார்கள். அதுதான் இப்பொழுது இருக்கிற நடைமுறை. சென்ற சனிக்கிழமையன்று கூட கோவையிலிருந்து சென்னை வருகின்ற வண்டியில் டீசல் இல்லாமல் வண்டி நின்று போய் விட்டது. வேறு வண்டியில் பிரயாணிகளை ஏற்றி அனுப்ப வேண்டியிருந்தது. இம்மாதிரி சிறு தவறுகள் ஏற்படாவண்ணம் பார்த்துக் கொள்ள அதிக அக்கறை எடுத்துக்கொள்ளப்படுமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** கட்டாயம் இதில் அக்கறை செலுத்த வேண்டியது அவசியம். இதுபோன்ற தவறுகள் ஏற்படாவண்ணம் வண்டியை எடுப்பதற்கு முன்னால் சரி பார்த்துக் கொள்ள வேண்டும் என்று ஏற்கனவே டிரைவர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டிருக்கிறது. அப்படி ஏதாவது தற்காலிகமாக ஒரு வேளை டீசல் பம்பு கட் ஆகி டீசல் இல்லாமல் போய் இருந்தாலும் இருக்கலாம். இதுபோன்ற குறைகளை நிச்சயம் தவிர்பதற்கு அரசாங்கம் முயற்சி எடுக்கும்.



**திரு. எஸ். வடிவேல்:** அரசு பஸ்கள் பழுது அடைகின்ற பொழுது, அதற்குப் பதிலாக வேறு வண்டி விடுவதற்கு முன் வருமா? வண்டிகளைப் பழுது பார்ப்பதற்கு மிகவும் கால தாமதம் ஆகிறது. அதனால் பிரயாணிகள் பல்வேறு இடங்களுக்குப் போய்ச் சேருவதற்குத் தடையாக இருக்கிறது என்பதை அரசு அறியுமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** அப்படி பழுதடைந்து விட்டால், தற்காலிகமாக நாம் சரி செய்து கொள்ளும் பழுதுகளாகவும் இருக்கின்றன. உடனடியாக அந்தப் பழுதுகளைச் சரிசெய்ய முடியாத பழுதுகளும் இருக்கின்றன. தற்காலிகமாக சரி செய்து கொள்ளக்கூடிய பழுதுகளை ஆங்காங்கு அவர்களே சரி செய்து பஸ்களை விடுவது தான் நல்லது.

[முற்பகல் 10-00]

**திரு. கே. எ. வகாப்:** தலைவரவர்களே, இப்படி ஏற்படுகின்ற சிறு சிறு பழுதுகளைச் சரிப்படுத்துவதற்கு டிரைவர்களுக்கு குறைந்த அளவுக்காவது மெக்கானிசம் பயிற்சி அளிப்பது நல்லது. ஆகவே, டிரைவர்களுக்கு இப்படிப்பட்ட பயிற்சி அளித்து, சிறு பழுதுகளை அவர்களே சரி செய்வதற்கு அனுமதி அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்துள்ள யோசனையின் பேரில்தான் ஓட்டுநர்களுக்கு ஓரளவு பழுதுபார்க்கும் பயிற்சி அளிக்கப்பட வேண்டுமென்ற அடிப்படையில் இப்போது புதிதாக ஓட்டுநர் வேலைக்கு ஐ.டி.ஐ. பயிற்சி பெற்ற 500 பேர்களை நியமிக்க திட்டமிட்டிருக்கிறோம்.

இருந்தபோதிலும் உறுப்பினர்கள் கூறியதுபோல விரைவு பேருந்துகள் ஆங்காங்கே நின்றுவிடுகின்றன என்பது அவ்வளவு சரியானது அல்ல. நான் இந்த பொறுப்பை ஏற்றுக் கொண்டஉடன் விரைவு பேருந்துப் போக்குவரத்தை சீரமைக்க வேண்டுமென்று முடிவு செய்தேன். அப்போது வாரத்திற்கு 4 லட்சம் ரூபாய் வந்து கொண்டிருந்தது. இப்போது வாரத்திற்கு 11 லட்சம் ரூபாய் வந்து கொண்டிருக்கிறது. நானே இந்த இலாகாவுக்கு வைத்த குறியீடு 10 லட்சம் ரூபாய்தான். அந்த அளவுக்கு இப்போது சீரமைக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தை அவையின் அனுமதியுடன் சிறிது நேரத்திற்கு நீட்டிக்கிறேன்.

*Special buses for women in Madurai.*

* 245 Q.—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) whether separate buses are provided for women passengers in the Madurai City; and

(b) if so, the details of the same ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(இ) பாண்டியன் சாலைப்போக்குவரத்துக் கழகம், மதுரை மாநகரில், காலையிலும் மாலையிலும் நெரிசல் மிகுந்த நேரங்களில் மகளிருக்காக வென்றே இரண்டு பேருந்துகளை—வழித்தட எண் 1—மத்தியப் பேருந்து நிலையத்திலிருந்து வருமான வரி அலுவலகம் வரையிலும்—வழித்தட எண் 14—மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலிருந்து திருநகர் வரையிலும் நடத்தி வருகிறது.

திரு. என். கே. பழனிசாமி : சார், இந்தமாதிரி பெண்களுக் கென்று தனியாக பஸ்கள் விடுவது சௌகரியமாக இருப்பதால், சென்னை நகரத்திலும், கோவை நகரத்திலும் இம்மாதிரி நெரிசல் நேரத்தில் தனி பஸ்கள் விடுவதற்கு சர்க்கார் பரிசீலனை செய்யுமா? தனி பஸ்கள் விட ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, சென்னை மாநகரைப் பொறுத்தவரையில் ஏற்கெனவே தனி பஸ்கள் விடப்பட்டிருக்கின்றன. கோவை நகரைப் பொறுத்த வரையில் அந்த வசதிகளைச் செய்துகொடுக்க அரசாங்கம் பரிசிலனை செய்யும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : சார், இப்படி மகளிருக்கென்று தனியாக விடப்படுகின்ற பஸ்களில் மகளிர் கண்டக்டர்களே நியமிக்கப்படுவார்களா ? எல்லா நகரங்களிலும் மகளிருக் கென்று தனி பஸ்கள் விடப்படுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : நெரிசல் நேரங்களில் மட்டும் மகளிருக் கென்று தனி பேருந்துகள் விடுப்படுகின்ற காரணத்தால், மகளிர் கண்டக்டர்களை நியமிப்பது என்பது





சரியல்ல. எல்லா நகரங்களிலுமே இம்மாதிரி தனிப் பேருந்துகள் விடுவது என்பது ஆங்காங்கே இருக்கின்ற நெருக்கடி நிலைமை யைப் பொறுத்தது.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், மதுரை நகரில் நெரிசல் நேரங்களில் பெண்களுக் கென்று தனி பேருந்துகள் விடப்படு கின்றன என்று சொன்னார்கள். அதே நேரத்தில் சில கல்லூரி களுக்குப் போகக்கூடிய மாணவர்களுக்கு பஸ் வசதி மிகவும் குறைவாக இருக்கிறது. அப்படிப்பட்ட இடங்களில் கொஞ்சம் அதிகமாக பஸ்களை விடுவதற்கு பி.ஆர்.சி.-க்கு அரசாங்கம் ஆலோசனை வழங்குமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : நெரிசலைப் பொறுத்து பஸ் வசதிகள் அதிகமாக்கப்படும்.

திரு. த. சோலையா : தலைவரவர்களே, மதுரை நகரில் இருந்து திருப்பரங்குன்றத்திற்கு—முருகன் கோவிலுக்குச் செல்லும் பாதையில் நெரிசல் அதிகமாக இருக்கிறது. பயணிகள் மிகவும் சிரமப்படுகிறார்கள். ஆகவே, அந்தக் கோவிலுக்குச் சென்றுவர பெண்களுக்குத் தனி பஸ் வசதி செய்துகொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, நெரிசலைப் பொறுத்து போதுமான பஸ் வசதிகள் செய்யப்படும் என்று ஏற்கெனவே பதில் சொல்லியிருக்கிறேன்.

சேலம் மாரியம்மன் கோயில் கோபுரம்.

* 246 வினா—திருமதி த. ந. அனந்தநாயகி : மாண்புமிகு அற நிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் மாரியம்மன் கோயிலில் கோபுரம் கட்டுவதற்கென அண்மையில் அனுமதி ஏதேனும் கோரப்பட்டதா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : ஆம்.

[1973 நவம்பர் 20

திருமதி த. ந. அனந்தநாயகி: ஆம் என்று பதில் சொல்லி விட்டார்கள். எப்போது அனுமதி கோரப்பட்டது? எப்போது வேலை முடிக்கப்படும் என்று அமைச்சரவர்கள் தெரிவிக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, இந்த வேலை துவங்கப்பட்டு, நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. விரைவில் முடிவடையலாம்.

## திருக்கண்மாலீஸ்வரர் கோயில் நிதி.

*247 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம், திருக்கண்மாலீஸ்வரர் கோயில் நிதியிலிருந்து கிருஷ்ணராயபுரத்தில் பயணியர் விடுதி ஒன்று கட்டப்படுவதற்கான திட்டம் ஏதேனும் ஆய்வு செய்யப்பட்டதா?

(இ) ஆம் எனில், இதுவரை விடுதி கட்டப்படாமல் காலதாமதம் ஆவதற்கு உரிய காரணம் என்ன?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) ஆம்.

(இ) திருக்கோயிலின் நிதி வசதி சரியின்மையால் அறங்காவலர் குழு இத் திட்டத்தைக் கைவிடத் தீர்மானித்துள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, கிருஷ்ணராயபுரத்தில் ஊராட்சி ஒன்றியமும், வங்கி நிறுவனங்களும் இன்னும் ஏராளமான அலுவலகங்களும் இருக்கின்றன. அந்த இடத்தில் அதிகாரிகள் வந்தாலோ அல்லது வேறு யாராவது வந்தாலோ தங்குவதற்கு இடவசதி இல்லை. நான் அறநிலையத் துறை ஆணையரை கேட்டபோது நிச்சயம் செய்துதரப்படும் என்று சொன்னார். இப்போது இல்லை என்று சொல்வதற்கு பணம் இல்லையா அல்லது மனம் இல்லையா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: மனம் இருக்கிறது பணம் இல்லை.



1973 நவம்பர் 20]

*248 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரத்திலுள்ள திருக்கண்மாலீஸ்வரர் கோவில் நிதியிலிருந்து கல்யாண மண்டபம் கட்டும் திட்டம் எந்த நிலையிலுள்ளது?

(இ) இத் திட்டம் நிறைவேற்றப்படுவதில், காலதாமதம் ஆவதற்கு உரிய காரணம் என்ன?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) மற்றும் (இ): கிருஷ்ணராயபுரம், திருக்கண்மாலீஸ்வரர் திருக்கோயிலுள்ள நிதியிலிருந்து ரூ. 40,000 செலவில் ஒரு திருமண மண்டபம் கட்டும் திட்டம் உள்ளது. போதிய நிதி வசதி இல்லாததால் மண்டபம் கட்டும் திட்டம் நிறைவேற்றப்படுவதில் காலதாமதம் ஆகிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: அந்தக் கோவிலில் நிதி வசதி இல்லையானால் பக்கத்திலுள்ள கோவிலில் ஏராளமாக இருக்கின்ற நிதி வசதியைப் பயன்படுத்திக் கல்யாண மண்டபம் கட்டித் தரப்படுமா? நான் ஆணையரைக் கேட்டபோது அறநிலையத் துறையினரிடம் கொஞ்சம் பணம் கேட்டுப் பெறலாம் என்று சொன்னார். ஆகவே, இதை மறுபரிசீலனை செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, அதுபற்றி பரிசீலனை செய்யலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. அவையுரிமைப் பிரச்சினை.

### சட்டப் பேரவைக்கு வரும்போது உறுப்பினர் திருமதி த. ந. அனந்தநாயகி கைது செய்யப்பட்டது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. ஆர். மாரிமுத்து அவர்கள்,

Yesterday the hon. Member of the House Thirumathi T. N. Anandanayaki was arrested while proceeding to the House for presenting a memorandum to the Minister about the Madras Corporation affairs and for taking part in the discussion. She was thus prevented and it involves a breach of privilege of a member; it may be referred under Rule 192 to the Committee of Privileges.

என்று ஒரு உரிமைப் பிரச்சினையைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அது எப்படி உரிமைப் பிரச்சினையாக வரும் என்று சுருக்கமாக விளக்கும்படி அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எ. ஆர். மாரிமுத்து: தலைவரவர்களே, நேற்றையதினம் எங்களுடைய சட்டசபைக் கட்சியின் உதவித் தலைவராக இருக்கும் திருமதி அனந்தநாயகி அவர்கள் சமீபத்தில் மாநகராட்சியிலே ஏற்பட்டிருக்கும் சம்பவம் சம்பந்தமாக, அதை எடுத்துச் சொல்வதற்காக எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் ஊர்வலமாக வந்தபோது அதிலே கலந்து கொண்டு வந்தார்கள். அப்படி வருகின்றபோது பாதையிலே போலீசார் அந்த ஊர்வலத்தை நிறுத்தி, திருமதி அனந்தநாயகி அவர்களைக் கைது செய்திருக்கிறார்கள். இப்போது சட்டசபை நடந்து கொண்டிருக்கிறது. சட்டசபை நடந்து கொண்டிருக்கிறபோது எந்த மெம்பரையும் சட்டசபைக்கு வந்து, கலந்து கொள்ளாமல் தடை செய்யக்கூடாது. எந்த மெம்பருக்கும் தடை இருக்கக்கூடாது. ஒரு உறுப்பினர் என்ற முறையிலே அவர்கள் இங்கு வருவதற்கு அனுமதிக்கப்பட்டிருக்க வேண்டும். அவர்கள் கைது செய்யப்பட்டிருக்கக் கூடாது. அப்படிக் கைது செய்யப்பட்டால் அது அந்த மெம்பரின் உரிமையைப் பறிப்பதாகும் என்று நாங்கள் கருதுகிறோம். ஆகவே, சட்டசபை நடந்து கொண்டிருக்கிறபோது அந்த ஊர்வலத்தினர் கொண்டுவந்த மெமொராண்டத்தை, சட்டசபை மெம்பர் என்ற முறையில் தலைமைதாங்கி வந்து, அதை அமைச்சரிடம் கொடுப்பதற்காக அவர்கள் அதில் கலந்து





கொண்டார்கள். அவர்கள் கைது செய்யப்பட்டதால், சட்டசபைக் கூட்டத்தில் கலந்துகொள்ள முடியாதபடி அவர்களுடைய உரிமை பறிக்கப்பட்டிருக்கிறது. இது பெருந் தவறு.

அவர்கள் கைது செய்யப்பட்ட நேரத்தில் போலீஸ் அதிகாரிகள் 'நீங்கள் சட்டசபைக் கூட்டத்திற்குச் செல்வதாக இருந்தால் ஜாமீனில் விடுகிறோம்' என்று சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் அதை விரும்பவில்லை. ஒரு உறுப்பினர் கைது செய்யப்படுகிறார் என்றால் அவர் என்ன கிரிமினல் குற்றமா செய்திருக்கிறார்? பொது மக்களுக்கு இருக்கின்ற குறைகளை, இந்த ஆட்சியின் மீது பொது மக்களுக்கு இருக்கின்ற அபிப்பிராயத்தை எடுத்துச் சொல்வதற்காகத்தான் எங்களைப் போன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அது எங்களுடைய கடமை. அந்தக் கடமையைச் செய்யவிடாமல் ஏன் தடை செய்கிறார்கள் என்பதை, எங்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. சட்டசபைக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் தடை விதிக்கப்படுவது எல்லோருக்கும் தெரிந்ததுதான். அது நீண்டகாலமாக இருக்கிறது. ஆனால் அமைதியான முறையில் சட்டசபை உறுப்பினர்கள் ஊர்வலம் வரலாம். அப்படி அமைதியாக வரும்போது திருமதி அனந்தநாயகி அவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அதனால் சட்டசபைக் கூட்டத்தில் கலந்து கொள்ள முடியாமல் அவர்கள் தடை செய்யப்பட்டிருக்கிறார்கள். அதனால் அவர்களுடைய உரிமை பறிக்கப்பட்டிருக்கிறது. எங்களைப் போன்ற இப்படிப்பட்ட உறுப்பினர்களைக் கைது செய்வது என்றால் அதனால் பல விளைவுகள் ஏற்படலாம். இந்தப் பிரச்சனையில் ஒரு உறுப்பினரின் உரிமை பறிக்கப்பட்டிருப்பதால், இந்தப் பிரச்சனையை உரிமைக் குழுவிற்கு அனுப்பி, பரிசீலனை செய்யவேண்டுமென்று வணக்கத்துடன் கேட்டுக்கொள்கிறேன்.

THIRU R. PONNAPPA NADAR: Sir, I would also like to offer a few remarks with regard to this matter which is the subject-matter of discussion now. So far as the question of privilege is concerned, it is an ancient and valuable right, the right of freedom to attend the Assembly. That is an ancient right which has been recognised in the Mother of Parliaments, i.e., in the House of Commons. I think the very same principles will have to be extended so far as this House is concerned. So far as the Member who

[Thiru R. Ponnappa Nadar] *[1973 நவம்பர் 20*

is said to have participated in the procession is concerned, the authorities who caused the arrest could have at least obtained a statement from her whether she was proceeding to the Assembly or whether she was going to attend the Assembly. All these matters will have to be elicited from her.

We see a statement from the Commissioner of Police to the effect that she is supposed to have said that she was not proceeding to the Assembly and so much so, the arrest has been made. My submission is that so far as this is concerned, it is a breach of privilege, because it is the duty of the Police Officer not to have intercepted the Member while proceeding to the House. No member could be obstructed either while proceeding to the House or while returning from the House. If a Member is so obstructed, then this privilege is affected. Privilege extends to that particular member. In this particular case, what is stated or what is known from the reports appearing in the press is that they were going in a procession and so much so, the processionists were arrested, including an M.P.

My point is that this particular Member of the Assembly should have been segregated and then her wishes ascertained whether she was proceeding to discharge the important function in the House. Such a thing has not been done and I think it is the fundamental duty of the arresting authority to have ascertained that aspect of the matter. So, there has been a contravention of the important freedom granted to members, namely, freedom from arrest and as such my point is that the officer has exceeded his power and it was not right and proper on the part of the Police Commissioner to have arrested the Member while she was proceeding to the House and so it is a matter which will have to be referred to the Committee of Privileges as there is a *prima facie* case of breach of privilege that has occured yesterday. This matter will have to be enquired into.

THIRU K. T. K. THANGAMANI : Mr. Speaker, Sir, with your permission, I would like to support the privilege motion which has been raised by the hon. Member, Thiru Marimuthu. Sir, so far as the privilege question is concerned, as the previous speaker said, it is a very ancient right and I find that there are several places where May has mentioned about this privilege. In Capt. Ramsay's case, it is mentioned that privileges are granted to every member to



*1973 நவம்பர் 20]* [Thiru K. T. K. Tangamani]

perform his duties in Parliament without let or hindrance. Where such a person has been prevented then it is obligatory on the party of the Speaker to see that the person responsible for it is punished. An act of omission or which obstructs or impedes either the House in the performance of its functions or which impedes any member from performing his functions, will invoke privilege.

*இந்த இரண்டு விஷயங்களையும் நான் சொல்வது ஏன் என்றால் சாதாரணமாக ஓர் உறுப்பினர் தாம் சட்டசபை உறுப்பினர் என்ற முறையில் அவை நடவடிக்கையில் பங்கெடுத்துக் கொள்ள எந்தவிதமான தடையிருந்தாலும் அது நீக்கப்படவேண்டும். அதுதான் இந்த ப்ரிவிலேஜ். ஒரு உறுப்பினர் இங்கே வருகிறார் என்றால், அவர் யாரிடத்திலும் தான் சட்டமன்றத்திற்கு எதற்காகப் போகிறேன் என்று சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. சட்ட மன்ற உறுப்பினர்கள் 50 பேர்கள் சேர்ந்து வருகிறார்கள். ஐம்பது பேர்களாகச் சேர்ந்து வருவதனால் உங்களை அனுமதிக்க முடியாது என்று சொன்னால் அது எவ்வளவு தவறாய் இருக்குமோ, அந்த முறையில்தான் ஓர் உறுப்பினர் வேறு சிலரோடு வருகிறபோது, மற்றவர்களைக் கைது செய்திருக்கலாம், அவசியம் இருந்தால். ஆனால் அவர்களோடு உறுப்பினரையும் சேர்த்துக் கைது செய்து, அவரைச் சட்டமன்ற நடவடிக்கையில் பங்கெடுத்துக்கொள்ள முடியாதபடி தடுத்திருப்பதன் காரணத்தினால்தான் இது ஒரு முக்கியமான விஷயமாக வந்திருக்கிறது. உறுப்பினரைத் தனியாகச் சட்டமன்றத்தில் பணியாற்ற அழைத்துச் சென்றிருக்காலமே தவிர, கூட்டத்தோடு சேர்ந்து வந்தார்கள் என்று கைது செய்து சட்டமன்ற நிகழ்ச்சியில் பங்கெடுத்துக்கொள்ள முடியாத படி தடை செய்வதானால் இனி ஒவ்வொருவரும் வாட்ச் அண்டு வார்டுகாரர்களிடம் கூட தான் எதற்காகப் போகிறோம் என்று சொல்லிக்கொள்ளவேண்டிய அவசியம் வந்துவிடும்.*

The presumption is whenever a member proceeds towards the House, it is for the performance of his duty as a Member, *என்பது ப்ரிசம்ஷன் தான். அதற்குப் பல சான்றுகள் இருக்கின்றன. எந்த இடத்தில் இந்தப் ப்ரிவிலேஜை இன்வோக் பண்ண முடியாது என்றும் சொல்லியிருக்கிறார்கள்.*

These privileges are founded upon the necessity of enabling the members to attend to their legitimate functions. This is in page 84.

(Thiru K. T. K. Tangamani) [1973 நவம்பர் 20

இங்கே ஜாமீனில் விடுகிறேன் என்று சொன்னதுபோல் அல்ல.

Again in page 78 there is a case. In Larke's case, the privilege was claimed except for treason, felony or breach of the peace; and in Thorpe's case, the judges made exceptions to such cases as be for treason or felony or surety of the peace.

There the person has been bound over for maintaining the peace; here, if he fails to give surety then alone it is a privilege. என்பதான முக்கியமான விஷயம் வந்தது.

In Vicount Enfield's case, the House of Lords held that he has function only as a Lord Justice and he can only go there as a Judge and he cannot be taken as a juror. The privileges of the members are treated sacrosanct.
ஆகவே, இந்த விஷயத்தைப் பொறுத்த வரையில் நான் உங்களுக்கு அதிகமாகச் சொல்ல வேண்டியதில்லை. As per the latest edition of May, what the Speaker is required to do is this. The right of making complain of breach of privilege is open to any member, any individual member. All that is required of the Speaker is to find out that this has happened recently.

இது நேற்றுதான் நடந்திருக்கிறது. இதனுடைய மெரிட்சுக்குள் போக வேண்டியதில்லை. ப்ரைமா பசி கேஸ் இருக்கிறது. ஆகவே நீங்கள் இரண்டுவிதமான முறையில் இதை 'டீல்' பண்ணலாம். ஹவுஸ் அபிப்பிராயத்தைக் கேட்டு ஹவுஸே கமிட்டிக்கு அனுப்பலாம்'என்று சொல்லலாம். அல்லது தாங்களே 192-வது ரூலின்படி நேரிடையாக இதை ப்ரிவிலேஜ் கமிட்டிக்கு அனுப்பலாம். எப்படியும் இது ப்ரிவிலேஜ் கமிட்டிக்கு அனுப்பக் கூடிய முக்கியமான விஷயம். ஏதாவது வாரண்டு இருந்து அதன் பேரில் எழுந்த பிரச்சினை அல்ல இது. சட்டசபைக்கு வருகின்ற போது—பொதுவாகச் சட்டசபை நடக்கிற காலங்களில் இந்த இடத்திற்குக் கூட்டமாக வரக்கூடாது என்பதற்காக பொதுவாகப் போடப்படுகிற தடையுத்தரவின் கீழ் மற்றவர்களோடு சேர்த்து உறுப்பினரையும் கைது செய்வது என்றால் உறுப்பினர்களுக்கே பாதுகாப்பு இல்லாமல் போய்விடும். ஆகையால்

A question of breach of privilege arises
என்று தான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(டாக்டர் ஹாண்டே எழுந்திருந்தார்.)



1973 நவம்பர் 20]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் ஹாண்டே அவர்கள் உட்கார வேண்டும். பேரவைத் தலைவர் உறுப்பினர்கள் கருத்தைக் கேட்கவேண்டும் என்பதே கூட இல்லை. என்றாலும், பேரவைத் தலைவர் தனது முடிவைத் தெரிவிக்கும் முன் கட்சித் தலைவர்களின் கருத்தைத் தெரிந்துகொள்வது ஒரு மரபு. அது உரிமை அல்ல.

திரு. முனு ஆதி: நேற்றேதான் எங்கள் கட்சிக்குத் தலைவரே இல்லை என்று சொல்லிவிட்டார்களே. தலைவர், துணைத் தலைவர் எல்லாம் தொண்டன்தான் எங்கள் கட்சிக்கு. எங்கள் கட்சி சார்பாக, எங்கள் கட்சி உறுப்பினரைப் பேச அனுமதித்தால் என்ன ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்தப் பேரவையின் மரபை நாம் காப்பாற்ற வேண்டும். கட்சித் தலைவர்களை விட்டுவிட்டு உறுப்பினர்களைப் பேச அழைக்கவேண்டும் என்பது சரியல்ல. ஆளுங்கட்சிப் பக்கத்தில் திரு. கந்தப்பன் கேட்டபோதுகூட நான் இதையேதான் சொன்னேன். இப்போது திரு. மணலி கந்தசாமி அவர்கள் பேசுவார்கள்.

திரு. முனு ஆதி: அந்தப் பக்கம் காட்டுகிற கருணையைக் கொஞ்சம் இந்தப் பக்கம் காட்டுங்களேன். எங்கள் கட்சித் தலைவர், துணைத் தலைவர் இல்லாதபோது எங்கள் கட்சியின் சார்பில் ஒருவர் பேசக்கூடாதா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள்.

### (3) நடைமுறைக் கேள்விகள்.

**ஒரு கட்சித் தலைவரோ, துணைத் தலைவரோ அவையில் இல்லாத போது, அக்கட்சி உறுப்பினருக்குப் பேச உரிமை கொடுப்பது குறித்து.**

DR. H. V. HANDE: I am rising on a point of order, Sir. I shall explain. In this House, there has been a practice for Members to explain also. Mr. Latheef has participated in many such discussions. (Interruption) I am just explaining why it is not in order not to allow me to speak now. That is a point of order and I shall explain how it is a point of order.

[டாக்டர் எச். வி. ஹாண்டே] [1973 நவம்பர் 20

The Hon. Speaker himself had given an opportunity to Thiru Latheef. There is nothing wrong in giving an opportunity to our Party. I shall explain the point of order.

(The Hon. Speaker sounded the gong)

The Hon. Speaker should know what the ADMK has to say in the matter. In the absence of the Leader or the Deputy Leader of a Party, so many times Thiru Latheef has been given an opportunity. If he hears the views of the ADMK, it would be useful for the Hon. Speaker in deciding the matter. Yesterday, I raised a point of order. In your absence, I have raised a point of order. We are not here to disturb the proceedings of the House. We would like to mention one or two points. I request the Hon. Speaker to be liberal and give us an opportunity to explain the views of the ADMK Party. As far as the Government is concerned . . . .

(Thiru Munu Adhi and Dr. H. V. Hande were standing in their seats.)

*மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை. நோ பாயின்ட் ஆப் ஆர்டர் ; திரு. மணலி கந்தசாமி பேசுவார்*

*திரு. முனு ஆதி : மற்ற கட்சித் தலைவர்களை விட்டிருக்கலாமே ? அவர்களுக்கு வாய்ப்பளித்திருக்கிறீர்களே. நியாயம் சொல்லுங்கள்.*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதிலே உரிமை கோர முடியாது.*

*திரு. முனு ஆதி : எங்களுடைய கருத்தை நாங்கள் சொல்ல வேண்டுமா, இல்லையா ?*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதிலே உரிமை இல்லை.*

*திரு. முனு ஆதி : நீங்கள் நல்ல தீர்ப்பு சொன்னாலொழிய நாங்கள் அமருவதாக இல்லை. இது என்ன ஆரம்பத்திலிருந்தே ஒருதலைப்பட்சமான தீர்ப்பாக இருக்கிறது. எவ்வளவு நேரம் ஆகப்போகிறது ?*



1973 நவம்பர் 20]

*மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பொழுது எவ்வளவு நேரம் ஆகிறது என்பதல்ல.*

*திரு. முனு ஆதி : இப்பொழுது அண்ணா தி.மு.க. சார்பிலே கருத்து சொல்ல வேண்டுமா, இல்லையா ?*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது உரிமை அல்ல.*

Dr. H. V. HANDE : The Hon. Speaker is becoming dictatorial. I must be given an opportunity to express the views of the ADMK.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் உட்காருங்கள். கொடுத்தாக வேண்டுமென்று அல்ல.*

Thiru K. M. SUBRAMANIAM : The ADMK should be given an opportunity to express its views. All the parties should be allowed. ADMK is in this House. Dr. Hande is speaking on behalf of the ADMK. I want to raise a point of order.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்ன பாயின்ட் ஆப் ஆர்டர், சொல்லுங்கள்.*

Thiru K. M. SUBRAMANIAM : The point of order is this. whenever a Privilege Motion is moved to refer a matter to the Privileges Committee, every party in the House should be given an opportunity to express its views.

*திரு. நா. வீராசாமி : சார், ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் . . .*

*திரு. முனு ஆதி : அவருக்கு மட்டும் மைக் சுவிச்சை ஆன் பண்ணுவதா ? நாங்கள் பேசும்போது ஆப் ஆகிவிடுகிறது. தொடர்ந்து பண்ணுகிறீர்கள் இது மாதிரி.*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது விதியிலே எங்கே இருக்கிறது ?*

Thiru K. M. SUBRAMANIAM : Rule may not be there. We have to follow the democratic practices. For everything, if you follow rules democracy can never work. We have seen that. There are precedents and practices. The precedents and practices should be followed. I am an elderly man,

You are also an experienced man and you know better than myself. To-day, Thiru Edmund has not come. So, one of the members of the ADMK got up and wanted to speak. What is wrong in allowing Dr. Hande to speak? If he is given an opportunity, it will assist the Hon. Speaker to come to a decision on the matter. It is left to the Hon. Speaker to decide.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* சரி, உங்கள் பாயின்ட் ஆப் ஆர்டருக்குத் தீர்ப்புச் சொல்கிறேன். இதிலே எந்தவிதமான பாயின்ட் ஆப் ஆர்டரும் இல்லை. (திரு. கே. எம். சுப்பிரமணியம் குறுக்கீடு) அதற்குள்ளே எழுந்து கொள்ளுகிறீர்கள். நீங்கள் இவ்வளவு நேரம் பேசினீர்கள். நான் கொஞ்சம் பேசவேண்டாமா? இதிலே எந்தவிதமான பாயின்ட் ஆப் ஆர்டரும் இல்லை. 'பிரிவிலேஜ் மேட்டர்' வருகிற சமயத்திலே அந்த பிரிவிலெஜ் மோஷனைக் கொண்டுவருகிற உறுப்பினர் கருத்து தெரிவிக்கிறார். அதில் பிரிவிலெஜ் உண்டா, இல்லையா என்று முடிவெடுப்பது பேரவைத் தலைவர்தான். அவருக்குத் துணையாக இருக்க பேரவைத் தலைவர் சில தலைவர்களுடைய கருத்தைக் கேட்கிறார். இதுகூட விதி முறைகளிலே இல்லை. சபையிலே கடைபிடித்துவருகிற மரபு, தலைவர்களைத்தான் கேட்பது என்று மரபு இருக்கிறது. அந்த மரபை ஒட்டித்தான் நாங்கள் தலைவர்களைக் கேட்கிறோம்.

*டாக்டர் எச். வி. ஹாண்டே:* அந்த மாதிரி மரபே கிடையாது. நீங்கள் பார்ட்டிசனாக நடந்துகொள்கிறீர்கள். அண்ணா தி.மு.க. சார்பாக எழுந்தால் உங்களுக்கு அலர்ஜியாக இருக்கிறது.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* நீங்கள் உட்காருங்கள், திரு. மணலி கந்தசாமி.

*திரு. முனு ஆதி:* எங்களுக்கு நேரம் ஒதுக்குகிறீர்களா, இல்லையா?

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* இல்லை.

*திரு. முனு ஆதி:* இதைக் கண்டித்து, அண்ணா தி.மு.க. தலைவர்களுக்கு, தொண்டர்களுக்குச் சந்தர்ப்பம் தருவதில்லை, கொடுப்பதில்லை என்று கூறி வெளியேறுகிறோம்.



Dr. H. V. HANDE: As a protest, we are walking out because our party has not been given an opportunity to speak on the matter. Our party members have been denied their right and they have not been given an opportunity to participate in the discussion.

(The Members of the A.D.M.K. then staged a walkout.)

*திரு. கே. டி. கே. தங்கமணி:* I want to make a submission. பொதுவாக, இன்றைக்கு நீங்கள் லிபரலாக இருந்தீர்கள். அவர்களுடைய பேச்சோடு நீங்கள் நிறுத்தியிருக்கலாம். மற்றவர்களையும் நீங்கள் அபிப்பிராயம் கேட்டீர்கள். எங்களைக் கேட்க வேண்டுமென்பதில்லை. என்னுடைய அபிப்பிராயம் என்னவென்றால், தாங்கள் இன்றைக்குக் குறிப்பிட்ட கட்சித் தலைவர்களைக் கேட்டீர்கள். அது நீங்கள் முடிவெடுக்க உதவியாக இருக்கவேண்டுமென்பதற்காக. அப்படி இருக்கும்போது இன்று எதிர்க் கட்சிகளிலே இரண்டாவது பெரிய கட்சியாக அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இருக்கிறது. அந்தக் கட்சியினுடைய கருத்தை அறிவதில் என்ன தவறு இருக்கிறது? இன்றையதினம் அதன் தலைவர் இல்லாமல் இருக்கலாம், உதவித் தலைவர் இல்லாமல் இருக்கலாம். அவர்கள் கருத்து சொல்ல விரும்புகிறார்களே. ஆகவே, தாங்கள் அனுமதித்திருக்கலாம் என்பதுதான் என்னுடைய எண்ணம்.

I am not making any reflection on the Chair. Certainly this concession could have been extended to any member of the ADMK, which is today the second main opposition in the House.

அதை நீங்கள் செய்திருக்கலாம் என்பதுதான் என்னுடைய கருத்து.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* மரபு என்றால்கூட, வரம்புக்குள்ளேதான் மரபு இருக்கவேண்டும். அந்த மரபை ஒட்டித்தான் சொல்கிறேன்.

*திருமதி த. ந. அனந்தநாயகி:* மரபு என்று சொல்கிறீர்கள். பிரைம ஃபாஸீ கேஸ் மேட் அவுட் ஆகிறதா இல்லையா என்பது பற்றி கூட பல அங்கத்தினர்கள் பேசி இருக்கிறார்கள். திரு. லத்தீப் அவர்கள் பேசி இருக்கிறார்கள். தலைவர்களே பேசுகிறார்கள், அங்கத்தினர்களுக்கு வாய்ப்பு கொடுப்பது இல்லை என்று

[திருமதி த. ந. அனந்தநாயகி] [1973 நவம்பர் 20

சொல்வதே, மரபுக்குப் புறம்பான மரபாக இருக்கிறது.. அதைப் பற்றி தயவுசெய்து ஸ்பீக்கர் அவர்கள் சொல்ல வேண்டும். அப்படிப்பட்ட ஒரு மரபு இருக்கும்போது, இப்பொழுது புதிய மரபு ஏற்படுத்துவதுதான் சரியானதா என்பதை இந்தச் சபைக்குத் தெரிவித்தால் அங்கத்தினர்களுக்கு உதவியாக இருக்கும்.

**திரு. எம். ஏ. லத்தீப் :** தலைவர் அவர்களே, தொடர்ந்து டாக்டர் ஹாண்டே அவர்களும், மதிப்பிற்குரிய உறுப்பினர் திருமதி அனந்தநாயகி அவர்களும் என்னுடைய பெயரைச் சொல்கிறார்கள். நான் சட்டமன்ற முஸ்லிம் லீக் கட்சியினுடைய செயலாளர் என்ற முறையிலே பேசினேனே அல்லாமல், தனிப்பட்ட அங்கத்தினர் என்ற முறையிலே அல்ல. நான் செயலாளர் என்ற முறையில்தான் பேசினேன். ஆகவே, இன்றையதினம் கூட நான் பேச அனுமதி கோருகிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** அதே மாதிரி அண்ணா தி.மு.க.வக்கும் வாய்ப்பு கொடுத்திருந்தால் நன்றாக இருந்திருக்கும்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** நான் அதைத்தான் நண்பர் முனு ஆதி அவர்களிடம் கேட்டேன். அவர் அதற்கு மறுத்துவிட்டார். செயலாளர் இருந்தும் கூட அவர் பேசச் சொல்லவில்லை.

**திருமதி ஜோதி வெங்கடாசலம் :** மதிப்பிற்குரிய முதலமைச்சர் கூறுவது சரி. நீங்கள் சந்தர்ப்பமே கொடுக்காத ஒரு நேரத்திலே செயலாளர் யார், பொருளாளர் யார் என்று தெரியாத நிலைமை ஏற்பட்டது. அவர்களுக்கு வாய்ப்பு கொடுப்பது மரபு இல்லை என்றாலும், மரபுகள் பல நம்முடைய சந்தர்ப்பத்திற்குத் தக்கவாறு நடக்கின்றன. அதையொட்டியாவது அவர்களுக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுத்திருக்கலாம் என்பது என்னுடைய அபிப்பிராயம்.

[10-30 முற்பகல்]

***மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** பேரவையினுடைய மரபுகளைப் பற்றி அமைச்சராக இருந்த அம்மையார் அவர்கள் நன்றாக உணர்வார்கள். தலைவர், பிறகு உறுப்பினர் அல்லது



1973 நவம்பர் 20] [டாக்டர் மு. கருணாநிதி]

செயலாளர் என்ற முறையிலே நாம் நடத்திக்கொண்டு வருகிறோம். திரு. மணலி அவர்கள் ஒரு கட்சியினுடைய தலைவர், அவர்களைப் பேரவைத் தலைவர் அவர்கள் பேச அழைத்துவிட்ட பிறகு, பேசுவதற்காக திரு. மணலி அவர்கள் எழுந்து நின்றுகொண்டிருக்கின்றபொழுது, நான்கு ஐந்து உறுப்பினர்கள் எழுந்து நின்றுகொண்டு எங்களைப் பேசச் சொல்லவில்லை என்று பேச அழைத்த உறுப்பினரைப் பேசவிடாமல் தடுப்பது எந்த மரபு என்று எனக்குத் தெரியவில்லை. பேரவைத் தலைவர், திரு. மணலி அவர்களைப் பேச அழைத்ததற்குப் பிறகு ஐந்தாறு உறுப்பினர்கள் எழுந்து நின்றுகொண்டு அவரைப் பேசவிடாமல் பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பிக்கொண்டிருப்பதும், அது மட்டுமல்ல, அவர்கள் பேரவைத் தலைவரை எதிர்நோக்கியே உரையாடல்கள் நடத்துவதும் நிச்சயமாக மரபுகளாக இருக்கமுடியாது. ஏற்கெனவே பல ஆண்டுகளாக இந்த அவையிலே அவையெல்லாம் மரபுகளாக இருந்ததில்லை. செயலாளர் இருக்கிறாரா என்று முனு ஆதியிடம் கேட்ட பொழுது யாருமே இல்லையென்று சொன்னார்கள்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** தலைவர், துணைத் தலைவர் என்றுதான் முறையிருக்கிறதே தவிர, செயலாளர் என்பது இல்லை, செயலாளர் என்று சொல்வது இப்பொழுது புதுமுறையாக இருக்கிறது. திரு. லத்தீப் அவர்கள் பேசினால் அவர்கள் ஒரு மெம்பர் என்ற முறையில்தான் பேசினார்களே தவிர, அவர்கள் கட்சியினுடைய செயலாளர் என்ற முறையிலே இங்கே பேசினார் என்று சொல்வது தவறான முறை. செயலாளர் என்ற முறையை இது வரையில் கடைப்பிடித்தது கிடையாது. இப்பொழுது அந்தப் புதிய முறையைக் கொண்டுவருவது என்றால் என்ன அர்த்தம்?

**திரு. எம். ஏ. லத்தீப் :** நான் எந்த அடிப்படையிலே பேச வேண்டும் என்று என்னுடைய கட்சி தீர்மானிக்கிறது. கட்சித் தலைவர் சொல்கிறபடி நான் எங்கள் கட்சியின் செயலாளர் என்ற முறையிலேதான் இங்கே பேசிவருகிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எம். சுரேந்திரன் :** தலைவர் அவர்களே, இங்கே ஒவ்வொரு உறுப்பினரும் சபையினுடைய உறுப்பினர் என்ற முறையிலேதான் பேசவேண்டும். அப்படியில்லாமல் கட்சித் தலைவர் சொல்லி,

கட்சியிலுள்ள பதவியின் சார்பாக இங்கே பேசுகிறார் என்பது சரியல்ல. இவ்வளவு நேரத்தை இந்த விஷயத்திற்காக செலவழிக்காமல் பேச அனுமதித்து இருக்கலாம்.

**திரு. மணலி சி. கந்தசாமி:** தலைவர் அவர்களே, நீங்கள் என்னைப் பேசுவதற்கு அழைத்ததற்குப் பிறகு என்னைப் பேச விடாமல் என்னுடைய உரிமையைத் தடுத்துவிட்டதாகத்தான் கருதுகிறேன். அ.தி.மு.க.வினரைப் பேசவிடுவதுபற்றி எனக்கு ஆட்சேபணை கிடையாது. என்னைத் தாங்கள் பேச அழைத்து விட்டதால், நான் பேசியதற்குப் பிறகு வேண்டுமானால் அவர்கள் அந்தப் பிரச்சினையை எழுப்பியிருந்தால் நியாயமாக இருக்கும். நான் பேசமுடியாதபடி ஒவ்வொரு தடவையும் பாயின்ட் ஆப் ஆர்டர் என்று சொல்லி குறுக்கே குறுக்கே விவகாரம் பண்ணிக் கொண்டிருந்தார்கள் . . .

**திருமதி த. ந. அனந்தநாயகி:** Any member has got the privilege to raise the point of order.

திரு. மணலி அவர்களைப் பேசவிடாமல்தடுக்க வேண்டுமென்று நாங்கள் பாயின்ட் ஆப் ஆர்டர் ரெய்ஸ் பண்ணவில்லை. ஏதோ அவர் பிரமாதமாகப் பேசுவதைத் தடுக்க வேண்டுமென்று நாங்கள் பாயின்ட் ஆப் ஆர்டர் ரெய்ஸ் பண்ணுகிறோம் என்று சொல்வது தவறு.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** ஒரு அவையின் நிகழ்ச்சிகளையொட்டித்தான் பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்ப வேண்டும். ஆனால் திரு. மணலி அவர்கள் பேச எழுந்து நிற்பதே ஒரு பாயின்ட் ஆப் ஆர்டரா என்பது எனக்குத் தெரியவில்லை.

(2) அவையுரிமைப் பிரச்சினை—தொடர்ச்சி.

**சட்டப் பேரவைக்கு வரும்போது உறுப்பினர் திருமதி த. ந. அனந்தநாயகி கைது செய்யப்பட்டது குறித்து—தொடர்ச்சி.**

**திரு. மணலி சி. கந்தசாமி:** நேற்றைய தினம் அவைக்கு வருவதற்கு இருந்த ஓர் உறுப்பினர் வரவிடாமல் தடுக்கப் பட்டிருக்கிறார். அவரை மாத்திரம் தனியாக விட்டிருந்தால் அவர் இங்கே வந்திருந்து தன்னுடைய வேலையைச் செய்துவிட்டுப்



போயிருக்கலாம். அப்படியில்லாமல் அவரைக் கைதுசெய்திருப்பது போலீசார் சரியாக நடந்து கொள்ளவில்லை என்பதைத் திட்டவட்டமாகக் காட்டுகிறது. இந்த விஷயத்தில் உரிமை மீறப் பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, இதை உரிமைக் கமிட்டிக்கு விடவேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

THIRU B. VENKATASWAMY: Sir, on behalf of the Swatantra Party I also feel that when the hon. Member, Thirumathi T. N. Anandanayaki was coming to the Assembly, she could have been allowed to come to the Assembly. She had been obstructed and taken to the police station. In some newspapers also it was published that she refused to come to the Assembly and that she wanted to raise some slogans. Now I had a talk with her and she told me that she was obstructed by the Police. So it is a breach of privilege of the House and I request the Hon. Speaker to refer the matter to the Committee of Privileges.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இந்த உரிமைப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் இதை உரிமைக் குழுவிற்கு விட வேண்டியதில்லை என்பது என்னுடைய கருத்தாகும். ஏனென்றால் இன்றைக்கு அவைக்கு வந்த சட்ட மன்ற உறுப்பினர் திருமதி அனந்தநாயகி அவர்கள் தடுக்கப்படவில்லை. அதைப்போல் நேற்றைய தினம் சட்டசபைக்கு வந்த எந்த எம்.எல்.ஏ.க்களும் தடுக்கப்படவில்லை. இந்த உண்மையை நாம் அடிப்படையாக வைத்துக்கொள்ளவேண்டும். நேற்றைய தினம் அவர்கள் சட்டசபைக்கு வருவதாக அறிவிக்கவில்லை. இரண்டு மூன்று நாட்களாக பத்திரிகைகளிலே செய்தி வந்துகொண்டிருக்கிறது, அவர்கள் சட்டசபைக்கு முன்னால் சென்று ஆர்ப்பாட்டம் நடத்தப்போகிறேன் என்று அறிவித்திருக்கிறார்கள். அவர்களுடைய கட்சியும் தீர்மானம் போட்டு திருமதி அனந்தநாயகி அவர்கள் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று அறிவித்திருக்கிறது. 41-வது செக்ஷன் கீழ் ஏற்கனவே தடையுத்தரவு போடப்பட்டிருந்தும், அதை மீறி யார் உள்ளே வந்தாலும் அவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்தாலும், சட்ட மன்ற உறுப்பினர்களாக இருந்தாலும் அதை மீறி நாங்கள் உள்ளே வருவோம் என்று சொன்னால் அவர்களைக் கைதுசெய்வது

முறையாக இருந்துவருகிறது. காவல் துறையினர் அந்தக் கடமையை நிறைவேற்றிவருகிறார்கள். திருமதி த. ந. அனந்த நாயகி அவர்கள் 41-வது செக்ஷனை மீறி ஆர்ப்பாட்டம் நடத்தப் போகிறோம் என்று அறிவித்துவிட்டு வந்திருக்கிறார்கள். அவர்களுடைய அந்தப் பேச்சு பத்திரிகையிலேகூட வந்திருக்கிறது. இத்தனையும் செய்துவிட்டு, நான் போராட்டம் நடத்த வரவில்லை, சட்டசபைக்குத்தான் வந்தேன் என்று அம்மையார் அவர்களே கூற மாட்டார்கள் என்று கருதுகிறேன். சுமார் 27 தொண்டர்களோடு அவர்களுக்கெல்லாம் தலைமை வகித்து வந்துவிட்டு, என்னைச் சட்டசபைக்கு அனுமதிக்கவில்லையென்று கூறுவது பொருந்தாத கூற்றாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அங்கே தடுக்கப்பட்டபிறகு காவல் துறையினர் அம்மையார் அவர்களிடம் நீங்கள் மாத்திரம் சட்டசபைக்குப் போகலாம் என்று சொல்லியும்கூட அம்மையார் அவர்கள் முடியாது என்று சொல்லி என்னையும் கைதுசெய்யுங்கள் என்று அவர்கள் கேட்டுப்பெற்ற கோரிக்கை. நேற்றோடு இந்த நிகழ்ச்சி முடிந்துவிட்டதற்குப் பிறகு அதற்குரிய விளம்பரத்தைப் பெறவேண்டுமென்ற முறையிலேதான் இதைக் கொண்டுவந்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நாளைக்குத் தீர்ப்பு அளிக்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** நான் சட்டசபைக்கும் வந்தேன், ஆர்ப்பாட்டத்திற்கும் வந்தேன். சட்ட சபைகு வருவதற்கும் எனக்கு உரிமை உண்டு, ஆர்ப்பாட்டம் செய்வதற்கும் எனக்கு உரிமை உண்டு. ஆர்ப்பாட்டம் செய்துவிட்டுச் சட்டசபைக்குப் போகலாம் என்று அறிவித்திருந்தேன் போலீசார் கேட்டார்கள், அவர்கள் போகவில்லை என்று முதலமைச்சர் சொல்வது முற்றிலும் தவறு, உண்மைக்குப் புறம்பானது.

Are vou willing to be released on bail to attend the Assembly? என்று கேட்டார்கள்.

நான் பெயிலில் ரிலீஸ் ஆகத் தயாராக இல்லையென்றுதான் சொன்னேனே தவிர வேறில்லை. நான் ஏதோ சட்டசபைக்கு மட்டும் போடுவதாக நினைத்துக்கொண்டு, போலீஸ்காரன்



வார்த்தையை நம்பி முதலமைச்சர் அவர்கள் நான் சொல்வதை எடுத்துக்கொள்ளாமல் இருப்பது வருந்தத்தக்கது. அவர்கள் என்னைக் கேட்டது இதுதான்.

"Are you willing to be released on bail to attend the Assembly?"

எதற்காக நான் பெயிலில் வெளியே வரவேண்டும் என்றுதான் நான் கேட்டேன்.

"I am not willing to be released on bail. You can release me if you want."
என்றுதான் சொன்னேன்.

**திரு. இராம. அரங்கண்ணல்:** தலைவர் அவர்களே, சபையில் யார் ஆக இருந்தாலும் நாம் அவர்களுக்குள்ள மரியாதையைக் கொடுக்க வேண்டுமென்பதுதான் மரபு. சாதாரண போலீஸ்காரன் என்று அம்மையார் அவர்கள் சொல்வது சரியான மரபா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

(திருமதி த. ந. அனந்தநாயகி எழுந்தார்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். இப்படி ஒவ்வொருவரும் எழுந்து மாறி, மாறி பேசிக்கொண்டிருந்தால் எப்படி? இதுகுறித்து என்னுடைய தீர்ப்பை நான் நாளைக்குத் தெரிவிக்கிறேன்.

## (4) ஒத்திவைப்புத் தீர்மானம்.

### சென்னை மாநகராட்சி மின் துறையில் ஏற்பட்டுள்ள ஊழல்களைக் கண்டறிய விசாரணைக் கமிஷன் நியமிக்க வேண்டுமென்பதைக் குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். பொன்னப்ப நாடார், திரு. எ. ஆர். மாரிமுத்து, திரு. பி. வெங்கடசாமி, திரு. கே. டி. கே. தங்கமணி, திரு. பணலி சி. கந்தசாமி, திரு. எம். சுரேந்திரன், டாக்டர் எச். வி. ஹாண்டே, திரு. சோ. அழகர்சாமி, திரு. அ. கு. சுப்பையா, திரு. என். மருதாசலம் ஆகியோர் சென்னை

மாநகராட்சியின் மின்துறை அலுவலர்களால் செய்யப்பட்ட தவறுகளைப்பற்றி விவாதிக்க வேண்டுமென்று ஒத்திவைப்புத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறார்கள். அது எப்படி இந்த அவையை ஒத்திவைத்து விவாதிக்கத் தக்கது என்பதை அவர்கள் சுருக்கமாகக் கூறவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரையில் சில திடுக்கிடும் சம்பவங்கள் நிகழ்ந்ததாக நாம் எல்லோரும் அறிந்திருக்கிறோம். அண்மையிலே நடந்த நிகழ்ச்சி, குறிப்பாக, 'மஸ்டர் ரோல்' சம்பந்தமாக தாராளமாகப் பணம் கையாடல் செய்யப்பட்டு, பிரைமா ஃபேசி கேஸ் இருப்பதாக ருசுவாகி, பலரும் இதிலே உட்பட்டிருக்கிறார்கள் என்பதைப் பத்திரிகை வாயிலாக அறிந்திருக்கிறோம். அதுமட்டுமல்லாமல், பல அதிகாரிகளையும் கைது செய்திருக்கிறார்கள். இதன் முழு விவரங்களை, ஒருவேளை இப்பொழுது வழக்கு தொடரப்பட்டிருப்பதால் நான் எடுத்துக் கூறுவதற்கு முற்படவில்லை. ஆனால், இது சம்பந்தமாக, இது ஒரு முக்கியமான பிரச்சினையாக இருப்பதால் இந்த முழு விவரங்களையும், இந்தச் சபையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து விவாதிப்பது சாலச் சிறந்ததாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ள முற்படுகிறேன்.

சில பத்திரிகைகளில் இதில் கோடிக்கணக்கான ரூபாய் சம்பந்தப்பட்டிருக்கிறது என்ற தகவல்கள் வந்திருக்கின்றன. அது மட்டுமல்லாமல், அதிகாரிகளும், அதிகாரப்பற்றற்றவர்களும் இதிலே சம்பந்தப்பட்டிருப்பதாகக் குற்றச்சாட்டுகளைக் கூறிக்கொண்டு இருக்கிறார்கள். இப்படி மாறிமாறி குற்றச்சாட்டுகள் வரும் நேரத்தில், இந்தச் சபையிலே எல்லாத் தகவல்களையும் நாம் தெரிந்திருப்பது பொருத்தமாக இருக்கும் என்றே கருதுகிறேன். இது பல்லாண்டுகளாக நடந்ததாகக் கூறப்படுகிறது. இது சம்பந்தமாக, ஆய்வு அதிகாரிகள் அதற்கு வேண்டிய ரிப்போர்ட்டுகளைக் கொடுத்ததாகவும், அதன்பேரில் நடவடிக்கை மேற்கொண்டதாகவும், கார்ப்பரேஷனிலே இருக்கும் கமிஷனர் அறிக்கை விட்டிருக்கிறார். என்னுடைய கட்சியைப் பொறுத்தவரை இது சம்பந்தமாக என்ன செய்ய வேண்டுமென்பதைப்பற்றி நாங்கள் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம். இதில் சரியான முறையிலே விசாரணை நடக்க வேண்டுமென்றால் இன்றைக்கிருக்கும் கார்ப்பரேஷனை



கலைத்துவிட்டு, பாரபட்சமற்ற விசாரணை நடந்தால்தான் ஒழுங்காக நடக்கும் என்ற கருத்தை நாங்கள் அழுத்தந்திருத்தமாகக் கொண்டிருக்கிறோம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இம்மாதிரி சம்பவங்கள் ஏற்பட்டால், அதிலும் குறிப்பாக நமது தலைநகரத்திலே இருக்கும் இந்த மாநகராட்சியில், இம்மாதிரி ஆளுங்கட்சியும், அரசாங்கக் கட்சியும் ஒன்றாக இருப்பதால் அவர்கள் அதிகாரத்திலே இருப்பார்களேயானால் நிச்சயமாக நியாயம் வராது என்பது என்னுடைய கருத்து. ஆதலால் இந்தக் கார்ப்பரேஷனை 'சூப்பர்சீட்' செய்ய வேண்டுமென்ற கருத்தை வலியுறுத்தி கூறிக்கொள்ள விரும்புகிறேன். இதிலே சம்பந்தப்பட்ட இலாக்காவிலே இருக்கும் பலரும் இருக்கிறார்கள். மின்சார இலாக்காவிலேயும் இருப்பவர்கள் இருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், இந்த விசாரணையை நமது விஜிலன்ஸ் நடத்திக் கொண்டிருப்பதாகக் கேள்விப்படுகிறேன். இதை மத்திய புலனாய்வுத் துறை விசாரணை நடத்தினால் ஒழுங்காக நடக்கும் என்ற கருத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். இது பாரபட்சமற்றதாக இருக்க வேண்டும். ஆதலால் அதற்கு வேண்டிய விவாதம் இந்த மன்றத்திலே நடக்க வேண்டும். ஆனால், தனிப்பட்ட முறையிலே யாரையும்பற்றி இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்வது பொருத்தமாக இருக்காது. ஆனால், இது மிகவும் வேதனைக்குரிய விஷயமாக இருக்கிறது. கோடிக்கணக்கான ரூபாய் இதில் கையாடல் செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. எனவே, இதைப்பற்றி விசாரணை செய்ய வேண்டுமென்றால் நிச்சயமாக இந்தக் கார்ப்பரேஷனை 'சூப்பர்சீட்' செய்ய வேண்டுமென்ற கருத்தை வலியுறுத்தி அமர்கிறேன்.

DR. H. V. HANDE: Hon. Mr. Speaker, Sir, I rise in support of this adjournment motion given on behalf of our party viz., to discuss a very serious matter that has arisen out of the large amount of defalcation in the Corporation of Madras. My submission is that this has to be completely discussed in this House; at least one full day must be allotted because this is only one facet, one aspect of the large-scale artrocities, monetary and administrative, that is going on in the Corporation of Madras, for quite some time. Right from 1969 this is going on, I mean this kind of defalcation. It has assumed huge proportions. We are told that Rs. 8 crores or more is the quantum of the amount that has been defalcated.

[Dr. H. V. Hande] [1973 நவம்பர் 20

I would like to ask what was the Hon. Chief Minister doing all these days ? What was the ex-Hon. Minister for Local Administration doing all these days ?What is the present Hon. Minister for Local Administration doing ? Was not this brought to the attention of the concerned Minister earlier? Was it not a fact that several vouchers were found missing. Normally, Local Fund Audit is supposed to examine these vouchers, whether the vouchers are there or not. Has that been done? Have not the defects been brought to the notice of the Hon. Minister concerned or not ? What was the Government doing in this respect ? My submission is this. This is something like an iceberg; we have seen only one portion floating outside. A huge portion is submerged under water. You will find that people with high political connections are involved in this particular thing. It is like a portion of iceberg under water, not known to public. That is why we say that this House should be adjourned. If it is a small matter concerning some few officials, we would not mind. We would not ask for adjournment of the House. I know that persons who are politically highly connected are involved in this. I have got all details. Some persons who are working in the Corporation have built huge houses and one person has gone outside India with some other political figure. All these things have come in the papers. It is the business of the Government to refute it, if it is wrong, as false. They have not done so. If it is wrong, they should have taken action against the paper which published the thing. That has not been done.

Some persons art partners of Vigneswara Theatre : I think it is there in Poonamallee or so. Who are these persons who are partners? A few officials of the Central Accounts Department are also involved. My submission is this. What is the attitude of the public ? Normally, an adjournment motion should be allowed if it is concerning a matter of urgent public importance. Here the whole public is exercised over the happenings in the Corporation and so it is a matter of public importance. The public is seized of the matter and the officials are also seized of the matter. I have got a list of persons whose pension has not been disbursed from 1963 onwards. There is the case of Thiru Sampath who retired in 1964 and that of Thiru Krishnappa Naidu who retired in 1964. Why is the pension delayed ? It is all because there is no money in the



1973 நவம்பர் 20] [Dr. H. V. Hande]

Corporation. They have been borrowing from Government and from all places, banks, etc. But all the money has been going down the drain. What is the Government saying? The Hon. Chief Minister has given a statement.

அதிகாரிகளை சஸ்பென்ட் செய்திருக்கிறோம், தக்க நடவடிக்கை எடுத்திருக்கிறோம் என்று சொல்கிறார்கள். எப்பொழுது நடவடிக்கை எடுக்கிறீர்கள் ? இந்தக் குற்றச்சாட்டுகள் பொதுமக்களுக்குத் தெரிந்தபிறகு நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். இத்தனை நாள் என்ன செய்தீர்கள் ? ஏன் முதலமைச்சர் இதுவரையில் நடவடிக்கை எடுக்கவில்லை ? இதற்கு முதலமைச்சர்தான் பொறுப்பேற்க வேண்டும். எங்கோ ஊழல் நடந்தால் முதலமைச்சரா பொறுப்பு என்று கேட்கலாம். நான் கேட்கிறேன், அரியலூரில் விபத்து நடந்தபொழுது முன்னாள் பிரதம மந்திரி திரு. லால் பகதூர் சாஸ்திரி இராஜினாமா செய்யவில்லையா ? ஹைதராபாத்திலே விமான விபத்து நடந்தபொழுது காண்சிங் இராஜினாமா செய்ய முன்வரவில்லையா ? இதுமாதிரி இந்தச் சம்பவத்திற்கு முழுப்பொறுப்பு யாருடையது ? முதலமைச்சர்தான் பொறுப்பு. எட்டு கோடி ரூபாய் அளவில் பறிமுதலாகியிருக்கிறது.

I charge the Hon. Chief Minister as being responsible for this. I charge the Hon. Dr. V. R. Nedunchezhian, the ex-Minister for Local Administration as responsible. I also charge the present Hon. Minister for Local Administration, Thiru Anbil Dharmalingam as responsible for this. They must immediately resign taking responsibility as Lal Bahadur Sastri has done previously in another case.

எனவே, இதிலே எங்கேயோ தவறு நடந்தால் நான் இராஜினாமா செய்ய வேண்டுமா என்று கேட்பது சரியாக இருக்காது. சும்மா நான்கு பேரைக் கைது செய்தால் மட்டும் போதாது. இந்த அரசாங்கமே அதற்குப் பொறுப்பேற்க வேண்டும். இதில் அர்ஜென்சி இருக்கிறது. இதற்கு ஒரு அமைச்சர் பொறுப்பேற்க வேண்டும். இந்த 8 கோடி ரூபாய் ஊழலுக்கு முதலமைச்சர் டாக்டர் மு. கருணாநிதிதான் காரணம். இரண்டாவது, மதிப்பிற்குரிய அமைச்சர் திரு. நெடுஞ்செழியன்தான் காரணம். மூன்றாவதாக மதிப்பிற்குரிய அமைச்சர் திரு. அன்பில் தர்மலிங்கம்தான் காரணம் என்று இந்த

மாமன்றத்திலே குற்றம் சுமத்துகிறேன். எனவே, இதில் பொறுப்பை ஏற்றுக்கொண்டு நாங்கள்தான் பொறுப்பாளி என்று ஒத்துக்கொண்டு தக்க பரிகாரத்தைக் காண வேண்டுமென்று சொல்லி இதைப்பற்றி விளக்கமாக விவாதிக்க இந்தச் சபையை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

* திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவரவர்களே, சென்னை மாநகராட்சியிலே ஏற்பட்டிருக்கின்ற இந்த ஊழல் சம்பவம் மிகவும் வருந்தத்தக்க ஒன்று. தமிழகத்தின் தலைநகரத்திலே, எல்லா அரசியல் தலைவர்களும் இருக்கின்ற இடத்திலே, எல்லா அரசியல் நடவடிக்கைகளுக்கும் கேந்திரமாக உள்ள இடத்திலே, பல ஆண்டுகளாக இந்த ஊழல் நடைபெற்று வந்திருக்கிறது என்பதைப் பார்க்கும்பொழுது ஒரு பெரும் அதிர்ச்சியும், சங்கடமும் தான் மக்களுக்கு ஏற்படும் என்பதிலே சந்தேகமில்லை. இதிலே, ஏற்பட்டிருக்கும் நஷ்டம், கையாடல் கோடிக்கணக்கான ரூபாய் இருக்கும் என்று கூறப்படுகிறது. இந்த ஊழல் சம்பந்தமாக லேசான முறையிலே இதைப் பரிசீலனை செய்து நடவடிக்கை எடுத்துவிட முடியும் என்று அரசாங்கம் கருதினால் அது தவறு என்று நான் கருதுகிறேன். ஏனென்றால், அதிகாரிகள் மட்டும் சேர்ந்து இதைச் செய்ததாக நான் கருதவில்லை. அதிகாரப்பற்றற்றவர்களும் இதில் கலந்திருக்கிறார்கள் என்று பொதுவாகப் பேசப்படுவதால் இந்த மாநகராட்சியைக் கலைத்து, இதற்கு ஸ்பெஷல் என்கொயரி போட்டு முழுவதையும் பரிசீலனை செய்து எந்த அளவிற்கு மோசடி நடந்திருக்கிறது என்பதைக் கண்டுபிடித்தாக வேண்டும்.

அதிகாரிகளாக இருந்தாலும் சரி, அதிகாரிகள் அல்லாதவர்களாக இருந்தாலும் சரி; யாராக இருந்தாலும் இதிலிருந்து தப்பிக்கக் கூடாது என்ற நிலைமையை நாம் உருவாக்கினால்தான் பிற்காலத்திலே பொதுவாழ்க்கை சரியானதாக இருக்கும். இது மிகவும் முக்கியமானது, எல்லோரும் கவனம் செலுத்தக்கூடிய ஒன்று என்ற காரணத்தால், இந்தச் சபையை ஒத்திவைத்து நாம் இதைப்பற்றி விவாதிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். இதைவிட முக்கியமான வேறு ஒன்றும் இருக்க முடியாது. இதைப்பற்றி விவரமாக எவ்வளவோ சொல்லலாம். ஒரு கிளார்க்கின் வாழ்க்கை நிலை எந்த





அளவுக்கு உயர்ந்து இருக்கிறது, அசிஸ்டன்ட் எஞ்சினியர் எப்படி வாழ்க்கை நடத்துகிறார் என்பதை எல்லாம் பார்க்கிறபோது எவ்வளவு பெரிய மோசடி நடந்திருக்கிறது என்பது புரிகிறது. இந்த அதிகாரிகளை மட்டும் அரெஸ்ட் செய்து வைத்திருப்பதில் பயன் இல்லை. இவர்களுக்குப் பின்னால் பலர் இருப்பார்கள். அவர்களை இதிலிருந்து விடுவிக்க பலர் முயற்சி செய்யலாம். நடவடிக்கை அரசியல் செல்வாக்குக்கு உட்படாத முறையில் இருக்க வேண்டுமே தவிர வேறு முறையில் இருக்கக்கூடாது. அரசாங்கத்திற்குத் தெரியாமலேயே பல ஊழல்கள் நடைபெற்றிருக்கலாம். ஆகவே, மாநகராட்சியை முதலில் கலைத்து ஹைகோர்ட் நீதிபதியைக் கொண்டு விசாரணை நடத்தவேண்டும். இதுபற்றி அரசாங்கத்திற்குப் பல கருத்துக்களை எடுத்துச் சொல்லி அரசு மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுத்துக் கொள்வதற்கு வசதியாக இந்தச் சபையின் இதர நடவடிக்கைகளை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

THIRU B. VENKATASWAMY : Sir, on behalf of the Swatantra Party, I rise to place some of the points regarding the scandal of the Madras Corporation. In the month of September a Resolution was passed by the Corporation about the scandal. So far no action has been taken. Now only I understand that some officials have been arrested. A large sum of public money had been misappropriated. In Tamil Nadu, Madras Corporation is the biggest and the oldest and Madras is the capital of the State. If even in such a place such large sums are misappropriated, we cannot think of what would happen in other places. This should be properly looked into and the people who are guilty should be punished. I want to stress one point. All this has happened because of the leniency of the Government and political interference. The Government should seriously think about it and take steps to put an end to such things.

I understand that tenders have been accepted in an irregular manner. They have been accepted 40 or 50 per cent less. This is very improper. In the 8th circle, supply of sand has been accepted at Rs. 4.50. How can this be ? This is childish. All this should be checked and properly looked into. I request the Hon. Minister to institute an enquiry. There are other instances also.

[Thiru B. Venkataswamy] *[1973 நவம்பர் 20*

If Government gives a categorical assurance about instituting an enquiry, more culprits could be brought to light and more information could be given. Unless firm action is taken now in this matter, we cannot check such malpractices in other places.

Thank you, Sir.

***திரு. கே. டி. கே. தங்கமணி:*** *சபாநாயகர் அவர்களே, நான் கொடுத்திருக்கக்கூடிய ஒத்திவைப்புத் தீர்மானம்—*

'Madras Corporation's acts of omissions and commissions of grave nature and the need to set up a Commission of Enquiry under the Commission of Enquiry Act'.

*இந்த சென்னை கார்ப்பரேஷன் சம்பந்தமாக இவ்வாறு பத்திரிகைகளில் செய்தி வருவது மாத்திரமல்ல, இங்கும் எழுப்பப்பட்டிருக்கின்றன. இந்த ஒத்திவைப்புப் பிரேரணை மிகப் பிரதான விஷயமாகும். எத்தனை ஆண்டுகளாக இம்மாதிரி நடக்கின்றனவோ தெரியாது. சமீபத்தில் சர்க்காருடைய முயற்சியாலேயே இந்தத் தவறுகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கலாம் என்ற அளவுக்கு வரவேற்கக்கூடியதுதான்.*

*பதினைந்து கோடி ரூபாய் ஆண்டு வருவாய் உள்ள கார்ப்பரேஷனில் ஒரு மாதத்தில் நாலைந்து லட்சம் ரூபாய் மட்டுந்தான் ஏமாற்றப்பட்டதாகப் பத்திரிகைகளில் செய்தி வருகிறது. எத்தனை கோடி ரூபாய் என்பது பரிபூரணமாக விசாரித்தால்தான் தெரியும். நமக்கு இரண்டு அனுபவம் இருக்கிறது. பாளையங்கோட்டை சம்பவம், கிளைவ் ஹாஸ்டல் சம்பவம் ஆகிய இரண்டிலும் ஜில்லா நீதிபதிகளை கமிஷன் ஆப் என்குயரியாகப் போட்டு அவர்களுடைய தீர்ப்பின் முடிவு நேற்று இந்தச் சபையில் சமர்ப்பிக்கப்பட்டு இன்று பத்திரிகைகளிலும் வந்திருக்கிறது. என்னதான் இருந்தாலும் இன்னும் சில ஜில்லா நீதிபதிகளும், அல்லது ஹைகோர்ட் நீதிபதிகளும் அல்லது சுப்ரீம் கோர்ட் நீதிபதிகளும் இன்றைக்கும் ஓரளவுக்காவது நடுமாற்றம் இல்லாது முடிவு செய்கிறார்கள் என்பது தெரிகிறது. அந்தமாதிரியான ஒரு கமிஷன் ஆப் என்குயரி உடனடியாகப் போடப்பட வேண்டும்.*

*அதே நேரத்தில் சில மரபுகள் இருக்கின்றன. நாடாளுமன்றத்தில் முந்திரா ஊழல் சம்பந்தமாக ஃபெரோஸ் காந்தி எழுப்பி விவாதம் நடந்தது. அதைப்பற்றி விவியன் போஸ் கமிஷன்*



*1973 நவம்பர் 20]* *[திரு. கே. டி. கே. தங்கமணி]*

*போடுகிறபோதே, கமிஷன் அமைக்கிறபோதே சம்பந்தப்பட்ட மிக முக்கியமான அமைச்சர் திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரி—அவருக்கு நேரடியாகப் பங்கு இல்லை என்று சொன்னாலும்—ராஜினாமா செய்தார். இம்மாதிரியான கடுமையான ஊழல்கள் நிறைந்திருக்கும்போது அது வெளிப்படுகிறபோது அந்தப் பொறுப்பை வைத்திருக்கக்கூடிய அமைச்சர்கள் ராஜினாமா செய்வது மரபாக இருக்கிறது. இங்கு நான் சொல்லி ராஜினாமா செய்வார்கள் என்று எனக்கு நம்பிக்கை கிடையாது. அது ஒரு நல்ல முறையாக இருக்கும். குறிப்பிட்ட விஷயம் வந்தாகிவிட்டது. தனிப்பட்ட யார் மேலும் குறை சொல்லவேண்டுமென்று சொல்லவில்லை. அந்தக் காலகட்டத்தில் இந்த இலாகாவுக்குப் பொறுப்பாக இருந்த அமைச்சர் யாரோ அந்த அமைச்சரோ, அல்லது அமைச்சர்களோ ராஜினாமா செய்தால் அது ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக இருக்கும்.*

*ஊழல் என்று அரசே கண்டுபிடித்து சிலபேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அரசுக்குள்ள அதிகாரத்தை வைத்துக் கொண்டு* Let them appoint a Commission of Enquiry, under section 3 *முதலில் அதைச் செய்யட்டும். சம்பந்தப்பட்டவர்கள், அரசியல் தலைவர்கள் அல்லது ஆட்சியில் இருப்பவர்கள் நடவடிக்கை எடுக்கட்டும். நல்ல முறையில் அது அமையும்.*

*நான் விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். இந்தச் சட்ட மன்றத்தில் சட்ட விதிகளுக்கு உட்பட்டு இந்த அரசு செய்த தவறுகளைப் பற்றி இங்கே எழுப்புகிறோம். பிரதானமாக 42-வது விதியின்கீழ் அட்ஜர்ன்மென்ட் மோஷன் கொண்டு வருகிறோம். அதை அனுமதித்தால் சாதாரணமாக 2 மணி நேரம் விவாதிக்கலாம். ஆனால் சமீபத்தில் லோக்சபாவில் 12-ம் தேதி விலைவாசி உயர்வைப்பற்றி விவாதிப்பதற்காக அட்ஜர்ன்மென்ட் மோஷன் கொண்டு வரப்பட்டு அதை அனுமதிக்க வேண்டுமென்று 50 பேர் ஆதரவாக நின்றார்கள். அது அனுமதிக்கப்பட்டு ஐந்து மணி நேரம் விவாதம் நடைபெற்றிருக்கிறது. அதேபோன்று இந்த அட்ஜர்ன்மென்ட் மோஷனுக்கு ஆதரவாக நிச்சயமாக 25 பேர் எழுந்து நிற்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆளும் கட்சியில் இருப்பவர்கள் கட்சிக் கட்டுப்பாட்டின் காரணமாக எழுந்து நிற்காவிட்டாலும் இப்பேர்ப்பட்ட விவாதத்தை கண்டிப்பாக விரும்பு*

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1973 நவம்பர் 20

வார்கள். ஆகவே, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை அனுமதிக்க வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். அதை விவாதிப்பதற்கு எடுத்துக் கொள்வதாக இருந்தால் 1 மணியிலிருந்து 3 மணி வரையிலோ அல்லது மாலையில் 5 மணியிலிருந்து 7 மணி வரையிலோ எடுத்து விவாதிக்கலாம். இன்றைக்கு எந்த நேரம் சௌகரியமாக இருக்குமோ அந்த நேரத்தில் வைத்துக் கொள்ளலாம். இந்த முக்கியமான விவகாரத்தைப் பற்றி விவாதிக்க ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி அளிக்க வேண்டுமென்று மீண்டும் ஒருமுறை வற்புறுத்திக்கூறி இதைக் கண்டிப்பாக விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[11-00 முற்பகல்]

* **திரு. ஆ. கு. சுப்பையா:** பேரவைத் தலைவர் அவர்களே, கார்ப்பரேஷனுடைய பல கோடி ரூபாய் கையாடப்பட்டு அது சம்பந்தமாக பத்திரிகைகள் எல்லாம் விளம்பரப்படுத்தி தமிழ் நாட்டில் இருக்கிற மக்களுக்கு ஒரு பெரிய அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது. அதன் தொடர்பாக பல பேர்கள் கைது செய்யப்பட்டுமிருக்கிறார்கள். சாதாரண க்ளார்க் போன்ற ஒரு நபர் கூட சினிமாப் படம் எடுக்கும் அளவிற்கு கையாடல் நடந்திருக்கிறது என்று சொல்லும்போது—மற்றொரு நபர் வீட்டில் சோதனை செய்த போது 30,000-க்கு மேற்பட்ட ரூபாய் இருந்ததாகச் சொல்லப்படுகிறது. 47 பேர்கள் இதில் ஈடுபட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். இன்னும் எத்தனை பேர்கள் இதில் ஈடுபட்டு எந்த அளவிற்கு பொது மக்களுடைய பணத்தைச் சூறையாடுகிற ஒரு தவறான வழியில் நடந்து கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பார்க்கும்போது நமது நிர்வாகத் துறை மிக மோசமாக நடந்து கொண்டிருக்கிறது என்பதை கார்ப்பரேஷன் எடுத்துக் காட்டுகிறது. அரசாங்கம் இதிலே கவனக்குறைவாக இருக்கக் கூடாது என்பது என்னுடைய விருப்பமாகும். இதில் தீவிரமாக இருந்து சம்பந்தப்பட்ட நபர்களுடைய சொத்துக்களைப் பறிமுதல் செய்தால்தான் ஒரு எடுத்துக்காட்டாக இருக்கமுடியும். அதன் பிறகு விசாரணை செய்து அந்த விசாரணையில் எந்த அளவிற்கு அவர்களுக்கு ஈடுபாடு உண்டு, இல்லை என்பதைப்பற்றி ஒரு முடிவுக்குக் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்துக்கொள்ள வேண்டும். இதைப்பற்றி



1973 நவம்பர் 20] [திரு. ஆ. கு. சுப்பையா]

விவாதமாக விவாதிப்பதற்கு சபையை ஒத்திவைத்து விவாதிப்பதனால் பல்வேறு கருத்துக்களை அரசுக்கு உதவியாக வழங்குவதற்கு உதவியாக இருக்கமுடியும். ஆகவே அந்த முறையில் இது மிக முக்கியமான விஷயமாக இருப்பதால், கையாடல் விஷயமாக இருப்பதால் இந்த விஷயம் குறித்து விவாதித்து நிர்வாகத் துறையைச் செம்மைப்படுத்துவதற்காக நாம் சில மணி நேரம் இதுகுறித்துப் பொதுவிவாதம் நடத்துவதுதான் உசிதமாக இருக்கும் என்று கூறி சபை நடவடிக்கைகளை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

(திரு. எம். சுரேந்திரன் எழுந்தார்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் தலைவர் பேசிவிட்டார். அதற்குப் பிற்பாடு அந்தக் கட்சியிலிருந்து இன்னொருவர் பேச முடியாது.

THE HON. THIRU A. P. DHARMALINGAM: Mr. Speaker, Sir, in the first week of September 1973, the Commissioner, Corporation of Madras received certain complaints alleging preparation of false muster rolls in the Electrical Department which were passed for payment without proper scrutiny and check. He immediately placed Thiru M. Kannappan, Typist, Electrical Department under suspension on 11th September 1973 who was found personally responsible for certain serious charges connected with the preparation and passing of muster rolls. On 15th October 1973, he instructed Thiru A. Balasubramanian, Assistant Accounts Officer for internal audit, Revenue Department to make a thorough examination of all the muster rolls of Electrical Department passed for payment from April to September 1973 and submit his report urgently. The Assistant Accounts Officer brought to the notice of the Commissioner, Corporation of Madras several irregularities and malpractices on the payment for labour in the Electrical Department on the basis of false muster rolls committed by the Officers of the Electrical Department to embezzle the Corporation funds. On 16th October 1973, the Commissioner framed charges against Thiru R. Vasudevan, Electrical Engineer, five Assistant Electrical Engineers and twenty-four subordinate staff of the Electrical Department pending detailed enquiry against them.

Thiru S. M. Krishnan, Chairman, Taxation and Finance Committee, Corporation of Madras brought to the notice of the Government in his letter, dated the 3rd November 1973 this case of misappropriation. Thiru V. Karuppan, who assumed charge on 18th October 1973 as Commissioner delegate when the regular Commissioner went abroad on study tour, found out on further investigation several irregularities and malpractices relating to muster rolls by preparing false vouchers, fabricating muster rolls, showing payment to the fictitious persons alleged to be in the muster rolls, misappropriation of funds, etc. The Commissioner delegate has taken prompt action in suspending the following persons to facilitate further investigation :—

ELECTRICITY DEPARTMENT.

1. Thiru Gregory S. Joseph, Assistant Engineer.
2. Thiru K. Narayanan, Assistant Engineer.
3. Thiru S. Ramadoss, Electrical Supervisor.
4. Thiru K. N. Rajappa Nair, Electrical Supervisor.
5. Thiru M. Kannappan, Typist.

CENTRAL ACCOUNTS DEPARTMENT.

6. Thiru S. Rajan, Assistant Accounts Officer.
7. Thiru P. M. Krishnan, Manager.
8. Thiru C. Ramamoorthy, Manager.
9. Thiru S. F. Sundaram, Accountant.
10. Thiru K. Ganesan, Accountant.

REVENUE DEPARTMENT.

11. Thiru P. Muthusamy, Head Cashier.
12. Thiru N. Doraivelu, Assistant Cashier.
13. Thiru K. Ramachandran, Gollah.

The Commissioner requested that the Government may cause a through investigation of these irregularities and malpractices and take action against the Electrical Engineer, who is a Class-I-A



Officer and is the head of the Electricity Department, for this serious case of misappropriation and embezzlement of Corporation funds. The Secretary, Rural Development and Local Administration Department discussed the whole question in all details with the Commissioner, Corporation of Madras, the Revenue Officer, the Chief Accounts Officer and the Examiner of Local Fund Accounts. The measures to be taken to tighten up the present system for the payment of labour on the basis of muster rolls, the procedural changes which are necessary to prevent the repetition of fraudulent practices adopted in the payment of labour in this case were all gone into.

As it was considered that Thiru R. Vasudevan who is the head of the Electrical Department could not be absolved of the responsibilities for the irregularities and malpractices and his connivance in this case of misappropriation and embezzlement could not be disputed, the Government issued orders in G.O. Ms. No. 2443, Rural Development and Local Administration, dated 13th November 1973 suspending Thiru R. Vasudevan, Electrical Engineer, Corporation of Madras, with immediate effect and placing Thiru P. Viswanathan, Water Works Engineer to hold full additional charge of the post of Electrical Engineer until further orders.

As a thorough detailed investigation of the whole case was called for to assess the size of the misappropriation and also to book all the concerned officers of the Electrical Department involved in this racket, the investigation of the case has been entrusted to the Director of Vigilance and Anti-Corruption. The Director of Vigilance and Anti-Corruption has intimated that a case in crime No. 5/AC/MTC/73 of Madras City Unit, Vigilance and Anti-Corruption under section 120-B, I.P.C., sections 167, 409, 420, 465, 467, 471 and 477-A, I.P.C. and section 5 (2) read with section 5 (1) (*c*) and (*d*) of the Prevention of Corruption Act, 1947 (Central Act II of 1947) has been registered on 15th November 1973 against Thiru R. Vasudevan, Electrical Engineer and 13 others of the Corporation of Madras and the investigation taken up.

It will be observed from the position explained that the Government have taken effective and speedy action against the officers concerned for the irregularities committed by them in this case

immediately after the matter was brought to the notice of Govern- ment. The total amount misappropriated in this case and how long this fraudulent practice has been going on in the Corporation of Madras will be known only after the report of the Director of Vigilance and Anti-Corruption is received. Any further discussion on the details of this case will prejudice further investigation by the Vigilance Department. I assure the House that effective and impartial action will be taken without fear or favour after the receipt of the report from the Director of Vigilance and Anti- Corruption In the circumstances explained, there is no need for any further discussion.

**Dr. H. V. HANDE**: My request is this. Let the case be referred to C.B.I. so that the burden of the State can be reduced.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி**: எல்லாவற்றையும் கொடுத்துவிடலாம். தமிழ்நாட்டையே தூக்கிக்கொடுத்துவிடலாம். தலைவரவர்களே, இங்கே இந்த அவையின் முன்னால் வைக்கப்பட்ட ஒத்திவைப்புத் தீர்மானத்தையொட்டி, அவையை ஒத்திவைத்து விவாதிக்கவேண்டுமென்று எதிர்க்கட்சியிலே உள்ளவர்களும், அதை விவாதிக்கத் தேவையில்லை என்கிற கருத்தின் அடிப்படையிலே அமைச்சர் அவர்களும், தங்களுடைய எண்ணங்களை இங்கே எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அமைச்சரவர்கள் அறிவித்ததைப் போல் மாநகராட்சி மன்றத்தில் அதிகாரிகள் சிலர் நடத்திய ஊழல் அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதும் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அதனுடைய நிர்வாகப் பொறுப்பில் இருக்கின்ற தலைவர்கள், இதில் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்கிற முறையீட்டை என்னிடத்தில் கொண்டு வந்தவுடனே, உடனடியாக நடவடிக்கை எடுங்கள் என்று நான் ஆணை பிறப்பித்து, நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு தொடர்ந்து விஜிலென்ஸ் விசாரணை இப்போது நடைபெற்று, அதன்தொடர்பாகப் பலர்கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். திரு. சுப்பையா அவர்கள் இங்கே குறிப்பிட்டது போல், ஒரு அதிகாரி யின் வீட்டிலிருந்து ரூ. 30,000 அளவுக்கு தொகை கைப்பற்றப் பட்டிருக்கிறது. ஆகவே, மிகத் தீவிரமாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதற்கு இதை விட வேறு ஆதாரங் கள் தேவையில்லை என்று கருதுகிறேன். இதிலே யாரையும் தப்ப





வைக்கவேண்டுமென்ற எண்ணம் இந்த அரசாங்கத்திற்கு நிச்சயம் இல்லை. இன்னும் சொல்லப்போனால், இதிலே அரசியல் கட்சிச் சார்பின்றி, யாராக இருந்தாலும், அவர்கள் மாநகராட்சி மன்ற உறுப்பினர்களாக இருந்தாலும், எந்த அரசியல் கட்சியைச் சார்ந் தவர்களாக இருந்தாலும், இந்த விசாரணை முடிவில் அவர்கள் இதிலே தொடர்புடையவர்கள் என்று நிரூபிக்கப்படுமானால் அவர்கள் மீதும் தகுந்த நடவடிக்கை, அவர்கள் எந்த அரசியல் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் பாரபட்சம் பார்க்காமல் இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

எதிர்க்கட்சியில் உள்ள தலைவர்கள் பேசும்போது, மாநகராட்சி மன்றத்தைக் கலைத்துவிட்டு, இந்த விசாரணையை நடத்தலாம் என்ற யோசனையைச் சொன்னார்கள். நான் அவர்களுடைய யோசனையை ஏற்றுக்கொண்டு, மாநகராட்சி மன்றம் கலைக்கப்பட்டு, விசாரணை நடைபெறும் என்ற உறுதியை இப்போது தெரிவித்துக் கொள்கிறேன். (ஆரவாரம்) அதற்கான உத்தரவுகள் முறைப்படி வெளியிடப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**Thiru K. M. SUBRAMANIAM**: We only wanted judicial enquiry.

**திரு. கே. டி. கே. தங்கமணி**: இந்த இரண்டு பதில்களை வைத்துக்கொண்டு பார்க்கிறபோது ஏதோ அதிகாரிகள் மீது நட வடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று இருக்கிறதே தவிர, மற்ற விவரங்கள், நாங்கள் எழுப்பிய விவரங்கள், இந்த நிர்வாகத்தில் ஊழல் இருக்கிறது, இன்று நடக்கும் விசாரணை எங்களுக்குத் திருப்தி இல்லை என்றவற்றிற்கு ஒன்றும் தெளிவாகச் சொல்லப்பட வில்லை.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி**: திரு. தங்கமணி அவர்கள் இன்று கேட்டதுபோல் கமிஷன் ஆப் என்கொயரி போட்டால் நடக்கும் விஜிலன்ஸ் என்கொயரியை நிறுத்த வேண்டியிருக்கும். அதற்கு அவர்கள் தயாரா ?

**திரு. கே. டி. கே. தங்கமணி**: விசாரணை தொடரப்பட்டு இருக் கிறது. அதை எப்படி நிறுத்தவேண்டியிருக்கும்? சாதாரணமான என்கொயரி கமிஷன் போட்டால், ஏற்கெனவே செய்யப்பட்ட காரி

யங்களைத் தொடர்ந்து செய்யலாம். அதோடு விசாரணைக் கமிஷன் போட்டால் இன்னும் பல துறைகளில் இருக்கும் விவரங்கள் வெளி வரும். இப்போது உள்ளது போல் இருந்தால், ஏதோ சில அதிகாரிகள் தவறு செய்து விட்டார்கள், அவர்கள் மீது நடவ டிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதோடு மட்டும் முடிந்து விடும். விசாரணைக் கமிஷன் போட்டால் அவர்களுக்குக் கஷ்டம் இருக்கும் என்றால், நாம் காலம் குறிப்பிட்டு, இரண்டு மூன்று மாதங்களுக்குள் கமிஷன் ரிப்போர்ட் கொடுத்து விடவேண்டு மென்று சொல்லலாம். ஏற்கெனவே நாம் பாளையங்கோட்டை சம்பவம் குறித்து 3 மாதங்களுக்குள் ரிப்போர்ட் கொடுக்கவேண்டு மென்று சொன்னோம். அதுமாதிரி இதற்கும் சொல்லலாம்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, நான் இந்த அவையிலே எடுத்துச் சொல்லப்பட்ட யோசனைகளை ஏற்றுக் கொண்டு, மாநகராட்சி மன்றம் கலைக்கப்பட்டு, விசாரணை நடத்தப் படும் என்று அறிவித்து இருக்கிறேன். மிகத் தீவிரமான முறையில் இந்த விஜிலென்ஸ் கமிஷன் விசாரணை இருக்கும் என்று தெரிவித்து அதிலே அரசியல் கட்சி பாகுபாடு இல்லாமல், ஒரு முறை பக்தவத் சலம் அவர்கள் கூறி இருக்கிறார்கள், கார்ப்பரேஷனில் கட்சி இல்லை என்று, அந்த அடிப்படையில் எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப் படும் என்ற உறுதியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகும்....

(டாக்டர் எச். வி. ஹாண்டே குறுக்கீடு)

டாக்டர் ஹாண்டே, உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உள் ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அளித்த விளக்கத்திற்குப் பிறகும், மாண்புமிகு முதலமைச்சர் அளித்த விளக்கத்திற்குப் பிறகும், இது குறித்து விவாதிக்க இந்த அவையை ஒத்திவைக்கத் தேவையில்லை என்று கருதுகிறேன். ஆகவே, இதற்கு அனுமதி நா மறுக்கிறேன்.

உறுப்பினர்கள் கொடுத்திருக்கும் மற்ற ஒத்திவைப்புத் தீர்மா னங்கள் குறித்து நாளை நான் முடிவு எடுத்துக் கூறுகிறேன்.



## (5) அறிவிப்பு.

பேரவை அலுவல் குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் அலுவல் ஆய்வுக் குழு எடுத்த முடிவின்படி நடப்புக் கூட்டத் தொடரின் நிகழ்ச்சிகள் உறுப்பினர்களுக்கு ஏற்கெனவே அச்சிட்டு@ அனுப்பியுள்ளவாறு நடைபெறும். அடுத்து மின் வாரியத்தின் 1973-74-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கைமீது விவாதம் தொடரும். திரு. என். கே. பழனி சாமி.

**திரு. முனு ஆதி:** நான் கொடுத்த ஒத்திவைப்புத் தீர்மானங்கள் என்ன ஆயிற்று?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நாளை முடிவு தெரிவிக்கப் படும்.

## (6) மின் வாரியத்தின் 1973-74-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீது விவாதம்—தொடர்ச்சி.

**திரு. என். கே. பழனிசாமி:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த சர்க்கார் கொடுத்து இருக்கக்கூடிய மின்சார வாரிய வரவு செலவுக் கணக்கில் 'கேபிடல் அவுட்லே' என்பதற்காக 43 கோடி ரூபாய் தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. நமது ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 230 கோடி வருஷத்திற்கு ஒதுக்கப்பட் டிருக்கும்போது, கிட்டத்தட்ட 6-ல் ஒரு பங்குதான் அந்த ஒதுக்கப் பட்ட தொகையில் இதற்காக ஒதுக்கியிருப்பது சரியா என்று கேட்க ஆசைப்படுகிறேன். காரணம், இன்று மின்சாரம் விவசாயத் திற்கும், தொழில் முன்னேற்றத்திற்கும் மிகமிகத் தேவையாக இருக்கிறது. இப்படி இதனுடைய தேவை அதிகரித்துக்கொண்டி ருக்கிறபோது, 43 கோடி மட்டும் ஒதுக்கப்பட்டிருப்பது சரியல்ல. 3-ல் ஒரு பங்காவது ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

போன வருடம் வரவு செலவுக் கணக்கு சமர்ப்பிக்கப்பட்ட நேரத்தில் மாஸ்டர் பிளான் என்று சொல்லி அதற்கு சப்-ஸ்டேஷன் கட்டுவது, லைன்கள் மற்றவற்றை அபிவிருத்திச் செய்வது

---

@ 291-292-ம் பக்கத்தில் இணைப்பு III-ஆக அச்சிடப் பட்டுள்ளது.

[திரு. என். கே. பழனிசாமி] [1973 நவம்பர் 20

போன்றவற்றிற்காக ரூ. 50 கோடி ஒதுக்கப்போவதாகச் சொன்னார்கள். அப்போது ஒதுக்கப்பட்ட தொகை என்ன ஆயிற்று? எந்த அளவுக்கு வேலை நடந்து இருக்கிறது, எந்த அளவுக்கு வேலை நடக்கவில்லை என்பதை இந்த வரவு செலவுத் திட்டத்தில் குறிப்பிடவில்லை. அது மட்டுமல்ல, எல்லாக் கிராமங்களுக்கும் மின்சாரத்தை விஸ்தரிக்கப் போவதாகச் சொன்னார்கள், அதற்காக 20 கோடி ரூபாய் ஒதுக்கினார்கள். அவர்கள் கணக்குப் பிரகாரம் 35,000 கிராமங்களுக்கு மின்சார வசதி கொடுத்து இருப்பதாக இருக்கிறது. ஆனால் இன்னும் பல கிராமங்கள் மின்சார வசதி இல்லாமல் இருக்கின்றன. ஆகவே, அதற்காக இன்னும் அதிகமான பணத்தை ஒதுக்கி எல்லாக் கிராமங்களுக்கும் மின்சார வசதி கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதற்கு சர்க்கார் முதலிடம் கொடுத்து செய்யவேண்டும். மின்சாரம் கொடுப்பதில் தமிழக சர்க்கார்தான் முதலிடம் வகித்து இருந்தது. இப்போதுள்ள நிலைமையில் சென்றால் இன்னும் இரண்டு வருடத்தில் மிகவும் மோசமான நிலைமைக்கு தமிழ்நாடு போய் விடும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

சிறப்புத் திட்டம் என்ற பெயரால் பின்தங்கிய பகுதிகளுக்கு மின்சார விஸ்தரிப்புக் கொடுப்பதில் தருமபுரி போன்ற பின்தங்கிய மாவட்டங்களுக்கு சலுகை கொடுக்கப்பட்டது. அந்தத் திட்டத்திற்காக எவ்வளவு செலவிடப்பட்டது. இன்னும் தருமபுரி போன்ற மாவட்டங்கள் பின்தங்கிய நிலையில்தான் இருக்கின்றன. தொழிற்சாலைகள் ஆரம்பிப்பதற்கு பல சிரமங்கள் இருக்கின்றன. அப்படிப்பட்ட பிரதேசத்திற்கு சிறப்புத் திட்டம் என்ற பெயரில் 3 ஆண்டு காலம் வேலைகள் நடைபெறும் என்று சொன்னார்கள். அந்தத் திட்டத்தின் கீழ் என்ன அபிவிருத்தி வேலைகள் நடைபெற்றிருக்கின்றன? அந்தப் பகுதியில் இருக்கும் குறைகளை நிவர்த்திக்க நடவடிக்கைகளை அரசு உடனே எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1951-52-ம் ஆண்டு இந்த போர்டு ஏற்படுவதற்கு முன்பாக 'டெப்பிரிசியேஷன் பண்டு' என்று ரூ. 3½ கோடி கணக்கு இருந்தது. அந்தப் பணத்தை ஒவ்வொரு வருஷமும் கணக்கில் காட்டிக்கொண்டு வருகிறார்கள். ஒன்று அதை அட்ஜஸ்ட் செய்ய வேண்டும் அல்லது அந்தக் கணக்கை ரைட் ஆப் செய்ய வேண்டும்.



1973 நவம்பர் 20] [திரு. என். கே. பழனிசாமி]

டியர்னஸ் அலவன்ஸ், ஸ்டாஃபை பொறுத்தவரையில் 6 கோடியே 18 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதில் காபிடல் அவுட்லேயில் ரெவின்யூ அகௌண்ட்டில் செலவு செய்யப் பட்டிருக்கிறதா? அப்படியானால் டி.ஏ. ஏன் வேறு?

அதுமட்டுமல்ல. 1971-72-ல் ரூ. 2 கோடி 94 லட்சம் மத்திய சர்க்கார் ஆடிட்டர் ஜெனரல் பரிசீலனை செய்து பார்த்திருக்கக்கூடிய கணக்கிற்கும், மாநில சர்க்கார் கொடுத்திருக்கக்கூடிய கணக்கிற்கும் வித்தியாசம் இருக்கிறது என்று சொல்கிறார்கள். அப்படி வித்தியாசம் இருப்பது மட்டுமல்ல.

'Figures shown in the balance sheet are therefore only provisional'.

அது ட்ரூ அல்ல, சரி அல்ல என்று அவர்கள் அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. இம்மாதிரி பல குறைபாடுகள் இருக்கின்றன. இந்த போர்டின் நிர்வாகத்தைப்பற்றி ஆடிட்டர் ஜெனரல் கொடுத்திருக்கக்கூடிய பெரிய காமென்ட்,

'minus balances under various liability and asset accounts due to irregular accounting and misclassification, were noticed on a large scale'.

அப்படியென்று சொன்னால் இந்த போர்டின் நிர்வாகத்தைப் பற்றி என்ன அபிப்பிராயம்? அது சரியாக நடைபெறவில்லை என்பது தான். 10 கோடி ரூபாய் பில்கள் இரண்டு வருஷங்களாக வசூல் செய்யப்படவில்லை. ஜனங்கள் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறார்கள். வாங்குவதற்கு ஆள் இல்லை. அதிகப்படியாக அவர்கள் போன வருஷம் கிளார்க்குகள் போட்டும் இன்னும் ரூ. 10 கோடி பாக்கியிருக்கிறது என்று சொன்னால், யாருக்கு நஷ்டம்? ரூ. 4 கோடி செலவு செய்து ஒரு பெரிய நிர்வாகத்தை கையில் வைத்துக் கொண்டு இந்தப் பணிகளை சரிவர செய்யவில்லை, வசூல் செய்யவில்லை என்று சொன்னால் போர்டு நிர்வாகத்தில் என்னதான் செய்ய முடியும்? அதிகப்படியான ஆட்கள் போட்டும் வசூல் செய்யாததற்கு என்ன காரணம்? வருஷம் ரூ. 10 கோடி ஜனங்களிடமிருந்து வரவேண்டும் என்று சொன்னால் கிட்டத்தட்ட ரூ. 96 லட்சம் மட்டும் வட்டியாகிறது. ரூ. 96 லட்சம் ஜனங்கள் வசூலிலிருந்து நஷ்டம்தான் ஏற்படுகிறது. ஆடிட் ரிப்போர்ட்களை எடுத்துக் கொண்டாலும் சரி, மற்ற நிர்வாகத்தை எடுத்துக்கொண்டாலும் சரி, உற்பத்திச் செலவிலும் திறமையில்லை, நிர்வாகத்திலும் திறமையில்லை, வசூலிலும் திறமையில்லை என்ற முறையில்தான் இருக்கிறது.

இந்தச் சமயத்தில் பவர் ஜெனரேஷன் போர்டு என்று தனியாக ஏற்படப் போகிறது. இதை ஏற்படுத்துவதன் முக்கியமான நோக்கம் என்ன? இதற்கும் அதிகச் செலவாகும். இதற்கும் ஏகப்பட்ட பணம் விரயமாகும். மைசூரை எடுத்துக்கொண்டால், சமீபத்தில் அங்கே பவர் ஜெனரேஷன் போர்டு ஏற்படுத்தினார்கள். அது சரியாக பங்ஷன் பண்ணவில்லை என்று சொல்லப்படுகிறது. அப்படி சரியாக பங்ஷன் பண்ணவில்லை என்ற காரணத்தினால்தான் போர்டோடு அதை இணைக்கப் போகிறார்கள். அப்படியிருக்கும் பொழுது தனியாக பவர் ஜெனரேஷன் போர்டு ஏற்படுத்தி வீண் செலவு செய்வது சரியா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

அதுமட்டுமல்ல. இந்த போர்டு நிர்வாகத்தை நடைமுறையிலே திருத்தி அமைக்கவேண்டுமென்று சொன்னால் வொர்கர்ஸ் பார்டிஸிபேஷன் இருக்கவேண்டும், எல்லா மாவட்டங்களிலும். ஒரு ஐ.ஸி.எஸ். அதிகாரியை சேர்மனாகப் போடுவதில் எந்தவிதமான பிரயோசனமும் இல்லை. அதில் இருக்கக்கூடிய என்ஜினியர்கள் திறமையான என்ஜினியர்களாக இல்லை. ஐ.ஏ.எஸ். அதிகாரிகளுக்கு என்ன கிரேடு வைத்திருக்கிறார்களோ, என்ன சம்பளம் வைத்திருக்கிறார்களோ, அதே சம்பளத்தைக் கொடுத்து அவர்களைப் ஃபர்ஸ்டு கிரேடில் வைத்து சரியான முறையில் நிர்வாகம் செய்யக்கூடிய முறையில் இருக்கவேண்டும். சம்பந்தப்பட்ட என்ஜினியர்கள் எல்லா வட்டங்களிலும் உள்ள தொழிலாளர்களுக்கு என்னென்ன குறைபாடுகள் இருக்கின்றன, எப்படி எப்படி அவைகளை நிவர்த்திக்க முடியும், எப்படி வருமானத்தை உயர்த்த முடியும் என்று அவர்களோடு நேரடியாக ஆலோசனை கலந்து, அவர்கள் நேரடியாக நிர்வாகத்தில் பங்கு கொள்ளக்கூடிய முறையில் வகை செய்ய வேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

வசூல் ஆகாததற்குக் காரணம் என்னவென்றால், யூனியன் ரைவல்ரி என்று சொல்லப்படுகிறது. சர்க்கார் சென்ற வருஷமே சொன்னார்கள். எந்த யூனியன் மெஜாரிடி ரெப்ரசென்டேஷன் வைத்திருக்கிறதோ அந்த யூனியனுக்கு தேர்தல் நடத்தி, அவர்களோடு பேச்சு வார்த்தைகள் நடத்துவதற்கும், மற்ற காரியங்கள் நடத்துவதற்கும் ஏற்பாடுகள் செய்கிறோம் என்று சொல்லி ஒரு வருடம் ஆகியும் தேர்தல் நடக்கவில்லை. ஒரு இண்டஸ்டிரிக்கு ஒரு



யூனியன் என்று சர்க்கார் கொள்கை என்று அறிவித்திருந்தும்கூட, ஒரு வருஷமாகியும் அங்கு தேர்தல் நடத்தப்படவில்லை. தேர்தல் நடத்தாமல் இருப்பதற்கு என்ன காரணம். ஆகவே, இப்படிப்பட்ட நிர்வாகத்தில் ஊழல் நடக்கக்கூடிய சந்தர்ப்பம் அதிகமாக இருக்கிறது.

போன வருஷம் மின்சார வெட்டு ஏற்பட்டது. ஆகஸ்டு 15-லிருந்து செப்டம்பர் முடிய 1½ மாத காலம்தான் மின்சார வெட்டு நீடிக்கப்பட்டது. அதற்குப் பின்னால் மழை சாதகமாக பெய்திருக்கிறது என்று மந்திரி அவர்கள் அறிக்கையில் சொல்லியிருக்கிறார்கள். 2,010 மெகாவாட் நமக்குத் தேவை இருக்கிறது. நெய்வேலியில் உற்பத்தியாகக்கூடிய 600 மெகாவாட்டையும் சேர்த்து 2,010 மெகாவாட் இருக்கிறது. நமக்குத் தேவை 2,010 மெகாவாட் தான். ஹைடல் பவரைப் பொறுத்தவரையிலும், எல்லா குளங்களிலும் ஏராளமாகத் தண்ணீர் இருக்கிறது. அதுபோக, கேரளாவிலிருந்து 3 மில்லியன் யூனிட்டுகள் தினம் ஒன்றுக்கு நமக்குக் கிடைத்துக்கொண்டிருக்கிறது. மற்றும் 2, 3 மாதங்களில் என்னூரில் இருக்கக்கூடிய யூனிட்டும் ரிப்பேர் செய்யப்பட்டு சரியாகிவிடும். ஆகவே, எந்த முறையிலும் மின்சார வெட்டுத் தேவையில்லை. தேவையில்லாமல் இருக்கும்பொழுது வேண்டுமென்றே 15 சதவிகித மின்சார வெட்டு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. 100-க்கு 80 பேர்கள் ரூல்ஸ் ரிலாக்ஸ் செய்யப்பட்டு மின்சாரம் வாங்கிக்கொண்டு இருக்கிறார்களா, இல்லையா? சௌகரியம் இருக்கிறவர்களுக்குக் கிடைக்கிறது. விவசாயிகளுக்கு, ஒன்றுமே தெரியாதவர்களுக்குக் கிடைப்பதில்லை. பெருவாரியாக, ரூல்ஸ் ரிலாக்ஸ் பண்ணி 100-க்கு 80 பேர்கள் மின்சாரம் முழுமையாக வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். இப்படிப் பாரபட்சம் காட்டுவது சரியில்லை.

கேரளாவிலிருந்து மின்சாரம் வாங்கும்பொழுது ஒரு யூனிட்டிற்கு 8, 9 பைசா செலவாகிறது. நாம் ஒரு யூனிட்டிற்கு 36 பைசா என்று வசூல் செய்கிறோம். கேரளாவிலிருந்து மின்சாரம் 9 காசுக்கு வாங்கினால், சர்க்காருக்கு உற்பத்தி செலவு இல்லை, நிர்வாகச் செலவும் இல்லை. ஆனால், அதை 36 பைசாவுக்குக் கொடுக்கிறோம். ஏன் அதைக் குறைத்துக் கொடுக்கக்கூடாது. சாதாரணமாக ஒரு லைட் போடுகிறவர்கள் என்று பாகுபாடு செய்து ஏழைகளாக இருக்கக்கூடியவர்களுக்கு 20 அல்லது 25

[திரு. என். கே. பழனிசாமி] [1973 நவம்பர் 20

பைசாவுக்கு கொடுக்கக் கூடாதா? அப்படியில்லாமல் அவர்களிடமிருந்து அதிகமாக பணம் வசூலித்து தங்களுடைய நிதிநிலையைச் சரிப்படுத்திக் கொள்வது சரியல்ல.

கிராமங்களிலும், பல பஞ்சாயத்து யூனியன்களிலும், நகரசபைகளிலும் சரியாக லைட் எரிவதில்லை. எப்பொழுது கேட்டாலும் பல்புகள் ஸ்டாக் இல்லை. சர்க்கார் அறிக்கையிலே இதுபற்றி 'டான்லி' யோடு பேச்சு வார்த்தை நடத்திக் கேட்டோம், செய்ய முடியாது என்று சொல்கிறார்கள் என்று கூறப்படுகிறது. 600 கோடி ரூபாய் மூலதனம் போட்டு, இவ்வளவு பெரிய ஸ்தாபனத்தை வைத்துக்கொண்டிருப்பவர்கள் பல்புகள், மீட்டர்கள், ட்யூப் லைட்கள் உற்பத்தி செய்வதற்கு ஏன் தாங்களே முன்வரக்கூடாது? இது ஒரு நிரந்தர ஸ்தாபனம், தேவை அதிகமாக இருக்கக்கூடிய ஸ்தாபனம், தொழில் நிரந்தரமாக இருக்கக் கூடியது, லாபம் வரும். ஆகவே, தனியாரை நம்பியிருப்பதைவிட சர்க்காரே இந்தத் தொழிலை ஏற்று நடத்த முடியும்.

அது மட்டுமல்ல. இன்றைய தினம் இன்னும் மின்சாரத்திற்கு, பம்புசெட்டுகளுக்கு மினிமம் சார்ஜ் என்று ஒரு எச்.பி.-க்கு இவ்வளவு என்று வாங்கப்படுகிறது. இதை ரத்து செய்யவேண்டும். இவ்வளவு பெரிய வருமானம் வரக்கூடிய நிர்வாகம் மினிமம் சார்ஜ் வாங்குவது சரியல்ல.

இன்றையதினம் 30,000 பதவிகள், டெம்பரரி வொர்கர்ஸ் இருக்கிறார்கள். 9,000 பேர்களை நிரந்தரமாக எடுத்திருப்பதாக சொல்கிறார்கள். பாக்கி இருக்கக்கூடியவர்களை எத்தனை வருஷங்களில் எடுத்துக்கொள்வார்கள்? அதற்கு ஒரு திட்டம் கிடையாது. சைகிள் அலவன்ஸ் ரூ. 4-லிருந்து ரூ. 6 கொடுக்கிறோம் என்று சொல்கிறார்கள். போர்டு ரூ. 8 என்று தீர்மானம் போட்டிருந்தும்கூட, அதைவிடக் குறைவாக ரூ. 6 என்று கொடுப்பது சரியல்ல. இம்மாதிரியான குறைகளை சரியான முறையில் தீர்த்து வைக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, முடித்துக்கொள்கிறேன்.

[11-30 முற்பகல்]

* **திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மின்சார வாரியத்தின் கணக்கு வழக்குகளை நம்முடைய மதிப்பிற்குரிய மின்சாரத் துறை அமைச்சர் திரு. இராமன் அவர்கள் நேற்றையதினம் இந்த



1973 நவம்பர் 20] [திரு. வி. கிருஷ்ணமூர்த்தி]

மன்றத்தில் விளக்கமாக வைத்தார்கள். சென்ற ஆண்டில் நம்முடைய மாநிலத்திலே போதுமான மழை இல்லை. அதனால் நீர்த்தேக்கங்களில் தண்ணீர் இல்லை. ஆந்திராவிலே ஏற்பட்ட கிளர்ச்சியின் காரணமாக நிலக்கரி வரத்தும் இல்லை. அதனால் எண்ணூர், பேசின்பிரிட்ஜ் அனல் மின்சார நிலையங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு, உற்பத்தி குறைந்தது. அதே சமயத்தில் நெய்வேலியில் ஏற்பட்ட சில கோளாறுகளினால் 600 மெகாவாட் உற்பத்தி செய்யவேண்டுமென்று திட்டமிட்ட அந்த நிலையம் 60 மெகாவாட் தான் உற்பத்தி செய்தது. இப்போது மானேஜிங் டைரக்டராக பொறுப்பேற்று இருப்பவருக்கு முன்னால் இருந்தவர் காலத்தில் 600 மெகாவாட் செய்ய வேண்டிய நெய்வேலி மின்சார நிலையத்தில் 60 மெகாவாட் தான் உற்பத்தி செய்தார்கள். அதையும் அவர்களே கன்சம்ஷன் செய்துகொண்டார்கள். அதனால் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு நெய்வேலியிலிருந்து கிடைக்கக்கூடிய மின்சாரம் தடைப்பட்டது. ஆனால் அப்பேர்ப்பட்ட நெருக்கடியிலும், இயற்கை ஒரு பக்கம், மனிதர்களின் இன்னல்கள் ஒரு பக்கம் இருந்தபோதிலும், விவசாயிகளாகிய எங்களைப் போன்றவர்களுக்கும் தொழிலதிபர்களுக்கும் மற்றுமுள்ள காரியங்களுக்கும் பாதகம் ஏற்படாதவாறு மிகவும் சாமார்த்தியமாகவும், சாதுரியமாகவும் மின்சார வசதி செய்து தந்த அந்த வாரியத் தலைவர், எஞ்சினீயர்கள், பணியாளர்கள் எல்லோருக்கும் இந்த மன்றத்தின் சார்பில் வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தியா பூராவிலும் பார்த்தால் தமிழகத்தினுடைய மின்சார அமைப்பை மெச்சாதவர்கள் மற்ற மாநிலங்களிலே இல்லை. எல்லா மாநிலத்திலும் சுற்றிப் பார்க்கிறோம். ஆங்காங்கே உள்ள மின்சார அமைப்பை, விஸ்தரிப்பை நம்மால் புரிந்துகொள்ள முடிகிறது. மைசூரிலே மின்சார உற்பத்தி இருக்கிறது; ஆனால் விநியோகம்—டிஸ்டிரிபியூஷன்—சரியாக இல்லை. ஆகையால் உற்பத்தி செய்யப்படுகின்ற மின்சாரம் சரிவர பகிர்ந்தளிக்கப்படாததால், அவர்களால் பூரணமான பயனை அடைய முடியவில்லை. ஆந்திராவிலும் அந்த நிலைமைதான். ஆனால் நமக்கு எல்.டி., எச். டி. லைன்கள் எல்லாம் போட்டு, உற்பத்தியாகின்ற மின்சாரம் குறைவாக இருந்தாலும் மிக சாமர்த்தியமான முறையிலே

[திரு. வி. கிருஷ்ணமூர்த்தி] [1973 நவம்பர் 20

அதிகமாக பாதகம் ஏற்படாமல் விநியோகம் செய்கிறார்கள். அந்த அளவுக்கு மிகவும் திறமையாக இந்த நிர்வாகத்தை தமிழகத்திலே நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

கல்பாக்கம் அணு மின் நிலைய வேலையை தொடங்கியபோது, 1971-ம் ஆண்டிலேயே உற்பத்தி தொடங்கிவிடும் என்று மத்திய அரசாங்கத்தார் சொன்னார்கள். அது 1977-ல் உற்பத்தித் தொடங்குமா அல்லது 1978-ல் உற்பத்தித் தொடங்குமா என்பது நமக்கு இன்னும் தெளிவாகத் தெரியவில்லை. 600 மெகாவாட் உற்பத்திக்கு திட்டமிட்ட நெய்வேலியில் 60 மெகாவாட் உற்பத்தி செய்தார்கள். ஆகையால் மத்திய அரசின் திட்டங்கள் மாநிலத்திற்கு சரியாகப் பயன்படவில்லை. இப்படிப்பட்ட குறைபாடுகள் எல்லாம் இருந்தாலும் இன்றைய தினம் மின்சார வாரியத்தின் பொறுப்பை ஏற்றிருப்பவர்கள் திறமையாகச் செயல்பட்டு வருகிறார்கள். இன்றையதினம் நெய்வேலியின் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருப்பவர் எடுத்துக்கொண்ட முயற்சியின் காரணமாக, அங்கே அதிகமாக உற்பத்தி செய்து, நம்முடைய தமிழகத்திலே எங்கும் இருள் சூழ்ந்துவிடாத நிலைமையை ஏற்படுத்தினார்கள். அவர்களுக்கு மீண்டும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

எண்ணூரிலே உள்ள பவர் ஜெனரேட்டரில் ஒரு யூனிட்டே எரிந்துவிட்டது. போதுமான மின்சார உற்பத்தி இல்லை. ஏன் உற்பத்தி இல்லை? கரி வரவில்லை. கரி வந்தபிறகு ஏன் உற்பத்தி செய்யவில்லை? தண்ணீர் இல்லை. தண்ணீர் ஏன் வரவில்லை என்றால் மணல் அடைத்துவிட்டது. அதற்குப் பிறகு ஒரு யூனிட்டே பற்றி விட்டது. இப்படிப்பட்ட 'எஃபிசியன்ஸி' உள்ளவர்கள் எண்ணூர் மின் நிலையத்தை நிர்வகிக்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் இருந்தால் எப்படி மின்சார உற்பத்தி பெருக முடியும்? ஆனால் அதே நேரத்தில் நெய்வேலியில் 60 மெகாவாட் உற்பத்தி செய்வதற்குப் பதிலாக 230 மெகாவாட் உற்பத்தி செய்து கொடுத்தார்கள். எப்ரல், மே மாதங்களில் 250 மெகாவாட் கொடுத்தார்கள். அதனால் 'வோல்ட்டேஜ் மெயின்டேன்' பண்ண முடிந்தது. மைசூர், கேரளத்திலிருந்தும் நாம் மின்சாரம் பெற்று வந்தோம். இங்கே வோல்டேஜ் ரெகுலேஷன் குறைந்துவிட்டால், அதாவது 49, 48, 47



1973 நவம்பர் 20] [திரு. வி. கிருஷ்ணமூர்த்தி]

சைக்கிளுக்கும் குறைந்துவிட்டால் நம்முடைய ஜெனரேட்டர்கள் எரிந்துவிடுவது மட்டுமல்லாமல் அவர்களுடைய ஜெனரேட்டர்களும் எரிந்துவிடும். அதனால் வோல்டேஜ் ரெகுலேஷன் 49 சைக்கிள் வந்துவிட்டாலே நம்மை கேட்காமல் அவர்கள் லைனை வெட்டிவிடுவார்கள். அந்த நிலைமை ஏற்படாதவாறு நம்முடைய மின்சாரத் துறையில் பணியாற்றும் எஞ்சினியர்கள் சிறப்பாகப் பணியாற்றினார்கள்.

எண்ணூர் மின்சார நிலையத்தில் கோளாறு ஏற்பட்டதற்கு ஒரு காரணம் அங்கே இருக்கக்கூடிய எஞ்சினீயர்தான். எஞ்சினியர்களைப் போடும்போது வேண்டியவர்கள், வேண்டாதவர்கள் என்று பார்த்துப் போடக்கூடாது. பி.இ. (எலெக்டிரிகல்) படித்த எஞ்சினியரைப் போட்டிருந்தால் அந்தக் குறை தவிர்க்கப் பட்டிருக்கலாம். ஆனால் அங்கே நமக்கு வேண்டியவர் என்ற காரணத்தினால் சிவில் எஞ்சினீயரிங் படித்தவரைப் போட்டார்கள். அங்கே ஏற்பட்ட விபத்திற்குப் பின்னாலாவது இப்படிச் செய்யக்கூடாது என்பதை நாம் உணர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இப்போது 15 சதவிகிதம் பவர் கட் இருக்கிறது. சில வல்லுநர்கள் இந்த பவர் கட் தேவையில்லை என்று சொல்கிறார்கள்; சில வல்லுநர்கள் தேவைதான் என்று சொல்கிறார்கள். ஹைடிரோ ரிசர்வாயர்ஸ் ஃபுல்லாக இருக்கின்றன. விவசாய மோட்டார்கள் அதிகமாக இறைக்கவில்லை. அதிகமாக இறைக்காத காரணத்தினால் மின்சார கன்சம்ஷன் குறைந்திருக்கிறது. அதனால் இந்த 15 சதவிகிதம் பவர் கட் தேவையில்லை என்று நான் கருதுகிறேன். தேவைப்பட்டால், இங்கே இருக்கின்ற எஞ்சினியர்களையும் மற்றும் வல்லுநர்களையும் கலந்தாலோசிக்கலாம். அல்லது சிறந்த நிபுணர்களைக் கொண்ட குழு ஒன்றை அமைத்து, அவர்கள் ஆலோசனையைக் கேட்கலாம். அதில் இப்போது பணியாற்றிக் கொண்டிருப்பவர்கள் மட்டுமல்லாமல் ஏற்கெனவே பணியாற்றி ஓய்வு பெற்றவர்களும் இருக்கலாம். மத்திய அரசில் பணியாற்றியவர்களும் இருக்கலாம், மாநில அரசில் பணியாற்றியவர்களும் இருக்கலாம். முன்னால் மின்சார வாரியத்தின் தலைவராக இருந்த வி. பி. அப்பாத்துரை போன்றவர்களையும் அதில் இடம் பெறச் செய்யலாம். அவர்களுக்கு

[திரு. வி. கிருஷ்ணமூர்த்தி] [1973 நவம்பர் 20

சம்பளம் எதுவும் கொடுக்க வேண்டியதில்லை. நிபுணர்களின் கருத்தைக் கேட்டுத் தெரிந்துகொள்வதில் தவறில்லை. அவர்கள் ஆலோசனை கூறமாட்டோம் என்றும் சொல்லமாட்டார்கள். அதற்கு ஏற்பாடு செய்தால் நல்லது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்போதிருக்கின்ற 15 சதவிகிதம் பவர் கட் ரத்து செய்யப்பட்டால் அதனால் பல நன்மைகள் கிடைக்கும். விவசாயத்திற்கும் மற்ற காரியங்களுக்கும் பிரயோஜனமாக இருக்கும். டிசம்பர் மாதம் வரை பார்த்துவிட்டு நிலைமை சீராக இருந்தால் ரத்து செய்யலாம் என்று சொல்கிறார்கள். டிசம்பர் மாதம் வரை பொறுக்க வேண்டிய அவசியம் இல்லை என்று நான் கருதுகிறேன்.

இப்போது மின்சாரம் எப்படி சப்ளை செய்யப்படுகிறது? 'டே பீக் லோடு' —பகல் வேளையில் 1,300 மெகாவாட் மின்சாரம் கன்சம்ஷன் செய்கிறோம். ஆனால் இரவு வேளையில் 900 மெகாவாட் கரண்டுதான் கன்சம்ஷன் செய்கிறோம். ஆக, இடையிலே இருக்கிற 400 மெகாவாட் எங்கே போகிறது? வீணாகிறது. அல்லது உற்பத்தி செய்யவில்லை என்று தெரிகிறது. ஹைடிரோ ரிசர்வாயர்ஸ் மூலம் உற்பத்தி ஆகக்கூடிய கரண்டை வேண்டுமானால் 'சுச்' போட்டவுடன் இயங்கச் செய்யலாம் அல்லது நிறுத்திவிடலாம். ஆனால் அனல் மின் நிலையங்களில் அப்படிச் செய்ய முடியாது. அப்போது மின்சாரம் வீணாகும். ஹைடிரோ பவர் உற்பத்தி செய்யாவிட்டாலும், நீர்த் தேக்கங்களிலிருந்து விவசாயத்திற்காகத் தண்ணீரை திறந்துவிட வேண்டியிருக்கிறது. ஆகவே, அப்படி விடுகின்ற தண்ணீரிலிருந்து மின்சாரத்தை உற்பத்தி செய்யலாம். உற்பத்தியாகும் மின்சாரத்தைப் பயன்படுத்தாவிட்டால் அது வீணாகும். ஆகவே, இரவு நேரத்திலும் 1,300 மெகாவாட் கரண்ட் கன்சம்ஷன் செய்வதற்கு என்கரேஜ் செய்ய வேண்டும். பெரிய தொழிற்சாலைகளுக்கு கன்சஷன் கொடுத்து, இரவு நேரத்தில் அவர்கள் உற்பத்தியைப் பெருக்கிக்கொள்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். இப்போது கன்சஷன் அவர்களுக்குக் கொடுப்பது போதுமானதாக இல்லை. வீணாகப்போகும் கரண்டை அவர்கள் இரவு நேரங்களில் பயன்படுத்திக்கொள்ளலாம் என்று சொன்னால், எந்த நேரத்திலும் 1,300 மெகாவாட் மின்சாரமும் பயன்படுத்தப்பட்டு, உற்பத்திப் பெருக்கப்படும். அப்படிச் செய்ய



1973 நவம்பர் 20] [திரு. வி. கிருஷ்ணமூர்த்தி]

வேண்டுமானால், இரவு நேரத்தில் அவர்கள் பயன்படுத்தும் மின்சாரத்திற்கு குறைந்தபட்ச விலையை நிர்ணயம் செய்து, கன்ஸ்யூம் செய்வதற்கு கொடுத்து, இரவிலும் பகலிலும் 1,300 அல்லது 1,400 மெகாவாட் மின்சாரத்தைப் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் 'ஈவன் டிஸ்டிரிபியூஷன்' செய்வதற்கான ஒரு கொள்கை வகுக்கப்பட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, மெயின்டினன்ஸ் பற்றி நான் சொல்ல விரும்புகிறேன். எவ்வளவு லோடு, எத்தனை ஹார்ஸ் பவர் இதை எல்லாம் யார் பார்க்கிறார்கள்? ரைஸ் மில் வைத்திருக்கிறார், மோட்டார் எத்தனை ஹார்ஸ் பவர் என்றால், 20 என்கிறார்கள், 15 என்கிறார்கள். விவசாயி தண்ணீர் இறைக்க 5½ ஹார்ஸ் பவர் மோட்டார் போட்டிருப்பதாகச் சொல்கிறார். அவர்கள் அப்படியே குறித்துப் போகிறார்கள்? கன்ஸ்யூமர்ஸ் சொல்வதைக் கேட்டு அப்படியே குறித்துப் போகிறார்களே தவிர அசிஸ்டென்ட் என்ஜினியர், ஜூனியர் என்ஜினியர் எங்காவது போய் அந்த மோட்டார்களை எத்தனை ஹார்ஸ் பவர் உடையது என்று டாங்டெஸ்ட் மூலம் சோதித்திருக்கிறார்களா? கிடையாது. நான் ரைஸ் மில் போட வேண்டும் என்று அனுமதி கேட்டால் 15 ஹார்ஸ் பவர் மோட்டாருக்கு மேல் போட்டால் அனுமதி கிடையாது என்கிறார்கள். என்ன செய்கிறேன், கோவையிலே 25 ஹார்ஸ் பவருக்கு மோட்டாரைத் தயாரிக்கச் சொல்லி 15 ஹார்ஸ் பவர் என்று லேபிள் போட்டுத் தரச் சொல்கிறேன். அன் ஆர்கனைஸ்டு லேபர் உள்ள இடங்களில் அதுபோலச் செய்தும் கொடுக்கிறார்கள். கன்ஸ்யூமர்ஸ் சொல்கிற ஹார்ஸ் பவர் கணக்கை வைத்து இவர்கள் லோடு கணக்குப் போட்டால் எப்படிச் சரியாக வரும்? எப்படி ப்ளாக் மணி ரிசர்வ் பாங்க் கண்டிரோலுக்கு அடங்காமல் விலைவாசி ஏற்றத்தை அதிகப்படுத்திக் கொண்டு வருகிறதோ அப்படி இவர்களால் செக் செய்யப்படாத மோட்டார்கள் எல்லாம் இவர்களது லோட் கணக்கை உருக்குலைக்கிறது. அப்படியின்றி மின்சாரப் பொறியாளர்களைவிட்டே கன்ஸ்யூமர்ஸ் போடுகிற மோட்டார்களின் சக்தியை—லேபிளைப் பார்த்துக் குறித்துக் கொள்ளாது—சோதனை செய்து நிர்ணயித்தால் ரெகுலேடட் லோடு இருக்கும். ஓட்டத்தில் 50 சைக்கிளை உங்களால் நிலைநிறுத்த முடியும்.

[திரு. வி. கிருஷ்ணமூர்த்தி] [1973 நவம்பர் 20

இன்னும் டிரான்ஸ்பார்மர்களை எடுத்துக்கொள்ளுங்கள். அவை எங்கே சரியான முறையில் கண்காணிக்கப்படுகிறது? ஒரு பொறியாளரிடத்தில் எத்தனை டிரான்ஸ்பார்மர்கள்? லோடு மிகமிக அதிகமாக இருக்கிறது. கிராமப்புறங்களில் பவர் போய்விடும். இரவு போய் அந்த டிரான்ஸ்பார்மரில் என்ன வேலை செய்ய முடியும்? அங்கே பாக்சில் க்ளஸ்டர் ஒயர்தான் இருக்கும். எதில் கை வைக்க முடியும்? அங்கே போடுகிற ப்யூஸ் யூனிட் கொட்டேஷன் லோயஸ்ட்—சீப்பஸ்ட். வொர்ஸ்ட். அது எவ்வளவு கரண்டு தாங்கும்? ப்யூஸ் யூனிட் 150 ஆம்பியர் என்பார்கள். 50 கூடத் தாங்காது. மந்திரியோ, மற்றவர்களோ சென்று டிரான்ஸ்பார்மரைத் திறந்து வைத்து வரலாம். மூன்று நாளில் அவுட் ஆகிவிடுகிறது.

இன்னும் பல்புகள், சோக்குகளை எடுத்துக்கொள்ளுங்கள். பஞ்சாயத்து போர்டிலே 30 லைட்டுகள் போட்டால் 3 விளக்குகள் தான் எரிகின்றன. பஞ்சாயத்து போர்டு தலைவர், மெம்பர்கள் மக்களிடத்தில் திட்டு வாங்குகிறார்கள். இதைவிட மோசமான எபிஷியன்ஸி இருக்க முடியுமா? நல்ல சரக்காக வாங்குங்கள், அதிக விலை கொடுத்தாவது வாங்குங்கள். பொதுப் பணியில் ஈடுபட்டிருப்பவர்களுக்கும், வாரியத்திற்கும் இப்படி கெட்ட பெயரை வாங்கித்தர வேண்டாம் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இரண்டாவதாக, மின்சார வாரியத்தில் கணக்காயர்கள் தொந்தரவு பண்ணுகிறார்கள். திரு. ராஜா தான் அவர்களுக்குத் தலைவர். ஒரு பக்கத்தில் மின்சார வாரியம் காண்டிராக்டர்களுக்குப் பணம் கொடுக்க முடியவில்லை. இன்னொரு பக்கம் பேப்பரிலே பார்த்தால் கன்ஸ்யூமர்சுகளுக்கு பில்களே அனுப்பப்படவில்லை, வசூலாக வேண்டிய தொகை 6 கோடி இருக்கும் என்கிறார்கள். 6 மாதங்களாகப் பில் போகவில்லை. மொத்தமாக ஹைறு டென்ஷன் பவர் 50 சதவிகிதம் கொடுத்தால் அதற்கான பணம் வந்துவிட்டது. 50 சதவிகிதம் லோ டென்ஷன் விநியோகம் செய்திருப்பதற்குப் பணமே வரவில்லை. வரவேண்டியது 6 கோடி இருக்கும் என்கிறார்கள். எங்கே கணக்குப் போட்டுப் பார்த்தார்கள்? 30 பில்களுக்கு மேல் கணக்காயர் அலுவலகத்தில் பில்லைத் தொடமாட்டேன் என்கிறார்கள். 60 பில் என்றால் 25 ரூபாய் வைக்க வேண்டும் என்கிறார்கள். என்னுடைய



1973 நவம்பர் 20] [திரு. வி. கிருஷ்ணமூர்த்தி]

கணக்குப் பிரகாரம் சுமார் 12 கோடி ரூபாயாவது வாரியத்திற்கு வரவேண்டியதாக இருக்கும். இதைவிட ஒரு தேசிய நஷ்டம் உண்டா? மின்சார வாரியத்திற்கு ஏற்படக்கூடிய வட்டி நட்டம் எவ்வளவு? மின்சார வாரியத்தில் 9 சதவிகிதத்துக்கு பணம் வாங்குகிறோம். அதுவும் இதுவும் ஈடாகாவாவது வேண்டாமா? நமக்கு வேண்டியவர்களாக இருந்தாலும்—முதலமைச்சர் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிர்வாகத்தில்தான் சென்னை கார்ப்பரேஷன் இருக்கிறது என்றாலும், தவறு என்று சொன்னவுடன் எப்படி அதைக் கலைக்க முன்வந்தார்களோ அதே திறமை, அதே நிலைமை இதில் வரவேண்டும். ஒரு ரூபாய் கூட பாக்கி இல்லாமல் வசூலிக்க முன்வர வேண்டும். அதற்கு என்னுடைய யோசனை—இப்போது 700 சர்விசுக்கு ஒரு பில் கிளார்க், ஒரு கேஷியர் என்று இருக்கிறது. முன்பு அப்படி கிடையாது. அதனால்தான் இப்போது போர்க் கொடியை உயர்த்துகிறார்கள். 8 கோடிக்கு மேல் வசூலாகாமல் மின்சார வாரியம் வட்டி நட்டப்பட்டுக் கொண்டிருக்கிறது. நான் சொல்கிறேன், 350 சர்வீஸ்களுக்கு ஒரு பில் கலெக்டர் -கம்-கிளார்க் போடுங்கள். அவரை உதவி எஞ்சினியரின் கீழ் அமர்த்துங்கள்? பணம் எங்காவது நிற்குமா?

என்ஜினியர் அவர்களுக்கு டிரேட் யூனியன்ஸ் ஆக்டிவிடீஸ் தெரியாது. கும்பல் கும்பல் ஆக வந்து மாலை போடத் தெரியாது. போராட்டங்கள் நடத்தத் தெரியாது. அதன் காரணமாக என்ஜினியர்கள் என்றால் அவர்கள் ஆயிரம் பேர்கள்தானே, பத்து பேர்களைத் திருப்திபடுத்துவதற்குப் பதிலாக பத்தாயிரம் பேர்களைத் திருப்திபடுத்தலாம் என்கிற போக்குதான் இதற்குக் காரணம். கீழே இருக்கிறவர்கள் சரியாக வேலை செய்ய வேண்டுமென்றால் மேலே உள்ள சூப்ரவைசர்கள் நன்றாக இருக்க வேண்டாமா? சூப்ரவைசர், ஏ.இ., டி.இ., ஆகியோர் தெம்பாக செயல்பட ஊக்குவித்தாக வேண்டும். ஜூனியர் என்ஜினியர்களை எல்லாம் அசிஸ்டென்ட் என்ஜினியர்களாகவும், அசிஸ்டென்ட் என்ஜினியர்களை எல்லாம் எக்சிக்யூடிவ் என்ஜினியர்களாகவும் மாற்ற வேண்டும். தமிழகம் பூராவுக்கும் ஒரு அமைப்பு போதாது. இதை நான்கு ஜோனாகப் பிரிக்க வேண்டும். ஒவ்வொரு ஜோனுக்கும் ஒரு சீப் என்ஜினியர் இருக்க வேண்டும். அவர்கள் வாரியத்தில் உறுப்பினர்களாக வேண்டும். அப்படிச் செய்தால்

[திரு. வி. கிருஷ்ணமூர்த்தி] [1973 நவம்பர் 20

நிர்வாகம் சரியாக நடக்கிறதா இல்லையா என்று பார்க்கலாம். இப்படி நான் சொல்வது எல்லாம் சில பேர்களுக்கு கசப்பாக இருக்கலாம் என்றாலும் இதுதான் உடம்புக்கு நல்லது என்று கூறி என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. எ. சுவாமிதாஸ் :** மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, மின்சார வாரியத்தின் 1973-74-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின்மீது எனது கட்சியின் சார்பில் ஒருசில கருத்துக்களை நான் சொல்ல விழைகிறேன். மின்சாரம் நமது நாட்டிற்கு மிகவும் இன்றியமையாத ஒன்று. மின்சாரம் இல்லாவிட்டால் நாடே இயங்காத அளவு ஆகிவிடும் என்பதை அண்மைக காலத்தில் ஏற்பட்ட மின்சாரப் பற்றாக்குறையின் போது நாம் பார்த்தோம். மின்சாரம் இல்லையென்று சொன்னால் விவசாயம் கூட பெருகாத அளவுக்கு நாட்டிலே உற்பத்தி குறைந்து, வறுமை ஏற்படும் என்பதையும் பார்த்தோம். மின்சாரம் இல்லையென்றால், ஆலைகள் இயங்காமல், அதனால் தொழிலாளர்—மற்றவர் பட்டினி இருக்க நேரிடும் என்பதையும் பார்த்தோம். இந்த உணர்வு ஏற்படுவதற்கு இந்த அரசுக்குப் பல ஆண்டுகள் ஆகி விட்டதே என்பதைப் பார்க்கும்போது, அதைச் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது.

ஏனென்றால், காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே எந்த அளவு மின்சார உற்பத்தி ஆகியது? அப்பொழுது, அவர்கள் மின்சார உற்பத்தியிலும் கவனத்தை செலுத்தி, மின்சாரத்தைப் பங்கிட்டுக் கொடுப்பதிலும் கவனத்தைச் செலுத்தி வந்தார்கள். இந்த அரசும் தொடர்ந்து நிலையான நடவடிக்கை எடுத்திருந்தால், மின்சாரப் பற்றாகுறை ஏற்பட்டிருக்காது. மின்சார உற்பத்தியிலே கவனம் செலுத்தாமல், "நாங்கள் மின்சார இணைப்பு கொடுக்கிறோம், கிராமங்களையெல்லாம் ஒளி மயமாக்குகிறோம் என்று சொல்லி," இணைப்பை மட்டும் கொடுத்து, கடைசியிலே இருட்டைக் கொடுக்கக்கூடிய அளவிலே மின்சார வாரியம் செயல்பட்டது என்பதை அண்மையிலே பார்த்தோம் இப்பொழுது ஓரளவு மின்சார உற்பத்தியிலே கவனம் செலுத்த வேண்டுமென்று முன்வந்துள்ளது. நேற்றையதினம் கூட, திடீரென்று ஒரு தீர்மானத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்தார்கள், மத்திய அரசின் கவனத்தைத்



1973 நவம்பர் 20] [திரு. எ. சுவாமிநாதன்]

திருப்புவதற்காக அப்படிக் கொண்டுவந்ததைப் பார்க்கும்போது உண்மையிலேயே மின்சாரப் பற்றாக்குறை நிலைமை தீர்ந்துவிடும் என்ற நம்பிக்கை சற்று ஏற்பட்டிருக்கிறது.

நீர் மின் நிலையத்தைப் பொறுத்த அளவில் தமிழ்நாடு அரசு எங்கு எங்கெல்லாம் நீரைக் கொண்டு மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியுமோ அங்கெல்லாம் முன்னரேயே உற்பத்தி செய்திருக்கிறது.

அனல் மின்சாரத்தைப் பொறுத்த அளவிலே, சமயநல்லூரிலே 14 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்துகொண்டிருந்த நிலையத்தை, மின்சார உற்பத்திக்குச் செலவு அதிகமாகிறது, ஆகவே, மூடி விடுகிறோம் என்று அதையும் விற்றுத் தீர்த்து விட்டார்கள். அதை மூடாமல் வைத்திருந்தால், 14 மெகாவாட் மின்சாரத்தைக் கொண்டு, மதுரை நகரப் பகுதிகளுக்கும், அதன் சுற்றுப்புற பகுதியிலும் உள்ள தொழிற்சாலைகளுக்கும் மின்சாரம் கொடுத்துக் கொண்டு இருக்க முடியும். அதைத்தான் இப்பொழுதும் சொல்கிறோம். நாங்கள் முன்பே சொன்னோம். இந்த மாதிரி மின்சார நிலையத்தை பாழ்படுத்திவிட்டீர்களே என்று. அதிகச் செலவானால் கூடப் பரவாயில்லை, அனல் மின்சார நிலையம் நமக்குத் தேவையாயிருக்கிறது என்பதை இப்பொழுது உணர்ந்து கொண்டிருக்கிறோம். ஆகவே, அந்த உணர்வின் பயனாக சமயநல்லூர் மின்சார நிலையத்தை மீண்டும் ஏற்படுத்த மின்சார வாரியம் முன்வர வேண்டும்.

உற்பத்தி செய்கின்ற மின் நிலையங்களில் சரியாகப் பணிகள் நடைபெறவில்லை என்பதற்கு எடுத்துக்காட்டு எண்ணூர் மின்சார நிலையம். அதைப்பற்றி உறுப்பினர்கள் பலரும் எடுத்துச் சொன்னார்கள். அந்தக் கருத்தைத்தான் நான் மீண்டும் மீண்டும் வலியுறுத்த ஆசைப்படுகிறேன். நேற்றையதினம் இங்கே பேசிய நண்பர்கள் பலர் குற்றச்சாட்டாக அமைச்சர்மீது சொன்னார்கள். சாதாரணமாக எதிர்தரப்பிலே குற்றச்சாட்டுகள் சொல்லும்போது, ஆளும் தரப்பிலே உள்ளவர்கள் மறுப்பு சொல்வது வழக்கம். ஆனால், நேற்று மின்சார இலாகாவின் மீதும், மின்சாரத் துறையை வகிக்கின்ற அமைச்சர் மீதும் பல குற்றச்சாட்டுகள் கூறியபொழுது, எந்தவித பதிலும் வராததைப் பார்க்கும்போது, குற்றத்தை ஏற்றுக்கொண்டார்கள் என்று

[திரு. எ. சுவாமிநாதன்] [1973 நவம்பர் 20

கருதவே முடிந்தது. அதை ஏற்றுக்கொண்ட அந்தப் பண்பைப் பாராட்ட வேண்டும். இன்று எண்ணூர் மின்சார நிலையம் பழுதுபட்டதற்குக் காரணம் நிர்வாகத் திறமையின்மை என்பதை அழுத்தம் திருத்தமாக எடுத்துச் சொன்னார்கள். அதை நான் வலியுறுத்த விரும்புகிறேன். இப்படி ஆனதற்காக என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பது இதுவரையிலே தெரியவில்லை. ஒருவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. மேலும் இம்மாதிரி ஏற்படாமல் இருக்க பாதுகாக்கின்ற பொறுப்பும் கடமையும் இந்த இலாகாவுக்கு இருக்கிறது.

பல குற்றச்சாட்டுகள் உள்ளன. சரியானபடி இந்த அமைப்பு, போர்டு இல்லை, திறமை வாய்ந்த டெக்னிஷியன்கள் இல்லை, அப்பாதுரை போன்றவர்கள் இல்லையென்ற குற்றச்சாட்டுகளை எல்லோரும் சொல்கிறார்கள். ஆளும் தரப்பிலே இருக்கிறவர்களும் சொல்கிறார்கள், எதிர் தரப்பிலே இருக்கிறவர்களும் சொல்கிறார்கள். இதையெல்லாம் புனர் பரிசீலனை செய்யவேண்டும். குறை சொல்ல வேண்டுமென்பதற்காகச் சொல்லவில்லை. இந்த இலாகா நன் முறையிலே இயங்க வேண்டும். அதற்கான வழிவகை அமைக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு இருக்கிறது. காலா காலத்தில் கவனம் செலுத்தாத காரணத்தால்தான் இந்த நெருக்கடி வந்தது.

கோடைக் காலத்திலே அண்டை மாநிலங்களிலிருந்து மின்சாரம் வரவழைப்பது வழக்கம். அதற்காகத்தான் முன்பே கம்பி போடப்பட்டிருக்கிறது. கேரள மாநிலத்திலிருந்து மின்சாரம் பெற்றுக்கொள்வோம், ஆந்திராவிலிருந்து பெற்றுக் கொள்வோம், மைசூரிலிருந்து பெற்றுக்கொள்வோம். ஆனால், இந்த மாதிரி 25 சதவிகிதம் கட் என்று சொல்லி, படிப்படியாக 75 சதவிகிதத்திற்கு போய், இவ்வளவு தூரத்திற்கு பாதிக்கக் கூடிய நிலையை உருவாக்கியதென்பது அந்த வாரியத்தினுடைய கவனக் குறைவுதான் என்பதை நாம் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது.

நாம் கிராமப்புறங்களுக்கு, பல ஆயிரம் கிலோமீட்டர்களுக்கு கம்பியை நீட்டியிருக்கிறோம். ஆனால், கம்பியினால் வரக்கூடிய மின் இழப்பு, 16, 17 சதவிகிதம் ஆகும். இழப்பு, தன்னாலேயே,



1973 நவம்பர் 20] [திரு. எ. சுவாமிநாதன்]

நம்மை அறியாமலே ஏற்படுகிறது. அதிலே ஒரு சதவிகிதத்தை மட்டும் நாம் காப்பாற்றினால், 17 சதவிகிதம் என்று இருப்பதை, 16 சதவிகிதம் என்று குறைத்தால், நம்முடைய இலாகாவிற்கு ரூ. 1 கோடி வருமானம் வரும் என்று அறிஞர்கள் கணக்கிட்டுச் சொல்கிறார்கள். அதிலே கவனம் செலுத்த வேண்டும். இந்தக் கருத்தை முன்பே பலமுறை சொல்லியிருக்கிறேன். மேல் நாடுகளிலே 4 அல்லது 5 சதவிகித இழப்புதான் ஏற்படுகிறது. அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து போன்ற நாடுகளில் 4, 5 சதவிகித இழப்புதான் ஏற்படுகிறது. மின்சார இலாகாவில் சொல்வார்கள், நமது தேசத்தைப் பொறுத்த அளவில், தமிழ் நாட்டிலேதான் 16, 17 சதவிகிதம்; மற்ற மாநிலங்களில் அதிகம் என்று சொல்வார்கள். அதை ஒப்புக்கொள்ள முடியாது. நாம் பல துறைகளிலே மற்ற மாநிலங்களைவிட முன்னேறிக் கொண்டிருக்கிறோம். அதேபோல் இழப்பைக் குறைக்க முற்பட்டால் லாபம் அதிகம் வரும் என்பதை எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நாம் மின்சார வழங்கு விழா கொண்டாடுகிறோம். ஒளி வழங்கு விழா கொண்டாடுகிறோம். எனக்கு அதனுடைய கருத்து விளங்கவில்லை. ஒரு பக்கத்திலே விழா கொண்டாடிவிட்டு, மறு பக்கத்திலே அடிக்கடி விளக்கு அணைத்து விடுகிறது. வீட்டிலே சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது விளக்கு அணைந்து விடுகிறது. இதற்குப் பொறுப்பு யார்? ஏன் இந்த நிலைமை என்பதை அரசு பார்த்ததாகத் தெரியவில்லை. கிராமங்களில் மட்டுமல்ல, பட்டணங்களில்கூட திடீர் திடீரென்று மின்சாரம் நின்றுவிடுகிறது. அப்படி இருக்கக் கூடாது. மின்சாரம் என்றால், ஒரு ஜெனரேட்டரை மாற்றுவதற்கு சிறிது நேரம் ஆகும். அதையெல்லாம் நாங்கள் ஒத்துக்கொள்கிறோம். ஒன்றிலிருந்து, இன்னொன்றிற்கு கனெக்ஷன் கொடுப்பதற்கு சில நிமிஷங்கள் ஆகலாம். இருந்தாலும் இப்பொழுது அப்படி இல்லை. எந்த நேரத்திலே மின்சாரம் தடைப்படுகிறது, எந்த நேரத்திலே மின்சாரம் வருகிறது என்பதை அறியாத நிலையிலே இந்த இலாகா தூங்குகிறதா என்று தெரியவில்லை. கிராமங்களெல்லாம் ஒளி மயம் என்று சொல்கிறார்கள். 10, 15 கம்பங்கள் போட்டு, சுவிச் ஆன் பண்ணி, ஒளி விழா எடுக்கிறோம். சில மாதங்களிலேயே, 4 கம்பங்களில்தான் விளக்கு எரியும். மற்றக் கம்பங்களில் பல்புகள் எரியாது, வெளிச்சம் இருக்காது. என்ன விழா? சில இடங்களிலே பஞ்சாயத்து

[திரு. எ. சுவாமிநாதன்] [1973 நவம்பர் 20

எல்லைக்குள் 10, 12 மணிக்குப் பிறகு விளக்கு அணைக்கப்படும் என்று இருக்கிறது. ஆனால், எங்கும் அது அமுலில் இருக்காது. சில இடங்களில் இரவு பூராவும் விளக்குகள் எரிந்து கொண்டிருக்கிற காட்சியைப் பார்க்கலாம். சில பஞ்சாயத்துக்களில் விளக்கு இல்லாத காட்சியைப் பார்க்கலாம். சரியான நிலையிலே விளக்குகள் இல்லை. பல்புகள் கிடையாது. பல்பு இல்லையென்று சொன்னால், பஞ்சயாத்திடம் போய் சொல்ல வேண்டும். அவர்கள் அதிகாரிகளிடம் சொல்லவேண்டுமென்று சொல்வார்கள். அதிகாரிகளிடம் சொன்னால், மெட்ராஸிலிருந்து பல்புகள் வந்து சேரவில்லை என்று சொல்வார்கள். எங்களது ஊரில் தக்கலைதான் சப் ஆபீஸ். அங்கு போய் கேட்டால், பல்ப் வரவில்லையென்று சொல்வார்கள். அரசாங்கத்திடம் கேட்டோம். பல்ப் வரவில்லையென்று சொல்வார்கள். இவ்வளவு கோடியைப் போட்டு மின்சாரம் வழங்கும்போது, பல்ப் உற்பத்தி செய்கிற ஆலையை நாம் ஏன் தொடங்கக்கூடாது? பலமுறை இதே கருத்தைப் பல உறுப்பினர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதிலே இன்னும் கவனம் செலுத்தவில்லை. பல வருஷங்களாக நான் சொல்லிக்கொண்டே வருகிறேன். மின்சார பல்புகளை நாமே உற்பத்தி செய்கிற அளவில் தொழிற்சாலையை ஏன் தொடங்கக்கூடாது? அவ்வாறு செய்தால் நமக்கு மலிவான விலையிலே தரமான மின்சார பல்புகள் வேண்டிய அளவில் கிடைப்பதற்கான வழி ஏற்படும். எனவே அரசாங்கம் இதிலே உடனே கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[நண்பகல் 12-00]

பல உறுப்பினர்கள் பல குறைபாடுகளைக் குறித்து இங்கே பேசினார்கள். மின்சாரம் எதற்குக் கொடுக்க வேண்டும், எதற்குக் கொடுக்கக்கூடாது என்பதை நாம் சரியாக வைத்துக்கொள்ள வேண்டும். முக்கியமானவற்றிற்குத்தான் மின்சாரம் கொடுக்க வேண்டும், விழாக்களுக்கு நிறைய மின்சாரம் கொடுக்கப்படுகிறது, சில இடங்களிலே ஆயிரக்கணக்கான லைட்டுகளைப் போட்டு ஆடம்பரமாக ஏற்பாடு செய்கிறார்கள், அதைப் பார்த்தால் கண்ணுக்குக் குளிர்ச்சியாகத்தான் இருக்கிறது, ஆனால் அது முக்கியமா என்பதைப் பார்க்க வேண்டும், இங்கே விவசாயிகள் மின்சாரம் கிடைக்கவில்லையே என்று கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கின்றார்கள். இந்த நிலையில் விழாக்களுக்கு மின்சாரம் கொடுக்கக்கூடாது என்று கண்டிப்பாக வைத்துவிட வேண்டும்.



1973 நவம்பர் 20] [திரு. ஏ. சுவாமிதாஸ்]

பயன் இல்லாதவற்றிற்கு மின்சாரம் கொடுக்கக்கூடாது என்ற நிலையை ஏற்படுத்த வேண்டும். இலட்சக்கணக்கான யூனிட் மின்சாரம் இப்படிப் பாழ்படுத்தப்படுகிறது, தேவையான அளவிற்கு வீட்டுக்கு மின்சாரம் கிடைப்பதில்லை, விவசாயிகளுக்குக் கிடைப்பதில்லை, சிறு சிறு தொழில்களுக்குக் கிடைப்பதில்லை, இந்த நிலையில் எது எதற்கு முக்கியமாகக் கொடுக்க வேண்டுமோ அதற்குத்தான் மின்சாரம் கொடுக்க வேண்டும். ஆடம்பரமான விழாக்களுக்குக் கொடுக்கக்கூடாது என்பதைத் தெளிவாக்கிவிட வேண்டும்.

மின்சார வெட்டு ஏற்பட்ட காலத்திலே இந்த அரசாங்கம் கரும் சந்தையிலே மின்சாரத்தை வியாபாரம் செய்தது குறித்து பத்திரிகையிலே வந்த செய்திகள் மட்டுமல்ல, பொறுப்பு வாய்ந்த ஒரு மத்திய அமைச்சரேகூட கூறியிருக்கிறார். நேற்றைய தினம் டாக்டர் ஹாண்டே அவர்கள்கூட இங்கே. அந்தக் கருத்தைப்பற்றிக் கூறிய நேரத்திலே அது சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்கள் பதிலே சொல்லவில்லை; நான்கூட உண்மையாக இருக்கும் என்று நினைக்கிறேன். உண்மையா பொய்யா என்பதை இந்த உலகமும், பொதுமக்களும் அறிந்து கொள்ள ஆசைப்படுகிறார்கள். எனவே அதைப்பற்றித் தெளிவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதுகுறித்து விசாரணை செய்ய வேண்டும். ஒரு அதிகாரியைப் போட்டு விசாரணை செய்து அந்த அறிக்கையை இந்த மன்றத்திலே வைக்க வேண்டும்.

மின்சாரத்தைப் பொறுத்துத்தான் மாநகராட்சியிலேகூட ஊழல் நடந்திருக்கிறது. அங்கேயும் நம்முடைய அமைச்சர் அவர்களுடைய இலாகாவிலேதான் இத்தகைய ஊழல்கள் நடந்திருக்கின்றன. இந்த அமைச்சர் கொஞ்சம் சாந்தமானவர், பார்ப்பதற்கே அப்பாவியாக இருக்கிறார், அந்தக் காரணமாகத்தானோ என்னவோ இப்படி ஊழல்கள் ஏற்பட்டிருக்கின்றன. அதுமட்டுமல்ல, அவர்கள் பார்க்கிற இன்னொரு இலாகாவான வன இலாகாவிலும் எங்கள் மாவட்டத்தில் ஊழல்கள் நடந்திருக்கின்றன. அங்கே மூன்று லட்சம் ரூபாய் மதிப்புள்ள தடிகள் அதிகாரிகளால் மோசடி செய்யப்பட்டிருக்கின்றது. சில அதிகாரிகளை சஸ்பெண்ட் செய்திருக்கிறார்கள். அது

போதாது, டிஸ்மிஸ் செய்ய வேண்டும். வன இலாகாவைப்பற்றி இந்த நேரத்தில் சொல்வதற்கு என்னை மன்னிக்க வேண்டும். இதைச் சொல்ல எனக்கு வேறு நேரம் கிடைக்காது. லட்சக் கணக்கான ரூபாய் மதிப்புள்ள தடிகளைக் களவு செய்துவிட்டு. . .

**திரு. நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, மின்சாரத் துறை அமைச்சர் ஒரு அப்பாவி மாதிரி இருக்கிறார் என்று கனம் உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள், இது சரியா? என்னதான் அமைச்சர்மீது கோபம் இருந்தாலும் அவர் சொல்வது சரியல்ல, அதை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து எடுத்துவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர்கள் அப்படிச் சொல்வது பொதுவாக நல்லதல்ல.

**திரு. எ. சுவாமிதாஸ்:** அவர் பாவம் செய்யாதவர் என்ற முறையில் அவரை அப்பாவி என்று சொன்னேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பாவி அல்ல என்று சொன்னாலும், 'அ' வைச் சேர்த்துச் சொன்னாலும், சேர்க்காமல் சொன்னாலும் அப்படிச் சொல்வது நல்லதல்ல, அது வேண்டாம்.

**திரு. எ. சுவாமிதாஸ்:** சரி. வன இலாகாவிலே தடிகளை அதிகாரிகளே களவுசெய்து விற்றுவிடுகிறார்கள். பின்னர் தீ வைத்து விடுகிறார்கள். இதைப்பற்றி விசாரிப்பதற்கு ஒரு விசாரணைக்குழு போடவேண்டும். இன்னும் சிலவற்றைச் சொல்லி விட்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

எங்கள் பகுதியிலே கோதையாறு ஒன்று, இரண்டு என்று இரண்டு மின்சாரத் திட்டங்கள் இருக்கின்றன, அதிலே 100 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்வதாகத் திட்டம் இருக்கிறது. ஆனால் அங்கே 40 மெகாவாட் தான் உற்பத்தியாகிறது என்று அறிக்கையிலே பார்க்கிறேன். அப்பர் கோதையாறிலிருந்து 60 மெகாவாட்களும், லோயர் கோதையாறிலிருந்து 40 மெகா வாட்டுகளும் வரும் என்று எதிர்பார்த்தால் இப்பொழுது 40 மெகாவாட்தான் வருகிறது என்று சொல்கிறார்கள். மீதி 60 மெகாவாட் எங்கே போயிற்று என்பதை அவர்கள் சொல்ல



வேண்டும். அமைச்சர் அவர்களிடமிருந்து இந்த இலாகாவை எடுத்துவிட்டு வேறு இலாகாவை அவர்களுக்குக் கொடுக்க வேண்டும். அவர்கள் மந்திரி சபையைவிட்டுப் போக வேண்டுமென்று நான் சொல்லமாட்டேன். அவர்களுடைய போர்ட் போலியோவை மாற்ற வேண்டும். மின்சார போர்டையும் கொஞ்சம் மாற்றிப் புனர் அமைப்பு செய்ய வேண்டும். திறமை வாய்ந்த அனுபவம் வாய்ந்த அப்பாதுரை போன்றவர்களைக் கலந்து கொண்டு இந்தத் துறையை நல்லமுறையிலே நடத்தி இந்த நாட்டை ஒளிமயமாக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

***திரு. எம். சுரேந்திரன்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இங்கே சபைமுன் வைத்திருக்கக்கூடிய மின்சார வாரியத்தினுடைய வரவு செலவுக் கணக்கு சம்பந்தமாக நான் ரூபாய் அணு பைசாவுக்குச் செல்லாமல் பொதுவாகச் சில விவரங்களை மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்தப் பகுதியிலிருந்து பேசுகின்ற எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எல்லாம் சொல்கின்ற வாதத்தைவிட ஆளுங்கட்சியிலிருந்து பேசுகின்றவர்கள் சொல்கின்ற வாதம் இன்னும் எடுபடக்கூடியதாக இருக்கும் என்ற முறையிலேதான் இன்றைக்கு திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் மின்சார வாரியத்தைப்பற்றி மிக அழகாக, புள்ளி புள்ளியாக பல விவரங்களைக் கூறினார்கள். இந்த விவரங்களுக்கு மேல் புதிதாக யாரும் ஒன்றும் கூறமுடியாது என்று நான் நினைக்கிறேன். அவர்கள் அந்த வாரியத்தில் உள்ளே நடந்துகொண்டிருக்கின்ற நிகழ்ச்சிகள்பற்றிக் கூறியது அந்த நிகழ்ச்சிகள் எல்லாம் வெளியே இன்றைக்கு விவாதத்திற்குரியவையாகிவிட்டன என்பதைத்தான் காட்டுகிறது. இதைப்பற்றித் தீவிரமாக யோசிக்க வேண்டிய நிலைமைக்கு அரசு வந்துவிட்டது என்பதைத்தான் அவருடைய வாயிலிருந்து வந்த கருத்துக்கள் காட்டுகின்றன. இந்த நிலையில் சபையிலே சொல்லப்படுகின்ற விஷயங்கள் எல்லாம் கவனிக்கப்படும், வருங்காலத்திலே குறைபாடுகள் இல்லாமல் மாற்றப்படும் என்பதை ஏற்றுக்கொள்கிறார்கள் என்று நினைக்கிறேன்.

எப்படியிருந்தாலும்கூட இந்த அரசாங்கம் இந்த மாநிலம் முழுவதும் கண் ஒளி, மின் ஒளி பெரும் முயற்சியை மேற்கொண்டார்கள் என்பது இந்தச் சபையிலே உள்ள

[திரு. எம். சுரேந்திரன்] [1973 நவம்பர் 20

அனைவருக்கும் தெரியும். ஆனால் அந்த கண்ணொளிக்கும், மின்னொளிக்கும் விளம்பரங்கள் செய்ததைப்போல் அதிலே பலன்கள் ஏற்பட்டிருக்கின்றனவா என்று பார்த்தால் பலன்களைவிட விளம்பரங்கள்தான் அதிகமாக ஏற்பட்டிருக்கின்றன. கண்ணொளி மின்னொளி விஷயத்திலே சரியாக இல்லையென்றுதான் தெரிகிறது. இந்த மாநிலத்திலே 75 சதவீதம் மின்சார வெட்டு வந்ததைப் போல் வேறு எந்த மாநிலத்திலும் வரவில்லை. மின்சார வெட்டு என்பது திடீரென்று வந்துவிடக்கூடிய ஒன்று அல்ல. அது வருவதற்கு முன்னதாகவே அதற்கான அறிகுறிகள் தென்படும். இதிலே சம்பந்தப்பட்டவர்களுக்கு அது எல்லாம் தெரியும். அதைத் தெரிந்துகொண்டு முறையாகச் செயல்பட்டிருந்தால் மாற்று ஏற்பாடுகளைச் செய்திருந்தால் இந்த நிலைமை ஏற்பட்டிருக்காது. இதிலே அவர்களுக்கு கண்ணொளி போதவில்லை என்பதைத்தான் நமக்கு அனுபவம் எடுத்துக் காட்டுகிறது. 75 சதவீதம் வெட்டு ஏற்படுவதற்கு முன்பு என்ன என்ன நிலைமைகள் இருந்தனவோ அந்த நிலைமைகள் இப்பொழுதும் இருக்கின்றன. மழையில்லாமல்போய், தண்ணீர் இல்லாமல்போய் மின்சாரம் போதாமல் போய்விட்டது என்று சொன்னார்கள். ஆனால் இன்றைக்குத் தண்ணீர் நிரம்பிவிட்டது. ஆனால் எல்லா இடங்களிலும் மின்சாரம் பழைய நிலைமையிலே இருக்கிறதா, அந்த நிலைமையைவிட இப்பொழுது மின்சாரத்தின் தேவை மிகவும் அதிகமாகியிருக்கிறதா என்று பார்த்தால் அப்படியும் தகவல் இல்லை. அவ்வாறிருக்கும்பொழுது இன்றைக்கு 15 சதவிகிதம் வெட்டு என்று வைத்திருக்கிறோம். இதிலேகூட ஒரு நியாயமான வாதம் இருக்கிறதா என்று பார்த்தால் இதிலும்கூட நியாயமான வாதம் இல்லை. 15 சதவிகித வெட்டிலே விவசாயிகளுக்கு 6 மணி நேரம் மின்சாரம் வராது. இப்படி விவசாயிகளுக்கு 6 மணி நேரம் மின்சாரம் வரவில்லை என்று சொன்னால் அது 25 சதவிகிதம் வெட்டாக ஆகிறது. மின்சாரம் இருப்பதிலே அவர்கள் எடுத்துக்கொள்வதிலே 15 சதவிகிதம் குறைவு என்று சொல்லப்படுகிறது. ஆனால் விவசாயிகளுக்கு அப்படிப்பட்ட நிலைமையில்லை. 6 மணி நேரம் மின்சாரம் அவர்களுக்கு இல்லை. இதிலிருந்து 15 சதவிகிதம் வெட்டு என்ற வாதம் எப்படிப் பொருந்தும் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. எனவே, வாதத்திற்கும், சொல்லுகின்ற



1973 நவம்பர் 20] [திரு. எம். சுரேந்திரன்]

செய்திக்கும், இருக்கின்ற உண்மைக்கும் மாறுபாடான முறைகளிலே கடந்த சில காலமாக மின்சார வாரியம் நடக்கிறது.

சில ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு கேள்விக்கு அமைச்சரவர்கள் பதில் கூறினார்கள். நான் கூறினேன், மேட்டூர் போன்ற இடங்களிலே மின்சார விளக்குகள் அவ்வப்பொழுது கெட்டுப் போய்விடுகின்றன, அங்கே மின்சார விளக்குகள் சரியாக எரிவதில்லை. மின்சாரம் உற்பத்தி செய்யப்படும் இடத்திலேயே மின்சார விளக்குகள் சரியாக எரியவில்லை என்றால் அது அந்தப் பகுதியிலே இருப்பவர்களின் உள்ளத்திலே எப்படிப் போய்த் தைக்கும் என்பதை அரசாங்கம் உணர வேண்டுமென்று கூறினேன். அப்பொழுது அமைச்சரவர்கள், அங்கே 'வோல்டேஜ்' போதாமல் இப்படி ஏற்பட்டிருக்கலாம், அதற்கு நாங்கள் வேறு ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறோம், விரைவில் அது நிறைவேறி அவ்வளவு பேருக்கும் முழுமையாக மின்சாரம் கிடைக்கும் என்று சொன்னார்கள். அவர்கள் அவ்வாறு சொன்ன பிறகும் இருக்கின்ற நிலைமை என்ன? அங்கே டியூப் லைட்கள் எரியவில்லை. ஆளுங் கட்சியைச் சேர்ந்தவர்கள் மற்ற பல இடங்களில் எரியவில்லை என்று சொல்கிறார்கள். ஆனால் இங்கே, மின்சாரம் உற்பத்தி செய்யப்படும் மேட்டூரிலேயே டியூப் லைட்கள் எரியவில்லை, தெரு விளக்குகள் எரியவில்லை. அதை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்கிறார்களா என்றால், அப்படி ஒரு நடவடிக்கை எடுக்க ஏற்பாடு இல்லை என்று விசாரித்ததிலிருந்து தெரிகிறது. ஆகவே, மின்சார வாரியம் விளக்குகள் தருகின்றோம், வெளிச்சம் தருகின்றோம், ஊரெல்லாம் தருகின்றோம் என்று சொல்லும் அதே நேரத்திலே, எப்படி 15 சதவிகிதம் வெட்டு என்று சொல்லும் அதே நேரத்திலே விவசாயிகளுக்கு 6 மணி நேரம் வெட்டு என்று சொல்வது மாதிரி, மின்சாரம் தருகிறோம், விளக்குகள் தருகிறோம் என்று சொன்னாலும், வெளிச்சம் இல்லை, விளக்குகள் பல இடங்களில் எரியவில்லை என்பதுதான் உண்மை என்பதைத் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதுமட்டுமல்லாமல், ஆழ்ந்து பரிசீலிக்காமல், மாநிலம் முழுவதும் மின்சாரம் தருகிறோம், எல்லா ஊர்களுக்கும் மின்சாரம் தருகிறோம் என்று சொன்னார்கள். எவ்வளவு மின்சாரம்

[திரு. எம். சுரேந்திரன்] [1973 நவம்பர் 20

இருக்கிறது, எவ்வளவு விநியோகம் செய்ய முடியும் என்று பார்க்காமல், அம்மாதிரி அறிவிப்பைச் செய்து அதிலேயே பூரித்துப் போன அரசாங்கமாக இது இருக்கிறது. அங்கே கம்பங்கள், கம்பிகள், கன்டென்சர்கள் எவ்வளவு ஆகும் என்பதை மட்டும் கணக்கிட்டு, திட்டமிட்டுச் செய்திருக்கிறார்கள். ஆனால் இன்றையதினம் நாம் என்ன பார்க்கிறோம் என்றால், கம்பங்கள் இல்லை கம்பிகள் இல்லை என்று சொல்கிறார்கள். இப்பொழுதுகூட அரசாங்கத்திலே சொல்வது என்னவென்றால் எங்கே வேண்டுமானாலும் மின்சார இணைப்புக் கிடைக்கும் என்று சொல்கிறார்கள். ஆனால் பல இடங்களில் மின்சார இணைப்பு கிடைக்கவில்லை. ஆனால் இதை சட்டபூர்வமாக, உத்தியோக பூர்வமாக அறிவிக்கவில்லை. ஆனால் உத்தியோகப் பூர்வமாக நிதானப்படுத்திக் காரியங்களைச் செய்கிறார்கள். சிறு தொழில்களுக்கும், விவசாய மோட்டார்களுக்கும் மின்சார இணைப்பு கிடைக்கவில்லை. புது கிராமங்களில் மின்சாரக் கம்பங்கள், கம்பிகள் போட்டிருக்கும் இடங்களில் இணைப்புக் கிடைக்கவில்லை. அங்கேயுள்ள அதிகாரிகளை நெருங்கி விசாரித்தால், தனிப்பட்ட முறையிலே அவர்கள் சொல்வது என்னவென்றால், புதிதாகக் கொடுக்க வழியில்லை, ஆறு மாதங்களுக்கு இப்படித்தான் இருக்கும் என்று சொல்கிறார்கள். ஆனால் டி.டி.சி. போன்ற கூட்டங்களிலே பகிரங்கமாகக் கேட்கும்பொழுது, அப்படியில்லை. எல்லோருக்கும் தருகிறோம் என்று சொல்கிறார்கள். இதுதான் இருக்கின்ற நிலைமை. ஆகவே, சட்டபூர்வமாக அறிவிப்பது ஒன்று, ஆனால் நடக்கின்றது ஒன்று என்ற முறையிலே மின்சார வாரியம் அங்கங்கே இருக்கிறது. இது வரவேற்கக்கூடியதல்ல, நல்லதல்ல என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதேபோன்று எண்ணூரைப் பற்றி எடுத்துக்கொண்டால் அங்கே நெருப்பு பற்றி எரிந்தது. அந்த நேரத்தில் அகஸ்மாத்தாக நான் அமைச்சரைப் பார்க்க வேண்டியிருந்தது. அந்த நேரத்திலே அவரிடத்திலே கேட்டேன். நெருப்புப் பிடித்து அங்கே மின்சார உற்பத்தி குறைந்து போயிருக்கிறது என்ற தகவல் வந்திருக்கிறதே, அது உண்மையா என்று கேட்டேன். இல்லை இல்லை. மின்சாரம் உற்பத்தி செய்யும் சாதனங்கள் எதுவும் எரியவில்லை, டிரான்ஸ்பார்மர்தான் எரிந்திருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால் அங்கே இன்றையதினம் மின்சாரம் உற்பத்தியாகிறதா என்று பார்க்கும்பொழுது, மின்சார



1973 நவம்பர் 20] [திரு. எம். சுரேந்திரன்]

சாதனம் எப்படி கெட்டிருக்கிறது, எவ்வளவு நாட்களிலே சரிப்படுத்த முடியும் என்று அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். 130 மெகாவாட் அங்கே உற்பத்தியாகிறது என்ற தகவல் வருகிறது. 450 மெகாவாட் உற்பத்தியான இடத்திலே 130 மெகாவாட் உற்பத்தி செய்யப்படுகிறது என்ற தகவல் கிடைக்கிறது. இதுகூட சரியா இல்லையா என்று தெரியாது. ஆனால் கிடைக்கின்ற தகவலை இந்தச் சபையில் வைப்பதன் மூலமாக அதிலேயிருக்கும் ஒழுங்கீனங்களைத் திருத்த அது வழியாகுமே என்றுதான் இங்கேயுள்ள உறுப்பினர்கள் இந்தச் சபையில் பிரச்னைகளை வைக்கிறார்கள். அதை அந்தக் கண்ணோட்டத்திலே பார்த்துத் திருத்த வேண்டுமே தவிர, ஏதோ எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் சொல்கிறார்கள் என்பதற்காக, அவர்களுக்குச் சமாதானம் சொல்கின்ற முறையிலே அமைச்சர் இந்தப் பிரச்னையைப் பார்க்கக்கூடாது என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இப்பொழுது நாம் பார்க்கிறோம். கேரளாவிலிருந்து மின்சாரத்தை நாம் வாங்குகிறோம். அதற்கு 9.4 காசு ஆகிறது என்று பத்திரிகையிலே செய்தியைப் பார்த்தோம். ஆனால் சமயநல்லூரிலே இருந்து அந்த மின்சார அமைப்பை ஏன் விற்றுவிட்டோம் என்று கேட்டால், அதில் மின்சார உற்பத்திக்கான செலவு மிகவும் அதிகமாகிறது, ஆகவே விற்றுவிட்டோம் என்று சொல்லப்படுகிறது. ஆனால் இன்றைக்கு மின்சாரத்தை வாங்கும்பொழுது விலை எவ்வளவு ஏறியிருக்கிறது என்பதை இப்பொழுது எண்ணிப்பார்க்கும்பொழுது அவ்வாறு செய்தது புத்திசாலித்தனமான காரியம்தானா, சரியான காரியம்தானா, தப்பான காரியம் இல்லையா என்று எண்ணிப் பார்க்க வேண்டிய நிலைமை உண்டாகியிருக்கிறது. ஆகவே, ஒரு மின்சார அமைச்சராகட்டும், ஒரு மின்சார வாரியமாகட்டும், இன்றைக்கிருக்கும் நிலைமைகளை மட்டும் வைத்துப் பார்த்து, தீர்மானத்திற்கு வருவது, அதை நடத்த முற்படுவது இயற்கையாகவும், செயற்கையாகவும் உள்ள நிலைமைகளைக் கணக்கிடாமல், மாநிலம் முழுதும் மின்சாரம் தருகிறோம் என்று சொல்லி விழாக்களை நடத்தியது எவ்வளவுதூரம் கண்ணொளி சரியாக இல்லாததால் ஏற்பட்டது என்பதை அறிகிறோம்.

அதேபோன்று, வாரியத்தில் இருக்கின்ற நிலைமைகளைப் பார்க்கும்பொழுது வாரியம் சரியாக ஏன் நடக்கவில்லை என்றால் பிரதான காரணமாகப் பலபேர் காரணங்களைச் சொல்கிறார்கள்.

எப்படியிருந்தாலும் ஒரு காரணம் தெளிவாகத் தெரிகிறது. 1967–68 ஆம் ஆண்டு வரையிலேயும் மின்சாரத் துறையிலே பயிற்சி பெற்றவர்கள் அந்த போர்டின் தலைவராக இருந்தார்கள். அதற்குப் பிறகு ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் வரிசையாகத் தலைவர்களாக வந்திருக்கிறார்கள். இப்படி 1967-68 ஆம் ஆண்டிற்குப் பிறகு 6 பேர்கள் மாற்றப்பட்டிருக்கிறார்கள் என்று தெரிகிறது. ஒரு வாரியத்தின் தலைவராகச் செல்பவர்கள் இன்னொரு துறையிலேயிருந்து அங்கே செல்கிறார்கள். பிறகு அந்தத் துறையைப் பற்றிச் சரியாக புரிந்துகொண்டு செயல்படுத்தக்கூடிய வாய்ப்பு ஏற்பட வேண்டுமானால் சில நாட்கள், சில வருஷங்கள்கூட ஆகலாம். ஆனால் இப்படி 6 பேர்களை மாற்றியிருக்கிறார்கள். அங்கே சென்று அவர்கள் பயின்று எப்படியெப்படி மாற்றியமைக்கலாம் என்று தீர்மானிப்பதற்கு முன்னால் மாற்றிவிட்டார்கள் என்றால், அங்கே காரியங்கள் எப்படி ஒழுங்காக நடக்கும்?

அதுமட்டுமல்லாமல், மின்சாரம் என்று சொல்லும்பொழுது அதில் நுணுக்கமான கல்வியறிவு உள்ளவர்கள்தான் ஈடுபட வேண்டுமே தவிர, ஏதோ நிர்வாகத்தை நடத்துபவர்கள், நிர்வாகத்தைப் புரிந்துகொண்டவர்கள், ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் அங்கே இருப்பது அவ்வளவு சரியானதுதானா என்று சிந்திக்க வேண்டிய காலகட்டம் வந்திருக்கிறது. இப்படி ஐந்தாறு பேர்களை மாற்றியிருக்கிறார்களே, இவர்களிலே யார் யார் சொள்ளை சொட்டை என்று பார்த்தால், இந்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் மற்றத் துறைகளிலே தலைமை வகித்துக் காரியங்களை நல்ல விதத்திலே செய்திருக்கிறார்கள். ஆனால் அவர்கள் மின்சார வாரியத்தில் தலைமைக்கு வந்ததும், அவர்களில் பெயரும் கெட்டு, திறமையும் கெட்டு, ஆற்றலும் கெட்டுப்போய், அந்த வாரியமும் கெட்டுப் போகும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்ற உண்மையைப் பார்க்கிறோம். ஆகவே, இது சம்பந்தமாக ஆராய வேண்டியது மிகவும் அவசியமான ஒன்றாகும் என்று இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதேபோன்று, 'சீப் எஞ்சினியர்' ஒருவராக இருந்ததை இப்பொழுது 5 சீப் எஞ்சினியர்கள் என்று மாற்றப்பட்டிருப்பதாக அறிகின்றேன். இப்படி 5 சீப் எஞ்சினியர்களாக மாற்றுவதிலே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சொன்னதைப்போல பகுதி பகுதியாகப் பிரித்து 5 பேர்களிடமும்





பொறுப்புகளை ஒப்படைத்திருந்தால் அது சிறந்ததாக இருந்திருக்கும். அப்படியில்லாமல் ஒரே இடத்தில் அதே தலைமையகத்தில் ஐந்து பேர்களும் உட்கார்ந்து காரியங்களைச் செய்வது சரியானதுதானா, அவசியமானதுதானா என்று ஆராய்ந்து பார்க்க வேண்டிய நிலைமை வந்திருக்கிறது.

இன்னொரு குறிப்பிட்ட விஷயம். அது நம் மின்சார விநியோகத்தில் ஏற்படும் சேதம் பற்றியதாகும். இந்த சேதம் 57, 58, 59 என்ற வகையில் கணக்கிட்டுப் பார்க்கும்போது 13.5 ஆகத்தான் இருந்தது. பிறகு 15.5 ஆக இருந்திருக்கிறது. இன்று அது 17.5 ஆக உயர்ந்து சுமார் பத்தாண்டுக் காலமாக தொடர்ந்து இருந்து வருகிறது. இதைக் குறைப்பது அல்லது அதிகப்படுத்துவது என்று இல்லாமல் ஒரே நிலையில் இவ்வளவு நாட்களாக எப்படி இருந்து கொண்டிருக்க முடியும் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. ஆக, கணக்குப் பார்த்துப் போடாமல் குத்துமதிப்பாக கிராம அதிகாரிகள் அல்லது கிராம கர்ணங்கள் கணக்கைப் போல் வைத்திருக்கிறார்கள். பழைய காலத்தில் ஒரு நிலத்தை புறம்போக்கு அல்லது நத்தம் புறம்போக்கு என்று எழுதி வைத்தால் அது அப்படியே தொடர்ந்து கொண்டு இருப்பதுபோல். அந்த நிலத்தினை விவசாயம் அல்லது வேறு காரியங்களுக்குப் பயன்படுத்தினாலும் கணக்குப் புத்தகத்தில் மாற்றம் இல்லாமலிருப்பதைப் போல் இங்குள்ள மின்சார வாரியமும் இம்மாதிரிக் கணக்குகளை ஏதோ குத்துமதிப்பாகப் போட்டுவிடுகிறார்களோ என்றே சந்தேகம் எழுகிறது. ஆக நாள் ஆக ஆக நம் அறிவு, தொழில் நுணுக்கம், ஆற்றல், திறமை, மூலதனம் இவையெல்லாம் வளர்கிறபோது இம்மாதிரியான சேதங்களில் குறைவு ஏற்பட வேண்டுமே தவிர அது அதிகமாகாமலும் குறையாமலும் ஒரே இடத்தில் இருப்பது என்றால் அதைப்பற்றி நாம் ஆராய வேண்டும். ஏற்படுகிற சேதத்தினைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை விரைவில் எடுத்துக்கொள்ள வேண்டும். (மணியடிக்கப்பட்டது.)

ஒரு விஷயத்தைப்பற்றி மட்டும் கூறிக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன். நாம் விநியோகிக்கிற மின்சாரம் இருக்கிறதே அது பல்வேறு விதமான காரியங்களுக்காக உபயோகப்படுத்தப்படுகிறது. அதில் வீட்டுக் காரியங்களுக்காக அல்லது சிறிய காரியங்களுக்காக உபயோகப்படுத்தப்படுகிற

மின்சாரத்திற்குக் கட்டணம் யூனிட் ஒன்றுக்கு 34 பைசா என்றிருக்கிறது. இந்தக் கட்டணத்தை நாம் சாதாரண மக்களிடமிருந்து வசூலிக்கிறோம். ஆனால் தொழிற்சாலைகள் நடத்துபவர்களிடமிருந்து நாம் வசூலிக்கும் கட்டணம் எவ்வளவு குறைவானதாக இருக்கிறது என்பதை கணக்கில் எடுத்துப் பார்க்க வேண்டும். முன்பிருந்ததை விட இப்போது மின்சார உற்பத்தியின் செலவும் அதிகமாகியிருக்கிறது. இப்போது வெளியிலிருந்து வாங்கும் மின்சாரத்திற்கான செலவும் அதிகமாகியிருக்கிறது. இப்படி அதிகமாகியிருக்கும்போது தொழிற்சாலைகளை நடத்துபவர்களிடமிருந்து ஒன்றரை பைசாவிலிருந்து ஆறு பைசா, பதினைந்து பைசா வரையில் இருக்கிறது கட்டணங்கள் எல்லாம் சரியானதுதானா, அவர்களுக்கு அந்த விதத்தில் கட்டணத்தை அளித்துவிட்டு நாம் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும் ஒரு நிலையை தொடர்ந்து வைத்துக்கொண்டு தனிப்பட்டவர்களுக்கு லாபத்தை உண்டாக்குகிற ஒரு கருவியாக மின்சார வாரியம் இருக்கவேண்டுமா என்பதைப்பற்றி நாம் ஆராய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

வோல்டேஜ் குறைந்தால் அல்லது விளக்குகள் எரியாமல் இருந்தால் அதைப்பற்றி உடனடியாக பொது மக்கள் நினைக்கிற ஒரு துறையாக மின்சாரத் துறை இன்றிருக்கிறது. முன்பு மின்சாரம் என்பது ஒருசிலரின் காரியமாக இருந்தது. இன்று சம்சாரிகளுடைய காரியமாக மின்சாரம் வந்திருக்கிறது. எனவே இதில் நாம் இன்னும் அதிகக் கவனம் செலுத்தவேண்டும். இங்கு சொன்ன கருத்துக்களையெல்லாம் எடுத்துக்கொண்டு சீர்திருத்தம் செய்யப்படவேண்டும். கோடிக்கணக்கான ரூபாய் வராத நிலையில் இருக்கிறது என்று சொல்லப்பட்டது. இப்படி வராத அல்லது வரமுடியாத நிலைமை வாரியத்தில் இருக்கிறது என்று சொன்னால், ஒரு லட்சம்பேர்கள் உள்ள அந்த வாரியத்தினால் அதைச் சரியாக நிர்வகிக்க முடியவில்லை என்றுதானே பொருள்? அப்படி நிர்வகிக்க முடியாத பொறுப்பு யாரைச் சேர்ந்தது என்பதை ஆராய வேண்டும். இப்படி ஏராளமான வருவாய் வருவதைத் தடுக்கும் ஒரு நிலை இருந்தால், அதற்குக் கடன் தருகிற நிலை இருந்தால், சென்னை கார்ப்பரேஷனுக்கு வந்துள்ளதைப்போல் ஊழல் உருவாகும் வழியை ஏற்படுத்தி கார்ப்பரேஷனைக் கலைப்பது என்ற முடிவை இப்போது சொன்னதுபோல் அந்த வாரியத்தைக் கலைப்





பது என்ற முடிவுக்குக் கொண்டுவருவதற்கு முன்னால் முன்ஜாக்கிரதையாக நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கூறி முடித்துக்கொள்கிறேன்.

*திரு. கே. பி. கந்தசாமி: துணைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தின் முன்பு வைக்கப்பட்டிருக்கிற மின்சார வாரியத்தின் நிதி நிலை அறிக்கைமீது என்னுடைய கருத்துக்களை நான் எடுத்து வைக்க முன்வருகிறேன்.

இங்கு நேற்று இந்த விவாதத்தைத் துவக்கி வைத்த நண்பர் ஹாண்டே அவர்கள் அவர்களுடைய கண்டனக் குரலை எடுத்து வைத்தார்கள். அதைத் தொடர்ந்து இன்றைக்கும்கூட இங்கு பேசிய நண்பர்கள் எடுத்துச் சொன்னார்கள், இந்த மின்சார இலாகாவில் ஏதோ கள்ளச்சந்தை நடந்துகொண்டிருக்கிறது என்று. அப்படி எடுத்துச் சொல்லும் போது இங்கு உட்கார்ந்து இருக்கக்கூடிய எங்களுக்கெல்லாம் ஒரு சந்தேகம் எழுகிறது. அவர்கள் ஒரு கேள்வியை எழுப்பினார்கள், அதற்கு எந்தவிதமான பதிலும் ஆளும் கட்சித் தரப்பிலிருந்து தரப்படவில்லை, ஆகவே எடுத்து வைக்கப்பட்ட அல்லது சொன்ன கண்டனம் சரியானதே என்ற கருத்தை இங்கு எடுத்து வைத்திருக்கிறார்கள். இங்கு உட்கார்ந்திருக்கும் எங்களுக்கு ஒரு சந்தேகம். கள்ளச் சந்தை என்று எந்த அடிப்படையில் நண்பர் அவர்கள் எடுத்துச்சொன்னார்கள். 1972-73-ம் ஆண்டில் மின்சார வெட்டு 75 சதவிதம் ஆக இருந்தது. அதற்கு முந்திய ஆண்டில் உள்ள வருவாயோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது 'ஃபால் இன் ரெவன்யூ' 15 சதவிதம் தான் இருக்கிறது. ஆக, 75 சதவீதம் வெட்டு இருக்கும்போது வருவாய்க் குறைவு 15 சதவீதம்தான் இருக்கிறது, ஆகவே இதில் மீதமுள்ள வருவாய் கள்ளச்சந்தைமூலம் வந்திருக்கிறது, ஆகவே மின்சார அமைச்சர் அவர்கள் ராஜிநாமா செய்யவேண்டும் என்றெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். ஆனால் கடந்த ஆண்டு மொத்தம் 12 மாதங்களில் இந்த 75 சதவீதம் வெட்டு கொண்டுவரப்பட்டது பெப்ரவரியில். ஏறத்தாழ ஒன்றை மாதம்தான் இந்த வெட்டு கடந்த ஆண்டு அமலில் இருந்தது. ஏப்ரலில் இருந்து செப்டம்பர் வரையில் ஆறு மாத காலம் வரையில் மின்வெட்டே இல்லை. இங்கு எடுத்துச்சொல்லப்பட்ட கருத்து 75 சதவீதம் வெட்டு இருந்தபோது 'பால் இன் ரெவன்யூ' 15 சதவீதம் ஆக இருந்தது, ஆகவே மிச்சமுள்ள வருவாய் கள்ளச்சந்தை மூலம்

[திரு. கே. பி. கந்தசாமி] [1973 நவம்பர் 20

வரப்பெற்றது என்று சொன்னார்கள். இதற்குப் பதில் சொல்லக்கூடிய கடமை ஆளும் கட்சிக்குதாப்பில் உட்கார்ந்து இருக்கக்கூடிய எங்களுக்கு இருக்கிறது என்று எடுத்துச்சொல்ல விரும்புகிறேன். இன்னும் 50 சதவீதம் மின்சாரம் தொழில்களுக்குத் தரப்படுகிறது, ஆனால் தொழில்களிலிருந்து வரக்கூடிய வருவாய் 25 சதவீதம்தான் என்று சொல்லப்பட்டது. தொடர்ந்து வேளாண்மைத் துறைக்குக் கொடுப்பதைவிட குறைந்த விலையில் மின்சாரம் தொழிற்சாலைகளுக்குக் கொடுக்கப்படுகிறது, இது முறைதானா என்ற கேள்வியும் எழுப்பப்பட்டிருக்கிறது.

ஆனால் இந்தக் கேள்வியை எழுப்புகிறபோது ஒன்றை மட்டும் அவர்கள் மறந்துவிடுகிறார்கள். வேளாண்மைத் துறைக்குக் கொடுக்கப்படுவது லோ டென்ஷன் மின்சாரம். அதைத் தயாரிப்பதற்கான செலவு என்ன? தொழிற்சாலைகளுக்குக் கொடுக்கப்படுகிறது ஹை டென்ஷன் மின்சாரம். அதைத் தயாரிப்பதற்கான செலவு என்ன? இதை மறந்துவிட்டுப் பேசுகிறார்கள். கடந்த ஆண்டு சட்டமன்றத்தில் எடுத்துச்சொல்லப்பட்டது, தொழிற்சாலைகளுக்கு விநியோகிக்கப்படுகிற ஹை டென்ஷன் பவருக்கான உற்பத்திச் செலவு குறைவு என்று. அதே நேரத்தில் வேளாண்மைத் துறைக்கு விநியோகிக்கப்படுகிற லோ டென்ஷன் பவருக்கான உற்பத்திச் செலவு இருக்கிறதே அது அதிகம் என்று எடுத்துச்சொல்லப்பட்டது. ஆகவே அதில் வரக்கூடிய நஷ்டத்தை ஈடு செய்வது தொழில் துறையிலிருந்து வரக்கூடிய அதிகத் தொகைதான் என்பது இந்த நேரத்தில் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

50 சதவீதம் மின்சாரத்தை தொழில் துறைக்குக் கொடுத்துவிட்டு 25 சதவீதம் வருவாய் பெற்றுக்கொள்ளவேண்டுமா, இது முறைதானா என்ற கேள்வியையும் எழுப்பினார்கள். நாட்டில் தொழில் அபிவிருத்தி வேண்டுமா? தொழில் வளர்ச்சி வேண்டுமா? அதன்மூலம் மக்களின் வாழ்க்கைத்தரம் உயரவேண்டுமா? அதன் மூலம் நாட்டில் பல பல தொழில்கள் உண்டாகவேண்டுமா? அப்படிப் பல பல தொழில்கள் வளருவதற்குத் தொழில் அதிபர்களைக் கவரவேண்டுமென்றால் மின்சார விலை குறைவாக இருந்தாக வேண்டும். இது நாம் ஏற்கெனவே எடுத்த முடிவு. இவற்றையெல்லாம் மறந்துவிட்டு ஏதோ அவ்வப்போது இங்கு பேசும்போது தொழிற்சாலைகளுக்கு இவ்வளவு மின்சாரம் கொடுக்கவேண்டுமா, குறைந்த விலையில் கொடுக்கவேண்டுமா என்று எடுத்துச்சொல்லும்போது தவறான ஒரு கருத்து மக்கள் மத்தியில் ஏற்படக்கூடிய ஒரு நிலை இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் எடுத்துச்சொல்ல



1973 நவம்பர் 20] [திரு. கே. பி. கந்தசாமி]

[12-30 பிற்பகல்]

விரும்புகிறேன். நிச்சயமாகத் தொழிற்சாலைகளுக்கு அதிகமான மின்சாரம் கொடுக்கவேண்டும். எத்தனையோ சலுகைகள் கொடுக்கிறோம். மின்சாரச் சலுகை கொடுப்பதிலும் தவறு இல்லை என்று நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த அவையில் எடுத்துச்சொல்லப்பட்டிருக்கிற மின்சார வெட்டு இந்த ஆண்டு 15 சதவீதம் என்று இருந்தாலும்கூட புதிய இணைப்புகள், விசையேற்றங்களாக இருக்கட்டும், சிறிய தொழிற்சாலைகள் ஆகட்டும், வேளாண்மைக்காக இருக்கட்டும் கொடுத்துக்கொண்டே இருக்கிறோம் என்று சொன்னார்கள். இந்த முடிவிற்காக நான் மின்சார வாரியத்தைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். கடந்த ஆண்டு மின்சார வெட்டு இருந்த நேரத்தில் பல இணைப்புகள் கிராமங்களுக்குக் கொடுக்க முடியாத நிலைமை இருந்தது. நான் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கும் சாத்தான்குளம் தொகுதியில் கடாச்சிபுரம் என்ற இடத்தில் டிரான்ஸ்பார்மர் வைக்கும் திட்டம் இருந்தது. மின்சார வெட்டு இருந்ததால் அந்தத் திட்டத்தை ஒத்தி வைத்தார்கள். இப்போது அந்த இடத்தில் அந்தத் திட்டத்தை அமல் நடத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இதோடு, இப்படிப்பட்ட மின்சார வெட்டு இருக்கிற நேரத்தில் எங்களைப் போன்ற பிற்படுத்தப்பட்ட பகுதியில் இருக்கும் மக்கள் தான் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். எங்கள் பகுதியில் பல இடங்களில் வேளாண்மைக்காக மின் விசை கேட்டு இணைப்புத் தரப்படாமல் இருக்கிறது. அந்தப் பகுதிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து மின் இணைப்புத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பாசனத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து மின் இணைப்புத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்தில், இப்படிப்பட்ட மின் இணைப்புகள் விவசாயிகளுக்குத் தரும்போது 10 வருடம் மினிமம் ஆன்யுவல் ரெவின்யூ இருக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். முதலில் கிணறு வெட்டினால் அதில் 3 ஆண்டுகளுக்குத் தண்ணீர் இருக்கிறது. பிறகு என்ன ஆழம் வெட்டினாலும் தண்ணீர் கிடைப்பது இல்லை. அப்படிப்பட்ட நிலைமையில் இருக்கும் விவசாயிகளைக் கஷ்டப்படுத்தக்கூடாது என்று கேட்டுக்

[திரு. கே. பி. கந்தசாமி] [1973 நவம்பர் 20

கொண்டு, அந்த 10 ஆண்டுகால மினிமம் பீரியடை எடுத்து விட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கு இந்த மின்சார வாரியம் ஏற்பாடு செய்யவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே நேற்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தார்கள். அதாவது, நெய்வேலியில் இரண்டாவது சுரங்கம் வெட்டப்பட்டு, ஆயிரம் மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யும் வகையில் ஒரு மின் நிலையம் ஏற்படுத்த வேண்டுமென்று ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறோம். அது நிறைவேற்றப்பட்டாலும் கூட, இன்னும் 10 ஆண்டுகளுக்குப் பிறகு, 5, 6 ஆண்டுகளுக்குப் பிறகு நமக்குப் பற்றுக் குறை ஏறத்தாழ 14,000 மில்லியன் யூனிட்டுகள் இருக்கும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இன்றைக்கு நம்முடைய தேவை 27,000 மில்லியன் யூனிட்டுகள். பற்றுக்குறை ஏறத்தாழ 14,000 மில்லியன் யூனிட்டுகள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்தத் திட்டம் மாத்திரம் நமக்குப் போதாது. இன்னும் இதுபோன்ற எத்தனையோ திட்டங்கள் நமக்குத் தேவை. அவற்றை நிறைவேற்றினால்தான் நிச்சயமாக 5 ஆண்டுகளுக்குப் பிறகு நாம் மின்சாரப் பற்றுக்குறையைப் போக்க முடியும் ஆகவே, இப்போது இருந்தே நாம் மின்சார உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அது அனல் மின்சார நிலையமாக இருந்தாலும் சரி, நீர் மின்சாரமாக இருந்தாலும் சரி உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். அதோடு, அனல் மின்சாரத்தையே நம்பியிருக்காமல் அணு மின்சார நிலையம் அமைக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும், நிலக்கரியை மட்டும் வைத்துக்கொண்டு மின்சார உற்பத்தியை மேற்கொள்வதைவிட, மேற்கத்திய நாடுகளில் மரத்தை வைத்து எரித்து மின்சாரம் தயார் செய்கிறார்கள்—அது போல் செய்ய முடியுமா என்பதையும் சிந்தித்துப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதற்காக மின்சாரத்துறை, வனத்துறை, வேளாண்மைத் துறையைச் சார்ந்தவர்கள் கலந்து பேசி ஒரு முடிவு எடுத்து, தரிசாகக் கிடக்கும் நிலங்களை உபயோகித்து. எந்த வகையில் மரங்களை உற்பத்தி செய்தால் அவை பயன்படக்கூடிய வகையில் இருக்கும் என்பதை ஆலோசித்து முடிவெடுத்து. அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இப்போதிருந்தே இப்படிப்பட்ட முயற்சிகளை மேற்கொண்டால்தான் 5 ஆண்டுக் காலத்திற்குப்



1973 நவம்பர் 20] [திரு. கே. பி. கந்தசாமி]

பிறகு ஏற்படும் மின்சாரப் பற்றுக்குறையை நாம் சமாளிக்க முடியும் என்று கூறி, வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி கூறி முடிக்கிறேன். வணக்கம்.

* திரு. குழ. செல்லையா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மின்சார வாரியத்தின் 1973–74-ம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கைமீது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இரண்டாவது நாளாக இந்த நிதிநிலை அறிக்கைமீது விவாதம் நடந்து கொண்டிருக்கிற நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் மிகத் தெளிவாகவும், திட்டவட்டமாகவும் எதிர்க்கட்சி வரிசையில் உள்ளவர்களும் சரி, ஆளும் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு கிருஷ்ணமூர்த்தியைப் போன்றவர்களும் சரி மிகத் தெளிவாக மின்சார வாரியத்தில் உள்ள சீர்கேடு பற்றியும், இந்த அரசின் கவனக்குறைவால் ஏற்பட்டிருக்கிற சூழ்நிலையைப்பற்றியும் தமிழ்நாட்டில் ஏற்பட்டிருக்கிற மின்சாரத் தட்டுப்பாடு பற்றியும், அரசின் நிர்வாக சீர்கேட்டின் காரணமாகத் தொழிற்சாலைகள் மூடப்பட்டிருந்தது பற்றியும், விவசாயிகளின் வேதனையைப்பற்றியும் மிகத் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

(திரு. ஜே. ஜேம்ஸ் தலைமை)

மாண்புமிகு உறுப்பினர் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த டாக்டர் ஹாண்டே அவர்கள் நேற்றைய தினம் இந்த மாமன்றத்தில் பேசுகிறபோது இந்த நிர்வாகத்தில் ஏற்பட்டு இருக்கிற சீர்கேட்டைப் பற்றியும், முறைகேட்டைப் பற்றியும், ஊழல்களைப் பற்றியும் மிகத் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இங்கே பேசிய காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் சுவாமிதாஸ் அவர்கள் மின்சார வாரியத்தில் இவ்வளவு பெரிய ஊழல் வந்து விட்டதே என்று கோடிட்டுக் காட்டினார்கள். ஏன் மின்சார வாரியத்தில் உள்ள ஊழல் விரைவில் வெளிவந்துவிட்டது என்றால், மின்சாரம் விரைவாகப் பாய்ந்துவிடும், ஆகவேதான் இந்த விவகாரம் விரைவில் வெளிவந்துவிட்டது, இன்னும் ஊழல்கள் தொடர்ந்து வெளிவந்து, அதை நாமெல்லாம் காணப்போகிறோம். என்று அதிகாரிகள் சொல்லும் ஆலோசனைக் கேட்காமல் அரசாங்கம் காரியங்கள் செய்ததன் விளைவாக இந்தத் தட்டுப்பாடு

[திரு. குழ. செல்லையா] [1973 நவம்பர் 20

வந்திருக்கிறது, யார் யாரோ அதிகாரிகளாக வந்து விட்டார்கள் என்று சொல்லி மதிப்பிற்குரிய கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சொன்னார்கள். அப்படி அவர்கள் ஆலோசிக்காமல் பொறுப்பில் உள்ளவர்கள் சிந்திக்காமல் வேலைகளைச் செய்ததால் தான் இப்போது மின்சாரத் தட்டுப்பாடு வந்திருக்கிறது என்பதை சொல்லாமல் இருக்க முடியாது. தன்னிச்சையாக எந்த நிர்வாகத்தையும் அந்த அதிகாரிகள் செய்ய முடியாத நிலைமையை இன்றைக்கு தமிழகத்தில் நம்மாலே காண முடிகிறது. சான்று சொல்லப்போனால் இந்த அரசு கடந்த ஆண்டில் மின்சார போர்டு பணியாளர்களுக்காக ஜூனியர் அசிஸ்டெண்டு, மற்றும் தட்டெழுத்தாளர்கள் போன்றவர்களுக்காக இண்டர்வியூ நடத்தியது. தமிழகம் முழுவதும் ஏறத்தாழ ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட மனுக்கள் அங்கே வந்து சேர்ந்தன. பல்வேறு மாவட்டங்களில் நேர்முகத் தேர்தல் நடைபெற்றது. ஓராண்டு காலமாகியும் யாருக்கும் வேலைவாய்ப்புத் தரவில்லை என்ற நிலைமையை எண்ணிப் பார்க்கவேண்டும். இதன் மர்மம் என்ன, காரணம் என்ன என்பதைப்பற்றி சிந்திக்கவேண்டும். ஓராண்டு காலமாக இதை நிறுத்தி வைத்ததற்குக் காரணம் என்ன? மர்மம் என்ன? ஏன் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது? இத்தனை இடங்கள்தான் இருக்கின்றன என்றால் அத்தனை இடங்கள் கொடுக்கப்பட்டிருக்கவேண்டும். என்ன நிர்வாகக் குறைபாடு இருந்தாலும் இதைச் செய்ய முடியாதா? அதைச் செய்திருக்கலாமே. அதற்கு மாறாக ஓராண்டுக்கு மேலாக தங்களுக்கு உத்தியோகம் கிடைக்கும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் பட்டப்படிப்பு படித்தவர்கள் வேலை வாய்ப்பு இல்லாமல் இருக்கிறார்கள். பள்ளி இறுதி வகுப்பு படித்தவர்களும் வேலை வாய்ப்பு இல்லாமல் இருக்கிறார்கள். அரசு ஏதோ விளம்பரம் தந்திருக்கிறது. அதன் மூலம் இண்டர்வியூவிற்குப் போகிறோம், தங்களுக்கு உத்தியோகம் கிடைக்கும் என்று நம்பி ஓராண்டுக்கு முன்னால் விண்ணப்பம் ஒன்றுக்கு ரூ. 5 கொடுத்திருக்கிறார்கள். ஏறத்தாழ ரூ. 5 லட்சம் இதன் மூலம் இந்த அரசுக்கு வருமானம் வந்திருக்கிறது. மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள்கூட சில மாதங்களுக்கு முன்பு இதைத் திருப்பித் தந்து விடுவதாகச் சொன்னார்கள் என்று பத்திரிகை வாயிலாக அறிந்தேன். ஃபாரத்தை பணம் கொடுத்து வாங்கியிருக்கிறார்கள். ஒவ்வொரு மாணவனும் ஏறத்தாழ ரூ. 50 வரையில் இதற்காக செலவு செய்து இருக்கிறார். இதற்காக செலவு செய்திருக்கிற



1973 நவம்பர் 20] [திரு. குழ. செல்லையா]

தொகை ஏராளமாக ஆகியிருக்கிறது. இந்த நிலைமையை எண்ணி பார்க்கிற நேரத்தில் இது ஏன் நிறுத்தப்பட்டது, ஏன் தடைப்படுத்தப்பட்டது என்று ஒரு கணம் எண்ணிப் பார்க்கவேண்டும். இதற்கான காரணத்தை, காலதாமதத்திற்கான விளக்கத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தம்முடைய பதிலில் சொல்ல வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

எனக்குக் கிடைத்திருக்கக்கூடிய தகவலின்படி என்னுடைய மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ஒரு சிலருக்கு உத்தியோகம் கொடுப்பதாக ஆணைகள் வந்திருக்கின்றன என்று பேசிக்கொள்ளப்படுகிறது. எந்த அடிப்படையில் என்று பார்த்தால் ஆளுகின்ற கட்சியிலுள்ள ஒரு சில எம்.எல்.ஏ.-க்கள், அமைச்சரோடு நெருங்கிய தொடர்பு கொண்டவர்கள்—என்ன காரணத்தினால் தொடர்பு என்று என்னால் சொல்ல முடியாது—அப்படி தொடர்பு கொண்டவர்கள் பணத்தை வாங்கிக்கொண்டு, ஒரு மாணவருக்கு உத்தியோகம் தருவதற்கு ரூ. 500, 1,000 என்று வாங்கிக்கொண்டிருப்பதாக பேச்சு அடிபடுகிறது. அப்படிப் பகிரங்கமாக பேசக்கூடிய நிலைமை எங்கள் மாவட்டத்தில் இருக்கிறது....

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவர் அவர்களே, மின்சார போர்டு ஆள் எடுப்பதற்கு விளம்பரம் செய்து, ஓராண்டு காலம் ஆகியும் இதுவரையில் ஆள் எடுக்கவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முதலிலே பேசினார்கள். பின்னாலே அவர்கள் பேசும்பொழுது, அவருடைய பகுதியிலே ஒவ்வொருவரிடமிருந்தும் ரூ. 1,000, 2,000 வாங்கிக்கொண்டார்கள் என்று சொன்னார்கள். ஒரு பொறுப்புள்ள உறுப்பினர் சட்டமன்றத்தில் இப்படிப் பேசுவது முறையல்ல. குற்றச்சாட்டுகளைச் சொல்லலாம். ஆனால் இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகளைச் சொல்லும்பொழுது குறிப்பிட்டுச்சொல்வது என்பது மரபாக வைத்திருக்கிறோம். அம்மாதிரி மரபைக் கையாண்டு குறிப்பிட்டுச் சொன்னால், அதற்குப் பதில் சொல்வதற்கு ஏதுவாக இருக்கும். பொதுக் கூட்டத்தில் பேசுவது போன்று மன்றத்தில் பேசுவது நல்லது அல்ல.

**திரு. நா. வீராசாமி :** ஆன் எ பாயிண்டு ஆப் ஆர்டர். தலைவர் அவர்களே, திரு. குழ. செல்லையா அவர்கள் பேசும்பொழுது அமைச்சருக்கு வேண்டிய ஒருவர், சட்டமன்ற உறுப்பினர், என்ன காரணம் கொண்டோ அமைச்சரோடு தொடர்பு உடையவ அப்படி ஒருவர் ரூ. 1,000 வாங்கிக்கொண்டு வேலைக்கு வைத்திருக்கிறார் என்று இந்த மன்றத்தில் பேசுவது முறைதானா? அவர்கள்

தெளிவாகக் குற்றச்சாட்டைச் சொல்லி, இன்னார், இன்னாருக்காக, இன்னாரிடத்திலிருந்து பணம் பெற்றுக்கொண்டார் என்று சொல்வதுதான் பொறுப்புள்ள மன்ற உறுப்பினரின் கடமையாகும். அப்படியில்லாமல் ஏனோ தானோ என்று பேசுவது இந்த மன்றத்தையே அவமதிப்பதாகும். அமைச்சரோடு தொடர்பு கொண்டவர் என்றெல்லாம் நோக்கம் கற்பித்து மன்றத்தில் பேசுவது நல்லது அல்ல. இதுபற்றி தாங்கள் ரூலிங் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நாளைக்கு குழ. செல்லையா அவர்கள் இப்படிச் சொல்லவில்லையா என்று கேட்கலாம். ஒருவர் ரூ. 2,000 வாங்கிக்கொண்டார் என்று பேசப்படுகிறது. யாரோ ஒருவர், சட்டமன்ற உறுப்பினர், அவருக்கு வேண்டியவர், என்ன காரணத்தினாலோ தெரியாது என்றெல்லாம் நோக்கம் கற்பிப்பது முறை தானா என்பதை தாங்கள் அறிவிக்க வேண்டும்.

**திரு. குழ. செல்லையா :** நான் பொறுப்புள்ள சட்டமன்ற உறுப்பினர். பொறுப்பற்ற முறையில் பேசவில்லை. தலைவர் அவர்கள் பாதுகாப்பு கொடுப்பதற்கு உத்திரவாதம் அளித்தால் பகிரங்கமாக விசாரணை நடத்தினால், யார் கொடுத்திருக்கிறார்கள் என்ற உண்மையைத் தெளிவாகச் சொல்ல முடியும் என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன்.

**திரு. நா. வீராசாமி :** எதற்கெடுத்தாலும் விசாரணை வேண்டும் என்று எல்லோரும் இதேமாதிரி கேட்டுக்கொண்டிருந்தால் எப்படி? குறிப்பாக யார் பணம் கொடுத்திருக்கிறார்கள் என்று......

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இந்தச் சட்டமன்றத்தில் பலமுறை தீர்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய நாட்டில் பேசுவதற்கு இதைவிடப் பாதுகாப்பான இடம் எதுவும் கிடையாது. நீங்கள் தாராளமாக எல்லாவற்றையும் பேசலாம். ஆனால் ஒரு கடமை உணர்வோடு பேசவேண்டும். நிரூபிக்கத் தயாராக இருக்க வேண்டும். நிரூபிப்பது என்றால் இந்த இடத்திலேயே நிரூபிப்பது என்பது அல்ல. சட்டமன்றத்தின் வெளிக்கு அப்பாற்பட்டுள்ள இடத்தில் நிரூபிக்க வேண்டிய அவசியமில்லை. பேரவைத் தலைவர் ஒரு குழுவை அமைத்து வேலை செய்தாலோ அல்லது பேரவைத் தலைவர் ஒரு விசாரணை செலவு செ





நடத்தினாலோ, அப்பொழுது நிரூபிப்பதற்குத் தயாராக இருக்க வேண்டும். தாராளமாக பெயர் விவரங்களைச் சொல்வதற்கு முழுப் பாதுகாப்பு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் அஞ்ச வேண்டியதில்லை. சட்டமன்றத்தில் மேலெழுந்தவாரியாகக் குற்றம் சாட்டுவது நல்லது அல்ல. பேரவையின் அத்துணை பேர்களையும் அது சாரும்.

**திரு. குழ. செல்லையா :** இந்த மாமன்றத்தில் பேசுவதற்கு எனக்கு நிறைய பாதுகாப்பு அளித்திருக்கிறார்கள். ஆனால் நான் சொல்லுகிற குற்றச்சாட்டுகளை நிரூபிக்கின்றபொழுது, அவர்களுக்குப் பாதுகாப்பு உண்டா என்பதுதான் என்னுடைய கேள்வி. அவர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்கு உத்திரவாதம் அளிக்கப்படுமானால், பகிரங்கமாக என்னால் சொல்லிவிட முடியும். இன்னார் என்று சொல்லிவிட முடியும். எனக்குப் பாதுகாப்பு அல்ல. அங்கே யார் கொடுத்திருக்கிறார்களோ அவர்களுக்குப் பாதுகாப்பு வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குற்றச்சாட்டை ஆதாரத்தோடு சொல்வதற்கு பாதுகாப்பு இருக்கும்பொழுது, என்ன நடந்தது என்பதை வெளியிட்டுவிட்டு, அதைப்பற்றிய ஆதாரத்தை வெளியிடாமல் குற்றச்சாட்டு சொல்வது நியாயமா என்று எண்ணிப்பார்க்க வேண்டும். ஆதாரத்தை வெளியிட முடியாது என்ற நிலைமையில் குற்றச்சாட்டை வெளியிடுவது எந்த வகையில் பொருத்தம்? மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெளிவாக விளக்கிச் சொன்னால் நலமாக இருக்கும்.

**திரு. குழ. செல்லையா :** நான் பொறுப்பற்ற முறையில் இங்கே பேசவில்லை. பொறுப்போடுதான் பேசுகிறேன். என்னுடைய பகுதியில் இது இப்படி இப்படி என்று என்னாலே பகிரங்கமாகக் கூட நிரூபித்துக் காட்ட முடியும். அந்த அளவுக்குக் குற்றச்சாட்டுகள் இருக்கின்ற நிலைமை இருக்கிறது என்றாலும் அங்கே அவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கக்கூடிய நிலைமை இல்லை என்பது தெளிவாகத் தெரிந்தும், மாண்புமிகு துணைச் சபாநாயகர் அவர்கள்

சொல்வதற்கிணங்க நான் அதை இங்கே சொல்லிவிட்டால், அவர்கள் குடும்பத்திற்கு என்ன கதி ஆகும் என்பது எனக்குத் தெரியும். உண்மை இல்லாததைப் பேசக்கூடிய அவசியம் எங்களுக்கு இல்லை. எதிர்க்கட்சி என்ற அடிப்படையில் குறை சொல்வதற்கு மட்டும் நாங்கள் இங்கு வரவில்லை. வட்டாரத்தில் நடைபெறுகின்ற நிலைமையை எடுத்துச்சொல்கிறோம். ஓராண்டுக்கு நிறுத்தி வைத்திருக்கிறார்கள். அதற்கான காரணம் என்ன? பணத்தை திருப்பித் தருவதாகச் சொன்னார்கள், அதுவும் தரவில்லை.

**திரு. எம். ஏ. லத்தீப் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒருவர் பணம் கொடுத்தார். இன்னொருவர் வாங்கினார் என்ற குற்றச்சாட்டை மேலெழுந்தவாரியாக சொல்கிறார்கள். அவர்கள் பெயரை அறிவித்தால் அவர்களுக்குப் பாதுகாப்பு கிடைக்காது என்ற அச்சத்தை உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள். அப்படிப் பணம் கொடுப்பவர்களும், பணம் வாங்குகிறவர்களும் இருவருமே குற்றவாளியாக இருக்கும்பொழுது அவர்களுக்குப் பாதுகாப்புத் தரவேண்டும் என்று வாதாடுவது சரியல்ல. குற்றவாளிகளுக்குப் பாதுகாப்புத் தேடித்தருகின்ற வேலையில் மன்ற உறுப்பினர்கள் ஈடுபடக்கூடாது என்பதுதான் என்னுடைய வேண்டுகோள்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** சட்ட மன்ற அங்கத்தினர்கள் நாட்டின் நிலவரம் என்ன என்பதை எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறார்கள். நிலவரம் நாட்டில் எப்படி இருக்கிறது என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டும். இப்படியெல்லாம் பேசப்படுகிறது, இப்படியெல்லாம் பணம் வசூலிக்கப்படுகிறது என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரவேண்டியிருக்கிறது. குற்றவாளி யார் என்று சொல்ல வேண்டும் அல்லது குற்றச்சாட்டுகளையே சொல்லக்கூடாது என்று எப்படிச் சொல்ல முடியும்? நாட்டில் இம்மாதிரி அதிருப்தி நிலவி வருகிறது, அதற்கு என்ன பரிகாரம் தேடப் போகிறீர்கள் என்பதைத்தான் நாங்கள் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம். அதற்காக சட்டமன்ற உறுப்பினர்கள் இப்படிப்பட்ட நிலவரங்களை எடுத்துச் சொல்வதற்காகத் தான் They enjoy a certain amount of immunity.



வெளியே சொன்னால் அவர்கள் பேரில் மானநஷ்ட வழக்கு தொடரப்போகிறோம் என்று சொல்லலாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** வெளியே பேசுவதற்கும் இங்கே பேசுவதற்கும் வித்தியாசம் இருக்கிறது. You have clarified everything இங்கே பேசும்பொழுது குறிப்பிட்டு ஆதாரத்தோடு பேசவேண்டும். நீங்கள் அந்தக் கடமை உணர்வோடு பேசவேண்டும். அதற்குரிய பாதுகாப்பு உங்களுக்கு இருக்கிறது. பாதுகாப்புக்கு உத்திரவாதம் இருக்கிறது. நீங்கள் அப்படிப் பேசுவதன் காரணமாக, யாராவது ஒருவர் சட்ட விரோதமாக பாதிக்கப்படுவார்கள் என்று சொன்னால் நிச்சயம் அதற்கு இந்தப் பேரவை பாதுகாப்புத் தரும். இந்தப் பேரவையின் சார்பில் அரசுக்குச் சொல்ல முடியும். அதை விட்டுவிட்டு இன்னார் என்று பெயரைச் சொல்லாமல், அப்படிச் சொன்னால் அவர்கள் பாதிக்கப்படுவார்கள் என்ற காரணத்தினால், அமைச்சரைப் பற்றியும், எம்.எல்.ஏ.-க்களைப்பற்றியும் மேலெழுந்தவாரியாகப் பேசுவது முறையல்ல. நிரூபிக்கத் தயாராக இல்லையென்றால், ஆதாரத்தை வெளியிட விரும்பவில்லை என்றால், குற்றச்சாட்டைச் சொல்லாமல் இருப்பதுதான் நல்லது.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** அரசினுடைய கையில் யாருக்கும் இல்லாத போலீஸ் இலாகா இருக்கிறது. என்ன நடக்கிறது என்று நாங்கள் சொல்கிறோம். அதைக் கொண்டு துப்புத் துலக்கி உண்மையைக் கண்டுபிடிக்க வேண்டியவர்கள் போலீஸ் இலாகாவினர்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அப்படிப் பெயரைச் சொல்லாமல் இருந்தால் எப்படி துப்பு துலக்க முடியும்? காரண காரியங்களை ஓரளவுக்குச் சொன்னால் தானே அரசாங்கம் துப்பு துலக்க முடியும்? ஓரளவுக்காவது துப்பு கொடுத்தால் தான் மேற்கொண்டு துப்பு துலக்க முடியும். அப்படி மேலெழுந்த வாரியாக குற்றம் சாட்டுவது இந்தச் சபையின் மரியாதைக்கு உகந்தது அல்ல, நன்றாக இருக்காது.

**திரு. நா. வீராசாமி :** திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் திசை திருப்பப் பார்க்கிறார்கள். நாட்டில் நடக்கிற நடப்புகளைப் பற்றி இங்கே பேசுவதற்கு எல்லோருக்கும் உரிமை

இருக்கிறது. ஆனால் இங்கே நாட்டின் நடப்பைக் கூறும்பொழுது ஒரு சட்ட மன்ற உறுப்பினர்—234 சட்டமன்ற உறுப்பினர்களில் யாரோ ஒருவர்—நாட்டில் இருக்கின்ற பிரச்னை அல்ல, ஒரு சட்ட மன்ற உறுப்பினர், அமைச்சருக்கு வேண்டியவர், என்ன காரணத்திற்காகவோ என்று அத்தனை வார்த்தைகளையும் கோர்த்திருக்கிறார்கள். நாட்டின் நடப்பு என்ன என்று சொல்வதாகக் கூறிக்கொண்டு, அவையைச் சேர்ந்த ஒரு சட்ட மன்ற உறுப்பினரைப் பொறுத்து விவாதிப்பது சரியல்ல. சட்ட மன்ற உறுப்பினர்களுக்கும் பாதுகாப்பு வேண்டும். அருள் கூர்ந்து தீர்ப்பு வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கோவை செழியன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஒரு கருத்தை இந்த சட்டமன்றத்திலே சொல்லும்போது அந்தக் கருத்து பற்றி வெளியே பேசப்படுகிறது. அந்தக் கருத்தின் காரணமாக சம்பந்தப்பட்ட உறுப்பினர்கள் பாதிக்கப் படுவார்கள் . . .

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்): அந்த உறுப்பினர் இங்கே இருந்து இடம் மாறிப்போனதால் கருத்து மாறி யிருக்கலாம்.

Mr. DEPUTY SPEAKER: Kindly do not express any personal remarks.

திரு. கோவை செழியன்: ஒரு கருத்தை சட்டமன்றத்திலே சொல்லும்போது அதன் விளைவு வெளியே தெரிகிறது. அதனால் பாதுகாப்புத் தரவேண்டும் என்று சொன்னார்கள். எடுத்துக் காட்டாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். துணைத் தலைவராக இருக்கக்கூடிய தாங்களே ஒரு உண்மையை வெளியே சொன்னதற்காக உங்களைக் கத்தியால் குத்த வந்தார்கள். உங்களுக்கே பாதுகாப்பு இல்லை. அப்படி இருக்கும்போது மற்றவர் களுக்கு எப்படிப் பாதுகாப்பு இருக்கும்? (திரு. வி. கிருஷ்ண மூர்த்தி அவர்களும் திரு. நா. வீராசாமி அவர்களும் எழுந்தார்கள்.)

மாண்பமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள். இந்தமாதிரியான ஒரு கருத்தைச் சொல்வது பொருத்தமில்லை. பொதுவாக ஒரு





உறுப்பினரைப்பற்றி எந்தவிதமான விமர்சனமும் சொல்லக் கூடாது. குறிப்பாக தலைவருடைய இந்த இடத்தில் இருக்கக்கூடிய ஒருவரைப்பற்றி விமர்சிக்கக்கூடாது. என்னைப் பற்றியது தனிப் பட்ட விவகாரம். நீங்கள் சொல்வதற்கும் இதற்கும் சம்பந்தமில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: இந்த ஊழல் குற்றச்சாட்டைப் பற்றி சட்டமன்றத்திலே பேசும்போது, சந்தானம் கமிட்டி ரிப்போர்ட் என்ன சொல்கிறது என்று பார்க்கவேண்டும். அதிகாரிகளோ அமைச்சர்களோ எந்தவிதமான ஊழலும் செய்ய வில்லை என்று சொன்னால் மக்களுக்கு அதில் நம்பிக்கை இல்லை. ஒன்றைச் சொல்கிறார்கள் என்றால் காரணம் இல்லாமல் சொல்ல மாட்டார்கள். ஏதோ இருக்கிறது என்ற வகையிலே அதை எடுத்துக்கொள்ள வேண்டும்.

இன்றைக்கு குறிப்பிட்ட ஒரு துறையைப் பற்றி விவாதம் நடைபெறுகிறது. இந்தத் துறையிலே குறிப்பாக ஒன்றைச் சொல்லவேண்டுமானால், அசிஸ்டன்ட் செலக்ஷனில் ஊழல் நடந்திருக்கிறது. இந்த செலக்ஷனுக்காக மதுரையிலே ஒருவரிடம் 2,000 ரூபாய் கொடுத்தார். வேலை கிடைக்காததால் அந்தப் பணத்தைக் கொடு என்று சொல்லி பின்னால் சண்டை போட்டார். யார் கொடுத்தது, யார் வாங்கியது என்று இங்கே சொல்லச் சொன்னால் நான் பகிரங்கமாகச் சொல்லமாட்டேன். தனியாகக் கேட்டால் விபரத்தைத் தருகிறேன். இன்றைக்கு இப்படி இந்த வேலை கொடுப்பதில் ஊழல் ஏற்பட்டிருக்கிறது என்று பொதுவாக இங்கே சொல்லலாம். இந்த இந்த எம்.எல்.ஏ. இன்னின்ன வேலைக்காக 5,000 ரூபாய் வாங்கினார், 10,000 ரூபாய் வாங்கினார் என்று சொன்னால், அது அந்த உறுப்பினருக்கு மிகவும் கஷ்டமாக இருக்கும். அதனால் பொதுவாக அமைச்சர்களோ, அல்லது சட்ட மன்ற உறுப்பினர்களோ அல்லது அவர்கள் கட்சிக்காரர்களோ ஊழல் நடப்பதற்கு சாதகமாக இருக்கிறார்கள்—பணம் வாங்கினாலும் வாங்காவிட்டாலும் ஊழல் நடப்பதற்கு காரணமாக இருக்கிறார்கள் என்று. சொன்னால் அது உண்மையா இல்லையா என்பதை விசாரித்து தெரிந்துகொள்ள வேண்டும். அதற்கு ஆதாரம் என்ன? யார் யாரிடம் வாங்கினார் என்று இங்கே சொல்லுங்கள் என்றால் எப்படி சொல்ல முடியும்? டிபுடி ஸ்பீக்காராக இருக்கின்ற நீங்களே என்னை சொல்லச் சொன்னாலும்

நான் சொல்லமாட்டேன். அதற்கான விபரம் வேண்டுமென்றால் என்னிடம் கேளுங்கள். தனியாக நான் முழு விபரத்தையும் தருகிறேன். ஆனால் இங்கே குறிப்பிட்டுச் சொல்லமாட்டேன். அப்படி பேசப்படுகிறது, இப்படிச் சொல்லப்படுகிறது என்று சொல்லும்போது ஒன்றிரண்டு விஷயங்களைத் தெரிந்துதான் பேசுகிறோம். ஒரு உறுப்பினரைப்பற்றி பகிரங்கமாகச் சொல்லும் போது அவரை 'எக்ஸ்போஸ்' பண்ணுவதாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் ஒரு உறுப்பினரைப் பற்றி குறிப்பிட்டுச் சொன்னால் அவரை எக்ஸ்போஸ் பண்ணுவதாக இருக்கும் என்று சொல்கிறீர்கள். அப்படி இருக்கும்போது மொத்தமாக சொல்லும்போது தப்பு இல்லையா? அது கிட்டத்தட்ட 184 பேரைப் பாதிக்கும் அல்லவா?

**திரு. கே. டி. கே. தங்கமணி:** இதற்கு முன்னால் முதலமைச்சர் இந்த சட்டசபையிலே பேசிய ஒரு வாசகத்தை எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் அதைத் தேட வேண்டாம். அவர் சொன்ன கருத்தைச் சொல்லிவிட்டால் போதும்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** அந்த வாசகத்தையே படித்து விடுகிறேன். "இறுதியாக இந்த அரச சொந்தக் கட்சி நலத்திற்காக நடைபெறுகின்றது; கட்சிக்கும் சர்க்காருக்கும் வேறுபாடு தெரியவில்லை; அதிகாரம் துஷ்பிரயோகம் செய்யப்படுகிறது; உற்றார், உறவினர், நண்பர் இவர்களுக்குச் சலுகைகள் வழங்குகிறது; மர்மம் நிறைந்த சில லாபங்களுக்காகத் தனியார் துறையை வளர்த்து பொதுத் துறையை சவலைப் பிள்ளையாக்கி வைத்திருக்கிறது" என்று பேசியிருக்கிறார்கள். இந்த வாசகம் 24—10—1964-ம் தேதிய நடவடிக்கைக் குறிப்பில் பக்கம் 718-ல் இருக்கிறது. அன்றைக்கு நெடுஞ்செழியன் ஒன்றைச் சொல்லி யிருக்கிறார். "கதர் கட்டி வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம் சதிர் இட்டுப் பின்செல்பவர்" என்று சொல்லியிருக்கிறார். அதே முறையில்தான் இன்றைக்கு நடைபெறுகிறது என்று உறுப்பினர்கள் சொல்கிறார்கள். அப்படித்தான் நடந்து கொண்டிருக்கிறது. ஆளும் கட்சிக்காரர்களுக்கு பாதுகாப்பு கொடுப்பது இன்றைக்கு மரபாக இருக்கிறது. ஆகவே, அவர்கள்



சொல்வதில் தவறு இல்லை. பெயரைச் சொல்லவேண்டுமானால் சொல்லலாம். தனியாகச் சொல்லலாம். எந்த அமைச்சருக்குச் சொந்தக்காரர் என்று சொல்லலாம். பிறகு அது ரொம்ப சிரியசாக இருந்தால், உரியமுறையில் தண்டிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இப்போது அமைச்சரவர்கள் சொன்ன கருத்தைச் சொன்னீர்கள். அவர்கள் கூட பொதுவான முறையிலே தான் சொல்லியிருக்கிறார்கள். ஒரு குறிப்பிட்ட நபர், அமைச்சருக்குச் சொந்தக்காரர் என்று நீங்கள் சொல்லும்போதுதான் சந்தேகம் ஏற்படுகிறது. பொதுவாகச் சொல்வதற்கும், இதற்கும் வேறுபாடு இருக்கிறது. குறிப்பிட்டுச் சொல்லும்போதுதான் அதற்கான ஆதாரத்தையும், யார் யார் என்பதையும் சொல்லவேண்டுமென்று சொல்கிறார்கள். அப்படிப் பட்ட குற்றச்சாட்டுக்களை ஆதாரம் இல்லாமல் சொல்வது இந்த சபையின் மரபு அல்ல.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** சார், பாயிண்ட் ஆஃப் ஆர்டர். தங்களுடைய தீர்ப்புக்கு சௌகரியமாக இருப்பதற்காக என்னுடைய கருத்தைச் சொல்கிறேன். இவ்வளவு குற்றச்சாட்டுக்களைச் சொல்லியிருக்கிறார்கள். சாதாரணமாக இந்தச் சபையின் மரபு என்னவென்றால் ஒருவர் ஒரு குற்றச்சாட்டை சொன்னால் சம்பந்தப்பட்ட அமைச்சர் பதில் சொல்லும்போது முழுக்க முழுக்க அதை மறுக்கலாம். அவருக்கு அதற்கு உரிமை இருக்கிறது. உறுப்பினர்களுக்கு குற்றச்சாட்டை சொல்வதற்கு உரிமை இருக்கிறது. அமைச்சர்களுக்கு மறுப்பதற்கு உரிமை இருக்கிறது. அதற்குப் பின்னால் ஒன்றைப்பற்றிய விபரத்தைக் கொடுத்தால் நடவடிக்கை எடுக்கிறார்கள். 10 ஆண்டுகளாக நானும் இந்த மன்றத்தில் இருக்கிறேன். குற்றச்சாட்டைச் சொல்லும்போது அதற்கான புள்ளிவிபரங்கள், ஆதாரங்கள் என்ன என்று முன்னால் இருந்த காங்கிரஸ் அரசாங்கம் கேட்கவில்லை. குறிப்பிட்டுச் சில குற்றச்சாட்டுக்களைச் சொன்னால் நடவடிக்கை எடுக்கிறோம் என்று அமைச்சர்கள் சொல்வார்கள். அல்லது சொல்லக்கூடிய குற்றச்சாட்டு முழுக்க முழுக்க மறுக்கப்படும். இதுதான் மரபாக இருந்துவருகிறது. உறுப்பினர்களுக்கு குற்றச் சாட்டைச் சொல்வதற்கு உரிமை இருக்கிறது. அமைச்சர்களுக்கு இல்லை என்று மறுப்பதற்கு உரிமை இருக்கிறது. இதுதான் மரபு.

[1973 நவம்பர் 20

திரு. நா. வீராசாமி : பாயிண்ட் ஆஃப் ஆர்டர், சார். இப்போது சபாநாயகர் யார் என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் உட்காருங்கள். இப்போது நான்தான் சபாநாயகர். டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்ன கருத்தை ஏற்றுக்கொள்வதற்கில்லை. நீங்கள் குற்றச்சாட்டைச் சொல்லலாம். அமைச்சர்கள் அதை மறுக்கலாம். நீங்கள் குற்றச்சாட்டைச் சொல்வதும், அமைச்சர்கள் அதை மறுப்பதுமாக இருந்தால் இந்தச் சபையின் நேரம்தான் வீணாகும். இந்த மன்றத்தில் பொதுவாக ‘பர்சனல் ரிமார்க்ஸ்’ கொடுக்கக்கூடாது. அப்படிச் செய்யும்போதுதான் ஒருவருக்கொருவர் விவாதம் ஏற்படுகிறது. திரு. செல்லையா அவர்கள் குற்றச்சாட்டைச் சொல்வதாக இருந்தால பொதுவாகச் சொல்லலாம். தனிப்பட்ட, ஒரு குறிப்பிட்டவர் மீதான குற்றச்சாட்டு என்றால் ஆதாரத்தைத் சொல்லுங்கள்; பெயரைச் சொல்லுங்கள். அதுதான் நல்லது.

திரு. குழ. செல்லையா : மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள் குற்றவாளிகளுக்குப் பாதுகாப்பு அளிக்கக்கூடாது என்று சொன்னார்கள். குற்றம் செய்தவர் யார் என்பதை ஆதாரத்தோடு சொல்ல வேண்டுமென்கிறார்கள். லஞ்சம் வாங்கியவர் யார், கொடுத்தவர் யார் என்பது எங்களுக்குத் தெரியும். லஞ்சம் வாங்குவதும், கொடுப்பதும் தவறு என்பதும் தெரியும். கடந்த ஓராண்டு காலமாக தமிழகத்திலே நடைபெறுகின்ற நிகழ்ச்சி என்ன என்பது எல்லோருக்கும் தெரியும். சட்டம் படித்தவர்களுக்கு அது நன்றாகத் தெரியும் என்று நினைக்கிறேன். குற்றங்கள் பல வழிகளில் நடக்கின்றன. காலதாமதத்தின் காரணமாக குறிப்பிட்ட ஒருவன் குற்றத்திற்கு ஆளாக்கப்படுகிறான் என்பதை நான் சொல்கிறேனே அல்லாமல் வேறல்ல.

இன்றைக்கு மின்சார உற்பத்தியில் தடை இருக்கிறது. அதன் காரணமாக பல அலுவல்கள் தடைபடுகின்றன. அதிலே அரசாங்கம் கவனம் செலுத்த தவறியிருக்கிறது. இன்றைக்கு மின்சார வாரியத்தில் கணக்காயர் சங்கம் என்று ஒரு சங்கம் இருக்கிறது. அந்தச் சங்கத்திற்கு ஆளே இல்லை. என்றாலும் மற்ற சங்கத்திலுள்ளவர்களை அச்சுறுத்தி, அந்தச் சங்கத்திற்கு ஆள்





சேர்க்கிறார்கள். தஞ்சை மாவட்டத்தில் இந்த நிலைமையை நான் பார்க்கிறேன். அதுமட்டுமல்ல. ஒவ்வொரு ஊரிலும் ஆளும் கட்சிக்காரர்களுடைய அச்சுறுத்தல்களுக்கிடையேதான் நாங்கள் கட்சிப்பணியாற்றவேண்டியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[பிற்பகல் 1-00]

அதுமட்டுமல்லாமல் கிராமங்களுக்கு எல்லாம் மின்னொளி தருகிற தீவிர திட்டம் ஒன்றைத் தந்தார்கள். அது வரவேற்கக்கூடிய விஷயம். ஆயினும் அதில் ஏற்பட்டிருக்கககூடிய சீர்கேட்டை நாம் மறந்துவிடக்கூடாது. பூரணமாக இன்னும் எல்லாம் இடங்களுக்கும் போடப்படவில்லை. ஆயினும் போட்டுவிட்டதாக எழுதிவிட்டார்கள். தஞ்சை மாவட்டத்தில் என்னுடைய ஊர் முதுகாட்டில் 23 கம்பங்கள் தான் வந்திருக்கின்றன. முழுவதும் வந்துவிட்டதாக கணக்கு வந்திருக்கிறது.

இன்னும் அவசரம் அவசரமாகப் போடவேண்டும் என்பதாக மின்சார காங்கிரீட் கம்பங்கள் தயாரிக்க—வேண்டியவர்களுக்கோ என்னமோ காண்டிராக்ட் கொடுத்தார்கள். அவர்களால் சப்ளை செய்யப்பட்ட கம்பங்கள் போட்ட சில தினங்களிலேயே வளைந்து இருப்பதை ஆங்காங்கே பார்க்கலாம். பலயிடங்களில் விழுந்தே விட்டது. இந்த அளவில் பெரும் சீர்கேடு மின்சார காங்க்கிரீட் கம்பங்கள் தயாரிப்பதிலே நடந்திருக்கிறது. அதிலும் கூட பெரிய அநீதி என்னவென்றால் எஸ்டிமேட் கூட இல்லாமல் ஆளும் கட்சியினர்கள் இருக்கின்ற பகுதிகளில் கம்பங்கள் நடப்பட்டிருக்கின்றன. பின்னர் எஸ்டிமேட் தயாரித்துக்கொள்கிறார்கள். ஆனால் எதிர்க்கட்சிக்காரர்கள்—அதிலும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் இருக்கக்கூடிய பகுதிகளில் எஸ்டிமேட் போட்ட அளவில் கூட கம்பங்கள் நடப்பட்டு வேலைகள் நடக்கவில்லை. தாறுமாறாக கம்பிகள் இழுக்கப்பட்டிருக்கின்றன. அறந்தாங்கி வட்டத்தில் ஆவுடையார் பகுதி புண்ணிய வயல் கிராமத்தில் ஒருவர் இதற்குப் பலியானதையே பத்திரிகையில் பார்த்திருக்கலாம். அவசரமாகக் காரியத்தைச் செய்ய வேண்டும் என்பதற்காகப் பொறுப்பில்லாமல் இதுபோன்று காரியங்கள் நடக்கக்கூடாது என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய பேராவூரணி பகுதியில் நூறு வாட்ஸ் பல்பு போட்டால் ஜீரோ வாட்ஸ் போல இருக்கிறது. கேட்டால் சப் ஸ்டேஷன் அறந்தாங்கியில் இருக்கிறது, பட்டுக்கோட்டையில் இருக்கிறது என்கிறார்கள். பேராவூரணியிலேயே சப் ஸ்டேஷன் போடவேண்டும். இன்னும் பல்புகள் சரியாக எரிவதில்லை. பழைய பல்புகளைப் போல பத்துப் பதினைந்து நாட்களில் ப்யூஸ் ஆகிவிடுகிறது. அப்படியின்றி தரமான பல்புகள் கொடுக்கவேண்டும். 15 சதவிகிதம் மின்வெட்டையும் தவிர்க்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டு இத்துடன் என் வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. கு. இராசமாணிக்கம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1973-74-ம் ஆண்டு நிதிநிலை குறித்தும், 1972–73-ம் ஆண்டுக்கான துணை நிதிநிலை குறித்தும் நடைபெறுகிற விவாதத்தில் நானும் என் கருத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த அறிக்கையில் 1973 டிசெம்பர் 1-ம் நாள் தமிழ்நாட்டிலுள்ள தனியார் மின்சார விநியோக நிறுவனங்களை எல்லாம் அரசே ஏற்கும் என அறிவித்திருப்பது குறித்து நான் மிக்க மகிழ்ச்சி அடைவதோடு, அதனை முழு மனதுடன் வரவேற்கக் கடமைப் பட்டிருக்கிறேன். இந்த அரசு தமிழகத்தில் உள்ள எல்லாப் பகுதிகளுக்கும், எல்லா விவசாய விசையேற்றங்களுக்கும், அரிசனக் குடியிருப்புகளுக்கும் மின்சார வசதியை விஸ்தரிக்க வேண்டும் என்கிற திட்டத்தை உருவாக்குகிற நேரத்தில், ஆலயத்தில் நந்தி மறைத்துக்கொண்டிருப்பதுபோல இந்த தனியார் மின் விநியோக நிறுவனங்கள் இதுவரை அரிசனக் குடியிருப்புகள், வேளாண்மை விசையேற்றங்கள் ஆகியவற்றுக்கு அவர்களது பகுதியில் மின்விஸ்தரிப்புக் கிடைக்காதபடி செய்து வந்தார்கள். அவைகளை அரசுடைமை ஆக்குவதன் மூலம் அந்தப் பகுதிகளுக்கு எல்லாம் மின் விஸ்தரிப்புக் கிடைக்க வழியேற்படும் என்பதை அறிந்து நான் இந்த அரசையும், மின்சாரத்துறை அமைச்சர் அவர்களையும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பலரும் மின்சாரத்தின் நிலைமைபற்றி இங்கே சொன்னார்கள். அண்மைக் காலத்தில் நமக்கு ஏற்பட்ட மின்சாரப் பற்றாக்குறை பற்றி எல்லோரும் அறிவார்கள். இயற்கை பொய்த்து மழை





இல்லாதுபோய்விட்ட காரணத்தினால் நிலக்கரி போதுமான அளவு கிடைக்காது போனதினால் நமக்கு அந்தச் சங்கடம் வந்தது. அப்படிப்பட்ட பெரும் அளவிற்கு மின்சாரப் பற்றாக்குறை இருந்த நேரத்திலும் கூட மிகத் திறமையாக அதைச் சமாளித்து, உணவுத் துறையில் தன்னிறைவு கூட அல்ல பிற மாநிலங்களுக்கு அனுப்பி வைக்கிற அளவு உற்பத்தியைப் பெருக்கக்கூடிய வகையில் இந்த அரசு செயல்பட்டிருப்பதைப் பாராட்டவேண்டும். மின்சாரப் பற்றாக்குறை ஏற்பட்டதற்கு இந்த அரசே முழுப் பொறுப்பல்ல என்பதை நாம் அறிவோம். ஆளுங்கட்சியைக் குறை சொல்ல வேண்டும் என்பதற்காக சிலர் ஏதோ சொல்வதுபற்றி கவலையில்லை. புள்ளிவிவரங்களின்படி தமிழகத்தில் மின் இணைப்பு கிடைக்காத அரிசனக் காலனிகள் 806 என்றால் அவை எல்லாவற்றுக்கும் மின்சாரம் இன்னும் ஓராண்டிற்குள் அளிக்கிற திட்டம் அநேகமாக முடிந்துவிடக்கூடிய நிலையில் இருக்கிறது.

இன்னும் தனியார் மின் விநியோக நிறுவனங்களை எடுத்துக் கொண்டுவிட்டால் அந்தப் பணி நன்கு நடைபெற்றுவிடும். அந்த நிறுவனங்களை எடுத்துக்கொள்வதாக நாம் அறிவித்த நேரத்தில் கும்பகோணம், நாகப்பட்டிணம் போன்ற இடங்களில் உள்ள தனியார் கம்பெனிகள் செப்புக் கம்பிகளை அகற்றி அலுமினியக் கம்பிகளைப் பொருத்தி வருகிறார்கள். நஷ்ட ஈடு என்று கணக்கிடுகிற போது செப்புக் கம்பி அடிப்படையில் கணக்கிட்டு அரசு தருவார்களா? அலுமினியக் கம்பி அடிப்படையில் கணக்கிட்டுத் தருவார்களா? இது தினசரி நடைபெறுகிற காரியமாக இருக்கிறது. அதிகாரிகள் இது விஷயத்தில் கவனமாக இருக்கவேண்டும்.

கும்பகோணம் தனியார் மின் நிறுவனத்தைச் சேர்ந்த ஆடுதுறை பகுதியில், இடையாநல்லூர் கிராமத்தை எடுத்துக் கொண்டாலும் அதைச் சுற்றியுள்ள 60 கிராமங்களை எடுத்துக் கொண்டாலும் மின்சார பம்பு செட்டுகளே கிடையாது. டீசல் என்ஜின் போட்டுத் தான் ஒருசிலரும் ஆயில் மோட்டார்களை விவசாயத்திற்கு இயக்கி வருகிறார்கள். அந்த கிராமங்கள் உடனடியாக மின் விஸ்தரிப்பு செய்யப்படும் என்கிற சுயநலத்தினாலும்தான் நான் தனியார் மின்விசை விநியோகக் கம்பெனிகளை எடுத்துக்கொள்வதை வரவேற்கிறேன் என்று முன்னதாகவே சொன்னேன். மின் விஸ்தரிப்பு 1973-க்குள்

பூர்த்தியாகியிருக்க வேண்டும். சென்ற ஆண்டு எதிர்பாராத வகையில் ஏற்பட்ட மின்வெட்டின் காரணத்தினால் ஒரு ஆண்டு தள்ளிவிட்டது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

இந்த ஆண்டு எல்லா இடங்களுக்கும் விஸ்தரிக்கப்படவேண்டும். அதோடு மின்சாரக் கட்டணங்கள் நிறைய பாக்கியிருக்கிறது என இங்கு பேசப்பட்டது. இந்த மின்சாரக் கட்டணத்தைத் தரக்கூடிய அளவுக்குக் கிராமப் பஞ்சாயத்துக்களில் பார்த்தால் வருமானம் இல்லை. இந்தக் கட்டணத்தைக் கொடுத்துவிட்டால் அவர்களால் சாலை வசதி, குடிநீர் வசதி, துப்புரவு வசதி எதுவும் செய்ய முடியாது. ஆகவே இந்த மின்சாரக் கட்டணத்தைச் செலுத்த பஞ்சாயத்துகளுக்கு நிலத்தின் மீது ஒரு வரியை விதிக்க அரசு அனுமதிக்கவேண்டும். இன்றைக்கு மின்சாரக் கட்டணத்தை பஞ்சாயத்துக்களுக்காக யூனியன் கட்டிவிடுகிறது. பிறகு பஞ்சாயத்துக்கு தருவதில் கழித்துவிடுகிறது. பஞ்சாயத்துக்கு எப்படி வேலைகளைச் செய்ய பணம் வரும்? சாலையிலே இருக்கிற பள்ளம், மேடுகளை சரிப்படுத்த வேண்டும், குடி தண்ணீர் வசதிகளை பெருக்க வேண்டும் என்றால், பணம் இருப்பதில்லை. அப்படிப்பட்ட சூழ்நிலை இருக்கிறது. மின்சாரம் வழங்கி ஆக்க வேலைகளையும் வருமானத்திற்குரிய வழிமுறைகளையும் இன்றையதினம் அரசு பரிசீலிக்கவேண்டும். இப்பொழுது ஏழைகள் உபயோகிக்கின்ற வாகனம் என்ற முறையில் வாகன வரி—சைக்கிள் வரி—யைக் கூட ரத்து செய்கின்ற நிலையிலே பஞ்சாயத்து நிலைமை இருக்கிறது. அங்கே குக்கிராமங்களிலுள்ள வீடுகள் சிறு சிறு குடிசைகளாக இருக்கிற காரணத்தால் அதிகப்படியான வரியை வீடுகளுக்கு விதிக்க முடியாது. ஆகவே, நிலத்தினுடைய அடிப்படையிலே தான் அவைகளைச் செய்யவேண்டும். வரியைப் பொறுத்து, நிலத்தினுடைய அடிப்படையிலே வரி விதிக்கவேண்டுமென்று சம்பந்தப்பட்ட ஆட்சித் தலைவர்களுக்கெல்லாம் அந்த உத்தரவை வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளவிரும்புகிறேன்.

மின்சாரம் இல்லையென்றால், வாழ்க்கையிலே எதுவும் நடைபெறுவதாகத் தெரியவில்லை. மிகப்பெரிய சக்தியாக அது இருக்கிறது. நிலம், நெருப்பு, காற்று, நீர், ஆகாயம் என்று ஐந்தை





சக்திகளாக சொல்லிக்கொண்டு வந்ததைப்போல், இன்றையதினம் 6-வது சக்தியாக, இன்றியமையாததாக மின்சாரம் இருக்கிறது. நடைமுறையிலே அப்படித்தான் வருகிறது என்று நிச்சயமாகச் சொல்லலாம். மழை இல்லையென்று சொன்னால் அரசு காரணம் என்று சொல்ல முடியாது. வெயில் கூடுதலாக, அல்லது குறைவாக இருக்கிறது என்றால் அரசு காரணம் இல்லை என்பதுபோல், மின்சாரப் பற்றாக்குறை நிலைமைக்கும் அரசுதான் காரணம் என்று சொல்ல முடியாது. எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும், மழை இல்லை, நீர்த்தேக்கங்களில் நீர் நிலை சரியாக இல்லை, நிலக்கரி போன்ற அடிப்படைப் பொருள்கள் இல்லை என்றால், மின்சார உற்பத்தி குறைவாகத்தான் இருக்கும். யார் எப்படிப் பேசினாலும், எப்படிப்பட்ட வாதங்களை எடுத்துச் சொன்னாலும், 6-வது சக்தியாக மின்சாரம் இருக்கிறது. செயற்கையைக் கூடுதலாகச் செய்வதற்கு என்ன நடவடிக்கைகளை எடுத்தாலும், மழை இல்லை, நீர் நிலைகளில் நீர் இல்லையென்ற அப்படிப்பட்ட நேரத்தில் என்ன நிலையை ஏற்படுத்தினாலும் சமாளிப்பது கஷ்டம். நேற்றைய தினம் முதல்வர் அவர்கள், நெய்வேலி நிலக்கரியைப் பயன்படுத்தி மின்சாரம் தயாரிக்க இரண்டாவது சுரங்கம் அமைக்கின்ற திட்டத்தை ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே சேர்த்துக் கொள்ளவேண்டுமென்று தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றினார்கள். முன்னால் ஏற்பட்ட நிலைகளுக்கு இந்த அரசு தான் காரணமா என்று பார்த்தால் இல்லை. மத்திய அரசுதான் அதற்குக் காரணம். இங்கே இருக்கிறவர்கள் சம்பந்தப்பட்ட அமைச்சர்தான் காரணம், இந்தத் துறைதான் காரணம், அதிகாரிகள்தான் பொறுப்பில்லாமல் இருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். அவர்கள் ஒன்றை பரிசீலித்துப் பார்க்கவேண்டும். ஆளும் கட்சியை எதிர்த்துப் பேசவேண்டும் என்பது ஒரு உத்தியோகமாக இருக்கலாம். பத்திரிகைகளிலே பிரபலமாக இருக்கும் என்பதற்கு அவ்வாறு பதில் சொல்லலாம். நேற்றைய தினம் கொண்டு வந்த தீர்மானத்தை எல்லா எதிர்க்கட்சித் தலைவர்களும் ஆதரித்தார்கள். நவசக்தி பத்திரிகையிலே பொன்னப்ப நாடார் அவர்கள் அந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்ததைப் போல, அந்த அடிப்படையிலே செய்தியைப் போட்டிருக்கிறார்கள். அதைப் பற்றிக் கூட ஒன்றும் கவலை இல்லை. மின்சாரத் துறை பாதுகாக்கப்பட வேண்டும். சில தனிப்பட்டவர்களும் அடித்துக் கொள்ளுகிறார்கள். அரசாங்கத்தைப் பொறுத்த மட்டில், நிலைமை

களுக்கு அது காரணம் இல்லை என்பதை நாம் அனைவரும் உணர வேண்டும். ஆளும் கட்சி என்றோ, தோழமைக் கட்சி என்றோ எதிர்த்துப் பேசக்கூடாது.

இன்றையதினம் பேரவை நடக்கிறது என்று சொன்னால், மின்சாரம் இல்லையென்றால் அவையை ஒத்திவைத்துவிட்டு போக வேண்டியிருக்கும். மின்சாரம் இல்லாமல் காபி போடமுடியவில்லையென்றால், பற்றாக்குறை ஏற்பட்டால், அதனுடைய விலை ஏறிவிடுகிறது. இன்றையதினம் பெட்ரோல், டீசல், மண்ணெண்ணெய் ஆகியவற்றின் விலைகள் உயர்ந்திருக்கின்றன. காரணம் மின்சாரப் பற்றாக்குறை இருந்த நேரத்தில் இந்தத் தட்டுப்பாட்டை நீக்க அவற்றைப் பயன்படுத்தினோம். கிராமப் பகுதிகளாக இருந்தாலும் மின்சாரம் இல்லையென்று சொன்னால், மண்ணெண்ணெய் தேவையாக இருக்கிறது. நகரங்களிலும் மண்ணெண்ணெய் தேவையாக இருக்கிறது. ஆக, அப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கின்றன. மின்சாரம் இல்லையென்று சொன்னால் இன்னாரைத்தான் பாதிக்கும், இன்னின்ன நிலைமைகளைத்தான் பாதிக்கும் என்று இல்லாமல், எல்லாவற்றையும் பாதிக்கும் நிலை உள்ளது. ஆகவே, கட்சிப்பிரதிகட்சியாக எடுத்துக்கொள்ளாமல், உண்மையான காரணங்கள் என்ன என்பதைப் பார்த்து, அரசாங்கத்திற்கும் மின்சார இலாகாவிற்கும் நல்ல ஆதரவினை, யோசனைகளைச் சொல்ல வேண்டும். ஏதாவது ஒரு வழியாக திருப்பிவிடக்கூடிய யோசனைகளாகச் சொல்லாமல், ஆக்கபூர்வமான யோசனைகளை இங்கே இருக்கிற அங்கத்தினர்கள் சொல்ல வேண்டும். அடுத்து வர இருக்கின்ற ஆண்டுகளில் முழுப் பயனையும் பெறவேண்டும். வேறு விவாதங்களை நடத்தாமல், உண்மையானக் காரணங்களைக் கண்டுபிடித்து, இன்ன செய்தால் பயனுள்ளதாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். நமது மின்சார அமைச்சர் அவர்கள் எவ்வளவ நெருக்கடியான நேரத்தில் பொறுப்புகளைத் தாங்கி, எவ்வளவு பேர்கள் எவ்வளவு சொன்னாலும் சோர்ந்துவிடாமல் காரியங்களைச் செய்திருக்கிறார்கள்.

என்னைப் பொறுத்தவரையில், நான் விவசாயி. விவசாயி என்ற முறையில் மின்சாரம் பெற்று, உற்பத்தியைப் பெருக்கி, உணவைப் பொறுத்தமட்டில் தன்னிறைவு பெற்றிருக்கிறோம் என்பது எனக்கு நன்கு தெரியும். அந்த அடிப்படையில்



விவசாயிக்கு என்னென்ன அளிக்கவேண்டுமென்று அதில் மிகவும் கவனம் செலுத்தி அரசு மின்சாரம் அளித்துள்ளது. ஆகவேதான், கேரளத்திற்கும், மைசூருக்கும், மகாராஷ்டிரத்திற்கும் அரிசி அனுப்பியிருக்கிறோம். இன்னும் இதுபோன்று மற்ற மாநிலங்களுக்கு உணவை அனுப்ப, மின்சாரம் முழு அளவு பயனபட வேண்டும். என்னுடைய பகுதியிலே 60 கிராமங்களுக்கு மின்சாரம் இல்லை. இரண்டு பகுதியாக இருக்கிறது. அதில் திருப்பனந்தாள் ஊராட்சி ஒன்றியப் பகுதியிலுள்ள 60 கிராமங்களுக்கு 1974-க்குள் மின் இணைப்பு தரவேண்டுமென்று கேட்டு இத்தோடு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திரு. கே. எ. வகாப் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சார வாரியத்தினுடைய நிதிநிலை அறிக்கையை வரவேற்று பேசுமுகத்தான் என்னுடைய கருத்துக்களைச் சொல்கிறேன்.

இன்றையதினம் இந்திய துணைக் கண்டத்திலேயே மின்சாரத்திலே, மின் இணைப்பு கொடுப்பதிலே, விவசாயிகளுக்கு மின் இணைப்பு கொடுப்பதிலே தமிழகம் தான் சிறந்த இடம் பெற்றிருக்கிறது என்ற பெரிய பெருமை நமக்கு இருக்கிறது. ஆனால், நம்முடைய பெருமைகளைப் பேசுகின்ற நேரத்திலே உள்ள குறைபாடுகளைச் சொல்கின்ற நிலைமைகளும் இருக்கின்றன. ஒரு மரத்திலே அதிகமான கனிகள் இருந்தால்தான், அவ்வழியில் செல்பவர்களுக்குக்கெல்லாம் ஆசை எற்படும். அக்கனிகள் மேல் கல்லெடுத்து எறிவார்கள். அதனாலே பழத்திலே சுவை குறைந்திருக்கிறது என்று பொருள் இல்லை. மின்சார வாரியம் பெரிய பளுவைத் தாங்கிக்கொண்டிருக்கிற சக்தியாக இருக்கிற காரணத்தால் குறைபாடுகளும் அதிகமாக எடுத்துச் சொல்லக் கூடியதாக இருக்கின்றது. ஆனால் போகின்ற போக்கிலே புழுதியை வாரி எறிகின்ற நிலையிலே இல்லாமல் இருப்பதையும் நாம் பார்த்துக் கொள்ளவேண்டும். அம்மாதிரி பார்த்துக்கொள்ளவேண்டுமென்பதையும் இங்கே சற்று நேரத்திற்கு முன்பு பேசிய விவாதங்களிலிருந்து நாம் தெரிந்து கொள்ளவேண்டியவர்களாக இருக்கிறோம். எப்படி எரிகின்ற விளக்குக்கு தூண்டுகோல் அவசியமாக இருக்கிறதோ அந்த நிலைமையிலே விவாதங்கள் இருக்கவேண்டும். எரிகின்ற விளக்கை அணைக்கின்ற வகையிலே விவாதங்கள் இருப்பது, நல்வாழ்வுக்கு மாறாகவும் இருக்கும் என்பதை இந்த நேரத்திலே நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

[திரு. கே. எ. வகாப்] [1973 நவம்பர் 20

மின்சார வாரியத்தினுடைய எல்லாத் திறமைகளையும் பாராட்டுகின்ற அதே நேரத்திலே குறைபாடுகளை எடுத்துச் சொல்வதிலே நானும் பங்குகொள்ள முன்வந்திருக்கிறேன். இன்றையதினம் 15 சதவிகிதம் வெட்டு என்று ஏற்பாடு செய்திருக்கிறார்கள். ஆனால், நாட்டிலே நல்லமுறையில் மழை பெய்திருக்கிறது. அனல் மின் நிலையங்களிலும் அதிகப்படியாக உற்பத்தியிருந்தாலும், 15 சதவிகிதம் மின் வெட்டு ஏன் என்ற கேள்வி பரவலாக இருக்கிறது. ஆனால், அதற்கான காரணங்களை மின்சார வாரியம், அதனைச் சார்ந்தவர்களும் சொல்ல முடியும். செழுமையான முறையிலே மழை பெய்து, நீர்த்தேக்கங்கள் நிறைந்துள்ள இந்த நேரத்திலே இப்படி வெட்டு இருக்குமானால், இன்னும் எதிர்காலத்திலே, வறட்சியான காலத்திலே எவ்வளவு மின்சார வெட்டு வரும் என்ற பயங்கரமான நிலையை நாம் உணர வேண்டியவர்களாக இருக்கிறோம்.

எழுபத்தைந்து சதவிகிதம் மின்சார வெட்டு இருந்த காலத்திலே, மருத்துவ மனைகள், குடிநீர்த் தேக்கங்கள், போன்றவற்றிற்கெல்லாம் வெட்டு அடியோடு இல்லையென்று இந்த மாமன்றத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். ஆனால், இன்றைய தினம் 15 சதவிகிதம் வெட்டு என்று இருக்கிற நேரத்தில், அத்தியாவசியத் தேவையான மருத்துவமனை போன்றவற்றிற்கும் 10 சதவிகிதம் வெட்டு என்று அறிக்கைகள் விடப்பட்டிருக்கின்றன. மின்சாரம் இல்லாமையினாலே பல கோளாறுகள், இடையூறுகள் ஏற்படுகின்றன. அதுவும் நகராப் பஞ்சாயத்துக்களுக்கு பொறுப்பு வகிக்கின்ற எங்களுக்கு நிறைய சிரமங்கள். நாங்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டால், சரியான பல்புகள், சோக்குகள் கிடைக்கவில்லை என்று சொல்கிறார்கள். முன்பு மாவட்ட அதிகாரி என்று இருந்தவருக்கு சில அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருந்தன. இந்த மாவட்டத்திற்கு இத்தனை ஆயிரம் ரூபாய்க்கு மின்சார சாதனங்கள் வாங்கி சப்ளை செய்யலாம் என்று இருந்தது. அண்மையிலே அது குறைக்கப்பட்டதாக அறிகிறோம். இப்பொழுதுள்ள குறைகளை நிவர்த்திக்க வேண்டுமென்றால் அவர்களுக்கு சிலபல அதிகாரங்கள் கொடுத்துத்தான் ஆகவேண்டும். ஆனால் குறைபாடுகள் எங்கோ ஏற்படுகின்றன என்பதனாலே அப்படிப்பட்ட அதிகாரங்களை எடுத்துவிடக் கூடாது என்பது



1973 நவம்பர் 20] [திரு. கே. எ. வகாப்]

தான் என்னுடைய தாழ்மையான எண்ணமாகும். இன்றைக்கு கிராமப்புறங்களிலே டியூப் லைட்டுகள் போட்டிருக்கிறோம். அதைத் தவிர சாதாரண மின்விளக்குகளையும் போட்டிருக்கிறோம். டியூப் லைட் ஒரு பிரச்னையாக இருக்கிறது. நான் சார்ந்திருக்கின்ற நகராப் பஞ்சாயத்திலே 350 டியூப் லைட்டுகள் போடப்பட்டிருக்கின்றன, அவற்றில் 50 தான் எரிகின்றன, இதைப்பற்றி அதிகாரிகளிடம் கேட்டால் சோக்கில்லை கிடைக்கவில்லை என்று சொல்கிறார்கள். அவர்கள் வாங்குவது பல நண்பர்கள் இங்கே குறிப்பிட்டதைப்போல்—சாதாரண நிலையிலுள்ள சாமான்களைத்தான் வாங்குகிறார்கள், நல்ல தரமான சாமான்களாக வாங்குவதற்கு அவர்களுக்கு அதிகாரங்களை அளிக்கவேண்டும். அவர்கள் சிப் பஸ்ட் கொட்டேஷனில் பொருள்களை வாங்கினால் அவற்றின் பலன்களும் அப்படித்தான் இருக்கும். அலுமினியம் சோக் வாங்கினால் ஒரு மாதம் தாங்கும், ஆனால் அதே நேரத்திலே காப்பர் சோக் வாங்கினால் 6 மாதங்களுக்குத் தாங்கும் என்று சொன்னால், விலை அதிகமாக இருந்தாலும் அதைத்தான் வாங்கவேண்டும். ஒவ்வொரு பஞ்சாயத்திலும், பஞ்சாயத்து யூனியனிலும், மாவட்ட வளர்ச்சிக் கழகத்திலேகூட அதிகமாக எழுப்பப்படுகிற பிரச்னை மின்சாரம் பற்றியதுதான். நான்கூட அண்மையிலே மேலதிகாரிகளை இதுகுறித்துச் சந்தித்துக் கேட்டேன். டியூப் லைட் பல்புகள் நல்ல தரமுள்ளவை வைத்திருப்பதாகச் சொல்கிறார்களே, கொடுங்கள், நாங்கள் பஞ்சாயத்திலிருந்து பணம் கொடுக்கிறோம் என்று கேட்டேன், அவர்களும் பார்ப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். இந்த உதவியை மின்வாரியம் செய்துதரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சாதாரண காலங்களிலே குடிநீர் அதிகப்படியாக வழங்க முடியும். ஆனால் இப்பொழுதே குடிநீர் வழங்கமுடியாத நிலைமை இருக்கிறது. இந்த நிலையில் வருகிற சித்திரை மாதத்தில் குடிநீர் கிடைக்குமா என்ற நிலைமையெல்லாம் வரக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே மருத்துவத் துறை, குடிநீர் ஆகியவற்றிற்கு இப்பொழுது இருக்கின்ற 10 விழுக்காடு மின்சார வெட்டை நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே பேசிய பல உறுப்பினர்கள் விவசாயிகளுடைய சிரமங்களைப் பற்றியெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். இப்பொழுது 15 விழுக்காடு அளவிற்கு அவர்களைப் பொறுத்தவரையில் மின்வெட்டு

[திரு. கே. எ. வகாப்] [1973 நவம்பர் 20

இருந்தாலும்கூட அவர்களுக்கு இன்னும் அதிகப்படியாக மின்சாரம் கிடைக்காத சூழ்நிலை இருக்கிறது, அவர்களுக்குக் கொடுப்பதற்குப் பதிலாக அதை வேறு முறையில் பயன்படுத்துவதாகத் தெரிகிறது. நாம் வேறு எந்த மாநிலத்தையும் விட உணவு உற்பத்தியிலும் பசுமைப் புரட்சியிலும் தலைசிறந்து நிற்பதற்குக் காரணம் மின்சாரம்தான். வட ஆர்க்காடு மாவட்டத்திலே 2 இலட்சத்திற்கும் அதிகமான மின் இணைப்புகள் தரப்பட்டிருக்கின்றன. அதனால்தான் உணவு உற்பத்தியில் தஞ்சைக்கு அடுத்தபடியாக வட ஆர்க்காடு மாவட்டம் இருக்கிறது. பல்லாயிரக் கணக்கான மனுக்கள் இன்னும் அங்கே பரிசீலனையில் இருக்கின்றன. விவசாயிகளுக்குத் தேவையான அளவு மின்சாரம் கிடைக்கச் செய்து இன்னும் உணவு உற்பத்தியை அதிகப்படுத்த ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்திலே பொருளாதார வளர்ச்சிக்கு அடிப்படையாக விளங்குகின்ற சிறு தொழில்கள் மின்சாரம் பெற்றால்தான் தொழில் வளர்ச்சி ஏற்றம் பெறமுடியும். சிறிது காலத்திற்கு முன்பாக சில கட்டுப்பாடுகளை வைத்திருந்து இப்பொழுது அவற்றைத் தளர்த்தியிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். சாதாரணமாக ஒரு சிறு தொழில் ஆரம்பிக்கவேண்டுமென்றால் மின்சாரத்தைப் பெற வேண்டுமென்றால் பல்லாயிரக்கணக்கான ரூபாய், மெட்டீரியல் காஸ்ட் என்றும் கண்டக்டர் காஸ்ட் என்றும் கட்டவேண்டுமென்ற திட்டத்தை இப்பொழுது தளர்த்தியிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். அது எப்பொழுதும் நிரந்தரமாக இருக்கவேண்டும். அப்படிச் செய்தால்தான் சிறு தொழில்கள் வளர்ச்சியடையும், சிறு தொழில்கள் வளர்ச்சியடைந்தால்தான் நாட்டிலே பொருளாதார சமநிலை ஏற்படும், செழிப்பு ஏற்படும். சிறு தொழில்களுக்கு சில கூட இப்படி -- வேண்டும். அப்படிச் சலுகைகளைத் தராவிட்டாலும் வேண்டும். ... சாதாரண நடைமுறைகளைத் தளர்த்த

மின்சார வாரிய
மேலாக இருப்பதாக ... ற்கு வரவேண்டிய தொகை 10 கோடிக்கு
எதனால் ஏற்பட்டது ... அங்கே சிலர் சுட்டிக்காட்டினார்கள். இதை
ஆராய்ந்து, அதை வ... ர்பதை மின்சார வாரியம் உடனடியாக
மூன்று நான்கு மாதங்க... செய்யக்கூடிய நிலைமையை ஏற்படுத்தி—
என்ன என்றால் போதிய ... த பணம் கட்டப்படாததற்குக் காரணம்
அலுவலர்கள் இல்லையென்று சொல்கிறார்



1973 நவம்பர் 20] [திரு. கே. எ. வகாப்]

கள். இரண்டாயிரம் பேர்கள் வேண்டுமென்றால் இரண்டு லட்சம் பேர்கள் அப்ளிகேஷன் போடுகிறார்கள், ஆகவே இந்த நிலைமையிலே அதிகமான ஆட்களை நியமித்து—பத்து கோடி ரூபாயை வசூலிக்கின்ற நிலைமையிலே அதற்கு வட்டி, வட்டிவிகிதம் என்ன என்று பார்த்து நஷ்டம் ஏற்படாமல் வசூலிப்பதற்கு நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டும். இந்த நிலையில் இரண்டாயிரம் பேர்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுத்து வசூல் செய்யக்கூடிய நிலைமையை ஏற்படுத்தலாம். வாரியம் நன்றாக இருந்தால்தான் சிறு தொழில்கள், விவசாயம் நன்றாக நடைபெற முடியும்.

மின்சார இணைப்புபற்றி இதற்கு முன்பே பல முறைகள் குறிப்பிட்டு இருக்கிறோம். டிரான்ஸ்மிஷனிலே இழப்பு 17 சதவிகிதம் ஆகிறது என்று சொல்கிறார்கள். இதை உடனடியாகப் பரிசீலிக்க வேண்டும். இதற்காக ஒரு நிபுணர் குழுவை ஏற்படுத்தி தேவையானால் அவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்றுகூட இந்த இழப்பை எப்படி ஈடு செய்யலாம் என்பதைப் பரிசீலனை செய்யவேண்டும். நாம் தயாரிப்பதிலேயே நாலில் ஒரு பங்கு வீணாகப் போகிறது, இப்படி நேஷனல் வேஸ்ட் ஆக, தேசீய நஷ்டமாக ஏற்படுவதை ஈடுசெய்துவிட்டால் வெட்டைக்கூட நீக்கிவிட முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே நேரத்திலே நாம் இப்பொழுது தனியாரிடத்திலேயுள்ள மின்துறைகளை எடுக்க இருக்கிறோம். பொதுமக்களுக்கு சரியாகவோ தவறாகவோ ஒரு எண்ணம் இருக்கிறது. தனியாரிடத்திலே இருந்தால் நல்ல முறையிலே நடக்கும், அரசாங்கம் அதை எடுத்துக்கொண்டால் நல்ல முறையில் நடைபெறாது என்ற மனப்பான்மை இருக்கிறது. எனவே தனியார்களிடமிருந்து எடுக்கின்ற மின்துறைகளைத் திறமையான முறையிலே நிர்வாகம் செய்வதற்காக தனியாக ஒரு ஸ்தாபனத்தை ஏற்படுத்தி சிலர் குறிப்பிட்டதைப்போல இந்த மாநிலத்தையே மூன்று, நான்கு வட்டங்களாகப் பிரித்து தனித்தனியாக அதிகாரங்களைக் கொடுத்து வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யலாம். அமைச்சர் ராஜினாமா செய்யவேண்டும், வாரியத் தலைவர் ராஜிநாமா செய்ய வேண்டும் அல்லது அவரை மாற்ற வேண்டும் என்றெல்லாம் சொல்வது நம்முடைய பிரச்சினையைத் தீர்த்துவிடுமா என்பதை அப்படிப் பேசிய நண்பர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அவர்களிடம் சொல்லி நல்ல முறை

[திரு. கே. எ. வகாப்] [1973 நவம்பர் 20

யிலே செயல்படச் செய்யவேண்டும். ஒரு வாரியத் தலைவர் குறைந்தபட்சம் 3 அல்லது 4 ஆண்டுகள் அனுபவம் பெற்றவராக இருக்கவேண்டுமென்றால் அந்த வாய்ப்பை அவர்களுக்கு அளித்து பல நிபுணர்களின் ஆலோசனைகளைப் பெற்று நடத்த வேண்டும். யாரும் ராஜிநாமா செய்யவேண்டாம். தலைமையை மாற்றிவிடுவதால் இந்த வெட்டை நீக்கிவிட முடியுமா? நேற்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்த தீர்மானத்தைப் போன்ற தீர்மானங்களுக்கு நாம் ஆக்கமும் ஊக்கமும் அளிக்கவேண்டும். அனல் மின்நிலையங்களை அதிகமாக ஏற்படுத்த வேண்டும்.

மின்சார வாரியத்திற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்ற அதே நேரத்திலே நான் ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். 7, 8 கோடி ரூபாய் அளவிற்கு சிறு தொழில் நிறுவனங்களுக்கு மின்சாரத்தைத் தருவதற்கு முயற்சி செய்துகொண்டிருக்கிறார்கள். அதற்காக அவர்களுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நேரத்திலே நான் ஒரு யோசனையைச் சொல்ல விரும்புகிறேன். இராணிப்பேட்டையிலே 712 ஏக்கரா நிலத்திலே தொழிற்பேட்டையை நிறுவ கால்கோள் விழா நடந்துவிட்டது. அந்தத் தொழிற்பேட்டையிலே பல்புகள் செய்யக்கூடிய தொழிற்சாலையை நிறுவ நீங்கள் ஏற்பாடு செய்யவேண்டும். அது மட்டுமல்ல, அங்கே ஒரு அனல் மின்நிலையத்தையும் ஏற்படுத்துவதற்கு வாய்ப்பு இருக்கிறது. இந்த முறையிலே இராணிப்பேட்டையிலே ஒரு அனல் மின்சார நிலையம் ஏற்படுத்துவதற்கு ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். இந்தக் கருத்துக்களைக் கூறிக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இந்த அளவோடு முடிவுற்று, பேரவை மீண்டும் நாளைக் காலை 9 மணியளவில் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் **1-30** மணிக்கு ஒத்திவைக்கப் பட்டது.



## (7) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### *A. Statutory rules and orders.*

77. Notification issued with G.O. Ms. No. 499, Rural Development and Local Administration, dated the 20th March 1973 in regard to certain amendments to the Madras Corporation Engineering Service Rules. [Laid on the Table of the House under section 348 (*d*) of the Madras City Municipal Corporation Act, 1919 (Tamil Nadu Act IV of 1919).]

78. Notification issued with G.O. Ms. No. 1899, Home, dated the 12th July 1973 in regard to an amendment to Rule 215-A of the Tamil Nadu Motor Vehicles Rules, 1940. [Laid on the Table of the House under section 133(3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]

79. Notification issued with Roc. No. 186939/72-F2, dated the 23rd June 1973, in regard to alteration of K. Abishekapuram Village Panchayat in Tiruchirappalli district as Town Panchayat with effect from 1st October 1973. [Laid on the table of the House under section 199 (2) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

80. Notification issued with G.O. Ms. No. 5375, Revenue, dated the 3rd September 1973, in regard to exemption from liability to entertainments tax, show tax and additional surchage on entertainments tax to the benefit firm shows conducted in the City of Madras and in districts in connection with the National Teachers' Day Celebration on 5th September 1973. [Laid on the Table of the House under sections 16 (4), 8 (3) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939) and the Tamil Nadu Local Authorities Finance Act, 1961 (Tamil Nadu Act 52 of 1961) respectively.]

81. Notification issued with G.O.P. No. 2764, Revenue, dated the 21st May 1973 in regard to an amendment relating to extension of sales of documentary film, etc., to the panchayat unions published at page 1342 of Part III of the Tamil Nadu Government Gazette, dated the 14th July 1965. [Laid on the Table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

### *B. Reports, Notifications and Other Papers.*

21. Rejoinder by Thiruvalargal M. G. Ramachandran, M.L.A., and M. Kalyanasundaram, M.P., and reply thereto.

## இணைப்பு I

[177-ம் பக்கத்தில் 226 ஆம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

உலக வங்கிக் குழு 1973 மே திங்கள் 16-ஆம் நாள் சென்னைக்கு வந்து சேர்ந்தது. இந்தக் குழு மே 17 ஆம் நாள் சென்னையில் தங்கியிருந்தபோது, சில உறுப்பினர்கள் சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரிக்குச் சென்று பார்வையிட்டனர். குழு, மே 18 ஆம் நாள் சென்னையை விட்டு கோயம்புத்தூர் சென்றடைந்து, பல்கலைக்கழகத் துணை வேந்தருடனும் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ஏனைய முதுநிலை அதிகாரிகளுடனும் விவாதித்தது. மே திங்கள் 19 ஆம் நாள் இக்குழு உதகமண்டலம் சென்று, மீனளத்துறை இயக்குநருடன் விவாதித்தது. குழுவின் உறுப்பினர்களில் சிலர் மே திங்கள் 20, 21 ஆம் நாட்களில் கோயம்புத்தூரில் உள்ள உழவர்களின் நிலங்கள், ஆராய்ச்சி நிலையங்கள், ஆய்வுக் கூடங்கள் ஆகியவற்றிற்குச் சென்று பார்வையிட்டனர். மற்ற உறுப்பினர்கள் பவானிசாகரில் உள்ள வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்திற்குச் சென்று பார்வையிட்டனர். இக்குழு மே திங்கள் 22 ஆம் நாள் மதுரைக்குச் சென்றது. அதற்கு அடுத்த நாள் மதுரை வேளாண்மைக் கல்லூரி ஆராய்ச்சி நிலையத்தைப் பார்வையிட்டது. மே திங்கள் 24 ஆம் நாள் இக்குழு மண்டபம் சென்று பார்வையிட்டது. அங்கு குழுவினர், மீன் பதப்படுத்தல், மீன்பிடி படகு கட்டுதல், மீன் தூள் உரத் தொழிற்சாலை, மீனவர்களுக்காக நடத்தப்பட்டு வரும் பயிற்சித் திட்டம் ஆகியவை பற்றி தெரிந்து கொண்டனர். மண்டபத்தில் உள்ள இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் குழுவினைச் சேர்ந்த மத்திய ஆழ்கடல் மீனள ஆராய்ச்சி நிலையத்திற்கும் இக்குழு சென்று பார்வையிட்டது. மே திங்கள் 24 ஆம் நாள் இக்குழு கோடைக்கானலில் உள்ள ஆப்பிள் பழ ஆராய்ச்சி நிலையத்தைப் பார்வையிட்ட பின், மே 25 ஆம் நாள் மதுரைக்குத் திரும்பியது. மே 26 ஆம் நாள் இக்குழு சென்னைக்கு வந்து, மாநிலத்தின் வளர்ச்சி நடவடிக்கைகள் குறித்து வேளாண்மைத் துறை அரசுச் செயலாளர், வேளாண்மைத் துறை இயக்குநர் ஆகியோருடன் விவாதித்தது. துறையின் வளர்ச்சி நடவடிக்கைகள் குறித்து அவர்கள் தெரிந்து கொள்வதற்காக இக்குழு உறுப்பினர்கள் சென்னை மாநகரைச் சுற்றியுள்ள சில இடங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். மே 28-ஆம் நாள் இக்குழுவினைச் சேர்ந்த மூன்று உறுப்பினர்கள் திருவனந்தபுரத்திற்கும் மற்ற மூன்று உறுப்பினர்கள் புதுச்சேரிக்கும் சென்றனர்.





மே 28-ஆம் நாள் புதுச்சேரியில் தங்கிய பிறகு, உறுப்பினர்கள் அண்ணாமலைப் பல்கலைக்கழக வேளாண்மைத் துறையை மே 29 ஆம் நாள் பார்வையிட்டனர். மே 30-ஆம் நாள் இக்குழு திருச்சிராப்பள்ளி சென்றடைந்தது. அதற்கு அடுத்த நாள் குழு உறுப்பினர்கள், பல்கலைக்கழகத்தாலும், மாநில வேளாண்மைத் துறையாலும் அமைக்கப்பட்டுள்ள செயல்முறை விளக்க நிலையங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். ஜூன் முதல் நாள், குழு உறுப்பினர்கள் கோயம்புத்தூரைச் சென்றடைந்தனர். கேரள மாநிலத்தில் மே 28 முதல் ஜூன் 2-ஆம் நாள் வரை சுற்றுப்பயணம் செய்த மூன்று உறுப்பினர்களும் ஜூன் 2-ஆம் நாள் கோயம்புத்தூருக்குத் திரும்பினர். குழுவினர் அனைவரும் உதகமண்டலம் சென்று ஜூன் 7-ஆம் நாள் வரை அங்கு தங்கியிருந்தனர். உதகமண்டலத்தில் இருந்தபோது, குழுவினர் இந்திய ஜெர்மானிய நீலகிரி வளர்ச்சித் திட்டம் பற்றி அறிந்துகொண்டதுடன் உலக வங்கிக்குப் பணிந்தனுப்ப வேண்டிய அறிக்கையைத் தயாரிப்பதில் ஈடுபட்டிருந்தனர். ஜூன் 7-ஆம் நாள் குழு உறுப்பினர்கள், சென்னைக்குப் புறப்பட்டனர். ஜூன் 8-ஆம் நாளன்று ஒரு நாள் சென்னையில் தங்கியிருந்த பின், ஜூன் 9-ஆம் நாள் புதுடெல்லிக்குச் சென்றனர். ஜூன் 10-ஆம் நாள் முதல் 13 வரை, சில உறுப்பினர்கள் தததம் நாடுகளுக்குப் புறப்பட்டுச் சென்றனர். குழுவின் தலைவரும் செயலாளரும் ஜூன் 14 வரை டில்லியில் தங்கியிருந்தனர். இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் குழு, இந்திய அரசின் பொருளாதார விவகாரங்கள் அமைச்சகம் ஆகியவற்றைச் சேர்ந்த அதிகாரிகளுடன் குழுவினர் விவாதித்தனர். வேளாண்மைத்துறை அரசுச் செயலாளரும், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத் துணை வேந்தரும் டெல்லியில் அவர்களுடன் கலந்துரையாடினர்.

The World Bank Team arrived at Madras on May 16, 1973. The Team halted at Madras on May 17 and some of the members visited the Madras Veterinary College, on that day. The Team left Madras on May 18 and arrived at Coimbatore where they had discussions with the Vice-Chancellor and other senior officers of the University. On May 19, the Team visited Ootacamund and held discussions with the Director of Fisheries. Some of the Members visited farmers' fields, Research Stations and laboratories at Coimbatore on May 20 and 21, while the others visited the

Agricultural Research Station, Bhavanisagar. On May 22, the Team left for Madurai and on the following day visited the Agricultural College and Research Institute, Madurai. On May 24, the Team visited Mandapam and got acquainted with the work on fish processing, fish boat building, fish meal plant and the training programme for fishermen being conducted at Mandapam. The Team also visited the Central Marine Fisheries Research Station of the Indian Council of Agricultural Research at Mandapam. On May 24, the Team visited the Apple Research Station at Kodaikanal and returned to Madurai on May 25. The Team left for Madras on May 26 and at Madras held discussions with the Secretary to Government, Agriculture Department and Director of Agriculture on extension activities of the State Government. The Team was taken to some places around Madras to give an idea about the extension activities of the Department. Three members of the Team left for Trivandrum on May 28 and another three members visited Pondicherry the same day. After halting at Pondicherry on May 28, the members visited the Annamalai University Faculty of Agriculture on May 29. On May 30, the Team reached Tiruchirappalli and on the following day they were taken round some of the demonstration centres organized by the University and the State Department of Agriculture. On June 1, the Team members arrived at Coimbatore. The three members of the Team who visited Kerala State during May 28 to June 2, got back to Coimbatore on June 2, and the entire party proceeded to Ootacamund where they halted until June 7. While at Ootacamund the Team got acquainted with the activities of the Indo-German Nilgiris Development Project and spent time drafting the report to be submitted to the World Bank. On June 7, the member of the Team left for Madras and after halting at Madras for a day on June 8, the Team arrived at New Delhi on June 9. From June 10 to 13, some of the members left for their respective countries while the Chairman and the Secretary of the Team stayed back until June 14. They held discussions with the officials of the Indian Council of Agricultural Research and Government of India Economics Affairs Ministry. The Secretary to Government, Agriculture Department and the Vice-Chancellor, Tamil Nadu Agricultural University had discussions with this at Delhi.



## இணைப்பு

[ -ம் பக்கத்தில் 230-ஆம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

(*a*) The Government have issued orders for the formation of the Tamil Nadu Poultry Development Corporation Limited. The Tamil Nadu Poultry Development Corporation has started functioning with effect from the afternoon of 12th July 1973 at premises No. 98, Lloyds Road, Madras.

(*b*) There is a good scope for the development of poultry in the State of Tamil Nadu both from the point of view of improving the economic conditions of the people as well as for provision of nutritious food to the population. Various aspects relating to poultry, viz., production and processing and transport and sales of poultry and poultry products as well as provisions of services to the poultry farmers require to be improved all round. The Government have therefore ordered the formation of the Tamil Nadu Poultry Development Corporation Limited for the efficient implementation of the various development and commercial activities relating to poultry in this State. The Corporation will take all the present commercial and development activities attended to by the Animal Husbandry Department and its main objects are—

(*a*) To promote, establish, administer own and run, improve, develop, aid, counsel, finance, directly or indirectly, engage in production, processing and sale of poultry and poultry products and provide services and assistance of all kinds for the said purpose, including capital, credit, means-resources, technical and managerial services, advice and assistance either directly or indirectly of any other kind to those who are engaged in the poultry production and to such others who are engaged in poultry activities in whatever manner; and

(*b*) To organise and assist production, processing, collection and marketing of poultry and poultry products and for this purpose to provide, acquire and operate land, plant and equipments, vehicles and services of any description which are required for the purpose of fulfilment of the objects.

2. The advantages of the Corporation will be as follows:—

(a) All the hatcheries will be brought to high level efficiency to enable these units to produce not less than 20,000 chicks a month ;

(b) all the 38 Poultry Extension Centres which have a low level productivity will start working to capacity ;

(c) there will be quick and effective supplies of poultry feeds to the breeders in time ;

(d) there will be improved extension work and also continuous flow of eggs and meat into the markets ;

(e) there will be quick dissemination of technical knowledge to the breeders ;

(f) there will be establishment of poultry processing plants and poultry feed mixing units in the State ;

(g) increasd stimulus will be shown to the poultry based industries ;

(h) there will be no strain on State finances since the Corporation will finance for poultry development with the help of Nationalised Banks ;

(i) there will be improved prospects of employment ; and

(j) the Corporation can engage itself in exports of eggs after development.

3. The authorised capital of the Corporation shall be Rs. 1 crore, divided into 10,000 equity shares of Rs. 1,000 each. All the assets and liabilities of the Poultry Units will be transferred to the Corporation. The value of the assets, less liabilities taken over by the Corporation, will be treated as interest free loan from the Government. All posts connected with the Poultry Development in the Animal Husbandry Department including the posts of 5 Poultry Specialists in the Regions of Madurai, Vellore, Thanjavur, Tiruchirappalli and Coimbatore will be transferred to the Corporation on deputation in foreign service terms. They will continue to receive the same emoluments and enjoy the same conditions of service and privileges till such time the Corporation frames its rules and takes its employees in its own service.



4. In addition to the assets transferred, the Government have provided Rs. 50 lakhs as their share capital to the Corporation for the purpose of meeting the necessary working capital for carrying on the business of the Corporation. In the first instance, sanction has been accorded to the grant of an advance of Rs. 10 lakhs to the Corporation. The advance will be adjusted by allotment of 1,000 shares in the Corporation.

5. A sum of Rs. 25,000 has been sanctioned for registration of the Corporation under the Companies Act and for incidental expenses.

6. The following officers are the Board of Directors of the Corporation :—

(1) Thiru P. N. Vedanarayanan, I.A.S., Secretary to Government, Agriculture Department, Madras-9.

(2) Thiru K. Venkatesan, I.A.S., Joint Secretary to Government, Finance Department, Madras-9.

(3) Dr. V. Ratnasabapathy, GMVC, BVSC, Ph.D. (Missouri), Director of Veterinary Education and Research and Dean, Madras Veterinary College, Madras-7.

(4) Thiru M. Raghupathy, I.A.S., Director of Rural Development, Madras-1.

(5) Dr. K. S. Shanmugasundaram, GMVC, BVSC, P.G., Joint Director of Animal Husbandry, Madras-6.

Thiru P. N. Vedanarayanan, Secretary to Government, Agriculture Department will be the Chairman of the Corporation. Until further orders, Dr. K. S. Shanmugasundaram will hold additional charge of the post of Managing Director of the Corporation, in addition to his duties as Joint Director of Animal Husbandry.

*விடை.*—(அ) தமிழ் நாடு கோழிப்பண்ணை வளர்ச்சிக் கழகம் அமைப்பதற்கான ஆணைகளை அரசு பிறப்பித்துள்ளது. சென்னை, லாய்ட்ஸ் சாலை 98-ஆம் எண் வளவில் 1973, ஜூலை 12-ஆம் நாள் பிற்பகல் முதற்கொண்டு, தமிழ்நாடு கோழிப்பண்ணை வளர்ச்சிக் கழகம் செயல்படத் தொடங்கியுள்ளது.

(இ) மக்களின் பொருளாதார நிலைமைகளை மேம்படுத்துதல், மக்களுக்குச் சத்துணவினை அளித்தல் ஆகிய இரு நோக்கிலிருந்து பார்த்தால் தமிழ்நாட்டில் கோழிப்பண்ணை வளர்ச்சிக்கு நல்ல

2. The advantages of the Corporation will be as follows :—

(a) All the hatcheries will be brought to high level efficiency to enable these units to produce not less than 20,000 chicks a month ;

(b) all the 38 Poultry Extension Centres which have a low level productivity will start working to capacity ;

(c) there will be quick and effective supplies of poultry feeds to the breeders in time ;

(d) there will be improved extension work and also continuous flow of eggs and meat into the markets ;

(e) there will be quick dissemination of technical knowledge to the breeders ;

(f) there will be establishment of poultry processing plants and poultry feed mixing units in the State ;

(g) increasd stimulus will be shown to the poultry based industries ;

(h) there will be no strain on State finances since the Corporation will finance for poultry development with the help of Nationalised Banks ;

(i) there will be improved prospects of employment ; and

(j) the Corporation can engage itself in exports of eggs after development.

3. The authorised capital of the Corporation shall be Rs. 1 crore, divided into 10,000 equity shares of Rs. 1,000 each. All the assets and liabilities of the Poultry Units will be transferred to the Corporation. The value of the assets, less liabilities taken over by the Corporation, will be treated as interest free loan from the Government. All posts connected with the Poultry Development in the Animal Husbandry Department including the posts of 5 Poultry Specialists in the Regions of Madurai, Vellore, Thanjavur, Tiruchirappalli and Coimbatore will be transferred to the Corporation on deputation in foreign service terms. They will continue to receive the same emoluments and enjoy the same conditions of service and privileges till such time the Corporation frames its rules and takes its employees in its own service.



4. In addition to the assets transferred, the Government have provided Rs. 50 lakhs as their share capital to the Corporation for the purpose of meeting the necessary working capital for carrying on the business of the Corporation. In the first instance, sanction has been accorded to the grant of an advance of Rs. 10 lakhs to the Corporation. The advance will be adjusted by allotment of 1,000 shares in the Corporation.

5. A sum of Rs. 25,000 has been sanctioned for registration of the Corporation under the Companies Act and for incidental expenses.

6. The following officers are the Board of Directors of the Corporation :—

(1) Thiru P. N. Vedanarayanan, I.A.S., Secretary to Government, Agriculture Department, Madras-9.

(2) Thiru K. Venkatesan, I.A.S., Joint Secretary to Government, Finance Department, Madras-9.

(3) Dr. V. Ratnasabapathy, GMVC, BVSC, Ph.D. (Missouri), Director of Veterinary Education and Research and Dean, Madras Veterinary College, Madras-7.

(4) Thiru M. Raghupathy, I.A.S., Director of Rural Development, Madras-1.

(5) Dr. K. S. Shanmugasundaram, GMVC, BVSC, P.G., Joint Director of Animal Husbandry, Madras-6.

Thiru P. N. Vedanarayanan, Secretary to Government, Agriculture Department will be the Chairman of the Corporation. Until further orders, Dr. K. S. Shanmugasundaram will hold additional charge of the post of Managing Director of the Corporation, in addition to his duties as Joint Director of Animal Husbandry.

*விடை.—(அ) தமிழ் நாடு கோழிப்பண்ணை வளர்ச்சிக் கழகம் அமைப்பதற்கான ஆணைகளை அரசு பிறப்பித்துள்ளது. சென்னை, லாய்ட்ஸ் சாலை 98-ஆம் எண் வளவில் 1973, ஜூலை 13-ஆம் நாள் பிற்பகல் முதற்கொண்டு, தமிழ்நாடு கோழிப்பண்ணை வளர்ச்சிக் கழகம் செயல்படத் தொடங்கியுள்ளது.*

*(இ) மக்களின் பொருளாதார நிலைமைகளை மேம்படுத்துதல், மக்களுக்குச் சத்துணவினை அளித்தல் அகிய இரு நோக்கிலிருந்து பார்த்தால் தமிழ்நாட்டில் கோழிப்பண்ணை வளர்ச்சிக்கு நல்ல*

வாய்ப்பு உள்ளது என்பது தெரியவரும். கோழிகளையும் கோழிப் பண்ணைப் பொருள்களையும் உற்பத்தி செய்தல், பக்குவப்படுத்தல், கொண்டுசென்று விற்றல், கோழி வளர்ப்பவர்களுக்கு உதவி அளித்தல் போன்ற பல்வேறு கூறுகளை எல்லா வகையிலும் மேம்படுத்த வேண்டியுள்ளது. எனவே, இம் மாநிலத்தில் கோழி இனம் சம்பந்தப்பட்ட பல்வேறு மேம்பாட்டு, வணிக நடவடிக்கைகளைச் செவ்விய வகையில் நிறைவேற்ற தமிழ்நாடு கோழிப்பண்ணை வளர்ச்சிக் கழகம் லிமிடெட் என்ற நிறுவனத்தை அமைக்க அரசு ஆணையிட்டுள்ளது. தற்போது கால்நடை வளர்ப்புத் துறை கவனித்து வருகிற வணிக, வளர்ச்சி நடவடிக்கைகள் அனைத்தையும் கழகம் மேற்கொள்ளும். அதன் முக்கிய நோக்கங்களாவன :—

கோழிப்பண்ணை அமைப்பதற்கு வேண்டியவற்றை செய்தல், கோழிப்பண்ணை அமைத்தல், சொந்தத்தில் பண்ணை அமைத்து நிர்வகித்து நடத்துதல், மேம்படுத்துதல், உதவி அளித்தல், ஆலோசனை நல்குதல், நேரடியாகவோ மறைமுகமாகவோ நிதி உதவி அளித்தல், கோழி இனங்களையும் கோழிப் பண்ணைப் பொருள்களையும் உற்பத்தி செய்தல், பக்குவப் படுத்துதல், விற்றல், கோழி உற்பத்தியில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும் எந்த முறையிலேனும் கோழி வளர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும் மூலதன உதவி, கடன் உதவி, நிதி வாயில்கள் தொழில் நுட்ப நிர்வாக உதவி, நேரடியாக அல்லது மறைமுகமாக ஆலோசனை அளித்தல், உதவி அளித்தல் உட்பட, மேற்சொன்ன காரியத்திற்காக எல்லா வகையான பணிகளும் உதவியும் அளித்தல்;

(b) கோழி இனங்களையும் கோழிப்பண்ணைப் பொருட்களையும் உற்பத்தி செய்தல், பக்குவப்படுத்தல், சேகரித்தல், விற்பனை செய்தல் ஆகியவற்றிற்கு ஏற்பாடு செய்து உதவி அளித்தல். இதற்காக நிலம் கையகப்படுத்தி பயன்படுத்துதல், இயந்திரங்கள் கருவிகள், வண்டிகள் வாங்கிப் பயன்படுத்தல், இந்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்குத் தேவைப்படுகிற எந்த வகை உதவியும் அளித்தல்.

2. இக்கழகம் அமைக்கப்படுவதால் கீழ்க்கண்ட நன்மைகள் ஏற்படும் :—

(a) குஞ்சு பொரிக்கும் நிலையங்கள் அனைத்தும் ஒரு மாதத்தில் 20,000 குஞ்சுகளுக்குக் குறையாத உற்பத்தித் திறனுடன் செயல்பட வகை செய்யப்படும்.



(b) குறைந்த அளவில் கோழிக் குஞ்சுகளை உற்பத்தி செய்யும் 38 கோழி இன வளர்ச்சி நிலையங்கள் அனைத்தும் முழுத் திறனுடன் வேலை செய்யத் தொடங்கும்.

(c) கோழி வளர்ப்பவர்களுக்கு குறித்த காலத்தில் விரைவாகவும் செவ்விய முறையிலும் கோழி இன இரை வழங்கப்படும்.

(d) கோழி இன வளர்ப்புப் பணியில் மேம்பாடு காணப்படும். மேலும், அங்காடிகளில் தொடர்ந்து கோழி முட்டைகளும், கோழி இறைச்சியும் வந்து கொண்டிருக்கும்;

(e) கோழி வளர்ப்பவர்களுக்கு தொழில்நுட்ப அறிவு விரைவில் பரப்பப்படும்.

(f) இம் மாநிலத்தில் கோழிப்பண்ணைப் பொருட்கள் செய்முறை நிலையங்களும், கோழி இரை கலப்பு நிலையங்களும் ஏற்படுத்தப்படும்.

(g) கோழிப் பண்ணைப் பொருட்கள் அடிப்படையில் அமைந்த தொழிற்சாலைக்கு கூடுதலான ஊக்கம் அளிக்கப்படும்.

(h) கோழி இன வளர்ச்சிக்காக இக்கழகம் நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளின் உதவியுடன் நிதி உதவி அளிப்பதால் மாநில நிதியிலிருந்து செலவிட வேண்டி இருக்காது.

(i) வேலை வாய்ப்பு வசதிகள் பெருகும்.

(j) கோழிப்பண்ணை வளர்ச்சிக்குப் பின்னர், கோழி முட்டைகளை ஏற்றுமதி செய்வதில் கழகம் தானே ஈடுபட இயலும்.

3. இக்கழகத்தின் அதிகாரம் பெற்ற மூலதனம் ரூ. 1 கோடியாக இருக்கும். ஒவ்வொன்றும் ரூ. 1,000 மதிப்புடைய 10,000 நிலையான வட்டியில்லாப் பங்குகளாகப் பிரிக்கப்பட்டிருக்கும். கோழி இன வளர்ப்பு நிலையங்களின் சொத்துக்கள், பொறுப்புகள் அனைத்தும் இக்கழகத்திற்கு மாற்றப்படும். கழகம் எடுத்துக்கொண்ட பொறுப்புகள் போக மீதியுள்ள சொத்துக்களின் மதிப்பு, அரசிடமிருந்து வட்டியின்றி பெற்ற கடனாகக் கருதப்படும். மதுரை, வேலூர், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் ஆகிய வட்டாரங்களில் உள்ள கோழி இன வளர்ப்பு வல்லுநர்கள் பதவி ஐந்து உட்பட, கால்நடை வளர்ப்புத் துறையில் கோழி

வளர்ப்பு தொடர்பான பதவிகள் அனைத்தும், அயல் துறைப் பணி நிபந்தனைகளில் மேல் முகமையில் அனுப்பப்படும் முறையில், கழகத்திற்கு மாற்றப்படும். இக்கழகம் தனக்கென விதிகள் இயற்றி அதன் ஊழியர்களை தன் பணியில் எடுத்துக்கொள்ளும் வரையில், அவர்கள் அதே ஊதியங்களைத் தொடர்ந்து பெறுவதோடு அதே பணி நிபந்தனைகளையும் சிறப்பு உரிமைகளையும் அனுபவித்து வருவர்.

4. இக்கழகத்திற்கு மாற்றப்பட்ட சொத்துக்களைத் தவிர இக் கழகத்தின் அலுவலை நடத்துவதற்குத் தேவையான நடைமுதல் மூலதனத்தைச் சரிக்கட்டுவதற்காக, அரசு ரூ. 50 லட்சத்தை தனது பங்கு மூலதனமாக அளித்துள்ளது. தொடக்கத்தில், கழகத்திற்கு முன்பணமாக ரூ. 10 லட்சம் வழங்குவதற்கான அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது. கழகத்தில் 1,000 பங்குகளை ஒதுக்குவதன் மூலம் இந்த முன்பணம் சரிக்கட்டப்படும்.

5. நிறுவனங்கள் சட்டத்தின்கீழ் கழகத்தைப் பதிவு செய்வதற்காகவும், இடை நிகழ் செலவுகளுக்காகவும் ரூ. 25,000 அனுமதிக்கப் பட்டுள்ளது.

6. கீழ்க்கண்ட அதிகாரிகள் கழகத்தில் இயக்குநர்கள் குழுவில் உள்ளனர் :—

1. திரு. பி. என். வேதநாராயணன், ஐ.ஏ.எஸ்.,
அரசுச் செயலாளர்,
வேளாண்மைத் துறை,
சென்னை-9.

2. திரு. கே. வெங்கடேசன், ஐ.ஏ.எஸ்.,
அரசு இணைச் செயலாளர்,
நிதித் துறை,
சென்னை-9.

3. டாக்டர் வி. ரத்தினசபாபதி, GMVC, BVSC, Ph.D. (மிஸௌரி), கால்நடை மருத்துவக் கல்வி-ஆராய்ச்சி இயக்குநர், முதல்வர், சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி, சென்னை-7.

4. திரு. எம். ரகுபதி, ஐ.ஏ.எஸ்.,
கிராம வளர்ச்சி இயக்குநர்,
சென்னை-1.



5. டாக்டர் கே. எஸ். சண்முக சுந்தரம்,
கால்நடை வளர்ப்புத்துறை இணை இயக்குநர்,
சென்னை-6.

வேளாண்மைத் துறை அரசுச் செயலாளர், திரு. பி. என். வேதநாராயணன் கழகத்தின் தலைவராக இருப்பார். மேற்கொண்டும் ஆணைகள் பிறப்பிக்கப்படும் வரையில், கால்நடை வளர்ப்புத் துறை இணை இயக்குநராகவுள்ள டாக்டர் கே. எஸ். சண்முக சுந்தரம் தமது அலுவலர்களுடன், இக்கழகத்தின் நிர்வாக இயக்குநர் என்ற கூடுதல் பொறுப்பையும் வகிப்பார்.

## இணைப்பு III

[ 225 ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

*Programme of business for the meeting of the Legislative Assembly as decided by the Business Advisory Committee at its meeting held on 19th November 1973.*

| | |
|---|---|
| 20-11-1973 Tuesday<br>21-11-1973 Wednesday | Discussion on the Annual Financial Statement for 1973-74 and Supplementary Financial Statement for 1972-73 of the Tamil Nadu Electricity Board. |
| 22-11-1973 Thursday | Private Members' Business. |
| 23-11-1973 Friday | Discussion on the Annual Financial Statement for 1973-74 and Supplementary Financial Statement for 1972-73 of the Tamil Nadu Electricity Board. |
| 24-11-1973 Saturday | (1) Presentation of First Supplementary Statement of Expenditure for the year 1973-74 ; and Presenation of the Demands for Grants for Excess Expenditure for the year 1968-69.<br>(2) Discussion on the Annual Financial Statement for 1973-74 and Supplementary Financial Statement for 1972-73 of the Tamil Nadu Electricity Board. |

*திரு. கே. டி. கே. தங்கமணி :* இம் மாதிரியான பயிற்சி மதுரைப் பல்கலைக் கழகம் போன்ற மற்ற பல்கலைக் கழகங்களிலும் தொடங்க உத்தேசம் இருக்கிறதா ?

***மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :*** தலைவர் அவர்களே, அதுபற்றி குறிப்பு இல்லை. "யுனெஸ்கோ" கேட்டுக் கொண்டதன் காரணமாகவும் பல்கலைக்கழக மானியக்குழு இதற்கு உதவி செய்ய முன் வந்ததன் காரணமாகவும் இப் பயிற்சி சென்னைப் பல்கலைக் கழகத்தினால் நடத்தப்பட்டது. அதுமாதிரி பயிற்சியை மற்ற பல்கலைக் கழகங்களிலும் நடத்த யூனெஸ்கோ முன்வந்து பல்கலைக்கழக மானியக்குழு உதவி தருமானால் அந்தப் பல்கலைக் கழகங்களிலும் ஏற்பாடு செய்யலாம்.

## முதியோர் கல்வி நிலையங்கள்

**** 250 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் :*** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) 1966-67-ல் தமிழகத்தில் முதியோர் கல்வி நிலையங்கள் எத்தனை இருந்தன ?*

*(இ) 1973 மே வரை எத்தனை முதியோர் கல்வி நிலையங்கள் புதிதாகத் துவக்கப்பட்டன ?*

***மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :*** (அ) 384, (இ) 1967-68-ம் ஆண்டில் 60 உழவர் செயல்முறை எழுத்து அறிவுத் திட்ட மையங்கள் ஃபார்மர்ஸ் ஃபங்ஷனல் லிட்ரரி சென்டர்ஸ் என்ற பெயரில் ஏற்படுத்தப்பட்டன. 1969-70-ம் ஆண்டில் முதியோர்ப் பயிற்சி மையங்கள், அடல்ட் லிட்ரஸி சென்டர்ஸ் என்ற பெயரில் 500 மையங்கள் ஏற்படுத்தப்பட்டன. இதன் பயிற்சிக் காலம் நான்கு திங்கள்கள்.

***திரு. பெ. சௌந்தரபாண்டியன் :*** தலைவர் அவர்களே, முதியோர்க் கல்வி நிலையங்களில் யார் பயிற்சி அளிக்கிறார்கள் ? அங்கு தொழிற்பயிற்சி ஏதாவது அளிக்கப்படுகிறதா ?





***மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :*** தலைவர் அவர்களே, இதிலே தொழிற்பயிற்சி என்ற முறையில் அளிக்கப்படவில்லை. ஆங்காங்கு இருக்கிற துவக்கப் பள்ளி, செகண்டரி கிரேடு ஆசிரியர்களுக்குத் தனிப் பயிற்சி அளித்து, அவர்களுக்குச் சிறிது ஊதியம் தந்து, முதியோர் மையங்களை அவர்கள் கவனித்துக் கொண்டு வருகிறார்கள். ஃபார்மர்ஸ் ஃபங்ஷனல் லிட்ரரி சென்டர்ஸ் ஏற்படுத்தப்பட்டு அந்தத் திட்டத்தின் மூலமாக ஓராண்டுக் காலம் பயிற்சி தரப்படுகிறது. வேளாண்மைத் துறையில் ஈடுபட்டிருக்கிற அந்த முதியோர்களுக்கு வேளாண்மைத் துறை பற்றிய அறிவை எந்த எந்த வகையில் புகுத்த முடியும் என்று பார்த்து, அத்தகைய அறிவு அவர்களுக்குப் போதிக்கப்படுகிறது.

*திரு. சோ. அழகர்சாமி :* இந்த முதியோர் கல்வி நிலையங்கள் தற்போது எந்த அடிப்படையில் துவக்கப்படுகின்றன ? முன்பு ஊராட்சி ஒன்றியத்தின் கீழுள்ள எல்லாக் கிராமங்களிலும் பள்ளிகளில் வேலை செய்யும் ஆசிரியர்களைக் கொண்டு மாலை நேரத்திலோ இரவு நேரத்திலோ முதியோர்க்குக் கல்வி புகட்டக்கூடிய ஏற்பாடு இருந்தது. இப்பொழுது அந்த ஏற்பாடு இல்லையே. முன்பு போல ஆசிரியர்களுக்குச் சிறப்பு ஊதியம் அளித்து, எல்லாக் கிராமங்களிலும் முதியோர்க் கல்வி நிலையங்களை ஏற்படுத்த அரசு முன்வருமா ?

***மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :*** தலைவர் அவர்களே, துவக்கப் பள்ளி ஆசிரியர்களுக்குச் சிறப்புப் பயிற்சி அளித்து, சிறப்பு ஊதியம் தந்துதான் முதியோர்ப் பயிற்சிப் பள்ளிகள் ஆங்காங்கு நடத்தப்படுகின்றன. 500-க்கு மேற்பட்ட முதியோர்ப் பயிற்சி மையங்கள் மாநிலத்தின் பல இடங்களில் துவக்கி நடத்தப்பட்டன. அதன் பயிற்சிக் காலம் நான்கு திங்கள்களாகும். ஃபங்ஷனல் லிட்ரரி சென்டர்ஸில் ஓராண்டுக் கால பயிற்சி பல்வேறு மாவட்டங்களில் நடத்தப்பட்டுக் கொண்டு வருகிறது. அந்த வகையில் வடார்க்காடு மாவட்டத்தில் திருவண்ணாமலை கல்வி மாவட்டத்திலும், திருநெல்வேலி மாவட்டத்தில் தூத்துக்குடி கல்வி மாவட்டத்திலும் 1970-71-ம் ஆண்டில் முறையே 60 மையங்கள் திறக்கப்பட்டு, நடத்தி முடிக்கப்பட்டன. 1968-69-ம் ஆண்டில் பயிற்சிக் காலத்தை ஓராண்டுக்கு நீட்டித்து, கோவை மாவட்டத்திலும் பொள்ளாச்சி கல்வி மாவட்டத்திலும், தஞ்சை மாவட்டத்திலும் தஞ்சை கல்வி மாவட்டத்திலும் ஏற்

படுத்தப்பட்டன. 1972-73-இல் பொள்ளாச்சி தஞ்சை, திருவண்ணாமலை, தூத்துக்குடி ஆகிய கல்வி மாவட்டங்களில் முன்பு நடத்தி முடிக்கப்பட்ட 60 மையங்களிலேயே மீண்டும் ஓராண்டுக் காலம் பயிற்சி நடத்தும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. தென்னார்க்காடு மாவட்டம் கடலூர் கல்வி மாவட்டத்திலும் இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இவை தவிர, மதுரை, திருச்சி ஆகிய இரு மாவட்டங்களிலும் இத் திட்டத்தைச் செயல்படுத்த நடுவண் அரசால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

### *Apprentice teachers for elementary schools*

* 251 *Q.*—Thiru N. K. PALANISWAMY: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether there is any proposal to appoint more apprentice teachers for elementary schools in the State for the year 1972–73; and

(*b*) if so, the details thereof?

***மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்*:** (அ) & (இ) 1972-73-ல் தொழில் பழகு ஆசிரியர்கள் புதிதாக நியமிக்கப்படவில்லை. இந்தியா வெங்கும் படித்து வேலை வாய்ப்பு இன்று இருப்போருள் ஐந்து லட்சம் பேருக்கு 1973-74-ல் வேலை வாய்ப்பளிப்பதற்கான சிறப்புத் திட்டத்தின்கீழ் கூடுதலான ஆசிரியர்கள் பதவிகள் 10,200 ஏற்படுத்தப்பட்டுள்ளன.

***திரு. என். கே. பழனிசாமி*:** செகண்டரி கிரேட் பயிற்சி பெற்றுத் தேறி, ஐந்து வருஷமாக வேலையில்லாமல் ஏராளமானவர்கள் இருக்கிறார்கள். அவர்களும் இத்திட்டம் அமல்படுத்தப்பட்டிருக்கிறதா? அப்படியானால் எத்தனை ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்கிற கணக்கு சர்க்காரிடம் இருக்கிறதா?

***மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்*:** தலைவர் அவர்களே, 1970-ம் ஆண்டு நவம்பரில் 5,746 பேருக்குத் தொழில் பழகு ஆசிரியர் வேலை தரப்பட்டது. அவர்களில் பெரும்பாலோர் முறையாக முழு நேர பதவிகளில், முழுச் சம்பளம் பெறும் ஆசிரியர்களாக அமர்த்தப்பட்டுவிட்டனர். மீதி இருந்த சுமார் 1,800 பேரும் 'ஐந்து லட்சம் பேர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்' அடிப்





படையில் அமர்த்தப்பட்டுவிட்டனர். 10,200 பேருக்கான திட்டத்தின்கீழ், செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் 6,000 பேருக்கு வேலை தரப்பட்டிருக்கிறது.

Thiru B. VENKATASWAMY: The Hon. Minister gave the answer that 5,000 and odd posts have been created. As Chairman of Panchayat Union I can say we have appointed only apprentice teachers from the State quota. There is no special post created. Only apprentice teachers posts have been converted into regular ones. No additional posts have been created. May I know whether the State is going to give any special quota in addition to the Central quota?

***மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்*:** தலைவர் அவர்களே, இந்த 10,200 ஆசிரியர் திட்டத்தின்கீழ் 1,200 நடுநிலை ஆசிரியர்களும், 6,000 செகண்டரி கிரேடு ஆசிரியர்களும், 500 ஹையர் கிரேடு ஆசிரியர்களும், 500 உடற்பயிற்சி ஆசிரியர்களும், 2,000 கைத்தொழில் ஆசிரியர்களும் நியமிக்க ஆணை இடப்பட்டிருக்கிறது. 6,000 செகண்டரி கிரேடு ஆசிரியர்களில் ஏற்கெனவே பழகு தொழில் (அப்ரென்டிஸ்) பயிற்சி பெற்றவர்கள்—1,800 பேர். அந்த 1,800 பேருக்கு முழு வேலை கொடுக்கப்பட்டு, மீதம் உள்ளவர்கள் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்படவேண்டும்.

***திரு. ஆர் பொன்னப்ப நாடார்*:** செகண்டரி கிரேடு பயிற்சி பெற்றவர்களும், எலிமென்டரி கிரேடு பயிற்சி பெற்றவர்களும் 30 வயதைத் தாண்டிய காரணத்தால் பலருக்கும் வேலை கிடைக்காமலிருக்கிறது. அது சம்பந்தமாக அவர்களுக்கு விதி விலக்கு அளிப்பதாக இந்த மன்றத்தில் உறுதி அளிக்கப்பட்டது. அவர்களுக்கு விசேஷ சலுகை அளிக்கும் ஆணையினை அரசு பிறப்பிக்குமா? அது சம்பந்தமாக அரசாங்கத்திற்கு மனுக்கள் வந்திருக்கின்றனவா?

***மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்*:** தலைவர் அவர்களே, 30 வயதுக்கு மேற்பட்டவர்களை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று பொதுவாக அரசு ஆணை போட வேண்டியதில்லை. தனிப்பட்ட இடங்களில் தனிப்பட்டவர்களுக்கு ஏற்படும் கேடுகளைத் தனியாகக் கவனித்து விதி விலக்கு அளிக்கப்படலாம்.

*திரு. எம். சுரேந்திரன் :* புதிதாக ஆசிரியர்களை நியமிக்கும் போது, அவர்கள் தேறிய ஆண்டைக் கணக்கில் கொண்டு ஸீனியாரிடிபடி வேலையில் நியமிக்கப்படுகிறார்களா? அல்லது, 1970-ம் ஆண்டில் தேறியவர்களை வேலைக்கு எடுத்துக் கொள்ளாமல் 1973-ம் ஆண்டில் தேறியவர்களை முதலில் எடுத்துக்கொள்ளும் நிலைமை இருக்கிறதா? நியமனங்கள் ஸீனியாரிடிபடி செய்யப்பட வேண்டும் என்று சர்க்கார் உத்தரவிடுமா?

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :* தலைவர் அவர்களே, அரசுப் பள்ளிகளைப் பொறுத்த வரையில், அவர்கள் தேறிய ஆண்டைக் கணக்கிட்டு—அதாவது 1967-ம் ஆண்டில் தேறியவர்களை முதலிலும், அடுத்து 1968-ம் ஆண்டில் தேறியவர்களையும், அதற்கடுத்து 1969-ம் ஆண்டில் தேறியவர்களையும் எடுத்துக் கொள்ளும் முறை கடைப்பிடிக்க வேண்டுமென்றுதான் கட்டாயமாக வலியுறுத்தப்பட்டிருக்கிறது. ஆனால், தனியார்ப் பள்ளிகளைப் பொறுத்தவரையில் அதை நாம் வலியுறுத்த முடியாத நிலை இருக்கிறது. ஊராட்சி மன்றப் பள்ளிகளைப் பொறுத்து அதைத் தீவிரமாக அவர்கள் கடைப்பிடிக்காமல் இருக்கிறார்கள். அதைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று நாம் அவர்களைக் கேட்டுக்கொண்டிருக்கிறோம்.

*Assistance to writers among Linguistic Minorities*

* 252. *Q.*—THIRU K. S. KOTHANDARAMIAH; Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether there is any proposal to encourage good writers among the Linguistic Minorities in this State by granting them financial aid; and

(*b*) if so, the details thereof?

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :*

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH : There are a number of good Telugu writers and Pandits in our State who for want of encouragement are not able to publish their books or write new books. They are not able to get encouragement from other States





because they are here. Will the Hon. Minister for Education allot some more funds and give them financial aid to Telegu and other minority language Pandits so that they may get encouragement and write more books and publish them?

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :* தலைவரவர்களே, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் தமிழ்மொழிக்கு ஊக்கம் அளிக்கும்வகையில் அந்த மொழியில் நூல் எழுதுபவர்களுக்குப் பரிசு வழங்கும் திட்டம் இருந்து கொண்டிருக்கிறது. மற்ற மொழிகளைப்பற்றி அந்தத் திட்டம் மேற்கொள்ளப்படவில்லை. ஆனால் அந்தந்த மாநிலங்களில் அந்தந்த மொழிக்கான உதவி செய்யும் வகையில், கேரளத்தில் மலையாள மொழிக்கும், கர்நாடக மாநிலத்தில் கன்னட மொழிக்கும், ஆந்திரத்திலே தெலுங்கு மொழிக்கும், மற்றபடி இந்தி மொழிக்கும், மராட்டிய மொழிக்கும் அந்தந்த மாநிலங்களில் அதற்கு ஊக்கம் தந்து வருகிறார்கள். ஆனால் தமிழகத்தைப் பொறுத்தவரையில் தமிழ்மொழியிலே எழுதுபவர்களுக்கு இப்பொழுது இருக்கும் திட்டம் இருக்கிறது. சிறுபான்மை மொழிகளைப்பற்றி இதுவரையில் திட்டம் எதுவும் வகுக்கப்படவில்லை.

THIRU B. VENKATASWAMY : Sir, according to the census in our State, in addition to Tamil writers, there is the Telugu language which is the language of the second minorities. May I know whether the Hon. Minister will consider the cases of Telugu writers also? Because, there are many Telugu writers of Andhra staying in our State and therefore, will the Hon. Minister give incentive to Telugu and Malayalam writers also?

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :* தலைவரவர்களே, இப்பொழுது அதுபற்றி திட்டம் இல்லை. விண்ணப்பம் ஏதேனும் வந்தால் அதைப்பற்றி பரிசீலிக்கப்படும்.

*Malayalam Teachers Training School at Vilavancode*

* 253 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. Minister for Education and Tourism be pleased to state whether the Government Malayalam Teachers Training School at Vilavancode has been closed from this year?

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :* ஆம். தேவைக்கு மேலாகவே பயிற்சி பெற்ற மலையாளம் ஆசிரியர்கள் இருப்பதால், இப் பயிற்சிப் பள்ளி மூடப்பட்டுள்ளது.

[1973 நவம்பர் 21

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தலைவரவர்களே, மலையாள சிறுபான்மையினர் அதிகமாக அந்தப் பகுதியில் இருப்பதால் அவர்கள் இன்னும் அந்தப் பயிற்சிப் பள்ளி தேவை என்று அரசாங்கத்திற்கு விண்ணப்பம் அனுப்பியிருக்கிறார்கள். ஆகவே, அதுபற்றி புனராலோசனை செய்வதற்கு அரசு முன்வருமா? அப்படி மலையாள ஆசிரியர் பயிற்சிப் பள்ளியைத் துவக்க முடியாவிட்டாலும் அதைத் தமிழ் பயிற்சிப் பள்ளியாகவாவது மாற்ற அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, தமிழ் பயிற்சிப் பள்ளியைப் பொறுத்தவரையில் ஏராளமானவர்கள் வேலையில்லாமல் இருந்து கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக குமரி மாவட்டத்தில் மற்ற மாவட்டங்களைவிட அதிகமாக இருக்கிறார்கள். மேலும் மலையாள ஆசிரியர்களும் தேவைக்கு மேலாகவே இருக்கிறார்கள். அத்துடன் குமரி மாவட்டத்தில் ஏற்கனவே மலையாள மொழி எடுத்தவர்களின் நிலைமை மாறி தமிழையே பாடமொழியாக எடுக்கும் மாணவர்கள் அதிகமாகியிருக்கிறார்கள். ஆகவே, மலையாள மொழி எடுத்தவர்களின் எண்ணிக்கை குறைந்து வருகிறது என்றும், அதனால் அந்தப் பள்ளி மூடப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டது என்றும் கூறப்படுகிறது. எந்தக் கட்டத்திலேனும் மலையாளத்தில் போதுமானவர்கள் இல்லாதிருந்தால் தேவைப்படுகிற அந்தச் சமயத்தில் புதுப்பித்துக் கொள்வதற்கு ஆட்சேபணை இல்லை. ஆனால் இப்பொழுது தேவையில்லை என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

**திரு. க. உரொ. எட்மண்ட்:** தலைவரவர்களே, இந்த மலையாளம் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி மூடப்படுவதற்கு நம்முடைய மாண்புமிகு கல்வியமைச்சரவர்கள் போதுமான ஆசிரியர்கள் இருப்பதாகக் காரணம் காட்டினார்கள். அதே நேரத்தில் மற்ற ஆசிரியர்கள் தேவைக்கு அதிகமாக இருக்கிறார்கள் என்றும் சொன்னார்கள். ஆகவே, முன்புபோல இந்த ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளையும் மூடும் நோக்கம் அரசுக்கு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர். இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, இரண்டு மூன்று ஆண்டுக் காலமாகவே பயிற்சிப் பள்ளிகளின் எண்ணிக்கையை ஓரளவு குறைத்துக் கொண்டு வந்திருக்கிறோம்,



1973 நவம்பர் 21]

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே, ஒவ்வொரு நோயும் கட்டுப்படுத்தப்பட வேண்டியதுதான். எந்த நோயாக இருந்தாலும் 100-க்கு 2 பேர் அல்லது 1,000-க்கு ஏறத்தாழ 15 பேர், 16 பேர் பாதிக்கப்படுகிறார்கள் என்ற புள்ளிவிவரம் கிடைக்கும் பொழுது பொதுமக்களின் நலனைக் கருதி எந்த ஒரு நோயும் கட்டுப்படுத்தப்பட வேண்டும். அதிலே தொழுநோயைக் கட்டுப்படுத்துவது என்பதைப் பொறுத்தவரையில், சிகிச்சை முறையில் நோய் முற்றிய பிறகு உடனடியாக முழுப் பலன் கிடைக்கும் அளவிற்கு மிகவும் சிறந்த மருந்துகள் இன்னும் கண்டு பிடிக்கப்படவில்லை. ஆனால் காசநோய் கட்டுப்பாட்டிற்குச் சில தடுப்பு மருந்து இருக்கின்றன. ஆனால் தொழுநோயை முன்கூட்டித் தடுப்பதற்கு அப்படி மருந்து இல்லை. ஏற்பட்டவர்கட்கு சிகிச்சை வழங்கும் முறையே உள்ளது. அந்த முறையில் தமிழ் நாட்டில் ஏறத்தாழ 4 கோடி மக்களில் இதுவரையில் மூன்றில் ஒரு பங்கு மக்கள் அந்த மக்கள் வாழும் பகுதிகளில் தொழுநோய் சிகிச்சை அளிக்கும் அளவில் இந்த யூனிட்டுகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. மத்திய அரசு நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தொழுநோய் தடுப்பு அமைப்புக்களை ஏற்படுத்த அறிவித்திருந்தது. ஆனால் கடைசி இரண்டு ஆண்டுகளில் தான் ஒப்புதல் வழங்கியது. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டம் தொடங்கும் பொழுது மாநில அரசு அந்தச் செலவு முழுவதையும் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று விதித்திருக்கிறது. ஆகவே, ஒரு ஆண்டு, இரண்டாண்டு மட்டும் செலவை ஏற்று, அடுத்த ஆண்டுகளில் மாநில அரசு செலவு அனைத்தையும் ஏற்க வேண்டுமென்று சொல்வதால் நம்முடைய அரசின் பொருளாதார வசதிக்கேற்ப தீவிரப்படுத்த வாய்ப்புக் கிடைக்காமல் இருக்கிறது. அதுபற்றி மத்திய அரசின் அமைச்சருக்கு எழுதப்பபட்டிருக்கிறது. தொடர்ந்து நான்காவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில், வழங்கப்பட்ட யூனிட்டுகளின் செலவை—ஒரு யூனிட்டுக்கு இரண்டு லட்சம் ரூபாய் செலவாகிறது—மத்திய அரசு மேலும் ஐந்தாண்டுக் காலத்திற்காவது நீடிக்க வேண்டுமென்று கேட்கப்பட்டிருக்கிறது.

**திரு. என். கே. பழனிசாமி:** சென்னை நகர ஆஸ்பத்திரிகளில் தொழு நோயாளிகள் அதிகரித்திருப்பதாகத் தெரிகிறது. டி.பி. நோயாளிகளுக்குத் தனியாகத் தாம்பரத்தில் ஆஸ்பத்திரி இருப்பது போல் தொழு நோயாளிகளுக்குச் சிகிச்சை செய்வதற்கும் தனியாக ஒரு ஆஸ்பத்திரி ஏற்படுத்த அரசு முன்வருமா?

[1973 நவம்பர் 21

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** இதிலே இரண்டு மூன்று கருத்துக்களுக்கு விடை அளிக்க வேண்டும். தொழு நோய் உள்ள அனைவரிலும் தொத்து நோயாகப் பரவக்கூடிய நிலையில் உள்ளவர்கள் மூன்றில் ஒரு பகுதியினர்தான். இரண்டாவது இது உடனடியாகத் தொத்துவது அல்ல. இளம் வயதிலேயே தொத்தி பல ஆண்டுக் காலம் உடம்பிலே பழுத்து பிறகுதான் முற்றுகிறது. மூன்றாவது சென்னை நகர ஆஸ்பத்திரிகளில் இந்த நோயாளிகளில் எண்ணிக்கை அதிகப்படவில்லை. சிகிச்சைக்கு வரக் கூடியவர்கள் குறைந்திருக்கின்றனர். சேரிப் பகுதிகளின் ஏழை மக்கள் வாழ்கிற சில பகுதிகளில் தொழு நோயாளிகளில் எண்ணிக்கை அதிகமாகக் கூடும் என்ற ஐயம் ஏற்பட்டு அதைத் தடுக்கும் வகையில் சில தனியார் அமைப்புகள் மூலமாகச் சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

**திரு. எம். தேவராசன் :** இந்தத் தொழு நோயாளிகள் பொது இடங்களில் குறிப்பாக புகை வண்டி நிலையங்களில் அதிகமாக நடமாடுகிறார்கள். எழும்பூர் ரயில் நிலையத்தில் பெரிய அளவில் இருக்கிறார்கள். உடனடியாக அவர்களை அகற்ற ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** ஒவ்வொருவரும் ஒவ்வொரு இடத்தில் ஒருவிதமான கூட்டத்தைச் சந்திக்கிறார்கள். அவர்கள் சந்திக்க நேரிட்ட கூட்டம் எழும்பூர் நிலையத்தில் தொழு நோயாளிகளாக இருக்கலாம். அதே விகிதாசாரம் போலீஸ் போகிறபோது இருக்கமாட்டார்கள்.

**திரு. எம். சுரேந்திரன் :** தொழு நோய் வந்தவர்கள் பல பேர் வியாதியை வெளியே காட்டிக் கொள்வதற்கு விரும்பாத நிலையில், அதன் காரணமாகத் தொழு நோய்க்குச் சிகிச்சை செய்து கொள்ள வேண்டுமென்ற உணர்வு இல்லாத நிலையில் இருக்கின்ற காரணத்தால் அந்தக் குடும்பங்களில் இருக்கின்ற மற்றவர்களுக்கும் அது தொத்துகிற நிலை ஏற்படுகிறது. இவர்களை எல்லாம் கண்டு பிடித்துக் கட்டாயமாக ஏதாவது இல்லத்திற்கு எடுத்துச் சென்று மருத்துவமனையில் சிகிச்சை வழங்க அரசு ஏற்பாடு செய்யுமா? பிச்சைக்காரர் மற்ற விடுதிகளில் இவர்களைக் கொண்டு போய்ச் சேர்த்து சிகிச்சை வழங்கும் நிலை எந்த அளவில் உள்ளது? பொதுமக்கள் புழங்கும் இடத்தில் இவர்கள் இல்லாமல் இவர்களை அத்தகைய இல்லங்களுக்குக் கொண்டு போக அரசு ஏற்பாடு செய்யுமா?



1973 நவம்பர் 21]

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) அது போன்ற தீவிரத் திட்டம் எதுவும் தீர்மானிக்கப்படவில்லை.

(இ) ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் மூன்று ஆண்டுகளில் தமிழ் நாட்டில் உள்ள கிராமப் பகுதிகள் முழுவதிலும் உள்ள தொழு நோயாளிகளின் பயனுக்காகப் பல தொழுநோய்த் தடுப்புப் பிரிவுகள் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது. மீதமுள்ள நகர்ப்புற பகுதிகள் 1983-ம் ஆண்டிற்கு முன்னதாகப் பயனடைய திட்டமிடப்பட்டிருக்கிறது.

**டாக்டர் ச. மு. பழனியப்பன் :** தலைவரவர்களே, தொழுநோய் மிக அதிகமாக இந்த மாநிலத்தில் பரவும் என்பதைக் கருத்திற் கொண்டு, இதைக் கட்டுப்படுத்த சிறப்புத் திட்டத்தை உடனடியாக அமல்படுத்துமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, தொழு நோய் அதிகமாகப் பரவுகிறது, தீவிரமாகப் பரவுகிறது என்ற எண்ணம் பொதுவாக நிலவுகிறது. ஆனால் அதுவல்ல முழு உண்மை. ஆனால் யார் யாருக்கு அந்நோய் ஏற்பட்டிருக்கிறது என்பது அண்மைக் காலத்திலேதான் பரிசோதனைக்கு உள்ளாகி வருகிறது. அந்தக் கணக்குப்படி ஏற்கனவே இருந்ததைவிட அதிகமாகி விட்டது என்று கருதிவிடக்கூடாது. ஆனால் அதற்காக ஏற்படுத்தப்பட்ட ஸ்டடி சென்டர், கண்ட்ரோல் யூனிட், சப்சிடியரி சென்டர், எஸ். இ. டி. யூனிட் ஆகிய இந்த அமைப்புகள் எந்த அளவிற்கு அதிகமான மக்களிடம் சென்று, அவர்களுக்கு அதிகமாகப் பயன்பட முடியுமோ அந்த அளவிற்கு விரிவாகத் திட்டமிடப்பட்டு செயலாற்றுகின்றன.

**திரு. க. உரொ. எட்மண்ட் :** தலைவரவர்களே, இந்தத் தொழு நோயைக் கட்டுப்படுத்த தீவிரத் திட்டம் அரசா[illegible]wance [illegible]ம் இல்லை என்றாலும், சில தனிப்பட்ட மெஷினரிகள் தொ[illegible] ருத்துவ மனைகளை நடத்தி வருகிறார்கள், அவர்களுக்கு[illegible]தில் சானிடரி [illegible] வழங்கப்படுகிறதா? இல்லை யென்றால் இனி[illegible]ம், பஞ்சப்படி 35 ரூ[illegible] படுமா ? [illegible]வ, போனஸ் வேண்டும்[illegible]

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** [illegible]
திட்டம் என்பது 'ப்ரிவென்ஷன்' என்ற [illegible]
தடுக்கப்படக் கூடிய திட்டம் இப்பொழு[illegible]

கின்ற அந்தத் தொழுநோய்க்கு கூடியவரையில் சிகிச்சை அளிக்கும் திட்டம் இன்றைக்கு இருக்கிறது. தொழுநோய் மருத்துவமனைகள் நடத்தும் வெளிநாட்டு அமைப்புகளைச் சேர்ந்தவர்களுக்கு தமிழக அரசு சில முறைகளை வைத்திருக்கிறது, அதன்படி உதவித் தொகை வழங்கப்படுகிறது.

* 257 *Q.*—Thiru A. PARANDHAMAN : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether it is a fact that in the recent investigation conducted in Tamil Nadu by the Central Health Ministry, it has been found that the number of leprosy patients is more than what it was in the previous years; and

(*b*) if so, the action taken thereon?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) இது சம்பந்தமாக மத்திய சுகாதார அமைச்சரகம் தமிழ் நாட்டில் புலனாய்வு எதுவும் செய்யவில்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்த கேள்வியையும் எடுத்துக் கொள்ளலாம்.

* 258. *Q.*—Thiru N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether it is a fact that leprosy patients are on the increase in the Government Hospitals in the City of Madras; and

(*b*) if so, the details thereof ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

ர்த்துகிற

**திருக் கட்டாயமமன் :** தலைவரவர்களே, இப்பொழுது தமிழ் மருத்துவமனையில் த் தடுப்புக்காகத் தீவிரமாகச் செயல்படுத்தும் பிச்சைக்காரர் மற்ற நாஞ்சம் காமகப்படுத்தி, அதற்குப் பதிலாக சேர்த்து சிகிச்சை அளிக் கவனிக்கும் தீவிரத் திட்டத்தைப்பற்றி பொதுமக்கள் புறந்தும் கலந்துரையாடி ஒரு முறையை வகுக்க அத்தகைய இல்லங்களுக்

செய்யுமா ?



**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தமிழ்நாட்டில் சுமார் 7½ லட்சம் மக்கள் தொழு நோயால் பாதிக்கப்பட்ட மக்களாக இருக்கிறார்கள் என்ற புள்ளிவிவரம் இருக்கிறது. 7½ லட்சம் பேரையும் கொண்டு போய்ச் சிகிச்சை அளிப்பதற்குத் தேவைப்படும் மருத்துவ மனை வசதி தமிழ்நாட்டில் இல்லை. 7½ லட்சம் பேரில் 4 லட்சம் நோயாளிகளுக்கு அவர்களுடைய இல்லத்திலேயே சென்று பாரா மெடிக்கல் ஒர்க்கர்ஸ் மூலமாக வாரத்திற்கு ஒரு முறை, இரண்டு முறை சிகிச்சை அளிக்கும் வகையில் கட்டுகள் போடப்படுகின்றன, மருந்துகள் கொடுக்கப்படுகின்றன. மிச்சம் உள்ளவர்களுக்கும் சிகிச்சை அளிக்கும் வகையில் வருகிற ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் பாரா மெடிகல் ஒர்க்கர்ஸ் மூலமாகச் சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்யப்படும். தொழு நோய்ப் பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு இல்லங்களில் குடியேற்றவும் ஏறத்தாழ ஐயாயிரம், ஆறாயிரம் பேருக்குத்தான் இடம் இருக்கிறது. பொதுமக்கள் கூடுகிற இடத்தில் மற்றவர்களுக்குத் தொல்லையாக பிச்சை எடுத்துக்கொண்டு இருப்பவர்களை அந்த இல்லங்களில் கொண்டு சேர்க்கும் வகையில் அந்த லட்சியத்தோடு அந்த இல்லங்கள் பயன்படுத்தப்படும்.

### *Allowances for sanitary workers.*

* 259 *Q.*—Thiru R. R. MUNUSWAMY : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether the allowance of the sanitary workers serving under the Local Bodies have been enhanced; and

(*b*) if so, the details thereof?

The Hon. Thiru K. ANBAZHAGAN : (*a*) Yes.

(*b*) The House Rent Allowance and City Compensatory Allowance of the Sanitary Workers have been enhanced to the same rate at which it is paid to the other regular local body employees. Their Pay and Dearness Allowance now paid will be added and amount of Rs. 35 being the minimum Dearness Allowance now allowed to the regular employees will be deducted for calculating the City Compensattry Allowance and House Rent Allowance as percentage of emoluments.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** சமீபத்தில் சானிடரி ஒர்க்கர்ஸ் அடிப்படைச் சம்பளம் 100 ரூபாயாகவும், பஞ்சப்படி 35 ரூபாயாகவும் ஆக்கப்பட்டிருக்கிறது. ஏற்கனவே, போனஸ் வேண்டுமென்

பதற்காக ஒரு குறிப்பிட்ட ரூபாய் பிடித்து வந்தார்கள். இப்போது அடிப்படைச் சம்பளம் அதிகமாக இருப்பதால் இந்த விகிதாசாரத்தில் பிடிக்க வேண்டுமென்று அரசு உத்தரவு பிறப்பிக்க ஆலோசனை உண்டா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** நான் குறிப்பிட்ட விடையே கூட சற்று முற்பட்ட நிலையை விளக்கும் விடைதான். அண்மையில் ஏற்பட்ட புதிய நிலைமையைக் கூற வாய்ப்பு இல்லை. வாய்ப்பு இல்லாததற்குக் காரணம் அண்மையில் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் உள்ளாட்சி மன்றங்களில் பணிபுரிகின்றவர்களுக்கு புதிய சம்பள விகிதம் வழங்க வேண்டுமென்று ஆலோசனை செய்து முடிவு செய்திருக்கின்றார். அதுபற்றிய விவரங்கள் என்னிடம் இல்லை.

## கோவைக்கு குடிநீர் வழங்குதல்

*** 260 வினா.—திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை மக்களின் குடிநீர் பிரச்னையைத் தீர்க்கும் பொருட்டு என்னென்ன திட்டங்கள் தற்போது அரசு பரிசீலனையில் உள்ளன ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** சிங்காநல்லூர், கோயம்புத்தூர், ஆகிய ஊர்களுக்கும் வழியிலுள்ள கிராமங்களுக்கும் நீர் வழங்கும் விரிவான நீர் வழங்கல் திட்டம், சிறுவாணி மேம்பாட்டுத் திட்டம், ஆனையாறு திட்டம் முதலிய மூன்று திட்டங்கள் அரசின் பரிசீலனையில் இருந்தன.

1973-ம் ஆண்டு மே மாதம் ஆனையாறு திட்டத்திற்கு அரசினரால் ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. 1973-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் கேரள அரசுடன் சிறுவாணித் திட்டம் சம்பந்தமாக ஒப்பந்தம் கையெழுத்தாகி இருக்கிறது. சிறுவாணித் திட்டத்திற்காக கேரள அரசினருக்கு முதனிலைப் பணிகளுக்காக ரூ. 10 லட்சம் வழங்கப்பட்டிருக்கிறது. கேரள மாநிலப் பகுதியிலிருந்து அணைப் பகுதி வரை சாலைகள் போட ரூ. 15 லட்சத்திற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தை மொத்தமாக சற்றேறக் குறைய 10 கோடி ரூபாய் அளவில் நிறைவேற்றத் திட்டமிடப்பட்டிருக்கிறது





**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** சிறுவாணி நீர் ஒப்பந்தம் எத்தனை ஆண்டுக் காலத்திற்குச் செய்யப்பட்டிருக்கிறது. எவ்வளவு தண்ணீர் கிடைக்கும் ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** 99 ஆண்டுக் காலத்திற்குச் செய்யப்பட்டிருக்கிறது. அதுபற்றிய விவரங்கள் முழு அளவில் என்னிடம் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் விவரங்கள் அளிக்கலாம்.

## திருப்பூருக்கு குடிநீர் வழங்கல்

*** 261 வினா—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகரின் குடிதண்ணீர் பற்றாக்குறையைப் போக்க மேலும் ஓர் குழாயின் மூலம் மேட்டுப்பாளையத்திலிருந்து குடி தண்ணீரை திருப்பூர் நகருக்கும் கொண்டு வரும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) ஆம்.

(இ) திருப்பூர் நகராட்சியில் 2 லட்சம் மக்களுக்குத் தலைக்கு 115 லிட்டர் (25 காலன்கள்) வீதம் தண்ணீர் வழங்குவதற்கான திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு தலைமைப் பொறியாளரின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. சு. துரைசாமி :** இங்கு கடந்த பல்லாண்டுக் காலமாகக் குடிதண்ணீர்ப் பற்றாக்குறை இருக்கிறது. திருப்பூரில் மக்கள் எண்ணிக்கை 1981-ம் ஆண்டு கணக்குப்படி 81,000 பேர் இருக்கும் எனத் திட்டமிடப்பட்டுள்ளது. ஆனால், தற்போது கிட்டதட்ட 1½ லட்சம் மக்கள் தொகை இருக்கிறது. அது தொழில் நகரமாகவும் இருக்கிறது. ஆகவே, இந்தத் திட்டத்தை விரைவுபடுத்த அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** பல்லாண்டுக் காலமாகக் கோரிக்கை இருக்கிறது என்று சொன்னார்கள். முதல் திட்டம் நிறைவேற்றப்பட்டது. 1963-ம் ஆண்டு பல்லாண்டுக் காலமாக

[1973 நவம்பர் 21

என்று பொதுவாகச் சொல்லுவது இப்படிப்பட்ட பிரச்சினையில் சரியானது அல்ல. இரண்டு மூன்று ஆண்டுக் காலமாக மக்கள் தொகை மிகுதிப்படுவதை மனத்தில் கொண்டு ஆலோசிக்கப்பட்டுள்ளது. அதற்கேற்றபடி தண்ணீர்த் திட்டத்தை விரிவுபடுத்தும் திட்டத்திற்கு நிதிநிலை வசதி கிடைத்தவுடன் நிறைவேற்றப்படும்.

### ஈழுவர் வகுப்பு மாணவர்களுக்கு படிப்புதவித் தொகை

*** 262 வினா.—திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் :** மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள எழுவர் (ஈழுவர்) என்ற வகுப்பினர்களுக்கு பின்தங்கிய வகுப்பினர் என்று ஸ்காலர்ஷிப் பணம் கொடுக்கப்பட்டு வந்தது. இந்தக் கல்வி ஆண்டில் அவர்கள் பின்தங்கிய வகுப்பினர் பட்டியலில் வருவதில்லை என்று ஸ்காலர்ஷிப் பணம் கொடுப்பது நிறுத்தப்பட்டதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** ஆம்.

(இ) பின்தங்கிய வகுப்பினர் நலக்குழு பிற்பட்ட வகுப்பினர் பட்டியலினைத் திருத்தி அமைத்ததுக்கான பரிந்துரையில், 'எழவன்' என்ற சொல் கேரளாவிலுள் கள் இறக்குவோரைக் குறிப்பிடுகிற தாகையால், அதனை பிற்பட்ட வகுப்பினர் பட்டியலிலிருந்து நீக்கி விடலாமென பரிந்துரைத்தது. அரசு இதனை ஏற்றது. இருப்பினும், ஏற்கனவே உதவி தொகைப் பெற்று பயின்று வந்த மாணவர்களுக்குத் தங்கள் பயிற்சி ஒரு கட்டத்தில் முடியும்வரை (completion of course in one stage) உதவித் தொகை வழங்குமாறு ஆணையிட்டது. இதனால் ஒரு பயிற்சியில் முதன் முதலாகச் சேர்ந்து உதவித் தொகைக்கு விண்ணப்பித்துக் கொள்ளும் மாணவர்களின் கோரிக்கைகளே நிராகரிக்கப்பட்டன. திருநெல்வேலி மாவட்டத்தில் அப்படி நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை 51.



1973 நவம்பர் 21]

**திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் :** இந்த ஈழுவ சமுதாயம் பொருளாதார ரீதியில் மிகவும் பின்தங்கியவர்கள் என்பது அரசுக்குத் தெரியுமா ? கேரளாவில் இவர்களுக்குப் பின்தங்கிய வகுப்பினருக்கு அளிக்கப்படுகின்ற சலுகைகள் அளிக்கப்படுவதுபோல் இங்கும் அளிப்பதற்கு அரசு மறுபரிசீலனை செய்யுமா ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** அந்தப் பெயருக்குப் பதிலாக இல்லத்து பிள்ளைமார் என்ற வகுப்பினர் பெயரில் அவர்கள் விண்ணப்பித்தால் அதைப்பற்றிக் கவனிக்கப்படும்.

**திருமதி ஜோதி வெங்கடாசலம் :** ஏற்கனவே இந்த ஈழுவ இனத்தைச் சார்ந்தவர்கள் திருநெல்வேலியில் இருந்திருக்கிறார்கள். அவர்களுக்கு இந்த ஸ்காலர்ஷிப் கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கும் அந்த இனத்தைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். இந்தப் பெயர் மாற்றப்படுகிற காரணத்தால், பாக்வேர்ட் கம்யூனிட்டி கமிஷன் ரிப்போர்ட்டில், அவர்களுடைய லிஸ்டில் இருந்து இது எடுக்கப்பட்டுள்ள காரணத்தினால் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டு வந்த சலுகைகள் மறுக்கப்பட்டிருக்கின்றன என்பதைப் பார்க்கும்போது அது மிகவும் வருந்தத்தக்கதாக இருக்கிறது. ஆகவே பெயரை வைத்தோ அல்லது கேரளாவில் கள் இறக்குவோருக்குத்தான் அந்தப் பெயர் உள்ளது என்பதை மனதில் வைக்காமல், இந்த இனத்தைச் சார்ந்தவர்கள் இன்னும் திருநெல்வேலியில் இருக்கிறார்கள் என்பதனாலும் அவர்களுக்கு இந்தச் சலுகைகளைக் கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** பின்தங்கியவர்களுக்கு சலுகைகள் அளிப்பதில் இந்த அரசு முன்னணியில் இருக்கிறது என்பதை அம்மையார் அவர்கள் உணருவார்கள் என்று கருதுகிறேன். ஆனால் அந்தப் பெயரினால் சில குழப்பங்கள் ஏற்படுகின்றன என்பதால் இல்லத்து பிள்ளைமார் என்ற வகுப்பின் கீழ் விண்ணப்பித்தால் அவர்களுக்குச் சலுகைகள் வழங்கப்படுகின்றன.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** ஈழுவர்கள் என்ற வகுப்பினர் பிற்பட்ட இனத்தினர் பட்டியலில் கன்னியாகுமரி ஜில்லாவில் இருக்கிறார்கள். அவர்களுக்கு முன்பு அரசாங்கம் சலுகைகள் கொடுத்து வந்தது. அதை இன்னும் தொடர்ந்து கொடுப்பதற்கு அரசாங்கம் வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா ?

[1973 நவம்பர் 21

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** ஒரு கட்டத்தில் ஆரம்பித்து அது முடியும் நிலையில் இருக்கும் மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் கட்டாயம் அளிக்கப்படும். கன்னியாகுமரி மாவட்டத்தில் இன்றைக்கும் ஈழவர்களைப் பின்தங்கிய மக்களாகக் கருதி தொடர்ந்து சலுகைகள் அளிக்கப்படுகின்றன.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** மொழிவழி மாகாணங்கள் அமைப்பதற்கு முன் எந்தெந்தச் சலுகைகள் எந்தெந்த சமுதாயத்தினருக்கு திருவாங்கூர்-கொச்சி ஸ்டேட்டில் வழங்கிக் கொண்டிருந்தார்களோ அந்தச் சலுகைகளை ஸ்டேட் ரீ-ஆர்கனைசேஷன் ஆக்ட்-படி மறுக்கக் கூடாது என்று அந்த ஆக்டில் ஒரு விதி இருக்கிறது. எனவே ஸ்டேட் ரீ-ஆர்கனைசேஷன் ஆக்ட்டுக்கு முன்னால் எந்தெந்தச் சலுகைகளை பிற்பட்ட சமுதாயங்கள் பெற்றுக் கொண்டிருந்தனவோ அந்தச் சமுதாயங்களுக்கு அந்தந்தச் சலுகைகளை இந்த அரசு வழங்குவதற்கு ஆவன செய்யுமா ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** இப்போதுள்ள பிரச்னை அவர்களுக்கு உதவி அளிப்பதா இல்லையா என்பது மட்டுமல்ல, எந்தப் பெயரால் அவர்கள் அழைக்கப்பட வேண்டும் என்பதுதான் பிரச்னை. எனவே, ஏற்கனவே உதவித் தொகை வழங்கியவர்களுக்கு தொடர்ந்து அளிக்கப்படுகிறது.

**திருமதி ஜோதி வெங்கடாசலம் :** அமைச்சர் அவர்களின் பதிலிலிருந்து இல்லத்து பிள்ளைமார் என்று பெயரை மாற்றி வைத்துக் கொண்டால் இந்த ஸ்காலர்ஷிப்க்கு அவர்கள் எலிஜிபிள் ஆகிவிடுவார்கள். அப்படி இல்லத்து பிள்ளைமார் என்று வைத்துக் கொள்வதற்கு அந்தப் பெயர் அந்த லிஸ்டில் வந்திருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** ஆம். முழு விவரம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரம் தெரிவிக்கப்படும்.

**திரு. க. உரொ. எட்மண்ட் :** இந்த ஈழவ சமுதாயத்தினருக்குக் கொடுக்கப்பட்டு வந்த சலுகைகள் நிறுத்தப்பட்டதற்குக் காரணம் நம் பின்தங்கியோர் நலக் குழுவின் சிபாரிசின் பேரில் நிறுத்தியிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பின்தங்கியோர் நலக் குழு சில சிபார்சுகளைச் செய்திருக்கிறார்கள். பதினாறு சில சமுதாயங்களை பின்தங்கியோர் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்று சிபார்சு செய்திருக்கிறார்கள். அதை உடனடியாகச் செய்வதற்கு அரசு நடவடிக்கைகள் எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.



1973 நவம்பர் 21]

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** பின்தங்கியோர் நலக் குழுவின் பரிந்துரைகள் அத்தனையையும் அரசாங்கம் ஏற்றுக் கொள்ளவேண்டும் என்றில்லை. அதில் சிலவற்றை மாற்றவும் கூடும். உறுப்பினர் கருத்தை சமயம் வரும்போது பரிசீலனை செய்ய அரசாங்கம் தயார்.

**திரு. சி. ஆறுமுகம் :** நம்முடைய எதிர்க் கட்சி அம்மையார் அவர்கள் குறிப்பிட்ட இனத்தினருக்கு கேரளாவில் உள்ளதுபோல் சலுகை தமிழ்நாட்டில் அளிக்கப்படவில்லை என்று கூறினார்கள். கேரளா நாட்டில் ஹரிஜனங்களுக்குச் சலுகைகள் இல்லை என்று சொல்கிறார்களே அது அரசாங்கத்திற்குத் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** அந்த விவரம் எனக்குத் தெரியாது.

**திருமதி ஜோதி வெங்கடாசலம் :** இல்லத்து பிள்ளைமார் என்ற பெயர் பிற்பட்டோர் லிஸ்டில் இல்லாதபோது அவர்கள் இந்தப் பெயரை வைத்து ஸ்காலர்ஷிப்புக்கு விண்ணப்பங்கள் கொடுப்பார்களேயானால் உங்களுடைய டிப்பார்ட்மெண்ட் அதை அவ்வளவு சுலபமாக சாங்க்ஷன் செய்யுமா ? இவைகளுக் கெல்லாம் அரசாங்கம் என்ன செய்ய முன்வந்திருக்கிறது ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** அம்மையார் அவர்கள் தெரிவித்த கருத்துக்கிணங்க ஏற்கெனவே இந்த உதவித் தொகை இல்லத்துப் பிள்ளைமார்களுக்கு அளிக்கப்பட்டு வருகிறது. ஆனால், இல்லத்துப் பிள்ளைமார் என்ற பெயரில் விண்ணப்பிக்க வேண்டும்.

### கள்ளர் சீரமைப்புப் பள்ளி உடற்பயிற்சி ஆசிரியர்கள் சம்பளம்

* 263 வினா.—**திரு. நா. வெ. குருசாமி :** மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் ஹையர் கிரேடு உடற்பயிற்சி ஆசிரியர்களுக்கு மற்ற இலாகாவில் கொடுக்கப்படும் சம்பளம் இன்னும் தரப்படவில்லை என்பது உண்மையா ?

[1973 நவம்பர் 21

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : உண்மையல்ல. கள்ளர் சீரமைப்பு பள்ளிகளில் ஹையர் கிரேடு உடற்பயிற்சி ஆசிரியர்களுக்கு மற்ற இலாகாவில் கொடுக்கப்படும் சம்பள விகிதப்படி கொடுக்கும்படி அரசு ஆணை (பலவகை) எண். 681, சமூக நலம், நாள் 30—7—1973-ன் கீழ் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வைகைக் கால்வாய் சீரமைப்பு

*264 வினு—திரு. த. சோனையா : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1973-74-ம் ஆண்டில், வைகைக் கால்வாய் சீரமைப்புத் திட்ட வேலைக்கு எவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது ?

(இ) இவ் வேலை எந்த ஆண்டு முடிவடையும் ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ரூ. 100 லட்சம்.

(இ) இவ் வேலை ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் மத்திய காலத்தில் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. த. சோனையா : இத் திட்டம் ஏறத்தாழ பத்து பதினைந்து ஆண்டுகளாகவே நீடித்துக் கொண்டேயிருக்கிறது. இராமநாதபுரம் மாவட்ட மக்கள் இதை வேகமாக எதிர்பார்க்கிறார்கள். ஆகவே அரசு இதை உடனடியாக முடிப்பதற்கு இன்னும் தீவிரமாக முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : திட்டத்தைத் தீவிரமாக ஆக்குவதற்குத்தான் 1973-74-ல் 100 லட்சம் ரூபாய் இதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஏற்கனவே நடப்பாண்டில் அத் திட்டத்திற்காக ரூபாய் 6.85 லட்சம் செலவிடப்பட்டிருக்கிறது.

வைகை ஆயக்கட்டின்கீழ் உள்ள கண்மாய்கள்

*265 வினு—திரு. த. சோனையா : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம், மேலவெள்ளூர், மாங்குடி கண்மாய்கள் வைகை ஆயக்கட்டில் சேர்க்கப்பட்டிருந்தது இப்பொழுது விடுபட்டுள்ளதா ?



1973 நவம்பர் 21]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இக் கண்மாய்கள் வைகை ஆயக்கட்டில் சேர்க்கப்பட்டவையல்ல.

திரு. த. சோனையா : வைகைக் கால்வாய் சீரமைப்புத் திட்டத்தின்மூலம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள கண்மாய்கள் பெரும்பாலும், நீர் கிடைக்கும் கண்மாய்கள் எல்லாம், இதைச் சுற்றி இருப்பதால் இடையில் இந்த மேலவெள்ளூர், மாங்குடி கண்மாய்கள் எப்படியோ விடுபட்டு விட்டன. எனவே, சீரமைப்புத் திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வருகிற போது இந்த மேலவெள்ளூர், மாங்குடி கண்மாய்களை வைகை ஆயக்கட்டில் சேர்த்துக் கொள்ள ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அரசிடம் இருக்கிற தகவல்படி இவை வைகை ஆயக்கட்டில் வருபவை அல்ல, கிருதமால் நதியிலிருந்து வருகிற கண்மாய்களைச் சேர்ந்தவையாகும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : வைகை திட்டம், கிருதமால் நதித் திட்டம் இவற்றில் சில கண்மாய்கள் இந்த லிஸ்டத்தில் சேர்க்கப்படாமல் இருந்தவைகளை சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று இரு மாவட்ட அபிவிருத்தி மன்றங்களிலும் தீர்மானங்கள் நிறைவேற்றினார்கள். அவை பரிசீலனை செய்யப்படுகிறதா ? கனம் உறுப்பினர் அவர்கள் சொன்னதுமாதிரி சில கண்மாய்கள் விடுபட்டிருக்கின்றன. திருமங்கலம், திருப்புவனத்திலும் அப்படி இருக்கின்றன. அவற்றை லிஸ்டத்தில் சேர்க்கக்கூடிய ஏற்பாடுகள் ஏதாவது உண்டா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : என்னிடமுள்ள தகவல்படி அந்தக் கண்மாய்கள் வைகை ஆயக்கட்டில் வரவில்லை யென்று தெரிவித்தேன். ஏதாவது கண்மாய்கள் விடுபட்டிருந்தால் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டால் அவைபற்றி பரிசீலிக்கலாம்.

திரு. த. சோனையா : இந்த மேலவெள்ளூர், மாங்குடி கண்மாய்கள் வைகை ஆயக்கட்டிலிருந்து எப்படியோ விடுபட்டிருக்கின்றன. எனவே அந்தக் கண்மாய்களை மீண்டும் வைகை ஆயக்கட்டில் சேர்த்துக் கொள்வதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மறுமுறையும் சொல்கிறேன். என்னிடமுள்ள தகவல்படி அவை வைகை ஆயக்கட்டின் கீழ் வருபவை அல்ல. கிருதமால் நதியிலிருந்து வருகிற கண்மாய்களைச் சேர்ந்தவை என்று தகவல் இருக்கிறது. ஆனால் உறுப்பினர் அவர்களுக்கு ஏதாவது தகவல் இருந்து அதைத் தெரிவித்தால் அரசு பரிசீலிக்கும்.

*266 வினா—**திரு. த. சோனையா :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம், ராங்கன் கண்மாயை வைகை ஆயக்கட்டில் சேர்க்கக் கோரி விவசாயிகளிடமிருந்து விண்ணப்பம் ஏதேனும் அண்மையில் அரசிற்கு வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

**திரு. த. சோனையா :** ஏற்கனவே மேலவெள்ளூர், மாங்குடி கண்மாய்கள் வைகை ஆயக்கட்டிலிருந்து விடுபட்டுப் போயிருக்கின்றன. எனவே அமைச்சர் அவர்கள் அந்தக் கண்மாய்களை வைகை ஆயக்கட்டில் சேர்த்துக் கொள்ள ஏற்பாடு செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** இதுபற்றி உறுப்பினர் அவர்கள் விவரமாக எழுதியனுப்பினால் அரசு பரிசீலிக்கும்.

*Seepage Harnessing Scheme in Bhavani taluk*

*267 *Q.*—THIRU A. M. RAJA : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the Seepage Harnessing Scheme at Lower Bhavani Project area கூத்தாடிபாளையம் பள்ளம் திட்டம் in Bhavani taluk is in progress ; and

(*b*) if so, the present stage thereof ?



**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** (அ) & (இ) இவ் வேலை தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அணைக்கட்டு வேலை முடியும் தருவாயில் உள்ளது. வாய்க்கால் வேலை, குறுக்குக் கட்டிடம் கட்டுதல் முதலிய வேலைகள் துவங்கவிருக்கின்றன.

**திரு. ஏ. எம். இராஜா :** தலைவரவர்களே, அணைக்கட்டு வேலை முடிவடையும் தருவாயில் இருப்பதாக அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். வாய்க்கால் வேலை எப்போது முடிவு அடையும்? அந்த வாய்க்கால் வேலை முடிவானால் எவ்வளவு ஏக்கர் புதிதாகப் பாசனம் பெறும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** வாய்க்கால் வேலை, குறுக்கே கட்டடம் கட்டும் வேலை நடைபெறுகிறது என்று சொன்னேன். இந்த அணைக்கட்டு மூலம் பலன் அடையும் பூமியின் அளவு 222.50 ஏக்கர்.

குமரி மாவட்டத்தில் மழைக் காலங்களில் ஏற்படும்
வெள்ளப் பெருக்கு

*268 வினா—**திரு. வி. கார்த்திசன் :** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மழை காலங்களில் கன்னியாகுமரி மாவட்டத்தில் பெருக்கெடுத்து வீணாகப் போய் கடலில் விழும் தண்ணீரைத் தேக்கி, அண்டையிலுள்ள இராதாபுரம் சானலில் விடும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** இல்லை.

**திரு. ஏ. சுவாமிதாஸ் :** சார், ராதாபுரம் கால்வாய்க்குத் தண்ணீர் வேண்டுமென்று அங்கேயுள்ள பகுதி மக்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பகுதி தண்ணீர் இல்லாத பகுதி. கன்னியாகுமரி மாவட்டத்தில் பழைய ஆற்றில் மழைக் காலத்திலும், மற்ற நாட்களிலும் தண்ணீர் பாழாகிக் கொண்டு போகிறது. ஆகவே அந்தப் பழைய ஆற்றின் குறுக்கே அணை கட்டி, லிப்ட் இர்ரிகேஷன் மூலமாகவாவது இந்த ராதாபுரம் கால்வாய்க்குத் தண்ணீர் விடும் திட்டத்தை அரசு கொண்டு வருமா ?

[1973 நவம்பர் 21

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, அங்கத்தினர் புது திட்டத்தை தெரிவிக்கிறார்கள்.

*Lands acquired for fly over near Gemini*

*269 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether land was acquired from private parties for the construction of the fly over near the Gemini Studio at Madras;

(b) if so, the details thereof; and

(c) the amount of compensation paid therefor?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) ஆம்.

(ஆ) ஆர்ஜிதம் செய்யும் நிலங்களின் விவரம்.

| புலன் எண். | தாலுகா | விஸ்தீரணம் காணி. கிர. | விஸ்தீரணம் ச. அடி. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 ஆர். எஸ். நெ. 3/10 பகுதி புதிய எண். 3/13 மைலாப்பூர். | சென்னை (தென் கிழக்கு) வட்டம். | 0·03 | 1,312 |
| 2 ஆர். எஸ். நெ. 48/6 பகுதி புதிய எண். ஆர். எஸ்.. நெ. 48/18 நுங்கம் பாக்கம். | சென்னை (மத்திய வட்டம். | 0·02 | 2,076 |
| 3 ஆர். எஸ். நெ. 48/10 பகுதி புதிய எண். ஆர். எஸ். நெ. 48/17 நுங்கம் பாக்கம. | சென்னை (மத்திய) வட்டம். | 0·00 | 0,189 |
| 4 ஆர். எஸ். 48/11 பகுதி புதிய எண். ஆர். எஸ். 48/16 நுங்கம்பாக்கம். | சென்னை (மத்திய) வட்டம். | 0·00 | 1,834 |
| | மொத்த விஸ்தீரணம் .. | 0 07 | 0·611 |

(இ) நிலத்தின் சொந்தக்காரர்களுக்கும் சார்புடைய நபர்களுக்கும் ஈட்டுத் தொகை கொடுப்பது பற்றிய விவரங்கள் இறுதியாக்கப்படவில்லை. இறுதி நிலையில் உள்ளன. எனவே, நஷ்ட ஈட்டுத்தொகை இதுகாறும் ஒருவருக்கும் கொடுக்கப்படவில்லை.



1973 நவம்பர் 21]

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, இதற்கு அவார்ட் இன்னும் பாசாக வில்லையா? அவார்ட் பாசாகிப் பணம் கொடுக்காமல் இருப்பது போல் தெரிகிறது. காலதாமதம் ஆவதற்குக் காரணங்கள் என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, அவார்ட் பாசாகி பணம் கொடுக்கும் நிலையில் இருக்கிறது.

*Report on electronics industry*

*270 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the working group appointed by the Government have submitted any report on the electronics industry in this State; and

(b) if so, the details of the report?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) & (இ) ஆம் அறிக்கை ஒன்று @ பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

*Potassium Chlorate plant in Madurai*

*271 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether there is any proposal with the Government to instal a Potassium Chlorate Plant in Madurai district; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) & (இ) தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனமும், திருமங்கலம் மெட்டல் பவுடர் கம்பெனியும் கூட்டுத்துறையில் அமைத்துள்ள பாண்டியன் கெமிக்கல்ஸ் லிமிடெட் நிறுவனம் மதுரை மாவட்டம், மேலூர் வட்டம் நரசிங்கம்பட்டி கிராமத்தில் ரூபாய் 70 லட்சம் செலவில் ஆண்டொன்றுக்கு 1825 டன் உற்பத்தி செய்யும் பொட்டாசியம் குளோரேட் தொழிற்சாலையை அமைத்து வருகிறது.

டாக்டர் ச. மு. பழனியப்பன்: தலைவரவர்களே, இந்த பொட்டாசியம் குளோரேட் தீப்பெட்டித் தொழிற்சாலைக்கு மிகவும் அவசியமானது. தீப்பெட்டித் தொழிற்சாலையைச் சிறு தொழி

@ 433—438-ம் பக்கங்களில் இணைப்பு II-ஆக அச்சிடப்பட்டுள்ளது.

லாகக் கொண்டு நடத்துகிறவர்கள் இந்த பொட்டாசியம் குளோரேட் கிடைக்காமல் அவதிப்படுகிறார்கள். ஆகவே, அரசு உற்பத்தியை விரைவுபடுத்த முன் வருமா என அறிய விரும்புகிறேன். மேலும், இப்போது கிடைப்பதை சமமாக இந்தச் சிறு தொழிற்சாலைகளுக்குக் கிடைக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இப்போது நமக்கு வெளி மாநிலத்திலிருந்து வருகிறது. ஆகவே தான் இந்தத் தட்டுப்பாடு இருக்கிறது. நான் ஏற்கனவே இந்த மன்றத்தில் அறிவித்து இருக்கிறேன், மத்திய அரசாங்கம் இப்போது தருவதை மாநில அரசாங்கத்திற்கே தந்து விடுங்கள். நாங்கள் மாநிலத்தில் உள்ளவர்களுக்குச் சமமாகப் பங்கிட்டுக் கொடுக்கிறோம் என்று. இந்தப் புதிய தொழிற்சாலை நிறுவுவதில் சிறு தொழில் அதிபர்களுக்கு 49 சதவிகிதம் பங்கு கொடுத்து அவர்களையே அதற்கு முழு உரிமையாளர்களாக ஆக்கும் வகையில் வழி வகை செய்யப்பட்டிருக்கிறது.

**THIRU K. T. K. THANGAMANI:** May I know when the plant is likely to be commissioned?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** விரைவாக ஏற்படும் என்று கருதுகிறேன். எங்களுடைய திட்டப்படி 1974-ம் ஆண்டு இறுதியில் உற்பத்தித் தொடங்கப்பட வேண்டுமென்று திட்டமிடப்பட்டிருக்கிறது.

**THIRU K. M. SUBRAMANIAM:** May I know whether the location of the factory has been fixed, whether it is going to be Melur or some other place? There has been complaint that the present place should not be fixed since there is water scarcity there; some other place has to be fixed. Has that been done?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இந்தத் தீப்பெட்டித் தொழிற்சாலை பெரும்பாலும் மேற்கு இராமநாதபுரம் சிவகாசியை ஒட்டிய பகுதிகளில்தான் இருக்கின்றன. அங்கே சில இடங்கள் பரிசீலிக்கப்பட்டன. அங்கத்தினர் தெரிவித்தது போல் தண்ணீர் இந்தத் தொழிற்சாலைக்கு வேண்டும். ரசாயனத் தன்மை கொண்ட தண்ணீர் தேவைப்படுகிறது. மதுரை மாவட்டம் மேலூருக்குப்



பக்கத்தில் இடம் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது. இப்போது ஆராய்ச்சி செய்த அளவுக்கு அங்கே போதுமான தண்ணீரும், நல்ல தண்ணீரும் கிடைப்பதாகத் தெரிகிறது.

## காஸ் சிலிண்டர்கள் உற்பத்தி

***272 வினா—திருமதி த. ந. அனந்தநாயகி:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர், பேரவையில் 26—2—1973 அன்று வினா எண் 168-க்கு அளித்த விடையை யொட்டி, தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

Gas Cylinders உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு மத்திய அரசின் இசைவுக் கடிதம் கோரி எப்பொழுது விண்ணப்பிக்கப்பட்டது?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** 1972-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 22-ம் தேதியன்று.

**திரு. ஆ. பரந்தாமன்:** தலைவரவர்களே, தமிழ்நாட்டில் தொழிற்சாலைகள் தொடங்க வேண்டுமானால் 'லெட்டர் ஆப் இன்டன்ட்' இசைவுக் கடிதம் பெறுவதில் காலதாமதம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. அதே போல் கடன் மனுக்கள் பரிசீலிக்கிற முறையில் காலதாமதம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. இதை எண்ணத்தில் கொண்டு தான் அண்மையில் மத்திய அமைச்சர் ஒவ்வொரு மாநிலத்திலும் 'கம்பைன்ட் செக்ரடேரியட்' உருவாக்க வேண்டுமென்று சில மாதங்களுக்கு முன்னால் அறிவித்ததாக 'மெயில்' பத்திரிக்கையில் செய்தி வெளியாகி இருக்கிறது. ஆகவே, அது குறித்து மத்திய அரசு நம்முடைய அரசுக்கு ஏதேனும் செயற்குறிப்பு அனுப்பியிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** ஒரு ஆண்டுக்கு முன்னாலே கூடிய தொழில் அமைச்சர்கள் மாநாட்டில் நம்முடைய அரசாங்கம் இந்தக் கருத்தை வலியுறுத்தி காலதாமதம் தவிர்க்கப்பட வேண்டும், அப்படியில்லையென்றால் மத்திய அரசாங்கத்தைப் பொறுத்த அளவில் பல்வேறு இலாக்காக்களை இணைத்துப் பரிசீலனை செய்யவேண்டுமென்று சொன்னோம். அப்போதே மத்திய அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அதை நிறைவேற்ற ஒரு ஆண்டு எடுத்து இருக்கிறது.

**திரு. ஆ. கு. சுப்பையா :** தலைவரவர்களே மத்திய அரசாங்கத்திலிருந்து இசைவுக் கடிதம் கிடைத்து விட்டதா? கிடைத்து இருந்தால் என்ன விவரம் சொல்லி அனுப்பியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவரவர்களே, மத்திய அரசாங்கம் ஏற்கனவே இந்தத் தொழிலில் உற்பத்தி அதிகம் இருக்கிறது என்பதால் புதிய தொழில் தேவையில்லை என்று கருத்துத் தெரிவித்து இருக்கிறார்கள்.

*Stoneware Pipes Unit at Vridhachalam*

*273 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether any market survey has been conducted by the Stoneware Pipes Unit of the Tamil Nadu Small Industries Corporation Limited at Vridhachalam; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திருப்புவனம் வட்டாரத்தில் கயிறு தயாரிப்புத் தொழில்

*274 வினா—திரு. த. சோனையா : மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் வட்டாரத்தில் தென்னை நாரைக் கொண்டு கயிறு தயாரிக்கும் தொழிற்சாலை அரசுத் துறையில் அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இல்லை.

**திரு. த. சோனையா :** தலைவரவர்களே, திருப்புவனம் வைகை யாற்றின் இருமருங்கிலும் தென்னை மரங்கள் அதிகமாக இருக்கின்றன. ஆகவே, தென்னை மட்டைகள் அதிகமாகக் கிடைக்கின்றன. அதனால் அரசாங்கம் அங்கே ஒரு தொழிற்சாலையை நிறுவ இனியாவது ஏற்பாடு செய்யுமா?





**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவரவர்களே, அந்தத் தொழிற்சாலையைச் சிறு தொழிலாக ஆரம்பிக்க வேண்டுமென்று முடிவு எடுத்து இருக்கிறோம். தஞ்சை மாவட்டத்தில் 20 இடங்களில் தொடங்கப்பட்டிருக்கிறது. அதற்கு அரசாங்கம் ஏராளமாகப் பண உதவி செய்கிறது. ஒரு சிறிய தொழிற்சாலை ஏற்படுத்தி கயிறு தயார் செய்ய வேண்டுமானால் சுமார் 10,000 தென்னை மரங்களாவது வேண்டும். அப்படியிருப்பதாகக் கூறி மனு செய்தால் உடனடியாக அந்தத் தொழிற்சாலையை ஏற்படுத்த அரசு உதவி செய்யும்.

**திரு. எஸ். வடிவேல் :** தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் எந்தெந்த இடங்களில் இந்தத் தொழிற்சாலைகள் நிறுவப்பட்டிருக்கின்றன? எத்தனைத் தொழிற்சாலைகள் என்பதை அமைச்சர் அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** எந்தெந்த இடங்கள் என்பது என் கைவசம் இல்லை. பட்டுக்கோட்டைப் பகுதியில் இருக்கிறது என்று நினைக்கிறேன். அண்மையில் தான் சென்று திறந்து வைத்து விட்டு வந்தேன். மொத்தம் 20 நிறுவப்பட்டிருக்கின்றன.

*Issue of pattas*

*275 Q.—THIRU A. PARANDHAMAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whether there is any proposal under the consideration of the Government to give full powers to Tahsildars to issue Pattas (D. Forms) of poramboke lands to the landless; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. ஆ. பரந்தாமன் :** தலைவரவர்களே, ஒரு சிறிய ஏழை புறம்போக்குப் பட்டா பெறவேண்டுமானால் முதலில் தாசில்தார் அவர்களுக்கு மனு செய்யவேண்டும், தாசில்தார் பரிசீலனை செய்து கோட்டாட்சித் தலைவருக்கு அனுப்பி, கோட்டாட்சித் தலைவர் பரிசீலனை செய்து மாவட்ட வருவாய்த்துறை அதிகாரிக்கு

அனுப்ப வேண்டும். அந்த முறையில் தானாகவே சிவப்பு நாடாத் தன்மை ஏற்பட்டு விடுகிறது. இதனால் 10-15 ஆண்டுகள் ஆனாலும் பட்டா பெற முடியாத நிலை இருக்கிறது. ஆகவே, அந்த அதிகாரங்களை வட்ட அளவிலே தாசில்தார் அவர்களுக்கே கொடுக்க அரசு பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தற்போதுள்ள போர்டு ஸ்டான்டிங் ஆர்டர் படி ரூ. 400 மதிப்புள்ள நிலங்களை தாசில்தார் ஒப்படை செய்யலாம், என்று அதிகாரம் கொடுக்கப் பட்டிருக்கிறது. ஆனால் அதற்கும் அதிகமாக விலையுள்ள மற்ற இடங்களைப் பொறுத்தவரையில், ரூ. 2,000 மதிப்புள்ள நிலங்களை கோட்டாட்சித் தலைவர் ஒப்படை செய்யலாம். ரூ. 5,000 மதிப் புள்ள நிலங்களை மாவட்ட வருவாய்த் துறை அதிகாரி அல்லது மாவட்ட ஆட்சித் தலைவர் ஒப்படை செய்யலாம், ரூ. 10,000 மதிப் புள்ள நிலங்களை வருவாய்த் துறை வாரியம் ஒப்படை செய்யலாம். அதற்கு மேல் மதிப்புள்ள நிலங்களை அரசாங்கத் தின் அனுமதி பெற்றுத்தான் ஒப்படை செய்ய வேண்டுமென்று உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. அப்படிப்பட்ட உத்தரவுகள் தேவை என்று அரசு கருதுகிற காரணத்தால் அந்த உத்தரவுகளை மாற்றுவதற்கு முடியாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

* 276 வினா—திரு. வீ. செல்லதுரை : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

ஓமலூர் வட்டத்தில் தற்போது சாகுபடி செய்யத்தக்க வகையில் உள்ள பட்டா வழங்கப்படாத தரிசு நிலங்கள் எவ்வளவு உள்ளன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஓமலூர் வட்டத்தில் சாகுபடி செய்யத்தக்க அரசுத் தரிசு நிலத்தின் பரப்பளவு சுமார் 800 ஏக்கர். சேலம் உருக்காலைத் திட்டம் தொடர்பாக பிறப்பிக்கப்பட்டுள்ள நில ஒப்படைத் தடை உத்தரவு நடைமுறையில் உள்ளதால் மேற்கூறிய 800 ஏக்கராவில் 400 ஏக்கரா நிலங்களை ஒப்படை செய்ய இயலாது.



திரு. வீ. செல்லதுரை : மின்சாரத்தினால் கிராமப்புறங்களில் உள்ள பழி தைக்கும் அரிசனங்கள் வெகுவாக பாதிக்கப் பட்டுள்ளார்கள். அதைப்போல் நாட்டில் ஹிப்பிஸம் வளர்ந்து கொண்டே போவதால் க்ஷவரத் தொழிலாளர்களும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். ஆகவே, அவர்களுக்கு அந்தப் பகுதி களில் உள்ள தரிசு நிலங்களை விவசாயம் செய்யப் பகிர்ந்து கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கேள்வி எவ்வளவு நிலங்கள் இருக் கின்றன என்பது. அதிலே 400 ஏக்கரா நிலம் ஒப்படை செய்ய லாம், 400 ஏக்கரா செய்ய முடியாது. அந்த 400 ஏக்கரா நிலங்கள் ஏற்கனவே சிவாஜிமா ஆகுபேஷனில் இருந்து வருகிறது. ஸ்தல அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுப்பார்கள்.

* 277 வினா—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

பொன்னேரிப்பேட்டை துணை வட்டம், திருக்கண்டலம் கிராமத்தில் உள்ள 'முள்தோப்பு' புறம்போக்கு நிலத்தை வீடற்ற அரிசன மக்களுக்கு ஒப்படை செய்வதில் ஏற்படும் காலதாமதத் திற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பொன்னேரிப் பேட்டை துணை வட்டம், திருக்கண்டலம் கிராமம் "முள் தோப்பு புறம்போக்கு", என்பது 'சித்தேரி வரவுகால் புறம்போக்கு' என்று வருவாய்த்துறை கணக்குகளில் உள்ளது. இந்த நிலத்தை ஒப்படை செய்வது நீர்ப்பாசன வசதிக்கு மிகவும் இடையூறாக இருக்கும் என்ற காரணத்தால் இதை ஒப்படை செய்ய இயலாது.

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, மேற்கண்ட நிலத்தை இரண்டு மூன்று பணக்காரர்கள் சாகுபடி செய்யும் நிலங்களாக பயன் படுத்திக்கொண்டிருக்கிறார்கள். வீட்டு மனைக் குரிய நிலம் வேறு இல்லை. ஆகவே, ஒரு சிறப்பு நடவடிக்கையாக கலெக்டருக்கு உத்தரவிட்டு வீட்டு மனை வழங்க உரிய நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** வீட்டுப் பட்டாவுக்கு தகுதியானவை அல்ல என்பது தான் குறிப்பு. சித்தேரி புறம்போக்கு நிலமாக இருப்பதன் காரணத்தினால் கிராம மக்கள் ஆட்சேபனை செய்கிறார்கள். வீட்டு மனைக்காக பக்கத்தில் மடவிளாகம் என்ற ஊரில் நிறைய இடம் இருக்கிறது. 100 பேர்களுக்கு இடம் கொடுக்கலாம். அவர்கள் ஒப்புக் கொண்டால் அங்கே கொடுப்பதற்கு ஆட்சேபனை கிடையாது.

### ஓய்வு பெற்ற இராணுவத்தினருக்கு நிலம் ஒதுக்கீடு

*278 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :

(அ) நில உச்ச வரம்புச் சட்டத்தின் மூலம் கிடைக்கும் உபரி நிலங்களை ஓய்வு பெற்ற இராணுவத்தினருக்கும் ஒதுக்கித் தருமாறு மாநில அரசை மத்திய அரசு கோரியுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது மாநில அரசு என்ன முடிவு எடுத்துள்ளது ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) இல்லை.

(இ) இவ்வினா எழாது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** உச்சவரம்பிலிருந்து மிச்சம் ஏற்படும் நிலத்தை இலங்கையிலிருந்து வருகிற அகதிகளுக்கு முன்உரிமை கொடுத்து ஒதுக்க அரசாங்கம் ஆவன செய்யுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** இப்பொழுது இருக்கிற விதிமுறைகளின்படி சில பேர்களுக்கு முன் உரிமை வழங்கப்படுகிறது. எட்டாவது இடத்தில் தாமே நேரடியாகவோ அல்லது தமது குடும்பத்திலுள்ள ஒருவர் மூலமோ உழவுத் தொழிலில் ஈடுபடக்கூடியவராகவும், ரூ. 10,000-க்கு மேற்படாது மதிப்புள்ள சொத்துக்களை இந்தியாவுக்குக் கொண்டுவந்துள்ள வருமான இலங்கை அகதிகளுக்குக் கொடுக்கலாம் என்று இருக் கிறது. விதிமுறைகளின்படி முன் உரிமை வழங்கப்பட்டு ஒதுக்கப்பட்டுவருகிறது.





### *Lands assigned to Madras Aluminium Company*

*279. Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whether a large area of land has recently been assigned to the Madras Aluminium Company at Mettur; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

### மஞ்சிநாயக்கன்பட்டி பள்ளிக் கட்டடம்

*280 வினா—திரு. நா. வெ. குருசாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், ஆண்டிப்பட்டி ஊராட்சி ஒன்றியம், ராஜதானி ஊராட்சி மன்றத்தைச் சேர்ந்த மஞ்சிநாயக்கன் பட்டியில் சுமார் நான்கு ஐந்து ஆண்டுகளுக்கு முன் பொது மக்கள் நன்கொடையாலும், ராஜதானி பஞ்சாயத்து, ஆண்டி பட்டி யூனியன் ஆகியவைகளின் உதவியாலும் ஒரு புதிய பள்ளிக் கூடம் கட்டும் வேலை ஆரம்பிக்கப்பட்டதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் என்ன ?

(உ) பள்ளிக் கட்டட வேலை முடிந்து விட்டதா ?

(எ) இல்லை எனில், அதற்கான காரணங்கள் என்ன ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** (அ) முதல் (எ) முடிய சட்டப் பேரவை முன் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப் பட்டுள்ளது.

---

@ 438—440-ம் பக்கங்களில் இணைப்பு III-ஆக அச்சிடப்பட்டுள்ளது.

## கும்முடிப்பூண்டியில் சிறுதொழில் பயிற்சி

*281 வினா—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்முடிப்பூண்டியில் பல்வேறு சிறு தொழில்களைக் கற்பிக்க நடமாடும் பேருந்து தொழிற் பயிற்சி நிலையம் (Mobile Van Unit) அமைப்பதில் மேலும் காலதாமதப்படுவதற்கான காரணங்கள் யாவை?

(இ) இது எப்போது நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) கும்மிடிப்பூண்டி பஞ்சாயத்து ஒன்றிய ஆணையரின் வேண்டுகோளுக்கு இணங்க இந்திய அரசுக்குச் சொந்தமான சிறுதொழில் பணி நிலையத்தினரால், சிறு தொழில்களை செயல்முறைப்படுத்தியும் கைவினைஞர்களுக்கு பயிற்சியும் அளிக்கும், இரு நடமாடும் தொழிற் பயிற்சிப் பேருந்துகள் 15—4—1973 அன்று கும்மிடிப்பூண்டி ஒன்றியத்திற்கு அனுப்பப்பட்டு, அப்பயிற்சி 15—5—1973 வரை கொடுக்கப்பட்டுள்ளது.

(இ) வினா எழாது.

திரு. கா. வேழவேந்தன் : அந்தப் பயிற்சி பயனுள்ளதாக இருக்கிற காரணத்தினால் முறைப்படி அந்த 'வான்' மீண்டும் அப்பகுதிக்குச் செல்லுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இம்மாதிரி நடமாடும் பயிற்சி நிலையங்களை பின்தங்கிய பகுதியிலுள்ள கிராமங்களுக்கு அனுப்பவேண்டும் என்பது தான் அரசாங்கத்தின் நோக்கம். அனுப்பப்பட்ட பகுதிக்கு அனுப்புவதாக இப்பொழுது இல்லை.

## ஒன்றியங்களில் தொழில் விரிவாக்க அதிகாரிகள்

*282 வினா—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஊராட்சி ஒன்றியங்கள் ஒவ்வொன்றிற்கும் ஒரு தொழில் விரிவாக்க அதிகாரி [Extension Officer (Industries)] நியமிப்பதற்கான செயற்குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இல்லை.





திரு. கா. வேழவேந்தன் : ஒவ்வொரு ஒன்றியத்திலும் தொழில் வளரவேண்டும் என்கின்ற கொள்கையின் அடிப்படையில் ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் ஒரு ஈ.ஓ.ஐ. நியமிக்கவேண்டும் என்று கருதி, இரண்டு ஒன்றியங்களுக்கு ஒரு ஈ.ஓ.ஐ. இருப்பதை மாற்றி ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் ஒரு ஈ.ஓ.ஐ. அதிகாரி நியமிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : ஏற்கனவே 374 ஒன்றியங்களுக்கும் அமைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு, இடையிலே நிறுத்தப்பட்டு, தி.மு.க. ஆட்சிப் பொறுப்பை ஏற்றதும், பேரறிஞர் அண்ணா அவர்கள் இதைப் பரிசீலனை செய்யச் சொல்லி, அது சரியாக வராது என்று சொல்லி, 374, 204 ஆகக் குறைக்கப்பட்டு, அதிலும் பிறகு 60 பேர்களுக்கு வேலை இல்லாமல் வேறு துறைக்கு மாற்றப்பட்டார்கள். ஒவ்வொரு பகுதியிலும் எந்தெந்தப் பகுதியிலே எதை எதை எல்லாம் இணைக்கலாம் என்று இருக்கிறதே தவிர, தனியாக எந்தச் செயற்குறிப்பும் இல்லை.

## திருச்சிராப்பள்ளியில் பேருந்து நிலையம்

*283 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி சிந்தாமணி பஸ் நிலையம் மிகவும் இடநெருக்கடியான இடத்தில் இருப்பது உண்மையா?

(இ) ஆம் எனில், இதை வேறு இடத்திற்கு மாற்றுவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) இப்பொழுது திருச்சிராப்பள்ளியில், திருச்சி சந்திப்பின் பகுதியில் ஒரு பஸ் நிலையம் உள்ளது. சிந்தாமணியில் பஸ் நிலையம் இல்லை.

(இ) வினா எழவில்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சிந்தாமணியில் பஸ் நிலையம் இல்லை என்று கூறினார்கள். செயின்ட் ஜோசஃப் கல்லூரியின் அருகில் இருப்பது சிந்தாமணி பஸ் நிலையம்தான். தற்பொழுது அங்கே இட நெருக்கடி இருக்கிறது என்பதை நாம் அனைவரும் அறிவோம். ஆகவே, அமைச்சர்

அவர்கள் தங்களுடைய செல்வாக்கைப் பயன்படுத்தி, செயின்ட் ஜோஸப் கல்லூரி நிர்வாகத்திடமிருந்து கொஞ்சம் இடம் வாங்கி, இதை விரிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, சிந்தாமணி சாலையில் இருப்பது ஆங்காங்கு உள்ள பஸ் ஸ்டாப்புகள். அங்கே பஸ்கள் நிற்கும், போகும். ஆனால் பஸ் ஸ்டாண்டு அல்ல. ஆனால், இப்பொழுது கனம் உறுப்பினர் அவர்கள் சொன்ன யோசனையின்படி சிந்தாமணியில் திருச்சி-கரூர் சாலைக் கருகில் S. No. 539 (part), 538 (part), 537-1 (part), 537-2 (part), Ward No. 5, Block No. 9. எண்ணில் அரசாங்கத்தினால் அக்வையர் செய்யப்பட்டு, அதில் என்ன வேலைகள் செய்யலாம் என்பதைப் பரிசிலனை செய்து கொண்டிருக்கிறோம். அந்த நோக்கில் அதுவும் கவனிக்கப்படும்.

உதகை நகருக்குப் புதிய பேருந்து நிலையம்

*284 வினா—திரு. கு. அ. பொம்மன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உதகை நகரத்தில் புதிய பேருந்து நிலையம் ஒன்று கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதற்கான வேலை எப்போது தொடங்கப்படும் ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) ஆம்.

(இ) முறைப்படியானவைகளை அனுசரித்து பின் வேலை துவங்கப்படும்.

திரு. கு. அ. பொம்மன் : இந்த வேலைகள் எப்பொழுது துவங்கப்படும், எப்பொழுது முடிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இந்த வேலைக்கு ஏற்கனவே ரூ. 3,53,000 செலவில் ஊட்டி நகராட்சியில் ஒரு மத்திய பேருந்து நிலையம் கட்டுவதற்கான கருத்து ஒன்று இருக்கிறது. செலவின் மதிப்பீடு ரூ. 5 லட்சத்திற்குக் குறைவாக இருப்பதால் கட்டிட தலைமைப் பொறியாளர் அவர்களே தொழில் நுட்ப ஒப்பளிப்பு அளித்துள்ளார்கள். ஒப்பந்தப்புள்ளிகள் கேட்ட போது ஒருவர் மட்டுமே முன் வந்தார். இந்த ஒப்பந்தப் புள்ளித்



தொகை மதிப்பீட்டை விட 25.2 விழுக்காடு அதிகமாக இருந்ததால் ஒப்பந்தப் புள்ளி நிராகரிக்கப்பட்டது. இரண்டாம் முறையாக ஒப்பந்தப் புள்ளிகள் கேட்டபோது, ஒருவரும் கேட்க முன்வரவில்லை. எனினும் ஊட்டி நகராட்சி ஆணையர் ஒப்பந்தப் புள்ளிகள் மறுபடியும் கேட்கத் தக்க நடவடிக்கை எடுத்து வருகிறார்.

வடார்க்காடு மாவட்டத்தில் நாட்டுடைமையாக்கப்பட்ட பேருந்து வழித்தடங்கள்

*285 வினா—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1973-ம் ஆண்டில், வடார்க்காடு மாவட்டத்தில் அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து வழித்தடங்கள் எத்தனை ?

(இ) அந்த வழித் தடங்களில் அரசு பேருந்துகள் விடப்பட்டுள்ளனவா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) 14 வழித் தடங்கள்.

(இ) ஆம்.

திரு. கே. ஏ. வகாப் : அரசுடைமையாக்கப்பட்ட சில வழித் தடங்களில் சில தனியார் பஸ்கள் மறுபடியும் ஓடுகின்றன. அதற்குக் காரணம் என்ன ? இப்பொழுது எடுத்துக்கொள்ளப்பட்ட தனியார் பேருந்துகளுக்குப் பதிலாக விடும் அரசு பஸ்கள் மிகவும் பழமையானவாக இருக்கின்றன, குறிப்பாக சென்னை-வேலூர், வந்தவாசி-வேலூர் பஸ்கள் மாற்றப்பட்டு புதிய பஸ்கள் போடுவதற்கு அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : நாட்டுடைமையாக்கப்பட்ட வழித் தடங்களில் மறுபடியும் தனியார் பஸ்கள் ஓடுவது கோர்ட்டாரின் தயவினாலே தவிர, அரசாங்கத்தினால் அல்ல. புதிய பஸ்களை விடுவது பற்றி எவ்வளவு தூரம் நடவடிக்கை எடுக்க முடியுமோ அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

## *Madras-Kanyakumari express buses*

*286 *Q*.—THIRU N. DENNIS:
THIRU N. KITTAPPA: Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to run direct buses between Kanyakumari and Madras; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** (அ) & (இ) தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை, 1—7—1973 முதல் சென்னைக்கும் கன்னியாகுமரிக்குமிடையில் மின்னல் வேகப் பேருந்துப் பணியாக (வழித்தட எண் 589) விழுப்புரம், திருச்சி, மேலூர், மதுரை, திருநெல்வேலி, நாகர்கோயில் வழியாக இரண்டு பேருந்துகளை ஏற்கனவே இயக்கி வருகிறது.

**திரு. சோ. அழகர்சாமி:** கன்னியாகுமரிக்கும் சென்னைக்கும் இடையே இப்பொழுது விடப்படுகின்ற பஸ்களின் கட்டணம் அதிகமாக இருப்பதனால், அநேகமாக நான்கு, ஐந்து பேர்கள் குறைவாகத்தான் இந்த பஸ்களில் பிரயாணம் செய்கிறார்கள். ஆகவே, இதற்கான கட்டணத்தைக் குறைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** போதிய வருவாய் இருப்பதாகத் தான் தகவல்.

## நடத்துனர் இல்லா விரைவுப் பேருந்துகள்

*287 வினா—**திரு. ஏ. சுப்பிரமணியம்:** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை, கண்டக்டர் இல்லாமல் நீள்தொலை விரைவுப் பேருந்து ஒன்றைச் சோதனை அடிப்படையில் ஓட்டும் திட்டம் அமலாக்கப்பட்டதா?

(இ) ஆமெனில், அதன் முடிவு என்ன?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.



## மொம்மிடி-மேட்டூர் அணை பேருந்துப்பணி

*288 வினா—**திரு. வீ. செல்லதுரை:** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், ஓமலூர் வட்டம், பொம்மிடிக்கும் மேட்டூர் அணைக்கும் இடையே டேனீஸ்பேட்டை, தீவட்டிப்பட்டி, காமனேரி, மேச்சேரி வழியாக பேருந்து விடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** இல்லை.

**திரு. வீ. செல்லத்துரை:** தலைவரவர்களே, என் தொகுதியிலுள்ள பொம்மிடி, ராமமூர்த்தி நகர் போன்ற இடங்களிலிருந்து அடிக்கடி பல அலுவல்கள் காரணமாக மேட்டூருக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. ஏனென்றால் கோட்டாட்சித் தலைவர் அலுவலகம் மேட்டூரில்தான் இருக்கிறது. இப்போது மேட்டூருக்குச் செல்லவேண்டுமானால் இந்த இடங்களிலிருந்து சேலத்திற்குச் சென்று, அங்கிருந்துதான் மேட்டூருக்குப் போகவேண்டும். அதனால் அங்குள்ள மக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். அமைச்சரவர்கள் அங்கே வந்திருந்த போதுகூட இந்தக் கோரிக்கையை எடுத்துச்சொன்னேன். அதற்கு ஆவனச் செய்வதாகச் சொன்னார்கள். ஆகவே, இனிமேலாவது மறுபரிசீலனை செய்து, தக்க நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, சாலை செப்பனிடப்பட்டு, அதன்பிறகு இதற்கான வேலைகள் தொடங்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் அனுமதியுடன் கேள்வி நேரத்தை சிறிது நீட்டிக்கிறேன்.

[1973 நவம்பர் 21

### சேலம்-செம்மன்குடல் பேருந்துப்பணி

*289 வினா—திரு. வீ. செல்லதுரை: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஓமலூர் வட்டம், செம்மன்குடலுக்கும் சேலத்திற்கும் இடையே முத்தநாயக்கன்பட்டி, பொம்மச்சூர், கருப்பூர் வழியாக பேருந்துகள் விடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இல்லை.

### மாயூரத்திலிருந்து புதிய பேருந்து வழித்தடங்கள்

*290 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் சந்திப்பிலிருந்து பஸ் ஸ்டாண்ட் வில்லியநல்லூர்-கிழாய்-மணல்மேடு வழியாக கொள்ளிடம் பாப்பாகுடிக்கு பேருந்து விடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: ஆம்.

*291 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் மாப்படுகையிலிருந்து பஸ் ஸ்டாண்டு வழியாக கோடங்குடிக்கு பேருந்து விடும் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: ஆம். சோழன் போக்குவரத்துக் கழகத்தின் பஸ் 4—5—1973 அன்று இருந்து இந்த பாதையில் சென்று வருகிறது.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, மாயூரம் சந்திப்பிலிருந்து பஸ் ஸ்டாண்ட் வில்லியநல்லூர்-கிழாய்-மணல்மேடு வழியாக கொள்ளிடம் பாப்பாகுடிக்கு பேருந்து விடும் செயற்குறிப்பு இருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். கடந்த 7 ஆண்டுக் காலமாக இந்தக் கோரிக்கையை சட்டமன்றத்திலும் அதிகாரிகளிடத்திலும் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலும் வற்புறுத்தியிருக்கிறோம். அப்படியிருந்தும் இன்னும் பேருந்து விடப்படாமலிருப்பதற்கான காரணத்தை அமைச்சரவர்கள் தெரிவிப்பார்களா? இவ்வளவு கெடுதல்களுக்குப் பிறகாவது—இனிமேலாவது விரைந்து செயல்படுத்துவதற்கு அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா?



1973 நவம்பர் 21]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, இந்த துணை வினா 290-வது கேள்விக்குரியது என்று கருதுகிறேன். சோழன் போக்குவரத்துக் கழகத்திற்கு அந்த வழியாக பஸ் விடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. பஸ் கிடைத்தவுடன், அவர்கள் பஸ் விடுவதற்கு ஏற்பாடு செய்வார்கள்.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, அண்மையில் நமது அரசுடைமையாக்கும் திட்டத்தின்கீழ் மாயூரம் சக்தி விலாஸ் நிறுவனத்தைச் சேர்ந்த 50-க்கு மேற்பட்ட பஸ்களை அரசாங்கம் ஏற்றுள்ளது என்று பத்திரிகையில் பார்த்து தெரிந்து கொண்டேன். மிக்க மகிழ்ச்சி. அந்த பஸ்களிலிருந்து—ஓடுகின்ற பஸ்ஸாக பார்த்து, ஒன்றினை இந்த வழித்தடத்தில் விடுவதற்கு அமைச்சரிடம் கோரிக்கை வந்தால் அதற்கு அனுதாபத்துடன் அனுமதி அளிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: அனுதாபங்கள் நிறைய உண்டு.

### ஆலய ஊழியர்கள் ஊதியம்

*292 வினா—திரு. அ. தேவேந்திரன்: மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டிலுள்ள ஆலய ஊழியர்களுக்கு மாத முதல் வாரத்திலேயே சம்பளம் கொடுக்கப்படுவது குறித்து அரசு நடவடிக்கை ஏதேனும் எடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: இல்லை.

திரு. அ. தேவேந்திரன்: தலைவரவர்களே, பொதுவாகவே, 10, 15 தேதிக்குப் பிறகுதான் ஆலய ஊழியர்களுக்கு சம்பளம் கொடுக்கப்படுகிறது. அதனால் ஊழியர்கள் மிகவும் சங்கடப்படுகிறார்கள். ஆகவே, முதல் வாரத்திலேயே சம்பளம் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, ஏற்கனவே உள்ள அறநிலையத் துறைச் சட்ட விதிகளின்படி இப்போது முதல் வாரத்தில் ஊழியர்களுக்கு சம்பளம் கொடுத்து வருகிறார்கள். எந்த இடத்திலாவது முதல் வாரத்தில் சம்பளம் கொடுக்காமல், தாமதம் ஏற்படுமானால் மேலதிகாரிகளின் கவனத்திற்கு அது கொண்டுவரப்படுமானால் அதுபற்றி தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: இந்த அறநிலைய ஊழியர்கள் நமது முதலமைச்சரவர்களை சந்தித்து, அவர்களுக்கு இருக்கின்ற குறைகளைத் தீர்த்து, முதல் வாரத்திலேயே சம்பளம் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்களே. அது என்ன ஆயிற்று என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, ஆலய ஊழியர்கள் மாநாட்டில் சில கோரிக்கைகளை முதலமைச்சர் முன் வைத்தார்கள். சில கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டு உடனடியாக உத்தரவும் இந்தத் துறையிலிருந்து பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் ஆலயங்களில் பணியாற்றும் ஊழியர்களுக்கு தாமதமாகச் சம்பளம் கொடுக்கப்படுகிறது என்று எதுவும் அந்த கோரிக்கையில் குறிப்பிடப்படவில்லை. எந்தக் கோவில் ஊழியர்களுக்காவது சம்பளம் வழங்குவதில் தாமதம் ஏற்படுவதாக அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்தால், நிச்சயமாக தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

### *Sai Baba Temple, Mylapore.*

* 293 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) whether there is any proposal to take over the Sri Sai Baba temple in Mylapore, Madras under the administrative control of Hindu Religious and Charitable Endowments Department: and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: சென்னை, மயிலாப்பூரிலுள்ள "சாய்மந்திர்" எனப்படும் சாய்பாபா திருக்கோயிலை 1959-ஆம் ஆண்டின் இந்து சமய அறநிலையச் சட்டத்தின்படி ஓர் அறநிலையம் என்று சென்னை இந்து சமய அறநிலையத்துறை துணை ஆணையர் 8—9—1965 அன்று அறிவிக்கை செய்தார். ஆனால் இதனை எதிர்த்து, இக்கோயிலைக் கட்டுவதற்குக் காரணமாக இருந்த அனைத்திந்திய சாய்பாபா சமாஜத்தினர் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்ததின் விளைவாக துணை ஆணையரின் அறிவிக்கை செல்லாது என்று நீதிமன்றம் 23—6—1967-ல் தீர்ப்பு வழங்கியது. இத்தீர்ப்பை எதிர்த்து செய்த மேல்முறையீடும் உயர்நீதி மன்றத்தால் 28—2—1973 அன்று தள்ளுபடி செய்யப்பட்டது.



### *Mylapore Kapaleeswarar temple trustees.*

* 294 Q.—THIRUMATHI T. N. ANANDANAYAKI: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state whether Harijans have been nominated as trustees to the Kapaleeswarar temple at Mylapore, Madras?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: ஆம்.

### *New Dairy Projects.*

* 295 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) whether there is a proposal under the consideration of the Government to start a new Dairy Unit at Ambattur; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) ஆம்.

(இ) "பால்வளப் பெருக்கத்திட்டத்தின் கீழ்" சென்னைக்கு இரண்டாவது பாற் பண்ணையொன்றை அம்பத்தூர் தொழிற் பேட்டையில் அமைக்கக் கருதப்பட்டுள்ளது. இந்தப் பாற் பண்ணை நாளொன்றுக்கு 2,00,000 லிட்டர் பால் உற்பத்தி செய்யும் திறன் கொண்டதாக இருக்கும். தேசிய பாற் பண்ணை வளர்ச்சி வாரியத்தால் தயாரிக்கப்பட்ட திட்டத்திற்கு தமிழ்நாடு பால் வளர்ச்சிக் கழகம் ஏற்பளித்துள்ளது. தொடக்கப்பணிகளை முடித்து உற்பத்தியைத் தொடங்கத் தயாரான நிலையில் தருவதென்னும் அடிப்படையில் இப்பணி தேசிய பால் பண்ணை வளர்ச்சி வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தேசிய பால் பண்ணை

[1973 நவம்பர் 21

வளர்ச்சி வாரியம் விரிவான திட்ட அறிக்கையொன்றைத் தயாரித்துக்கொண்டிருக்கிறது. அதன் பின்னர், இதன் கட்டுமானப் பணி தொடங்கும். இப்போது தொடங்கப்பட்டுள்ளது. திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்ட பின்னர் பால் பண்ணையை அமைப்பதற்காகும் செலவு எவ்வளவென்று தெரியவரும். இதற்குத் தேவைப்படும் நிதி பால் வளப் பெருக்கத் திட்டத்தின்கீழ் இந்தியப் பாற் பண்ணைக் கழகத்தால் வகை செய்யப்படவிருக்கிறது.

Dr. H. V. HANDE: Sir, in view of the fact that there is shortage of Baby food like Amul and Glaxo and also in view of the fact that they are being sold at exorbitant price in the open market, may I know whether it is possible for the Government, as it is being done in Maharashtra, to have a Milk Powder Project along with the Dairy Project so that the demands of children and parents may be adequately met by the Government? In view of all these things, will the Government come forward with some sort of idea or plan to open a project for manufacturing baby food?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** தலைவரவர்களே, இந்த இரண்டாவது பால் பண்ணையைப் பொறுத்தவரையில் சென்னை நகர மக்களின் தேவையைப் பூர்த்தி செய்வதற்காகத்தான் நாம் அம்பத்தூரில் இரண்டாவது பால் பண்ணை ஒன்றைத் தொடங்க இருக்கிறோம். குழந்தைகள் உணவு பற்றிய திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறது. எதிர்காலத்தில் ஆரம்பிக்கப்படுவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

**திரு. எம். சுரேந்திரன்:** சார், பால் பண்ணை கால்நடைகளை ஆதாரமாகக் கொண்டிருக்கிறது. ஆகவே, மாடுகளை வளர்ப்பதற்கான சூழ்நிலைகள் கிராமங்களில் அதிகமாக இருக்கின்றன. அந்தமாதிரியான வசதிகள் நகரங்களில் இல்லை. ஆகவே, நல்ல தண்ணீரும், நிலமும் உள்ள கிராமங்களில் இம்மாதிரியான பால் பண்ணைகளை அமைப்பது லாபகரமாக இருக்கும். அதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** பால் பண்ணை என்பது மாடுகளை வளர்க்கும் திட்டம் அல்ல. பாலைச் சேகரித்து, பக்குவப் படுத்தி, விநியோகம் செய்வதற்குத்தான் பால் பண்ணை ஆரம்பிக்



1973 நவம்பர் 21]

கிறோம். இந்தப் பால் பண்ணைக்கு நீலகிரி, கோவை, தர்மபுரி, வடாற்காடு மாவட்டங்களிலிருந்து பால் வருகின்றது. ஆக, கிராமப்புறங்களிலிருந்துதான், கிராம மக்கள் உற்பத்தி செய்யும் பாலைத்தான் பெற்றுக்கொண்டிருக்கிறோம்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தலைவரவர்களே, இந்தப் புதிய திட்டத்திற்கு மத்திய அரசாங்கம் பண உதவி தருகின்றதா? தருகின்றது என்றால் எவ்வளவு? இத்திட்ட அடிப்படையில் நமக்கு அதிகமாக எவ்வளவு பால் கிடைக்கும்?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** மத்திய அரசின் உதவியோடுதான், ஆரம்பிக்கப்படுகிறது. இந்திய பால் பண்ணை வளர்ச்சிக் கழகம் அனுமதித்த 8½ கோடி ரூபாயில் சுமார் 3 கோடி ரூபாய் செலவாகியிருப்பதாகத் தெரிகிறது. நாள் ஒன்றுக்கு 2 லட்சம் லிட்டர் பாலைக் கொள்முதல் செய்து சேகரித்து வைக்க முடியும்.

**திரு. சோ. அழகர்சாமி:** ஏற்கனவே நம்முடைய மாதவரம் பால் பண்ணையில் தனியார்கள் மாடுகளை வைத்துக் கறந்து கொண்டு வந்தார்கள். செலவிற்கும், வரக்கூடிய பால் விற்பனைக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லாமல் கட்டுபடி ஆகாமல் மாடுகளை விற்றுவிட்டுப்போய்விட்டார்களே, இனி எந்தப் பண்ணையை ஆரம்பித்தாலும் செலவிற்குக் கட்டுபடியாகக் கூடிய வகையில் பாலின் விலையை உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** பாலின் விலையை 3 மாத காலத்திற்கு முன்னால்தான் உயர்த்தினோம். சென்னை நகரைப் பொறுத்தவரையில் பால் உற்பத்தி செய்கின்றவர்கள், பாலை வாங்கி உபயோகிப்பவர்கள் ஆகிய இரண்டுபேர்களுடைய நலனையும் அரசு கவனிக்க வேண்டியதாக இருப்பதால் மேலும் உயர்த்துவதற்கில்லை.

Thiru B. VENKATASWAMY: Sir, before the Central Government sanctioned the amount for the scheme, Dr. Korian came to the Dharmapuri district and recommended the establishment of a Dairy Development Corporation in that district. So,

may I know whether his recommendation has been accepted by this Government and whether any such scheme will be implemented in that district, particularly in Hosur ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தீவிர பால் உற்பத்தித் திட்டத்தின்கீழ் தர்மபுரி மாவட்டத்தையும் சேர்த்துச் செயல்பட இருக்கிறோம். தர்மபுரி மாவட்டத்திற்கு என்று ப்ராஜெக்ட் ஆபிசர், துணைப்பதிவாளர் நியமிக்கப்பட்டு எப்படி கூட்டுறவுச் சங்கங்களை அமைக்கலாம், உற்பத்தியாகிற பாலைச் சேகரிக்கலாம் என்று ஆராய்ந்து அறிக்கை தந்திருக்கிறார்கள். அதன் அடிப் படையில் நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. முனு ஆதி :** பால் விநியோகம் செய்கிறபோது பால் பற்றாத காரணத்தினால் பால் பவுடரைக் கலந்து விற்பனை செய்யப் படுவதாகப் புகார் இருக்கிறதே, அதுபற்றி என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** பால் பவுடரைக் கலந்து தான் பாலைக் கொடுக்கிறோம் என்று அறிவித்துவிட்டே அதனை விநியோகம் செய்கிறோம்.

**திரு. எம். ஏ. லத்தீப் :** தற்போது பால் பற்றாக்குறை என்று சொல்லப்படுகிறது. நீலகிரி மாவட்டத்தில் ஒரு நாளைக்கு ஐந்தா யிரம் லிட்டர் பால் அழிக்கப்பட்டு வந்தது என்று பத்திரிகையில் செய்தி வந்ததே. அந்த நீலகிரி மாவட்டத்திலுள்ள பாலையாவது பவுடராக ஆக்க அங்கே பால்பவுடர் தொழிற்சாலை ஒன்றை ஆரம்பிக்க முன்வருவார்களா ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** நீலகிரி மாவட்டத்தில் நாள் ஒன்றுக்கு ஐந்தாயிரம் லிட்டர் பால் அழிக்கப்பட்டதாகச் சொன்னார்கள். அது சரியல்ல. ஒருமுறை பால் கெட்டு விட்டது என்ற காரணத்தினால்தான் அழிக்கப்பட்டது. வேறு எந்தவிதமான புகாரும் அரசாங்கத்திற்கு வரவில்லை. மாநில பால் வள வாரியத்தின் மூலம் எதிர்காலத்தில் குழந்தைகளுக்கான பால் பவுடரைத் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் ஏற்பாடு களைச் செய்து வருகிறோம்.



**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** நீலகிரியில் குழந்தைகளுக் கான பேபி புட் தயாரிக்கும் திட்டம் இருந்ததே, அது எப்போது துவங்கப்படும் ? அதுசம்பந்தமான விவரங்களை அமைச்சர் அவர்கள் கொடுப்பார்களா ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** வருகின்ற ஐந்தாண்டுத் திட்டத்தில் நீலகிரியில் வைப்பதைவிட அதன் கீழ்ப்பகுதியில் எங்காவது வைத்தால் நலமாக இருக்கும் என்று இந்திய பால் வள வாரியம் கருத்துத் தெரிவித்தது. அதன் அடிப்படையில் ஈரோடு பக்கத்தில் காவேரிக்கரை அருகில் அமைய இருக்கிறது. சுமார் 2 கோடிக்கு அந்தத் தொழிற்சாலை திட்டமிடப்பட்டிருக் கிறது.

**திரு. துரைமுருகன் :** பால் பவுடர் கலந்த பாலையே விற்கிறோம் என்று அறிவித்துவிட்டு விற்பதாகச் சொன்னார்கள். சிலருக்கு பால்பவுடர் கலக்காத தூய்மையான பாலையே சாப்பிடவேண்டு மென்று மருத்துவர் சொல்லலாம். குறிப்பாக நானே டிக்கெட் வாங்கிவிட்டு, நிறுத்திவிட்டேன். ஆகவே பால்பவுடர் கலந்தது 'ஏ' ரகம் என்றும், பால் பவுடர் கலக்காதது 'பி' ரகம் என்றும் தனித்தனியாகப் பிரித்து விற்பனை செய்வதற்கு ஏற்பாடு செய்யப் படுமா ? தூய்மையான பாலைப் பெற விரும்பினால் இப்போது என்ன செய்வது ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** மருத்துவமனைகளுக்கு வழங்கப்படுகிற பால் தூய்மையானது.

THIRU DURAI MURUGAN : What about the individual ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தனிப்பட்ட முறையில் பால் வியாபாரம் நடக்கிறது. அங்கிருந்தும் பெறலாம்.

**திரு. துரைமுருகன் :** அங்கே அதிக விலை இருக்கும். நான் மற்றவர்களுக்கு நியாயமாகக் கிடைக்கிற விலையில் தூய்மையான பாலை வாங்கிச் சாப்பிடவேண்டுமென்றால் என்ன வழி ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்த கேள்வி 296.

[1973 நவம்பர் 21

*296 வினா—திருமதி த. ந. அனந்தநாயகி: மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தென் சென்னையில் ஒரு பால் பண்ணை திறக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** இல்லை.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** இப்போது அவர்கள் விநியோகம் செய்கிற பால் சென்னை நகரத்திற்கே போதவில்லை. ஆகவே தெற்கு சென்னையில் ஒரு பால் பண்ணையை ஆரம்பிக்க வேண்டுமென்று வற்புறுத்தியும் கூட இப்போது அது இல்லை என்று சொல்வது கேட்டு பெருத்த வருத்தமுறுகிறோம். திரும்பவும் அதை ஆலோசனை செய்து தென் சென்னையில் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** சென்னை நகரத்திற்குப் போதுமான பால் வழங்கவேண்டுமென்பதுதான் நமது திட்டம் பால் பண்ணையைத் தென் சென்னையில் எங்கே அமைப்பது என்கிற பிரச்சினை இரண்டு மூன்று ஆண்டுகளாகவே பரிசீலிக்கப்பட்டது. தென் சென்னையில் தண்ணீர் வசதி, ரெயில் வசதி போதுமானதாக இல்லை என்கிற காரணத்தினால்தான் இப்போது அதை அம்பத்தூரில் ஆரம்பித்திருக்கிறோம். அம்பத்தூர் பால் பண்ணை மூலம் சென்னை நகரம் பூராவுக்கும் நாம் பால் சப்ளை செய்ய முடியும்.

THIRU K. M. SUBRAMANIAM: Sir, is it a fact that the Government Dairy Industries are purchasing milk powder for manufacture of sub-standard milk and the milk powder is being sold in the bazaar declaring it 'damaged' and it is reported that a regular racket is going on in that regard? Are the Government aware of it?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** அப்படிப்பட்ட புகார் எதுவும் கிடையாது. வெளிநாட்டில் இருந்து மத்திய அரசு தருவித்துத் தருகிற பால் பவுடர்தான் கலந்து விற்பனை செய்யப் படுகிறது.



1973 நவம்பர் 21]

**திரு. வை. பாலசுந்தரம்:** இந்தப் பால் பற்றுக்குறையை நிவர்த்திக்க, தனியார்கள் ஒரு மாடு, இரண்டு மாடுகள் வைத்துப் பால் வியாபாரம் செய்கிறார்களே, அவர்களுக்கு உதவி செய்கிற நோக்கம் ஏதேனும் உண்டா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** தனியார்கள் கால் நடைகளை நகரத்திற்குள் வைத்திருந்தால் நகர சுகாதாரம் பாதிக்கப்படுகிறது என்கிற காரணத்தினால்தான் மாதவரத்தில் பெரிய கொட்டகைபோட்டு அங்கே கால்நடைகளைக் கொண்டு வந்து வைக்கவேண்டுமென்று சொன்னோம். சொந்தக்காரர்கள் அங்கே வரத் தயாராய் இல்லை. கிராமப்புறங்களில் இப்படி வைத்திருப்பவர்களுக்கு உதவி செய்யலாம்.

**திரு. எம். தேவராசன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லும்போது நீலகிரியில் பால் பவுடர் தொழிற்சாலை வைப்பதற்குப் பதிலாக ஈரோடு அருகில் வைக்க இருப்பதாக அறிவித்தார்கள். நீலகிரியில் மேய்ச்சல் காடுகள் அதிகம் இருக்கின்றன. பால் உற்பத்தியும் அங்கே அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், நீலகிரியிலேயே அதை ஏற்படுத்த முன்வருவார்களா?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** பால் பவுடர் தொழிற்சாலை ஏற்படுத்த ஏராளமான இடம், தண்ணீர் வசதி தேவைப் படுகிறது. இதை எல்லாம் கருதித்தான் அங்கே வைப்பதைக் காட்டிலும் அதன் கீழ்ப்பகுதியில் வைக்க முடிவு செய்யப்பட்டது. நீலகிரியில் உற்பத்தியாகிற பாலை அடிப்படையாக வைத்தே இது அமையும்.

**திரு. எம். சுரேந்திரன்:** மக்களுக்குப் பால் விநியோகம் செய்வதில் பால் தண்ணீராக இருக்கிறது, தண்ணீர் தெரியாமல் இருக்க, கொழுப்பாக இருக்க வேண்டுமென்றே பவுடர் கலக்கப் படுகிறது என்று சொல்கிறார்களே, அந்த எண்ணத்தை மாற்ற ஏதாவது ஏற்பாடு செய்ய முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** அது சரியல்ல. 2 முறை கலக்கப்பட்டது, ஒரு முறை கலக்கப்பட்டது, என்றெல்லாம் விளம்பரம் செய்தே விற்கப்படுகிறதே தவிர, கெட்ட முறையில் அல்ல.

**திரு. சு. துரைசாமி:** பம்பாயில் இருக்கிற ஆரே பண்ணையில் பால் பவுடர் கலக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறதே, அது அரசுக்குத் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** தலைவர் அவர்களே, ஆரே மில்க் காலனியில் மட்டுமல்ல, இந்திய நாடு பூராவிலும் இருக்கிற பால் பண்ணை அனைத்திலும் இது போன்று பவுடர் கலக்கப்பட்ட பாலைத்தான் விற்பனை செய்கிறார்கள். நமது இந்திய நாட்டில் மட்டுமல்ல, வெளிநாடுகளிலேயும் தரம் பிரிக்கப்பட்ட பாலை இரண்டுமூன்று வகையாகப் பிரித்து, சாதாரண மக்களுக்கு எளிய விலையில் கொடுக்க வேண்டுமென்று இப்படிப்பட்ட திட்டங்களை எல்லா இடங்களிலும் கையாளுகிறார்கள்.

**திரு. எம். ஏ. லத்தீப்:** தலைவர் அவர்களே, இப்பொழுது இருக்கிற மாதவரம் பால் பண்ணைக்குத் தனியார்கள் வருவதில்லை என்று சொல்லப்படுகிறது. தனியார்கள் இப்பொழுது கறவை மாடுகளை தெருக்களிலே வைத்து அசுத்தம் செய்யக் கூடிய வாய்ப்புகளை உண்டாக்குகிறார்கள். இதனால் பல தொல்லைகள் ஏற்படுகின்றன. மாதவரத்தில் அவர்களைக் கொண்டு செல்ல முடியவில்லையென்றாலும், நம்முடைய சென்னை நகரத்திலே வட்டத்திற்கு வட்டம் மாட்டுத் தொழுவங்களை ஏற்படுத்தி, அங்கேதான் மாடுகளை வைத்துக்கொள்ள வேண்டும், தெருக்களிலே வைக்கக் கூடாது என்ற அளவுக்கு வட்டத்திற்கு வட்டம் தொழுவம் ஏற்படுத்தித் தருமா அரசு என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** தலைவர் அவர்களே, சரியான இடம் கிடைக்கவில்லை என்பதன் காரணமாக, அவர்கள் மாதவரம் பண்ணைக்கு வர மறுக்கிறார்கள் என்பதை நாம் ஏற்றுக் கொள்ளமுடியாது. அவர்கள் தாங்களே அந்தக் கால்நடைகளை வைத்துக்கொண்டு பாலை வெளியே அதிகமான விலைக்கு விற்றால் அதிக லாபம் சம்பாதித்துக்கொள்ளலாம் என்ற நோக்கத்தோடு அப்படி தெருக்களிலே வைக்கிறார்கள்.

**திரு. துரை கோவிந்தராசன்:** தலைவர் அவர்களே, பால் பற்றாக்குறை இருக்கிற இந்த நேரத்தில், ஓரத்தநாடு தொகுதியிலுள்ள ஈச்சங்கோட்டை என்ற ஊரில் பால் பண்ணை என்ற





பெயரில் 1,540 ஏக்கர் பரப்பளவுள்ள நிலங்களை மாடுகள் இல்லாமல் காடுகளாக வளர்ப்பது அரசு கவனத்திற்கு வந்திருக்கிறதா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** தலைவர் அவர்களே, அது பற்றிய தகவல் தற்பொழுது என்னிடத்திலே இல்லை.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, அது பால் பண்ணைக்காக அமைக்கப்பட்ட இடம் அல்ல. கால்நடை வளர்ப்புக்காகவே உருவாக்கப்பட்டது. அது அனிமல் ஹஸ்பன்ட்ரி இலாகாவைச் சேர்ந்தது.

*Loans for Nallathur Potters' Society.*

* 297 *Q.*—THIRU A. PARANDHAMAN: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether any loan has been advanced recently by the Government to the Potters' Society, Nallathur in Tiruttani taluk; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** (அ) தமிழ்நாடு கதர் கிராமத்தொழில் வாரியம் நல்லத்தூர் மண்பாண்டத் தொழிலாளர் சங்கத்துக்குக் கடனும் மான்யமும் கதர் கிராமத் தொழில் ஆணைக்குழு நிதியிலிருந்து கொடுத்துள்ளது.

(இ) பயிற்சி மற்றும் உற்பத்தி நிலையம் கட்டுவதற்காக, 1971-72-ல் கடனாக ரூ. 12,615-ம், மான்யமாக ரூ. 8,115-ம் வழங்கப் பட்டுள்ளது.

**திரு. ஆ. பரந்தாமன்:** தலைவர் அவர்களே, இந்தக் கடனை வழங்கி இரண்டு ஆண்டுகள் ஆகியும் இன்னும் வேலைகள் துவங்கப் பெறவில்லை. அது மட்டும் அல்ல, அந்தப் பண்ணையிலிருந்து அந்தச் சங்கத்தின் தலைவராக இருப்பவர் ரூ. 2,000 கையாடல் செய்திருப்பதாகத் தெரிகிறது. இது குறித்து தீவிரமாக விசாரித்து, நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யுமா என்று அறியவிரும்புகிறேன்.

**திரு. சு. துரைசாமி:** பம்பாயில் இருக்கிற ஆரே பண்ணையில் பால் பவுடர் கலக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறதே, அது அரசுக்குத் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** தலைவர் அவர்களே, ஆரே மில்க் காலனியில் மட்டுமல்ல, இந்திய நாடு பூராவிலும் இருக்கிற பால் பண்ணை அனைத்திலும் இது போன்று பவுடர் கலக்கப்பட்ட பாலைத்தான் விற்பனை செய்கிறார்கள். நமது இந்திய நாட்டில் மட்டுமல்ல, வெளிநாடுகளிலேயும் தரம் பிரிக்கப்பட்ட பாலை இரண்டுமூன்று வகையாகப் பிரித்து, சாதாரண மக்களுக்கு எளிய விலையில் கொடுக்க வேண்டுமென்று இப்படிப்பட்ட திட்டங்களை எல்லா இடங்களிலும் கையாளுகிறார்கள்.

**திரு. எம். ஏ. லத்தீப்:** தலைவர் அவர்களே, இப்பொழுது இருக்கிற மாதவரம் பால் பண்ணைக்குத் தனியார்கள் வருவதில்லை என்று சொல்லப்படுகிறது. தனியார்கள் இப்பொழுது கறவை மாடுகளை தெருக்களிலே வைத்து அசுத்தம் செய்யக் கூடிய வாய்ப்புகளை உண்டாக்குகிறார்கள். இதனால் பல தொல்லைகள் ஏற்படுகின்றன. மாதவரத்தில் அவர்களைக் கொண்டு செல்ல முடியவில்லையென்றாலும், நம்முடைய சென்னை நகரத்திலே வட்டத்திற்கு வட்டம் மாட்டுத் தொழுவங்களை ஏற்படுத்தி, அங்கேதான் மாடுகளை வைத்துக்கொள்ள வேண்டும், தெருக்களிலே வைக்கக் கூடாது என்ற அளவுக்கு வட்டத்திற்கு வட்டம் தொழுவம் ஏற்படுத்தித் தருமா அரசு என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** தலைவர் அவர்களே, சரியான இடம் கிடைக்கவில்லை என்பதன் காரணமாக, அவர்கள் மாதவரம் பண்ணைக்கு வர மறுக்கிறார்கள் என்பதை நாம் ஏற்றுக் கொள்ளமுடியாது. அவர்கள் தாங்களே அந்தக் கால்நடைகளை வைத்துக்கொண்டு பாலை வெளியே அதிகமான விலைக்கு விற்றால் அதிக லாபம் சம்பாதித்துக்கொள்ளலாம் என்ற நோக்கத்தோடு அப்படி தெருக்களிலே வைக்கிறார்கள்.

**திரு. துரை கோவிந்தராசன்:** தலைவர் அவர்களே, பால் பற்றாக்குறை இருக்கிற இந்த நேரத்தில், ஓரத்தநாடு தொகுதியிலுள்ள ஈச்சங்கோட்டை என்ற ஊரில் பால் பண்ணை என்ற



பெயரில் 1,540 ஏக்கர் பரப்பளவுள்ள நிலங்களை மாடுகள் இல்லாமல் காடுகளாக வளர்ப்பது அரசு கவனத்திற்கு வந்திருக்கிறதா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** தலைவர் அவர்களே, அது பற்றிய தகவல் தற்பொழுது என்னிடத்திலே இல்லை.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, அது பால் பண்ணைக்காக அமைக்கப்பட்ட இடம் அல்ல. கால்நடை வளர்ப்புக்காகவே உருவாக்கப்பட்டது. அது அனிமல் ஹஸ்பன்ட்ரி இலாகாவைச் சேர்ந்தது.

## *Loans for Nallathur Potters' Society.*

* 297 *Q*.—Thiru A. PARANDHAMAN: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether any loan has been advanced recently by the Government to the Potters' Society, Nallathur in Tiruttani taluk; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** (அ) தமிழ்நாடு கதர் கிராமத்தொழில் வாரியம் நல்லத்தூர் மண்பாண்டத் தொழிலாளர் சங்கத்துக்குக் கடனும் மான்யமும் கதர் கிராமத் தொழில் ஆணைக்குழு நிதியிலிருந்து கொடுத்துள்ளது.

(இ) பயிற்சி மற்றும் உற்பத்தி நிலையம் கட்டுவதற்காக, 1971-72-ல் கடனாக ரூ. 12,615-ம், மான்யமாக ரூ. 8,115-ம் வழங்கப்பட்டுள்ளது.

**திரு. ஆ. பரந்தாமன்:** தலைவர் அவர்களே, இந்தக் கடனை வழங்கி இரண்டு ஆண்டுகள் ஆகியும் இன்னும் வேலைகள் துவங்கப் பெறவில்லை. அது மட்டும் அல்ல, அந்தப் பண்ணையிலிருந்து அந்தச் சங்கத்தின் தலைவராக இருப்பவர் ரூ. 2,000 கையாடல் செய்திருப்பதாகத் தெரிகிறது. இது குறித்து தீவிரமாக விசாரித்து, நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யுமா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவர் அவர்களே, அந்தக் கூட்டுறவுச் சங்கத்திலே 2—5—1972-ம் ஆண்டு தீர்மானம் போட்டிருக்கிறார்கள். அதற்குப் பிறகு கட்டிடம் கட்டுவதற்கு என்று சில பொருள்கள் வாங்குவதற்காக சுமார் ரூ. 1,700-ஐ மாவட்ட கதர் கிராம வாரியத்தினுடைய அதிகாரியின் அனுமதியைப் பெற்றுத்தான் அவர்கள் எடுத்திருக்கிறார்கள். அந்தக் கட்டிடத்தைக் கட்டுவதற்குப் பொறியாளரால் மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு, வாரியத்தினுடைய ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. விரைவில் அந்தக் கட்டிடங்களைக் கட்டுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

### சென்னை, செங்கை பனைப்பொருள் கூட்டுறவு சம்மேளனம்

* 298 வினா—**திரு. கே. எ. வகாப் :** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை-செங்கை மாவட்ட பனைப்பொருள் கூட்டுறவு சம்மேளனத்தின் 1970-71-ம் ஆண்டு நிர்வாகச் செலவு எவ்வளவு?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** ரூ. 71,623.

**திரு. கே. எ. வகாப் :** தலைவர் அவர்களே, இந்தப் பனை பொருள்கள் கூட்டுறவு சம்மேளனத்தினுடைய லாபம் குறைவாகவும் நிர்வாகச் செலவுகள் அதிகமாகவும் இருப்பதாகக் கூறப்படுகிறது. ஆகவே, நிர்வாகச் செலவுகளைக் குறைத்து, லாபத்தைப் பெருக்க அரசு ஏதாவது திட்டம் வைத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவர் அவர்களே, இந்த நிர்வாகச் செலவுகளைக் குறைக்க வேண்டுமென்ற வகையிலே கடந்த ஒரு மாத காலத்திற்கு முன்பு நம்முடைய வாரியத்தின் மூலம் ஒரு முடிவு எடுத்துள்ளோம். ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒவ்வொரு சம்மேளனம் தனியாக இருப்பதை மாற்றி, அதைக் கலைத்துவிட்டு, தனியாகவே ஒரு ரீஜியனல் பெடரேஷன் என்று வைத்து, இரண்டு ஜில்லாக்கள் அல்லது 3 ஜில்லாக்களைச் சேர்த்து வைத்து, மாநிலம் பூராவும் நான்கு பெடரேஷன்கள் வைத்து அதேபோல், மாநிலத்திற்கென்று தனியாக ஒரு பெடரேஷன் இல்லாமல், அட்வைசரி போர்டு மட்டும் வைத்து நிர்வாகச்





செலவைப் பொதுவாகக் குறைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. அதிலே இருக்கிற ஆயிரக்கணக்கான தொழிலாளிகள் பாதிக்கப்படாத அளவுக்கு அவர்களுக்குக் கடன் வழங்க இப்பொழுது திட்டமிடப்பட்டிருக்கிறது.

**திரு. முனு ஆதி :** தலைவர் அவர்களே, நிர்வாகச் செலவைப் பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சென்னை-செங்கற்பட்டு பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கம் 1 லட்சம் பனங்கொட்டை, 50,000 பனங்கொட்டையை பீல்டிலே வாங்குவதாகச் சொல்கிறார்கள். அவர்கள் சொல்கிற பீல்டிலே பனை மரமே கிடையாது, செடியே கிடையாது. இதற்கான தொகையை சம்மேளனமே ஈடுகட்டுகிறதா, பாஸ் செய்கிறதா என்ற விவரம் தெரியவில்லை. ஆகவே, அப்படிப்பட்ட புகார்களைத் தவிர்க்க அரசு என்ன நடவடிக்கை எடுக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவர் அவர்களே, இந்த சம்மேளனத்தினுடைய கணக்கு அத்தனையும் மாநிலம் பூராவும் தணிக்கை செய்யப்படுகிறது. அதிலே எந்த சந்தேகமும் மேற்கொள்ளத் தேவையில்லை. ஆனால், உறுப்பினர்கள் சொல்கிற அந்தத் திட்டம் எந்த வகையில் செயல்படுகிறது என்பதற்குத் தனியாகக் கேள்வி போடவேண்டும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவர் அவர்களே, சமீபத்திலே எடுத்த அரசாங்கக் கொள்கையின் காரணமாக, 40,000-க்கு மேற்பட்ட கள் இறக்கும் தொழிலாளிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு இந்த சம்மேளனத்தின் மூலமாக ஏதாவது உதவித் தொகை அளிக்க திட்டமிடப்பட்டிருக்கிறதா? அப்படி இருந்தால் அதன் விவரங்களை அமைச்சர் அவர்கள் தருவார்களா?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவர் அவர்களே, இந்த கள் இறக்குகின்ற தொழிலாளிகளுடைய வாழ்க்கை பாதிக்கப்படாத நிலையிலேதான் ரூ. 150 மரம் பிடிப்பதற்குக் கடனாகவும், தொழில் கருவிகள் வாங்குவதற்கு ரூ. 50 கடனாகவும் அந்தத் தொழிலாளிகளுக்குத் தரவேண்டுமென்று திட்டமிட்டு அகில இந்திய காதி கமிஷனோடு தொடர்புகொண்டு அவர்களும் அதற்கு உரிய உதவியைச் செய்திருக்கிறார்கள். மாநில அரசாங்கத்தினுடைய உதவியோடு இதை வழங்குவதற்கான வழிவகைகள் விரைவாக செய்யப்பட்டிருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக் குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.)

### (2) அவையுரிமைப் பிரச்சினைகள்.

### (அ) சட்டப் பேரவைக்கு வரும்போது உறுப்பினர் திருமதி த. ந. அனந்தநாயகி கைது செய்யப்பட்டது குறித்து—தொடர்ச்சி.

MR. SPEAKER : The Hon. Member Thiru A. R. Marimuthu has given a notice raising the following matter of privilege :—

" Yesterday the Hon. Member of the House Thirumathi T. N. Anandanayaki was arrested while proceeding to the House for presenting a memorandum to the Minister about the Madras Corporation affairs and for taking part in the discussion. She was thus prevented and it involves a breach of privilege of a member, it may be referred under rule 192 to the Committee of Privileges."

It is a recognised principle of Parliamentary privilege that Members of the Legislature should have absolute freedom to attend the House to discharge their Parliamentary duties. Hence, they are exempt from arrest in execution of civil process. But, this privilege of freedom from arrest does not extend to criminal offences. As has been clearly laid down in May's Parliamentary Practice, ' the privilege of freedom from arrest is limited to civil causes and has not been allowed to interfere with the administration of criminal justice or emergency legislation."

From the records it is seen that the Hon. Member Thirumathi T. N. Anandanayaki was arrested at 11 a.m. on 19th November 1973 for violating the prohibitory order in force in and around Fort St. George. She had been arrested under Section 41 of the Madras City Police Act. It is not disputed that she was leading a processin consisting of more than five persons and it was in clear violation of the prohibitory order in force.



So, there can be no doubt about the fact that the privilege of free attendance of Legislature has not been infringed in this case, because, the arrest was in connection with an offence committed by the Member.

In the notice of privilege, the Hon. Member Thiru A. R. Marimuthu has stated that "Thirumathi T. N. Anandanayaki was arrested while proceeding to the House for presenting a memorandum to the Minister about the Madras Corporation affairs and for taking part in the discussion." But, unfortunately in this case, while on her way to the House, her conduct had amounted to an offence because of the admitted violation of the prohibitory order and for that offence she had been arrested. Hence, the averment in the notice that she was coming not only to present a memorandum but also to attend the House does not alter the fact that she was arrested for having committed an offence, though she was on her way to the House.

Even in the House of Commons it has been held that "preventive arrest under statutory authority by executive order is not within the principle of the cases to which the pivilege from arrest has been decided to extend. To claim that the privilege extends to such cases would be either the assertion of a new parliamentary privilege or an unjustified extension of an existing one."

On 20th January 1964, Sri S. Madhavan, a Member of the Assembly (the present Hon. Minister for Industries) gave notice of a privilege matter in regard to the arrest of two Members within the precincts of the Legislators' Hostel when they were proceeding to attend the Assembly and said that thereby they were prevented from doing their duty.

[முற்பகல் 10.30]

On the 21st January 1964, the Hon. Speaker ruled that the matter did not involve a matter of privilege on the following grounds :

(a) that the two members were arrested for criminal offence under section 120 (B), Indian Penal Code read with section 188, Indian Penal Code and section 30 (2) of the Police Act and sections 100 and 147, Indian Penal Code and that the privilege of freedom of arrest did not apply to criminal offences, but only to civil cases;

(*b*) that in criminal cases it was immaterial whether the Member was arrested when he was on his way to the Assembly or not;

(*c*) that arrest in the Legislators' Hostel did not amount to a breach of privilege as the Hostel had not been included within the definition of "Precincts of the House"; and

(*d*) that the privileges of Legislature could not be invoked as the Member had been arrested for criminal offences and that the privilege of freedom from arrest could not be allowed to interfere with the course of criminal justice.

A similar case arose in the Lok Sabha in 1970 when Members, Madhu Limaye and others were arrested on their way to attend the House for alleged offences under section 188 of the Indian Penal Code, namely, disobedience to order duly promulgated by a public servant. It was held that, as the arrest was for a statutory offence, there was no question of breach of privilege.

As has alreday been stated, Thirumathi Anandanayaki was arrested under section 41 of the Madras City Police Act, for violating a prohibitory order and hence the question of privilege of freedom from arrest cannot arise.

I therefore hold that no *prima facie* case of breach of privilege has been made out.

### (ஆ) உறுப்பினர் திருமதி த. ந. அனந்தநாயகியின் வீட்டிற்கு முன் நடந்த ஆர்ப்பாட்டம் குறித்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி த. ந. அனந்தநாயகி அவர்கள் ஒரு உரிமைப் பிரச்னையைக் கொண்டுவந்திருக்கிறார்கள், அதைப்பற்றி அவர்கள் சுருக்கமாக கூறவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** கனம் சபாநாயகர் அவர்களே, நான் விதி 184-இன்கீழே ஒரு உரிமைப் பிரச்னையை உங்கள் முன்னாலே கொண்டுவந்திருக்கிறேன். கார்ப்பரேஷன் ஊழலிலே தலைமை தாங்கி (சிரிப்பு) கார்ப்பரேஷன் ஊழலை எதிர்த்து ஊர்வலம் நடத்தியபொழுது அதற்குத் தலைமைதாங்கி நடத்தினேன் என்று சொன்னேன். புரிந்துகொள்ளாமல் சிரிக்க



வேண்டாம். என்னுடைய கட்சி எடுத்த முடிவுப்படி நான் அந்த ஊர்வலத்திற்குத் தலைமை தாங்கி நடத்தினேன் என்ற காரணத்திற்காக அர்த்தம் இல்லாத முறையிலே என்னைப் பயமுறுத்த வேண்டுமென்ற முறையிலே சிந்தனைச் சேனை என்ற பெயரிலே ஒரு கூட்டம் என் வீட்டு வாசலுக்கு முன்னாலே வந்து நின்றுகொண்டு அரை மணிநேரம் கண்டபடி பேசி, கேட்கத் தகாத வார்த்தைகளையெல்லாம் கூறி, சத்தம் போட்டார்கள். மிகத் 'தரமான' வார்த்தைகளிலே சத்தம் போட்டார்கள்! அதனால்தான் தினத்தந்தியிலே இதனைச் செய்தியாக போட்டிருக்கிறார்கள்! அரசியல் என்றால் இப்படியெல்லாம் கட்டாயமாகச் செய்வார்கள், அதற்கு எல்லாம் நீங்கள் தயாராக இருக்கவேண்டுமென்று சொன்னால், நாங்கள் அதற்குத் தயாராகத்தான் இருக்கிறோம். ஆனால் அவர்கள் என் வீட்டு வாசல் முன்னால் வந்துநின்று கொண்டு என் காதில்விழுகிற மாதிரி சத்தம் போட்டு, சொல்லத் தகாத வார்த்தைகளையெல்லாம் சொன்னார்கள். மோட்டார் மன்னரின் கூட்டாளியாம். என்னுடைய வக்கீல் தொழிலுக்கும் அரசியலுக்கும் எந்தவிதமான சம்பந்தமும் கிடையாது. நான் வக்கீல் தொழிலில் ஏதாவது தவறு செய்துவிட்டால் அதைக் கேட்பதற்கு பார் கவுன்சில் இருக்கிறது, என்னுடைய கட்சிக் காரர் அங்கே கொண்டுபோகலாம், குற்றம் சாட்டலாம், என் மீது தவறிருந்தால் நடவடிக்கை எடுக்கலாம். ஆறு வீடு படைத்த அனந்தநாயகியே உனக்கு அரசாங்க வீடு ஒரு கேடா என்று சத்தம் போட்டார்கள். எனக்கு எங்கே ஆறு வீடுகள் இருக்கின்றன? எனக்கு இருப்பது இரண்டு வீடுகள்தான். என்னுடைய கணவர் பெயரிலே அக்காமடேஷன் கண்ட்ரோல் மூலமாக வாடகைக்கு வீடு எடுத்து அதிலே குடியிருக்கிறோம். அதுவும் வாடகை கொடுத்துக்கொண்டுதான் இருக்கிறேன், சும்மா இருக்கவில்லை. இரண்டு வீடுகள் இருப்பதுதான் உண்மை என்பதை எடுத்துச் சொல்லித்தான் நான் அரசாங்கத்திடம் வீடு கேட்டேன். காரணம் என்னுடைய வீடுகள் இரண்டுமே சிறியவை. அது மட்டுமல்ல அவற்றின் அமைப்புகளும் அப்படியிருக்கின்றன. ஒரு வீடு முன்னாள் மேயர் முனுசாமியின் வீட்டுக்குப் பக்கத்திலே இருக்கிறது, அங்கே நான் இருந்தால் அடிக்கடி என்னுடைய கட்சிக்காரர்களுக்கும் அவருடைய கட்சிக்காரர்களுக்கும் சண்டை வரலாம். இன்னொரு வீடும் அப்படிப்பட்ட அமைப்பிலேதான்

இருக்கிறது. ஆகவே இந்த நிலையிலேதான் நான் அரசாங்கத்தின்மூலம் அக்காமடேஷன் கன்ட்ரோலிலிருந்து வீடு அலாட் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டதன் பேரில் இதையெல்லாம் பார்த்துத்தான் அரசாங்கத்திலிருந்து அலாட் செய்திருக்கிறார்கள் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அந்த நிகழ்ச்சிகள் பற்றி எல்லாம் சொல்லவேண்டாம், எப்படி ப்ரீச் ஆப் பிரிவிலேஜ் என்பதைச் சொல்லுங்கள்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** என்னைப் பயமுறுத்தவேண்டுமென்று அப்படியெல்லாம் சொன்னார்கள். எனக்கு ஆறு வீடுகள் எங்கே இருக்கின்றன? துப்பு துலக்கும் இலாகா இருக்கிறதே, நீங்கள் அவர்களிடம் சொல்லி பார்க்கச்சொல்லுங்களேன், எனக்கு எத்தனை வீடுகள் இருக்கின்றன, எந்த எந்தச் சொத்துக்கள் இருக்கின்றன என்பதையெல்லாம் அவர்கள் மூலம் நீங்களே தெரிந்து கொள்ளலாமே. இந்தச் செய்தியைப் போடுவது முரசொலி, நாத்திகம், தினத்தந்தி பத்திரிகைகள்தான். மற்றப் பத்திரிகைகளிலே இந்தச் செய்தி வெளியிடப்பட வில்லை. தினத்தந்திப் பத்திரிகைக்கு இப்படிப்பட்ட செய்திகளைப்போட்டு விளம்பரம் செய்து அவர்கள் எப்படியாவது என்மீது அவதூறு கிளப்பிவிட வேண்டுமென்று செய்கிறார்கள். நான் ஒரு துணைத் தலைவர், ஒரு கட்சியின் செயலாளர். எங்கள் கட்சியில் எடுத்த முடிவுப்படி நான் நடந்துகொள்கிறேன். எதற்காக எனக்கும் என்னுடைய கணவருக்கும் என்னுடைய பிள்ளைகளுக்கும் தொந்தரவு கொடுக்கக்கூடிய முறையிலே என்னுடைய வீட்டு வாசல் முன்னால் வந்து நின்றுகொண்டு காலித்தனமாக, காதில் கேட்கக்கூடாத வார்த்தைகளையெல்லாம் பேசிக்கொண்டு இருப்பதும், போலீஸ் பாதுகாப்புக் கொடுப்பதும் பிள்ளையையும் கிள்ளிவிட்டு தொட்டிலையும் ஆட்டுவது என்றால் என்ன அர்த்தம்? என்ன அநியாயம் செய்தாலும் கூட . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அங்கு நடந்த நிகழ்ச்சிகள் பற்றிச் சொல்லவேண்டாம். இது எப்படி ப்ரீச் ஆப் பிரிவிலேஜ் ஆகும் என்று சொல்லுங்கள் போதும்.





**திருமதி த. ந. அனந்தநாயகி :** எதிர்க்கட்சிக் காரர்களுடைய வீட்டிற்கு சிந்தனைச் சேனையோ அல்லது எந்த சேனையோ வீட்டு வாசலுக்கு வந்து உறுப்பினர்களை மிரட்டுவதற்கு இடம் கொடுக்கக் கூடாது என்பதற்காகத்தான் இதையெல்லாம் நான் விளக்கிச் சொல்ல வேண்டியிருக்கிறது. அந்த அளவிற்கு அவர்களுக்கு உரிமை கொடுத்து வீட்டு வாசல் முன்னால் ஒரு மணி நேரம் கத்த வைத்தால் யாருக்குத்தான் கோபம் வராமல் இருக்கும். என்னதான் போலீஸ் பாதுகாப்புக் கொடுத்தாலும், சட்டசபை உறுப்பினர்களுக்குப் பாதுகாப்புத் தரவேண்டும் என்ற நல்ல எண்ணம் சபாநாயகருக்கு இருக்குமானால் அவர்கள் எங்களுக்குப் பாதுகாப்புத் தரவேண்டும். தொலைபேசியிலே மிரட்டுகிறார்கள். சட்டசபையிலே எதிர்த்துப் பேசினால் கொலை செய்வோம் என்று மிரட்டக்கூடிய அளவிற்கு பேசுகிறார்கள், எங்களைக் கொலை செய்தாலும் பரவாயில்லை, நாங்கள் உயிரைக் கொடுக்கத் தயாராக இருக்கிறோம்.

THIRU V. KRISHNAMOORTHY (Nellikuppam) : How can she bring allegations against the Government tr the ruling party while moving a privilege issue?

**திரு. ஏ. சி. நரசிம்மன் :** தலைவர் அவர்களே, அம்மையார் அவர்கள் பேசும்பொழுது யாரோ கொலைசெய்வோம் என்று போனிலே மிரட்டியதாக எல்லாம் சொல்லி ஆளுங்கட்சிக்காரர்கள்தான் செய்தார்கள் என்று பத்திரிகையிலே செய்தி போட வேண்டுமென்ற முறையிலே தவறான பிரச்சாரம் செய்யக்கூடிய முறையிலே பேசினார்கள். மிரட்டினார்களோ இல்லையோ, மிரட்டியிருந்தால் அது யார் என்று தெரியவில்லை, என்ற முறையிலே பொய்ப் பிரச்சாரம் செய்து கொண்டிருக்கிறார்கள், இப்படிச் செய்வதால் அரசாங்கத்தின்மீது ஒரு அவதூறான எண்ணம் ஏற்படுவதற்கு வழிசெய்கிறார்கள். ஆகவே ஒன்று அவர்கள் சொன்னதை வாபஸ்பெறவேண்டும், அல்லது அவர்கள் சொன்னதை அவர்கள் நிரூபிக்க வேண்டும். அவர்கள் ஒரு பிரிவிலேஜ் இஷ்யூ கொண்டுவந்திருக்கிறார்கள், அதைப்பற்றித் தான் பேசவேண்டுமேதவிர யாரோ மிரட்டினார்கள் என்று சொல்வது எல்லாம் தவறானது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) : கனம் சபாநாயகர் அவர்களே, அம்மையார் அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுப்பதற்கு சபாநாயகர் அவர்களுக்கும், அரசாங்கத்திற்கும் கடமை இருக்கிறது. ஆனால் இந்த அரசாங்கத்தின்மீது அவதூறாக பழிபோட வேண்டுமென்ற முறையிலே அவர்கள் உயிரைக் கொடுத்தாலும் இந்த அரசாங்கத்தை எதிர்ப்பேன் என்று சொல்வது அரசாங்கத்தின்மீது அவதூறு சொல்வதுபோல் இருக்கிறது, ஆகவே அந்தக் குறிப்பை சபாநாயகர் அவர்கள் நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அங்கே என்ன என்ன நடந்தது என்பதைச் சொல்லவேண்டாம், எப்படி உரிமையை மீறிய நிகழ்ச்சி என்பதைப்பற்றி மட்டும் சொன்னால் போதும். உங்களுடைய உரிமையை எப்படி பாதித்தது என்பதைச் சொல்லுங்கள். இரண்டு மணி நேரம் நடந்ததையெல்லாம் சொல்லிக் கொண்டிருப்பது சரியல்ல.

திருமதி த. ந. அனந்தநாயகி : அங்கே நடந்த நிகழ்ச்சிகளையெல்லாம் சொன்னால்தான் விளங்கும், எந்தச் சட்டசபை உறுப்பினர் வீட்டுக்கும் வந்து இப்படி நடத்தக்கூடாது என்பதற்காகத்தான் சொன்னேன் . . .

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, ஏற்கனவே அம்மையார் அவர்கள் கட்சி மாறியபோது ஒரு ஊர்வலம் வந்து இதே போன்று அவர்களுடைய வீட்டுமுன்னால் நடந்திருக்கிறது. அப்பொழுதும் அரசாங்கம் அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுத்திருக்கிறது, நடவடிக்கை எடுத்திருக்கிறது. இவ்வளவு பாதுகாப்பும் கொடுத்த அரசாங்கத்தின்மீது குற்றம் சொல்வது சரியல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அம்மையார் அவர்கள் சட்டம் படித்தவர்கள், பல ஆண்டுக்காலம் சட்டமன்றத்திலே இருந்திருக்கிறார்கள். அவர்கள் எழுப்பிய பிரச்னை எப்படி இந்த அவையின் உரிமை மீறிய செயல் ஆகும் என்பதைப்பற்றி மட்டும் சுருக்க



மாகச் சொல்லவேண்டுமே தவிர வெளியே நடந்த நிகழ்ச்சிகளையெல்லாம் சொல்லிக்கொண்டிருப்பது முறையல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : வெளியிலே நடக்கவில்லை, என்னுடைய வீட்டுவாசலிலே நடந்ததைச் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது சட்டமன்றம். வீட்டிலே நடப்பதை இங்கே சொல்லக்கூடாது.

திருமதி த. ந. அனந்தநாயகி : சட்டசபை அங்கத்தினர் தன்னுடைய கடமைகளை ஒழுங்காகச் சட்டசபையில் செய்ய வேண்டுமென்றால் இத்தகைய இழிவான செயல்களுக்கெல்லாம் நீங்கள் இடம் கொடுக்கக் கூடாது, அரசாங்கம் இடம் கொடுக்கக் கூடாது, 'பிரிவெண்டிங் அரெஸ்ட்' செய்யுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சுருக்கமாகச் சொல்லுங்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி : எங்களுடைய வீடுகளுக்கு முன்னாலே இதற்கு முன்னால் வந்திருந்தாலும், பின்னால் வந்தாலும் அது சரியல்ல, எல்லா அங்கத்தினர்களுடைய நன்மைக்காகவும் தான் சொல்கிறேன். ஊர்வலம் நடத்தி வீட்டு வாசலுக்கு முன்னால் வந்து கண்டபடி கதறுவது, கத்துவது போன்ற இம் மாதிரி செயல்களுக்கு இடம் கொடுக்கக்கூடாது. சட்டமன்ற அங்கத்தினர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டுமென்றால் இப்படி அறிக்கை விடுகின்றவர்களிடம் ஏன் போகிறாய், ஏன் மிரட்டுகிறீர்கள் என்று கேட்கும் அளவிற்குப் பாதுகாப்பு இருக்க வேண்டும். இல்லையென்றால் without fear or favour பயமில்லாமல் எதிர்க்கட்சிகள் தங்கள் பணிகளைச் செய்ய முடியாது. அப்படியில்லாமல் ஏதோ சேனை என்ற பெயரால் கூடுவது, அரை மணி நேரம் கத்துவது என்றால் எப்படி எங்களுக்குப் பாதுகாப்பு கிடைக்கும் ?

திரு. ஏ. சி. நரசிம்மன் : தலைவரவர்களே, நான் திரும்பத் திரும்ப அவர்களை உங்கள் வாயிலாகக் கேட்பது என்னவென்றால், அவர்கள் திரும்பத் திரும்ப அரசாங்கத்தின்மீது குற்றச்சாட்டுகளைச் சொல்கிறார்கள். அதே தவறை அவர்களும் செய்திருக்கிறார்கள், எம்.ஜி.ஆர். கட்சியினர் திராவிட முன்னேற்றக் கழக

[திரு. ஏ. சி. நரசிம்மன்] [1973 நவம்பர் 21

அங்கத்தினர்களின் வீடுகளுக்கு வந்து இராஜினாமா செய்ய வேண்டுமென்று மனுக்களைக் கொடுத்தபொழுது அவர்கள் செய்யாத அக்கிரமம் கிடையாது, அவ்வளவு மோசமான வார்த்தைகளைச் சொன்னார்கள். அதற்கு இவர்களும் துணைபோனார்கள். அப்பொழுது உரிமை வேண்டுமென்றார்கள், ஆனால் இப்பொழுது . . .

**திரு. முனு ஆதி:** எம்.ஜி.ஆர். கட்சி என்று பேசுகிறார்களே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. முனு ஆதி, நீங்கள் உட்காருங்கள். திருமதி அனந்தநாயகி அவர்கள் எழுப்பிய உரிமைப் பிரச்சினையின்மீது நாளை முடிவு தெரிவிக்கிறேன். அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் ஒரு உரிமைப் பிரச்னையைக் கொண்டுவந்திருக்கிறார்கள்.

**திரு. முனு ஆதி:** அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து திரு. வீராசாமி அவர்கள்.

**திரு. நா. வீராசாமி:** தலைவரவர்களே, . . .

THIRU K. T. K. TANGAMANI: Sir, I want to make a submission. You must allow all the hon. Members to express their views. You must give us an opportunity to explain the position. In this case, the hon. Member Thirumathi T. N. Anandanayaki was obstructed and she was not allowed to discharge her duties as a member of the Legislature. The party has already announced that they are going to break the law and that they are going to squat before the House of the hon. Member Thirumathi T. N. Anandanayaki. Here is a case where a group of people known to the Ruling Party have clearly announced that they will prevent the hon. Member Thirumathi T. N. Anandanayaki from attending the Assembly......

THIRU N. GANAPATHY: They have not announced. It is a wrong statement.



1973 நவம்பர் 21]

THIRU K. T. K. TANGAMANI: They have made it known in the newspapers. Such being the case, it is the duty of the Government to see that these people were prevented much earlier and the Government should not have allowed them to squat before the house of the hon. Member. The intention of the party has already been made known in the papers. I do not mind if people come and squat before my house. If the hooligans come and squat before my House, I will ask my men to deal with them and send them out. But here is a case where they have openly announced, especially when the Assembly is in session, that they will prevent her from discharging her duties as a member of the House. This has been made perfectly clear. This aspect has to be considered. If that aspect is taken into consideration, there is a *prima facie* case of breach of privilege. The Hon. Speaker has to pull up that party. whichever party it may be. Some people call them by some name. They only act on the instigation of some other party. If it is the ruling party, that is condemnable.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவரவர்களே, திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் பேசும்பொழுது அவர்களைத் தடுப்பதாக முன்கூட்டியே அறிவித்து விட்டதாகச் சொன்னார்கள். திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்களேகூட அப்படிச் சொன்னதாகத் தெரியவில்லை. ஆகவே, அது தவறான கருத்து என்று கருதுகிறேன். அடுத்து, அவர்கள் என்னுடைய வீட்டின் முன்னால் வந்தால் என் ஆட்களை விட்டு அடிப்போம் ' என்று சொன்னார்கள். சட்டப்படி அதுவே குற்றம். நமது சட்டத்திற்கு முரணானது. சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டுமே தவிர தனிப்பட்ட யாரும் தாங்களே சட்டத்தைக் கையில் எடுத்துக்கொண்டு தாக்குவதை சட்டம் அனுமதிக்கவில்லை.

THIRU K. T. K. TANGAMANI: Sir, I want to clarify. If a number of hooligans come and squat in front of my house, I will beat them because I have the right of defence, right to personal safety and right of property. They are all there. I suppose the Hon. Minister for Law will refer to that position of law.

DR. H. V. HANDE : Sir, I have given notice of a privilege matter.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் : எத்தனை மணிக்குக் கொடுத்தீர்கள் ? இந்த இடம் தபால் வாங்குகின்ற இடமில்லை. அவை நிகழ்ச்சி 9 மணிக்குத் தொடங்குகிறது. 10-30 மணிக்கு நோட்டீஸ் கொடுத்தால் எப்படி முடியும்? இது ஒழுங்குப் பிரச்னை இல்லை.*

*டாக்டர் எச். வி. ஹாண்டே : நான் கொடுத்திருக்கிறேன்.*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் : எப்பொழுது கொடுத்தீர்கள் ?*

* THIRU R. PONNAPPA NADAR : Sir, much has been said about the Privilege Motion which was sought to be moved in this House and for which leave was also sought to be made. So far as this matter is concerned, the house is a castle. That is the usual dictum and everybody is aware of it. If anybody goes near the house and make mischief, laws will have to be enforced to safeguard the interest of the persons in the house.

So far as the instance that has been cited by the hon. Member, Thirumathi T. N. Anandanayaki, is concerned, she says that she has been wilfully obstructed from discharging her duties as a legislator by certain persons doing unlawful things in front of her house. So far as that matter is concerned, it is a matter which should be condemned by all the parties. Whether it was done by the hooligans or by anti-social elements is a question, which has to be taken note of. It is a condemnable criminal act. If a criminal act is being done or purported to have been done, especially when the Government authorities got the information, it is the duty of the police and the Government to prevent them from doing such illegal things and such untoward illegal instances could have been avoided. In the discharge of duties as an M.L.A., his or her house should be free from all untoward and illegal incidents. If such things are allowed in front of the house of a meember, how can she function fearlessly in this House? All these things involve a breach of privilege and a *prima facie* case has been made out. Whoever is responsible—whether it is hooligans or anti-social elements—should be taken note of by the Hon.





Speaker and proper directions should be given to the Government so that the interests of the members of the House may be protected. Otherwise, the members cannot function fearlessly in the House.

With these words, I once again repeat that this matter should be enquired into by the Privileges Committee.

*   *   *   *

*மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் ஹாண்டே அவர்களை இந்தப் பேரவையிலிருந்து வெளியேற்றுகிறேன்.*

*   *   *   *

*மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் ஹாண்டே அவர்களை இந்தப் பேரவையிலிருந்து வெளியேற்றுகிறேன். அவர் வெளியேறவில்லை என்றால் வெளியேற்றுவதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.*

*   *   *   *

*மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் ஹாண்டே அவர்கள் பாயின்ட் ஆப் ஆர்டர் என்று பேசியதிலிருந்து இதுவரை நடந்தவற்றை நிகழ்ச்சிக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன்.*

DR. H. V. HANDE : Coward, coward, coward .................

*(டாக்டர் எச். வி. ஹாண்டே வெளியேறினார்)*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. பேரவைத் தலைவரின் அனுமதியோடுதான் பேசவேண்டுமென்ற முறையை மீறி சில நேரங்களில் பேரவைத் தலைவரின் அனுமதியைப் பெறாமலே பேசுகிறார்கள். ஒருசில நேரங்களில் இரண்டு மூன்று உறுப்பினர்கள் கூட எழுந்து பேசுகிறார்கள். அப்படி உறுப்பினர்கள் பேசுவது பேரவைத் தலைவர் காதில் விழுவது இல்லை. அப்படிப்பட்ட நிலையில் பேரவைத் தலைவர் அனுமதி பெறாது பேசுகின்ற பேச்சுக்கள் நிகழ்ச்சிக் குறிப்பில் ஏறாது. ஆனால் அப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் எல்லாம் பத்திரிகைகளில்*

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.*

வெளிவந்து விடுகின்றன. அப்படி பேரவைத் தலைவர் அனுமதி இல்லாமல் இரண்டு மூன்று பேர் ஒரே சமயத்தில் பேசுவதைப் போட்டால் அது முறையற்றது என்பதை மாத்திரம் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** நேற்றே அண்ணை தி.மு.க. உறுப்பினர்களுக்குப் பேசுவதற்குச் சந்தர்ப்பம் கொடுக்காதது பற்றிச் சொல்லியிருக்கிறேன். இன்றைக்கு ஒரு சீனியர் மெம்பரை 'நேம்' பண்ணியிருப்பது சாதாரண விஷயம் அல்ல. ஒரு பிரிவிலேஜ் மோஷன் பேரில் பேசுகின்றபோது இம்மாதிரி ஒரு மெம்பரை 'நேம்' பண்ணியதை ஆட்சேபிக்கிறேன். அதை ஆட்சேபிக்கின்ற வகையில் எங்கள் கட்சி சார்பாக வெளிநடப்புச் செய்கிறோம்.

(இந்திய கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர்கள் வெளியேறினர்.)

**திரு. க. உரொ. எட்மண்ட்:** தலைவர் அவர்களே, டாக்டர் ஹாண்டே அவர்களை இந்த மன்றத்திலிருந்து வெளியேற வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறீர்கள். அந்த உத்தரவுக்கான காரணங்களைச் சொல்லி இருக்கிறீர்களா என்றால் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன சொல்லுகிறீர்கள்?

**திரு. க. உரொ. எட்மண்ட்:** Sir, we are going to stage a walk out.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** போவதானால் போங்கள்.

**திரு. க. உரொ. எட்மண்ட்:** காரணங்களைச் சொல்லிவிட்டுப் போகிறோம். இதற்கு முன்னால் இந்த மன்றத்திலே பல கட்சிகள் வெளிநடப்புச் செய்திருக்கிறார்கள் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எந்த உறுப்பினரும் இந்த மன்றத்தில் எழுந்து பேச உரிமை உண்டு. ஆனால் பேசுவதற்கு முன்னால் பேரவைத் தலைவர் அனுமதி பெற்றுத்தான் பேச வேண்டும். பேரவைத் தலைவர் அனுமதி பெறாமலே எழுந்து நின்று பேசிக்கொண்டிருப்பது முறையல்ல.



**திரு. க. உரொ. எட்மண்ட்:** எங்கள் கட்சி உறுப்பினர் இந்த மன்றத்தில் பேசினார் என்பதற்காக வெளியேற்றி இருக்கிறீர்கள் . . .

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** அவர் என்ன பேசினார்? அவர் பயன்படுத்திய வார்த்தையைப் பொறுத்துத்தான் தலைவர் இந்த முடிவை எடுத்தாரே தவிர வேறல்ல. முறை தவறிப் பேசக்கூடாது.

**திரு. க. உரொ. எட்மண்ட்:** எங்கள் நிலைமையை நாங்கள் சொல்ல வேண்டாமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** I am not allowing it.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, இந்த அவையில் இருக்கிற உறுப்பினர்கள் அவைத் தலைவருக்கு மதிப்பளிக்க வேண்டுமென்ற மரபை ஏற்றுக்கொண்டுதான் பேச வேண்டும். எந்த ஒரு உறுப்பினரும் சட்ட விதிகளுக்கு உட்பட்டுப் பேசுவதில் தவறு இல்லை. மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் பேசுகின்றபோது அவைத் தலைவருடைய தீர்ப்பை எதிர்க்கும் அளவுக்கு குற்ற நோக்கோடு, குறை நோக்கோடு குற்றம் சாட்டிப் பேசினார். மேலும் போகும் போது 'கவர்டு' என்ற வார்த்தையை மூன்று முறை பயன்படுத்தினார். அவர் எவ்வளவு சொல்லியும் கேட்காத காரணத்தால் வெளியேற்றக்கூடிய நிலை ஏற்பட்டதே தவிர, உறுப்பினர்கள் பேசக்கூடாது என்பதல்ல. மாண்புமிகு உறுப்பினர் பேரவைத் தலைவர் தீர்ப்பை எதிர்க்கின்ற நிலையில் கட்டுப்பாட்டுக்கு அடங்காத காரணத்தால் தலைவர் அவரை வெளியேற்ற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

**திரு. க. உரொ. எட்மண்ட்:** இந்த மன்றத்தில் யார் சபாநாயகர் அனுமதி பெற்றுப் பேசுகிறார்கள்? யாரும் இந்தச் சபையில் அப்படி நடந்துகொள்ளவில்லை. இப்போது அமைச்சர் பேசும்போது உங்களுடைய அனுமதியைப் பெற்றுக் கொண்டா பேசினார்?

(திரு. லத்தீப் எழுந்தார், மற்றும்பல உறுப்பினர்கள் எழுந்து நின்றனர். திரு. லத்தீப், திரு. முனு ஆதி, திரு. எட்மண்ட் ஆகியோருக்கிடையே பலத்த வாக்குவாதம்—கூச்சல் குழப்பம்.)

THIRU M. A. LATHEEF : The Assembly is going to dogs...

**திரு. க. உரோ. எட்மண்ட் :** அவர் (திரு. லத்தீப்) ரூலிங் கொடுக்கிறார். அவருக்கு என்ன அத்தாரிடி இருக்கிறது ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இங்கு எல்லோருக்கும் அதாரிடி இருக்கிறது. நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள் ?

**திரு. முனு ஆதி :** Sir, how can the hon. Member Thiru Latheef mention the word ' dogs '?

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** எதிர்க்கட்சிகளாகிய எங்களுக்கு இந்த மன்றத்தில் தகுந்த பாதுகாப்பு இல்லை. ஒரு எதிர்க்கட்சி உறுப்பினரை வெளியேற்றி இருக்கிறீர்கள். அதற்குச் சட்டப்படியான எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. வேண்டுமென்றே இந்த மாதிரி ஒரு எதிர்க்கட்சி உறுப்பினரை வெளியேற்றுவது என்பது பொருத்தமானது அல்ல. இது நமது விதிமுறைக்கு அப்பாற்பட்டதாக இருக்கிறது. அதுமட்டுமல்லாமல் எங்களைப் போன்றவர்கள் இந்த மன்றத்திலே இருப்பதற்குத் தகுந்த பாதுகாப்பு இல்லை என்ற காரணத்தால் நாங்கள் இந்த மன்றத்திலே இருந்து வெளியேறுகிறோம் என்பதைத் தங்களுக்கு வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறோம்.

(ஸ்தாபன காங்கிரஸ் உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய ஹாண்டே அவர்களை வெளியேற்றி இருக்கிறீர்கள். அவர்களுடைய நடவடிக்கை உங்களுடைய மனதுக்குச் சங்கடத்தை ஏற்படுத்தி இருக்கலாம். இருந்தாலும் சட்டப்படி, முறைப்படி செய்ய வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** என்ன முறை என்று சொல்லுங்கள்.



**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** நான் கருதுவது—இம்மாதிரி ஒரு உறுப்பினர் முறைகேடாக நடந்து கொண்டார் என்றாலும் இதர தலைவர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்று விரிவாகக் கேட்டு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** டாக்டர் ஹாண்டே அவர்கள் பேசியது முறையல்ல என்று திரு. மாரிமுத்து அவர்கள் ஒப்புக் கொண்டதற்காக நன்றி. இதிலே யாரைக் கூப்பிட்டு வைத்துப் பேசி முடிவு செய்ய வேண்டுமென்றாலும் தயாராக இருக்கிறேன். ஆனால் அவர் உட்காராமலே, என்ன குறை என்பதைத் தெரிந்து கொள்ள முடியாத நிலையிலே பேசிக் கொண்டே இருந்தார். எந்த முறையைக் கையாள வேண்டுமென்று திரு. மாரிமுத்து அவர்கள் வழி சொல்லட்டும்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** தலைவர் அவர்களே, உங்களுக்கு இருக்கிற உரிமையை நான் மறுக்கவில்லை. தாங்கள் ஒரு தகப்பன் போல் இருந்து இந்தச் சபை உறுப்பினர்களுடைய உரிமையைப் பாதுகாக்கவேண்டும். நீங்கள் எடுத்த நடவடிக்கை மிகக் கடுமையானதாக இருக்கிறது. உங்களுடைய நடவடிக்கை மிகக் கடுமையானது என்ற முறையில் அதை எதிர்த்து நாங்கள் வெளியேறுகிறோம்.

[முற்பகல் 11-00]

[காங்கிரஸ் உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்]

**திரு. க. உரோ. எட்மண்ட் :** எங்கள் கட்சியைச் சேர்ந்த டாக்டர் ஹாண்டே அவர்களை நீங்கள் வெளியேற்றியதன் பேரில் நானே எழுந்து அதற்குண்டான காரணங்களைச் சொல்லி வெளியே போக வேண்டும் என்பதற்காக எழுந்து நின்றேன். ஆனால் நீங்கள் என்னைப் பேசக் கூடாது என்று தடுத்தீர்கள். காரணங்களைச் சொல்லிவிட்டு வெளியே போகவேண்டும் என்று எழுந்த போது வெளியே போகவேண்டுமென்றால் போங்கள் என்று சொல்லி விட்டீர்கள். ஆனால் ஸ்தாபன காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் வெளிநடப்புச் செய்வதற்கான காரணங்களை, அதற்கான விளக்கத்தைக் கொடுக்கும்போது பேசுவதற்கு அனுமதித்திருக்கிறீர்கள். காங்கிரஸ் கட்சித் தலைவர் பேசுகிறார் வெளிநடப்பிற்குண்டான காரணங்கள் பற்றி. அவர்கள்

அதுபற்றி பேசுகிறார்கள். நான் இந்த நேரத்தில் மிக்க வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன், நீங்கள் கொடுக்கிற தீர்ப்புகள் உங்கள் நடைமுறைக்கு முரண்பட்டதாக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இப்போது என்ன சொல்லப் போகிறீர்கள்? அதைச் சொல்லிவிட்டுப் போங்கள். வேறு என்ன? தீர்ப்பு சரியில்லை என்று சொன்னால் சொல்லிவிட்டுப் போங்கள்.

**திரு. க. உரொ. எட்மண்ட் :** இவ்வளவு சொல்கிறேன், கூடுபடவில்லை. என் கட்சியைச் சேர்ந்தவர் பேசியிருக்கிறார்கள். அவரை வெளியே போகவேண்டுமென்று அனுப்பியிருக்கிறீர்கள். நான் அதை ஆட்சேபிக்கவில்லை. அதேநேரத்தில் மற்ற உறுப்பினர்கள் மத்தியில் நீங்கள் எப்படி நடந்துகொள்கிறீர்கள் என்று பார்க்கும்போது அ.தி.மு.க. உறுப்பினர்கள் ஒன்றை எழுப்புகிறார்கள் என்றால் அதிலும் டாக்டர் ஹாண்டே அவர்கள் ஒன்றை எழுப்புகிறார் என்றால் உண்மையில் ஆளும் கட்சிக்கு ஒரு நீதி, எதிர்க்கட்சிக்கு ஒரு நீதி என்ற முறையில் நீங்கள் நடந்துகொள்வதை எதிர்த்து நாங்கள் எல்லோரும் வெளிநடப்பு செய்கிறோம்.

(அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்.)

THIRU B. VENKATASWAMY : Sir, as there is no security for the Members, the Members of the Swatantra Party are also staging a walk-out.

(Then the Members belonging to the Swatantra Party staged a walk-out.)

3. அவையுரிமைத் தீர்மானம்.

டாக்டர் எச். வி. ஹாண்டே அவர்கள் மீது எழுப்பப்பட்ட உரிமைப் பிரச்னை

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, "மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் வெளியேற வேண்டுமென்று தாங்கள் தீர்ப்பளித்ததற்குப் பிறகு அவர்கள் வெளியேறுகிறபோது 'கவர்ட்', 'கவர்ட்', 'கவர்ட்'





என்று மூன்று முறை சொல்லிவிட்டு சென்றிருக்கிறார்கள். அது இந்த அவையினுடைய உரிமையைப் பாதிக்கிற ஒன்று என்பதால் அதை ஒரு உரிமைப் பிரச்னையாக ஏற்றுக்கொண்டு உரிமைக் குழுவிற்கு அனுப்பவேண்டும்" என்று அவையின் சார்பாக முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது உரிமைக் குழுவிற்கு அனுப்பப்படுகிறது.

(2) அவையுரிமைப் பிரச்சினைகள்—தொடர்ச்சி.

(ஆ) உறுப்பினர் திருமதி த. ந. அனந்தநாயகியின் வீட்டிற்கு முன் நடந்த ஆர்ப்பாட்டம் குறித்து—தொடர்ச்சி.

**திரு. எம். ஏ. லத்தீப் :** தலைவர் அவர்களே, உரிமைப் பிரச்னைகள் என்ற அளவில் குறிப்பிட்ட சில பிரச்னைகளை குறிப்பிட்ட விதிகளுக்குட்பட்டு இந்த அவைமுன் கொண்டுவரும்போது உரிமைப் பிரச்சினையை யார் எழுப்புகிறாரோ அவர்கள் அதற்கான 'ப்ரைமா பேசி கேஸ்' இருக்கிறதா, உரிமைப் பிரச்னையை எழுப்புவதற்கு முகாந்திரம் இருக்கிறதா என்று அவர் தன்னுடைய வாதங்களை எடுத்துச்சொன்ன பிறகு பேரவைத் தலைவர் அவர்கள் முகாந்திரம் இருக்கிறது என்று கருதினால்தான் அதன் மீது ஒரு விவாதம் அல்லது மற்றவர்கள் கருத்துக்களைக் கேட்டுக் கொள்வது இந்த அவையின் மரபாக இருக்கிறது. இந்தப் பிரச்னையைப் பொறுத்தவரையில் தனிப்பட்ட முறையில் அவர்கள் சட்டசபை உறுப்பினராக இருக்கலாம். அவர்கள் வீட்டுக்கு முன் யாரோ ஒரு சிலர் சென்று சில ஆர்ப்பாட்டங்கள் நடத்தினார்கள் என்பதுதான் குற்றச்சாட்டு. சிந்தனைச் சேனை என்ற பெயரால் உள்ள அந்தக் குழு அரசாங்க சார்புடையது, அரசாங்கத்தால் நடத்தப்படுகிற ஒரு குழு என்ற அளவில் இங்கு சொல்லப்படுகிறது. யாரோ தனிப்பட்ட ஒருசிலர் அந்தக் குழுவை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் ஒரு அரசியல் இயக்கமாக இயங்கும்போது அரசியல் கட்சி ஒன்றைச் சார்ந்த தலைவி என்ற முறையில் சிலர் அவர்கள் வீட்டுமுன் சென்று தங்கள் எண்ணங்களை வெளிப்படுத்

தும்போது—அவர்கள் சட்டசபை உறுப்பினராக இருக்கலாம்—அது எந்த அளவிற்கு இந்த அவையின் உரிமையைப் பாதித்திருக்கிறது, சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் எந்த அளவிற்கு அவர்கள் உரிமையைப் பாதித்திருக்கிறது, அதன் வாயிலாக இந்த அவையைப் பாதித்திருக்கிறது என்பதைப் பற்றி ஒன்றும் தெரிவிக்காது இவ்வளவு நேரம் விவாதம், அதைப்பற்றி வைத்துக்கொண்டு எங்கள் நேரத்தை, உறுப்பினர்கள் நேரத்தை எடுத்துக் கொண்டிருப்பது முறையா ?

மேலும் சபாநாயகர் அவர்களைப் பற்றி சிலநேரங்களில் இந்த அளவிற்குப் பேசும்போது அவர்கள்மீது ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது? அவை முன்னவர் அவர்கள் 'ஏன் அவர்களை இரண்டு நாட்கள், மூன்று நாட்கள், ஒரு வாரத்திற்கு சட்டமன்றத்திற்கு வரக்கூடாது', என்று சஸ்பென்ட் செய்யும் தீர்மானம் ஒன்றைக் கொண்டு வரக்கூடாது என்று கேட்கிறேன். இது மிக முக்கியமானதொன்றாகும். It is a serious matter. தலைவர் அவர்கள் இந்தப் பேரவையின் கௌரவத்திற்கு ஒரு சின்னமாக இருக்கும்போது 'கவர்ட்' என்று உறுப்பினர் அவர்கள் சொல்லும்போது அவை முன்னவர் அவர்கள் உடனடியாக ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றி அவர்களை இந்த அவையில் இருந்து நீக்கவேண்டும் என்று அவை முன்னவர் அவர்களைக் கேட்டுக்கொண்டு இதை ஒரு உரிமைப் பிரச்னையாக எழுப்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. நா. வீராசாமி அவர்கள் ஓர் உரிமைப் பிரச்சினையைக் கொண்டுவந்திருக்கிறார்கள். அதை இப்பொழுது விளக்கலாம்.

## (இ) 'தென்னகம்' நாளேட்டில் பேரவைத் தலைவர் மீது களங்கம் ஏற்படுத்தும் செய்தியை வெளியிட்டது குறித்து.

**திரு. நா. வீராசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, பேரவையின் 182-வது விதியின்படி கீழ்க்கண்ட உரிமை மீறல் குறித்த தீர்மானத்தைக் கொண்டுவர விரும்புகிறேன்.





தென்னகம் தமிழ் நாளேட்டில் சென்னை 20—11—73, வெளியூர் 21—11—73, "அண்ணா தி.மு.க. உறுப்பினர்கள் உரிமையை தட்டிப் பறிக்கும் புலவர் கோவிந்தனின் போக்கை எதிர்த்து அண்ணா தி.மு.க. வெளிநடப்பு" என்ற தலைப்பிட்டு ஒரு செய்தி வெளிவந்துள்ளது. அதில் 'வெளிநடப்பு' என்ற சிறிய தலைப்பில் "மீண்டும் டாக்டர் ஹாண்டே எழுந்திருந்து கூறியதாவது : 'அண்ணா தி.மு. கழகம் என்றாலே உங்களுக்கு ஆகாததாகி விட்டது, எங்கள் உரிமைகளை நீங்கள் தடுக்கிறீர்கள், இதைக் கண்டித்து நாங்கள் வெளியேறுகிறோம்' என்று கூறினார். உடனே அண்ணா தி.மு.க. உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தார்கள்" என்று வெளியிடப்பட்டிருக்கிறது. பேரவைத் தலைவர் மீது களங்கம் ஏற்படுத்தும் இந்தச் செய்தியை வெளியிட்டுள்ள 'தென்னகம்' நாளேட்டின் ஆசிரியர், உரிமையாளர், அச்சிடுவோர் ஆகியோர் மீது அவையுரிமையை மீறிய குற்றம் ஏற்பட்டுள்ளது. இதை அவையுரிமைக் குழுவிற்கு அனுப்பி வைக்க வேண்டுகிறேன்.

தலைவர் அவர்களே, இந்தச் செய்தியை மேலெழுந்தவாரியாகப் பார்க்கிற நேரத்தில் உரிமை மீறப்பட்டிருக்கிறது என்பது தங்களுக்கு நன்றாகத் தெரியும். நேற்று காங்கிரஸ் கட்சித்தலைவர் திரு. மாரிமுத்து அவர்கள் எழுப்பிய உரிமைப் பிரச்னைக்கு தீர்ப்பளிக்கக் கூடிய முழு அதிகாரமும் தங்களுக்கு இருந்தும்கூட இம்மன்ற உறுப்பினர் ஒருவர் சம்பந்தப்பட்டிருப்பதன் காரணத்தால் மிகப் பெருந்தன்மையோடு தாங்கள் எதிர்கட்சித் தலைவர்களுடைய கருத்துக்களை கேட்டுக்கொண்டிருந்தீர்கள். திரு. மணலி கந்தசாமி அவர்களின் பெயரைச் சொல்லி அவர்களை பேச அழைத்த நேரத்தில் அ.தி.மு.க. உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் எழுந்து நின்று தங்கள் அனுமதி இல்லாமல் பேசிக் கொண்டிருந்தார்கள். தங்கள் அனுமதி இல்லாமல் பேசுகிற எல்லாப் பேச்சுக்களும் இம்மன்றக் குறிப்பேட்டில் ஏறுவதில்லை. இந்த மன்றத்தின் மாபுகளைத் தாங்கள் சுட்டிக்காட்டி ஒரு பிரச்னையில் எதிர்கட்சித் தலைவர்களுடைய கருத்துக்களைக் கேட்பது மரபு. ஒவ்வொரு பிரச்னையிலும் எல்லா உறுப்பினர்களுடையவும் கருத்துக்களைக் கேட்பது என்பது இயலாத காரியம் என்று சொன்னீர்கள்.

ஆனால், நண்பர் டாக்டர் ஹாண்டே அவர்கள் தங்கள் அனுமதி இன்றி தங்களைக் குறித்து இழிவான, முறைகேடான வார்த்தைகளால் எது எதையோ பேசிக்கொண்டிருந்தார்கள். இறுதியாகத் தாங்கள் தீர்ப்பு கொடுப்பதற்கு முன்னால் கூச்சல் போட்டுவிட்டு வெளியேறினர். அந்த நிகழ்ச்சியை வேண்டுமென்று 'தென்னகம்' பத்திரிகை தெரிந்திருந்தும்கூட அதை வெளியிட்டிருக்கிறது. அப்படி வெளியிடுவது தங்களை அவமதிப்பதாகும் என்று தெரிந்தும் தங்களுக்குக் களங்கம் கற்பிக்க வேண்டும், மக்கள் மன்றத்தில் தவறான எண்ணங்களை உண்டாக்க வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் இந்தச் செய்தியை வெளியிட்டிருக்கிறார்கள்.

இப்படி, பேரவைத் தலைவரைக் குறித்துத் தவறான முறையில் பேசுவதும், எழுதுவதும் தவறு என்ற அடிப்படையில் நாம் பின்பற்றுகிற 'மேஸ் பார்லிமென்டரி ப்ராக்டீஸ்' என்ற புத்தகத்தில் 143-வது பக்கத்தில் பத்தாவது சாப்டரில் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்.

Reflections on the character of the Speaker and accusations of partiality in the discharge of his duty'.

என்று சொல்லி அதில் 'Cases of Woodfall' என்று அதை ரெபர் செய்திருக்கிறார்கள். அதேபோல், Mr. Atkinson, Mr. Wedgwood and Mr Ginnell.

போன்ற பெரிய பெரிய அறிவாளிகள் சொல்லியிருக்கிற தீர்ப்புகளிலும் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. இவைகளைப் பார்க்கும்போது, எந்த மேஸ் பார்லிமென்டரி ப்ராக்டீஸை நாம் பின்பற்றுகிறோமோ அந்த விதிகளின் கீழ் இவைகள் எல்லாம், தலைவரின் மீது குற்றம் சுமத்துவது, பழி சுமத்துவது, இப்படிப்பட்ட வார்த்தைகளைப் பயன்படுத்துவது என்பவை தவறானவை என்று தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே இந்தச் செய்தியை வெளியிட்டிருக்கிற 'தென்னகம்' பத்திரிகை ஆசிரியர், உரிமையாளர், அச்சிடுவோர் ஆகியோர் மீது உரிமைப் பிரச்னை நிச்சயமாக இருக்கிறது. எனவே இதை உரிமைக் குழுவிற்கு விடவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் எழுப்பியுள்ள பிரச்னை மீது என்னுடைய தீர்ப்பை நாளை தெரிவிக்கிறேன்.



## (4) ஒத்திவைப்புத் தீர்மானம்.

**கன்னியாகுமரி மாவட்டத்தில் போக்குவரத்து இலாக்காவில் ஏற்பட்டுள்ள நெருக்கடி காரணமாக தொழிலாளர்களும் பொதுமக்களும் பாதிக்கப்பட்டிருப்பது குறித்து.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, திரு. ஆர். பொன்னப்ப நாடார், திரு. ஜே. ஜேம்ஸ், திரு. கே. டி. கே. தங்கமணி, திரு. மணலி சி. கந்தசாமி, திரு. என். மருதாசலம் ஆகியோர் கன்னியாகுமரி ஜில்லாவில் தமிழ்நாடு போக்குவரத்து இலாகாவில் ஏற்பட்டுள்ள நெருக்கடியும், அதனால் போக்குவரத்து இலாகா தொழிலாளர்களும், பொது மக்களும் பாதிக்கப்பட்டுள்ள நிலைமை பற்றி விவாதிக்க வேண்டுமென்று ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இது எப்படி அவையை ஒத்திவைக்கக் கூடிய அளவிற்கு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைப்பற்றி சுருக்கமாக கூறும்படி கேட்டுக்கொள்கிறேன். திரு. பொன்னப்ப நாடார்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தலைவரவர்களே, கன்னியாகுமரி ஜில்லாவிலே போக்குவரத்துத் துறையிலே இன்றைக்கு ஒரு ஸ்தம்பிதமான நிலை ஏற்பட்டு இருக்கிறது. ஆதலால் இந்த மன்றத்தின் நேரத்தை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டுமென்று கூறி என்னுடைய தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறேன்.

16—10—1973 முதல் அங்கே ஒரு வேலை நிறுத்தமானது சட்டப்படி எல்லா நோட்டீசும் கொடுக்கப்பட்டு ஆரம்பிக்கப்பட்டது. அந்த வேலை நிறுத்தமானது 3 அம்ச கோரிக்கைகளை வைத்து தொடரப்பட்டது. ஒன்று 25 சதவிகிதம் போனஸ் வேண்டும், மற்றது பழி வாங்கும் முறையில் இடமாற்றம் ரத்து செய்யப்பட வேண்டும், மற்றது அரிசிப் போராட்ட காலத்தில் பிடித்த சம்பளம் திருப்பித் தரவேண்டும். இந்த மூன்று கோரிக்கைகளை வைத்து, நோட்டீஸ் கொடுத்து விட்டு அந்த ஸ்ட்ரைக் ஆரம்பமானது. இந்த ஸ்ட்ரைக்குக் காரணமாக இருந்தவர்கள் என்று சந்தேகப்பட்டு 24 நபர்களை செக்ஷன் 151 கீழ் கைது செய்தார்கள். அதற்குப் பிற்பாடு 225 தொழிலாளர்களை அரஸ்ட் செய்து கிரிமினல் குற்றத்திற்காக அவர்களை சிறையில் வைத்தார்கள். இந்தமாதிரி இருக்கின்ற போது இப்போது 1,000 தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்து

இருக்கிறார்கள். அது மட்டுமின்றி 25 தினக் கூலிகளை வேலை நீக்கம் செய்து இருக்கிறார்கள். இவர்கள் எல்லாம், அவர்கள் கூற்றுப்படி தாங்கள் சட்டப்பூர்வமாக நோட்டீஸ் கொடுத்து இருக்கிறோம் என்று கூறுகிறார்கள்.

அது மட்டுமல்லாமல் குழித்துறையிலே ஒரு டெப்போ இருக்கிறது. அந்த டெப்போவிலிருந்து 85 சர்வீஸ்கள் இயங்கிக் கொண்டு இருந்தன. அந்த டெப்போவை 16-ம் தேதியன்று பூட்டி 'லாக்-அவுட்' என்ற முறையில் மூடிவிட்டு, டெப்போவை போலீசாரின் கையில் ஒப்படைத்து விட்டார்கள். இந்த நிறுவனத்தின் சாவி டி.எஸ்.பி. யின் கையில் கொடுக்கப்பட்டது என்பது எனக்கு திட்டவட்டமாகத் தெரியும். இலாகாவினர் அதை மறுக்கலாம். அது என்னுடைய தொகுதியில் இருக்கிறது. ஆகவே எனக்கு அது குறித்து நன்றாகத் தெரியும் என்று கூற விரும்புகிறேன்.

அது மட்டுமல்லாமல், அந்த ஸ்ட்ரைக்கை முறியடிக்க வேண்டுமென்று போட்டி யூனியன்கள்—ஆளும் கட்சித் தரப்பில் யூனியன்கள்—பல முயற்சிகளை எடுத்துக்கொண்டிருக்கின்றன. அவர்களுடைய யூனியனில் சேர்ந்தால் திருப்பி வேலைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று வாக்குறுதி கொடுக்கப்படுகிறது. வெறும் காகிதத்தில் கையெழுத்து வாங்கிக்கொண்டு அவர்கள் வேலைக்குச் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள். 248 தொழிலாளர்களை தற்காலிகமாக இணை இயக்குனர் அங்கே வேலைக்கு நியமித்து இருக்கிறார்கள். 100-க்கும் மேலாகத் தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்து இருக்கிறார்கள். 85 சர்வீஸ்கள் ஓடிக்கொண்டிருந்த குழித்துறை டெப்போவில் பஸ்கள் இன்று சரியாக ஓடவில்லை. அங்கேயிருக்கிற தொழிலாளர்கள், மக்கள் வெகுவாக பாதிக்கப் பட்டிருக்கிறார்கள். இதற்கு ஒட்டு மொத்தமாக முதலமைச்சர் அவர்கள் பூர்ணமாகத் தீர்வு காண வேண்டும்.

ஏதோ போராட்டம் நடந்து விட்டது அங்கேயுள்ள தொழிலாளர்களை பழி வாங்காமல் திரும்பவும் வேலைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும். சட்ட-பூர்வமாகத்தான் வேலை நிறுத்தம் செய்தோம் என்று அவர்கள் சொல்கிறார்கள். 3,000-க்கும் அதிகமாக உள்ள தொழிலாளர்களில் ஆயிரத்திற்கும் அதிகமாக உள்ள தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக குழித்துறை பகுதியில் இருக்கும் மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அது என்னுடைய தொகுதியாக இருக்கிற காரணத்தால் அதற்கு உடனடியாக ஒரு தீர்வு காண வேண்டுமென்ற முறையில் நான் இந்த ஆலோசனையைக்கூற இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறேன். இன்றைக்கு தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்புவதற்குத் தயாராக இருப்பதால் இது குறித்து அரசு ஆலோசிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





கன்னியாகுமரி ஜில்லாவைப் பொறுத்தவரையில் பஸ்கள் எல்லாம் தேசியமயமாக்கப்பட்டிருக்கின்றன. தனியார் பஸ்கள் ஒன்று கூட இல்லை. அப்படியிருக்கிறபோது, அங்கே பஸ்கள் சரியான நிலையில் இயங்காமல் இருக்குமானால் அது பொது மக்களையும், தொழிலாளர்களையும் மிகவும் பாதிக்கிறது. ஆகவே, அரசு அந்த பஸ் போக்குவரத்தை சரியான முறையில் இயங்கச் செய்வதற்கு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதற்கு உடனடியாக என்ன பரிகாரம் என்றால், வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ள தொழிலாளர்களை திரும்பவும் வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும். அவர்கள் மீது சட்டபூர்வமாக என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அதை பின்னாலே எடுத்துக்கொள்ளலாம். அங்கே பழி வாங்குதல் நிறுத்தப்பட வேண்டும். முன்பு எவ்வளவு சர்வீஸ்கள் இருந்தனவோ அவற்றை நடத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். அங்கே யிருக்கும் அதிகாரிகள் மிகவும் கடுமையாக இருக்கிறார்கள். ஏதோ ஸ்ட்ரைக் செய்துவிட்டார்கள், அதற்காக அவர்களை தண்டிக்கும் வகையில், பழி வாங்கும் வகையில் தண்டனை கொடுக்கவேண்டுமென்ற மனப்பான்மை அரசாங்கத்திற்கு இருக்கக்கூடாது. அரசாங்கமும் தனி முதலாளி மாதிரி இருக்கக்கூடாது. சென்னையில் பல இடங்களில் போராட்டம் நடந்தது. பஸ்களை ரோடுகளிலே நிறுத்தி விட்டார்கள். அப்போது அவர்களுக்கு மன்னிப்புக் கொடுத்து விட்டார்கள். மற்ற இடங்களில் மட்டும் இப்படிப்பட்ட பழி வாங்கும் நடவடிக்கை ஏன்? ஒரு பகுதியில் இருக்கும் தொழிலாளிக்கு ஒரு நியதி, மற்றொரு பகுதியில் இருக்கும் தொழிலாளிக்கு ஒரு

நியதி என்ற நிலைமையிருக்கக்கூடாது. எல்லாத் தொழிலாளர்களையும் அரசாங்கம் திரும்பவும் வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும். பழி வாங்கக் கூடாது. இப்படிப்பட்ட ஆலோசனைகளை கூறுவதற்காக இந்தச் சபையின் நடவடிக்கைகளை ஒத்தி வைத்து இது குறித்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** மிஸ்டர் ஸ்பீக்கர் சார், இந்த போக்குவரத்துத் தொழிலாளர்கள் போராட்டம் சம்பந்தமாக விவரங்களை எனக்கு முன்னால் பேசிய பொன்னப்ப நாடார் அவர்கள் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அந்தச் சம்பவங்கள் ஏற்பட்ட உடனே கன்னியாகுமரி ஜில்லாவிற்குச் செல்லும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அதிலும் குறிப்பாக குழித்துறை, மார்த்தாண்டம் பகுதிகளுக்குச் சென்று அங்கேயிருக்கும் தொழிலாளர்களைச் சந்தித்து அவர்களுடைய கோரிக்கைகளைக் கேட்கும் வாய்ப்புக் கிடைத்தது. இன்றைக்குப் போராடிக் கொண்டிருக்கும் சங்கம், மாத்திரமல்ல, மற்ற சங்கங்களும். . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று நம்முடைய தமிழ் நாடு சட்டப் பேரவை நிகழ்ச்சிகளை ஸ்ரீலங்கா பாராளுமன்ற சபாநாயகர் அவர்கள் நம்முடைய அவை மாடத்திலிருந்து கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். தமிழ் நாடு சட்ட மன்றத்தின் சார்பாக அவர்களுக்கு நம்முடைய நல்வரவைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** விவரம் ஏற்கனவே குறிப்பிட்டு இருக்கிறார்கள். அந்தச் சங்கத்தில் உள்ள தொழிலாளர்களை மட்டுமல்லாமல், சம்பந்தப்பட்ட அநேக தொழிலாளர்களை சந்திக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அவர்கள் பொதுவாகச் சொல்லக்கூடிய ஒரு விஷயம் என்னவென்றால் இந்தத் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டவர்களை உடனடியாக வேலைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். இந்த 225 தொழிலாளர்கள் பேரில் போடப்பட்டிருக்கும் கேஸ்கள் வாபஸ் வாங்கப்பட வேண்டும். இந்த இரண்டு விஷயங்களையும் முதலில் செய்துவிட்டால் அங்கே அமைதி ஏற்படும் என்று அங்கேயுள்ளவர்கள் சொல்கிறார்கள். இன்றைக்கு நிலைமை





யென்னவென்றால் குழித்துறையில் 85 சர்வீஸ் இருந்த இடத்தில் இப்போது 52 சர்வீஸ் ஓடுகிறது. ஓரளவுக்கு தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பி வந்து கொண்டிருக்கிறார்கள் என்ற நிலைமையிருக்கிறது. இந்தத் தொழிலாளர்களைப் பழிவாங்கிவிட்டால், இந்த வேலை நிறுத்தத்தைப் பிசுபிசுக்க வைத்து விட்டால் பின்னால் இந்தப் போராட்டம் வராது என்று இன்றைக்கு நிர்வாகத்தினர் நினைக்கிறார்கள். இப்படி ஒரு எண்ணம் நிர்வாகத்தினர் மனத்தில் இருப்பதால் அங்கே ஒரு பதட்ட நிலைமையேற்பட்டு இருக்கிறது. ஆகவேதான் இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறோம்.

இந்த வேலை நிறுத்தம் எதற்காக நடைபெற்றது என்று பார்த்தால் தீபாவளியை ஒட்டி போனஸ் கேட்டார்கள். அது எங்கேயும் கேட்பது இயற்கை. 25 சதவிகிதம் கேட்டார்கள். 12½ சதவிகிதம் அரசாங்கம் கொடுத்தது. சிலயிடங்களில் 45 சதவிகித போனஸ் கொடுத்திருக்கிறார்கள். பஞ்சாலைகளில் 25 சதவிகித போனஸ் கிடைத்து இருக்கிறது. ஆகவே, போனஸ் அதிகமாக வேண்டுமென்று கேட்பதில் நியாயம் இருக்கிறது. தீபாவளியை ஒட்டி அது வரவேண்டுமென்பதற்காக கொஞ்சம் நிர்ப்பந்தம் செய்தார்கள் என்பதற்காக அதைப் பயன்படுத்திக் கொண்டு தொழிலாளர்களைக் கைது செய்து, அதற்குப் பிறகு அவர்கள் மீது கேஸ் போடுவது, பிறகு டெம்பரரி தொழிலாளர்களை வேலையை விட்டு நீக்குவது என்ற முறையில் அந்த ஸ்ட்ரைக்கை உடைக்கப் பார்ப்பது

It will constitute anti-labour policy, I charge the Government that in the public sectors their policy is anti-labour.

ஆகவேதான் இதை வலியுறுத்திச் சொல்ல வேண்டியது அவசியமாக இருக்கிறது. அங்கேயிருக்கிற சங்கங்களைக் கூட்டி அமைச்சர் அவர்கள் கலந்து பேசி ஒரு முடிவு காண வேண்டும். அங்கேயிருக்கிற நிர்வாகம் இன்றைக்கு முதலாளிகளை விடக் கடுமையாக நடந்து கொண்டிருக்கிறது. அந்த நிர்வாகத்தினரைச் சந்தித்துப் பேசியதில்—நான் யாரையும் குறிப்பிட்டுச் சொல்ல விரும்பவில்லை—அறிந்ததெல்லாம் அவர்கள் இந்தத் தொழிலாளர்களுக்கு சரியான பாடம் கற்பிக்க வேண்டுமென்று

சொல்கிறார்கள். அந்த எண்ணம் முதலாளிகளுக்கு இருக்கலாம். இலாகாவினருக்கு இருக்கக்கூடாது என்று சொல்லிக் கொள்கிறேன்.

இந்த விஷயம் குறித்து டிரான்ஸ்போர்ட் இலாகா அமைச்சர் பதில் கூறினால் அது முதலாளிகளின் பதிலாகத்தான் இருக்கும். ஆகவே இதற்கு லேபர் மினிஸ்டர் தான் பதில் கூறவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த விஷயத்தில் அவர் என்ன செய்தார். அவர் தொழிலாளர்களையும், நிர்வாகத்தினரையும் அழைத்துப் பேசி ஒரு முடிவு எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்போது தான் தொழிலாளர்கள் மத்தியில் ஒரு நம்பிக்கை ஏற்படும். இன்றைக்கு அங்கேயுள்ள போக்குவரத்து நிர்வாகத்தினரின் போக்குத் தவறாக இருக்கிறது. ஆகவே, அரசு இந்த விஷயத்தில் பொறுப்பெடுக்க வேண்டுமென்ற முறையில் இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். ஆகவே, இதை ஒத்திவைத்து விவாதித்தால் போக்குவரத்துத் துறை நல்லமுறையில் செயல்பட வழிவகைச் சொல்ல முடியும் என்று சொல்லி, இதற்கு அனுமதி வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. மணலி சி. கந்தசாமி:** தலைவர் அவர்களே, இந்த ஒத்திவைப்புத் தீர்மானம் மிகவும் முக்கியமானது என்பதை நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். பொதுவாக இந்தக் கால கட்டம் நெருக்கடி மிகுந்த காலகட்டமாக இருப்பதனால் வேலை நிறுத்தங்கள் நிகழ்வதும், தொழிலாளர்கள் மத்தியில் அதிருப்தி வளருவதும் நெருக்கடி காரணமாக சர்வ சாமான்யமான விஷயமாகக் கருதப்பட வேண்டுமே தவிர வேறு ஒன்றுமில்லை. இதைத் தீர்ப்பதில் அரசாங்கம் மிகவும் நல்ல முறைகளைக் கையாண்டு தொழிலாளர் வர்க்கத்தினுடைய நம்பிக்கையைப் பெறக்கூடிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமே தவிர, கடுமையான நடவடிக்கை எடுத்து, கைது செய்வதும், அதன் மூலமாக பெருவாரியாக அங்கே நடக்கக்கூடிய போக்குவரத்து ஸ்தம்பித்துப் போகக்கூடிய விதத்தில், மக்களுக்குக் கஷ்டம் ஏற்படக்கூடிய விதத்தில் நடைமுறைகளைக் கையாள்வது ஒரு புத்திசாலித்தனமான செயலாகாது. இந்த நிலையிலே எவ்வளவோ தகராறுகள், பல போராட்டங்கள் நடந்திருக்கின்றன. பல





போராட்டங்களில், நாம் பல்வேறு கடுமையான நிலைமைகளில் கூட சமரசம் கண்டிருக்கிறோம் என்பதை நான் சொல்லத் தேவையில்லை. ஆகவே, இதிலே அழுத்தம் திருத்தமாக கடுமையாக இராமல், அமைச்சர் அவர்கள் அந்த இலாகாவினரைக் கூப்பிட்டு, தொழிலாளர் வர்க்கத்தையும் கூப்பிட்டு எப்படியாவது சமரசம் காண வேண்டும் என்ற நிலைமையில் தான் செயல்பட வேண்டுமே தவிர, கடுமையான நடவடிக்கை எடுப்பது ராஜதந்திரமானதுமல்ல, புத்திசாலித்தனமானதுமல்ல என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதைவிட்டு விட்டு கைது செய்திருக்கக்கூடிய தொழிலாளர்களை உள்ளே வைத்திருந்து, வெளியே உண்ணாவிரதத்தை, தூண்டக்கூடிய, ஆத்திரமூட்டக் கூடிய செய்கையில் அரசாங்கம் இறங்குவது சரியல்ல. இது முக்கியமான பிரச்னை. போக்குவரத்து ஸ்தம்பித்து போகக் கூடிய நிலைமை ஏற்படக்கூடாது. தொழிலாளர் வர்க்கத்தின் ஒரு பகுதியினரை சிறையில் வைக்கக்கூடிய கடுமையான . போக்கு அதிகாரிகளிடம் இருப்பது துர்ப்பாக்கியவசமானது என்பதை வலியுறுத்தி, இதை நிச்சயம் அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தைப் பற்றி போக்குவரத்துத் துறையின் சார்பில் என்னுடைய சில கருத்துக்களைச் சொல்வது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். இங்கே எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும், மதிப்பிற்குரிய திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களும், மணலி அவர்களும் பேசுகின்றபொழுது தொழிலாளர்களை வெளியிலே நிறுத்துவது சரியான போக்கு அல்ல என்றும், பழி வாங்குகின்ற தன்மையில் அமைந்திருக்கக் கூடியது என்றும், மதிப்பிற்குரிய தங்கமணி அவர்கள் 'ஆண்டி லேபர் பாலிஸி' என்றும் குறிப்பிட்டார்கள். ஆனால், என்னைப் பொறுத்தவரையில் சொல்ல விரும்புவது போக்குவரத்துத் துறை என்பது ஒரு பொதுத் துறை. பொதுத் துறை மட்டுமல்ல, பொது மக்களுக்குப் பயன்படுகின்ற துறை. பொது மக்களுக்குப் பயன்படுகின்ற துறை மட்டுமல்ல, அன்றாடம் அவர்களுக்கு வேண்டிய அத்தியாவசியமான பயண வசதிகளைச் செய்து தருகிற

துறையாகவும் இருக்கிறது. சாதாரணமாக, பேருந்துகள் சரியாக வராவிட்டாலே பொது மக்களுக்கு எரிச்சல் ஏற்படுவது இயல்பு. அது கூடச் சொல்ல வேண்டியதில்லை. பொதுவாக தாமதப்பட்டு வந்தால் கூட பொது மக்கள் கடிந்து கொள்வது இயல்பாக இருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் பொது மக்களுக்கு அன்றாடம் ஆங்காங்கு குறிப்பிட்ட நேரத்தில் போக்குவரத்து பயன்பட வேண்டும் என்று அவர்கள் கருதுவது இயற்கை. இதைச் சரிவர நிர்வகிக்கக்கூடிய பொறுப்பு அரசாங்கத்தினது மட்டுமல்ல, இந்த மன்றத்திலுள்ள அனைவருடைய பொறுப்புமாகும் என்று நான் கருதுகிறேன்.

கடந்த இரண்டு, மூன்று ஆண்டுகளாக போக்குவரத்துத் துறையிலே பல்வேறு நிறுவனங்களை ஏற்று நடத்துகிற சூழ்நிலையில், வேறு எங்கும் இல்லாத அளவுக்கு ஒரு தனிப்பட்ட விசித்திரமான சூழ்நிலை கன்னியாகுமரி மாவட்டத்தில் அடிக்கடி ஏற்பட்டு வந்திருக்கிறது என்பதை நான் சில தகவல்களை இந்த மன்றத்திற்கு அளிப்பதன் மூலம் தெரிவிக்க இயலும் என்று கருதுகிறேன். குறிப்பாக 1973-ம் ஆண்டு மே மாதம் 19-ம் தேதி ஒரு குறிப்பிட்ட நடத்துனர் ஒருவர் தான் வசூலித்த பணத்தை சரியாக அரசாங்கத்தின் போக்குவரத்துத் துறை இலாகாவிற்கு செலுத்தவில்லை என்ற காரணத்தினால், அவர் மீது குற்றம் சாட்டப்பட்டு. நடவடிக்கை எடுத்தபொழுது கன்னியாகுமரி மாவட்டத்தில் இருந்த போக்குவரத்துத் தொழிலாளர்கள் 19—5—1973 அன்று வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டார்கள். அதற்குப் பிறகு 14—7—1973 அன்று அரிசி தங்களுக்கு வேண்டும் என்று கேட்டு ஒரு நாள் முழுவதும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு விட்டார்கள். அதற்குப் பிறகு ஜூலை மாதம் 25-ம் தேதியன்று அரிசி சரியாக இன்னும் கொடுக்கப்படவில்லை என்பதற்காக பொது மக்களுக்குப் பயன்படுகின்ற பஸ் வசதியை நிறுத்தி விட்டார்கள், பஸ்களை எடுக்கமாட்டோம் என்று சொல்லி விட்டார்கள். அதற்குப் பிறகு வேலை நிறுத்தம் செய்த நாட்களுக்கு தங்களுக்கு உரிய சம்பளம் ஏன் கொடுக்கப்படவில்லை என்பதற்காக ஜூலை 30, 31 ஆகிய இரண்டு நாட்களிலும் கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொருத்தவரையில் பேருந்துகள் நிறுத்தப்பட்டுவிட்டன.



அதுமட்டுமல்ல. அரிசி கடத்தல் சம்பந்தமாக ஒரு டிரைவருக்கும் அங்கே செக் போஸ்டிலிருந்த ஒரு காவல் துறை அதிகாரிக்கும் தகராறுகள் ஏற்பட்டு, அதன் காரணமாக செப்டம்பர் 16-ம் தேதியன்று திடீரென்று தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்துவிட்டார்கள். ஏன் இதையெல்லாம் குறிப்பிடுகிறேன் என்றால், கிட்டத்தட்ட 6 வேலை நிறுத்தங்கள் மூன்று மாதங்களில் அவர்களாலே துவங்கப்பட்டு, திடீர் திடீரென்று நிறுத்தப்பட்டு, அந்த மாவட்டத்தில், மதிப்பிற்குரிய எதிர்க்கட்சித் தலைவர் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் குறிப்பிட்டது போல பெரும்பாலும் 99 சதவிகிதம் என்று சொல்லக்கூடிய அளவுக்கு அரசாங்கப் பேருந்துகள் இயக்கப்படும் அந்த மாவட்டத்தில், ‘இந்த சர்க்கார் ஏன் தான் இந்த பஸ்களை எடுத்தார்களோ தெரியவில்லை. இன்றைக்கு பரிகாசத்துக்கு உள்ளதாக இருக்கிறது. இதைவிட தனிப்பட்ட முதலாளிகள் பஸ் போக்குவரத்து நடத்தினால்கூட பரவாயில்லை’ என்று நினைக்கிற அளவுக்கு பொது மக்களிடையே ஒரு இக்கட்டான சூழ்நிலையை தோற்றுவித்தார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது.

மதிப்பிற்குரிய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுகிற பொழுது சொன்னதுபோல் நான் பத்திரிகை வாயிலாகக்கூடப் பார்த்தேன். நிர்வாகம் நடக்கிறதா, இல்லையா என்று தெரிய வில்லையென்று கோபப்படுகிற அளவுக்கு அவர்கள் பேசினார்கள். நான் இதைச் சொல்வதற்குக் காரணம், எந்தவிதக் காரணமும் இல்லாமல், நியாயங்களும் இல்லாமல், தேவையுமில்லாமல், ஒரு நல்ல பொதுத்துறை நிறுவனத்தை நடத்த வேண்டும் என்று பொறுப்பேற்றுக்கொண்டிருக்கிற தொழிலாளிகள் இப்படி அடிக்கடி வேலை நிறுத்தங்களில் ஈடுபட்டு, அங்கே இருக்கிற மக்களை துன்பத்தில் ஆழ்த்துவது, துயரத்தில் ஆழ்த்துவது, தங்கள் இஷ்டம் போல் பஸ்களை நிறுத்துவது என்கின்ற போக்கினை நிச்சயம் எந்த நிர்வாகமும், எந்த நிறுவனமும் அனுமதித்துக் கொண்டே போகுமானால், ஏதோ அரசாங்கத்திற்கோ, அல்லது தனிப்பட்டவர் களுக்கோ, கட்சிகளுக்கோ அல்ல, கொள்கையைப் பொறுத்த அளவிலேயே பெரிய முரண்பாடாக அமையும் என்பதைத் தெளிவாக உணர்கின்ற காரணத்தினால், இவ்வளவு பொறுமைக்குப்

பிறகும் கூட, பஸ்களை இயக்காமல் இருந்த பிறகும் கூட எந்தவிதமான நடவடிக்கையும் அவர்கள் பேரில் எடுக்காமல், அதே நேரத்தில் அவர்களுடைய போக்கு நல்லது அல்ல என்ற கருத்தினை அவர்களிடம் எடுத்துச் சொல்லி நிர்வாகம் வலியுறுத்தி வந்திருக்கிறது. இங்கே மதிப்பிற்குரிய திரு. தங்கமணி அவர்கள் சொன்னதுபோல், தீபாவளி என்றால் வேலை நிறுத்தம் ஆரம்பிக்க வேண்டும் என்ற ஒரு கொள்கை நாட்டில் ஒரு சிலரால் கையாளப்பட்டு வருகிறது.

[முற்பகல் 11.30]

அதைப்போல தீபாவளி வருகிறது என்று சொன்னால் அதற்கு முன்னால் பல வேலை நிறுத்தங்களைச் செய்து தயார்படுத்திக் கொண்டு, தயார் நிலையில் இருக்கிற அந்தத் தொழிலாளர்களை வைத்து ஒரு வேலை நிறுத்தம் செய்ய வேண்டும் என்று அவர்கள் 15—10—1973 அன்று வேலை நிறுத்தம் துவங்கி, வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டார்கள். தொழிலாளர்களுக்கு எவ்வளவோ எடுத்துச் சொன்னோம். ஆண்டுதோறும் போனஸ் பிரச்னை, மற்ற பிரச்னைகள் பற்றி சங்கத்தினிடம் பேச்சுவார்த்தை நடத்தி, ஒரு முடிவுக்கு வந்த பிறகு தான் போனஸ் வழங்கப்படுகிறது. பேச்சுவார்த்தைகள் நடத்திக் கொண்டிருக்கும்பொழுதே, ஒரு சில தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவது சரியல்ல என்ற கருத்தினை நிர்வாகம் தெரிவித்திருந்தாலும் கூட, அவர்கள் வேலை நிறுத்தம் எப்படியும் செய்யவேண்டும் என்ற காரணத்தினாலோ என்னவோ வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டார்கள். தொழிலாளர்கள் நலத் துறை அமைச்சர் அவர்கள் தான் இதற்குப் பதில் சொல்லவேண்டும். போக்குவரத்துத் துறை அமைச்ச பதில் சொல்லுவது முதலாளியினுடைய பாவையில் தா இருக்கும் என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். பொதுத் துறை என்று ஆகிவிட்ட பிறகு நிச்சயம் முதலாளி, தொழிலாளி என்ற பேதத்திற்கு இடமே இல்லை. ஆனால், தொழிலாளர்கள் துறையைப் பொறுத்தவரையில்கூட ஒரு குறிப்பிட்ட சில தொழிலாளர்களை அழைத்து 'நீங்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடவேண்டிய அவசியம் இல்லை' என்று சொல்லி, அவர்கள் வேலைநிறுத்தம் ஆரம்பிப்பதாக இருந்த 15-ம் தேதிக்கு முன்னர் 12—10—1973-ம் தேதியன்று தொழிலாளர் நல அதிகாரிகள் முன்னிலையில் பேச்சு வார்த்தைகள் நடைபெற்றன. பேச்சுவார்த்தையில் முடிவு





ஏற்படவில்லை. அதற்குப் பிறகு 20—10—1973 அன்று பேச்சு வார்த்தை நடத்திக்கொள்ளலாம் என்று ஒப்புக்கொள்ளப்பட்டது. பேச்சுவார்த்தை நடைமுறையில் இருக்கிறபோது அவர்கள் பஸ்களை நிறுத்தத் தொடங்கிவிட்டார்கள். இதுதான் அங்கே ஏற்பட்ட சூழ்நிலை.

அதோடு மட்டுமல்ல. மற்ற நிறுவனங்களிலுள்ள தொழிலாளர்களையும் வேலை நிறுத்தத்தில் ஈடுபடச் சொன்னார்கள். உதாரணமாக, நாகர்கோவிலில் இருக்கிற பணிமனையில் உள்ள தொழிலாளர்களையும் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுங்கள் என்ற வகையிலே சொன்னார்கள். திருச்சி, மதுரை இன்னும் மற்ற இடங்களில் உள்ள தொழிலாளர்களையும் வேலை நிறுத்தத்தில் ஈடுபடும்படி கோரியும் வேகமாக நடவடிக்கை எடுத்தார்கள். இது நியாயம் இல்லை என்று உணர்ந்த தொழிலாளர்கள் பேருந்துகளை ஓட்ட முயற்சி செய்த போது அவர்கள் தடுக்கப்பட்டார்கள். அதனால் பஸ்களை ஓட்டுவதில் பல சங்கடங்கள் ஏற்படுகின்றன என்று காவல்துறைக்கு தகவல் வந்தது. இந்தச் சூழ்நிலையில் பொதுமக்கள் நன்மையைக் கருதி, அவர்களின் வசதியைக் கருதி பஸ்களை ஓட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்தத் துறையிலே இருக்கிற தொழிலாளர்கள் எப்போது வேண்டுமானாலும் வேலை நிறுத்தம் செய்யலாம், எப்படி வேண்டுமானாலும் வேலை நிறுத்தம் செய்யலாம் எதற்கெடுத்தாலும் வேலை நிறுத்தம் செய்யலாம் என்ற ஒரு நிலை ஏற்படுவது சரியா என்பதை அரசாங்கம் முடிவு செய்யவேண்டிய கட்டத்திற்கு வந்தது. நிச்சயமாக 'ஆன்டி லேபர்' என்ற முறையில் அரசாங்கம் ஈடுபடவில்லை; அப்படிச் சொல்வதும் நல்லதல்ல. ஏனென்றால் அங்கே இருக்கின்ற பல ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் இன்றையதினம் கூட நல்லமுறையிலே கடமையாற்றி வருகின்றார்கள்—ஒருசிலரைத் தவிர. ஆகையினால் 'ஆன்டி லேபர்' என்று சொல்ல வேண்டியதில்லை. ஆனால் அங்கே 'ஆன்டி பீப்பிள்' என்று வந்த பிறகு 'ஆன்டி லேபர்' என்று சொன்னால் அது வரவேற்கத்தக்கது, என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. ச. இராமச்சந்திரன் [1973 நவம்பர் 21

அதுமட்டுமல்ல. வேலை நிறுததத்தில் ஈடுபட்ட அந்த தொழிலாளர்களுக்கு மறுபடியும் கருணைகாட்டி, நீங்கள் வேலைக்கு வந்துவிடுங்கள், உங்கள்மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்பட மாட்டாது என்று தெரிவித்த பிறகும் யாரும் வரவில்லை. வராதது மட்டுமல்ல; ஓடுகின்ற பஸ்களைத் தடுத்தார்கள். அப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்ட பிறகுதான் சிலபேர் கைது செய்யப்பட்டார்கள். தொழிலாளர்களில் 225 பேர்கள் ... செய்யப்பட்டிருக்கிறார்கள். சில இடங்களில் வெளியார் தலையீட்ட காரணமாக, அவர்களில் 8 பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இந்தச் சூழ்நிலையை உணர்ந்த காரணத்தினாலே, இனிமேலும் இந்தப் போக்கு நீடிக்குமானால் போக்குவரத்துத்துறை அந்தத் மக்களுடைய நன்மைக்காக இயங்குவது கடினமாக ஆகிவிடும் என்பதால், அந்த அளவுக்கு இக்கட்டான நிலைமை போக்குவரத்துத் துறைக்கு ஏற்பட்டதால், வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டவர்கள் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். அது தற்காலிக வேலை நீக்கமே தவிர, மாண்புமிகு பொன்னப்ப நாடார் அவர்கள் குறிப்பிட்டதைப்போல் முழுமையான ஒரு நீக்கம் அல்ல.

தலை

மக்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்று செயல்படுகின்ற போது, நல்லமுறையிலே காரியங்கள் நடக்கின்றபோது வேண்டுமென்றே ஒரு குறிப்பிட்ட சிலர் தங்களுடைய சொந்த நலன்களுக்காகவோ—சுய நலன்களுக்காகவோ—அரசுக்கு தொந்தரவு கொடுக்கவேண்டுமென்று கருதியோ இத்தகைய வன்முறை போக்கிலே வேலை நிறுத்தத்தில், ஈடுபடுவார்களேயானால், அத்தகையப் போக்கை தடுத்து நிறுத்துவது, கண்டிப்பது ஒரு நல்ல அரசினுடைய கடமை என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மக்களுடைய நலன் காற்றில் பறக்கவிடப்பட வேண்டுமென்ற கொள்கை அரசுக்கு கிடையாது. மாண்புமிகு பொன்னப்ப நாடார் அவர்கள் அந்த பணிமனை தன்னுடைய தொகுதியிலே இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். அந்தப் பணிமனை மீண்டும் இயங்க ஆரம்பித்திருக்கிறது. அங்கேயுள்ள தொழிலாளர்கள் ஆதரவையும், மக்களுடைய ஆதரவையும் அவர்கள் நிச்சயமாக காப்பாற்றிக்கொள்ள வேண்டும் என்பதிலே எங்களுக்கு கருத்து வேறுபாடு கிடையாது; மிக்க மகிழ்ச்சி



1973 நவம்பர் 21] [திரு. ச. இராமச்சந்திரன்]

இல்லாடு. அந்த மக்களுடைய நலனைக் கருதிதான் இத்தகைய நடவடிக்கையை அரசு மேற்கொள்ள வேண்டிவந்தது. கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்த வரையில் இன்றையதினம் ... பேருந்துகளுக்குப் பதிலாக 294 பேருந்துகள் ஓடிக்கொண்டிருக்கின்றன. குழித்துறை பணிமனைக்குட்பட்ட பகுதியில் ... பேருந்துகளுக்குப் பதிலாக 63 பேருந்துகள் ஓடிக்கொண்டிருக்கின்றன. மற்ற பேருந்துகள் ஓடாததற்குக் காரணம் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் அல்ல. போதிய டயர்கள் இல்லை. ...ரமாக டயர்களை அனுப்பி, எல்லாப் பஸ்களும் ஓடுவதற்கு நடவடிக்கை எடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

askin

என்னுன்றுடம் வேலை செய்யக் கூடிய 64 தொழிலாளர்கள் வேலை நடந்தும் செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் சொன்னதுபோல் எடுத் பேர் வேலை நிறுத்தத்தில் ஈடுபடவில்லை. 744 பேர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்கள் ஈடுபட்டிருக்கிற ...யம் மக்கள் நலனுக்கு உகந்ததல்ல. அவர்கள் கொண்டிருக்கிற இத்கொள்கைக்கும் அது நல்லதல்ல. பொதுமக்களுக்கும் நல்லதல்ல. வேலை...துத் துறைக்கும் ஏற்றதல்ல. ஆகவே, இந்தச் சூழ்நிலைகளை அவர்கள் நன்றாக உணர்ந்து கொள்ள வேண்டுமென்று அரசாங்கம் சில நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது. அவர்களை பழிவாங்க வேண்டுமென்று எடுத்த நடவடிக்கை அல்ல இது.

இப்போது எங்களுக்கு வந்திருக்கிற தகவல் ஓடுகின்ற பஸ்களுக்கு முன்னால் 'அள்ளு' என்று எதையோ போடுகிறார்கள் என்றும், அதனால் டயர் பஞ்சர் ஆகிவிடுகிறது என்றும் சொல்கிறார்கள். இப்படி சேதம் விளைவிக்கும் வேலையில் ஈடுபடுவார்களானால் திரும்ப அவர்களை வேலையில் சேர்த்துக் கொள்ளும்போது என்ன காரியங்கள் நடக்கும் என்று தெரியாது. மற்ற தொழில்களைப் போல் 4 சுவர்களுக்குள் நடைபெறுகின்ற தொழில் அல்ல இந்தத் தொழில். போக்குவரத்துத்துறை தொழிலை கண்காணிப்பது சற்று கடினமானது. ஒரு பஸ்ஸை டிரைவர், கண்டக்டர் இடத்திலே ஒப்படைக்கிறோம். அவர்கள் எப்போது, எப்படி கொண்டுவந்து ஒப்படைக்கிறார்களோ அப்போதுதான் திரும்பப் பெறமுடியும். ஆகையால் இந்தத் துறையிலே பணியாற்றுகின்ற தொழிலாளர்கள் எவ்வளவு கவனமாக, எவ்வளவு

நடைபெற்றிருக்கிறது. அமைச்சரவர்கள் விரிவான விளக்கத்தைக் கொடுத்திருக்கிறார்கள். இந்த விளக்கத்திற்குப் பின்னால் மேலும் இந்தப் பிரச்சனையை விவாதிக்க அவையை ஒத்திவைக்க வேண்டிய அவசியம் இல்லையென்று கூறி, அதற்கான அனுமதியை மறுக்கிறேன்.

## (ஆ) விக்ரமசிங்கபுரம் ஆர்.வி. மில் தொழிலாளர் வேலைநிறுத்தம் குறித்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, திரு. எஸ். சங்கு முத்துத் தேவர், திரு. எஸ். அழகர்சாமி, திரு. க. உரொ. எட்மண்ட், திரு. மூனா ஆதி, திரு. என். கே. பழனிசாமி ஆகியோர் விக்ரமசிங்க புரம், திருநெல்வேலி மாவட்டம் ஆர்.வி. மில் தொழிலாளர் வேலை நிறுத்தம் குறித்து விவாதிக்க வேண்டுமென்று ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். தொழிலாளர்கள் வேலை நிறுத்தம், கதவடைப்பு முதலிய தொழிற்தகராறுகள் குறித்துத் தீர்த்துக்கொள்ள வேறு முறைகள் இருக்கின்ற காரணத்தால் இதற்காகப் பேரவையை ஒத்திவைக்கத் தேவையில்லை என்று கூறி, இத்தீர்மானங்களுக்கு என் அனுமதியை மறுக்கிறேன்.

**திரு. க. உரொ. எட்மண்ட் :** சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர் நான் கொடுத்திருப்பதும் தொழிலாளர் பிரச்சனையைப்பற்றியது தான். முந்திய தீர்மானமும் தொழிலாளர்கள் பற்றியதுதான். அதற்கு அனுமதி அளித்துவிட்டு, என்னுடைய தீர்மானத்திற்கு அனுமதி மறுக்கப்படுவது ஏன்? இரண்டும் தொழிலாளர் பிரச்சனை தானே.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அது டிரான்ஸ்போர்ட் பற்றியது. பெரிய விவகாரம் மட்டுமல்ல; முக்கியமானதும் கூட. அதனால் அதற்கு அனுமதி அளித்தேன்.

THIRU G. R. EDMUND : Sir, on a point of order. My motion is concerned with Spinning Mill. After all, it is also a question of labour and how can you discriminate between one labour problem and another labour problem?



**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அனுமதி அளிப்பதும் மறுப்பதும் நிகழ்ச்சியின் முக்கியத்துவத்தைப் பொறுத்தது.

**திரு. க. உரொ. எட்மண்ட் :** நான் கொடுத்திருப்பதும் முக்கிய மானதுதான். 6,000 தொழிலாளர்கள் வேலை இல்லாமல் வெளியே இருக்கிறார்கள்.

## 5. அறிக்கை அளித்தல்.-

வீட்டுவசதி வாரியத்தின் கணக்குகள் மீதான தணிக்கை அறிக்கை பற்றிய பொது தொழில் நிறுவனங்கள் குழுவின் முதலாவது அறிக்கை.

DR. S. M. PALANIAPPAN : Sir, on behalf of the Chairman of the Committee on Public Undertakings, I rise to present the First Report of the Committee on the Audit Report on the accounts of the Tamil Nadu Housing Board for the year 1964-65.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, I have also given notice of certain motions under Rule 41 and Rule 42. Nothing has ocme before the House. They are of public importance. I would like to know.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** "நோட்டீஸ் கொடுத்தேனே, என்ன ஆயிற்று?" என்று அவையில் கேட்பது மரபு அல்ல. அதை என் அறையில் வந்து கேட்கவேண்டும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** சாதாரணமான மரபு அப்படித் தான். பழைய மரபை ஒட்டியே சொல்லிவிட்டால் நன்றாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேட்கிற வழக்கம் இல்லை. அதற்கு விடை அளிக்கிற வழக்கமும் இல்லை.

THIRU J. JAMES : Sir the, reptrt of the Committee on Public Undertakings has not been presented by its Chairman. May I know what has happened to the Chairman of that Committee?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சேர்மென் இருந்தால் கொடுக்கலாம். சேர்மென் இல்லை என்றால் வேறு எந்த உறுப்பினர் வேண்டுமென்றாலும் கொடுக்கலாம்.

THIRU J. JAMES: What has happened to the Chairman, Sir?

## (6) 1973-74-ம் ஆண்டுக்கான மின்வாரியத்தின் நிதிநிலை அறிக்கை மீதான விவாதம்—தொடர்ச்சி.

THIRU K. M. SUBRAMANIAM: Hon. Speaker, Sir, in taking part in this very important debate, I have gone through the Annual Financial Statement of the Tamil Nadu Electricity Board. This financial statement is as usual so confusing that no layman could find out the actual financial position of the Electricity Board. Generally in the introductory stage of any financial statement, the assets of the institution, the capital expenditure, with a short note on the assets of the Board, a short note giving the revenue and expenditure on capital account, and the total inventory position should have been given in a consolidated form, so that any ordinary layman who is not a chartered accountant or an accountant himself or who cannot afford to engage such an accountant for the purpose could go through them and without going through these voluminous documents understand what the actual position is.

So far as the Electricity Board is concerned, it has developed into a very huge institution, spreading all over the place which is necessary for its administration. But what we understand from these documents and from the reports presented by the Public Accounts Committee is that it is amply clear that there is absolute financial chaos in the administration of this Board. A Board is created because the expenditure of the Board does not come under the purview of the budgetary control of the State. They have given us a statement of loans, showing the loans given by the State Government and loans given by the L.I.C. The interest charges on Government loans are given. But what is the inteerest which the Board pay to the L.I.C. is not given. At least the rate of interest on the loans of L.I.C. should have



been given. Apart from these loans, I understand—I may be corrected if I am not correct—that there is always a standing current account with the various scheduled banks and what is the amount standing to the credit of the Electricity Board is not known. I am unable to see from a perusal of these documents. Whether they have one account with one scheduled bank or ten accounts with ten banks is not known. It so happens that in most of these Boards accounts are kept with banks under three, four, five or six heads.

It has been my very sad experience with the Corporation of Madras that there was an account with the Indian Bank and the Indian Bank had four accounts with the Corporation. Under one account, there was deficit and under another account there was credit and totally there was credit. The Corporation was paying interest of Rs. 7 lakhs unnecessarily because of the division of accounts into four or five heads. These books do not give an idea of what is happening to the Electricity Board. Whether they have an account with scheduled banks at all is not known and if there is an account, is it under one head or under more heads is also not known. We do not also know whether each system like Ennore, etc., has a separate account or whether there is a centralised accounts for all systems. What is the profit and loss that comes to this Board through maintenance of such accounts.

So far as the scheduled banks are concerned, they are very keen to lend to this Board, because they get very good interest, ranging from 9-1/2 to 10-1/2 per cent sometimes, whereas if the Government lends, the maximum rate is only 8 per cent. I would like to know from the Hon. Minister whether he is satisfied with the present system of accounting of the Board. There is a loan from the L.I.C. What is the rate of interest paid and whether there are accounts with the scheduled banks and what is the total amountdrawn from such scheduled banks? All these details I would like to know from the Hon. Minister.

The Tamil Nadu Electricity Board has developed into a huge organisation of unimaginable proportions. Naturally so. It has got a lot of work and it has to be managed. When Government of India are managing big institutions, naturally, the Electricity Board also has to manage its own affairs.

[Thiru K. M. Subramaniam] *[1973 நவம்பர் 21*

Last year we had a critical time in the history of electricity in the State. Whether it was due to the negligence of the Government tr whether it was due to the cumulative negligence of all concerned, there is no use of making excuses. What we really need is a dynamic policy, a dynamic and honest attempt to see that power is produced and connections are given only to the extent power is produced; for the sake of publicity, Government says that they are extending lines to villages for the sake of publicity they say they are extending lines to Harijan colonies, for the sake of publicity they say that they are giving connection to 7 lakhs pump-sets. What is the fact? Unless we produce enough power, how can they do all this? That is obvious.

So far as Ennore Thermal Station IV stage is concerned, I am told that in March 1973, it has been completed and that they will be going to V stage. Is it a fact, Sir? I would like to know from the Honourable Minister for Electricity whether the IV stage has been completed. If it is completed, what is the reason for the dimness of lights in Madras city. There is gradual dimness of lights in Madras city. Everybody knows it. I do not know whether it is due to some wrongness in the manufacture of bulbs or due to some wrong specification or incorrect specification of tube-lights. We find this not only in street lights but also in lights in the houses. There is dimness in the lights in private houses. If the IV stage at Ennore Thermal Station has been completed, what is the reason for sudden failure of electricity in the city of Madras ? It has gone from bad to worse.

It has been our sad experience that whenever we conduct public meetings, especially when good speakers speak, the electricity fails. People think that it was wantonly done. I feel that it cannot be done wantonly. This has been the impression of the people. As far as the street lighting or load capacity in the city of Madras is concerned, there is something wrong in the distribution system.

In the matter of giving connection, there is a lot of delay at various stages. For example, whenever trenches are dug for replacing cables, they are not completed in time. I had the misfortune to point out the other day that whenever trenches are



*1973 நவம்பர் 21]* [Thiru K. M. Subramaniam]

dug, they are not filled in time. The trenches were dug in my constituency sometime in July. I do not know to whom to represent the matter. In September, I reminded a local man. Because I am an M.L.A., he said that it will be attended to. They have not been attended. When ain came, there was a lot of difficulty. I think there is a contractor for digging trenches and another contractor for covering them. Whenever there is rain, the rain water flows into the trenches in important roads. Whenever the children pass through such roads, they are involved in accidents. I may tell the House that it is not an exaggeration. There were three cases of accidents in which school-going children were involved. The school-going children have fallen into the trenches when there was heavy rain. I represented the matter to the Engineer. He too has not done anything. Ultimately, I have to meet the Chairman of the Electricity Board who was very busy with the finances of the Electricity Board and who was thinking to increase the power production to meet the power cut. If he has to come to my rescue with regard to filling up of trenches, what a sad situation in the administration! This only shows that the administration of the Electricity Board as many other Boards has completely broken down. It needs very good streamlining.

Sir, yesterday we had the misfortune of Madras Corporation being superseded. Here is the Tamil Nadu Electricity Board about which remarks have been made by the Public Accounts Committee every year. There was a case in which land was purchased from a person who had no land at all. This Electricity Board has purchased lands from that gentleman. I do not want to mention the name at all. That gentleman got a profit of Rs. 2 lakhs in the matter of purchase of lands by the Electricity Board. This thing is happening in the Electricity Board. My hon. Friend Veerasami wants to know the name of the person involved in this. He knows that person had no lands. He is Thiru Janakiraman from whom the lands were purchased by the Board. Nobody was punished for this sort of thing. I have no consideration for any Government. My concern is that the Government is a continuous process whether it is a Congress Government, British Government, D.M.K. Government or whether it is going to be a A.D.M.K. Government. Whoever has done this wrong thing, he has to be punished. I do not want to say more on this.

Then I would like to refer to the payment of electricity bills. The poor citizens, particularly the average middle class people are hit hard in the City of Madras. They have received a bill during the last week of last month or during the first week of this month for four months together for June, July, August and September. Citizens are already suffering due to the spiral in prices of essential commodities and finding it difficult to eke out their livelihood. Are they to pay the entire amount in one lumpsum or can they pay the amount in instalments ? If so, in how many instalments ? Whatever it may be, it is difficult for them to pay the amount. They cannot pay the dues for June and also the current dues. They will not be in a position to pay the dues for two months at a time. The milk price has been very high and everything is at high cost. It is a gross negligence on the part of the administration not to have sent the bills in time to the consumers particularly to the average middle class domestic consumers. It is unpardonable. In this connection, I may point out that they have advertised for these posts last year and they have received several thousands of applications. They could not appoint them due to pulls and counter-pulls from higher levels. There was thus delay in the matter of appointment of persons. I am not blaming anybody. The net result is the bills have been delayed. I have received a bill for Rs. 400; but my salary as a Member of the Assembly is Rs. 250 only. I have received a bill for four months for 400. How can I pay the amount with my salary of Rs. 250? Similarly, other citizens in the City of Madras have received bills. Who is responsible for this delay? I would like to know from the Hon. Minister for Electricity what is the relief that he is going to give for them. He must give some relief in collecting the dues from them. They must be allowed to pay their dues for June in November, July in December, August in January and September in February. Some interval must be given to them for paying the arrears.

I am also aware of the financial position of the Electricity Board. I am sure the Hon. Minister when he replies, he will give some relief. Then nobody knows what is happening in the Electricity Board. Nobody knows what is the present stock position of Electricity Board. Inventory is not carried out in the Electricity Board. There are articles which are 10 years old, 15 years old and some of them are not at all used. They have not



taken them into account. Are they conducting any auction with regard to these articles ? There is a lot of delay. Why should there be delay in conducting auctions and also in executing the work? I have come across many cases where work completion reports have not been sent. What happens is this. The Board people are doing the work somewhere; but the completion reports are not sent in time.

I am very sorry to say that the Electricity Board is not run on proper lines. It is run by local M.L.As. and local ruling party members. Yesterday, the Madras Corporation was superseded. If the same procedure is to be adopted, the Electricity Board will be the one. There should be rationalisation of work. There are Engineers and Engineers.

[நண்பகல் 12.00]

Whenever I ring up anybody in the Office with regard to some small work—not in connection with the appointment of a clerk—I get a reply that the concerned person is in the Secretariat or somewhere and that he could not be traced. Therefore, the officials are called here and there and they have to go to Japan also for placing orders. When they go to Japan, why not they go to London for that purpose?

[திரு. க. சுப்பு தலைமை]

Then, Sir, look at Mount Road. Due to the new lighting scheme of the Government of Tamil Nadu, a new type of cut-out lights had been installed in Mount Road about 1½ years ago, replacing the old tube lights. Now, owing to the dimness of the light, people are under the impression that the electricity lights have been replaced by kerosene lights. Sir, the replacement cost of the special lights is very high and the old tube lights could be replaced by new tubelights at half the cost. Why should we go in for such ornamental business?

Sir, one more matter. The Corporation of Madurai has the highest income by way of selling electricity. The Government sell electricity to the Corporation which in turn sells it to the consumers. Will they extend the same concession or facility to the City of Madras also. Perhaps the Corporation of Madras is going to become defunct and the Government are very, very

anxious not to face elections for another two or three years. Whatever it is, will they think of selling electricity to the Corporation of Madras so that they can improve their finances ?

Thank you very much, Sir.

*டாக்டர் ச. மு. பழனியப்பன்:* மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களால் இந்த மாமன்றத்திலே வைக்கப்பட்டிருக்கின்ற மின்சாரத் துறை நிதிநிலை அறிக்கையின்மீது ஒரு சில கருத்துக்களைப் பேச விரும்புகிறேன்.

முற்காலத்திலே அவனன்றி அணுவும் அசையாது என்று ஒரு பழமொழியை பக்தர்கள் சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் இன்றைக்கு அணுவின் அசைவினால்தான் ஆக்க சக்தியும், அழிவு சக்தியும் ஏற்படுகின்றன என்பதை அறிவோம். இந்தப் பழமொழி மின்சாரத்திற்கும் பொருந்தும் என்று நினைக்கிறேன். ஏனென்றால் எந்தத் துறையாக இருந்தாலும் இன்றைக்குத் தொழில் துறையாக இருந்தாலும், வேளாண்மைத் துறையாக இருந்தாலும், அன்றாட வாழ்க்கைக்கும், மனிதனுடைய வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்திருக்கிறது மின்சாரம் என்பதை நாம் உணர்கிறோம். குறிப்பாக இந்த ஆண்டு ஆரம்பத்திலேயும் சென்ற ஆண்டிலேயும் மின்வெட்டு ஏற்பட்ட நேரத்திலே அந்த நிலைமையை நாம் இன்னும் கூடுதலாக உணரத் தலைப்பட்டிருக்கிறோம். அதையெல்லாம் உணர்ந்துதான் திராவிட முன்னேற்றக் கழக அரசும் அதற்கு முன்னால் இருந்த அரசுகளும் இந்த நாட்டிலே மின் உற்பத்தியைப் பெருக்கவேண்டுமென்ற முறையிலே திட்டங்கள் போட்டு 1954 ஆம் ஆண்டு 156 மெகாவாட் ஆக இருந்த மின் உற்பத்தியை இன்றைக்கு 15 மடங்கு அதிகரித்திருக்கிறது. இருந்தாலும் நம்முடைய மின்சாரத் தேவைக்கும் நாம் உற்பத்தி செய்கின்ற அளவிற்கும் நீண்ட இடைவெளி இருந்து கொண்டுதான் இருக்கிறது. எதிர்காலத்திலே எப்படி இந்த இடைவெளி இருக்கும் என்று முன்கூட்டியே உணர்ந்துதான் நேற்றைய முன்தினம் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நெய்வேலியிலே இரண்டாவது சுரங்க வேலையைத் தொடங்கி 1,000 மெகா வாட் மின்சார உற்பத்தியை உடனடியாகத் தொடங்கிட வேண்டுமென்ற முறையிலே மத்திய அரசுக்குச்



சொல்லி கொண்டுவந்த தீர்மானத்தை நாம் இந்த மன்றத்தினுடைய ஏகோபித்த ஆதரவுடன் நிறைவேற்றி அனுப்பியிருக்கிறோம்.

மின்சாரத்தைப் பொறுத்தவரையிலே உற்பத்தி, விநியோகம் என்ற இரண்டு கட்டங்கள் இருக்கின்றன. மின்சார உற்பத்தியை நாம் எடுத்துக் கொண்டால் நாம் எவ்வளவுதான் உற்பத்தியைப் பெருக்கிக் கொண்டிருந்தாலும் தமிழ்நாட்டைப் பொறுத்த வரையிலே மொத்தமாக நாம் உற்பத்திச் செய்கிற மின்சாரத்திலே 60 சதவீதம் அளவிற்கு நீர் மின் நிலையங்கள் மூலம்தான் உற்பத்தி செய்கின்ற நிலைமை இருக்கிறது. அந்தக் காரணத்தினாலேதான் இயற்கையின் கோளாறு காரணமாக ஒவ்வோர் ஆண்டும் பாதிக்கப்படுகிறோம். சென்ற முறை தென்மேற்குப் பருவக் காற்று பொய்த்துவிட்டதால் நாம் நீர் மின்நிலையங்கள் மூலம் செய்கின்ற உற்பத்தி தடைபட்டதன் காரணமாக பலவிதமான சங்கடங்களுக்கு ஆளானோம்.

நாம் எதிர்காலத்திலே நீர் மின்நிலையங்களை மட்டும் நம்பியிராமல் அனல் மின்சார நிலையங்களையும் அதிகமாக ஏற்படுத்தக் கூடிய முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும். இப்பொழுது தூத்துக்குடியிலே அனல் மின் நிலையம் ஏற்படுத்த மத்திய அரசு அனுமதி கொடுத்திருக்கிறது. அதே போன்று மேட்டூரிலே ஒரு அனல் மின்நிலையத்தை ஏற்படுத்த ஒரு திட்டம் வகுத்திருக்கிறது நம்முடைய அரசு. மேட்டூரைச் சுற்றிப் பல்வேறு தொழிற்சாலைகள் ஏற்பட்டுக் கொண்டு வருகின்றன. சேலம் இரும்பாலையும் வருவதற்கான வாய்ப்பு இருப்பதால் மேட்டூரிலே அனல் மின் நிலையம் அவசியமாகத் தேவைப்படுகிறது.

அது மட்டுமல்ல, நாம் வெளி மாநிலங்களிலிருந்து நிலக்கரிக்காகக் காத்துக்கிடக்க வேண்டியிருக்கிறது. அந்தக் காரணத்தினாலேயும் மின் உற்பத்தி தடைப்படுகிறது. நெய்வேலியில் இரண்டாவது கட்ட வேலை தொடங்கினால் அங்கே கிடைக்கின்ற நிலக்கரியை அங்கேயே பயன்படுத்தி மின்சாரத்தை உற்பத்தி செய்யலாம், அப்படி உற்பத்தி செய்வதன்மூலம் உற்பத்திச் செலவும் குறையும். மேட்டூரிலே அனல் மின்நிலையம் ஏற்படுவதற்குத் தாமதம் ஏற்படுவதற்கான காரணம், நேற்றுக்கூட

[டாக்டர் ச. மு. பழனியப்பன்] [1973 நவம்பர் 21

அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், அதற்கு தேவைப்படுகின்ற நிலக்கரியை எங்கேயிருந்து கொண்டுவருவது என்பதைப் பற்றி மத்திய அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது. ஆந்திர மாநிலத்திலிருந்து கொண்டுவருவதா, எந்த மாநிலத்திலிருந்து கொண்டு வருவது என்று யோசித்துக்கொண்டிருப்பதாகச் சொன்னார்கள். ஆகவே அதைப்பற்றிய முடிவை விரைவில் எடுத்து எப்படியும் இந்த ஐந்தாண்டுத் திட்டத்திலே மத்திய அரசு சேர்த்துவிட வேண்டும். இன்று தொடங்கினால்கூட உற்பத்தி தொடங்குவதற்கு நான்கைந்து ஆண்டுக்காலம் ஆகும் என்று சொல்கிறார்கள். இவையெல்லாம் செய்தால்தான் மின்சாரத்தில் தன்னிறைவை நம்முடைய தமிழ்நாடு பெற முடியும்

நெய்வேலி இரண்டாவது கட்ட வேலைக்கு மத்திய அரசு உடனடியாக அனுமதி கொடுத்து அந்த உற்பத்தியையும் தொடங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

விநியோகத்தைப் பொறுத்தவரையிலே எதிர்க்கட்சிக்காரர்கள் பேசும்பொழுது சொன்னார்கள், உற்பத்திக்கு மேலே விநியோகம் செய்துவிட்டார்கள் என்று சொன்னார்கள், அதனால்தான் சங்கடங்கள் ஏற்பட்டன என்று சொன்னார்கள். டாக்டர் ஹாண்டே அவர்கள் பேசும்பொழுது ஒரு கருத்தைச் சொன்னார்கள், மின்வெட்டு ஏற்பட்ட நேரத்திலே தொழில் உற்பத்தி பாதிக்கப்படவில்லை என்று டாக்டர் கே. எல். ராவ் சொன்ன கருத்தையே சொன்னார்கள். அதனால் கள்ளச் சந்தை இதிலே இருக்கிறது என்ற கருத்தைச் சொன்னார்கள். நான் விளக்க விரும்புகிறேன்.

மின்வெட்டு ஏற்பட்ட காரணத்தினால் தொழிலதிபர்கள் அவர்களே ஜெனரேட்டர்களை வைத்து எண்ணெய் எரிபொருளைப் பயன்படுத்தி மின்சாரத்தை உற்பத்திசெய்து தங்களுடைய தேவையைத் தாங்களே பூர்த்திசெய்துகொண்டார்கள், அந்தக் காரணத்தினாலே தான் உற்பத்தி குறையவில்லை. ஆகவே தொழில் துறையிலே உற்பத்தி பாதிக்கப்படவில்லையென்றால் அதற்குக் காரணம் கள்ளச் சந்தையல்ல. அது அவர்களுக்கும் தெரியும், இருந்தாலும் இந்த மன்றத்திலே அந்தக் கருத்தை எப்படியாவது சொல்லித்தீரவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அது மட்டுமல்ல. முன்பு இருந்ததைவிட 1951-ஆம் ஆண்டிலே 17,500 பம்பு செட்டுகள்தான் இருந்தன என்றால் இன்றைக்கு 6 லட்சத்து 65



1973 நவம்பர் 21] [டாக்டர் ச. மு. பழனியப்பன்]

ஆயிரம் பம்புசெட்டுகள் ஓடுகின்றன, அது மட்டுமல்ல. பல்வேறு கிராமங்களுக்கு மின் இணைப்புக் கொடுப்பது என்ற திட்டத்தின் கீழ் 61 ஆயிரம் கிராமங்களுக்கு மின் இணைப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏறக்குறைய எல்லா அரிசனக் காலனிகளுக்கும் 800 அரிசனக் காலனிகளைத் தவிர 21 ஆயிரம் அரிசனக் காலனிகளுக்கு மின் இணைப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று புள்ளி விவரங்கள் காட்டுகின்றன. இந்தக் காரியங்கள் எல்லாம் போற்றத்தக்கவை. வேறு எந்த மாநிலமும் செய்யாத காரியங்கள். அரியானா மாநிலம்கூட மின்சாரத் துறையில் முழுமை எய்தி இருக்கிறோம் என்று சொன்னாலும்கூட நாம் செய்திருக்கிற அளவிற்குப் பரவலாக இல்லாமல் செய்திருக்கிறார்கள். நாம் செய்திருக்கிற அளவிற்குப் பரவலாக வேறு எந்த மாநிலமும் செய்யவில்லை. கிராமங்களாக இருந்தாலும் மலைப்பகுதியிலே பத்து வீடுகள் இருந்தாலும்கூட அவர்களும் இந்த நாட்டின் குடிமக்கள்தான் என்ற முறையிலே அவர்களும் இந்த மாநிலத்திலே வாழ்கிறவர்கள்தான் என்ற முறையிலே அவர்களுடைய அத்தியாவசியத் தேவையையும் பூர்த்தி செய்யவேண்டுமென்ற முறையிலே இந்த அரசு, மின்சார வாரியம் தன்னுடைய கடமையைச் செய்திருக்கிறது. இந்த நிலைமையை நாம் எல்லோரும் நிச்சயமாகப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

குறிப்பாக சென்ற ஆண்டு இறுதியிலும் இந்த ஆண்டு ஆரம்பத்திலும் மின் வெட்டு ஏற்பட்ட நேரத்தில் மின்சார வாரியம், அரசாங்கமும் சிறப்பாக செயல்பட்டு எந்த அளவிற்கு மக்களுக்கு நன்மை செய்ய முடியுமோ அந்த அளவிற்கு நல்ல முறையிலே ஏற்பாட்டைச் செய்து வசதியைச் செய்திருக்கிறார்கள். அதற்காக நாம் அவர்களை பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அடுத்து, மின்சாரத் துறையிலே பணியாற்றும் ஊழியர்களைப் பற்றி சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். மின்சாரத் துறை பெரியதொரு பொதுத்துறை நிறுவனமாகும். போக்குவரத்துத் துறைக்கு அடுத்தபடியாகவோ அல்லது அதைவிடப் பெரிது என்றோ சொல்லக்கூடிய அளவிற்கு உள்ள பொதுத் துறை நிறுவனமாக இது இருக்கிறது. இதில் சுமார் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணியாற்றுகிறார்கள். அவர்கள் நல்ல முறையிலே பணியாற்றினாலும்கூட அவர்கள்மீது பொதுமக்க

[டாக்டர் ச. மு. பழனியப்பன்] [1973 நவம்பர் 21

ளிடத்திலே ஒருவிதமான அதிருப்தி நிலவுகிறது. அதற்கு என்ன காரணம் என்று மாண்புமிகு அமைச்சரவர்களும், வாரியத்தின் தலைமையகத்திலேயிருக்கின்ற அதிகாரிகளும் சற்றுக் கவனித்து, ஆராய்ந்து மக்களுக்கு இருக்கும் அந்த அதிருப்தியைப் போக்கு கின்ற முறையிலே செய்ய வேண்டும். இந்த ஆண்டு ஜனவரி மாதத்திலே 9,000 தற்காலிகத் தொழிலாளர்கள் நிரந்தரமாக்கப் பட்டிருக்கிறார்கள். அதற்குப் பிறகும் இன்னும் 30,000 தொழிலா ளர்கள் தற்காலிகப் பணியாளர்களாக இருக்கிறார்கள் என்ற விவ ரத்தைத் தந்திருக்கிறார்கள். அவர்களையும் காலப்போக்கிலே 'பேஸ்ட் ப்ரோக்ராம்' என்ற அளவிலாவது செய்து, ஒருசில ஆண்டுகளுக்குள்ளாக நிரந்தரமாக்குகின்ற அளவில் பணிகளை மேற் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு அவர் களது வேலைக்கு, 'செக்யூரிட்டி ஆஃப் ஜாப்' கொடுத்தால் அவர்கள் நல்லமுறையில் திட்டமிட்டு வேலை செய்வதற்கு அவர்களுக்கு ஊக்கம் பிறக்கும் என்ற செய்தியை உங்களுக்கு நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்தத் துறையிலே பணி யாற்றும் ஊழியர்களுக்குப் பல்வேறு வசதிகளைச் செய்திருக்கி றார்கள். மற்ற அரசாங்க தொழிலாளர்களுக்கு என்னென்ன வசதி கள் இருக்கிறதோ, அதைப்போல் வீட்டு வசதிப்படி, அகவிலைப் படியைக் கூட்டியிருக்கிறார்கள். திருமணக் கடன் போன்ற பல சலுகைகளை இந்த வாரியத்தில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு ஏற்படுத்தித் தந்திருக்கிறார்கள். அப்படியிருந்தும்கூட அவர்கள் மத்தியிலே அதிருப்தியிருக்கிறது. அதைக் கண்டுபிடித்து போக்க வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்குத் தலைமையகத்திலே சில மாறுதல்களைச் செய்திருக் கிறார்கள். நிர்வாகத்தை மாற்றியிருக்கிறார்கள். ஒரு சீஃப் எஞ்சினியர் இருந்த இடத்தில் 5 சீப் எஞ்சினியர்களைப் போட்டிருக் கிறார்கள். இதுகூட வரவேற்கத்தக்கதுதான். வேலையை ஐந்து பேர்கள் பகிர்ந்து செய்தால் சிறப்பாகக் கவனத்தைச் செலுத்த முடியும். இதில் என்னுடைய யோசனை என்னவென்றால், 'ஸோன்' களாகப் பிரிக்க வேண்டும். இப்பொழுது ஒரு சீப் எஞ்சினியர் சென்னையில் இருக்கிறார் என்றால், அவரது நிர்வாக அமைப்பு மாநிலம் முழுமைக்கும் இருக்கிறது. இதனால் பழைய நிலையே நீடிக்கிறது. சீப் எஞ்சினியர் (டிஸ்ட்ரிப்யூஷன்) என்றால் அவர் மாநிலம் முழுதும் கவனம் செலுத்த வேண்டியிருக்கிறது. அப்படி



1973 நவம்பர் 21] [டாக்டர் ச. மு. பழனியப்பன்]

யில்லாமல் நான்கைந்து ஸோன்களாகப் பிரித்து ஒவ்வொரு ஸோனுக்கும் ஒரு சீப் எஞ்சினியர் என்று வைத்தால் நிர்வாகப் பொறுப்பு குறைவாக இருக்கும், அதனால் கூடுதலாகக் கவனம் செலுத்த ஏதுவாக இருக்கும். இதைப்பற்றி வாரியமும், அமைச் சரவர்களும் ஆலோசிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று 'பர்சேஸ்'. இதிலே தலைமையிடத்திலே வாங்க வேண்டுமென்று இருந்தால் அதனால் பல்வேறு சங்கடங்கள் ஏற் படும். எனவே, ஒவ்வொரு சிஸ்டத்திலும் இருக்கும் சூப்பரின் டெண்டிங் எஞ்சினியர்களிடம் பர்சேஸை விட்டுவிட்டால், அவர் களுக்கு தேவை என்ன என்பது அவர்களுக்கு உடனடியாகத் தெரியும். அப்படியில்லாமல் அவர்கள் விவரங்களைச் சேகரித்து தலைமையிடத்திற்கு அனுப்பி அவர்கள் அதற்கு வேண்டிய சாமான் களை வாங்கி அனுப்புவது என்றால் காலதாமதம் ஏற்படுகிறது. எனவே, ஒவ்வொரு சிஸ்டத்திற்கும் பொறுப்பேற்றிருக்கும் சூப்ப ரின்டெண்டிங் எஞ்சினியர் வசம் இந்தப் பொறுப்பை ஒப்படைத் தால் காரியங்கள் வேகமாக நடைபெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து என்னுடைய தொகுதி ஈரோடு சிஸ்டத்திலே இருக் கிறது. ஓலப்பாளையத்தில் உள்ள மின் மாற்றியின் திறனை அதிகப் படுத்த வேண்டும் என்று சென்ற ஆண்டும் சொன்னேன். அங்கே மின்சார வாரியத்தின் வேலை முடிந்து விட்டது என்று சொல்கிறார் கள். பணிகள் துவக்கப்பட்டன. ஆனால் அது ஆமை வேகத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அங்கே தலைமையகத்தில் உள்ள எஞ்சினியர்களை எப்பொழுது முடியும் என்று கேட்டால் அவர் களால் உறுதியாகச் சொல்ல முடியவில்லை. அங்கே மின் அழுத்தம் குறைவாகவே இருக்கிறது. டியூப் லைட்டுகள் போட்டால்கூட இரவு 9 மணிக்கு மேல்தான் எரிகிறது.

அதைப்போல வேளாண்மை விசைபேற்றங்களை எடுத்துக் கொண்டால், மின் இணைப்பு மோட்டார் இருக்கும் காயில்கள் ஆண்டு ஒன்றுக்கு இரண்டு மூன்று முறை வெந்து போய்விடுகிறது. அதனால் விவசாயிகள் 600 அல்லது 700 ரூபாய் செலவு செய்ய வேண்டியிருக்கிறது. சாதாரண விவசாயிகள் இதை ஒரு சுமை என்று கருதுகிறார்கள். ஓலப்பாளையம் சப்ஸ்டேஷன் குறைந்தது

[திரு. ஏ. பாலையா] [1973 நவம்பர் 21

1973-74 மார்ச் மாதத்திற்குள்ளாகவாவது முடிவுக்கு வந்தால்தான் நிலைமைகள் சீரடையும். அதைப்போன்றே நம்பியூர்ப் பகுதிக்கும் சப் ஸ்டேஷன் வேண்டும். கல்வியமைச்சரவர்கள் ஒருசில மாதங்களுக்கு முன்னால் அங்கே இருளிலேயே பேச வேண்டியதாயிற்று. அவ்வளவு தூரம் அங்கே ஒளி மங்கி இருக்கிறது. எனவே, அங்கே சப் ஸ்டேஷனை அமைத்து, மின் அழுத்தத்தைக் குறைக்கின்ற நிலைமைகளை நிவர்த்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மின்சார வாரியத்தைப்பற்றி ஒரு சில கருத்துக்களைக் கூற வாய்ப்பளித்த தலைவரவர்களுக்கு நன்றி கூறி முடிக்கிறேன்.

* **திரு. ஏ. பாலையா :** அவைத் தலைவரவர்களே, இந்த மன்றத்தில் சமர்ப்பித்திருக்கின்ற மின்சார வாரியத்தின் நிதி நிலை அறிக்கையின்மீது ஒரு சில கருத்துக்களைக் கூற விழைகின்றேன்.

மின்சாரம் என்பது மனித வாழ்வோடு ஒன்றிய ஒன்றாகிவிட்டது மட்டுமல்லாமல் பொருளாதார வளர்ச்சிக்கும், தொழில் முன்னேற்றத்திற்கும் இன்றைய தினம் மின்சாரம் மிக முக்கியமான பங்கை எடுத்துக்கொண்டிருக்கிறது. சில மாதங்களுக்கு முன்னால் தமிழகத்தில் என்றுமில்லாத அளவில் மின்சார வெட்டு ஏற்பட்டது. 75 சதவிகித மின்சார வெட்டு ஏற்படுகின்ற ஒரு சூழ்நிலையைத் தமிழக மின்சார வாரியம் ஏற்படுத்தியிருந்தது. அதன்காரணமாக, தமிழகத்திலே தொழில் அபிவிருத்தி, தொழில் முன்னேற்றம், இவைகள் பொருளாதார வளர்ச்சி இவைகள் பாதிக்கக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டது. பல்வேறுவிதமான தொழிற்சாலைகள் மூடப்படக் கூடிய அளவிலேகூட இந்த மின் வெட்டு காரணமாக இருந்தது. இதற்கெல்லாம் காரணமாக இருந்தது என்று நாம் குற்றம் சாட்ட வேண்டுமென்றால் அது மின்சார வாரியத்தின் மீது அல்லாமல் வேறொன்றின் மீதும் குற்றம் சாட்ட முடியாது. காரணம் என்னவென்றால், மின்சார வாரியம்தான் மின்சாரத்தை ஒழுங்குபடுத்திக் கட்டுப்படுத்துகின்ற பொறுப்பை ஏற்றிருக்கிறது. அவர்கள் மின்சாரப் பெருக்கத்திற்கான திட்டங்களை சரிவர வகுத்திருந்தால், நிச்சயமாக என்றுமில்லாத அளவில் தமிழகத்தைப் பாதிக்கும் வகையில் மின்சார வெட்டு வந்திருக்காது. உதாரணத்திற்கு நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன்.



1973 நவம்பர் 21] [திரு. ஏ. பாலையா]

கன்னியாகுமரி மாவட்டத்திலே கோதையாறு நீர் மின்சாரத் திட்டம் 14 கோடி ரூபாய் அளவிலே நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அந்த மின்சாரத் திட்டம் இரண்டு கட்டங்களாகச் செயல்பட்டு வருகின்றது. ஒன்றில் 40 மெகாவாட் மின்சாரம் தயார் செய்யப்படுகிறது. இன்னொன்றில் 60 மெகாவாட் மின்சாரம் தயார் செய்யப்பட வேண்டும். ஆனால் இரண்டு திட்டங்களும் நிறைவேற்றப்பட்டும் ஒரேவொரு திட்டம் மட்டும்தான் அங்கே செயல்பட்டு வேலை செய்து வருகிறது. அதிலே 40 மெகாவாட் மின்சாரம் மட்டும் கிடைத்துக்கொண்டிருக்கிறது. இன்னொரு திட்டம் நிறைவேறியும்கூட அதிலே மின்சாரம் தயார் செய்ய முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை நாம் கவனத்திற்கொள்ள வேண்டும். மின்சாரம் நமக்குப் போதிய அளவு கிடைக்கவில்லை என்ற இக்கட்டான சூழ்நிலை இருக்கும் இந்த நேரத்தில் அந்தத் திட்டம் பூர்த்தியான பிறகும் மின்சாரம் ஏன் தயார் செய்யப்படவில்லை என்பதை இந்தச் சபையின்மூலம் கேட்டுக்கொள்கிறேன். நான் இதற்கு முன்னால் இந்தச் சபையில் அந்த கோதையாறு நீர் மின்சாரத் திட்டத்தில் ஒரு பகுதி இயங்கவில்லை என்று சொன்ன பொழுது அங்கே எல்லாப் பகுதிகளும் இயங்குகின்றன என்றும், முழுமையாக மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது என்றும் பதில் சொல்லப்பட்டது. ஆனால் இன்றைக்குள்ள நிலைமை என்ன? 40 மெகாவாட் மின்சாரம் மட்டுமே அங்கே உற்பத்தி செய்யப்படுகிறது. மீதியுள்ள ஒரு திட்டம், 60 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்ய முடியாமல் இருப்பதற்கான காரணத்தைக் கண்டறிய மின்சார வாரியம் தகுந்த ஒரு விசாரணைக் கமிஷனை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நான் ஏன் விசாரணைக் கமிஷன் அமைக்க வேண்டுமென்று கேட்கிறேன் என்றால், அந்தத் திட்டம் தயாரிக்கப்பட்டதிலே தவறு இருக்கிறதா அல்லது திட்டத்தை நிறைவேற்றுகின்ற அதிகாரிகளின்பால் தவறு இருக்கிறதா என்பதைக் கண்டறிய வேண்டும். மின்வாரியக் கவனக் குறைவினால் 60 மெகாவாட் மின்சார இழப்பு ஏற்பட்டது. அவ்வாறு ஏற்படாதவாறு மின்சார வாரியம் தகுந்த கவனத்தை அதில் செலுத்த வேண்டும்.

அடுத்தபடியாக, எல்லாக் கிராமங்களுக்கும் மின்சாரம் வழங்க வேண்டுமென்ற திட்டத்தின் அடிப்படையில் தமிழக சர்க்கார் மின்சார வாரியத்தின் மூலம் மின் இணைப்பு வழங்கிக்கொண்டிருக்

கிறது. அப்படி கிராமங்களுக்கு மின்சாரம் வழங்குவதில் எந்த விதமான ஆட்சேபனையும் கிடையாது. ஆனால் பெருவாரியான அளவில் மின்சார வாரியத்திற்கு நஷ்டம் ஏற்படுகிற வகையில் திட்டங்களை எடுத்துச் செய்வதைத்தான் தவறு என்று நாங்கள் குற்றம் சாட்டுகிறோம். உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்வேன். ஆறு காணி, பத்துக் காணி என்று அழைக்கப்படும் கோதையாறு பக்கத்தில் உள்ள மலைப் பிரதேசத்தில் சில காணிக்காரர்கள் வாழ்ந்து வருகிறார்கள். அந்தக் காணிக்காரர்கள் ஊருக்கு மின்சார இணைப்புக் கொடுக்க ஐந்து லட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கிறது. அவ்வளவு பெரிய தொகை செலவு செய்து நான்கு தெரு விளக்குகள் மட்டுமே போடப்பட்டிருக்கின்றன. தெரு விளக்குகள் போட்டவுடனேயே அந்தக் காணிக்காரர்கள் தங்கள் இல்லத்தை மாற்றி விட்டு இருள் அடைந்த பிரதேசத்திற்கு ஓடிவிட்டார்கள். இருளில் வாழ்ந்து இருளிலேயே மடிகிறவர்கள் காணிக்காரர்கள். ஒளியைக் கண்டவுடன் ஒளிந்து கொண்டார்கள். இப்படித் தேவையில்லாத இடங்களில் எல்லாம் மின்சார வாரியம் பல லட்சக்கணக்கான ரூபாயை வீணாக்கி, விரயமாக்கி இருக்கிறது. இந்த முறையில் மின்சார வாரியம் செயல்படக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

மின்சார வாரியத்தின் தற்போதைய நிதி நிலைமையைப் பார்க்கிற நேரத்தில் மின்வாரியம் திவாலாகக் கூடிய நிலையில் இருந்துகொண்டிருக்கிறது என்று சொல்லக் கேட்டிருக்கிறேன். மாதா, மாதம் ஊழியர்களுக்குச் சம்பளம் கொடுக்கவே கடன் வாங்கிக் கொடுக்க வேண்டிய அளவில் இருக்கிறது. சமீபத்தில் தொழிலாளர்களுக்கு போனஸ் கொடுக்க முடியாமல் கடன் வாங்கிக் கொடுக்கும் மோசமான நிலைமையில் மின் வாரியம் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது.

கழிந்த வருட நிதி நிலை அறிக்கையில் கன்னியாகுமரி சிஸ்டம் ஒன்றை நிறுவப் போவதாக மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த வருட நிதி நிலை அறிக்கையைப் பார்க்கும்போது அந்த சிஸ்டம் ஆரம்பிக்கப்படுவதற்கான எந்த ஒரு சிறு குறிப்பும் இருப்பதாகத் தெரியவில்லை. மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கன்னியாகுமரி சிஸ்டத்தை இந்த ஆண்டில் ஆரம்பிப்பதற்கு எல்லாவித நடவடிக்கைகளையும் எடுத்து உதவுமாறு கேட்டுக்கொள்கிறேன்.





பஞ்சாயத்துக்களுக்குத் தெரு விளக்கு வசதி செய்து கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கையை எழுப்பினால் மின்சார இலாகா பஞ்சாயத்துக்களுக்குச் சொல்லுகின்ற பதில்.' எங்களுக்குக் கம்பிகள் இல்லை, கம்பங்கள் இல்லை, பல்புகள் இல்லை, மின்சார சம்பந்தமான சாதனங்கள் இல்லை' என்ற ஒரே பதிலைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இப்படிச் சொல்லி எவ்வளவு நாள்தான் காலதாமதம் காட்ட முடியும்? ஆகவே, பஞ்சாயத்துக்கள் எங்கெங்கு தெரு விளக்கு போடவேண்டுமென்ற கோரிக்கைகளைக் கொடுத்திருக்கிறார்களோ அங்கெல்லாம் உடனடியாக அதற்குத் தேவையான மின்சார சாதனங்களைக் கொடுத்து வேண்டிய நடவடிக்கைகளை துரிதமாக எடுத்து தெரு விளக்குகள் போட்டுக் கொடுக்க மின் வாரியம் ஆவன செய்யவேண்டும். மின்வெட்டு தீர்ந்தபிறகும்கூட என்னுடைய தொகுதியில் உட்பட்ட சீத்தாபுரம் நகரப் பஞ்சாயத்து, நெய்யூர் நகரப் பஞ்சாயத்து ஆகிய இரண்டு பகுதிகளிலும் இதுவரை தெரு விளக்கு போடக்கூடிய நிலைமை ஏற்படவில்லை. மெட்டீரியல்ஸ் இல்லையென்று சொல்லி அதிகாரிகள் நாட்களை நீட்டிக்கொண்டிருக்கிறார்கள். இந்த நிலைமையை மாற்றியமைக்க வேண்டும்.

பொதுவாக, விவசாயத்துக்கு மின்சார இணைப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியது நம்முடைய முக்கிய கடமை. எங்களுடைய மாவட்டத்தில் குறிப்பாக விவசாயக் கிணறுகள் மிகவும் குறைவு. இருக்கின்ற குறைந்த எண்ணிக்கையுள்ள கிணறுகளுக்குக் கூட மின்சார இணைப்புக் கொடுக்கப்படவில்லை. காரணம் என்ன என்று விளங்கவில்லை. பல ஆண்டுகள் ஆகிவிட்டன. பம்ப் செட்டுகள் எல்லாம் நிறுவப்பட்டு விட்டன. இவற்றுக்கு உடனடியாக மின் இணைப்புக் கொடுக்க மின்சார வாரியம் நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மின்சார இலாகாவிலே பணியாற்றக்கூடிய பட்டதாரி இளநிலை குமாஸ்தாக்களுக்கு 1970-ல் அரசாங்கம் ஒரு உத்தரவு பிறப்பித்து அதில் பட்டதாரி இளநிலை குமாஸ்தாக்களுக்கு ரூ. 150 அடிப்படைச் சம்பளமாக நிர்ணயித்திருந்தது. அதன் அடிப்படையில் அந்த ஊழியர்களுக்கு 1969-ம் ஆண்டிலிருந்து புதிய நிரக்கின்படி சம்பளம் வழங்க வேண்டுமென்று உத்தரவு இருக்கிறது. ஆனால் பல ஆண்டுகளாக அது அமல்படுத்தப்படவில்லை. சட்டப்படியுள்ள சம்பளம், வெயிட்டேஜ் இதுவரை

[திரு. ஏ. பாலையா] [1973 நவம்பர் 21

வழங்கப்படவில்லை. உடனடியாக இதுபற்றி நடவடிக்கை எடுத்து அந்த ஊழியர்களுடைய குறையைப் போக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதுபற்றி நான் பல தடவை மின்சார வாரியத்திற்கு எழுதியிருக்கிறேன். அவர்கள் நடவடிக்கை எடுப்பதாகப் பதில் அனுப்பியிருக்கிறார்கள். சுமார் ஓராண்டுக் காலமாக 'நடவடிக்கையில் இருக்கிறது' என்ற பதிலையே அனுப்பிக் கொண்டிருக்கிறார்களே தவிர, முடிவான ஒரு உத்தரவு இதுநாள்வரையில்லை. சர்க்கார் உத்தரவு போட்டிருந்தும் அவர்களுடைய நியாயமான கோரிக்கைகளுக்கு பரிகாரம் கிடைக்கவில்லை என்பதைப் பார்க்கும்போது எந்த அளவுக்கு மின்சார வாரியம் தன்னுடைய பணியை நடத்திக் கொண்டிருக்கிறது என்பது தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது.

மின்சார வாரியம், மறுபடியும் தமிழகத்தில் மின்சார வெட்டு வாராதவாறு பல்வேறு புதிய திட்டங்களை ஏற்படுத்தி மின் உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

THIRU B. VETKATASWAMY : I thank you, Mr. Chairman, for giving me an opportunity to participate in the discussion on the Annual Financial Statement for 1973-74 and Supplementary financial statement for 1972-73, on the Tamil Nadu Electricity Board. At the outset, I charge this Ministry for its poor and inefficient maintenance of the Electricity Board. For example. if you take the thermal plant at Ennore, it was recently damaged due to defect of some electricity equipment. It is due to poor and bad maintenance and inefficiency of the engineers there. Therefore Government must take proper steps to see that such things will not take place hereafter.

Secondly, I come to the other points. While saying it is inefficient, I shall adduce reasons for the inefficiency. It is because there are so many people, who have been appointed in the Electricity Board due to recommendation of high personages, and who are inexperienced and they do not work properly. It is because of this, the Board is not functioning properly.



1973 நவம்பர் 21] [Thiru B. Venkataswamy]

What is the result? In the rural areas, bills for six months have not been sent to consumers. It is because these people say that they won't prepare more than 20 bills per day per person. So many bills have been retained and they are sent at a stretch. How can the poor people pay all the bills in a lump-sum? If they find any difficulty, they have to go to the office and get endorsement for payments in small portions. But it is the duty of the Board to send the bills in proper time so that people may get the services of the Board properly. In such small things, proper attention should be paid.

[பிற்பகல் 12.30]

Coming to the other point, the power houses are maintained in a miserable way. For example, the full capacity of the Ennore Plant is 330 M.W. But only 75 or 100 M.W. are produced. What is the reason? I request the Hon. Minister to investigate why the plant is maintained in such a miserable way. It should be toned up. While the full capacity of the Basin Bridge Plant is 95 M.W. only 60 or 65 M.W. only is produced. The reason given is that no coal is obtained from North India. There is no use blaming the Centre for everything.

We are now obtaining power from Kerala. We should maintain friendly relations with them. Now they are giving. Supposing they stop, what will be our position? What is the alternative step we have so as to fulfil our demand? Coal should be properly supplied to the plants. There is low productivity because of that. That should be checked up.

Regarding stealing of current, I come to understand that some party people are stealing the current. It should be checked and the Hon. Minister should take proper steps about stealing of electric power...........

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: சட்டமன்ற உறுப்பினர்கள் மன்றத்தில் பேசும்போது சில முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். சொல்லுங்கள் யார் என்று.

* THIRU B. VENKATASWAMY : That is the information I have.........

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: "உங்கள் கட்சியைச் சார்ந்தவர்கள் கரெண்ட் எடுத்தார்கள்" என்று சொல்வது முறையல்ல. தெளிவாகச் சொன்னால் பதில் சொல்லக் காத்துக்கொண்டிருக்கிறோம். பொதுவாக குற்றச்சாட்டு சொல்வது முறையல்ல, மரபல்ல என்று பலமுறை சொல்லப்பட்டிருக்கிறது.

THIRU B. VENKATASWAMY: I will say some people are stealing the current and it may be investigated and such things prevented. That is my submission. (Interruption) Whatever information we have, we are telling in the House......

THIRU M. A. LATHEEF: Sir, he should say the source of his information. While making such charges, the hon. member should say the source of his information. If he substantiates, Government is in duty bound to take proper action against the people concerned.

THIRU B. VENKATASWAMY: I will give the information to the Hon. Minister.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு க. சுப்பு): குறிப்பிட்டு ஒரு குற்றச்சாட்டைச் சொன்னால் பரவாயில்லை. மொத்தமாக கட்சி ஆள்கள் கரெண்ட் திருடியிருக்கிறார்கள் என்று சொல்வது சரியல்ல. ஆகவே, அந்த வார்த்தையை உறுப்பினர் அவர்கள் 'வித்ட்ரா' செய்வது நல்லது.

THIRU B. VENKATASWAMY: I have already withdrawn it and substituted 'some people' I will give the information to the Hon. Minister so that he can take stringent steps against those responsible for the same.

Coming to the next point, there is corruption and it cannot be proved. People are talking about it outside and say that there is lot of corruption in the department. I request the Hon. Minister to see that corruption is put an end to.

Even a few from the ruling party have spoken that there is a lot of delay in giving connection and that there is dissatisfaction among the people. Though they cannot straightaway say that there is corruption, we in the opposition party have to say it. The Government should not take it as charge, but should



take that it is all said in the interest of the public and for the welfare of the Government. I am told that there is a lot of corruption in the department and something must be done. Every year we are talking about it, but nothing is done about it. We do not know what the steps taken are. I hope the Hon. Minister will think of doing something regarding this corruption matter.

I understand that Rs. 1.5 lakhs is spent on workers without any work. I have got information that there is no work, for there are no conductors, poles, etc. There should be proper supply of poles and there should be full work. Otherwise, this amount is wasted.

Regarding the burst in Ennore Thermal Plant, action should be taken against those who are responsible for that.

Regarding rural electrification, I really thank the Ministry for the bold step they have taken to bring electricity to all the villages. But what is the fate now? Nowhere light is burning and there are a lot of complaints. We are representing to authorities, but they say that there is no conductor, there is no bulb and there is no wire. What is the good of investing such a large amount and not getting remuneration? The people also are not satisfied and not happy. Some Panchayat Presidents want to pass a resolution saying that they do not want electric connections at all. For in many villages, for months together there is no current. I can give specific instances also. In Chindachoolam in Thali Block and in Thevarpalli there is no current for four or five months now. Still we are getting money from the panchayats.

Regarding meters, every year we are saying, but no action is taken. The Hon. Minister should look into it. Because we have extended electricity to many villages, they have no money for any other work. We are enhancing the rate also. At least they should be given current properly so that the people will be satisfied.

Regarding power cut, it is a great shock to the people of our State. The entire nation is faced with that problem. But we have a special difficulty. We have been giving pump-sets in our State as no other State has been in the whole of India.

[Thiru B. Venkataswamy] [1973 நவம்பர் 21

For example, we are having more number of pumpsets than in any other place in India. We speak much about green revolution and industrial advancement, but we are not giving current to the industries. Due to non-supply of electricity, many industries are not able to function properly. It has led to labour unrest and labour problem. I understand that nearly 60 to 100 crores of loss has occurred due to electricity shortage. How are we going to recoupe that amount? The Ministry must take action to recoupe the loss by increasing the production by supplying electricity to industries and agriculture.

Coming to the question of giving connection to the pumpsets in villages in Dharmapuri district, I may point out that 10 per cent interest on the loans for ten years is insisted. In our area, the Hon. Minister knows there are ups and downs. Villages are scattered. Such being the case, how can he expect 10 per cent income within ten years. They have to lay the lines for a long distance. Some concession should be shown to such areas. I am not asking for all the areas in the State. There are places where you must reduce the percentage to 5 or 6. I, therefore, request the Hon. Minister to consider this aspect and give us some concession. We talk of socialism. Socialism means lifting of backward areas. Lifting of backward areas and backward districts is the real socialism. I request the Hon. Minister to consider very seriously to uplift such places in Tamil Nadu. Otherwise, they will go still backward.

Now new connections are not given. But we talk much about green revolution. There are cases in which pumpsets have been purchased 5 or 6 months back. I know cases where connections have not been given for more than two years. They say conductors are not available. They say so many things. Recently, I came to know that if they want to get the power connection, they must come to Madras and see the Chief Engineer. How can a ryot or a farmer from a village come all the way to Madras? I, therefore plead that connections to the pumpsets for agricultural purpose should be given more importance.



1973 நவம்பர் 21]

Finally, I want to make some suggestions with regard to line wastage. I understand that if they can fix more number of transformers, the line loss can be prevented. I request the Hon. Minister to take some steps in this direction to prevent line loss. Now the line loss amounts to 17 per cent and the power cut is 15 per cent. If we can do all these things, we can make good the loss.

As regards the Hogenakal Project in Dharmapuri district. the Government can have talks with the Karnataka Government. They can produce more power there. The Government were telling about that scheme for so many years but they have not come out with a definite proposal. I request the Hon. Minister to have talks with the Karnataka Government and see that the Hogenakal Scheme is implemented. There is no use in depending upon the Centre. Recently, we have passed a resolution to have the Second-mine-cut at Neyveli. It will take some more years to do it. I charge this Government that they have not planned properly to meet the power crisis.

Lastly, I request the Hon. Minister to sack corrupt and inefficient persons who were responsible for the muddle and save the country from total collapse due to power cut and also due to economic instability. Thank you, Sir.

*திரு. வா. மை அப்துல் ஜப்பார் :* மாண்புமிகு தலைவரவர்களே, இந்த மின் வாரியத் துறையைப் பற்றி ஒரு சில கருத்துக்களைச் சொல்ல ஆரம்பிக்குமுன் கடந்த பல ஆண்டுகளாக மின் வாரியம், மின்துறை அமைச்சர் அவர்கள் சாதித்த சாதனைகள் பெருமைப் படத்தக்கதாக இருக்கிறது, தெய்வாதீனமாக மனித பலகீனத்தின் காரணமாக ஏற்பட்ட எண்ணூர் சம்பவம் ஒரு கருப்புப் புள்ளியாக ஏதோ சமுத்திரத்தில் பெருங்காயம் கரைத்ததுபோல் இருக்கிறது என்று அளவில் இனி இம்மாதிரி குற்ற ஏற்படாத அளவில் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த ஆண்டு மின்துறை வாரியத்தின் நிதி நிலை அறிக்கை விவாதத்தில் பங்கெடுத்துக்கொண்டு என்னுடைய பள்ளப்பட்டியில் துணைப்பொறியாளர் அலுவலகம் வேண்டுமென்று கேட்டேன். அது இப்போது ஏற்பட்டு விட்டது. அதற்காக அமைச்சர் அவர்

களுக்குப் பாராட்டு தெரிவித்துக்கொள்கிறேன். அதே போல் பரமத்தியில் சப்-ஸ்டேஷன் வேண்டுமென்று கேட்டேன். அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகிறது, அதற்காகவும் என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். அமைச்சர் தன்னுடைய விளக்க அறிக்கையில் நடப்பு ஆண்டில் 639 மெகா வாட் பற்றாக்குறை என்று சொல்லியிருக்கிறார்கள். கடந்த ஆண்டில் இருந்ததை விட நடப்பு ஆண்டில் வெட்டு அதிகமாக இருக்குமோ என்ற அச்சம் ஏற்படுகிறது. இதைப் போக்குவதற்கு அரசு சரியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மின் வெட்டு வந்த நேரத்தில் சிறு சிறு வியாபாரிகள் ஜெனரேட்டரை வைத்துக்கொண்டு தங்களுடைய குறைகளை நீக்கிக் கொண்டார்கள். உதாரணமாக என்னைப் போன்றவர்கள், துணிக் கடைக்காரர்கள், ஜெனரேட்டரை வைத்துக் கொண்டு அதன் மூலமாக நாங்களே மின்சாரம் உற்பத்தி செய்து எங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்து கொண்டோம். ஆனால் ஜெனரேட்டர்கள் போதுமான அளவில் கிடைக்கவில்லை. இப்படி பற்றாக்குறை ஏற்படுகிற நேரத்தில் 3 மடங்கு விலையேற்றி விடுகிறார்கள். ஆகவே, இப்படிப்பட்ட மின் வெட்டு வருவதற்கு முன்னரேயே இந்த ஜெனரேட்டர்களை அதிகமாக தருவிக்கும் வகையில் வியாபாரிகளுக்கு கோட்டா, லைசென்சு போன்றவற்றை வழங்க அரசு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்போது தான் மின் தட்டுப்பாடு வரும் நேரத்தில் ஜெனரேட்டர்களை வைத்துக்கொண்டாவது எங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள முடியும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். இப்போது பெட்ரோல் விலை அதிகமாக ஆகிவிட்டது. அதற்கு பற்றாக்குறையும் வந்துவிட்டது. இதற்கு இந்த அரசு பொறுப்பு இல்லையென்றாலும், ஏதோ ஒரு அரசு இதற்கு பொறுப்பு. ஒரு லிட்டர் விலை 7 பைசா ஏற்றுவதற்கு பதிலாக ஒரு ரூபாய் வரி போட்டு 1.07 பைசா என்று ஏற்றிவிட்டார்கள். இந்த ஜெனரேட்டர்களுக்கு பெட்ரோல் மிகவும் தேவை. ஆகவே, பெட்ரோல் கிடைப்பதற்கும் அரசு வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ண



கடந்த வெட்டின்போது மிக அதிகமாக அளவு பாதிக்கப்பட்டவர்கள் எங்களைப்போன்ற சிறிய டவுன்களில இருந்தவர்கள்தான். திருப்பூரில் கடந்த வெட்டின்போது 6½ மணிக்கு மின்சாரம் கொடுத்து 7½ மணிக்கு நிறுத்தி விட்டார்கள், கலெக்டர் அப்படி உத்தரவு போட்டார்கள் என்று. நிறைமும் 4 மணி நேரம் மின்சாரம் கொடுக்கப்படுகிறது என்று சொன்னால் வியாபாரிகளுக்கும் அந்த 4 மணி நேரம் மின்சாரம் கொடுக்க வேண்டும். எல்லோருக்கும் ஒரே மாதிரியான முறையை மின் வாரியம் அனுஷ்டிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மின்சார வெட்டின்போது மாவு மில்களுக்கு கொடுக்கப்பட்ட அளவு மின்சாரம் குறைக்கப்பட்டது. அதனால் குடும்பப் பெண்கள் உணவுப் பதார்த்தங்களைச் செய்வதற்குத் தேவையானவற்றைக்கூட செய்துகொள்ள முடியவில்லை. ஆகவே, அதற்கென்று தனியாக இணைப்புக் கொடுத்து இப்படிப்பட்ட அத்தியாவசியமான காரியங்களுக்கு எப்போதும் மின்சாரம் தரும் வகையில் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஊராட்சி மன்றங்களில் விளக்கு இருக்கிறதா என்ற சந்தேகம் இருக்கிறது. என்னுடைய வீட்டின் எதிரிலேயே இருக்கும் விளக்கு எரியவில்லை. காரணம் என்னவென்று எனக்குத் தெரியவில்லை. எத்தனையோ முறை சப்-ஸ்டேஷனுக்குப் போன் செய்தும் அதை சரி செய்ய ஆட்கள் வரவில்லை. அவர்கள் மின் விளக்குகளைப் போட்டு விட்டு சினிமா பார்க்கச் சென்று விடுகிறார்கள். ஆகவே, சப்-ஸ்டேஷன்களுக்குப் பக்கத்திலேயே அவர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பெரும் நகரங்களில் இருப்பவர்களுக்கு இந்தக் கஷ்டம் இல்லை. என்னைப் போன்ற சிறு நகரங்களில் இருப்பவர்களுக்குத்தான் இப்படிப்பட்ட இடையூறுகள் ஏற்படுகின்றன. ஆகவே, சிறிய ஊர்களுக்கு அருகாமையில் இருக்கும் சப்-ஸ்டேஷன்களில் உள்ளவர்களுக்காவது வீடுகள் கட்டித்தர வேண்டும். அப்போதுதான் இரவு நேரங்களில் அங்கேயே தங்கி அவர்கள் வேலை பார்க்க ஏதுவாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. வா. மை. அப்துல் ஜப்பார்] [1973 நவம்பர் 21

மின் கம்பங்கள் அனைத்தும் சவுக்கு மரங்களால் ஆனவையாக இருந்து வருகின்றன. இருபது ஆண்டுகளுக்கு முன்பு நடப்பட்ட கம்பங்களாக இருந்துகொண்டிருக்கின்றன. அவைகளை உடனடியாக மாற்றுவதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சில இடங்களில் சப்-ஸ்டேஷன்கள் வெகு தூரத்தில் இருக்கின்றன. ஊரை விட்டு வெளியே அமைந்துள்ளன. அங்கே சென்று பணத்தைக் கட்டிவிட்டு வருவதென்றால் பொது மக்களுக்கு மிகவும் இடைஞ்சலாக இருக்கிறது. நகரத்திற்குள் ஒரு பகுதியிலேயே ஒரு பூத் அல்லது பங்க் மாதிரி ஒரு சிறிய அலுவலகத்தை ஏற்படுத்தி, அங்கே பணம் பெற்றுக்கொள்ளக்கூடிய முறையில் ஏற்பாடு செய்யவேண்டும். அந்த முறையில் நகரத்திற்குள்ளேயே ஓர் இடத்தில் பணத்தை வசூல் செய்யக்கூடிய நிலையை உண்டு பண்ணவேண்டும்.

திருச்சி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மின்வெட்டு வந்தாலே அது ஒரு தனிப் பிரச்னை. ஏனெனில் திருச்சி மாவட்டத்தில் ஹெவி-பாய்லர்ஸ் போன்ற பல பெரிய தொழிற்சாலைகள் அங்கே அமைந்திருக்கின்றன. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இவ்வளவு விகிதாசாரம் என்று மின்சாரத்தைப் பங்கிட்டுக் கொடுக்கும்பொழுது, அதில் பெரும் பகுதி பெரிய தொழிற்சாலைகள் எடுத்துக்கொண்டு விடுகின்றன. ஆகவே, பொதுமக்களாகிய எங்களுக்குக் கிடைக்கக்கூடிய விநியோகம் மிக மிக குறைந்துவிடுகிறது. என்னுடைய ஊரில் ஒரு வாரத்திற்கு இரவு பகலாக மின் விளக்கே இல்லாமல் ஒரு சோதனை நிலை ஏற்பட்டது. நான் காரணம் என்ன என்று விசாரித்ததில் எங்கள் மாவட்டத்தில் உள்ள ஹெவி பாய்லர்ஸ் போன்ற தொழிற்சாலைகள் எடுத்துக்கொண்டு விடுகின்றனவோ என்னவோ டிபார்ட்மெண்டுக்குத்தான் உண்மை தெரியும். எதிர்காலத்திலாவது இம்மாதிரியான குறைகள் ஏற்படாது தவிர்க்கவேண்டும்.

மின் வாரியத்தில் புதிய நியமனங்கள் செய்யும்பொழுது ஒரு விஷயத்தை நிச்சயம் இந்தத் துறை கவனிக்கவேண்டும். நாட்டில் பிற்பட்ட பகுதி, போதுமான தொழிற்சாலைகள் இல்லாத பகுதி,



1973 நவம்பர் 21] [திரு. வா. மை. அப்துல் ஜப்பார்]

மற்ற வகைகளில் முன்னேற்றம் காணாத பகுதி ஆகிய இடங்களிலுள்ள மக்களுக்கு புதிய நியமனங்கள் செய்யும்பொழுது அதிக பிரதிநிதித்துவம் தரவேண்டும். தொழிற்சாலை இல்லாத இடங்களில், வேலை வாய்ப்பு இல்லாத இடங்களில், வேறு தொழில் செய்ய வசதி இல்லாத இடங்களில், விவசாயம் செய்ய வசதி இலலாத இடங்களில் உள்ள மக்களுக்கு, என் தொகுதி போன்று வேறு வேலை வாய்ப்பு இல்லாத மக்களுக்கு, மிகவும் பிற்பட்ட நிலையில் உள்ள இடங்களில் வசிக்கும் மக்களிடமிருந்து மின்சார வாரியத்தில் அதிகமான பேர்களை நியமிக்கவேண்டும். பிற்பட்ட பகுதியில் இருப்பவர்களுக்கு அதிக பிரதிநிதித்துவம், அதிக ஸ்தானங்களை ஏன் ஒதுக்கக் கூடாது? எதிர்காலத்திலாவது இப்படிப்பட்டவர்களுக்கு அதிகமான நியமனங்களைச் செய்து தரவேண்டும். என்னுடைய தொகுதியில் இரண்டு, மூன்று பேர்களுக்குத்தான் கிடைத்திருக்கிறது என்று நினைக்கிறேன். இதைவிட கூடுதலாகக் கிடைக்கும்படி ஏற்பாடு செய்யவேண்டும்.

இந்தத் துறைக்கு வேண்டிய பொருள்கள் பெரும் பகுதி பஞ்சாப் போன்ற மாநிலங்களிலிருந்து தான் அதிகமாக ஆர்டர் கொடுக்கப்பட்டு தருவிக்கப்படுகிறது என்று நான் நினைக்கிறேன். இது ஒரு நல்ல முறையாக எனக்குப் படவில்லை. நமது மாநிலத்திலேயே இம்மாதிரியான உபகரணங்களை உற்பத்தி செய்யக்கூடியவர்களுக்கு ஆக்கம் தரவேண்டும். அவர்கள் மூலம் இந்த உபகரணங்களைப் பெற முயற்சி செய்யவேண்டும். இல்லாத தொழிற்சாலைகளைக்கூட உண்டாக்குவதற்கு இந்த அரசும், வாரியமும் இந்த மாநிலத்திற்குள்ளேயே முதல் இடம் கொடுக்க வேண்டும். ஆரம்ப காலத்தில் அவர்களுடைய பொருள்களின் விலை கூடுதலாக இருந்தாலும் மாநிலத்தில் தொழில் துறையை அபிவிருத்தி செய்வதற்கு ஆக்கமும், ஊக்கமும் தருகிறோம் என்ற முறையில் கூடுதலாக இங்கே இருக்கும் தொழிற்சாலைகளுக்கு ஆர்டர்கள் கொடுக்க வேண்டும். அம்மாதிரி கொஞ்சம் அதிக விலை கொடுத்தால்கூட அதில் தவறு ஒன்றுமில்லை என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

எதிர்காலத்தை கவனத்தில் கொண்டு நிலக்கரி பற்றாக்குறை ஏற்பட்டால் மின்வெட்டு ஏற்படுகிறது என்ற காரணத்தினால், எதிர்காலத்தில் நாம் சற்று ஜாக்கிரதையாக இருக்கவேண்டும் என்று

[திரு. வா. மை. அப்துல் ஜப்பார்] [1973 நவம்பர் 21

நம்முடைய அரசு இதைப்பற்றி சிந்தனை செய்து கப்பல் போக்கு வரத்துக் கழகம் ஒன்றை ஏற்படுத்தினால்தான் இம்மாதிரி நிலக்கரி பற்றாக்குறை ஏற்படக்கூடிய நேரத்தில், நம்முடைய சொந்தக் கப்பலிலேயே நிலக்கரியைக் கொண்டுவந்து, மத்திய அரசையே நம்பி இராமல், மத்திய அரசு மாநில அரசை காலை வாரி விடாது பார்த்துக் கொள்வதற்கு இம்மாதிரி கப்பல் போக்குவரத்துக் கழகம் ஏற்படுத்த வேண்டும் என்று இந்த அரசு துணிவோடு முன் வந்தது மிகவும் அதிகமாக பாராட்டக்கூடியது. அது உண்மையி லேயே போற்றக்கூடிய செயலாகும். கப்பல் போக்குவரத்துக் கழகம் வளர்ந்து பெரிய ஸ்தாபனமாக ஆகவேண்டும் என்று நல்லாசி கூறுகிறேன்.

நண்பர் வெங்கடசாமி அவர்கள் பேசும்பொழுது பேரூராட்சி யில் எரியாத விளக்குகளையும் சேர்த்து தொகையை வசூலித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். நான் ஒரு பேரூ ராட்சி மன்றத்தின் தலைவராக முன்பு இருந்தேன். அப்பொழு தெல்லாம் நானே மாதக் கடைசியில் ஒரு சிப்பந்தியை' அழைத்துக் கொண்டு போய்—தெருவிலே எரியாத விளக்குகள் தான் அதிகமாக இருக்கும். எரியாத விளக்குகளை கணக்கெடுத்து அதற்கான தொகையை 'கிளைம்' செய்துவிடுவேன். அந்த முறையில் மற்ற பேரூராட்சியிலும் செய்யலாம். பேரூராட்சியிலுள்ள தெரு விளக்குகளை ஒழுங்காக எரியும்படிச் செய்யுங்கள். நான் பஞ்சா யத்தைவிட்டு வரும்பொழுது எல்லாமே குழல் விளக்குகளாக இருந்தன. இப்பொழுது எல்லாம் பல்புகளாக இருக்கின்றன. அந்த பல்புகளிலும் 100-க்கு 60 பல்புகள் எரியவில்லை. அந்த துரதிருஷ்டமான நிலைமை மக்கள் கண்ணை உறுத்திக்கொண்டிருக் கிறது. சர்க்கார் சாதனைகள் எவ்வளவோ செய்தாலும்கூட, புதிய புதிய உற்பத்தித் திட்டங்களை உண்டாக்கினாலும் கூட, தனி மனித னுக்கு தெருவிலே நடப்பதுதான் தெரிகிறது. அவன் வெளியே நடப்பதைப் பார்ப்பதில்லை. 45 மெகாவாட், 1000 மெகாவாட் உற்பத்தி செய்யும் திட்டங்களை தனி மனிதர்கள் பார்ப்பதில்லை. தெருவில் வீடுகளுக்கு எதிரே எரியும் விளக்குகளைத்தான் பார்க்கி றார்கள். அவர்கள் மனதில் அந்த நிலைமை கெட்ட எண்ணத்தைத் தான் உண்டாக்குகிறது. கிராமப்புறங்களிலுள்ள விளக்குகள் ஒழுங்காக எரிவதில்தான் இந்தத்துறை அதிகமாக கவனம் செலுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



1973 நவம்பர் 21] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

ஹொகநக்கல் திட்டத்தைப்பற்றி அமைச்சர் அவர்களுடைய அறிக்கையில் ஒரு வார்த்தை கூட காணவில்லை. 1000 மெகாவாட் உற்பத்தி செய்யும் திட்டத்தைப்பற்றி இரண்டு தினங்களுக்கு முன்பு மத்திய சர்க்காரிடம் தீர்மானத்தை எடுத்துக்கொண்டு தூது சென்றிருக்கிறோம். ஹொகநக்கல் திட்டத்தில் 1000 மெகாவாட் உற்பத்தி செய்ய முடியும் என்று சொல்லப்படுகிறது. அதை எப்படி யாவது அண்டை மாநிலமாகிய மைசூரோடு ஒப்பந்தம் செய்து கொண்டு விரைவிலே நிறைவேற்றி வைக்கவேண்டும் என்று கேட்டு கொண்டு, எனக்குப் பேசுவதற்கு அவகாசம் அளித்த தலைவர் அவர் களுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு, அமைகிறேன். வணக்கம்.

**திரு. ஏ. ஆர். சுப்பையா :** தலைவர் அவர்களே, மின்சார வாரி யத்தின் நிதிநிலை அறிக்கையின்மீது சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இந்தத் துறை நன்றாக வளர்ந்திருக்கிறது. கிட்டத்தட்ட 100 கோடி வருமானம் வரக்கூடிய வளர்ச்சியில் சில குறைபாடுகள் இருப்பது இயற்கைதான். அந்தக் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய ஆவன செய்யவேண்டும் என்பதுதான் என் னுடைய கோரிக்கை.

பில் தயாரிக்கப்படுகிறது, கம்ப்யூடர் சிஸ்டத்தில் தயாரிக்கப்படு கிறது. அது ஒரு நல்ல புதிய திட்டம். ஆனால் கம்ப்யூடர்கள் சரியாக செயல்படுகின்றனவா என்பதைப் பார்க்கவேண்டியது அதிகாரிகளுடைய பொறுப்பு. உதாரணமாக என்னிடத்தில் பில் ஒன்று இருக்கிறது. 1-எ சர்வீஸ் என்று கொடுக்கப்பட்டிருக் கிறது. ஆனால் நடைமுறையில் டாரிஃப் இரண்டு இருந்துகொண் டிருக்கிறது. அதைத் திருத்துவது அதிகாரிகளின் பொறுப்பு இல்லையா என்று கேட்கிறேன். அதற்குக் காரணம் நிர்வாகத்தில் இருக்கிற ஊழல்தான் என்று நினைக்கிறேன். அதைவிட முக்கிய மானது மார்ச் மாதத்தில் கொடுக்க வேண்டிய பில் 10-வது மாதத் தில் கொடுக்கப்படுகிறது. பல பேர்கள் இதைப்பற்றி குறை சொல் கிறார்கள். 'பிலேடெட் பேமெண்ட்' என்று சொல்லி ரூ. 1½ அப ராதம் கேட்கிறார்கள். அதைப்பற்றி நேரிடையாகப் போய்க் கேட்டால் தவறுதலாகப் போடப்பட்டிருக்கிறது, அதை எடுத்து விடுகிறோம் என்று கூறித் தப்பப் போகிறார்கள். 'பிலேடெட் பேமெண்டு' என்றால் ஒரு குறிப்பிட்ட தேதியில் கொடுக்கா விட்டால் அபராதம் கட்டவேண்டும். இது வாரியத்திலே

இருக்கிற குறைபாடு. 3-வது மாதத்தில் கொடுக்கப்படவேண்டிய பில் 10-வது மாதத்தில் கொடுக்கப்படுகிறது. இதைக்கொண்டு போய் தனிப்பட்ட எளியோர் அகௌண்ட்ஸ் ஆபீஸில் சொல்லி, பிறகு அதைக் குறைக்கக்கூடிய நிலை இருந்துகொண்டு வருகிறது. அநேகமாக எலக்டிரிஸிடியை சாதாரண மக்கள் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். பம்பு செட்டு வைத்திருப்பவர்களில் எழுத்து வாசனைகூட இல்லாதவர்கள் அநேகம் பேர்கள் இருக்கிறார்கள். அப்படியிருக்கும்பொழுது இம்மாதிரி ஒரு குறைபாட்டை வைத்துக்கொண்டு பில் போட்டு வசூல் செய்வது தவிர்க்கப்பட வேண்டும்.

அதைவிட கேவலம் என்னவென்றால் நான்கு மாதங்களுக்கு சேர்ந்தாற்போல் பில் கொடுக்கப்படுகிறது. ஒரு பக்கத்தில் அதிகாரிகளைக் கேட்டால், நான்கு மாதங்களுக்கும் சேர்த்துக் கட்டவேண்டியதில்லை, தவணை முறையில் கட்டலாம் என்று சொல்கிறார்கள். மாதம்தோறும் கொடுத்தால் போதும் என்று கூறுகிறார்கள். ஆனால், சாதாரணமாக கொடுப்பவர்களிடம் வசூல் செய்து கொள்கிறோம். கொடுக்க முடியாதவர்கள் தவணையில் செலுத்தலாம் என்றும் சொல்கிறார்கள். ஆனால் அதற்குப் போதிய விளம்பரம் செய்யவில்லை. அதை விளம்பரப்படுத்தவேண்டும். ஏனென்றால் 'லேபர் டிரபிள்'. அதனால் நான்கு மாதங்களுக்கு சேர்ந்து பில் அனுப்புகிறோம், மாதந்தோறும் பிரித்து கொடுக்கலாம் என்று சொல்லப்படுகிறது. ஆனால் இதுபற்றி விளம்பரப் படுத்தாததால் ஜனங்கள் கஷ்டப்படுகிறார்கள். அவர்கள் தொந்தரவு செய்யப்படுகிறார்கள். அரசாங்கத்திற்குக் கெட்ட பெயர் ஏற்படுகிறது, இதனால் அரசாங்கத்தின் பேரில் மக்களுக்கு வெறுப்பு ஏற்படுகிறது. இதை நீங்கள் உடனடியாக நிவர்த்தி செய்யவேண்டும். ஏனென்றால்...

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** நான் விளக்கத்திற்காகச் சொல்கிறேன். கடந்த பல நாட்களாக சில இடங்களில் தேக்கம் அதிகமாக இருந்த காரணத்தினால், குறிப்பிட்ட அளவுக்கு மேல் பில்கள் போடாமல் இருந்துவிட்ட காரணத்தினால் இம்மாதிரி கஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அதனால்தான் தாமதம் ஏற்பட்டு நான்கு ஐந்து மாதங்களுக்கு சேர்ந்தாற்போல் பில்கள் போடப்படுகின்றன. அத்தனை மாதங்களுக்கும் சேர்த்து கட்டவேண்டும்





என்பதில்லை, அவரவர்கள் கேட்கக்கூடிய அளவிலே தவணை முறையில் கட்டுவதற்கு அனுமதிக்க வேண்டும் என்று ஏற்கனவே உத்தரவு போடப்பட்டிருக்கிறது என்பதையும் நான் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**திரு. ஏ. ஆர். சுப்பையா :** வரவேற்கிறேன். ஆனால் அந்த பில்லிலேயே ஒரு பிரிண்டெட் நோட்டீஸ் வைத்து விடலாம். நான்கு மாதங்களுக்கு சேர்ந்து பில் போடப்பட்டிருந்தாலும் தவணையில் கொடுத்தால் போதும் என்று அதில் ஒரு நோட்டீஸ் வைத்திருந்தால் எல்லோருக்கும் விஷயம் தெரிந்துவிடும். உத்தரவு போடப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். அந்த உத்தரவை அமுல் நடத்துவது கிடையாது. ஆகவேதான் அதில் ஒரு பிரிண்டெட் நோட்டீஸ் இணைக்கக்கூடிய நிலைமையை ஏற்படுத்தி விட்டால். இந்தக் குறைபாடு ஏற்படாது.

[பிற்பகல் 1.00]

அடுத்தபடியாக, வோல்ட்டேஜ் ட்ராப் பற்றியது. 1972-லே இருந்து இது சொல்லப்பட்டு வருகிறது. நீங்களே அதை ஒப்புக் கொண்டிருக்கிறீர்கள், உண்மைதான் என்று. அதற்கு அதிகமாக ட்ரான்ஸ்பார்மர்ஸ் போடப்படும் என்று 72-லேயே உறுதி கொடுத்திருக்கிறீர்கள். ஆனால் இன்றைக்கும் அந்த குறைபாடு இருந்து கொண்டிருக்கிறது. ஏதோ ஒரு சில இடங்களில் போட்டிருக்கிறார்கள். முன்பு இருந்ததைவிட இப்போது ட்ரான்ஸ்பார்மர்களில் இரண்டு மடங்கு லோடு அதிகமாகியிருக்கிறது. ஆகையால் மோட்டார்கள் ஃப்யூசாகிவிடுகின்றன. ஒரு எளியவன் ஒரு மோட்டார் வைத்திருந்தால், அது இரண்டு மாதத்திற்கு ஒரு முறை ப்யூஸாகி விட்டால் அவனுடைய நிலைமை என்னவாகும்? இது தவிர வரி வேறு அவன் கட்ட வேண்டும். ஆகையால் எங்கெல்லாம் ட்ரான்ஸ்பார்மர்ஸ் போடவேண்டுமோ அங்கெல்லாம் உடனடியாக போடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, டவுனுக்கு அப்பால் இருக்கிற பகுதிகளில் காண்ட் தெஃப்ட் நடக்கிறது. இதை உடனடியாக நிவர்த்தி செய்ய வேண்டும். மீட்டரிலும் குறைகள் இருக்கின்றன. இப்போது இருக்கின்ற முறைப்படி காண்ட் தெஃப்ட் நடக்கிறது என்று கம்பிளெண்ட் வந்தால்தான் நீங்கள் போய் பார்த்து, நடவ

சில ஜெனரேட்டர்கள் வெளிநாட்டிலிருந்து வரவேண்டியிருக்கிறது. அது 'பாரின் எக்சேஞ்சை' பொறுத்திருக்கிறது. ஆகவே, டில்லியில் முறையிட்டு, எல்லோருக்கும் வெளிநாட்டிலிருந்து ஜெனரேட்டர் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

அது தவிர, பம்புசெட் லோடு 150 வாட்ஸ் என்று வைத்திருக்கிறார்கள். ஆனால் அதிலிருந்து வேறு எந்த காரியத்திற்கும் கரண்ட் எடுக்கக்கூடாது என்று சொல்கிறார்கள். அது கூடாது. 150 வாட்சுக்கு உட்பட்டு, அதை எப்படி வேண்டுமானாலும் பயன் படுத்திக்கொள்ள அனுமதிக்க வேண்டும். குறிப்பாக அந்த பம்ப் செட் வைத்திருக்கிறது குடியானவன் ஃபார்ம் ஹவுசுக்கு அதிலிருந்து கரண்ட் எடுத்துச் செல்வதற்கு தடை இருக்கக்கூடாது. 150 வாட்லை எப்படி வேண்டுமானாலும் பயன்படுத்திக் கொள்ளட்டும் என்று விட்டுவிடவேண்டும்.

அடுத்தபடியாக என்னுடைய தொகுதியைப்பற்றி ஒன்றைச் சொல்லவேண்டும். கடையநல்லூரில் ஒரு சப் ஸ்டேஷன் வேண்டுமென்று எழுதி அனுப்பியிருக்கிறார்கள். பணம் இல்லை என்று இத்திட்டத்தை ஒத்தி வைத்திருக்கிறார்கள். டெக்னிக்கல் கிரவுண்டில், ஓவர் லோடு காரணமாக மோட்டார் ஃப்யூஸ் ஆகிவிடாமல் இருப்பதற்காகத்தான் சப் ஸ்டேஷன் வைக்கிறோம். ஆகவே பணம் இல்லை என்று அதை நிறுத்திவிடக் கூடாது. அங்கே விரைவிலேயே ஒரு சப் ஸ்டேஷனை அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு ஒரு யோசனையை தெரிவிக்க விரும்புகிறேன். தமிழ்நாடு, கேரளா, மைசூர் ஆகிய மாநிலங்களுக்கு மொத்தமாக ஒரு இணைப்புத் திட்டத்தை—எலெக்ட்ரிக் கிரிட்—உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, மின்சார வாரியத்தின் 15-வது ஆண்டு நிர்வாக அறிக்கை பற்றியும், மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கை பற்றியும் ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.



மின்சார வாரியத்தின் 15-வது ஆண்டு நிர்வாக அறிக்கையைத் திறந்தேன். திறந்தவுடனே தோற்றுவாய் தலைகீழாக இருக்கிறது. முதல் பக்கமே தலைகீழாக இருக்கிறது. ஆகவே, நிர்வாகமும் அப்படித்தான் இருக்கிறது என்பதை நிர்வாக அறிக்கை தெரிவிக்கிறது என்று நான் எண்ணுகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குக் கொடுத்த அறிக்கையில் மட்டும் அப்படித் தலைகீழாக இல்லை எல்லோரிடமும் அப்படித்தான் இருக்கிறது.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** எதிர்கட்சிக்காரர்களுக்குக் கொடுத்ததுதான் இப்படி இருக்கிறது என்று நினைத்தேன். எல்லாமே இப்படித்தான் இருக்கிறது என்று சொல்கிறார்கள். ஆக, மின்சார வாரியத்தின் நிர்வாகமே இப்படி தலைகீழாகத்தான் இருக்கிறது என்பதை இந்த நிர்வாக அறிக்கை கூறுவதாக நான் நினைக்கிறேன். மின்சார இலாகா ஒரு காலத்திலே தமிழ்நாட்டுக்குப் பெருமை தேடித் தந்தது. இந்தியாவிலே உள்ள பிற மாநிலங்கள் எல்லாம் பாராட்டக் கூடிய அளவுக்கு முன்னேற்றம் அடைந்த இலாகாவாக இந்த மின்சார இலாகா விளங்கியது. ஆனால் இன்றைக்கு அதன் நிலைமை என்ன ? 15 ஆண்டுகளில் எந்த ஒரு ஆண்டும் கண்டிராதபடி 75 சதவிகிதம் வெட்டைக் கொண்டு வந்து தமிழகத்தை இருளில் ஆழ்த்திவிட்டு மின்சாரத்தை கள்ளச் சந்தையில் விற்கின்ற அளவுக்கு ஊழல் புகாரைக் கிளப்பிவிட்டீர்கள். இது எவ்வளவு பொறுப்பற்ற செயல் ?

**திரு. நா. வீராசாமி :** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். கள்ளச் சந்தையில் மின்சாரத்தை விற்கக்கூடிய அளவுக்கு என்பதாகப் பேசுகிறார்கள். கள்ளச்சந்தையில் எவ்வளவு விற்றார்கள், யாருக்கு விற்றார்கள் ? அதைச் சொல்லாமல் அரசாங்கத்தின்மீது வீண் பழி சுமத்துவது நல்லதல்ல.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** இது பல முறை இந்தச் சட்டப் பேரவையிலேயே பேசப்பட்டிருக்கிறது, நீங்கள் உங்கள் கட்சியில் இருந்து பேசும்போது பதில் சொல்லுங்கள். ஒவ்வொன்றுக்கும் ஆதாரமோ, கோர்ட் ஆர்டரோ கொண்டுவந்து கொடுக்க முடியாது. எங்கே பற்றுக்குறை இருக்கிறதோ அங்கே கள்ளச்சந்தை வந்துவிடும். ஆகவே இன்றைக்கு மின்சார வாரியத்தின் நிதிநிலை

சில ஜெனரேட்டர்கள் வெளிநாட்டிலிருந்து வரவேண்டியிருக்கிறது. அது 'பாரின் எக்சேஞ்சை' பொறுத்திருக்கிறது. ஆகவே, டில்லியில் முறையிட்டு, எல்லோருக்கும் வெளிநாட்டிலிருந்து ஜெனரேட்டர் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

அது தவிர, பம்புசெட் லோடு 150 வாட்ஸ் என்று வைத்திருக்கிறார்கள். ஆனால் அதிலிருந்து வேறு எந்த காரியத்திற்கும் கரண்ட் எடுக்கக்கூடாது என்று சொல்கிறார்கள். அது கூடாது. 150 வாட்சுக்கு உட்பட்டு, அதை எப்படி வேண்டுமானாலும் பயன்படுத்திக்கொள்ள அனுமதிக்க வேண்டும். குறிப்பாக அந்த பம்ப் செட் வைத்திருக்கிறது குடியானவன் ஃபார்ம் ஹவுசுக்கு அதிலிருந்து கரண்ட் எடுத்துச் செல்வதற்கு தடை இருக்கக்கூடாது. 150 வாட்ஸை எப்படி வேண்டுமானாலும் பயன்படுத்திக் கொள்ளட்டும் என்று விட்டுவிடவேண்டும்.

அடுத்தபடியாக என்னுடைய தொகுதியைப்பற்றி ஒன்றைச் சொல்லவேண்டும். கடையநல்லூரில் ஒரு சப் ஸ்டேஷன் வேண்டுமென்று எழுதி அனுப்பியிருக்கிறார்கள். பணம் இல்லை என்று இத்திட்டத்தை ஒத்தி வைத்திருக்கிறார்கள். டெக்னிக்கல் கிரவுண்டில், ஓவர் லோடு காரணமாக மோட்டார் ஃப்யூஸ் ஆகிவிடாமல் இருப்பதற்காகத்தான் சப் ஸ்டேஷன் வைக்கிறோம். ஆகவே பணம் இல்லை என்று அதை நிறுத்திவிடக் கூடாது. அங்கே விரைவிலேயே ஒரு சப் ஸ்டேஷனை அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு ஒரு யோசனையை தெரிவிக்க விரும்புகிறேன். தமிழ்நாடு, கேரளா, மைசூர் ஆகிய மாநிலங்களுக்கு மொத்தமாக ஒரு இணைப்புத் திட்டத்தை—எலெக்ட்ரிக் கிரிட்—உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, மின்சார வாரியத்தின் 15-வது ஆண்டு நிர்வாக அறிக்கை பற்றியும், மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கை பற்றியும் ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.



மின்சார வாரியத்தின் 15-வது ஆண்டு நிர்வாக அறிக்கையைத் திறந்தேன். திறந்தவுடனே தோற்றுவாய் தலைகீழாக இருக்கிறது. முதல் பக்கமே தலைகீழாக இருக்கிறது. ஆகவே, நிர்வாகமும் அப்படித்தான் இருக்கிறது என்பதை நிர்வாக அறிக்கை தெரிவிக்கிறது என்று நான் எண்ணுகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குக் கொடுத்த அறிக்கையில் மட்டும் அப்படித் தலைகீழாக இல்லை எல்லோரிடமும் அப்படித்தான் இருக்கிறது.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** எதிர்கட்சிக்காரர்களுக்குக் கொடுத்ததுதான் இப்படி இருக்கிறது என்று நினைத்தேன். எல்லாமே இப்படித்தான் இருக்கிறது என்று சொல்கிறார்கள். ஆக, மின்சார வாரியத்தின் நிர்வாகமே இப்படி தலைகீழாகத்தான் இருக்கிறது என்பதை இந்த நிர்வாக அறிக்கை கூறுவதாக நான் நினைக்கிறேன். மின்சார இலாகா ஒரு காலத்திலே தமிழ்நாட்டுக்குப் பெருமை தேடித் தந்தது. இந்தியாவிலே உள்ள பிற மாநிலங்கள் எல்லாம் பாராட்டக் கூடிய அளவுக்கு முன்னேற்றம் அடைந்த இலாகாவாக இந்த மின்சார இலாகா விளங்கியது. ஆனால் இன்றைக்கு அதன் நிலைமை என்ன ? 15 ஆண்டுகளில் எந்த ஒரு ஆண்டும் கண்டிராதபடி 75 சதவிகிதம் வெட்டைக் கொண்டு வந்து தமிழகத்தை இருளில் ஆழ்த்திவிட்டு மின்சாரத்தை கள்ளச் சந்தையில் விற்கின்ற அளவுக்கு ஊழல் புகாரைக் கிளப்பிவிட்டீர்கள். இது எவ்வளவு பொறுப்பற்ற செயல்?

**திரு. நா. வீராசாமி :** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். கள்ளச் சந்தையில் மின்சாரத்தை விற்கக்கூடிய அளவுக்கு என்பதாகப் பேசுகிறார்கள். கள்ளச்சந்தையில் எவ்வளவு விற்றார்கள், யாருக்கு விற்றார்கள் ? அதைச் சொல்லாமல் அரசாங்கத்தின்மீது வீண் பழி சுமத்துவது நல்லதல்ல.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** இது பல முறை இந்தப் சட்டப் பேரவையிலேயே பேசப்பட்டிருக்கிறது, நீங்கள் உங்கள் கட்சியில் இருந்து பேசும்போது பதில் சொல்லுங்கள். ஒவ்வொன்றுக்கும் ஆதாரமோ, கோர்ட் ஆர்டரோ கொண்டுவந்து கொடுக்க முடியாது. எங்கே பற்றாக்குறை இருக்கிறதோ அங்கே கள்ளச்சந்தை வந்து விடும். ஆகவே இன்றைக்கு மின்சார வாரியத்தின் நிதிநிலை

அறிக்கைப்பற்றி விவாதிக்கிறபோது, இதுவரை இல்லாத அளவுக்கு மின்சார வெட்டு ஏற்பட்டதற்கு முழுக்க முழுக்க இந்த அரசாங்கத்தின் திறமைக் குறைவுதான் காரணம் என்பதை எடுத்துக் காட்ட விரும்புகிறேன். பருவ மழை தவறிய காரணத்தினால் மின் உற்பத்தி பாதிக்கப்பட்டது என்றாலும் 36 சதவிகிதத்திற்கு மேல் மின்சார வெட்டைக் கொண்டு வந்திருக்க வேண்டியதில்லை என்று பத்திரிகைகளில் நிபுணர்கள் எழுதியதை எல்லாம் பார்த்தோம். 75 சதவிகிதம் வெட்டைக் கொண்டுவந்து, சொந்தக் காரணங்களுக்காக, கள்ளச் சந்தை ஏற்படுகிற நிலையைத்தான் செய்தீர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** விளக்கத்திற்காகக் கேட்கிறேன். 36 சதவிகிதம் வெட்டு போதும் என்று நிபுணர்கள் எழுதியதாகச் சொன்னார்கள். அப்படி எழுதிய நிபுணர்களில் ஒரு நிபுணர் யார் என்கிற பெயரைச் சொன்னால் நல்லது.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** எக்கனாமிஸ்ட் பத்திரிகையில் வந்திருந்தது. அதைச் சட்டமன்றத்தில் சொன்னதற்குக்கூட திரு. மாதவன் அவர்கள் அப்படி இல்லை, இப்படி என்பதாக சொந்த விளக்கம் கொடுத்தார்கள். டெல்லி வரை அடிபட்ட விஷயம்தான் இது. அந்தத் துறை பொறுப்பை ஏற்று இருக்கிற அமைச்சர் அவர்களுக்கே அதைப்பற்றி யார் என்ன எழுதுகிறார்கள் என்று அவ்வப்போது பார்க்கிற அக்கறை இருக்கவேண்டும்.

ஊழல் குற்றங்களுக்கு, கள்ளச்சந்தைக்கு இடமளிக்கிற வகையில் 75 சதவிகிதம் வெட்டை அனாவசியமாகக் கொண்டுவந்துவிட்டு கேட்டால் கரி இல்லை, தண்ணீர் இல்லை என்று பதில் சொன்னார்களே தவிர அதன் விளைவு என்ன? தமிழகத்தில் 100 கோடி அளவுக்கு தாக்கப்பட்டிருக்கிறது. உற்பத்தி குறைந்து, விலைவாசி ஏறி, பற்றாக்குறையினால் தமிழகம் தாக்கப்பட்டிருக்கிறது.

அதுவும் மின்சாரம் எத்தகையது? லெனின் சொன்னானே, நாகரீக உலகத்திற்கு திறவுகோலே மின்சாரம் தான் என்றானே, அந்தத் திறவுகோல் துருப்பிடிக்க, தமிழக வளர்ச்சி பாதிக்கப்படுகிற நிலைக்கு நீங்கள் பின்னே இழுத்துத் தள்ளினீர்கள். உங்களைப் பெருக்கிக்கொண்டிருக்கலாம். உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்று திட்டம் போட்டீர்களா? மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறோம் என்கிறீர்களே, எப்போது அனுப்பினீர்கள்?





ஐந்தாவது திட்டத்திற்கு. ஏன் நான்காவது திட்டத்திலேயே சிலவற்றைச் சேர்க்க முன்கூட்டி திட்டமிடவில்லை? அப்படிப்பட்ட நடவடிக்கையை நீங்கள் எடுத்திருந்தால் கட்டாயமாக தமிழகம் இந்த அவதிநிலைக்குப் போயிருக்காது என்று சொல்ல ஆசைப்படுகிறேன்.

எண்ணூர் தர்மல் ஸ்டேஷனை 6 மாதத்தில் காங்கிரஸ் ஆட்சியில் வாங்கினோம். 'எங்களைக் காட்டிலும் தைரியம் படைத்தவர்கள் கிடையாது, எங்களைக் காட்டிலும் மத்திய ஆட்சியை எதிர்க்கின்றவர்கள் கிடையாது, எங்களைக் காட்டிலும் மாநில சுயாட்சிக் கோரிக்கையை முன்வைத்து மத்திய அரசோடு போரிடுகிறவர்கள் கிடையாது" என்று சொல்கிற நீங்கள், கேட்டால் மத்திய அரசுக்கு எழுதியிருக்கிறோம் என்கிறீர்கள். நீங்கள் என்ன தபாலாபீஸ் வேலையா செய்கிறீர்கள்? நம்முடைய மாநில வளர்ச்சியை கருத்தில் கொண்டு டெல்லிக்குப் போய் ஆணித்தரமாக எடுத்துச் சொல்லி, அடித்துப் பெற்றுவரவேண்டாமா? உங்களுக்குத் திறமை இல்லை. டெல்லிக்கு எழுதியிருக்கிறோம், எழுதியிருக்கிறோம் என்று சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள். உங்களது திறமைக் குறைவினால் நாளைக்கு என்ன வருமோ, எந்தக் கள்ளச்சந்தை பெருகுமோ என்கிற கவலை நிலைக்கு கொண்டுவந்துவிட்டீர்கள்.

அன்றைக்கு நீங்கள்தான் மின்சார இலாக்காவில் ஊழல் ஏற்பட்டது என்று சொன்னீர்கள். அதுவும் இன்றைக்கு முதலமைச்சராக இருக்கக்கூடியவர்தான் அன்றைக்கு எதிர்க்கட்சியில் இருந்தபோது எருக்கஞ்சேரி ஊழலைப்பற்றிச் சொன்னார்கள். உடனே பொதுக் கணக்காய்வுக் குழுவையே அதுபற்றி விசாரிக்க உத்தரவிட்டார்கள். நானும் அதில் ஒரு அங்கத்தினராக இருந்து பொறுப்பேற்று அதற்குக் காரணமானவர்கள் யார் யார் என்றெல்லாம் எழுதிக் கொடுத்தோமே. இன்றைக்கு அந்த அறிக்கையின் மீது என்ன நடவடிக்கை எடுத்தீர்கள்? யாரைப் பிடித்திருக்கிறீர்கள்? அதைப்பற்றி ஏதாவது ஒரு வார்த்தை உண்டா? நீங்களே எழுப்பிய ஊழலுக்கு தலைவிதி இல்லை என்பதை எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, ஒரு சீப் என்ஜினியர் இருந்த இடத்தில் இப்போது 5 சீப் என்ஜினியர்களைப் போட்டிருக்கிறீர்கள். உங்க ளுக்கு வேண்டியவர்களைப் போடவேண்டும் என்று எல்லோரையும் தூக்கிப் போட்டீர்கள். ஒரு சீப் என்ஜினியர் இருந்தபோது மாதா மாதம் பில் வந்தது என்றால் இப்போது 5 மாதங்களாகப் பில் வரவில்லை. இதுதானா நிர்வாகத் திறனை நீங்கள் அதிகப்படுத்தி யிருப்பதற்கு ஆதாரம்? வேண்டியவர்களைத் தூக்கிப்போடு, நிர்வாகச் செலவு அதிகரிக்கட்டும், வரியைப் போடலாம், வசதியை நமக்குப் பெருக்கிக்கொள்ளலாம் என்ற அடிப்படையில்தான் நீங்கள் செயல்படுகிறீர்கள்.

எண்ணூர் ப்ளாண்டைப் பொறுத்தவரைதான் எல்லாவற்றையும் காண்டிராக்டுக்கே விட்டுவிட்டீர்கள். அங்கே எதற்கு 11 எக்சிக் யூடிவ் என்ஜினியர்கள்? வேலையே இல்லாத இடத்தில் ஒரு சூப்பி ரண்டெண்டிங் என்ஜினியர். இன்றைக்கு 40 ஆயிரம், 50 ஆயிரம் என்று நிரந்தரமாக்கப்படாத தொழிலாளிகள் என்பதாக ஐந்தாறு வருஷங்களுக்குமேல் உள்ளவர்கள் இருக்கிறார்கள் என்கிறீர்கள். இந்த காஷுவல் லேபரர்ஸ் என்கிற அடிப்படையில் கார்ப்பரேஷ னில் நடந்துள்ள பயங்கரமான மோசடி வெட்ட வெளிச்சமாகி யிருக்கிறது. ஊழலுக்குக் கைப்பிடியாகத்தானே இப்படி வைத்துக்கொண்டிருக்கிறீர்கள்? பல்லாண்டுகளாக இப்படி தற் காலிகமாகவே வைத்திருப்பதன் மர்மம் என்ன?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** இந்த அறிக்கையிலேயே விவரமாகச் சொல்லியிருக்கிறோம் நான்கு வருஷங்களுக்கு மேற் பட்டவர்கள் எல்லாம் நிரந்தரமாக்கப்பட்டுவிட்டார்கள்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** நிரந்தரமாக்கப்படுவது மாத்திரம் அல்ல. மற்றவர்களுக்கு ஐடென்டிடி கார்டு கொடுக்கப் படவேண்டும். மஸ்டர் ரோல் ப்ராடு வராமல் இருக்கத்தக்க நட வடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

'All the Casual Labourers must be given an identity card எதற்காக இப்படி ஆயிரக்கணக்கில் காஷ்வல் லேபரர்ஸ் என்று வைத்துக் கொள்ளவேண்டும்? ஏதோ ப்ராஜெக்ட் ஒர்க்ஸ் இருக் கிறது என்றால் சரி. அப்படியில்லாது இதுபோல நாற்பதாயிரம், ஐம்பதாயிரம் என்பதாக எல்லாம் காஷ்வல் லேபரர்ஸ் என்று காட்டப்படுவது, பொதுப் பணம் கொள்ளை அடிக்கப் படுவதைத் தவிர வேறு ஒன்றும் இல்லை.





அதற்கப்புறம் எண்ணூரில் ஒரு யூனிட் சாம்பலானதே, அதைப் பற்றி விசாரிக்க என்க்வயரி கமிஷன் போட்டீர்களே, அது எரிந்து சாம்பலானதற்குக் காரணம் என்ன, அதற்கு யார் பொறுப்பு? ஏதாவது அறிக்கை கொடுத்தார்களா? அது என்ன ஆயிற்று? ஒருகோடி செலவில் எண்ணூரில் சாண்ட் பம்பு போட்டீர்களே, அது மணலை இறைப்பதற்குப் பதிலாக தண்ணீரை இறைத்ததே, அந்த பம்பை சப்ளை செய்தவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுத் தீர்கள்? நஷ்ட ஈடு கோரினீர்களா? இன்னும் அங்கே ட்ரட்ஜர் தேவை என்றால் எத்தனையோ செலவுடன் சொந்தமாகவே ஒன்று வாங்கியிருக்கலாம். நாள் வாடகைக்கு பல்லாயிரக்கணக்கான ரூபாய்களை எதற்காக அங்கே செலவிட்டுக்கொண்டிருக்கவேண்டும்? எவ்வளவோ கடன் இருக்கிறது. கடனோடு கடனாக இதையும் வாங்கி விடுங்கள். இதற்கென்று தனியாக ஒரு ஆளுக்கு என் லாபத்தைக் கொடுக்க வேண்டுமென்று எனக்குப் புரியவில்லை. இவ்வளவு பெரிய திட்டத்தை வைத்து வேலை செய்கின்ற நீங்கள் உடனடியாக இதற்கு பரிகாரம் தேட வேண்டும். அதைப்பற்றி யோசித்து ஒரு வழி காண வேண்டும்.

அடுத்து, மின்சாரப் பற்றாக்குறை, ஆகவே மின்வெட்டு என்று நீங்கள் சொல்கிறீர்கள். இன்றைக்கு 15 சதவிகிதம் வெட்டை அவசியமாக ஏற்படுத்தியிருக்கிறீர்கள். எதற்காக 15 சதவீதம் மின்வெட்டு? நீங்கள் வெட்டு என்று சொன்னதும் அவரவர்கள் எனக்கு மின்சாரம் வேண்டும், அவனுக்கு வேண்டுமென்று இங்கே வந்து கூழக்கூடிய நிலை இருக்கிறது. அதை வழங்குவதிலே விருப்பு வெறுப்பைக் காட்டுவது, அதிலே பாரபட்சம் காட்டுவது, வேண்டியவனுக்கு ஒரு சட்டம், வேண்டாதவனுக்கு ஒரு சட்டம், இதைப்பற்றி இந்த சட்டமன்றத்திலேயே எடுத்துக் கூறினோம். சவுத் இந்தியா மில் ஓனர்ஸ் அசோசியேஷன் மின்சாரம் வேண்டு மென்றால் அவர்களுக்கு மின்சாரம் வழங்கப்படுகிறது, தமிழ்நாடு மில் ஓனர்ஸ் அசோசியேஷன் மின்சாரம் வேண்டுமென்றால் அவர் களுக்கு மின்சாரம் இல்லை. இதைப்பற்றி இங்கே கேட்டால், பணக்காரர்களுக்காக வாதாடுகிறீர்களா என்று கேட்கிறீர்கள்.

[திருமதி த. ந. அனந்தநாயகி] [1973 நவம்பர் 21

அப்படியென்றால் சவுத் இந்தியா மில் ஓனர்ஸ் அசோசியேஷனில் உள்ளவர்களெல்லாம் ஏழைகளா? தமிழ்நாடு மில் ஓனர்ஸ் அசோசியேஷனில் உள்ளவர்கள் மட்டும்தான் முதலாளிகளா? அந்த முதலாளிகளுக்குக் கொடுக்கும்போது, ஏன் இந்த முதலாளிகளுக்குக் கொடுக்கக்கூடாது? இருவரும் பணக்காரர்கள்தான். கேட்டால் வழக்குப் போட்டார்கள் என்று சொல்கிறார்கள். வழக்குப் போட்டார்கள் என்று கொடுக்காமல் இருப்பது தவறு. வழக்கு போட்டால் என்ன? யாரும் எந்தச் சட்டத்தையும் எதிர்த்து தனக்கு நீதி வேண்டுமென்று வழக்கு மன்றத்தில் வாதாடுவது நியாயம். அதற்கு உரிமையுமுண்டு. அதை யாரும் தடுக்க முடியாது. அதை யாரும் சர்வாதிகாரத்தாலே புறக்கணித்துவிட முடியாது, அமித்திவிட முடியாது, எச்சரித்து நிறுத்திவிட முடியாது, பயமுறுத்தி நிறுத்திவிட முடியாது. சலுகையை வைத்து காரியங்களைச் சாதிக்க வேண்டுமென்று நினைக்கிறீர்கள். நியாயப்படி காரியங்களைச் செய்ய வேண்டுமென்ற எண்ணம் உங்களுக்குக் கிடையாது. வழக்கு மன்றத்தில் என்ன சொன்னார்கள்? அரசாங்கம் செய்தது தவறு என்று சொன்னார்கள். வழக்கு மன்றம் தவறு என்று சொல்லக்கூடிய அளவிலே பாரபட்சம் காட்டுகிறீர்கள் என்பதை இதே சபையிலே எடுத்துக் கூறி இருக்கிறோம். அப்படி இருக்கும்போது, இல்லாத பற்றாக்குறையை நீங்கள் வைத்துக்கொண்டு 15 சதவிகிதம் வெட்டு கொண்டுவந்து, அது போதாது என்று எசன்ஷியல்சுக்கு 10 சதவிகிதம் வெட்டு என்று கொண்டு வந்திருக்கிறீர்கள். இது எவ்வளவு கொடுமை? அதற்கு வெட்டு வரலாமா? மிக முக்கியமானது என்றுதானே எசன்சியல்ஸ் என்று சொல்லுகிறோம். அதற்குக்கூட 10 சதவிகிதம் வெட்டு கொண்டு வரவேண்டுமென்று மின்சார இலாகா கூறினால் அதற்கு என்ன காரணம்? யார் பொறுப்பு? நிர்வாகம் எப்படி இருக்கிறது?

உங்கள் கட்சி அங்கத்தினரே சொன்னார். ரிப்பன் மாளிகை ஊழலைக் காட்டிலும் மின்சார இலாகா ஊழல் திடுக்கிட வைக்கிறது. It gave us a shock. என்று ஆளும் கட்சி உறுப்பினரே கூறுகிறார். ஊழல் மலிந்து விட்டது, மின்சார வாரியத்தை கலைத்துவிடு என்று அவர்கள் கட்சி உறுப்பினரே கூறக்கூடிய அளவுக்கு . . .



1973 நவம்பர் 21]

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்):** தலைவர் அவர்களே, கனம் அம்மையார் அவர்கள் தவறாகப் புரிந்துகொண்டார்கள். மின்சார இலாகாவிலே ஊழல் மலிந்திருக்கிறது என்று நான் சொல்லவில்லை. அதைக் கலைத்து விடுங்கள் என்று நான் சொல்லவில்லை. அவர்கள் தவறாகப் புரிந்துகொண்டு பேசுகிறார்கள் என்று நான் நினைக்கிறேன். மின்சார இலாகாவிலே, வசூலிக்கப்பட வேண்டிய ரூ. 8 கோடி, ரூ. 10 கோடி வசூலிக்கப்படாமல் இருக்கிறது. அதற்காக மிகத் தைரியமாக வசூலிக்க வேண்டும். கார்ப்பரேஷன் விவகாரத்திலே எடுத்த முடிவு மாதிரி, தைரியமாக இதிலேயும் முடிவு எடுக்கவேண்டுமென்று தான் சொன்னேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** அவர் பேசியதை செய்தித்தாளிலேதான் பார்த்தேன்—படித்தேன். ஒரே ஒரு தைரியமான சட்டசபை உறுப்பினர் எவ்வளவு பாராட்டுக்குரிய விஷயத்தைச் சொல்லியிருக்கிறார் என்ற எண்ணத்தோடு படித்தேன். அந்த தைரியம் இப்பொழுது இல்லாமல் போய்விட்டதே என்று . . .

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிகுப்பம்):** அம்மையார் அவர்கள், சட்டமன்றத்திலே என்னால் பேசப்பட்டதை லைப்ரரியிலே படித்து விட்டுப் பிறகு பேசினால் நல்லது. பத்திரிகையிலே வந்தது என்று கூறுகிறார்கள். அதைப்பற்றி நான் சொன்னதற்குப் பிறகும் அவ்வாறு பேசுவது முறையல்ல.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** பத்திரிகையிலே வந்தது தவறு என்றால் நீங்கள் மறுப்பு கொடுத்திருக்கலாம். எல்லோருடைய பேச்சுக்களையும் சட்டசபையிலே கேட்டுக்கொண்டிருக்க முடியாது. பத்திரிகையில் பார்க்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரே ஒரு எம்.எல்.ஏ. என்று நீங்கள் சொல்லி, மற்ற எம்.எல்.ஏ.-க்கள் தைரியமற்றவர்களா என்ற பிரச்சினை எழும்பி, அத்துடன் பத்திரிகையில் அவ்வாறு போட்டிருக்கிறார்கள் என்று நீங்கள் சொல்லி, பத்திரிகைகளையும் விவாதத்திற்கு இழுப்பது வேண்டாம்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** நண்பர் கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்கு சொல்லிக்கொள்கிறேன், அம்மையார் அவர்கள் பத்திரிகையை பார்க்கின்றவர்கள். சட்டசபை உறுப்பினராக,

[திரு. ப. உ. சண்முகம்] [1973 நவம்பர் 21

இங்கே அமர்ந்து உறுப்பினர்கள் பேசுவதைக் கேட்காமல், பத்திரிகையில் பார்த்து பேசி இருக்கிறார்கள். எனவே, அம்மையார் அவர்கள், பேசியதைக் கேட்காமல் இப்படி பேசியதற்காக, நண்பர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் வருத்தப்பட வேண்டாமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** என்னை சட்டசபைக்கு வராத ஆள் என்று சொன்னால்கூட, ஊர் புரிந்துகொள்ளும். நான் எப்படி எதிர்க்கட்சி உறுப்பினர் என்ற முறையில் இங்கு பொறுப் புணர்ச்சியுடன் பணியாற்றுகிறேன் என்று பொதுமக்களுக்கு நன்கு தெரியும். அன்றைக்கு நான் வரவில்லை. ஒரு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டேன் அன்றையதினம். அதனால் நான் சட்டசபைக்கு வரவில்லை. நான் எப்படி பணியாற்றுகிறேன் என்பது அமைச்சருக்குத் தெரியும். இப்படியெல்லாம் முழுப் பூசணிக்காயை சோற்றிலே மறைப்பதற்கு அவர்கள் ஆற்றலைக் காட்டினால் மக்கள் புரிந்துகொள்வார்கள். உங்களைப்பற்றி அவர்கள் தெரிந்துகொள்ளட்டும்.

ஆட்கள் நியமனத்தைப்பொறுத்து, மின்சார இலாகாவிலே ஆள் எடுக்கிறேன் என்று சொன்னார்கள். 2,600 பேருக்காக, 1,41,000 பேர் மனு போட்டிருந்தார்கள். அவர்கள் ஒவ்வொருவரிடமிருந்தும் ஆளுக்கு ரூ. 5 வாங்கியிருக்கிறார்கள். 2 வருஷமாக, அதையெல்லாம் கிடப்பிலே போட்டுவிட்டு, இன்னும் யாருக்கு உத்தரவு போட்டீர்கள் என்று தெரியவில்லை. இவ்வளவு பெரிய காலதாமதத்திற்குக் காரணம் என்ன? காலதாமதத்தினாலேதான் ஊர்ப் பேச்சுக்கு இடம் கொடுக்கிறீர்கள். 1,41,000 பேர் கடன் பட்டு, ஆளுக்கு ரூ. 5 அனுப்பி அப்ளிக்கேஷன் போட்டால், அதையெல்லாம் 2 வருஷம் கிடப்பிலே போட்டுவிட்டு, இன்னமும் திருப்பியும் அனுப்பவில்லை. யாருக்காவது வேலை கொடுத்தீர்களா என்றால் அதுவும் இல்லை.

அங்கே இருக்கக்கூடிய யூனியனிலே ஆளும் கட்சியிலே இருக்கிறவர்களுக்குத்தான் செல்வாக்கு. அந்தச் செல்வாக்கைப் பயன்படுத்திக்கொண்டு விருப்பம் இருந்தால் வேலை செய்கிறார்கள். நாங்கள் சொல்கிறவர்களுக்குத்தான் ஓவர் டைம் கொடுக்க



1973 நவம்பர் 21] [திருமதி த. ந. அனந்தநாயகி]

வேண்டும், மற்றவர்களுக்கு ஓவர் டைம் கொடுக்கக் கூடாது என்று சொல்கிறார்கள். இது என்ன ஆட்சியா? நிர்வாகமா? இதனுடைய விளைவு என்ன?

இன்றைக்கு 4 மாதத்திற்கு சேர்த்து ரூ. 296 பில் அனுப்பி இருக்கிறார்கள். இன்றைக்கு இருக்கிற விலைவாசியில் மாத பில்லையே கட்ட முடியாது. விலைவாசி ஏறி இருக்கிறது. இப்பொழுதுள்ள கடனோடு, இன்னும் அதிக அளவுக் கடன்பட்டு அவர்கள் பில்லைக் கட்டவேண்டும். அப்படி கட்டவில்லையென்றால், கட் பண்ணிவிடுவார்கள். வெட்டுவதற்குக் கூலி கேட்பார்கள். அதற்குவேறு சார்ஜஸ் கொடுக்க வேண்டும். இப்படியெல்லாம் நிர்வாகம் நடத்துகிறீர்கள். நிர்வாகம் இப்படி ஒழுங்காக இல்லையென்றால், அதற்கு எப்படி சட்டசபையினுடைய அங்கீகாரத்தைக் கொடுக்கமுடியும் என்பதை ஒவ்வொரு பொறுப்புள்ள அங்கத்தினரும் நினைத்துப் பார்க்கக்கூடிய நிலையிலே இருக்கிறோம். நீங்கள் அனுப்பியிருக்கிற பில்லிலுள்ள ரூ. 296 ஐ எப்படி கட்டுவது? தவணையில் கட்டிக்கொள்ளலாம் என்கிறார்கள். எத்தனை தவணையில் கட்டுவது? நான் ரூ. 10, ரூ. 10 ஆகக் கட்டலாமா? 30 மாதத் தவணைகளில் கட்டலாமா? (குறுக்கீடு). இஷ்டம் போல் கட்டலாமா? காங்கிரஸ்காரருக்கு ஒரு முறை, கம்யூனிஸ்ட்காரருக்கு ஒரு முறை என்று இருந்தால் சரியா? ஒவ்வொரு பிரஜையும் இப்படித்தான் கட்டவேண்டும் என்று சொல்லுங்கள். வெறும் தவணை முறை என்றால், இஷ்டப்படி கொடுக்கலாம் என்றால், அதற்கு விளக்கம் தேவை. எனக்கு விளக்கம் அளிக்காவிட்டாலும், அந்த இலாகாவிற்கு விளக்கம் கொடுக்கவேண்டும். அவர்களுக்கும் விளக்கம் இல்லை.

ஓவர் டைம் ஆட்களை போடுவதில் கூடப் பாரபட்சம். ஒரு தாம், இரண்டு தரம், மூன்று தரம், ஒன்றிரண்டு தரம் என்று பில்லை தயாரித்து அனுப்புகிற இந்த நிலையில் இன்றைக்கு நிர்வாகம் இருக்கிறது.

இப்பொழுது நாங்கள் மிகவும் கஷ்டப்படுகிறோம். சென்னை நகரை எடுத்துக் கொண்டால், விளக்கு எரிகிறதோ இல்லையோ, நகராட்சியிலுள்ள அந்த மின்சார இலாகா எந்த அளவில் வேலை செய்திருக்கிறது என்பது தெரிகிறது. ஏன் இப்படி விளக்கு எரி

[திருமதி த. ந. அனந்தநாயகி] [1973 நவம்பர் 21

யாமல் இருந்திருக்கிறது என்று இப்பொழுதுதான் தெரிகிறது. இப்படி நகராட்சியிடம் அந்தப் பொறுப்பைக் கொடுத்து பெயரைக் கெடுத்துக் கொள்வதைக் காட்டிலும் அவர்களே, அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளலாம். கார்ப்பரேஷனுக்கு அந்தப் பொறுப்பு தேவையில்லை. நீங்களே எடுத்து, ஒழுங்காக விநியோகம் செய்யலாமே?

இன்றைக்கு ஒவ்வொரு லாம்ப் போஸ்டிலேயும் அடியிலே மூடியே கிடையாது. கம்பத்தைத் தொட்டாலே ஷாக் அடித்து சாகக் கூடிய அளவுக்கு இன்றைக்கு நிகழ்ச்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன. கேட்டால் பதில் சொல்கிறார்கள், இது ஒரு கம்பம் மாத்திரமல்ல. 6,000 கம்பத்திற்கு அடியில் மூடியில்லை, என்று. இதுதான் பதிலா? ஒரு உயிர் வீணாகப் போகிறதே என்ற வேதனை எங்களுக்கு. அதைத் தொட்டால் ஷாக் அடிக்கிறதே என்று சொன்னால், பதில் வருகிறது ஒரு கம்பம் தானா, 6,000 கம்பம் வைத்திருக்கிறோம் ஷாக் அடிப்பதற்கு என்று. ஒரு மாடு ஒரு கம்பத்தின் மேல் உராய்ந்தது. அவ்வளவுதான், ஷாக். என்னுடைய மைலாப்பூர் தொகுதியில், ஒரு பையன் குளத்திலிருந்து வெளியே வந்தான். வழுக்கி விழாமல் இருப்பதற்காக, அருகிலிருந்த கம்பத்தைக் கட்டிப்பிடித்தான். அவனுக்கு ஒரு ஷாக். மின்சார இலாகாவிலே, மின்சாரக் கம்பங்களை வைத்துக்கொள்வதிலே கூட, அக்கறை இல்லாமல், இருக்கிறார்கள். சென்னை நகரத்திலே இன்றையதினம் நிலைமைகள் அப்படி இருக்கின்றன.

திரு. ஜப்பார் அவர்கள், மின்சார இலாகாவிலுள்ள குறைகள் எல்லாம் கடலில் கரைத்த பெருங்காயம் மாதிரிதான் என்று சொல்லி, இறுதியில் முடிக்கும்போது 60 சதவிகிதம் விளக்கு எரிவதில்லையென்று சொன்னார். எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது, அவர் இப்படி சொன்னது. எரிந்த பல்பைப் போட்டால், எப்படி எரியும்? நல்ல பல்புகளைப் போட்டால் விளக்குகள் எரியும். மோசமான சோக்குகளைப் போட்டால் . . .

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார் :** தலைவர் அவர்களே, நான் 60 சதவிகிதம் விளக்குகள் எரிவதில்லையென்று சொன்னது கிராமப் புறங்களில் மாத்திரம்தான். அம்மையார் பேசுவதோ மாநகரங்களில் உள்ள நிலையைப்பற்றி.



1973 நவம்பர் 21]

**திருமதி த. ந. அனந்தநாயகி :** கிராமங்களில் 60 சதவிகிதம் எரிவதில்லை என்றால், மாநகரங்களில் 90 சதவிகிதம் விளக்குகள் எரிவதில்லை, அவருக்குத் தெரியாது. காரணம் ஸ்டான்டர்ட் பல்புகள் வாங்குவது கிடையாது. எந்த அளவுக்கு இன்றைக்கு ஊழல் என்றால், அந்த அளவைச் சொல்ல முடியாது.

இன்றைக்கு மின்சார இலாகா அலுவலகங்களுக்காக வாடகைக் கட்டிடம் எடுத்திருக்கிறார்கள், ரூ 3,000, ரூ. 4,000 வாடகைக்கு. புரசைவாக்கத்திலே கனரா பாங்குக்கு மேல் வாடகைக்கு எடுத்திருக்கிறார்கள். ரூ. 4,000 வாடகை அதற்கு. ஏன் இவ்வளவு வாடகை கொடுக்கவேண்டும்? எலெக்டிரிசிட்டி டிபார்ட்மென்ட் உள்ளே இடம் இருக்கிறதே. இந்த மாதிரி வாடகைக்கு எடுத்துள்ளதெல்லாம் சரியாக உள்ளதா என்பதை ஆராய ஒரு ஆராய்ச்சிக் குழு அமைத்தால், அதில் நியாயம் இருக்கா இல்லையா என்று நாங்கள் எடுத்துச்சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம்.

இன்றைக்கு எங்கே பார்த்தாலும் ஊழல். எண்ணூர் தெர்மல் ஸ்டேஷனில் முழு திறனுக்கு உற்பத்தி கிடையாது. 4-வது ஸ்டேஜை முடித்துவிட்டு, ஐந்தாவது ஸ்டேஜை கான்ட்ராக்டரிடம் கொடுத்துவிட்டு இவர்கள் அதற்கு எக்ஸிக்யூடிவ் இன்ஜினியர், எஸ்.ஈ., இன்னும் அதிகாரிகள் இருக்கிறார்கள். எரக்ஷனே இல்லை. ஆனால் எரக்ஷன் சூப்பிரன்டென்டிங் இன்ஜினியர் இருக்கிறார். இந்த மாதிரி வேலையிலே அவர்கள் கவனம் செலுத்தாமல், நிர்வாகத்தை ஒழுங்காகக் கவனிக்க வேண்டும்.

தொழிலாளிக்கு என்ன கதி மின்சார இலாகாவில்? ஜி.பி.எப்பு அக்கவுண்டைப் பொறுத்து, நீங்கள் பாஸ் புக் தருகிறேன் என்று சொன்னீர்கள். உங்களுடைய பொசிஷன் என்ன, அவர்களுடைய பொசிஷன் என்ன என்று தெரியவில்லை. பாஸ் புக் தருகிறேன் என்று சொன்னீர்கள். இன்றைக்கு வரையிலும் தரவில்லை.

[பிற்பகல் 1.30]

அதேமாதிரி நாலாயிரம் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டித் தருவதாக இருந்த திட்டம் என்ன ஆயிற்று? இன்றைக்கு நானூறு வீடுகள் கூட கட்டவில்லை. கட்டிய வீடுகளைக்கூட தொழிலாளர்களுக்குக் கொடுக்காமல், ஆபிஸர்களுக்குக் கொடுத்து

அவர்கள் இருக்கக்கூடிய நிலைமைதான் இருக்கிறது. இப்படி எல்லாத் துறையினரையும் எடுத்துக் கொண்டாலும் நிம்மதியான நிலைமை இல்லை. தொழிலாளர்களுக்கு நிம்மதி இல்லை, மின் சாரத்தைப் பயன்படுத்துவோருக்கும் நிம்மதி கிடையாது, தொழிலதிபர்களைக் கேட்டால் அவர்கள் எந்தச் சமயத்திலே என்ன வருமோ என்று பயந்துகொண்டிருக்கின்ற சூழ்நிலை, விவசாயிகளை எடுத்துக்கொண்டால் அவர்கள் எந்த நேரத்திலே மின்வெட்டு இன்னும் அதிகமாக வந்துவிடுமோ என்று அஞ்சிக்கொண்டிருக் கின்ற சூழ்நிலை. இப்படி மின்சார இலாகாவே ஒரு அவல நிலைமைக்குத்தான் சென்றுகொண்டிருக்கிறது. உங்களுக்குப் பின்னாலே ஆரம்பித்த அரியானா மாநிலத்திலே அவர்கள் எல்லா கிராமங்களுக்கும் மின்சாரத்தைக் கொடுத்து விட்டார்கள். ஆனால் உங்கள் மின்சார இலாகா திறமையற்ற நிலைமைக்குப் போய்க் கொண்டிருக்கிறது. நமக்கு எவ்வளவு மின்சாரம் தேவை என் பதைப் பார்த்து உற்பத்தியில் அக்கறை காட்டவில்லை என்ற குற்றத்தைச் சாட்டி, என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள் கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இன்று இந்த அளவோடு முடிவுற்று பேரவை மீண்டும் நாளைக் காலை 9 மணியளவில் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.31 மணிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

## 7. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders.*

82. Notification issued with G.O. Rt. No. 1652, Revenue, dated the 3rd September 1973, in regard to exemption from liability to entertainments tax, show tax and additional surcharge on the benefit film show organised by the Rotaract Club of Madras on 14th September 1973 to raise funds for its social, educational and charitable activities. [Laid on the Table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]





83. Notification issued with G.O. Ms. No. 1261, Rural Development and Local Administration, dated the 28th June 1973, in regard to certain amendments to the Tamil Nadu Panchayats (Election of Vice-Presidents) Rule, 1961. [Laid on the Table of the House under section 199 (2) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

84. Notification issued with G.O. Ms. No. 1560, Rural Development and Local Administration, dated the 2nd August 1973, in regard to delegation of certain powers to the Collectors under the Tamil Nadu Panchayats Act, 1958. [Laid on the Table of the House under section 199 (2) of the Tamil Nadu Panchayat Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

85. Notification issued with G.O. Ms. No. 4594, Revenue, dated the 31st July 1973, in regard to certain amendments to the Tamil Nadu Agricultural Income-tax Rules, 1955. [Laid on the Table of the House under section 61 (3) of the Tamil Nadu Agricultural Income-tax Act, 1955 (Tamil Nadu Act V of 1955).]

86. Notification issued with Roc. No. 56145/73-E4, dated 10th August 1973, in regard to extension of section 286 and other relevant provisions relating to Vital Statistics under the Tamil Nadu District Municipalities Act, 1920, in the entire area of Tiruttani Town Panchayat in Chingleput district. [Laid on the Table of the House under section 199 (2) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXX of 1958).]

* 87. The Tamil Nadu Government's Review and the Second Annual Report and Statement of Accounts of the State Industries Promotion Corporation of Tamil Nadu, Limited, Madras, for the year 1972–73. [Laid on the Table of the House under Section 619-A of the Companies Act, 1956 (Central Act I of 1956).]

### B. *Reports, Notifications and Other Papers.*

'NIL'.

---

* Laid on the Table of the Legislature Library with reference to the proviso to rule 21 (5) of the Tamil Nadu Legislative Assembly Rules.

இணைப்பு I

[ -ம் பக்கத்தில் 251-ஆம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

The places where the Technical High Schools, Government as will as private, are located and the students taken in each ot the school are as follows :—

| Serial number and name of the Technical High School/Institutions. | Intake. | Admitted. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. Central Polytechnic, Madras .. | 60 | 70 |
| 2. Government Polytechnic, Coimbatore | 60 | 55 |
| 3. Tamil Nadu Polytechnic, Madurai .. | 60 | 63 |
| 4. Government Polytechnic, Nagercoil | 60 | 31 |
| 5. Government Polytechnic, Vellore | 60 | 59 |
| 6. Government Polytechnic, Tiruchirappalli .. .. .. .. .. | 60 | 62 |
| 7. Government Polytechnic. Tuticorin. | 60 | 46 |
| 8. Alagappa Polytechnic, Karaikudi .. | 60 | 41 |
| *Government Technical High School attached to private Polytechnics.* | | |
| 9, Rajagopal Polytechnic, Gudiyattam | 60 | 42 |
| 10. Valivalam Desikar Polytechnic, Nagapattinam .. .. .. .. | 60 | 61 |
| | 60 | 55 |
| 11. Baktavataslam Polytechnic, Kancheepuram .. .. .. .. | 60 | 55 |
| *Autonomous institution.* | | |
| 1. Mothilal Nehru Government Polytechnic, Pondicherry .. .. | 60 | 60 |
| *Private.* | | |
| 1. Nachimuthu Polytechnic, Pollachi .. | 60 | 61 |
| 2. Sankar Institute of Polytechnic, Talaiyuthu .. .. .. .. | 60 | 62 |
| 3. Seshasayee Institute of Technology, Tiruchirappalli .. .. .. | 60 | 60 |
| Total .. | 900 | 828 |





இணைப்பு

[319-ம் பக்கத்தில் 270-ம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

STATEMENT.

A working group on Electronics with the following members :—

(i) Dr. A. Sampath, Professor of Electronics, Indian Institute of Technology, Madras.

(ii) Thiru K. S. Hegde, Principal, College of Engineering, Guindy.

(iii) Thiru K. V. Sastri, Electronics Department, Madras Institute of Technology, Madras.

(iv) Thiru Lakshminarayanan, Madras Institute of Technology, Madras.

(v) Thiru M. G. Damodar, Philips India, Limited, Madras.

(vi) Nominee of the Director, Small Industries Service Institute.

(vii) Thiru E. N. Narayanaswamy, Deputy Director of Industries and Commerce (Commerce).

was constituted in April 1970. The working group submitted its report in August 1970. Some of the important recommendations made by the working group are indicated below :—

(1) To press the Central Government for getting a Blanket Import Licence for a value of Rs. 1 crore per year for distribution to special types of Industries like Electronics through Tamil Nadu Small Industries Corporation, Limited.

(2) To set up a Certification, Testing and Product Development Laboratory at Adyar to be patterned on the Evaluation Laboratory set up at Bombay, Delhi and Bangalore.

(3) To consider setting up Functional Estates for Electronics Industry simultaneously in important urban centres like Coimbatore, Madurai and Tiruchirappalli.

(4) To have a separate wing in the Industries Department for Electrical, Electronics and Allied Industries.

(5) To impart Craftsman Training in the Industrial Training Institutes for the 'On the Floor Workers' required for the Electronic Industry by the Industrial Training Institutes and to examine the existing pattern of syllabus for Radio Mechanics Course in the Industrial Training Institutes and consider suitable improvements so as to make the trainees fit for serving the Electronic Industry.

The working group identified 24 items of Electronic Components and 9 items of Medicinal Electronic items as offering scope for development in Tamil Nadu. Information sheets on these items were also prepared by the group.

2. Follow-up action has been initiated on the recommendations of the working group as indicated below :—

A Functional Industrial Estate for Electronics and Instruments has already been set up at Adyar. This Estate, which is called "Instronics Campus" will ultimately have 45 units out of which 21 units have already been put up. Fifteen of these have already gone into production making highly sophisticated electronic components. The factory units in this Estate are specially designed to meet the special requirements of the industry. On the proposals made by the State Government, the Electronics Commission of the Government of India have given their approval for assistance in the setting up of a Centralised Testing, Certification and Products Development for Electronics in Adyar, Madras, to serve the needs of Electronics Industry.

It is proposed to set up Functional Industrial Estates at Madurai, Coimbatore, Tiruchirappalli and Salem for Electronic Industries. The Small Industries Development Corporation has appointed a Development Officer for Electronics to channalise all assistance to Electronics Industry and also make available feasibility reports for components and equipment items to entrepreneurs. This officer works in close to co-ordination with the Directorate of Industries and Commerce, where a Joint Director has been posted to lookafter the development of Electrical and Electronic Industries in the State.

3. Besides, the schemes for 24 items of components Instrument and sub-assemblies prepared by the group have been printed separately and widely circulated to entrepreneurs, Technological





Institutions, Training Institutions and Industries Associations. As a result of this, 50 units in the fields Electronics and Instruments Industries have come up in the State manufacturing Car Radios. Special Process Controls, Television components. Plastic moulded goods for Electronics, Ancillaries to Bharat Electronics and Hindustan Teleprinters. Resistors, Measuring Instruments and Recorders. Some of these have even entered the Export market. All possible assistance by way of financial assistance, supply of raw materials, etc., is being given to the industry.

4. The other recommendations are being examined and appropriate follow-up measures are being taken wherever feasible.

### விவர அறிக்கை

*1970 ஏப்ரல் திங்களில் மின்னணு இயல் பற்றிய பணிக்குழு ஒன்று அமைக்கப்பட்டது. அதில் கீழ்க்கண்டவர்கள் உறுப்பினர்கள் ஆவர் :—*

*1. டாக்டர் ஏ. சம்பத், மின்னணுப் பேராசிரியர், இந்தியத் தொழில் நுட்பக் கழகம், சென்னை.*

*2. திரு. கே. எஸ். ஹெக்டே, முதல்வர், பொறியியற் கல்லூரி, கிண்டி.*

*3. திரு. கே. வி. சாஸ்திரி, மின்னணுத் துறை, சென்னை தொழில் நுட்பக் கழகம், சென்னை.*

*4. திரு. இலக்குமிநாராயணன், சென்னை தொழில் நுட்பக் கழகம், சென்னை.*

*5. திரு. எம். ஜி. தாமோதரன், பிலிப்ஸ் இந்தியா, லிமிடெட், சென்னை.*

*6. சிறுதொழில் பணிக்கழக இயக்குநரால் நியமனம் செய்யப் பெறுபவர், சென்னை.*

*7. திரு. ஈ. என். நாராயணசாமி, தொழில், வணிகத் துறை (வாணிகம்) துணை இயக்குநர், சென்னை—அமைப்பாளர்.*

*1970 ஆகஸ்டு திங்களில் அப் பணிக்குழு அதனுடைய அறிக்கையினைப் பணிந்தனுப்பியது. அப் பணிக்குழு அளிக்க இன்றியமையாப் பரிந்துரைகளில் சில கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—*

[1973 நவம்பர் 21

1. சிறுதொழில் வளர்ச்சிக் கழகத்தின் மூலமாக மின்னணுவியல் போன்ற சிறப்பு வகைத் தொழில்களுக்கு வழங்கப்படுவதற்காக ஆண்டொன்றுக்கு ரூ. 1 கோடி மதிப்பிற்குப் (பெயர், அளவு குறிப்பிடப்படாத) பொதுவான இறக்குமதி உரிமத்தைப் பெறுவதற்கு மத்திய அரசை வற்புறுத்தல்.

2. பம்பாய், டில்லி, பெங்களூர் ஆகிய நகரங்களில் நிறுவப்பட்டுள்ள மதிப்பீட்டு ஆய்வுக்கூடத்தில் அமைப்பினை ஒட்டி அடையாற்றில் சான்றளிப்பு—சோதனை—உற்பத்திப் பொருள் மேம்பாடு ஆய்வுக்கூடம் ஒன்றை நிறுவுதல்.

3. கோவை, மதுரை, திருச்சி போன்ற முக்கிய நகரங்களில் ஒரே சமயத்தில் மின்னணுவியல் தொழிலுக்கேயுரிய தொழிற் பேட்டைகளை நிறுவுவது பற்றிப் பரிசீலனை செய்தல்.

4. மின்சாரத்தொழில், மின்னணுவியல் தொழில், மற்றும் அவற்றிற்குத் தொடர்பான தொழில்களுக்குத் தொழில் துறையில் தனிப்பிரிவு ஒன்றை ஏற்படுத்தல்.

5. மின்னணுவியல் தொழில் குறித்துத் தொழிற்பயிற்சி நிறுவனங்களுக்குத் தேவைப்படுகின்ற 'தொழிற்கூடத்திலேயே பணியாற்றும் தொழிலாளிகட்கு' கைவினைஞர்கள் பயிற்சி அளித்தல்; தொழிற்பயிற்சி நிறுவனங்களில் அளிக்கப்படும் வானொலிப் பெட்டிக்கம்மியர் படிப்பின் தற்போதைய பாடத் திட்டத்தை ஆய்வுசெய்து, அதில் பயிற்சி பெறுபவர்கள் மின்னணுவியல் தொழிலில் பணிபுரியத் தகுதி பெறுமாறு செய்தற் பொருட்டு அப்பாடத்திட்டத்தில் பொருத்தமான மேம்பாடுகள் செய்வது பற்றிப் பரிசீலனை செய்தல்.

தமிழ்நாட்டில் வளர்ச்சிக்கான வாய்ப்புகள் அளிப்பனவாக மின்னணுவியல் இயந்திரப் பகுதிகளில் 24 இனங்களும், மருத்துவம் சார்ந்த மின்னணுவியல் இயந்திரப் பகுதிகளில் 9 இனங்களும் உள்ளன என்று பணிக்குழு கண்டறிந்துள்ளது. அக்குழு இந்த இனங்கள் பற்றிய தகவல் விவரத் தாட்களையும் தயாரித்துள்ளது.



1973 நவம்பர் 21]

2. பணிக்குழுவின் பரிவுரைகளின்பேரில் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அவை பற்றிய விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

மின்னணுவியலுக்கும், கருவிகளுக்குமான தனித்தொழிற் பேட்டை ஒன்று ஏற்கனவே அடையாற்றில் நிறுவப்பட்டுள்ளது. இத்தொழிற்பேட்டை கருவிகள்—மின்னணுவியல் தொழிற் பேட்டை என்று அழைக்கப்பெறுகின்றது. இங்கு இறுதியாக 45 தொழிற் பிரிவுகள் அமையும். இவற்றில் ஏற்கெனவே 21 தொழிற்பிரிவுகள் அமைக்கப்பட்டுவிட்டன. இவற்றிலும் 15 தொழிற் பிரிவுகள் ஏற்கெனவே உற்பத்தித் தொடங்கிவிட்டன. இவற்றில் மிக நுண்ணிய வேலைப்பாடுள்ள மின்னணுவியல் இயந்திரப்பகுதிகள் தயாரிக்கப்படுகின்றன. இந்தத் தொழிலின் சிறப்புத் தேவைகளை நிறைவு செய்வதற்கு என்றே இத்தொழிற் பேட்டையில் உள்ள தொழிற்கூடங்கள் சிறப்பாக வடிவமைக்கப்பட்டுள்ளன. மாநில அரசு அளித்த செயற்குறிப்புகளின் பேரில், சென்னை, அடையாற்றில் மின்னணுவியல் தொழிலுக்கான சான்றளிப்பு, சோதனை, உற்பத்திப் பொருள்கள் மேம்பாடு பற்றிய மைய ஆய்வுக்கூடம் ஒன்றை நிறுவுவதற்கு உதவிசெய்ய இந்திய அரசின் மின்னணுவியல் ஆணைக்குழு ஒப்புதல் அளித்துள்ளது. இந்த ஆய்வுக்கூடம் மின்னணுவியல் தொழிலின் தேவைகளை நிறைவு செய்யும்.

மதுரை, கோவை, திருச்சி, சேலம் ஆகிய நகரங்களில் மின்னணுவியல் தொழிலுக்காக தனித் தொழிற்பேட்டைகள் அமைக்கக் கருதப்பட்டுள்ளது. சிறுதொழில் வளர்ச்சிக்கழகம் மின்னணுவியல் தொழிலுக்கான அனைத்து உதவியையும் நெறிப்படுத்துவதற்கும் இயந்திரப்பகுதிகள், கருவிகள் பற்றியும் தொழில் முனைவருக்குச் சாத்தியக்கூறு அறிக்கைகளை அளிக்க மின்னணுவியல் வளர்ச்சி அலுவலர் ஒருவரை நியமித்துள்ளது. இந்த அலுவலர் இம்மாநிலத்தில் உள்ள மின்சார மின்னணுவியல் தொழில் மேம்பாட்டினைக் கவனிப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள தொழில்துறை இணை இயக்குநரோடு தொழில், வாணிக இயக்குநருடன் நெருங்கிய முறையில் ஒருங்கிணைந்து பணியாற்றுகின்றார்.

3. மேலும், இக்குழுவால் தயாரிக்கப்பட்ட இயந்திரப் பகுதிப் பொருட்கள், கருவிகள், துணை இணைப்புகள் ஆகிய 24 இனங்களுக்கான திட்டங்கள் தனியாக அச்சிடப்பட்டு தொழில் முனைவர்கள், தொழில் நுட்ப நிறுவனங்கள், பயிற்சி நிலையங்கள், தொழிற்கழகங்கள் ஆகியவற்றிற்கு வழங்கப்பட்டுள்ளன. இதன் விளைவாக, மோட்டார்கார், வானொலிப்பெட்டிகள், சிறப்புச்செய் முறைக் கட்டுப்பாட்டுக் கருவிகள், ஒலி-ஒளி படக்காட்சிக் கருவிக்கான இயந்திரப்பகுதிகள், மின்னணுவியலுக்கான பிளாஸ்டிக் அச்சுகள், பாரத் எலக்ட்ரானிக்ஸ், இந்துஸ்தான் டெலி பிரிண்டர்ஸ் ஆகிய நிறுவனங்களுக்காக இயந்திரப்பகுதிகள், தடுப்புக் கருவிகள், அளவைக் கருவிகள், பதிவுக் கருவிகள், ஆகியவற்றைத் தயாரிக்க மின்னணுவியல்—கருவித் தொழிற் துறையில் இம்மாநிலத்தில் 50 தொழிற்பிரிவுகள் தோன்றின. இவற்றுள் சில ஏற்றுமதி வாணிகத்திற்கும் உரியவையாயுள்ளன. இத்தொழிற் பிரிவுகளுக்கு இயன்ற அளவில் நிதியுதவி, கச்சாப் பொருட்கள் வழங்குதல் போன்ற எல்லா வகை உதவிகளும் அளிக்கப்பட்டு வருகின்றன.

4. ஏனைய பரிவுரைகள் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன. இயன்ற இடங்களில், தொடர்ந்து பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

## இணைப்பு III.

[327-ம் பக்கத்தில் 280-ம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

(அ) ஆம்.

(இ) 1965-66-ம் ஆண்டு, ராஜதானி ஊராட்சியைச் சேர்ந்த மஞ்சிநாயக்கன்பட்டியில் ஒரு புதிய பள்ளிக் கட்டிடம் கட்டுவதற்கு ஆண்டிப்பட்டி ஊராட்சி ஒன்றிய ஆணையாளரின் 20—3—1966-ம் தேதிய ந.க. 9314/65 எண் கடிதத்தில் உத்தரவு கொடுக்கப்பட்டது. ஆனால் திரு. பொம்மி நாயக்கர் என்பவர்,





பள்ளிக்கூடம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ள இடம், தனக்குச் சொந்தமானது என்று ஆட்சேபித்து, பெரியகுளம் உதவி கலெக்டர், மதுரை மாவட்ட வருவாய் அதிகாரி, அரசினர் (ரெவின்யூ துறை) ஆகியவர்களிடம் தடை உத்தரவு வாங்கியதால், வேலை தொடர்ந்து நடைபெறவில்லை. ஆனால் அந்த இடம் நத்தம் புறம்போக்கு என்பதனாலும், திரு. பொம்மி நாயக்கருக்குச் சொந்தமில்லை என்பதனாலும், ஆட்சேபணை மனு பின் தள்ளுபடி செய்யப்பட்டது. தடை உத்தரவுகளும் நீக்கப்பட்டன. இடத்தகராறு காரணமாக ஒப்பந்தக்காரர் வேலையைச் செய்யவில்லை. பின்பு வேறு ஒரு ஒப்பந்தக்காரருக்கு கொடுக்கப்பட்டு கட்டிடம் நில மட்டம்வரை கட்டப்பட்டது. 1970-71-ம் ஆண்டில் வேலை நடைபெறவில்லை. இதனால் இரண்டாவது ஒப்பந்தக்காரரும் நீக்கப்பட்டு ராஜதானி ஊராட்சி மன்றத் தலைவருக்கு 21—2—1972 தேதிய உத்தரவில் மீதி வேலையைச் செய்து முடிக்க ஆண்டிப்பட்டி ஊராட்சி ஒன்றிய ஆணையாளரால் உத்தரவிடப்பட்டுள்ளது. இதற்கிடையில் சித்தார்பட்டி ஊராட்சி மன்றத்தலைவர் திரு. என். எஸ். டி. செல்லச்சாமி என்பவர் பெரியகுளம் கோட்டாட்சித் தலைவர் முன் கொடுத்த வாக்குமூலத்தின்படி, பெரியகுளம் கோட்டாட்சித் தலைவர் அவருடைய 14—3—1972 தேதிய 10530/72 எண் கடிதத்தில், சித்தார்பட்டி ஊராட்சி மன்றத் தலைவருக்கு, அவரது சொந்தச் செலவில் வேறு ஒரு இடத்தில் ஒரு புதிய பள்ளிக்கூடம் கட்ட உத்தரவிட்டுள்ளார். அதன்படி சித்தார்பட்டி ஊராட்சி மன்றத்தலைவர் ரூ. 2,500-ஐ ஆண்டிப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் டிபாசிட் செய்து புதிய இடத்தில் புதிய கட்டிடம் கட்ட ஆரம்பித்தார். பழைய கட்டிடத்திற்கு ஊராட்சி ஒன்றியத்தின் நிதியிலிருந்து செலவு செய்யப்பட்ட ரூ. 3,724-ஐயும் யூனியன் கருவூலத்தில் டிபாசிட் செய்துள்ளார். இதற்கிடையில் ராஜதானி ஊராட்சி மன்றத் தலைவரான, பழைய கட்டிட ஒப்பந்தக்காரர், புதிய கட்டிட வேலையை தடை செய்யும்படி கலெக்டர் அவர்களுக்கு மனு கொடுத்தார். மேற்கொண்டு குழப்பம்

ஏற்படாதிருக்க, இரண்டு கட்டிட வேலைகளையும் தடை செய்து உத்தரவிடப்பட்டது. பின்பு சம்பந்தப்பட்டவர்களிடையே சமரசம் ஏற்படுத்த கலெக்டர் அவர்களால் நடவடிக்கை எடுக்கப் பட்டது. இவ்விஷயத்தில் சமரசம் ஏற்பட்டு சித்தார்பட்டி ஊராட்சி மன்றத் தலைவர் பள்ளிக்கூடம் கட்டிய புதிய இடத்தில் பள்ளிக் கட்டிடம் கட்ட ஆண்டிப்பட்டி ஊராட்சி ஒன்றிய ஆணையருக்கு தக்க அறிவுரை வழங்கப்பட்டது.

(உ) இல்லை.

(எ) மேலே (இ) வில் கூறப்பட்ட காரணங்களால் வேலை முடிவடையவில்லை.

## தமிழ்நாடு சட்டப் பேரவை.

---

**வியாழக்கிழமை, 1973 நவம்பர் 22.**

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்-விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 299, 300, 301, 302 ஆகிய எண்களுள்ள வினாக்கள் பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

*Cancer Units in District Hospitals*

* 303 *Q.*—THIRUMATHI T. N. ANANDANAYAKI
THIRU N. K. PALANISAMY
Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether it is a fact that there are cancer units in each of the District Headquarters Hospitals; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

**தருமபுரி மருத்துவ மனையில் இரத்த சேமிப்பு நிலையம்**

* 304 வினா—திரு. எம். சுரேந்திரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தருமபுரி மருத்துவ மனையில் இரத்த சேமிப்பு நிலையம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இல்லை.

**திரு. என். கிட்டப்பா :** தலைவர் அவர்களே, பொதுவாக தமிழகத்திலுள்ள எல்லா தாலுக்கா தலைநகரங்களிலுமுள்ள அரசு மருத்துவ மனைகளிலும் இரத்த சேமிப்பு நிலையம் இல்லாத காரணத்தால் நோயாளிகளுக்கு இரத்தம் கொடுக்க இயலாமல் அவர்கள் உயிரிழக்க நேரிடுகிறது. மாயூரம் மருத்துவ மனையில் இரண்டு மூன்று பேர் இப்படிப்பட்ட காரணத்தால் இறந்து விட்டார்கள் என்று சொல்லப்படுகிறது. ஆகவே, தாலுக்கா தலைநகரங்களிலுள்ள அரசு மருத்துவ மனை ஒவ்வொன்றிலும் கட்டாயம் இரத்த சேமிப்பு நிலையம் அமைத்திட அரசு ஆவன செய்யுமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, தாலுக்கா மருத்துவ மனைகளில் இரத்த சேமிப்பு நிலையம் ஏற்படுத்தப்பட வேண்டும் என்பது அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. படிப்படியாக ஓராண்டுக்கு நான்கு அல்லது ஐந்து இடங்களில் இந்த இரத்த சேமிப்பு நிலையங்கள் ஏற்படுத்தப்படுகின்றன. ஏற்படுத்தப்பட்ட ஒன்றிரண்டு இடங்களில் சில சிக்கல்கள் காரணமாக அந்தப் பணி சரியாக நடைபெறவில்லை. அவைகளைச் செம்மைப்படுத்தவேண்டுமென்று இயக்குநருக்குத் தெரிவிக்கப் பட்டிருக்கிறது.

### திருநெல்வேலி மருத்துவ மனையில் மருந்துகள் இருப்பு

*** 305 வினா—திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாளையங்கோட்டையில் உள்ள திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் போதுமான குளுகோஸ் மற்றும் டி. வி. மருந்துகள், இன்ஸ்லின் மருந்துகள் 1973, ஏப்ரல், மே, ஜூன் மாதங்களில் இல்லாததால் ஆப்ரேஷன் கேஸ்கள் மற்றும் முக்கியமான கேஸ்கள் கவனிக்கப்படவில்லை என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அவ்விதம் பொருள்கள் தட்டுப்பாடு ஏற்படக் காரணம் யாது ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) & (இ) இல்லை.



**திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் :** தலைவர் அவர்களே, இப்படி மருத்துவ மனைக்கு ஒதுக்கப்படும் மருந்துகள் வெளியே கடத்தப் படுவதாக அரசுக்குப் புகார் வந்ததா ? அப்படியானால், அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி, மருந்துகள் கடத்தப்படுவதைப்பற்றியதல்ல. மருத்துவ மனைக்குத் தேவையான மருந்துகள் 1973 ஏப்ரல், மே, ஜூன் மாதங்களில் இல்லாததால், அங்கே அவர்களுக்குச் சரியான சப்ளை இல்லாததால் மருந்து கிடைக்கவில்லை என்று கேட்கப்பட்டிருக் கிறது. எந்தெந்த மருந்துகள் அவர்களிடத்தில் அந்த நேரத்தில் தேவையான, அவசியமான அறுவை சிகிச்சை போன்ற பணிகளுக் காக இருந்தன என்பதற்கான புள்ளி விவரம் கிடைத்திருக்கிறது. பெரும்பாலான மருந்துகள் அவர்களிடத்தில் போதுமான அள வுக்கு இருந்தன. எண்ணிக்கை அளவில், ஓராண்டுத் தேவையின் அளவில் சற்று குறைவாக இருந்தன. அவை குறைவாக இருந் தனவே தவிர, அடியோடு இல்லை என்ற நிலைமை இல்லை. அவை களுங்கூட, ஜூன் மாதம் 17-20 தேதி அளவில் அவர்களுக்கு மறுபடியும் கிடைத்திருக்கின்றன. ஆகவே, மருந்துகள் பற்றாக் குறை ஏற்பட்டு நோயாளிகளுக்குச் சிகிச்சை வழங்குவதில் குறைவு ஏற்படக் காரணம் இல்லை என்பதுதான் இதிலே விளக்கப் பட்டிருக்கிறது. மருந்துகள் கடத்தப்படுவது பற்றி குறிப்பாக எந்த இடத்திலாவது நடைபெறுவதாக மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்கள் தெரிவித்தால் உடனடியாக—தேவையானால் விஜி லன்ஸ் மூலமாகக் கூட—நடவடிக்கை எடுக்க அரசு முன்வரும்.

### *Certificate course in Nursing*

* 306 Q.—Thiru N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Health be pleased to state whether the General Body of the Nurses Association, Chingleput has passed a resolution during January 1973 requesting the Government to convert the 3 year certificate course in nursing into a diploma course and to appoint a Tutor (Grade I) at every school of Nursing?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** இல்லை.

**திரு. நா. வீராசாமி :** தலைவர் அவர்களே, நம்முடைய நாட்டிலிருக்கக்கூடிய நர்சுகள் மேல் பட்டப்படிப்பு படிக்க வேண்டுமானால் அவர்களுக்குத் தமிழ் நாட்டில் வசதி இல்லை,

எம்.எஸ்ஸி. (நர்சிங்) போன்ற படிப்பு படிக்க டில்லிக்குப் போக வேண்டியிருக்கிறது. ஆகவே, ஒரு போஸ்ட்-க்ராஜுவேட் கோர்ஸினை நம்முடைய கல்லூரிகளிலேயே ஆரம்பிப்பதற்கு அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, அது பற்றிய விவரம் என்னிடம் இல்லை. ஆனால், அதுபற்றி ஆலோசிக்கப் படும்.

**திரு. ஆ. பரந்தாமன் :** தலைவர் அவர்களே, செவிலியர்களுக்கு சமுதாயத்தில் கௌரவமும் மரியாதையும் ஏற்படுகிற வகையில் இன்னும் விரிவாக டிகிரி கோர்ஸ் அல்லது 'அட் லீஸ்ட்' டிப்ளமா கோர்ஸாவது சென்னையில் துவக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, இதற்கு முற்பட்ட துணைக் கேள்வியும் இதுபற்றியதுதான். அது ஆலோசிக்கப்படவேண்டிய ஒன்றாகும்.

### சென்னை துறைமுக விரிவாக்க வேலைகள்

*** 307 வினு—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

சென்னை துறைமுகத்தை விரிவுபடுத்தும் வேலை எப்போது முடிவடையும் ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** சென்னைத் துறைமுகத்தில் வெளிப்புறத் துறைமுகம், உலோகக் கனித்துறை மீன்பிடித் துறை கட்டுமான வேலைகளை சென்னைத் துறைமுகப் பொறுப்புக் கழகம் செய்துவருகிறது.

( ) சென்னைத் துறைமுகத்தில் எண்ணெய், கனிப் போக்குவரத்துக்கான வசதிகளுக்கான வெளிப்புறத் துறைமுகக் கட்டுமான வேலை 1966-ஆம் ஆண்டில் சென்னைத் துறைமுகத்தில் தொடங்கப் பட்டது. இது 1973 பெப்ரவரி 4-ல் செயல்படத் தொடங்கி வைக்கப் பட்டது. இதற்கு, தமிழ்க் கவிஞரும் தேசாபிமானியுமான திரு. சுப்பிரமணிய பாரதியாரின் பெயரில் " பாரதித்துறை " என்று பெயரிடப்பட்டது.



( ii) யந்திர விசை கொண்டு கனியைக் கையாள்கிற வசதிகளுடன் கூடிய கனித்துறைக் கட்டுமான வேலை நடைபெற்று வருகிறது. இது 1975-ஆம் ஆண்டு தொடக்கத்திலேயே முடிக்கப் படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

( iii) சென்னைத் துறைமுகத்தில் 'மீன்பிடித் துறைமுகம் கட்டும் திட்டம்' 1975-ஆம் ஆண்டு டிசம்பர் திங்களுக்குள் முடிக்கப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

**திரு. என். கிட்டப்பா :** சென்னை துறைமுகத்தை விரிவுபடுத்தும் திட்டத்திற்கான மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு என்பதையும், அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட எல்லாப் பணிகளும் எப்பொழுது தொடங்கி முடிவடையும் என்பதையும் அறிவிக்க இயலுமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, எவ்வளவு பணம் என்பதுபற்றிய புள்ளிவிவரம் என்னிடம் இல்லை. ஆனால், அவர்கள் கொடுத்திருக்கிற காலகட்டத்திற்குள்ளாக, கடைசியாக முடியவேண்டிய காலம் 1975-ம் ஆண்டு டிசம்பர் என்று சொல்லுகிறார்கள், அதற்குள்ளாக முடிக்கப்படும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

### *Utilisation of surplus water near Madras*

* 308 *Q.*—THIRU A. PARANDHAMAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether there is any proposal under the consideration of the Government to request the Corporation of Madras to give clearance for constructing bed dams across some of the rivers with a view to utilise the surplus water?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** செங்கல்பட்டு மாவட்டம், கேசவரம் கிராமத்தின் அருகில் குசத்தலை ஆற்றின் குறுக்கே ஓர் அணை கட்டும் திட்டம் பற்றி மாநகராட்சி கலந்தாலோசிக்கப்பட்டு, வீராணம் திட்டம் செயல்படுத்தப்பட்ட பின் இதனை பரிசீலனை செய்யலாம் என்ற மாநகராட்சியின் தீர்மானத்தை அரசு ஏற்றுக் கொண்டு இத்திட்டம் தள்ளிவைக்கப்பட்டுள்ளது.

**திரு. ஆ. பரந்தாமன் :** தலைவர் அவர்களே, செங்கற்பட்டு மாவட்டத்தில் இருக்கின்ற ஆறுகளில் ஓடுகின்ற உபரி நீரைப் பயன்படுத்தும் வாய்ப்பும் உரிமையும் 300 அல்லது 400 ஆண்டுக்

காலமாக இருந்து வருகிறது. நூறு ஆண்டுகளுக்கு முன்னால் உருவாகிய சென்னை மாநகராட்சி எங்களுக்கு அத்தகைய உரிமைகளை மறுக்கிறது என்றால், நீங்கள் அதற்கு இசைவு தருவதாக இருந்தால் அந்த வட்டார விவசாயிகளை ஹைகோர்ட்டிலே சந்திக்க வேண்டிவரும். ஆகவே, அரசாங்கம் முன்வந்து, சென்னை மாநகராட்சியை அந்த 'நோ-அப்ஜெக்ஷன் சர்ட்டிபிகேட்' தரும்படியாகச் செய்யுமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கை நியாயமான கோரிக்கை என்பதை அரசு உணருகிறது. அதுபற்றி மாநகராட்சியுடன் மறுபடியும் தொடர்பு கொள்ளலாம் என்று அரசு கருதிக்கொண்டிருக்கிறது.

### மாயூரம் வட்டத்திலுள்ள சாலைகள்

*** 309 வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1971-72-ம் நிதி ஆண்டில் மாயூரம் தாலுகாவில் அரசு நெடுஞ்சாலைத்துறை மேற்கொண்ட சாலைகள் எவையெவை ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மாயூரம் தாலுக்காவிலுள்ள கீழ்க்காணும் இரண்டு சாலைகளை 1971-72 ஆம் ஆண்டு முதல் சீர்செய்வதற்கும், பராமரிப்பதற்கும், நெடுஞ்சாலைத்துறை மேற்கொள்ளுமாறு உத்திரவிடப்பட்டது :—

(1) ஆக்கூர்-முக்கூட்டு-சின்னன்குடி சாலை—4 மைல்.

(2) மாப்படுகை-கடலங்குடி சாலை—9 மைல் 2 பர்லாங்கு.

*** 310 வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் நகரிலுள்ள 2 ஆம் எண் நெடுஞ்சாலையை அகலப்படுத்தி விரிவுபடுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?



**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** இல்லை.

*** 311 வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

(மாயூரம்) மணல்மேட்டிலிருந்து இலுப்பப்பட்டு வழியாக பாப்பாக்குடி கொள்ளிடக்கரை வரை செல்லும் பாதையை செப்பனிடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** இச்சாலையின் ஒரு பகுதி அதாவது கிலோ மீட்டர் 0/0 முதல் 11/6 வரை நல்ல நிலையில் உள்ளது. கிலோ மீட்டர் 11/6 முதல் 13/2 வரை உள்ள மற்ற பகுதியை செப்பனிடும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. என். கிட்டப்பா :** தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் 1971-72-ம் ஆண்டில் மாயூரம் தாலுக்காவில், குறிப்பாக மாயூரம் தொகுதியில் மாப்படுகையிலிருந்து கடலங்குடி வரையில் ஏறத்தாழ பத்து மைல் நீளமுள்ள பஞ்சாயத்து யூனியன் சாலையை நெடுஞ்சாலைத் துறையின் பொறுப்பில் சேர்த்துக்கொண்டிருப்பதாகச் சொன்னார்கள். ஆனால், அந்தச் சாலை, பல முறை வேண்டுகோள் விடப்பட்டும் இன்னும் செப்பனிடப்பட முடியாமல் அல்லது செப்பனிடப்படாமல் இருப்பதால் பஸ் போக்குவரத்து தடைப்பட்டிருப்பது அரசுக்குத் தெரியுமா ? தயவுசெய்து மீண்டும் அதனைப் புனர் பரிசீலனை செய்து விரைவில் அது செய்து முடிக்கப்பட அரசு ஆவன செய்யுமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** அதுபற்றி தனியாக எழுதியனுப்பினால் கவனிக்கலாம்.

**திரு. என். கிட்டப்பா :** தலைவர் அவர்களே, மாயூரம் நகரிலுள்ள இரண்டாம் எண் நெடுஞ்சாலையில் தற்போது போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருப்பதைக்கருதி, மிகக் குறுகலாக இருக்கும் அந்த நெடுஞ்சாலையை அகலப்படுத்தவேண்டுமென்று நீண்ட நாளாக அந்தப் பகுதி மக்கள் விரும்பி நகராட்சியிடம் வற்புறுத்தி வருகிறார்கள். எனவே, நகராட்சிமன்றம் அவர்கள் முறைப்படி தர

வேண்டிய 25 சதவீதப் பணத்தைத் தந்தால் அரசு உடனடியாக அதனை அகலப்படுத்த ஆவன செய்யுமா? தக்க நடவடிக்கை மேற்கொள்ள முன்வருமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, இதற்கு சுமார் நான்கு இலட்ச ரூபாய் செலவாகும் என்று மதிப்பிடப் பட்டிருக்கிறது. ஆனால், அரசாங்கத்திடம் இப்பொழுதிருக்கிற எந்தத் திட்டத்திலும் இது சேர்க்கப்படவில்லை. நிதி நிலை சரியானதற்குப் பிறகு இதுபற்றி யோசிக்கலாம்.

**திரு. என். கிட்டப்பா:** தலைவரவர்களே, மணல்மேட்டிலிருந்து இலுப்பப்பட்டு வழியாக பாப்பாக்குடி கொள்ளிடக்கரை வரையில் செல்லும் அரசினர் நெடுஞ்சாலை நீண்டகாலமாக அரசினர் நெடுஞ் சாலையில் சேர்க்கப்பட்டிருந்தும் 1967 ஆம் ஆண்டுக்குப் பிறகு பல முறை வலியுறுத்தப்பட்டிருந்தும் இன்னும் அது கவனிக்கப்பட முடியாத அல்லது இயலாத நிலையில் இருக்கிறது. ஆகவே, தயவு செய்து அமைச்சரவர்கள் இனிமேலாவது நடவடிக்கை மேற் கொள்ள தொடர்புடைய அதிகாரிகளை வற்புறுத்துவார்களா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, இதற்கான திட்டத்தின்கீழ் 70,000 ரூபாய் மதிப்பிடப்பட்டு அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அது பரிசீலனையில் இருந்து வருகிறது. சீக்கிரத்தில் முடிவெடுக்கப்படும்.

**திரு. எஸ். வடிவேல்:** தலைவரவர்களே, பல ஆண்டுகளாக கொள்ளிடக் கரையை சீர் செய்யாமல் வேலைகள் பாதிக்கப்படு கிறது. அது அந்தப் பகுதியிலுள்ள மக்களின் நீண்ட நாள் கோரிக்கையாக இருப்பதால் அரசு துரிதமாக நடவடிக்கை எடுத்து அதைச் சீர்செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** திட்டம் வந்திருக்கிறது என்று சொன்னேன். பரிசீலனையில் இருக்கிறது. முடிவு சீக்கிரத்தில் எடுக்கப்படும்.

**திரு. என். கிட்டப்பா:** தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் மாண்புமிகு உறுப்பினர் திரு. வடிவேல் அவர்கள் எழுப்பிய கொள்ளிடக் கரையை சீர் செய்து பாதையைச் செப்பனிடுவதற்கான திட்டம் பற்றிய வினாவிற்கு திட்டம் வந்திருக்கிறது, முடிவு சீக்கிரம் எடுக்கப்படும் என்று



சொன்னார்கள். ஆனால் என்னுடைய கேள்வி, மணல்மேட்டிலிருந்து இலுப்பப்பட்டு வழியாக பாப்பாக்குடி கொள்ளிடக்கரை வரை செல்லும் பாதையைப் பற்றிய கேள்வி. எனவே அவர்கள் இன்னொரு அதிகமான வாக்குறுதியைத் தந்திருக்கிறார்கள். அந்தச் சாலையையும், மாண்புமிகு உறுப்பினர் திரு. வடிவேல் அவர்கள் கேட்ட அந்த கொள்ளிடக்கரையைப் பற்றியும் அரசு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வடிவேல் அவர்கள் கேட்ட கேள்வியை, மணல்மேட்டிலிருந்து இலுப்பப்பட்டு வழியாக பாப்பாக்குடி கொள்ளிடக்கரை வரை செல்லும் பாதையைப்பற்றி என்று கருதித்தான் அந்தப் பதிலைச் சொன்னேன். இதற்குத்தான் 70,000 ரூபாய் மதிப்பீட்டில் திட்டம் பரிசீலனையில் இருப்பதாகச் சொன்னேன். எனவே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வடிவேல் அவர்கள் கேட்ட கேள்விபற்றித் தனியாகக் கேள்வி போட்டால் பதில் தர முடியும். இதையே திரு. கிட்டப்பா அவர்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

## கும்பகோணம்-திருவாரூர் சாலை

*312 வினு—திரு. கு. இராசமாணிக்கம்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்பகோணத்திலிருந்து திருவாரூர் செல்லும் சாலையினை நேராக அமைத்திடும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

**திரு. கு. இராசமாணிக்கம்:** தலைவரவர்களே, கும்பகோணத் திலிருந்து திருவாரூர் செல்லும் சாலை வளைந்து வளைந்து செல்கிறது. இதனால் விபத்துகள் ஏற்பட வாய்ப்பாக உள்ளது. ஆகவே அந்தச் சாலையை நேராகப் போடுவதற்கான செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

[1973 நவம்பர் 22

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** *தலைவரவர்களே, வளைந்து வளைந்து செல்வதை நேராக்க வேண்டுமென்றால் ஏறத்தாழ 10 இலட்சம் ரூபாய்க்கு மேலாகும் என்று கூறப்படுகிறது. இருந்தாலும் அரசு எடுத்திருக்கும் திட்டங்களில் சேர்க்கப்படவில்லை. நிதிநிலை சரியாகும்பொழுது இதுபற்றிப் பரிசீலிக்கப்படும்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** *வினாக்கள் 313, 314, 315, 316 ஆகியவை மாண்புமிகு அமைச்சரவர்களின் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகின்றன.*

*Intensive Agricultural Production in Thanjavur district*

* 317. *Q*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Agrilature be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to step up Agriculture production in Thanjavur district during the calendar year 1973; and

(*b*) If so, the details thereof.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** *தலைவரவர்களே, தஞ்சாவூர் மாவட்டத்தில் செயலில் உள்ள மாவட்ட வேளாண்மை முனைப்புத் திட்டத்தின்கீழ், 1973-74-ல் 12,50,000 ஏக்கரில் நெல்லையும், (இவற்றில் ஏறத்தாழ 5 இலட்சம் ஏக்கரில் இருபோக விளைச்சல்), 50,000 ஏக்கரில் சிறு தானியங்களையும், 5,50,000 ஏக்கரில் பயறு வகைகளையும் விளைவிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.*

**திரு. என். டென்னிஸ் :** *தலைவரவர்களே, இப்படிப்பட்ட திட்டங்கள் வேறு மாவட்டங்களிலும் அமல் நடத்தப்படுமா ?*

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** *தலைவரவர்களே, வேறு மாவட்டங்கள் சிலவற்றில் இன்டென்சிவ் அக்ரிகல்சுரல் ஏரியா ப்ரோக்கிராம் அமல்படுகிறது.*

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** *தலைவரவர்களே, இந்தச் சிறப்புத் திட்டத்தினால் எத்தனை டன் அதிகமான நெல் கிடைத்தது என்று அமைச்சரவர்கள் தெரிவிப்பார்களா ? இந்தச் சிறப்புத்*



1973 நவம்பர் 22]

*திட்டத்தை இன்னும் ஏனைய பகுதிகளிலும் விஸ்தரிக்க என்ன செயற்குறிப்பு அரசாங்கத்தின் கையில் இருக்கிறது என்பதையும் தெரிவிப்பார்களா ?*

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** *தலைவரவர்களே, இந்தத் திட்டம் அமலுக்கு வந்ததற்குப் பிறகு முன்னால் 13 இலட்சம் டன்கள் விளைந்த இடத்தில் இப்பொழுது 21 இலட்சம் டன்களுக்கு மேல் விளைகிறது.*

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** *தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் பருத்தி சாகுபடி செய்யும் விவசாயிகள் பெரும் நஷ்டத்திற்கு உள்ளாகிவிட்டார்கள் என்பதை அறிந்து, அதை நல்ல பலன் கிடைக்கும் அளவில் மாற்றியமைக்க முயற்சிக்கப்படுமா ? இல்லையென்றால் இதைக் கைவிட்டுவிடும் உத்தேசம் உண்டா ? இதில் அமைச்சரவர்கள் எதை விரும்புகிறார்கள் ?*

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** *தலைவரவர்களே, பருத்தி சாகுபடி சோதனை செய்து பார்க்கப்பட்டது தஞ்சை மாவட்டத்தில். ஜனவரியில் ஆரம்பித்து ஜூன் மாதத்தில் பருத்தி விளைந்தாக வேண்டும். நான்கு மாதங்களில் பலன் கிடைக்கும் பருத்தியை சென்ற ஆண்டு சோதனை செய்து பார்த்ததில் நன்கு விளைந்தது. ஆனால் அந்தச் சமயத்தில் மார்க்கெட் இல்லாமல் போய்விட்டது. மீண்டும் அதைத் தீவிரப்படுத்தத் திட்டமிருக்கிறது.*

**திரு. கே. டி. கே. தங்கமணி :** *சார், இந்த "இன்டென்சிவ் அக்ரிகல்சுரல் ஸ்கீம் ஏரியா" மதுரை, திருநெல்வேலி, கோயம்புத்தூர், திருச்சி, செங்கற்பட்டு போன்ற மாவட்டங்களுக்கு விஸ்தரிக்கப்பட்டிருக்கிறதே ? அங்கெல்லாம் தஞ்சை மாவட்டத்திற்குக் கிடைக்கும் அளவிற்கு உரம் கிடைக்கவில்லை என்று இன்டென்சிவ் அக்ரிகல்சுரல் ஸ்கீமின் அந்தக் கமிட்டியில் சிபார்சு செய்யப்படுகிறதே. அது எந்த அளவிற்குக் கவனிக்கப்பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** *தலைவரவர்களே, உரம் இன்னின்ன மாவட்டங்களுக்கு இவ்வளவு என்பதைப்பற்றி இந்தக் கூட்டத் தொடர் முடிவிற்குள்ளாக அறிவிக்க முடியும் என்று நினைக்கிறேன். தனியாகக் கேள்வி போட வேண்டுமென்ற தேவையில்லை.*

[1973 நவம்பர் 22

**திரு. ஆ. கு. சுப்பையா :** தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்திலுள்ள வேளாண்மை உற்பத்திப் பெருக்க முறையில் தஞ்சாவூர் மாவட்டத்தில் முனைப்புத் திட்டத்தின் மூலம் விவசாயிகளுக்கு என்னென்ன உதவி செய்யப்பட்டது? அந்த உதவி குத்தகை விவசாயிகளுக்கும் கிடைக்கிறதா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவரவர்களே, விவசாயிகளுக்கு உரம் அல்லது தீவிரமான விதைகள், High yielding varieties of paddy அல்லது பூச்சி மருந்துகள் அவ்வப்பொழுது கிடைக்க, அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல் என்ன விதமாக விதைத்து அறுவடை செய்ய வேண்டுமென்பதைப்பற்றியெல்லாம் விவசாயிகளுக்குச் சொல்லிக் கொடுக்கக்கூடிய திட்டங்களெல்லாம் செயல்பட்டு வருகின்றன.

**திரு. எஸ். வடிவேல் :** தலைவரவர்களே, கொடுக்கப்படும் விதைகள், உரங்கள், பூச்சி மருந்துகள் போன்றவை இனாமாக வழங்கப்படுகின்றனவா அல்லது கடனாகக் கொடுக்கப்படுகின்றனவா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவரவர்களே, முன்னால் ஒரு பகுதி இனாமாகக் கொடுக்கப்பட்டு வந்தது. ஆனால் இப்பொழுது விலைக்கு வாங்க விவசாயிகள் தயாராக இருப்பதாலும், மேலும் அதை எல்லோருக்கும் பழக்கப்படுத்திவிட்டதாலும் மேற்கொண்டு இனாமாகவோ, அல்லது ஒரு பகுதி இனாமாகவோ, கொடுக்க வேண்டியதில்லை என்ற நிலை ஏற்பட்டு, இப்பொழுது விலைக்குக் கிடைத்தாலே போதும் என்ற அளவில் இருக்கிறது.

**திரு. நா. வீராசாமி :** தலைவரவர்களே, இந்த 'இன்டென்சிவ் ஸ்கீமை' தஞ்சாவூர் மாவட்டத்திற்கு நிறைவேற்றுவதற்கு அரசாங்கத்திற்கு எவ்வளவு செலவாகும் என்பதை அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** எவ்வளவு செலவு என்ற விவரம் இப்பொழுது என் கையில் இல்லை.



1973 நவம்பர் 22]

**திரு. ஆ. பரந்தாமன் :** தலைவரவர்களே, இந்த உர விநியோகத்தைப் பொறுத்தவரையில் ரெவின்யூ போர்டு ஒரு உத்தரவையிட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் 'ஹை யீல்டிங் வெரைட்டீஸ்'-களுக்கு, உயர்ந்த விளைச்சல் தரும் ரகங்களுக்கு மட்டும் கொடுக்க வேண்டுமென்று உத்தரவு பிறப்பித்திருப்பதாகத் தெரிகிறது. இதன் காரணமாக மாவட்டம் முழுதும் உள்ள விவசாயிகள் நெல் பயிரிடும் நேரத்தில் உரம் பெற முடியவில்லை. எனவே, இந்த உத்தரவை அரசு ரத்து செய்யுமா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவரவர்களே, 'ஹை யீல்டிங் வெரைட்டீஸ்'-க்கு மட்டும்தான் இந்தவிதமான உரம் கொடுக்க வேண்டுமென்றில்லை. ஆனால் உரம் விநியோகிக்கும் பொழுது 'ஹை யீல்டிங் வெரைட்டீஸ்'-க்கு முதலிடம் கொடுக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் இரண்டு போக சாகுபடி மூலம் 5 இலட்சம் ஏக்கராவிற்கு என்று இலக்கு இருக்கிறது. மூன்றாண்டுகளாகவே இரண்டு போக சாகுபடி நடக்கிறது. அங்கே தண்ணீர் வசதி அதிகமாக இருப்பதால் 5 இலட்சம் ஏக்கர் என்பதை இன்னும் அதிகப்படுத்த அரசு முயற்சி செய்யுமா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கடந்த வரவு செலவுத் திட்டத்தின்பொழுது பேசிய பேச்சுக்களை நான் படித்துப் பார்த்து, அவர்கள் சொல்லிய சிறந்த யோசனைகளில் நான் ஈடுபட்டிருக்கிறேன். அவர்கள் குறிப்பாகச் சொன்னார்கள், இப்பொழுது இரண்டு போகம் விளைவதற்கு இடையூறாக இருப்பது, முதல் போகத்தை நாம் போட்டு, அறுவடை செய்யும் சமயத்தில் வரும் வடகிழக்குப் பருவமழை, அதாவது ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் பெய்யும் மழை. ஆகவே, 105 நாட்களில் விளையும் கன்னகி, கருணா போன்ற வித்துக்களை, இன்னும் கொஞ்சம் சீக்கிரமாக விளையும்படி தயார் செய்ய வேண்டுமென்று போன கூட்டத்தில் உறுப்பினரவர்கள் சொன்னார்கள். அது சிறந்த யோசனை. இப்பொழுது தீவிரமாக ஆராய்ச்சி செய்து பார்த்ததில் ஓரளவு வெற்றி அடைந்திருக்கிறோம். புதிய விதையைக் கண்டு பிடித்திருக்கிறோம். இதைப் பெருக்கிக் கொண்டு இருக்கிறோம். இவைகளை விவசாயிகளுக்குக் கொடுக்கும் நேரத்தில் 5 இலட்சம்

[1973 நவம்பர் 22

ஏக்கர் மட்டுமல்ல, ஏறத்தாழ 12 இலட்சம் ஏக்கர்கள் சாகுபடி செய்ய முடியும். அப்பொழுது இன்னும் அதிகமான விளைச்சல் பெருகும்.

**திரு. கே. எ. வகாப்:** அமைச்சர் அவர்கள் ஹை ஈல்டிங் வெரைட்டிசுக்கு முதலிடம் கொடுத்து உரம் தரப்படுவதாகக் கூறினார்கள். போதிய அளவு உரம் கிடைக்காமல் உரத்தின் விலை இரண்டு மடங்கு வெளி மார்க்கெட்டில் விற்பது அரசுக்குத் தெரியுமா? உரத்தின் விலையைக் குறைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** உரத்தைப் பற்றி ஒரு விரிவான அறிக்கை தயார் செய்து கொண்டிருக்கிறேன். இந்தக் கூட்டம் முடிவதற்குள்ளாகச் சொல்ல இருக்கிறேன். இப்போது உற்பத்தியாகும் உரத்தில் மூன்றில் ஒரு பங்குதான் அரசாங்கத்தின் மூலம் விநியோகம் செய்யப்படுகிறது. மெட்ராஸ் பெர்டிலைசர்ஸ் தயாரிக்கும் உரத்தில் மூன்றில் ஒரு பங்கைத்தான் அரசாங்கத்திற்குக் கொடுக்கிறார்கள். இரண்டு பங்கைத் தனியார் மூலம் கொடுத்துத்தான் விநியோகம் செய்ய வேண்டுமென்று கட்டாயப்படுத்துகிறார்கள். எல்லா உரமுமே அரசாங்கத்தின் மூலம் விநியோகம் செய்யப்பட வேண்டுமென்பதற்காக இப்போது மத்திய சர்க்காருக்கு எழுதி இருக்கிறோம். லிக்னைட் கார்ப்பரேஷனில் தயாரிக்கப்படும் உரத்திலும், மூன்றில் ஒரு பங்குதான் அரசுக்குக் கொடுக்கிறார்கள். அரசாங்கத்திற்குக் கிடைக்கும் மூன்றில் ஒரு பங்கு உரமானது சீராக, கட்டுப்பாடான விலைக்குத்தான் விற்கப்படுகிறது. தனியாருக்கு மூன்றில் இரண்டு பங்கு போகிற காரணத்தால் விலை அதிகமாக இருக்கிறது என்பது உண்மை, ஒப்புக் கொண்டுதான் ஆகவேண்டும். அதைத் தடுக்க தமிழகத்தில் உற்பத்தி ஆகும் எல்லா உரமும் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்குள் வர வேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

**திரு. சி. ஆறுமுகம்:** அமைச்சர் அவர்கள் கூறுகின்ற நேரத்தில் வருவாய்த் துறையில் அப்படிப்பட்ட உத்தரவு ஏதும் இல்லையென்று கூறினார்கள். கூட்டுறவுச் சங்கத்தில் உரம் கேட்டால் 'பொன்னி' போன்ற ரகத்திற்கு மட்டுந்தான் கொடுக்கிறார்களே தவிர, சம்பா, சிறுமணி போன்ற ரகத்திற்கு உரம் கொடுப்பதில்லை.



1973 நவம்பர் 22]

இதனால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். ஹை ஈல்டிங் வெரைட்டிசுக்கும், ஆறு, ஏழு கிலோதான் கொடுக்கிறார்கள். ஒரு ஏக்கருக்கு 60, 70 கிலோ போட வேண்டும். இதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** நான் சொன்னபடி மூன்றில் ஒரு பங்கு உரந்தான் அரசாங்கக் கட்டுப்பாட்டுக்குள் வருகிறது. அதைப் பங்கீடு செய்து எவ்வளவு கொடுக்க முடியுமோ அதைச் சீராகக் கொடுத்துக் கொண்டு வருகிறோம்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** மெட்ராஸ் பெர்டிலைசர்ஸ், நெய்வேலி ஆகிய இடங்களிலிருந்து மூன்றில் ஒரு பங்கு உரந்தான் கிடைக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இன்றைக்கு மத்தியப் பிரதேசம் போன்ற மாநிலங்களில் உற்பத்தியாகும் உரம் பூராவையும் பரிபூரணமாக அரசு எடுத்துக் கொண்டு விநியோகம் செய்து வருகிறது. அதுபோன்று இங்கும் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** அங்கெல்லாம், அரசாங்கம் அப்போது மத்திய அரசுக்கு எழுதி அந்த அதிகாரத்தைப் பெற்றது. ஸ்ரீராம் கெமிகல்ஸ் உற்பத்தி செய்கிற உரம் அத்தனையும் அவர்கள் மாநிலத்திலேயே வைத்துக் கொள்கிறார்கள். நாமும் அந்த முறையில் எழுதி இருக்கிறோம். நம்முடைய மாநிலத்தில் உற்பத்தியாகும் உரம் பூராவும் நமக்குக் கிடைத்தால் போதுமானது.

**திரு. கே. கந்தசாமி:** மூன்றில் ஒரு பங்கு உரந்தான் அரசே நேரடியாக விநியோகம் செய்வதற்குக் கிடைப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அந்த உரமும் நமது மாநிலத்திலே உள்ள வட மாவட்டங்களுக்குத்தான் அதிகமாகக் கொடுக்கப்படுகிறதே தவிர, தென் மாவட்டங்களான மதுரை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களுக்குக் குறைவாகத்தான் கொடுக்கப்படுகிறது. இதை அரசு அறியுமா? இதை நீக்க உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனியார் துறையில் விநியோகம் செய்கிற உரத்திற்கும் அரசுத் துறையில் விநியோகம் செய்யும் உரத்திற்கும் இடையே

சற்றுக் குழப்பமாகப் பேசுகிறார்கள் என்று கருதுகிறேன். அரசுத் துறையில் விநியோகம் செய்யப்படுகிற உரம் பாரபட்சம் இல்லாமல் இந்த மாவட்டத்திற்கு இவ்வளவு என்று நிர்ணயித்து சீராக விநியோகிக்கப்படுகிறது. தனியாரும் உரத்தை விற்றாக வேண்டுமென்று மத்திய சர்க்கார் சொல்வதால் மூன்றில் இரண்டு பங்கு உரம் திறந்த சந்தையில்—ஓப்பன் மார்க்கெட்—வெளிச் சந்தையில் விற்கப்படுகிறது. வெளி மாநிலத்திற்கு எடுத்துச் செல்வதைத் தடுக்க போதிய அதிகாரம் இல்லாமல் இருப்பதால் அதற்குத் தனியாகச் சட்டம் போட்டாக வேண்டும். மற்ற மாநிலங்களுக்குக் கொடுத்திருப்பது போன்ற உரிமையை நாமும் கேட்டிருக்கிறோம்.

**திரு. கு. காமாட்சி :** அமைச்சர் அவர்கள் அண்மையிலே 30 ஏக்கர் நிலத்தில் விளையும் கரும்பிலிருந்து 7,000 லிட்டருக்கு மேல் பெட்ரோல் தயாரிக்கலாம் என்று சொன்னார்கள். கரும்பு சாகுபடியை தீவிரப்படுத்தி பெட்ரோல் தயாரித்தால் இப்போதிருக்கும் சூழ்நிலையில் வரவேற்கக்கூடியதாக இருக்கும். அவ்வாறு பெட்ரோல் உற்பத்தி செய்யும் செயற்குறிப்பு இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** கரும்பிலிருந்து சர்க்கரைக்குச் சாறு எடுத்த பிறகு உள்ள கழிவிலிருந்து பவர் ஆல்கஹால் தயாரிக்க முடியும் என்றுதான் சொன்னேன். பெட்ரோல் அல்ல. ஒரு ஏக்கர் கரும்பு கழிவிலிருந்து 7,500 லிட்டர் பவர் ஆல்கஹால் தயாரிக்க முடியும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தனியார் துறையில் பாரி கம்பெனி, ஷா வாலஸ் உர விநியோகம் செய்து கொண்டிருக்கின்றன. அந்த உர விநியோகத்தைக் கட்டுப்படுத்தி மாநில அரசாங்கமே எடுத்து நடத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றனவா ? அதன் விவரங்களை அறிவிக்க இயலுமா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** இதிலே இரண்டு மூன்று கன்ட்ரோல் ஆர்டர் இருக்கிறது. ஃபெர்டிலைசர் கன்ட்ரோல் ஆர்டர், ஃபெர்டிலைசர் மூவ்மென்ட் கன்ட்ரோல் ஆர்டர், எஸென்ஷியல் கமாடிடிஸ் ஆக்ட் என்று இருக்கின்றன. எஸென்ஷியல் கமாடிடிஸ் ஆக்டின் கீழ் அதிகாரத்தைச் செலுத்த மத்திய அரசின் சம்மதத்தைப் பெற வேண்டும். தனியார் துறையில்



பாரி கம்பெனி, ஷா வாலஸ் கம்பெனிகள் சில்லறை வியாபாரிகளை நியமித்திருக்கிறார்கள். அதிலே இப்போது எந்தவிதமான கட்டுப்பாடும் செய்ய முடியாது. அதனால் கறுப்புச் சந்தை, கள்ளச் சந்தை ஏற்பட்டிருக்கிறது. நாம் பார்த்துக் கொண்டு சும்மா இருக்க வேண்டிய நிலைமையில் இருக்கிறோம். அதற்குத் தகுந்த அதிகாரம் இல்லை. அதிகாரத்தைப் பெற்றாக வேண்டும். அதற்கு என்ன வழி என்று பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

**திரு. ஏ. எம். இராஜா :** இப்போது இருக்கின்ற உரத் தட்டுப்பாடு இன்னும் சில ஆண்டுகள் தொடர்ந்து இருக்கும் என்ற நிலை இருக்கிறது. இப்போது நம்முடைய விவசாயப் பல்கலைக் கழகத்தின் மூலம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்ற ஹைஈல்டிங் வெரைட்டிஸ் நெற்பயிர்களுக்கு எல்லாம் 70 அல்லது 75 கிலோ நைட்ரஜன் தேவைப்படுகிறது. அதற்கு மாறாக குறைந்த அளவு நைட்ரஜன், 10 அல்லது 15 கிலோ பயன்படுத்துகிற அளவுக்கு மிகு பயன் தருகிற புதிய பயிர்களைக் கண்டுபிடிக்க விவசாயப் பல்கலைக் கழகத்தை அரசாங்கம் ஊக்குவிக்குமா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** எவ்வளவு உரம் போட வேண்டும், எவ்வளவு போட்டால் அதிகப்படியான உரம் கிடைக்கும் என்ற ஆராய்ச்சி கோவையிலும், ஆடுதுறையிலும், ஹைதராபாத்திலும் நடக்கிறது. ஹைதராபாத்தில் 'All-India Coordinated Rice Research Project' என்ற பெயரில் ஆராய்ச்சி நடக்கிறது. நான் அங்கு நேரில் சென்று பார்த்தேன். உரமே இல்லாமல் விளையக்கூடிய பயிர்கள், 10 கிலோ உரத்தில் விளையக் கூடிய பயிர்கள், 15 கிலோ உரத்தில் விளையக்கூடிய பயிர்கள் என்று, நாற்றாகப் போட்டுப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். பரிசோதனை நடந்து கொண்டிருக்கிறதே தவிர, இன்னும் முடிவாக எதுவும் கண்டு பிடிக்கப்படவில்லை. உரத்திற்குப் பதிலாக, யூரியாவிற்குப் பதிலாக, பாக்டிரியா-ரிசோபியா சேர்ப்பது பற்றி ஆராய்ச்சி முடிவுற்று ஆகாயத்தில் ஒரு பங்கு ஆக்சிஜன், 4 பங்கு நைட்ரஜன் இருக்கிறது என்றும், கானாகவே அதை நிலத்தில் செலுத்துவதற்கான வழிபற்றி முயற்சி நடக்கிறது.

**திரு. செ. கந்தப்பன் :** தலைவர் அவர்களே, உரப் பற்றாக்குறை நீடிக்கிற வரையில் விலைவாசியேற்றத்தினையும், கள்ளச் சந்தையின் கேடுபாடுகளையும் தவிர்ப்பது எவ்வளவு கடினம் என்பதை நாம்

அறிவோம். உரத் தட்டுப்பாட்டைப் போக்க நமது மாண்புமிகு தமிழக முதல் அமைச்சர் அவர்கள் இன்று தூத்துக்குடியில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிற உரத் தொழிற்சாலை போன்று கடலூரிலும் பெரிய ஒரு உரத் தொழிற்சாலை கூட்டுத்துறையில் வரும் என்ற விவசாயிகளுக்கு மகிழ்ச்சி தரும் அறிவிப்பைச் செய்திருக்கிறார்கள். ஆகவே, இன்றுள்ள சூழ்நிலையை மனதில் கொண்டு அதை நம் அரசு விரைவுபடுத்துமா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்:** மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் ஸ்பிக்-க்கு, தூத்துக்குடியில் உள்ள உரத் தொழிற்சாலைக்குச் சென்றபோது அவர்களும் சொன்னார்கள். அங்கு ஏறத்தாழ நாள் ஒன்றுக்கு 1,600 டன் யூரியா உற்பத்தி செய்யும் திறமையிருக்கிறது. 1,600 டன் யூரியா, 1,100 டன் அம்மோனியா, வேறு இதர உர வகைகளும் அங்கு தயார் செய்ய திட்டமிட்டிருக்கிறார்கள். அது அடுத்த ஆண்டு ஜூன் அல்லது ஜூலை மாதந்தான் தயாராகும். அதாவது வரத் தொடங்கும் என்று சொன்னபோது இரண்டு மாத அளவிற்காவது அதைச் சீக்கிரமாகத் தொடங்க முடியுமா என்று கேட்டிருக்கிறோம்.

**திரு. காதர் பாட்சா என்ற வெள்ளைச்சாமி:** இப்போது அரசாங்கம் மூலம் விநியோகம் செய்யப்படுகிற உரங்கள் கூட்டுறவுச் சங்கங்களில் வருடக் கடன் திட்டத்திற்கு 70 சதவிகிதம் என்றும் வருடக் கடன் வாங்காத விவசாயிகளுக்கு 30 சதவிகிதமும் வழங்கப்பட ஆணை இருக்கிறது. ஒவ்வொரு கிராமத்திலும் வருடக் கடன் திட்டத்தில் ஈடுபடாதவர்கள் அதிகமாக இருப்பதால் இந்த எண்ணிக்கையை அதாவது கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினர்களாக இல்லாதவர்களுக்கு 70 சதவிகிதம் என்றும், கூட்டுறவுச் சங்கங்களில் அங்கத்தினர்களாக உள்ளவர்களுக்கு 30 சதவிகிதம் என்றும் மாற்றிக் கொடுப்பதற்கு அரசு ஆணையிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்:** கூட்டுறவுச் சங்கங்களில் அங்கத்தினர்களாக இருப்பவர்கள் அல்லது அங்கத்தினர்களாக இல்லாதவர்கள் என்ற எந்தவிதமான பாகுபாடும் இல்லாமல் உர விநியோகம் செய்ய வேண்டும் என்ற உத்தரவைத்தான் அரசு பிறப்பித்திருக்கிறது.





THIRU K. S. KOTHANDARAMIAH: With regard to distribution of fertilisers through co-operative societies in the rural areas, there are some difficulties. Ryots are not able to get fertilisers in time. The reason for this is that there is only one clerk for three or four societies. When fertiliser comes to one society, the president wants it to be distributed in his society area, and there is difference of opinion between the presidents of these societies with the result the clerk is not able to devote his time to any one society. This matter has been discussed in the District Development Council meeting at Dharmapuri and we have pleaded for posting of one clerk for each society. At present due to difference of opinion between presidents and due to the fact that there being only one clerk for four or five societies, the ryots do not get fertilisers in time. Will the Hon. Minister consider this and instruct the Co-operative Department authorities and see that one clerk is posted for each society so that there would be proper distribution of fertilisers?

THE HON. THIRU Si. Pa. ADITANAR: All co-operative societies which are capable of distributing fertilisers have been authorised to distribute fertilisers. For every district there is one Regional Officer for Fertilisers in the co-operative sector and he will inform the hon. Member what is the quantity allotted to each village.

**திரு. அ. ஆறுமுகம்:** உரத் தட்டுப்பாட்டை நீக்க தழைச் சத்து மிகச் சிறந்ததாக இருக்கிறது. ஆகவே பாரஸ்ட் நிலங்களில் தழைச் சத்தை உண்டாக்கக்கூடிய ஒரு சிறந்த ஏற்பாட்டை அரசு செய்யுமா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்:** தழைச் சத்து என்று சொல்லும் நைட்ரஜன் முக்கியமான உரம் என்பது எல்லோரும் ஒப்புக் கொள்ளப்பட்டதாகும். ஆனால் அதை பாரஸ்ட் டிப்பார்ட்மெண்டில் தயார் செய்து அங்கிருந்து இங்கு கொண்டு வருவதற்கு கூலி கூட கட்டுபடியாகாது. ஆகவே விவசாயிகளைக் கேட்டுக் கொள்வது என்னவெனில் தழைச் சத்தை அந்தந்த நிலங்களிலேயே நீங்கள் உற்பத்தி செய்து கொள்ளலாம் என்பதுதான். 'ஸெஸ்பேனியா ஸ்பீஷியோஷா' உற்பத்தி செய்து அதன் தழையை பயன்படுத்திக்கொள்ள முடியும்.

## *Research on cultivation of radish*

* 318 *Q*.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether the Agricultural University has made any Research into the large scale production of radish in this State; and

(*b*) if so, the details thereof?

***மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:*** (அ) & (இ) ஆம். குறைந்த காலத்தில் அதிக விளைச்சல் தரும் முள்ளங்கி பற்றிய ஆராய்ச்சி 1972-ம் ஆண்டு தொடங்கப்பட்டு இன்னும் நடைபெற்று வருகிறது. விதைகள் முப்பது நாட்களில் ஏறத்தாழ 5,000 கிலோ, ஐந்து டன் கிழங்கு தயாரிக்க முடியும் என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. ஆராய்ச்சி தொடர்ந்து நடைபெறுகிறது.

***திரு. கே. கந்தசாமி:*** கோவை விவசாயக் கல்லூரியில் உள்ள ரிசர்ச் ஸ்டேஷனில் முள்ளங்கி பற்றி பல விவரங்கள் தெரிந்துள்ளதாகச் சொல்கிறார்கள். சென்ற ஆண்டைவிட எல்லாப் பொருள்களின் விலைவாசியும் உயர்ந்திருக்கும்போது கரும்பின் விலை மட்டும் அதாவது கரும்பின் விலை மலிவாக இருப்பதாக விவசாயிகள் வேதனைப்படுகிறார்கள். கரும்பில் உள்ள மொலாஸஸ்-ல் இருந்து விலை உயர்ந்த பொருள்களைக் கண்டு பிடித்திருப்பதாகக் கூறுகிறார்கள். இது விவசாயக் கல்லூரி ஆராய்ச்சியின் விளைவாகக் கண்டு பிடிக்கப்பட்டதா? அப்படிக் கண்டுபிடிக்கப்பட்டிருந்தால் அதன் பலனைக்கொண்டு, கரும்பிலிருந்து கிடைக்கக்கூடிய பலனைக் கொண்டு கரும்பின் விலை உயர உடனடியாக அரசு அதை என் கைக்கொள்ளக் கூடாது.

***மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:*** நான் சொன்னது ஒருவேளை அவர்களுக்குச் சரியாக கேட்காமல் இருந்திருக்கலாம். நான் கிழங்கைப் பற்றிச் சொன்னேன். அவர்கள் கரும்பைப் பற்றி கேள்வி கேட்டிருக்கிறார்கள். கரும்பின் விலை பற்றி அவர்கள் ஆவலாக இருக்கிறார்கள் என்பதை நான் குறிப்பாகத் தெரிந்து கொண்டேன். அதுபற்றி இப்போது ஆராய்ந்து கொண்டிருக்கிறோம். விலையைச் சற்று உயர்த்துவதற்கு வேண்டிய முயற்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன.





## அமோக விளைச்சல் தரும் சப்போட்டா ரகம்

* 319 வினா திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை விவசாயப் பல்கலைக் கழகத்தின் மூலம் அதிக விளைச்சல் தரும் சப்போட்டா பழ ரகம் ஏதேனும் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

***மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:*** (அ) & (இ) ஆம். கோ 1 என்ற சப்போட்டா வெளியிடப்பட்டுள்ளது. இதுவரை 360 ஒட்டுச் செடிகள் பயிரிட வழங்கப்பட்டுள்ளன. மரம் ஒன்றுக்கு சராசரி 40 கிலோ மகசூல் கிடைக்கும். இவ்வகை சப்போட்டா மரங்கள் நோயினாலும் பூச்சிகளாலும் பாதிக்கப்படுவதில்லை.

***திரு. பெ. சௌந்தரபாண்டியன்:*** இப்படி ஆராய்ச்சி செய்து கண்டுள்ள சப்போட்டா மரங்கள் வெளி மாநிலங்களுக்கு பரிசோதனைக்காக அனுப்பப்பட்டனவா? நம் மாநிலத்தில் எந்தெந்தப் பகுதிகளில் அது பயிரிடப்படுகிறது?

***மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:*** வெளி மாநிலங்களுக்கு அனுப்பத்தக்க அளவிற்கு இங்கு தயாராகவில்லை. ஆகவே வெளி மாநிலங்களுக்கு அனுப்பப்படுவதில்லை என்று நான் கருதுகிறேன். எந்தெந்த மாநிலங்களுக்கு எவ்வளவு மரங்கள் கொடுக்கப்பட்டன என்ற விவரம் என் கைவசம் இப்போது இல்லை.

## மதுரை மாவட்டத்தில் உருளைக்கிழங்கு உற்பத்திப் பெருக்கத்திற்கு ஊக்கம்

* 320 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டத்தில், உருளைக்கிழங்கு சாகுபடி செய்வதற்கென விவசாயிகளை ஊக்குவிக்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறதா?

(இ) ஆம் எனில், 1972–73-ல் எவ்வளவு ஏக்கரில் உருளைக்கிழங்கு சாகுபடி மேற்கொள்ளப்பட்டது?

[1973 நவம்பர் 22

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** (அ) & (இ) ஆம். 1972–73-ம் ஆண்டு மதுரை மாவட்டத்திலுள்ள கொடைக்கானல் தாலுக்காவில் 7,113 ஏக்கரில் உருளைக்கிழங்கு பயிர் செய்யப் பட்டது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** உருளைக்கிழங்கு பயிரிடும் விவசாயிகளுக்கு எந்தெந்த வகைகளில் அரசு உதவி செய்து ஊக்கமளிக்கிறது ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** விதை கொடுக்கிறார்கள். இன்னும் அதைப் பயிரிடுவதற்கு வழிவகைகள் எல்லாம் சொல்கிறார்கள். வேறு என்னென்ன உதவிகள் என்ற விவரம் இப்போது என் கைவசம் இல்லை. ஆனால் அரசாங்கம் முன்னின்று, நல்ல தரமான விதைகளை அவர்களுக்கு வழங்கச் செய்கிறோம் என்பது எனக்குத் தெரியும்.

**திரு. எம். தேவராசன் :** நீலகிரியில் உள்ள இண்டோ-ஜெர்மன் மேம்பாடு திட்டத்திற்கு எக்ஸ்டென்ஷன் கொடுக்கப் பட்டிருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** கொடுக்கப்பட்டிருக் கிறது.

**THIRU K. S. KOTHANDARAMIAH :** Potato is grown in large quantities in Hosur and Denkanikota taluks. The growers there want to preserve it till they get good prices. For that they require cold storage facilities. Will the Hon. Minister see that such facilities are provided in Hosur taluk?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** எப்படி பரிசர்வ் செய்து வைப்பது என்பது பற்றிச் சொன்னார்கள். சென்னைக்கு கொண்டு வந்தால் இங்கு குளிர்பதன அறைகள் இருக்கின்றன. அங்கு வைக்கலாம். ஓசூரில் வைத்தால் கிழங்கு விற்பனையாகாது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலளிக்கும்போது என்னென்ன விதைகள் தருகிறோம் என்பது பற்றி விவரம் இல்லை என்று சொன்னார்கள். எவ்வளவு தொகைதான் ஒதுக்கப்பட்டது என்பதற்காவது விவரம் இருக்கிறதா ?



1973 நவம்பர் 22]

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டது என்பதற்குக்கூட விவரம் இப்போது என் கைவசம் இல்லை. ஆனால் இதில் சற்று எச்சரிக்கையாக இருக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. ஏனெனில் ஊட்டியில், தேவராசன் அவர்கள் இடத்தில், உருளை பயிர் செய்து 'கோல்டன் நெமட்டோட்' பூச்சி வந்து அரித்து அந்தப் பூச்சிகளிடமிருந்து பயிரை அதாவது கிழங்கை எப்படிக் காப்பாற்றுவது என்பது பற்றி ஜெர்மன் நிபுணர்களுக்குக்கூடத் தெரியாமல் திண்டாடிக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில் மேற்கொண்டு விஸ்தரிப்பது என்பதில், சிறிது எச்சரிக்கையோடு விஸ்தரிக்க வேண்டுமென்று நாம் கருதுகிறோம்.

**திரு. கு. ஆ. பொம்மன் :** தலைவரவர்களே, விவசாயிகளுக்குத் தரமான விதைகள் தரப்படுவதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். தரமான விதைகள் எங்கேயிருந்து உற்பத்தி செய்யப்பட்டுக் கொடுக்கப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தற்போது வரும் உருளைக்கிழங்கு விதைகள் ஊட்டி பகுதியில் இருந்து தான் வருகின்றன.

## மதுரை மாவட்டத்தில் தென்னந் தோப்புகள்

*321 வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டத்தில் தென்னந்தோப்புகளை உருவாக்கும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எத்தனை ஏக்கரில் உருவாக்கத் திட்டமிடப் பட்டுள்ளது ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** (அ) ஆம்.

(இ) வேளாண்மை மறுநிதி உதவிக் கழகத்திடமிருந்து நிதி உதவி பெற்று, மதுரை மாவட்டத்தில் நான்கு ஆண்டு காலத்தில் ஐயாயிரம் ஏக்கர் நிலத்தில் தென்னந்தோப்புகள்

வளர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது. வேளாண்மை மறுநிதி உதவிக் கழகம் ரூ. 137 லட்சம் மூலதனத்திற்குத் தன் பொதுவான ஒப்புதலை வழங்கியுள்ளது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவரவர்களே, உருவாக்க இருக்கும் தென்னந்தோப்புகள் மதுரை மாவட்டத்தின் எந்தெந்தப் பகுதிகளில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது? தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் இடங்கள் எவையெவை என்பதை அறிவிக்க இயலுமா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவரவர்களே, மதுரை மாவட்டத்தில் மதுரை தெற்கு, மதுரை வடக்கு, மேலூர், திண்டுக்கல், திருமங்கலம், நிலக்கோட்டை, வேடசந்தூர், பழனி உசிலம்பட்டி, பெரியகுளம், உத்தமபாளையம் ஆகிய இடங்களில் பயிரிடத் திட்டம் செயல்பட இருக்கிறது.

**சேலம் மாவட்டத்தில் விவசாய ஆராய்ச்சி நிலையம்**

*322 வினா—**திரு. என் கிட்டப்பா :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்தில் விவசாய ஆராய்ச்சி நிலையம் ஒன்று அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** சேலம் மாவட்டத்தில் தற்போது மரவள்ளிக் கிழங்கு ஆராய்ச்சி நிலையம் ஒன்று செயல்பட்டு வருகிறது.

**திரு. என். கிட்டப்பா :** தலைவரவர்களே, இம்மாதிரியான விவசாய ஆராய்ச்சி நிலையங்கள் அல்லது கூடங்களை ஒவ்வொரு மாவட்டத்திலும் ஏற்படுத்த அரசிடம் திட்டமுள்ளதா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவரவர்களே, இந்த கேள்வி மரவள்ளிக் கிழங்கைப் பற்றியது. அதாவது டாபியோகா. இந்தக் கிழங்கு கடலோரப் பகுதிகளிலும், மணற்பாங்கான பகுதிகளிலும், தொளதொளப்பான சாயில்களிலும் உற்பத்தியாகிறது. சேலம் ஆராய்ச்சி நிலையத்தில் கண்டுபிடிக்கப் பட்ட எஸ். 4 ஒரு ஏக்கருக்கு 15 டன் 10 மாதங்களுக்குக் கொடுக்கிறது. ஆனால் தஞ்சை மாவட்டத்தில், களி மண்





பிரதேசமான அங்கே, இந்தக் கிழங்கு உற்பத்தி செய்ய முடியாது. இதை எல்லா மாவட்டங்களுக்கும் விஸ்தரிப்பது என்பது வேண்டாத ஒன்றாகும்.

**திரு. தி. பொன்னுமலை :** தலைவரவர்களே, தமிழகத்திலே எல்லா மாவட்டங்களையும் விட சேலம் மாவட்டத்தில் தான் எல்லாப் பொருள்களும் விளைகின்றன. மற்ற மாவட்டங்களில் கரும்பு, நெல் இந்த இரண்டும்தான் விளைகின்றன. சேலம் மாவட்டத்தில் எல்லாப் பொருள்களும் உற்பத்தி ஆகின்றன. ஆகவே, அங்கேயொரு விவசாய ஆராய்ச்சி நிலையம் ஏற்படுத்த அரசு உத்தரவு பிறப்பிக்குமா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவரவர்களே, நண்பர் அவர்கள் சொன்னது ரொம்ப காலமாகத் தமிழகத்திற்குத் தெரிந்தது. நெல்லும், கரும்பும் நிலத்திற்கு அணிகலன் என்பது பழமொழி. இது மரவள்ளிக் கிழங்கைப் பற்றிய கேள்வி. சேலம் மாவட்டத்தில் எல்லாப் பொருள்களும் விளைகிறது என்றாலும், அங்கே களிமண் பகுதியாக இருப்பதால், இந்தக் கிழங்கு விளைவிப்பது இல்லை. அங்கே ஆமணக்கு ஆராய்ச்சி நிலையம் ஒன்று செயல்பட்டு வருகிறது. பொது ஆராய்ச்சி நிலையம் ஒன்று கோவையில் இருக்கிறது.

**திரு. வி. பழனிவேலு :** தலைவரவர்களே, சேலம் மாவட்டத்தில் மரவள்ளிக்கிழங்கு ஆராய்ச்சிப் பண்ணை இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த ஆராய்ச்சிப் பண்ணை சர்க்காரின் பண்ணையாக இருக்கிறதா? அதைச் சர்க்காரின் விதைப் பண்ணை யாக மாற்றுவதற்கு அரசிடம் ஏதேனும் திட்டம், செயற் குறிப்பு இருக்கிறதா? இப்போது நிலத்தைக் குத்தகைக்கு எடுத்து அதில் விவசாய ஆராய்ச்சிப் பண்ணை நடத்தி வருகிறார்கள். அதை மாற்றத் திட்டம் இருக்கிறதா? சர்க்கார் நிலத்திலே இன்னும் பல மாதிரியான மண் வளங்கள் இருப்பதால் அதை மாற்றி அரசு பண்ணையில் ஆராய்ச்சி நடத்த உத்தேசம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவரவர்களே, மண்வள ஆராய்ச்சி நிலையங்கள் பல்வேறு நடைபெற்று வந்துகொண்டிருக்கின்றன. ஒவ்வொன்றாக மாற்றிக்கொண்டு

வருகிறோம். அரசாங்க நிலத்திலும் ஆராய்ச்சி நடைபெறுகிறது, தனியார் நிலையத்திலும் ஆராய்ச்சி நடைபெற்று வருகிறது. மாறுதல் தேவையானால் செய்யப்படும்.

### நகராட்சி உறுப்பினர் தொகுதிகளைப் பிரித்தமைத்தல்.

*323 வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நகர சபைகளில் உள்ள இரட்டை அங்கத்தினர் வார்டுகளைப் பிரித்தமைக்கும் உத்தேசம் ஏதும் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** (அ) & (இ) சட்டம் எண் 17/37-ன் படி 1920 ஆம் ஆண்டின் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் திருத்தப்பெற்று அதன்படி நகராட்சிகளில் உள்ள இரட்டை அங்கத்தினர் தொகுதிகள் முறை நீக்கப்பட்டு, ஒற்றை அங்கத்தினர் முறை அமுலுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. அடுத்த நகராட்சிகள் தேர்தலிலிருந்து இம்முறை பின்பற்றப்படும். இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

*324 வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் நகராட்சியில் வார்டுகளை பிரித்தமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** ஆம்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவரவர்களே, இரட்டை மெம்பர் தொகுதிகளை ஒற்றை மெம்பர் தொகுதிகளாக மாற்றுவதற்கு உரிய அடிப்படைக் காரணம் என்ன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** தலைவரவர்களே, ஏற்கனவே இது சட்டமாக ஆக்கப்பட்டு இரட்டை மெம்பர் தொகுதிகளாக இருப்பதைத் தனித் தனியாகப் பிரிக்க வேண்டு





மென்ற முறையில் பரிசீலிக்கப்பட்டு 22—5—1973 தேதியிட்ட அரசாங்க விசேஷ கெஜட்டின் மூலமாக அது அறிவிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. என். மருதாசலம் :** தலைவரவர்களே, கோவை நகராட்சியைப் பிரிப்பதற்கு பிரிவினைக் கமிட்டி போட்டு, அது பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. இப்போது 34-வது வட்டத்தில் சரிபாதி ஹரிஜனங்கள் ஓட்டாக இருப்பதால், அதைத் தனித் தொகுதியாக ஆக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** தலைவரவர்களே, இப்போது தான் ஒவ்வொரு மாநகராட்சிக்கும் தொகுதிவாரி பிரிவினைக்கு ஒப்புதல் கொடுக்கப்பட்டு வருகிறது. கோவை நகராட்சியிடமிருந்து ஒப்புதல் கேட்டு இன்னும் வரவில்லை. உடனடியாக 15 நாட்களுக்குள்ளே அவர்கள் தீர்மானம் போட்டு கொடுக்காவிட்டால் அரசாங்கமே முடிவு செய்யும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அது வந்ததற்குப் பிறகு அதுபற்றி முடிவு சொல்லப்படும்.

**திருமதி ஜோதி வெங்கடாசலம் :** தலைவரவர்களே, இந்த இரண்டு உறுப்பினர் தொகுதிகளைப் பிரிக்க வேண்டுமென்று முறையீடு வந்தது என்று கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். யாரிடத்திலிருந்து வந்தது, எதற்காக வந்தது, அதற்கு என்ன காரணம் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** தலைவரவர்களே, தனியாக அது சம்பந்தமாக என்னிடத்தில் குறிப்பு இல்லை. அது பற்றித் தனியாக அறிய வேண்டுமென்று அங்கத்தினர் விரும்பினால், தனியாகக் கொடுக்கிறேன்.

**திரு. என். கிட்டப்பா :** தலைவரவர்களே சென்னை ஜில்லா நகராட்சிகள் சட்டம் 1928-ன்படி பிரிக்கப்படுகின்ற வார்டுகளில் நகரத்தில் இருக்கும் மொத்த வார்டுகளில் 'ஒன்-போர்த் ஆப் தி மெம்பர்ஸ் மே பி எலெக்டெட் ஃப்ராம் தி செட்யூல்ட் காஸ்ட்' அல்லது பெண்களிலிருந்து 4-ல் ஒரு பகுதி தேர்ந்தெடுக்கலாம் என்று விதிமுறை இருந்தும், அவ்வாறு அனுமதிக்கப்படாமல் மாயூரம் நகராட்சியில் இருக்கிறது என்பதை அரசாங்கம்

அறியுமா ? இப்படி 'ஒன் போர்த் ஆப் தி மெம்பர்ஸ் மே பி எலெக்டெட்' என்று இருப்பதை 'ஒன் போர்த் ஆப் தி மெம்பர்ஸ் ஷல் பி எலெக்டெட்' என்று மாற்ற அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** தலைவரவர்களே, மாயவரம் நகர மன்றத்தைப் பொறுத்தவரை மக்கள் தொகையில் மாற்றம் இல்லை. அதனால் தான் தொகுதியை எப்படிப் பிரிக்க வேண்டுமென்று ஆணையாளர் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார். அது பரிசீலனையில் இருக்கிறது. 16—10—1973 அன்று அனுப்பி வைத்ததற்கு இன்னும் பதில் வரவில்லை. 30 நாட்களுக்குள் அனுப்ப வேண்டுமென்று மீண்டும் அவர்களுக்கு அறிவிப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்களிடமிருந்து பதில் வந்த பிறகு அது பரிசீலிக்கப்படும். இது மாயவரத்திற்கு மட்டுமின்றி தமிழ்நாட்டிலே உள்ள எல்லா இடங்களுக்கும் பொருந்தும். 1920-ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம்தான் இப்போது அமலில் இருக்கிறது. அதிலே இப்போது மாற்றம் ஒன்றும் இல்லை.

**திரு. என். இராஜாங்கம் :** சட்டப் பேரவைத் தலைவரவர்களே, இந்த இரட்டை மெம்பர் தொகுதிகளில் தாழ்த்தப்பட்டவர்களும், மற்றவர்களும் சேர்ந்து நிற்கும் தொகுதிகளாகவும், அல்லது பெண்களும் ஆண்களும் சேர்ந்து நிற்கும் தொகுதிகளாகவும் கணக்கிடப்பட்டு இன்று இருக்கிறது. இது ஒரு மெம்பர் தொகுதிகளாக மாற்றப்பட்டால், தாழ்த்தப்பட்டவர்கள் தனியாகவும், பெண்கள் தனியாகவும் தேர்ந்தெடுக்கப் படுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** தனியாகப் பிரிக்கப் பட்டால் தாழ்த்தப்பட்டவர்களுக்கு என்று ஒதுக்கப்பட்ட இடத்தில் தாழ்த்தப்பட்டவர்களும், பெண்களுக்கு என்று ஒதுக்கப்பட்ட இடத்தில் பெண்களும் தான் நிற்க முடியும். வேறு யாரும் நிற்க முடியாது.

**திரு. சொ. காவேரிமணியம் :** தலைவரவர்களே, இம்மாதிரியான இரட்டை மெம்பர் தொகுதி ஒழிப்பு ஒரு சில நகராட்சிகளுக்கு மட்டுமா அல்லது தமிழகம் பூராவிற்குமா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** தமிழ்நாடு பூராவிற்கும் இது அமலுக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது அடுத்த தேர்தல் இந்த முறையில் தான் நடைபெறும்.

**திரு. க. உரொ. எட்மண்ட் :** தலைவர் அவர்களே, சென்ற முறை பஞ்சாயத்து தேர்தலை நடத்துவதற்கு முன்னால் வாக்காளர்களினால் தலைவர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று சட்ட மன்றத்தில் சட்டம் கொண்டுவரப்பட்டபொழுது, அடுத்த நகரசபைத் தேர்தல்களில் வாக்களர்களே நகரசபைத் தலைவர்களை நேரடியாக தேர்ந்தெடுக்கும் முறையை அமுலுக்குக் கொண்டு வருவதற்கு அரசாங்கம் முயற்சி எடுக்கும் என்று அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அது எந்த நிலையில் உள்ளது. வருகின்ற நகரசபைத் தேர்தலில் வாக்காளர்களே நேரடியாகத் தலைவரைத் தேர்ந்தெடுப்பார்களா ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** அப்படி அறிவிக்கப் பட்டது எனக்குத் தெரியாது. ஆனால் அப்படி ஒரு கோரிக்கை சொல்லப்பட்டது. அந்தக் கோரிக்கை பரிசீலனை செய்யப்பட்டு ஏற்கனவே இப்பொழுது தேர்ந்தெடுக்கப்படுவதிலே சில மாற்றங் கள் செய்யவேண்டியது அவசியமாக இருக்கிற காரணத்தினால், உடனடியாக இந்தத் தேர்தலில் அந்த மாற்றத்தைக் கொண்டு வர இயலாது என்பதை அரசு அறிவித்திருக்கிறது.

**திரு. என். கிட்டப்பா :** மாயூரம் நகராட்சியில் 22 உறுப்பி னர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய கட்டத்தில் கூட ஒரு ஆதித் திராவிடருக்கும், ஒரு பெண்ணுக்கும் இடம் ஒதுக்கப்பட்டது. இப்பொழுது 32 உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படவேண்டிய அளவுக்கு ஜனத்தொகை பெருகியிருப்பதன் காரணமாக நிலைமை இருந்தாலும், அதே விகிதாசாரத்தில் ஒரு தாழ்த்தப்பட்டவருக் கும், ஒரு பெண்ணுக்கும் மட்டும் இடம் தர இருக்கிறார்கள் என் பதை நகராட்சி மன்ற உறுப்பினர் என்ற வகையில் நான் அறி வேன். எனவே, பக்கத்தில் இருக்கிற நாகப்பட்டினம், கும்ப கோணம் ஆகிய பகுதிகளில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு இடம் அதிகமாக ஒதுக்கியிருக்கிறார்கள். அதே போல் மாயூரம் நக ராட்சியிலும் தாழ்த்தப்பட்டவருக்கு ஒரு இடம் என்று இருப் பதை இன்னும் ஒன்று கூட்டி, அதிகமாக ஒதுக்குவதற்கு இந்த அரசின் மனம் இசையுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாநகராட்சி எல்லேக்கும் எடுக்கப்படுகின்ற ஊராட்சி எல்லேக்கும் அதிக தொலேவு இருக்குமானல், அது பரிசீலனே செய்யப்பட்டு, அந்த மாநகராட்சியோடு சேர்க்கின்ற பகுதி போக மிச்சம் இருக்கிற பகுதி தனியாக இருக்கக்கூடிய சாத்தியக்கூறுகளும், வசதி வாய்ப்புகளும் இருக்குமானல் தனி ஊராட்சி மன்றமாக ஆக்கப்பட்டு, மற்ற பகுதியை மாநகராட்சியோடு இணேந்திருக்கிற பகுதியாக இருக்கும்படி ஆக்குகின்ற திட்டம் இருக்கிறது. மதுரை மாநகராட்சி சம்பந்தப்பட்டவரையில் அது வேண்டியதில்லே. அதோடு இணேக்கின்ற பகுதியைத் தனிப் பஞ்சாயத்து ஆக்காமல் மாநகராட்சியோடு இணேக்கப்படுவதற்கு அரசு சமீபத்தில் உத்தரவு பிறப்பித்திருக்கிறது.

டாக்டர் எச். வி. ஹாண்டே: தற்போதைய மதுரை நகராட்சியோடு எந்த அளவுக்கு எல்லேப் பகுதிகளே இணேத்து மாநகராட்சிக்கு ஏற்றதாகக் கொண்டுவரவேண்டும் என்று அமைச்சர் அவர்கள் கூறினர்கள். சென்னே மாநகராட்சி மன்றம் கலேக்கப்பட்டிருக்கிற இந்த நேரத்தில், மதுரையிலும் சில பண கையாடல்கள் நடந்திருக்கின்றன என்பதை இப்பொழுது பத்திரிகை வாயிலாக அறிகிறேம். ஆகவே, கோவை நகராட்சியை மாநகராட்சி மன்றமாக ஆக்குவதற்கு முன்பு, மதுரை, கோவை நகராட்சிகளில் பினன்ஷியல் பொஸிஷன் எப்படி இருக்கிறது, பினன்ஷியல் ஸ்டேட்டஸ் எப்படி இருக்கிறது, பண வசதி எப்படி இருக்கிறது என்றெல்லாம் ஆராய்ந்து, இப்பொழுது ஏதாவது கையாடல்கள் நடந்துகொண்டிருக்கின்றனவா, பினன்ஷியல் இர்ரெகுலாரிடீஸ் இருக்கின்றனவா, தேவையான ஜனத்தொகை இருக்கின்றனவா என்பதை ஆராய்ந்து, அதற்குப் பிறகு கோவையை மாநகராட்சி ஆக்குவதற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: மதுரை நகராட்சி பற்றி கனம் உறுப்பினர் அவர்கள் சொன்னது போல எந்த தாக்கீதும் அல்லது புகார் எதுவும் வரவில்லே. மாநகராட்சியாக ஆக்குகின்ற பகுதி மட்டுமல்லாது, அப்படிப்பட்ட தவறுகள் எந்த மாவட்டத்தில் எந்த ஊராட்சியில் இருந்தாலும், எந்த ஒன்றியத்தில் இருந்தாலும் சரி, எந்த நகராட்சியில் இருந்தாலும் சரி, எந்த மாநகராட்சியில் இருந்தாலும் சரி, அது அறிவிக்கப்படுமானல், நிச்சயம் அதைப்பற்றி கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.



திரு. கே. டி. கே. தங்கமணி: மதுரை கார்ப்பரேஷனில் எந்தெந்தப் பகுதிகள் இணேக்கப்படும்? குறிப்பாக மாடக்குளம் பஞ்சாயத்து இணேக்கப்படுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: மாடக்குளம் பஞ்சாயத்தில் ஒரு பகுதி எடுக்கப்படவேண்டும் என்று கேட்டிருக்கிறர்கள். முதல் அமைச்சர் அவர்களோடு நாங்கள் விவாதித்ததற்குப் பிறகு பூராப் பகுதியையும் எடுக்க வேண்டும் என்று முடிவு செய்து, மாடக்குளம் பூராவும் மாநகராட்சியோடு இணேக்கப்படும் என்று அரசு அறிவித்திருக்கிறது.

### *Lay off compensation to workers*

* 240 Q.—THIRU N. K. PALANISWAMY: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether the tripartite committee constituted during 1973 to go into the award of lay off compensation to workers affected by the power cut has submitted its report; and

(b) if so, the details of the same?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மின்விசை வெட்டு குறித்து அரசு பிறப்பித்த ஆணேகளேச் செயற்படுத்துவதில் அவ்வப்போது பல சிக்கல்கள் எழுந்தன. இந்தச் சிக்கல்கள் தக்கமுறையில் கவனிக்கப்படவும், உழவர்களுக்கும் தொழிலதிபர்களுக்கும் மின்சாரத்தைப் பயன்படுத்தும் மற்ற வகையினருக்கும் ஏற்பட்ட இடையூறுகளேக் களேயும் பொருட்டு இந்தச் சிக்கல்களுக்குத் தக்க தீர்வு காணவும் வேண்டியிருந்தது. மின்விசை வெட்டின் விளேவால் எழக்கூடிய சிக்கல்களேக் குறித்துத் தக்க முறையில் விரிவாக அறிந்துகொள்ள உதவும்பொருட்டும், அந்தச் சிக்கல்களேத் தீர்ப்பதற்குத் தக்க ஏற்பாடுகளே வகுக்கும் பொருட்டும் மாநில அளவிலான குழுவொன்று 1973 பிப்ரவரியில் அமைக்கப்பட்டது. தொழில்துறை அமைச்சர் இதன் தலேவர். மின்சார அமைச்சரும் தொழிலாளர் நல அமைச்சரும் இதில் உறுப்பினர்கள். இக்குழுவில் தொழிலதிபர்களின் பிரதிநிதிகளும், தொழிலாளர்களின் பிரதிநிதிகளும், அரசு அதிகாரிகளும் இடம் பெற்றிருந்தனர். இக்குழு அறிக்கை ஏதும் அளிக்கும் என்று எதிர்பார்க்கப்படவில்லே.

**திரு. என். கே. பழனிசாமி :** அந்த ஒப்பந்தப் பிரகாரம் மின் வெட்டினால் பாதிக்கப்பட்டு வேலை இழந்தத் தொழிலாளர்களுக்கு நஷ்ட ஈடு மூன்று நாட்களுக்குள் கொடுக்கவேண்டும் என்று இருந்தும், மில்கள் கொடுக்கவில்லை. அதற்கான நடவடிக்கை எடுத்து அதை வசூல் செய்வதற்குச் சர்க்கார் முயற்சி எடுக்குமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** நஷ்ட ஈடு கொடுக்கிற பிரச்சினை அதிகமாக இல்லை. தொழிலாளர்களுக்கு ரூ. 50-லிருந்து 150 வரை முன் பணமாகக் கொடுக்கின்ற ஒரு தீர்ப்பு ஒன்று ஆட்சித் தலைவரின் கீழே அமைக்கப்பட்ட குழுவினால் பரிந்துரைக்கப்பட்டு, செயலாற்றப்பட்டுக் கொண்டு வருகிறது. அந்தக் குழு அறிக்கை ஒன்றும் தருவதற்குப் பொறுப்பு எதுவும் இல்லை.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** மின்வெட்டு ஏற்பட்ட காரணத்தினால், ஏற்கனவே கிடைக்கக்கூடிய பாதிச் சம்பளம் போதாது, எல்லோருக்கும் கிடைக்கவேண்டும் என்ற கோரிக்கையை வைத்திருந்தார்கள். ஒவ்வொரு மாவட்ட கலெக்டரும் அதற்கான ஏற்பாடு செய்தார்கள். இப்பொழுது கோவை மாவட்டத்தில்தான் ரூ. 100, 200 அட்வான்ஸ் கிடைத்திருக்கிறது. மற்ற மாவட்டங்களில் கிடைப்பதற்கு அரசு உத்தரவு பிறப்பிக்குமா ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** மற்ற மாவட்டங்களில் அப்படிப்பட்ட பிரச்சினைகள் எதுவும் அரசின் கவனத்திற்கு வரவில்லை. வந்தால், அது கவனிக்கப்படும்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** லே ஆஃப் காம்பென்சேஷன் கொடுப்பது மட்டும் போதாது. அதற்குப் பதிலாக பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு முழுச் சம்பளம் கொடுக்கவேண்டும் என்ற கோரிக்கை இருந்தால், அது சம்பந்தமாக அரசு ஏதாவது முடிவு எடுத்துள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** அப்படிப்பட்ட கோரிக்கை ஒன்று அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டு, அது அரசின் ஆய்விலே உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



### சுருட்டுத் தொழிலாளர்களுக்கு ஊதியம்.

*** 241 வினா—திரு. அ. தேவேந்திரன் :** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகம் முழுதுமுள்ள சுருட்டு தொழிலாளர்களுக்கு ஒரே சீரான கூலி வழங்கப்படுவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** (அ) ஆம்.

(இ) பீடி, சுருட்டு தொழிலாளர்களுக்குக் குறைந்த அளவு கூலியை நிர்ணயிக்க அமைக்கப்பட்ட குழு அதன் அறிக்கையை சமர்ப்பித்து அதனை ஆணையாக ஜூன் 1973-ல் அரசு உத்திரவிட்டுள்ளது. 1973 ஜூலை முதல் நாளிலிருந்து அக்குறைந்த பட்ச கூலி அமுலில் இருக்கிறது.

**திரு. அ. தேவேந்திரன் :** தலைவரவர்களே, இப்போது கூட கும்பகோணத்தில் ஒரு கூலியும், நாகப்பட்டினத்தில் ஒரு கூலியும், மாயூரத்தில் ஒரு கூலியும் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** அப்படிப்பட்ட அறிக்கைகள் எதும் அரசின் கவனத்திற்கு வரவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவையின் அனுமதியுடன் கேள்வி நேரத்தை சிறிது நீட்டிக்கிறேன்.

### *Provident Fund, etc., benefits for workers in beedi industry*

* 242 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon the Minister for Labour be pleased to state—

(*a*) whether it is a fact that the States Labour Ministers' Conference held at Mysore in 1972 has recommended for the introduction of Provident Fund, Gratuity and Employees State Insurance benefits to the beedi workers; and

(*b*) if so, the action taken thereon?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) ஆம்.

(இ) இது இந்திய அரசு சம்பந்தப்பட்டதாகும். இது குறித்த பரிவுரைகள் இந்திய அரசிற்கே செய்யப்பட்டுள்ளன.

திரு. என். கே. பழனிசாமி: சார், இந்த கிராச்சுட்டி, பிராவிடன்ட் பண்டு போன்ற வசதிகள் உடனடியாக பீடித் தொழிலாளர்களுக்குக் கிடைக்கக் கூடிய வகையில்—மத்திய அரசாங்கத்தைப் பொறுத்ததாக இருந்தாலும்—இங்கேயே ஒரு சட்டத்தைக் கொண்டுவருவதில் என்ன கஷ்டம் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, இந்த பிராவிடன்ட் பண்டு, கிராச்சுட்டி போன்றவைகளின் சட்ட திட்டங்கள் பூராவும் மத்திய அரசினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. அந்த நடைமுறையின்படி இப்போது காரியங்கள் நடந்துகொண்டிருக்கின்றன. இதிலே நாமும் ஒரு சட்டத்தைக் கொண்டுவந்து, இரண்டுவிதமான சட்டங்களை நடைமுறைப் படுத்த வேண்டாம் என்று கருதி, மத்திய அரசின் நடைமுறைகளை நாமும் ஏற்றுக்கொண்டிருக்கிறோம்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: தலைவரவர்களே, நாட்டிலே உள்ள ஏனையத் தொழிலாளர்களுக்குக் கிடைக்கக்கூடிய சலுகைகள் இந்தப் பீடித் தொழிலாளர்களுக்குக் கிடைப்பதாகத் தெரியவில்லை. பீடித் தொழிலாளர்களுக்கான கூலி நிர்ணயத்தை அரசாங்கம் செய்திருக்கிறது. அதில் கூட ஒழுங்கான முறையில் விதிகள் பின்பற்றப்படவில்லை. ஒப்பந்தக்காரர்கள்தான் அந்தச் சலுகைகளை அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள். பீடி சுத்தக்கூடியவர் களுக்குச் சலுகைகள் கிடைக்க வசதியில்லாமலிருக்கிறது. ஆகவே தொழிலாளர்களுக்கு நேரடியாக சலுகைகள் கிடைக்க ஒரு விசேஷ சட்டம் கொண்டு வரப்படுமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் ஒப்பந்தக்காரர்கள் இடையீடு அதிகமாக இல்லை என்று தான் நான் கருதுகிறேன். சமீபத்தில் இராணிப்பேட்டையில் பீடித் தொழிலாளர்களைச் சந்தித்தபோது ஒப்பந்தக்காரர்கள் இடையீடு அவ்வளவாக இல்லை என்று தெரிவித்தார்கள். மற்ற மாநிலங்களிலே இருப்பதாகத் தெரிகிறது. தமிழகத்தில் நாம் இரண்டுமுறை



கூலியை உயர்த்தியிருக்கிறோம். அந்தக் கூலி உயர்வு எல்லாத் தொழிலாளர்களுக்கும் நல்ல நிம்மதியைத் தருகிறது என்று நான் கருதுகிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: சார், மத்திய அரசாங்கம் இந்தச் சலுகையைச் செய்யவேண்டுமென்று இருந்தாலும் தமிழ்நாட்டிலே பீடித் தொழிலாளர்கள் அதிகமாக இருக்கிறார்கள். அவர்களுக்கு இந்தச் சலுகைகள் உடனடியாகக் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா? போடப்பட்ட சட்டமும் சரியாக அமுல் படுத்தப் படவில்லை. அதை அமுல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, மற்ற மாநிலங்களைக் காட்டிலும் நம்முடைய மாநிலத்தில் பீடித் தொழிலாளர்களின் நிலைமை நல்லமுறையில் சீரடைந்திருக்கிறது. அதோடு சென்றமுறை மைசூரில் நடைபெற்ற மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவுகள் ஒன்றன்பின் ஒன்றாக நமது மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. ஆகவே, மற்ற மாநிலங்களை விட—குறிப்பாக ஆந்திராவை விட தமிழகத்தில் பீடித் தொழிலாளர் களின் நிலைமை சிறப்பாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, கிராச்சுட்டி, பிராவிடன்ட் பண்டு போன்ற வசதிகளைச் செய்வதற்கான சட்டங்களை இயற்றும் அதிகாரம் மத்திய அரசாங்கத்திடம் இருந்தாலும் இந்த பீடித் தொழிலாளர்களுக்கு இத்தகைய சலுகைகளை செய்துகொடுப்பதற் கான சட்டங்களை இயற்றும் அதிகாரம் மாநிலத்திற்கு வேண்டுமென்று மத்திய அரசிடம் கேட்கப்பட்டிருக்கிறதா? இதற்கு முன்னதாக போனஸ் ஆக்டைத் திருத்துவதற்கு மாநில அரசு ஒரு தீர்மானத்தை போட்டு அனுப்பியது. அதைப்போல ஒரு தீர்மானத்தை இந்த சட்டமன்றத்திலே நிறைவேற்றி, பீடித் தொழிலாளர்களுக்கு இந்த நன்மைகள் கிடைக்க ஆவன செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பீடித் தொழிலாளர்களுக்கு அகில இந்திய மட்டத்தில் பல சலுகைகள் அளிக்கப்பட வேண்டு மென்பதற்கு மாநில அரசு மத்திய அரசை வற்புறுத்தியிருக்கிறது.

[1973 நவம்பர் 22

**திரு. கே. எ. வகாப் :** பீடித் தொழிலாளர்களுக்கு நம்முடைய மாநிலத்தைவிட பிற மாநிலங்களில் கூலி குறைவாக இருப்பதாகத் தெரிகிறது. அப்படி இருந்தால் நம்முடைய மாநிலத்திலே இருக்கிறவர்கள் பீடித் தொழிலை பக்கத்து மாநிலங்களுக்கு மாற்றுகின்ற அபாயம் இருக்கிறது. ஆகவே, அண்டை மாநிலங்களை கலந்துபேசி, எல்லா தொழிலாளர்களுக்கும் உயர்ந்த பட்ச கூலியை நிர்ணயம் செய்ய மத்திய அரசுக்குத் தெரிவிக்கும் உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** மற்ற மாநிலங்களிலே இருக்கின்ற கூலியை உயர்த்த வேண்டுமென்று நாம் சொல்லி யிருக்கிறோம். இந்தப் பொறுப்பை வகிக்கின்ற மத்திய அமைச்சர் ஆந்திராவைச் சேர்ந்தவர். அவர்கள் இதில் அக்கறை கொண்டிருப் பார்கள் என்று கருதுகிறேன்.

**திரு. என். கே. பழனிசாமி :** அமைச்சரவர்கள் கூலி விஷயங் களைப்பற்றிச் சொன்னார்கள். இப்போது ஆயிரம் பீடிக்கு ஆண் தொழிலாளிக்கு 4 ரூபாய், பெண் தொழிலாளிக்கு 2 ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது. அவர்கள் கோரியது ஆயிரம் பீடிக்கு ஆண் தொழிலாளிக்கு 5½ ரூபாய், பெண் தொழிலாளிக்கு 3 ரூபாய் என்பது. ஆனால் சர்க்கார் நிர்ணயித்த கூலி ஆயிரம் பீடிக்கு ஆண் தொழிலாளிக்கு 3¼ ரூபாய், பெண் தொழிலாளிக்கு ஒன்றே முக்கால் ரூபாய் என்பது. ஆகவே, இந்தக் கூலி எந்த அடிப் படையில் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது ? மாநிலம் பூராவிலும் கூலி வழங்குவதில் வேறுபாடுகள் இருக்கின்றன. எல்லா இடங் களிலும் ஒரே கூலி நிர்ணயம் செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** நான் ஏற்கெனவே சொன்னதுபோல இந்த கூலி நிர்ணயம் இரண்டுமுறை உயர்த்தப் பட்டிருக்கிறது. அந்த வகையிலே நாம் மற்ற மாநிலங்களை விட, திரு. ஜப்பார் அவர்கள் சொன்னது போல ஒப்பந்தக்காரர் களுக்குத்தான் சலுகைகள் போய்ச் சேருகின்றன என்றல்லாமல் நம்முடைய மாநிலத்தில் தொழிலாளர்களுக்கே சலுகைகள் கிடைக்கின்றன. இரண்டு முறை கூலி உயர்வளித்தபோதும் குழு ஆராய்ந்து முடிவு செய்த பின்னால்தான் அது செயல்படுத்தப் பட்டு வருகிறது. ஆகவே, இதில் குறைபாடுகள் இருக்காது என்று கருதுகிறேன்.



1973 நவம்பர் 22]

## விரைவுப் பேருந்துகள் நின்று செல்லுமிடங்கள்.

* 326 வினா—திரு. த. சோணையா : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

மதுரை-மண்டபம் நெடுஞ்சாலை வழியாகச் செல்லும் விரைவு வண்டிகள் 12-வது மைலில் உள்ள திருப்புவனத்தில் நிற்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** அவ்வழியாகச் செல்லும் விரைவு வண்டிகளை திருப்புவனத்தில் நிறுத்த வேண்டிய தேவை இல்லை என்று கருதப்படுகிறது.

**திரு. த. சோணையா :** தலைவரவர்களே, மதுரையிலிருந்து 12 மைல் தொலைவிலுள்ள திருமங்கலம், அதைப்போல 12 மைல் தொலைவிலுள்ள சோழவந்தானிலும் விரைவு வண்டிகள் நின்று போகின்றன. அப்படி இருக்கும்போது 12 மைல் தொலைவிலுள்ள திருப்புவனத்தில் ஏன் நிற்கக்கூடாது ? அதுமட்டுமல்ல. மதுரையி லிருந்து வருகிற சிட்டி பஸ் எண் 32, திருப்புவனம் பஸ் ஸ்டாண்டி லிருந்து 2 பர்லாங் தூரத்திலிருந்து திரும்பிவிடுகிறது. அது அந்த 2 பர்லாங் தூரமும் வந்து திரும்புவதற்கு நடவடிக்கை எடுக்கப் படுமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** நின்று நின்று சென்றால் அது விரைவு வண்டி ஆகாது. அதனால் அதிகமாக விரைவுப் பேருந்துகளை நிறுத்தும் இடங்களைக் குறைத்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வேறு இரண்டு இடங்களைப் பற்றியும் சொன்னார்கள். அதைப்பற்றி அரசாங்கம் பரிசீலிக்கும். ஏதோ பஸ் திருப்புவனம் பஸ் ஸ்டாண்ட் வரை வரவில்லை என்று சொன்னார்கள். அதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. த. சோணையா :** பன்னிரண்டு மைல் தொலைவிலுள்ள சோழவந்தானிலும், திருமங்கலத்திலும் நின்று செல்லக்கூடிய விரைவுப் பேருந்துகள் ஏன் 12 மைல் தொலைவிலுள்ள திருப்பு வனத்தில் நின்று போகக்கூடாது ? மற்றவர்களுக்குக் கொடுக்கும் உரிமை எங்களுக்கும் கொடுக்கப்பட வேண்டும்.

[1973 நவம்பர் 22

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** சாதாரண பேருந்தாக இருந்தால் நிச்சயமாக அங்கேயும் நின்றுதான் போகும். விரைவுப் பேருந்தாக இருப்பதால் அங்கே நின்றுபோவது சரியல்ல என்று கருதுகிறார்கள்.

* 327 வினா—**திரு. நா. வெ. குருசாமி :** மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரையில் இருந்து கூடலூர் செல்லும் பாண்டியன் போக்கு வரத்து துரித வண்டி ஆண்டிப்பட்டியில் நின்று செல்லச் செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** இல்லை.

**திரு. நா. வெ. குருசாமி :** தலைவரவர்களே, மதுரையிலிருந்து கூடலூர் செல்லும் விரைவுப் பேருந்து ஆண்டிப்பட்டியில் நிற்பது இல்லை. ஆகவே, எங்களைப் போன்றவர்கள் ஆண்டிப்பட்டியில் இறங்க முடியாமல் போகிறது. அங்கே டிக்கட்டுகள் போட்டுக் கொடுக்கப்படுவதில்லை என்றாலும், விரைவுப் பேருந்துகள் நின்று போவதற்காவது வசதி செய்து கொடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** அரசு பேருந்துத் துறையின் சார்பில் மதுரையிலிருந்து கூடலூருக்கு விரைவுப் பேருந்து விடப்படவில்லை. அந்த பஸ்கள் பாண்டியன் போக்கு வரத்துக் கழகத்தைச் சேர்ந்தவை. அதனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் யோசனை பாண்டியன் போக்குவரத்துக் கழகத்திற்கு அனுப்பி வைக்கப்படும்.

### ஆரம்பாக்கத்திலுள்ள சோப்புத் தொழிற்சாலை

* 328 வினா—**திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கும்மிடிப்பூண்டித் துணை வட்டம், ஆரம்பாக்கம் கிராமத்தில் நடைபெறும் கதர் கிராமத் தொழில் வாரிய சோப்புத் தொழிற் சாலையை மேலும் விரிவுபடுத்தி வேலைவாய்ப்பும் வருவாயும் பெருக்கும் திட்டம் உண்டா ?



1973 நவம்பர் 22]

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** இல்லை.

**திரு. கா. வேழவேந்தன் :** தலைவரவர்களே, இந்த சோப்புத் தொழிற்சாலை லாபத்தில் நடந்துகொண்டிருக்கிறது. இன்னும் அதை விரிவுபடுத்தினால், அந்தப் பகுதியிலுள்ள மக்களுக்கு வேலை வாய்ப்பு பெருகும். ஆகவே, அரசு மறுபரிசீலனை செய்து விரிவு படுத்த நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவரவர்களே, உற்பத்தி ஆகின்ற பொருட்களை பாதுகாக்கவும், சரியான போக்குவரத்திற்கும் போதுமான வசதி இல்லாததினால் மேற்கொண்டு விரிவுபடுத்த முடியாது என்று சொல்லி யிருக்கிறார்கள். இருந்தாலும், இதுபற்றி மறுபரிசீலனை செய்யலாம்.

### சென்னை சட்டக் கல்லூரி விடுதி

* 299 வினா—**திருமதி த. ந. அனந்தநாயகி :** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) தற்பொழுதுள்ள சென்னை சட்டக் கல்லூரி விடுதிக் கட்டடத்தையும், இடத்தையும் அரசு விலைக்கு வாங்கி, விடுதியை விரிவுபடுத்தும் திட்டம் தற்போது எந்நிலையிலுள்ளது ?

(இ) தற்போதுள்ள விடுதியில், இட நெருக்கடியைத் தவிர்க்க அரசு அவசரமாகக் கவனிக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) & (இ) தற்போதுள்ள சென்னை சட்டக் கல்லூரி விடுதிக் கட்டிடத்தையும், இடத்தையும் அரசு விலைக்கு வாங்கி கட்டிடத்தை பழுது பார்த்து வருகிறது. கூடுதல் விடுதிக் கட்டிடம் ரூ. 12 லட்சம் செலவில் கட்ட ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. விரைவில் கட்டிட வேலை துவக்கப்படும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** கூடுதல் விடுதிக் கட்டிட வேலை எங்கு ஆரம்பிக்கப் போகிறார்கள் ? எப்போது முடியும் என்று தெரிவிக்க முடியுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா நெடுஞ்செழியன் :** இப்போது சட்டக் கல்லூரி மாணவ விடுதி இருக்கிற இடத்திலேயே கூடுதல் விடுதி கட்ட 11 லட்சத்து 38 ஆயிரம் மதிப்பீட்டுச் செலவில் இடத்தையும், கட்டிடத்தையும் விலைக்கு வாங்கியிருக்கிறது. அங்கே 12 லட்சம் ரூபாயில் 248 மாணவர்கள் தங்க வசதி அளிக்கும் வகையில் விடுதி விரைவில் கட்டப்படும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** இந்த வருடம் சட்டக் கல்லூரி விடுதியில் தங்கிப் படிக்க எத்தனை பேர் விண்ணப்பம் போட்டார்கள்? எத்தனை விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன? எத்தனை பேர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இப்போதுள்ள விடுதியில் 222 பேர்கள் தான் தங்கிப் படிக்க வசதி உண்டு. புதியதாக கட்ட இருக்கிற விடுதியில் 248 பேர்கள் தங்கிப் படிக்க வசதி இருக்கும். ஆக மொத்தத்தில் 470 பேர்கள் தங்கிப் படிக்க எதிர் காலத்தில்தான் வசதி கிடைக்கும். மற்ற விவரங்களுக்குத் தனிக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்துத் தரப்படும்.

**திரு. துரைமுருகன் :** இப்போது இருக்கிற சட்டக் கல்லூரி விடுதியில் 222 பேர்கள்தான் தங்கிப் படிக்க முடியும் என்றும், புதியதாக கட்ட இருக்கிற விடுதியில் 248 பேர்கள் தங்கிப் படிக்க வசதியேற்படும் என்றும் சொன்னார்கள். இப்போதிருக்கிற விடுதியிலேயே குளிப்பறை, கழிவறை எதுவும் கிடையாது. ஆகவே, இதையும் இடித்துவிட்டு புதியதாகக் கட்ட அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இப்போதுள்ள விடுதிக்கு நாம் இதுவரை வாடகை கொடுத்து எடுத்து வைத்திருந்தோம். அந்தக் கட்டிடத்தையே இப்போது வாங்கியாகிவிட்டது. 50 ஆயிரம் செலவழித்து பழுது பார்க்கப்பட்டிருக்கிறது. அங்கே குளிப்பறை, கழிவறை வசதி போதுமானதாக இல்லை என்றால் அதைப் பழுது பார்க்கிற வகையில் அந்த வசதியைச் செய்து கொள்ளலாம். அதையே இடிக்க வேண்டிய அவசியம் இல்லை.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** இப்போது சட்டக் கல்லூரி விடுதியில் ஏற்பட்டுள்ள நெருக்கடிக்குக் காரணம், மாநிலம் முழுவதற்கும் ஒரு சட்டக் கல்லூரி என்பதாக இருப்பதுதான். ஆகவே, மதுரையில் ஒரு சட்டக் கல்லூரியை அமைத்தால் இந்தக் குறை நீங்கிவிடும். மதுரையில் ஒரு சட்டக் கல்லூரி ஏற்படுத்த அரசு பரிசீலனை செய்யுமா?



**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அதுபற்றி பல தடவை ஆராய்ந்து, ஆராய்ந்து அது கைவிடப்பட்டுள்ளது. இப்போது அதுபற்றிய செயற்குறிப்பு எதுவும் இல்லை.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** சட்டக் கல்லூரியில் படிக்கும் மாணவிகளுக்கு தங்க விடுதி வசதி எதுவும் கிடையாது. அவர்கள் சேவாசதன் ஹாஸ்டலில் தங்குகிறார்கள். அப்படி வெளியே தங்கினால் அவர்களுக்கு ஸ்காலர்ஷிப் கிடைப்பதில்லை. ஆகவே, சட்டக் கல்லூரி மாணவிகளுக்கு என்று விடுதி ஒன்றைக் கட்டுவார்களா? அல்லது சட்டக் கல்லூரி மாணவிகள் வெளியில் தங்கினாலும் அவர்களுக்கு வேண்டிய நிதி உதவி அளிக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** சட்டக் கல்லூரி மாணவிகளுக்கு என்று தனி விடுதி கட்டுகிற எண்ணம் இருக்கிறது. மாநிலக் கல்லூரி பெண்கள் விடுதியை ஒட்டியே இதைக் கட்ட இடத்தைப் பார்க்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது. இடம் தேர்ந்தெடுக்கப்பட்டவுடன் அதற்கான முயற்சி மேற்கொள்ளப்படும்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) :** சட்டக் கல்லூரி மாணவ விடுதியின் ஒரு பகுதியிலேயே சட்டக் கல்லூரி மாணவிகளும் தங்க அனுமதித்தால் என்ன என்று கேட்க விரும்புகின்றேன்.

(பதில் இல்லை.)

### கலைக் கல்லூரிகள்

*300 வினா—திரு. ச. சங்குமுத்து தேவர் : மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பாசமுத்திரம் கலைக்கல்லூரியை அரசு ஏற்று நடத்தவும், அதற்கு மாண்புமிகு டாக்டர் கலைஞர் கலைக் கல்லூரி எனப் பெயர் வைக்க வேண்டும் என்ற கோரிக்கையும் ஏதாவது அரசுக்கு வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) ஆம்.

(இ) அரசின் நிபந்தனைகளை நிர்வாகத்தினர் நிறைவேற்றாத தால் அக்கல்லூரியை அரசு ஏற்று நடத்த இயலாது என்று தெரி விக்கப்பட்டுள்ளது.

* 301 வினு—**திரு. நா. வெ. குருசாமி:** மாண்புமிகு கல்வி-சுற்று லாத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், தேனி நகரத்தில் "அரசினர் ஆண்கள் கலைக் கல்லூரி" துவக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது துவக்கப்படும்?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** இல்லை. ஐந்து இலட்ச ரூபாய் நிதி திரட்டி, மற்ற நிபந்தனைகளும் நிறைவேற்றப் பட்டால், இக்கோரிக்கை பரிசீலனை செய்யப்படும்.

* 302 வினு—**திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு கல்வி-சுற்று லாத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடை யளிப்பாரா—

மாயூரத்தில் அரசினர் ஆண்கள் கல்லூரி ஒன்றினைத் துவக்கிட அரசு உத்தேசித்துள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** உத்தேசம் இல்லை.

**திரு. என். கிட்டப்பா:** தலைவர் அவர்களே, மாயூரத்திற்குப் பக்கத்தில் ஏ.வி.சி. என்ற தனியார் கல்லூரி இருக்கிறது. அரசாங்கம் அதற்கு லட்சக்கணக்கான ரூபாய் மானியம் தருகிறது என்றாலும் அந்தக் கல்லூரியில் எவ்வளவு அதிக மார்க்குகள் வாங்கி யிருந்தாலும் கூட வன்னிய குலத்தைச் சேர்ந்த மாணவர்களைச் சேர்த்துக்கொள்ள மறுத்து வருகிறார்கள். அதுபற்றி, பல தடவை இந்த மன்றத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆகவே அங்கே யுள்ள வன்னியகுல மாணவர்களின் நலனைக் கருதியாவது தனி யாகவே ஒரு அரசுக் கல்லூரியை அங்கே நிறுவ முன்வருவார்களா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** நான் முதலில் குறிப்பிட்டபடி இப்போது அதற்கான உத்தேசம் இல்லை. மாயூரத் திலேயே ஒரு கல்லூரி இருக்கிறது. அங்கிருந்து பத்து மைலுக்குள்



பூம்புகாரில் ஒரு கல்லூரி இருக்கிறது. கும்பகோணத்தில் ஒரு கல்லூரி இருக்கிறது. மேலும், ஏற்கனவே அங்கு வைத்த பெண்கள் கல்லூரிக்கு குறிப்பிட்ட தொகையை வசூலித்துத் தருவதில் அங்குள்ளவர்கள் அக்கறை காட்டவில்லை. இதுபோன்ற பல காரணங்களால் மேற்கொண்டு ஒரு கல்லூரியை மாயூரத்தில் ஏற்படுத்த பெரும் செலவை ஏற்க நிதிநிலை இடம் தராது.

உறுப்பினர் குறிப்பிட்டதைப்போன்று மாயூரத்திற்கு அருகில் உள்ள தனியார் கல்லூரியில் மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதில் முறைகேடு இருக்குமானால் பரிசீலிக்கலாம். பிற்பட்ட மாண வர்கள், தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்குள்ள விகிதாசார அடிப் படையில்தான் அவர்கள் மாணவர்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்பதை நாம் வற்புறுத்தி வருகிறோம். பிற்பட்ட, தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கான விகிதாசாரம் அளிக்கப்பட வில்லை என்கிற குறைபாடு அங்கே இருக்குமானால் நாம் அதை நீக்க வேறு வழிமுறைகளை மேற்கொள்ளலாம்.

**திரு. டி. வி. சம்பத்:** மாயூரத்திற்கு அருகிலுள்ள ஏ.வி.சி. கல்லூரியில் கழக அரசு பிற்பட்டவர்களுக்கு 31 சதவிகிதம், தாழ்த்தப்பட்டவர்களுக்கு 18 சதவிகிதம் என்று ஒதுக்கியிருந்தும் கூட அங்கே தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட ஆசிரியர்கள் யாரையுமே நியமிக்காத குறை இருக்கிறது. அது சம்பந்தமாக, அரசுக்கு விண்ணப்பம் ஏதேனும் வந்துள்ளதா என்று கேட்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** கல்லூரியில் மாண வர்களைச் சேர்த்துக்கொள்வது சம்பந்தமாகத்தான் அந்த விகிதாச் சாரம் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. அரசாங்கக் கல்லூரி ஆசிரியர்களைப் பொறுத்தவரை நாம் அந்த விகிதாச்சாரத்தைப் பின்பற்றினாலும், தனியார் கல்லூரிகளைப் பொறுத்தவரை அதனை நாம் வற்புறுத்த இயலாது.

**திரு. ந. சோமசுந்தரம்:** மாயூரம் அருகில் உள்ள ஏ.வி.சி. கல் லூரியில் உயர்ந்த மதிப்பெண்கள் பெற்ற வன்னியர் குல மாணவர் களைக் கூடச் சேர்த்துக்கொள்ள மறுக்கிறார்கள் என்பதை அரசு அறியுமா? ஆகவே அரசுக் கல்லூரி ஒன்றை அங்கே துவக்க விரைவில் நடவடிக்கை எடுப்பார்களா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** நான் முதலிலேயே புதிய கல்லூரி ஒன்றை அங்கே துவங்க முடியாமல் இருப்பதற்கான காரணங்களைச் சொன்னேன். இருக்கின்ற கல்லூரிகளைச் செம்மைப் படுத்துவதில் நாம் அதிகக் கவனம் செலுத்தியாக வேண்டிய நிலையில் இருக்கிறோம். புதுப் புதுக் கல்லூரிகளை ஏற்படுத்திக் கொண்டே போவதைவிட இருக்கிற கல்லூரிகளைச் செம்மைப் படுத்தவேண்டும் என்கிற அடிப்படையிலேயே நாம் கவனம் செலுத்துகிறோம். மாயூரத்தின் அருகில் உள்ள கல்லூரியில் குறைபாடு இருக்கிறது என்றால் அதை நீக்க நடவடிக்கை மேற் கொள்ளலாம்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) :** தலைவர் அவர்களே, மாயூரம் சட்டமன்ற உறுப்பினர் திரு. கிட்டப்பா அவர்கள் தம்முடைய கேள்வியில் குறிப்பாக, அந்தக் கல்லூரியில் அதிக மார்க்குகள் வாங்கியிருந்தாலும் கூட வன்னிய குல மாணவர்களைச் சேர்த்துக்கொள்ள மறுக்கிறார்கள் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அரசியல் சட்டத்தின் 14-வது பிரிவுப்படி சாதி அடிப்படையில் இடம் இல்லை என்று சொல்ல முடியாது. அப்படி அங்கே பிற்பட்ட சமூகத்தைச் சேர்ந்த வன்னிய குல மாணவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டால் அதற்குக் காரணம் என்ன ? ஏன் இடம் தர வில்லை ? உடனடியாக அதிகாரிகளைவிட்டு அதுபற்றி விசாரிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு மாயூரம் சட்டமன்ற உறுப்பினர் அதுபற்றிய குறிப்புகளைத் தந்தால் அதனைப் பரிசீலிப்பதற்கு வாய்ப்பு ஏற்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) :** I ask your protection, Sir, இந்த ஆண்டு எத்தனை பேர் விண்ணப்பித்துக் கொண்டிருக்கிறார்கள், எத்தனை பேர் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள், சேர்த்துக்கொள்ளப்பட்டவர்களைவிட அதிக மார்க்குகள் பெற்றுள்ள யார்யார் மனுக்கள் நிராகரிக்கப்பட்டிருக்கின்றன என்பதை டைரெக்டர் ஆப் கலிஜியேட் எஜுகேஷனிடம் கேட்டுத் தெரிந்துகொள்ள முடியாதா ? இதற்கு மாயூரம் சட்ட மன்ற உறுப்பினர் யார் யார் மனுக்கள் போட்டார்கள், யார் யார்



மனுக்கள் நிராகரிக்கப்பட்டன என்கிற விவரங்களை எல்லாம் தினத் தந்தியில் விளம்பரம் செய்துதான் தெரிந்துகொள்ள வேண்டுமா ? இதற்கு அமைச்சரவை தக்க நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** நாங்கள் எல்லாக் கல்லூரிகளையும்தான் அதுபோன்ற விவரங்களைத் தரும்படி கேட்கிறோம். அவர்களும் தருகிறார்கள். அரசு குறிப்பிட்ட விகிதாசார அடிப்படையில் மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டிருப்பதாகவும், ஊழல் எதுவும் இல்லை என்றே தெரிவிக்கிறார்கள். இருந்தும் எங்காவது முறைகேடு இருக்கிறது என்றால் அதுபற்றிய விவரங்கள் கொடுத்தால்தான் அவர்கள் கொடுத்துள்ள விவரங்களோடு ஒப்பிட்டு, குறைபாடு இருக்கிறதா, இல்லையா என்பதைக் கண்டறிய முடியும். அவர்கள் கொடுக்கிற விவரங்களை வைத்தே நாம் பார்க்கிறபோது எல்லாம் சொட்டமுகத்தான் இருக்கும். தவறுகள் இருக்கின்றன என்பதற்கான குறிப்புகள் கிடைக்கிற போதுதான் அதன்மேல் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வாய்ப்பு உண்டு.

*Cotton cultivation by Textile Corporation.*

* 313 Q. THIRU N. DENNIS
THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether the Textile Corporation of this State has undertaken any special scheme for the promotion of cotton cultivation; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**திரு. என். கே. பழனிசாமி :** சார், வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்கிற பஞ்சில் 200 கவுன்ட்ஸ் வரையிலும் நூல் உற்பத்தி ஆகிறது. ஆகவே, அந்த மாதிரி நம் நாட்டு பருத்தியிலேயே 200 கவுன்ட்ஸ் கொண்டு வருவதற்கான ஆராய்ச்சி செய்யக்கூடிய முறையிலே சர்க்கார் ஆராய்ச்சிக் குழுவிற்கு அறிவுரை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

[1973 நவம்பர் 22

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** வேளாண்மைத் துறையிலே கேட்க வேண்டும்.

## நூல் விநியோகம்

*** 314 வினா—திரு. கி. ஜெயராமன் :** மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உற்பத்தியாகும் பருத்தி நூல் கொள்முதலையும் விநியோகத்தையும் தமிழ்நாடு அரசு மேற்கொள்ளுகின்ற செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

(இ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) & (இ) நியாய விலைகளில் நூல் விநியோகிப்பதை ஒழுங்குபடுத்த 1948-ம் ஆண்டு பருத்தி துணி நூல் கட்டுப்பாடு ஆணையின்கீழ் இந்த மாநில அரசுக்கு அதிகாரம் அளிக்கும்படி 1972-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் மத்திய அரசு கேட்டுக்கொள்ளப்பட்டது. மத்திய அரசின் ஆணைகள் இன்னும் எதிர்பார்க்கப்படுகிறது.

**திரு. எ. க. துரைசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட பதிலிலிருந்து ஓராண்டு காலமாகியும் அது இன்னும் நடைமுறைக்கு வரவில்லையென்று தெரிகிறது. நூல் விலை ஏராளமாக ஏறியிருப்பதால், நெசவாளர்கள் அதிகமாக பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே, அரசு தீவிரமாகக் கவனம் செலுத்தி, உடனடியாக இதற்குப் பரிகாரம் காணுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதுபோல் கவலை தரும் நிலை நம்முடைய மாநிலத்திலே இருக்கத்தான் செய்கிறது. இங்குள்ள 206 ஆலைகளில் நாம் உற்பத்தி செய்வது 10 லட்சம் பேல்கள். நம்முடைய தேவை 5½ லட்சம்தான். தேவையைவிட அதிகமாக 2 மடங்கு உற்பத்தி செய்கிறோம். ஆனால், ஆலை முதலாளிகளைக் கட்டுப்படுத்தி நூல் வழங்குகின்ற அதிகாரத்தை நம்மால் பெற முடியவில்லை. மத்திய அமைச்சரிடம் முதலமைச்சர் அவர்களே நீண்ட நேரம் எடுத்துச் சொன்னார்கள். இதுவரையிலும் மத்திய அரசு ஒப்புதல் தரவில்லை.



1973 நவம்பர் 22]

**திரு. இ. எஸ். தியாகராசன் :** நூல் விலை அண்மையிலே பெட்டிக்கு ரூ. 30, ரூ. 40 ஏறிவிட்டதே, அதற்கு என்ன காரணம்? நூல் விலையைக் கட்டுப்படுத்த அரசு எடுத்த நடவடிக்கை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** மத்திய அரசாங்கத்தினுடைய இறக்குமதி, ஏற்றுமதி கொள்கை அதற்குக் காரணம். இறக்குமதி கொள்கை பருத்தியைப்பற்றி. ஏற்றுமதிக் கொள்கை நூலைப் பற்றி. அப்படி இருந்தாலும்கூட நம்மிடம் உபரியாக இருப்பதாலே அதை வினியோகிக்கும் அதிகாரத்தை எங்களிடம் கொடுத்து விடுங்கள், நாங்கள் நியாயமான முறையிலே வினியோகிக்கிறோம் என்று சொல்கிறோம். ஆனால், மத்திய அரசு ஏற்றுக் கொள்ளவில்லை.

**திரு. ஏ. எம். டி. நாச்சியப்பன் :** தலைவர் அவர்களே, தமிழகத்திலே உள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு வேண்டிய நூலும், செயற்கைப் பட்டும் நியாயமான விலையில் போதிய அளவு கிடைக்கவில்லை. இப்பொழுது, தமிழகத்திலே உற்பத்தி ஆகக் கூடிய செயற்கைப் பட்டையும் தமிழக ஆட்சி தன் கையிலே கொண்டு வர ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** பருத்தியின் விலை பற்றி ஏற்கனவே விளக்கம் சொன்னேன். செயற்கைப் பட்டைப் பற்றி மத்திய அரசாங்கம் ஆலை முதலாளிகளையும் 'மாஸ்டர் வீவர்ஸ்', அதிகமாக உற்பத்தி செய்கிற கைத்தறி நெசவாளர்களையும் அழைத்து ஒரு குழு போட்டிருக்கிறார்கள். அங்கேயும் குழப்பம் தான். கொடுப்பதே இல்லை, கொடுத்தாலும் நியாயமான ஆட்களுக்குப் போவதில்லை. நம்முடைய மாநில அரசு அவர்களிடத்திலே சொல்லியிருப்பது, ஆலை முதலாளிகளோடு செய்துகொண்ட ஒப்பந்தத்தை ரத்து செய்துவிடுங்கள் ; மாநில அரசுக்குத் தேவையான நூலை மத்திய அரசாங்கமே ஒதுக்கி, எங்களுக்கு நேரிடையாகக் கொடுத்துவிடுங்கள் ; நாங்கள் நியாயமான முறையில் வினியோகம் செய்ய அதிகாரம் கொடுங்கள் என்று சொல்லியிருக்கிறோம். அதையும் முதலமைச்சர் அவர்கள் கிட்டத்தட்ட 1 மணி நேரம் விளக்கிச் சொன்னார்கள். இன்னும் மத்திய அரசு இரக்கம் காட்டவில்லை.

**திரு. குப்பல் கே. எஸ். இராமகிருஷ்ணன் :** தலைவர் அவர்களே, கூட்டுறவு நெசவாலைகளுக்கு மார்க்கெட் விலையைவிடச் சற்று குறைந்த விலைக்கு நூலைக் கொடுத்து வந்தார்கள். இப்பொழுது சிறிது காலமாக கூட்டுறவு ஸ்தாபனங்களுக்கு அதிக விலைக்கு நூல் விற்கப்படுகிறது. அந்நிலையைப் போக்கி, முன்புபோல், அந்த நூலை விநியோகம் செய்ய அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நம்முடைய கூட்டுறவு நூற்பாலைகளிலும், அரசு எடுத்திருக்கிற ஆலைகளிலும் எல்லா ஆலைகளிலும் உற்பத்தியாகின்ற எல்லா நூலையும் இங்கே உள்ள நெசவாளர்களுக்குத்தான் கொடுக்க வேண்டுமென்ற முடிவை அரசாங்கம் எடுத்திருக்கிறது. அதற்காக கார்டு சிஸ்டத்திலே நூலைக் கொடுத்து வருகிறோம். விலையைப் பொறுத்த அளவுக்கு அப்பொழுதைக்கப்போது கூடிப் பேசி சந்தையினுடைய விலையைவிட அதிகமாகாமல் இருக்க முயற்சி எடுக்கிறோம்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவர் அவர்களே, கூட்டுறவு துறையிலே 12 ஆலைகள் இருக்கின்றன. அவற்றிலே உற்பத்தியாகிற நூலை நாமே விநியோகிக்க என்ன கஷ்டம் ஏற்படும்? தற்பொழுது கரூர் போன்ற பகுதிகளிலே நூல் கிடைக்காத காரணத்தினால் விநியோகம் சரியாக நடைபெறவில்லையென்ற புகார் வந்திருக்கிறது. அது சம்பந்தமாக மாநில அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது ? மத்திய அரசாங்கத்தோடு இது சம்பந்தமாக என்ன தொடர்பு ஏற்படுத்தி இருக்கிறது என்பதையும் தெரிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நம்முடைய மாநிலத்தினுடைய தேவையிலே ஒரு பங்குதான் இந்த ஆலைகள் மூலமாக உற்பத்தியாகிறது. இவ்வாலைகள் மூலமாக சுமார் 11,000 பேல்கள்தான் கிடைக்கின்றன. அதை முழுமையாக கோ ஆப்டெக்ஸ் மூலமாக விநியோகம் செய்கிறோம். ஆனால் நம்முடைய விநியோகத்துக்கும் நாம் உற்பத்தி செய்வதற்கும் சம்பந்தம் இல்லாமல் இருப்பதால்தான் தனியாரிடத்திலே ஏராளமான நூலை உற்பத்தி செய்து, அதை நாம் பெற்று நெசவாளர்களுக்கு வழங்கினாலொழிய இந்தப் பிரச்சினை தீராது.



**திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி :** தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலத்திற்குத் தேவையான பட்டையும் நூலையும் நாமே விநியோகிக்கும் உரிமை நம்முடைய அரசுக்குக் கிடைக்கும் காலம் வரை இடையிலே இருக்கக்கூடிய காலத்திலே நம்முடைய நெசவாளர்கள் குறிப்பாக அருப்புக்கோட்டை, சின்னாளப்பட்டி போன்ற பகுதிகளிலுள்ள நெசவாளர்கள் பட்டினியால் வாடக்கூடிய நிலை இருப்பதால், இடைக் காலத்திற்கு, ஓரளவுக்கு நிவாரணம் கொடுக்கக்கூடிய ஏற்பாட்டை அரசு செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அதற்குத்தான் ஏற்கனவே, ரூ. 1 கோடி கொடுக்கப்பட்டது. ஆனால் துர்ப்பாக்கியம் என்னவென்றால், நம்முடைய நாட்டிலே நூல் இருக்கிறது. அதை எடுத்து கொடுக்க முடியவில்லையென்று வருத்தப்படுகிறோம். மத்திய அரசாங்க உதவி கிடைக்காத காரணத்தால், மாநில அரசாங்கம் உதவி கொடுக்க வந்திருப்பது நெசவாளர்களுக்கு ஓர் உணர்ச்சியை ஏற்படுத்தும். நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த அளவுக்கு உதவி செய்ய முடியாத ஒரு சூழ்நிலையை உருவாக்குகிற மத்திய அரசாங்கக் கொள்கைதான் இதற்குக் காரணம். நாம் மீண்டும் பரிசீலனை செய்யவேண்டுமென்று மத்திய அரசாங்கத்தைக் கேட்டு வருகிறோம்.

**திரு. ஏ. எம். இராஜா :** தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலத்திலேயே நம்முடைய தேவைக்கு மிக அதிகமான அளவுக்கு நூல் உற்பத்தியாகிறது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். கூட்டுறவுத் துறையிலே இருக்கிற நூலை நம்முடைய அரசு முறைமையாக தேவையானவர்களுக்குக் கொடுத்து வருகிறதே, அதேபோல், தனிப்பட்ட முதலாளிகளது ஆலைகளிலே தயாராகிற நூலையும்—மத்திய அரசு நமக்கு நிச்சயமாகக் கொடுக்கப் போவதில்லை—பெற, நம்மிடமிருந்து பல வசதிகளை அவர்கள் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள், அவர்களை நெருக்கி, நூலை பெறவும் அல்லது அவ்வாலைகளை நாட்டுடைமையாக்கவோ அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அப்படி செய்த முயற்சிக்குத்தான் மாபெரும் கண்டனம் சொல்லப்பட்டது. நேற்றுகூட இங்கே சொல்லப்பட்டது. நாம் நல்ல நோக்கத்தோடு இதைச் செய்ய

**திரு. குப்பல் கே. எஸ். இராமகிருஷ்ணன் :** தலைவர் அவர்களே, கூட்டுறவு நெசவாலைகளுக்கு மார்க்கெட் விலையைவிடச் சற்று குறைந்த விலைக்கு நூலைக் கொடுத்து வந்தார்கள். இப்பொழுது சிறிது காலமாக கூட்டுறவு ஸ்தாபனங்களுக்கு அதிக விலைக்கு நூல் விற்கப்படுகிறது. அந்நிலையைப் போக்கி, முன்புபோல், அந்த நூலை விநியோகம் செய்ய அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நம்முடைய கூட்டுறவு நூற்பாலைகளிலும், அரசு எடுத்திருக்கிற ஆலைகளிலும் எல்லா ஆலைகளிலும் உற்பத்தியாகின்ற எல்லா நூலையும் இங்கே உள்ள நெசவாளர்களுக்குத்தான் கொடுக்க வேண்டுமென்ற முடிவை அரசாங்கம் எடுத்திருக்கிறது. அதற்காக கார்டு சிஸ்டத்திலே நூலைக் கொடுத்து வருகிறோம். விலையைப் பொறுத்த அளவுக்கு அப்பொழுதைக்கப் போது கூடிப் பேசி சந்தையினுடைய விலையைவிட அதிகமாகாமல் இருக்க முயற்சி எடுக்கிறோம்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவர் அவர்களே, கூட்டுறவு துறையிலே 12 ஆலைகள் இருக்கின்றன. அவற்றிலே உற்பத்தியாகிற நூலை நாமே விநியோகிக்க என்ன கஷ்டம் ஏற்படும்? தற்பொழுது கரூர் போன்ற பகுதிகளிலே நூல் கிடைக்காத காரணத்தினால் விநியோகம் சரியாக நடைபெறவில்லையென்ற புகார் வந்திருக்கிறது. அது சம்பந்தமாக மாநில அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது? மத்திய அரசாங்கத்தோடு இது சம்பந்தமாக என்ன தொடர்பு ஏற்படுத்தி இருக்கிறது என்பதையும் தெரிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நம்முடைய மாநிலத்தினுடைய தேவையிலே ஒரு பங்குதான் இந்த ஆலைகள் மூலமாக உற்பத்தியாகிறது. இவ்வாலைகள் மூலமாக சுமார் 11,000 பேல்கள் தான் கிடைக்கின்றன. அதை முழுமையாக கோ ஆப்டெக்ஸ் மூலமாக விநியோகம் செய்கிறோம். ஆனால் நம்முடைய விநியோகத்துக்கும் நாம் உற்பத்தி செய்வதற்கும் சம்பந்தம் இல்லாமல் இருப்பதால்தான் தனியாரிடத்திலே ஏராளமான நூலை உற்பத்தி செய்து, அதை நாம் பெற்று நெசவாளர்களுக்கு வழங்கினாலொழிய இந்தப் பிரச்சினை தீராது.



**திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி :** தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலத்திற்குத் தேவையான பட்டையும் நூலையும் நாமே விநியோகிக்கும் உரிமை நம்முடைய அரசுக்குக் கிடைக்கும் காலம் வரை இடையிலே இருக்கக்கூடிய காலத்திலே நம்முடைய நெசவாளர்கள் குறிப்பாக அருப்புக்கோட்டை, சின்னாளப்பட்டி போன்ற பகுதிகளிலுள்ள நெசவாளர்கள் பட்டினியால் வாடக் கூடிய நிலை இருப்பதால், இடைக் காலத்திற்கு, ஓரளவுக்கு நிவாரணம் கொடுக்கக்கூடிய ஏற்பாட்டை அரசு செய்ய முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அதற்குத்தான் ஏற்கனவே, ரூ. 1 கோடி கொடுக்கப்பட்டது. ஆனால் துர்ப்பாக்கியம் என்னவென்றால், நம்முடைய நாட்டிலே நூல் இருக்கிறது. அதை எடுத்து கொடுக்க முடியவில்லையென்று வருத்தப்படுகிறோம். மத்திய அரசாங்க உதவி கிடைக்காத காரணத்தால், மாநில அரசாங்கம் உதவி கொடுக்க வந்திருப்பது நெசவாளர்களுக்கு ஓர் உணர்ச்சியை ஏற்படுத்தும். நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த அளவுக்கு உதவி செய்ய முடியாத ஒரு சூழ்நிலையை உருவாக்குகிற மத்திய அரசாங்கக் கொள்கைதான் இதற்குக் காரணம். நாம் மீண்டும் பரிசிலனை செய்யவேண்டுமென்று மத்திய அரசாங்கத்தைக் கேட்டு வருகிறோம்.

**திரு. ஏ. எம். இராஜா :** தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலத்திலேயே நம்முடைய தேவைக்கு மிக அதிகமான அளவுக்கு நூல் உற்பத்தியாகிறது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். கூட்டுறவுத் துறையிலே இருக்கிற நூலை நம்முடைய அரசு முறைமையாக தேவையானவர்களுக்குக் கொடுத்து வருகிறதே, அதேபோல், தனிப்பட்ட முதலாளிகளது ஆலைகளிலே தயாராகிற நூலையும்—மத்திய அரசு நமக்கு நிச்சயமாகக் கொடுக்கப் போவதில்லை—பெற, நம்மிடமிருந்து பல வசதிகளை அவர்கள் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள், அவர்களை நெருக்கி, நூலை பெறவும் அல்லது அவ்வாலைகளை நாட்டுடைமையாக்கவோ அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அப்படி செய்த முயற்சிக்குத்தான் மாபெரும் கண்டனம் சொல்லப்பட்டது. நேற்றுகூட இங்கே சொல்லப்பட்டது. நாம் நல்ல நோக்கத்தோடு இதைச் செய்ய

விரும்பினாலும் அந்த ஆலைகளையும் முதலாளிகளையும் பாதுகாக்கிற நிலை நாட்டிலே நிலவி வருவது துர்ப்பாக்கிய நிலை. இருந்தாலும் தாங்கள் அவர்களோடு பேசியதில் ஏற்கனவே முடிவெடுக்கப்பட்டு 9,000 பேல்கள் தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். நாம் 11,000 பேல்கள் உற்பத்தி செய்கிறோம். ஆனால், எல்லா ஆலை முதலாளிகளும் உதவி செய்வதில்லை. அந்த முதலாளிகளுக்கு மேலிடத்திலிருந்து ஆதரவும் கிடைத்து வருகிறது.

**திருமதி ஜோதி வெங்கடாசலம் :** சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் சென்ற சட்டசபையில் கூறும்போது தமிழ் நாட்டில் 20,000 பேல்கள் கிடைக்கின்றன, ஆனால் மத்திய அரசு மூலமாக கிடைக்கப்பெறுவது 8,000 பேல்கள்தான் என்று கூறினார்கள். அதை உயர்த்துவதற்காக மத்திய அரசு ஏதாவது முயற்சி செய்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அந்தக் கட்டுப்பாட்டையும் அவர்கள் எடுத்து விட்டார்கள். 75 சதவிகிதம் பவர் கட் இருக்கும் போது அப்படி நிலை ஏற்பட்டது. இப்பொழுது பவர் கட் குறைவாக இருப்பதால், ஏராளமாக உற்பத்தி செய்கிறோம். ஆனால், அதிகாரம் அங்கே இருக்கிறது.

**THIRU K. M. SUBRAMANIAM :** Sir, whenever the price of yarn or dye stuff or any other raw material is reduced, the benefit of reduction goes to the master weaver and not to the weaver whose wages remain static. Will this Government take steps to see that such benefit of reduction in price goes to the weaver and not to the master weaver?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** விலை ஏறக்கூடாது என்பது தான் நம்முடைய பிரச்சினை. எல்லோரும் அதைத்தான் ஆதரிக்கிறார்கள். விலை ஏறலாம், அது யாருக்குப் போகவேண்டுமென்று பரிசீலிப்பதற்கு அரசாங்கம் தயாராக இல்லை. 'மாஸ்டர் வீவர்ஸ்' பற்றி நம்முடைய கொள்கையை மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறோம். எதிர்காலத்திலே அவர்கள் இருக்கக்கூடாத அளவுக்கு கூட்டுறவுத் துறையிலே அந்த கைத்தறியைக் கொண்டு வருவதற்கு அரசாங்கம் முயற்சி செய்யும்.





**திரு. வா. மை. அப்துல் ஜப்பார் :** தலைவர் அவர்களே, கல்கத்தா போன்ற நகரங்களில் உள்ள வியாபாரிகள் சிலர் கோவை, திருப்பூர் போன்ற இடங்களில் தயாராகும் நூல்களை எந்த விலை கொடுத்தும் வாங்கி, அதை கல்கத்தாவுக்குக் கொண்டு சென்று, அங்கிருந்து வங்காளம் போன்ற அன்னிய நாடுகளுக்குக் கொண்டு செல்வதாக ஒரு புகார் இருக்கிறதே, அதைத் தடுக்க காவலர்களை எல்லையில் அமைக்க இந்த அரசுக்கு அதிகாரம் உண்டா? மத்திய அரசு இந்த மாநிலத்திற்கு நூல்களை ஒதுக்க இடைஞ்சல் ஏற்படுத்தினால், அதை உற்பத்தி செய்யும் ஆலைகளுக்கு வழங்கும் மின் விசை போன்றவற்றைத் தடை செய்து அந்த நூல்களை இந்த மாநிலத்திற்குக் கிடைக்க அரசு ஏதாவது வழிவகை காணுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அவர்கள் சொன்னது மிகச் சரியான கருத்து. அப்படி ஒரு காரணத்தினாலேயும் நாம் உற்பத்தி செய்து குறைந்த விலைக்கு அரசாங்கம் வாங்கிக் கொடுக்கிற நூலையும் கடத்துகிற வாய்ப்பு இருக்கிறது. அதையும் நாம் மத்திய அரசாங்கத்திற்குத் தெரிவித்து இருக்கிறோம். மத்திய அரசாங்கத்திடம் நாம் உங்களுடைய ஏற்றுமதி இறக்குமதிக் கொள்கையால் எங்களுடைய மாநிலத்திலே நூல் பற்றாக்குறை ஏற்பட்டுவிடக் கூடாது என்பதையும் வற்புறுத்திச் சொல்லி வருகிறோம். ஆனால் அதைத் தடுப்பதற்கான வாய்ப்பும் அதிகாரமும் நம்மிடத்திலே இல்லை.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** மாநில அரசாங்கத்திடம் ஒதுக்கப்பட்ட நூலை சரியான முறையில் விநியோகம் செய்யவில்லை. தவறான முறையில் பங்கீடுகள் செய்யப்பட்டிருக்கின்றன என்பதால் அதற்காக சர்வ கட்சி குழுவை அமைத்து பல ஊர்களிலே வழங்கவேண்டும் என்று கூறப்பட்டதே அது என்ன ஆயிற்று?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** பொருளாதாரப் பிரச்னையில் அரசியல் பார்ப்பதால்தான் இதிலே தமிழகம் பின்தங்கி வருகிறது. * * ஒதுக்கப்பட்ட நூலைக் கொடுப்பதில் தவறுகள் ஏற்பட விடக்கூடாது என்ற முறையிலேதான் இந்த அரசாங்கம் ஏற்பாடுகளைச் செய்திருக்கிறது. ஒவ்வொரு வட்டத்திலும் அதிகமான

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பட்டது.

[1973 நவம்பர் 22

தறிகள் உள்ள இடங்களிலே எல்லாம் எல்லாக் கட்சிகளைச் சேர்ந்த நெசவாளர்களையும் அந்தந்தத் தொகுதிகளின் சட்டமன்ற உறுப்பினர்களையும் கலந்துகொள்ளக்கூடிய வகையில் குழுக்கள் அமைத்து, அந்தக் குழுக்கள்தான் நூல் கொடுக்கவேண்டுமென்ற முறையிலே நாம் அறிவித்திருக்கிறோம். அப்படி ஏதாவது தவறு நடக்கிறதா என்பதை ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் கண்காணிக்க வேண்டுமென்று நானே ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் கடிதம் எழுதியிருக்கிறேன். திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்களும் அதைக் கவனித்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். தவறு நடந்தால் தவறை நாம் கண்டுபிடிக்கவேண்டுமே தவிர, அதற்காக மத்திய அரசாங்கத்தைப் பரிந்து பேசவேண்டுமென்று எண்ணி நம்முடைய மாநிலத்திலுள்ள உரிமைகளை விட்டுவிடக் கூடாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வி நேரம் சட்டமன்றத்தின் நிகழ்ச்சிகளிலேயே மிகவும் முக்கியமான நேரம், அதிலே உறுப்பினர்கள் கேள்விகள் கேட்கலாம், உணர்ச்சிவயப்பட்டு விடக் கூடாது, உணர்ச்சிவயப்பட்டு * * என்ற வார்த்தைகளைச் சொல்லாமல் இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** சார், இப்பொழுது நூல் பற்றாக் குறை என்ற பிரச்னை இல்லை. விஷயம் என்னவென்றால் நூல் விலை ரொம்ப ஜாஸ்தியாக இருக்கிறது, இப்பொழுது கூட்டுறவிலே நூல் என்ன விலைக்கு விற்கிறார்கள்? குறைந்த விலைக்கு விற்கப்படுகிறதா? கைத்தறியாளர்களுக்குக் குறைந்த விலைக்குக் கொடுக்க வேண்டுமென்ற கொள்கை இருந்ததே, இப்பொழுது கூட்டுறவு மூலம் அப்படிக் குறைந்த விலைக்குக் கொடுக்கப்படுகிறதா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இப்பொழுது விஷயம் என்னவென்றால், கூட்டுறவு நெசவாளர்களைப்பற்றி பேச்சே கிடையாது, கூட்டுறவு சங்கங்களுக்கு நம்முடைய ஆலைகளிலிருந்து நாம் நூல் கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். பிரச்னை என்னவென்றால் நான்-கோவாப்ரேடிவ் செக்டாரில் உள்ளவர்களுக்குக் கிடைப்பதிலேதான் பிரச்னை இருக்கிறது. கூட்டுறவிற்கு அப்பாலே உள்ள நெசவாளர்களுக்கு, சர்வீஸ் கோவாப்பரேடிவ் சொசைடிஸ் என்று வைத்து அவைகளின் மூலம் நூலை விநியோகிக்கலாம் என்று முடிவு செய்தால் வியாபாரிகள், மாஸ்டர் வீவர்கள் தவறுகள் செய்வதைத்

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



1973 நவம்பர் 22]

தடுக்க முடியும். அந்த ஆலோசனையைத்தான் அரசாங்கம் சொல்லி வருகிறது. அப்படிச் செய்தால்தான் அதைத் தடுக்க முடியும்.

**திரு. குப்பல் கே. எஸ். இராமகிருஷ்ணன் :** நம்முடைய அரசினுடைய கொள்கை எல்லா கைத்தறியாளர்களுக்கும் நூல் கிடைக்கவேண்டும் என்பதுதான். கூட்டுறவின்மூலம் இதற்காக ஏற்பாடு செய்யும்பொழுது எம்.டி.சி. பாங்கிலே அதற்கு கன்கரன்ஸ் கொடுப்பதற்கு அவர்கள் இசைவு தருவதில்லை. மத்திய அரசாங்கத்திடமிருந்து அனுமதி கிடைப்பதிலே தாமதம் ஏற்படுகிறது. அதனால் புதிதாகத் தொழில்களை ஆரம்பிப்பதற்கு சிலர் மறுத்து வருகிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** புதிதாகச் சங்கம் ஆரம்பிக்க வேண்டுமென்றால் எந்தவிதமான தடையிருந்தாலும் அதைத் தவிர்த்து அவர்கள் ஆரம்பிக்கலாம்.

**திரு. செ. கந்தப்பன் :** தலைவர் அவர்களே, நம்முடைய தொழில் அமைச்சரும், மாண்புமிகு முதல்வர் அவர்களும் பலமுறைகள் எடுத்துச் சொல்லியும்கூட இன்னும் புரிந்து செயல்படாத தன்மையில் இருக்கின்றவர்கள் செயல்படும்வண்ணம் நாமே ஒரு சட்டத்தைக்கொண்டுவந்து செயல்படவைக்கலாம் என்ற முறையிலே அதற்கான முயற்சிகள் எடுக்கப்படுவதாக இருந்ததே அது என்ன ஆயிற்று? இரண்டாவதாக, ஒரு கோடி ரூபாய் நெசவாளர்களுக்கு வழங்கப்பட்டதில், ஒரு சில நெசவாளர்களுக்குத்தான் தரப்பட முடிந்தது. பல நெசவாளர்களுக்குத் தரப்படவில்லை. இந்தக் காரணத்தினால் தரப்பட்டவர்களுக்குக் கிடைத்திருக்கின்ற பலன்களைவிட, தரப்படாதவர்களுடைய சலிப்புத்தான் அதிகமாக இருக்கிறது. இதுபோன்று இல்லாமல் தகுதிவாய்ந்த எல்லா நெசவாளர்களுக்கும் அந்தத் தொகை கிடைப்பதற்கான வழியை அரசு செய்யுமா? மூன்றாவதாக, (மணியடிக்கப்பட்டது), இது முக்கியமான கேள்வி, ஏனென்றால் நாள்தோறும் எங்களை வந்து சந்திக்கின்றவர்களை நாங்கள் மத்திய அரசைக் கேட்டுக் கொண்டு இருக்கிறோம், மத்திய அரசைக் கேட்டுக்கொண்டு இருக்கிறோம் என்று சொல்லிக்கொண்டிருக்கிறோம். எத்தனை நாளைக்கு அப்படிச் சொல்லிக் கொண்டிருப்பது? இன்றைக்கு உள்ள சூழ்நிலையைப் பயன்படுத்தி ஒரு குழப்பமான நிலையை ஏற்படுத்த

[1973 நவம்பர் 22

வேண்டுமென்ற முறையிலே ஒரு அரசியல் கட்சி நெசவாளர்களுக்கு என்று சொல்லி பண வசூல் செய்துகொண்டிருக்கிறார்களே, இதையெல்லாம் மாற்றுவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இதுபோன்ற பொதுப் பிரச்னைகளிலே அரசியல் கலக்காமல் நெசவாளர்களுக்கு உதவி செய்வதுதான் நல்லது. செல்லுகின்ற இடங்களிலே எல்லாம் எல்லாத் தரப்பினரையும் சந்தித்துப் பேசுகின்றோம். நம்மிடத்திலே 5 லட்சம் தறிகள், 20 இலட்சம் நெசவாளர்கள், நாம் கொடுத்தது ஒரு கோடி ரூபாய்தான், ஆகவே அப்படிப்பட்ட சிக்கல் ஏற்படுவது இயல்பு.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** அமைச்சர் அவர்கள் நெசவாளர்களுக்குச் சரியான முறையிலே கொடுப்பதாகச் சொல்கிறார்கள், உத்திரவு போடப்பட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். ஆனால் நாங்கள் அங்கே போய்ப் பார்க்கிற நேரத்திலே நிலைமை வேறு மாதிரியாக இருக்கிறது. கன்ட்ரோல் ரேட்டிலே கிடைக்கவில்லை, பிளாக் மார்க்கெட்டிலே ஏராளமாகக் கிடைக்கிறது. ஓப்பன் மார்க்கெட்டிலே கிடைக்கிறது என்று சொல்லப்படுகிறது. ஆனால் இரண்டு மடங்கு விலை கொடுத்து வாங்கவேண்டியிருக்கிறது. முழுமையாகக் கன்ட்ரோல் ரேட்டிலே கொடுப்பதிலே என்ன கஷ்டம்? ஓப்பன் மார்க்கெட்டிலே இருக்கிறது என்று சொல்கிறார்கள். ஓப்பன் மார்க்கெட்டிலே டபிள் தி ரேட்டுக்குத்தான் கிடைக்கிறது. கன்ட்ரோல் ரேட்டுக்குக் கிடைக்கவில்லை. அவர்கள் இங்கே சொல்லிவிட்டதால் பயன் ஒன்றும் இல்லை. இதற்காக அரசாங்கம் ஒரு திட்டவட்டமான முடிவை கொடுக்க முடியுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** கன்ட்ரோல் ரேட்டுக்குக் கிடைக்கவில்லை என்று சொன்னார்கள். கன்ட்ரோலே இல்லை. ஆகவே கன்ட்ரோல் ரேட்டுக்குக் கிடைக்காது. நியாயமாக நூல் கிடைக்கச் செய்யவேண்டுமென்று நாம் முயற்சி செய்தால் அவர்கள் சுப்ரீம் கோர்ட்டிற்குப் போனார்கள், அவர்களைக்கூட ஆதரிக்கின்றவர்கள் இருக்கின்றார்களே என்ற நிலைமையும் இருக்கிறது. இந்தப் பிரச்னையில் கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்தவரையில் பிரச்னை கிடையாது. கூட்டுறவுச் சங்கங்களுக்கு அப்பாற்பட்டவர்களைப் பொறுத்துத்தான் பிரச்னை எழுகிறது. திரு. ஏ. எம். இராஜா அவர்கள் சொன்னதைப்போல் நம்முடைய சக்தியைப்



1973 நவம்பர் 22]

பயன்படுத்தி முடிந்தவரையில் ஆலைக்காரர்களையெல்லாம் அழைத்துப் பேசி அவர்களும் 9,000 பேல்கள் தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள்.

**திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி :** நூல் விலையேற்றத்தின் காரணமாக ஒரு கோடி ரூபாய் அரசாங்கம் நெசவாளர்களுக்கு உதவி செய்தது. அதுபோன்று செயற்கைப்பட்டு விலையேறியபொழுதும் அரசாங்கம் கார்டு வைத்திருக்கின்றவர்களுக்கு அரை கிலோ கொடுக்க ஏற்பாடு செய்தது. இதைத் தவிர அவர்களுக்கு அரசாங்கம் வேறு ஏதாவது செய்வதற்கு ஏற்பாடு செய்யுமா? ஏனென்றால் அருப்புக்கோட்டை, சின்னாளப்பட்டி போன்ற இடங்களிலே உள்ளவர்கள் பட்டினியால் ஊரைவிட்டே போகக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. எனவே அரசு இதைப் பரிசிலனை செய்யுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** செயற்கைப் பட்டுப் பிரச்னையைப் பொறுத்தவரையிலும்கூட அரசாங்கம் தனிக் கவனம் செலுத்துகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. நா. வீராசாமி :** தலைவர் அவர்களே, நெசவாளர்களுடைய துயரைத் துடைப்பதற்காக நம்முடைய அரசாங்கம் எவ்வளவோ முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது. ஒரு தனிப்பட்ட அரசியல் கட்சி இந்தப் பிரச்னையைச் சொல்லி லட்சக்கணக்காக நிதி சேர்ந்தார்கள் என்று பத்திரிகையிலே பார்த்தோம். மறுநாள் பத்திரிகையிலே பார்த்தால் ஆயிரக்கணக்கிலே நிதி இருப்பதாக பத்திரிகைகளிலே போடப்பட்டிருந்தது. ஆகவே இப்படி வசூல் செய்யப்படும் நிதிகளை அரசாங்கமே மேற்கொண்டு நெசவாளர்களுக்கு வழங்க ஏற்பாடு செய்யுமா? முன்பு திராவிட முன்னேற்றக் கழகம் அப்படிச் செய்தபொழுது அந்த நிதியை நெசவாளர்களுக்குத்தான் கொடுத்தது. இப்பொழுது வசூலிக்கப்பட்ட பணத்தை அரசாங்கத்திடம் கொடுத்து அதற்குப் பிறகு அவர்களுக்கு விநியோகம் செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நெசவாளர்களுக்கு நூல் கிடைக்க வேண்டுமென்பதுதான் நம்முடைய கவலை. வேறு கட்சிக்கு வேறு எந்தக் கவலையாவது இருந்தால் அதைப்பற்றி அரசாங்கத்திற்குக் கவலையில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, கேள்வி எண் 315.

[1973 நவம்பர் 22

திரு. எம். சுரேந்திரன்: தலைவரவர்களே, நான் ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எத்தனை கேள்வி கொடுக்கப்பட்டிருக்கிறது என்று பார்த்தால் தெரியும். ஒரு கேள்விக்கு மட்டும் 20 துணைக்கேள்விகள் கொடுத்திருக்கிறோம். எல்லோரும் கேட்பது என்றால் முடியாது. அடுத்து, கேள்வி எண் 315.

* 315 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Industries be pleased to state whether the District Collectors have been empowered to conduct raids with a view to unearth illegally hoarded stocks of yarn?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: ஆம்.

திரு. என். கே. பழனிசாமி: சார், இதுவரையில் எந்தெந்த மாவட்டங்களில் 'ரெய்ட்' செய்து நூல் கைப்பற்றப்பட்டிருக்கிறது? சென்ற ஆண்டு நடந்த போராட்டத்தின் காரணமாக அரசு தலையிட்டு இவ்வளவு நாள் கழித்தும் கார்டுதான் கொடுத்திருக்கிறதே தவிர, நூல் கொடுக்கவில்லை. ஆனால் தனிப்பட்ட வியாபாரிகளிடம் ஏராளமான நூல் தேங்கி இருக்கிறது. ஆகவே, 'எசன்சியல் கமாடிட்டீஸ்' ஆக்ட், செக்ஷன் 16, 18 மூலம் கலெக்டர் மூலமாக 'ப்ரொக்யூர்' செய்ய ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: 'எசன்ஷியல் கமாடிட்டீஸ்' என்று உத்தரவு போட மத்திய அரசின் அனுமதி வேண்டும். மற்ற பிரச்னைகளைப்பற்றி விளக்கம் சொல்லியிருக்கிறேன். நாமே சில நடவடிக்கைகளை எடுத்தோம். அதற்கும் சுப்ரீம் கோர்ட்டு ஸ்டே கொடுத்திருக்கிறது.

### விசைத்தறிகள்

* 316 வினா—திரு. கி. செயராமன்: மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மத்திய அரசினால் தமிழகத்திற்கு ஒதுக்கப்பட்ட விசைத்தறிகள் அனைத்திற்கும் அனுமதிகள் வழங்கப்பட்டு விட்டனவா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இல்லை.



1973 நவம்பர் 22]

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, முன்னால் அமைச்சரவர்கள் பதில் சொல்லும்பொழுது இந்த விசைத்தறி பூராவும் கூட்டுறவு முறையிலே, கூட்டுறவுச் சங்கங்களுக்கு விநியோகிக்கப்படுவதாகச் சொன்னார்கள். இப்பொழுது 'மாஸ்டர் வீவர்ஸ்'-களுக்குக் கொடுக்கப்பட்டு வருவதாகத் தெரிகிறது. இதை இந்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கொடுக்க வேண்டுமென்பதைக் கண்டிப்பாகக் கடைப்பிடிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இது நம்முடைய அரசாங்கத்தின் கொள்கை என்று அறிவித்தேன். 12,500 ஆவது கொடுக்க வேண்டும் என்று முடிவு செய்தோம். முதல் உரிமை கூட்டுறவுச் சங்கங்களுக்கு, இரண்டாவது உரிமை யார் உண்மையிலேயே நெசவுத் தொழிலைச் செய்கிறார்களோ அவர்களுக்கு, மீதி அரசுக்கு. அதன்படி 6,122 விசைத்தறிகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 1,236; தனிப்பட்ட வீவர்ஸ்க்கு 3,886; நம்முடைய அரசுக்கு 1,000 என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. இடையிலே, அனுமதியில்லாமலே 20 ஆண்டுகாலத்தில் விசைத்தறி போட்டவர்களின் எண்ணிக்கையைப் பார்க்கும்பொழுது நாம் கொடுக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, இப்பொழுது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. கே. கந்தசாமி: தலைவரவர்களே, நூல் பற்றுக்குறை இருக்கும் நேரத்தில், நியாயமான முறையில் விநியோகம் செய்ய அரசு சிரமப்படும் நேரத்தில், உண்மையிலே தறிக்காரர்களாக உள்ளவர்களோடு போட்டி போட்டுக்கொண்டு தறியில்லாத சிலரும் இருப்பதாக அசிஸ்டெண்ட் டைரக்டரிடம் கேட்டபொழுது அவர்களும் ஓரளவு ஒத்துக்கொண்டார்கள். அதை ஏன் பரிசீலனை செய்து செக் செய்யக்கூடாது என்று கேட்டதற்கு adequate staff இல்லை என்று சொன்னார்கள். ஆகவே அருள்கூர்ந்து அதற்குரிய அதிகாரிகளை உடனடியாக நியமித்து போலி கார்டுகள் யாரிடமிருந்தாலும் நடவடிக்கை எடுப்பதன்மூலம் அரசுக்கு ஏற்படும் கஷ்டத்தையும் ஒரு கெட்ட பெயரையும், நியாயமான தறிக்காரர்களுக்கு இருக்கும் இடையூறுகளையும் நீக்கலாம் அல்லவா? அதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இதற்காக 'சென்சஸ்' இலாக்காவைப் பயன்படுத்தி தமிழ்நாடு முழுதும் கண்டுபிடிக்கப் பட்டு அதன் அடிப்படையிலே விநியோகிக்க ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. அந்த ஊரிலேயே உள்ள எல்லாக் கட்சியைச் சேர்ந்த நெசவாளர்களையும் கொண்ட குழுவைப் பயன்படுத்தி பரிகாரம் காண முடியுமென்று கருதுகிறேன். அந்தக் குழுக்களை இன்னும் கொஞ்சம் விரிவுபடுத்தி, அதிகக் குழுக்களாகப் போட்டு, 1,000 தறிக்கு ஒரு குழு என்று எல்லாக் கட்சி நண்பர்களையும் அழைத்துப் பேசலாம் என்ற முயற்சி பரிசீலிக்கப்படுகிறது.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** சார், அனுமதியில்லாமல் போலி பவர்லூம்கள் தமிழ்நாட்டில் இருப்பதாகக் கூறப்படுகிறது. இதற்காக நடவடிக்கை ஏதேனும் எடுக்கப்பட்டிருக்கிறதா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** 1967-க்கு முன்னால் எங்களால் நடவடிக்கை எடுத்திருக்க முடியாது. அப்பொழுது, இருபதாண்டுக் காலத்தில் சுமார் 30,000 சட்ட விரோதமாக அனுமதிக்கப் பட்டிருக்கிறது. ஏன் அனுமதிக்கப்பட்டது, கொள்கை காரணமா என்று தெரியவில்லை. இப்பொழுது நாம் 12,500-வது கொடுக்க வேண்டுமென்று முடிவு செய்தோம். அப்பொழுது 30,000 என்று இருந்தால் யாருக்குக் கொடுப்பது என்ற பிரச்னை வந்தது. எனவே, நாம் மத்திய அரசிடம் விவாதித்து, குறைந்தபட்சம் இப்பொழுது இருக்கும் விசைத்தறிகளையாவது சட்டபூர்வமாக ஆக்கிவிட்டால், எதிர்காலத்திலே விசைத்தறிகள் அதிகமாகப் பரவுவதற்கு இடமில்லாத அளவிற்கு நாங்களே சட்டம் கொண்டு வருகிறோம் என்ற ஆலோசனையையும் தெரிவித்திருக்கிறோம்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதில் சொன்ன சமயத்தில் 1967-க்கு முன்னால் நடவடிக்கை எடுக்க எங்களால் முடியவில்லை என்று சொன்னார்கள். 1967 ஆம் ஆண்டுக்கு முன்னால் இந்தத் தகவல் அமைச்சருக்குத் தெரியுமா? அப்படி யென்றால் அவர்கள் அந்த அரசாங்கத்திற்கு இந்தத் தகவலைக் கொடுத்தார்களா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** பெரும்பாலும் தமிழ் நாட்டிலுள்ள 4 கோடி மக்களுக்கும் தெரிந்த பிரச்னைதான். காரணம் என்னவென்றால் விசைத்தறிகளை நாம் சட்டபூர்வமாகத் தடுக்கும்பொழுது பல பிரச்னைகள் வந்தன. ஆகவேதான் 'கொள்கை அளவிலா' என்ற ஒரு வார்த்தையும் சொன்னேன்.





**திரு. எம். சுரேந்திரன்:** சார், அமைச்சரவர்கள் பதில் சொல்லும் பொழுது எல்லா மட்டங்களிலும் சர்வ கட்சி கமிட்டி அமைத்து நூல் விநியோக ஏற்பாடு செய்வதைப்பற்றிக் கூறினார்கள். இது பற்றி சட்டமன்ற உறுப்பினர்களோடு கலந்து ஆலோசனை செய்யக் கடிதம் எழுதியதாகச் சொன்னார்கள். அம்மாதிரி ஆலோசனை செய்ய பல கமிட்டிகள் முறையாக அமைக்கப்படவில்லை என்று நான் பதில் எழுதினேன். ஆனால் அதற்குப் பதில் வரவில்லை. எனவே, இது சம்பிரதாயத்திற்காகச் சொல்லப்படுகிறதே தவிர முறையாகச் செயல்படுத்த இந்த அரசாங்கம் சிந்திக்கவில்லை என்று கருதுகிறேன். ஆகவே, வருங்காலத்திலாவது இதுபற்றிச் சிந்திக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் வருத்தப்படக்கூடாது. நான் அவர்களைப் பாராட்டலாம் என்று கருதிக்கொண்டிருந்தேன். அவரும், இன்னொரு அங்கத்தினரும், இந்தப் பகுதியில் ஒரு அங்கத்தினரும் இந்தத் துறையைச் சேர்ந்தவர்களைப்பற்றி மிகுந்த அக்கறையெடுத்து, இந்தந்த இடத்தில் இப்படிப்பட்ட தவறுகள் நடக்கின்றன என்ற அந்தச் செய்திகளை அனுப்பி வைத்தார்கள். உடனடியாக இயக்குநருக்கு விசாரணை நடவடிக்கைக்காக உத்தரவிடப்பட்டிருக் கிறது. தொடர்ந்து அவர்கள் ஒத்துழைப்பு தரவேண்டும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தலைவரவர்களே, இந்த விசைத்தறி சம்பந்தமாக மராட்டிய மாநிலத்தில் அதிகமாக விசைத்தறிகள் இருக்கின்றன. விசைத்தறிகளைப் புகுத்தக்கூடாது என்று முன்பிருந்தது. ஆகவே, இது சம்பந்தமாக விசைத்தறிகளை அதிகமாகப் பெறுவதற்கு அரசாங்கம் மேலும் முயற்சி எடுக்குமா? 12,500 என்று இப்பொழுது ஒதுக்கப்பட்டதாக அறிகிறேன். இது போதாது. ஆகவே, இன்னும் 3 மடங்கு வரும் அளவில் என்ன நடவடிக்கை மேற்கொள்ளும் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** அதிக விசைத்தறிகள் வருமானால் கைத்தறிக்கு பாதகம் என்ற நிலை இருக்கிறது. ஆகவே, நம்முடைய அரசு தெரிவித்துள்ள யோசனை என்னவென்றால், இத்தனை ஆண்டுகாலமாக இருக்கிற சுமார் 30,000 விசைத்தறிகளை யாவது அனுமதித்துவிடுங்கள், மேற்கொண்டு வராதவாறு சட்ட ரீதியாகத் தடுக்கலாம் அல்லது அனுமதிக்கலாம் என்ற முடிவை

[1973 நவம்பர் 22

அரசு தெரிவித்திருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சரவர்கள் பிரதம அமைச்சருக்கு நேரடியாகக் கடிதம் எழுதியிருக்கிறார்கள். இன்னும் கருணை பிறக்கவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

கேள்வி நேரத்தின்பொழுது * * என்று கூறப்பட்ட வார்த்தைகளை நிகழ்ச்சிக் குறிப்பிலிருந்து நீக்கிவிடும்படி கூறுகிறேன். பத்திரிகையாளர்களும் அதை வெளியிட வேண்டா மென்று கேட்டுக்கொள்கிறேன்.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. அவையுரிமைப் பிரச்சினை.

### உறுப்பினர் திருமதி த. ந. அனந்தநாயகியின் வீட்டிற்கு முன் நடந்த ஆர்ப்பாட்டம் குறித்து (தொடர்ச்சி).

MR. SPEAKER : A notice of privilege has been given by the hon. Member, Thirumathi T. N. Anandanayaki. In the said notice, she has stated as follows :—

" In front of my house there was a demonstration which indirectly threatens me from discharging my duties as an Opposition Member of this august Assembly."

It is a breach of privilege to molest a Member of a Legislature while attending the Assembly or when coming to or going from it. Thus, insults offered to Members on their way to, or from the House have always been deemed high breaches of privilege. So also, to molest a Member on account of his conduct in Parliament is a breach of privilege.

In the case raised by the Member, she has stated that there was a demonstration in front of her house. It is not known for what purpose or with what motive the demonstration was held.

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



1973 நவம்பர் 22] [Mr. Speaker]

The Member has not stated that the said demonstration was held with reference to her conduct in the Legislative Assembly. She has only stated that the said demonstration had indirectly threatened her from discharging her duties as an Opposition Member of this Assembly. She has not explained how that demonstration amounted to such an indirect threat.

In this connection, one has to remember that there may be demonstrations by the public for or against the conduct of persons engaged in public or political activities. Such demonstrations cannot be held to be breaches of privilege when the person concerned happens to be a Member of the Legislature or Parliament, unless it is proved that the said demonstration was intended as an intimidation or amounted to a molestation of a Member with a view to prevent him from discharging his duties as a Member. Hence, in the absence of any proof that the alleged demonstration has anything to do with the business of the Member relating to the House, I hold that there can be no breach of privilege.

The same ruling will apply to the notice of Dr. H. V. Hande on the same subject.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் கொண்டு வந்த உரிமைப் பிரச்னையின் மீது இன்று நான் தீர்ப்புக் கூறுவதாகக் கூறினேன். அதைப் பிறிதொரு நாள் கூறுகிறேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

## 3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

### தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, தென்னார்க்காடு, வட ஆர்க்காடு மாவட்டங்களிலுள்ள அரசினர் கல்லூரி அரிசன விடுதி மாணவர்கள் உண்ணாவிரதம் காரணமாக கல்லூரிகள் மூடப்பட்டதன் விளைவு குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஆ. கு. சுப்பையா அவர்களும், திரு. மருதாசலம் அவர்களும், " தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி மாவட்டங்களிலுள்ள அரசினர் கல்லூரி அரிசன விடுதி மாணவர்கள் சில கோரிக்கைகளின் மீது உண்ணாவிரதம் இருந்ததின் காரணமாக கல்லூரிகள்

மூடப்பட்டு மாணவர்கள் பெற்றோர்களின் மத்தியில் கொந்தளிப்பு நிலை ஏற்பட்டிருக்கும் அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தைப்பற்றி விவாதிக்க" வேண்டுமென்று இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். திரு. சுப்பையா அவர்கள் இது எப்படி ஒத்தி வைப்பதற்கான முக்கியம் வாய்ந்தது என்பதை மட்டும் விளக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஆ. கு. சுப்பையா:** தலைவர் அவர்களே,

* **THIRU K. T. K. THANGAMANI:** I have given notice of a privilege motion and the privilege motion takes precedence. I want your permission to mention that privilege motion here.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தாங்கள் பிரிவிலேஜ் மோஷன் கொடுத்திருக்கிறீர்கள். அதைப்பற்றி ஆராய்ந்து கொண்டிருக்கிறேன். நாளைக்கு எடுத்துக் கொள்கிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** நேற்றே எடுத்திருக்க வேண்டும். It is on a matter which has happened here. இன்றைக்கு நான் அதைப்பற்றி எழுப்ப விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதை நாளைக்கு எடுத்துக் கொள்கிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** I may be permitted to make a submission நேற்று சில பிரிவிலேஜ் மோஷன்கள் எடுத்துக்கொள்ளப்பட்டன. அதே நேரத்திலே திடீரென்று நம்முடைய சபையின் முன்னவரும் உடனடியாக ஒரு பிரிவிலேஜ் மோஷன் கொண்டு வந்து அது நிறைவேற்றப்பட்டு உடனடியாக பிரிவிலேஜ் கமிட்டிக்குக் கொண்டு போகப்பட்டது. அந்த மாதிரி நிலையில் நேற்றே நடந்த சம்பவத்தை ஒட்டியது என்னுடைய பிரிவிலேஜ் மோஷன். I consider there is privilege involved and it is also contempt of the House.

நேற்றே நான் கொண்டு வந்திருக்க வேண்டும். கொண்டு வராதது தவறாக இருக்கலாம். எவ்வளவு சீக்கிரமாகக் கொண்டு வரவேண்டுமோ அவ்வளவு சீக்கிரமாகக் கொண்டு வந்திருக்கிறேன்.





இது நேற்று சபையில் நடந்த ஒரு விஷயமாக இருக்கும் காரணத்தால் இந்த மோஷனைக் கொண்டு வருவதற்கு அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். I do not want to raise that privilege motion or read what that privilege motion is without your consent. At the same time I want to impress on you that yesterday, some matter was brought to your notice and you allowed it and it was immediately referred to the Committee of Privileges. Today, if I am prevented from raising that privilege motion, I do not think it is a proper course.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவையில் நடந்த நிகழ்ச்சி பற்றி உடனடியாக உரிமைப் பிரச்சினை கொண்டு வந்து நிறைவேற்றுகின்ற ஒரு முறை இருக்கிறது. காலம் கடந்து, நேற்று நடந்த நிகழ்ச்சிபற்றி இன்று உரிமைப் பிரச்சினை எழுப்புகின்ற நேரத்தில் அது பற்றி ஆராய பேரவைத் தலைவருக்கு நேரம் கொடுக்க வேண்டும். இன்று இந்த நிகழ்ச்சி முடிந்த பிறகு அலுவல் ஆய்வுக் குழுவில்—அதையொட்டிய நிகழ்ச்சியாக இருப்பதால்—கலந்து பேசிய பிறகு இந்த உரிமைப் பிரச்சினை பற்றி முடிவு எடுக்கலாம் என்று திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன்.

**திரு. ஆ. கு. சுப்பையா:** தலைவர் அவர்களே, தஞ்சை, திருச்சி மாவட்டங்களில் இருக்கின்ற அரிசனக் கல்லூரி மாணவர்களுக்கு விடுதிக் கட்டணத்திற்காகக் கொடுக்கப்படுகிற தொகை குறைவாக இருப்பதாகவும், பிற்பட்ட மாணவர்களுக்குக் கொடுக்கப்படுகிற சலுகைகளை விட இவர்களுக்குக் கொடுக்கக்கூடிய சலுகைகள் குறைவாக இருப்பதாகவும், அந்தக் குறையை எடுத்துச் சொல்வதற்காக அவர்கள் உண்ணாவிரதம் இருந்த காரணத்தால் அந்தக் கல்லூரிகள் மூடப்பட்டிருப்பதாகவும் தகவல் கிடைத்திருக்கிறது. அது மட்டுமல்லாமல் மற்றக் கல்லூரிகளிலும் அமைதியற்ற நிலைமை நீடித்துக் கொண்டிருக்கிறது. இந்தப் பாகுபாட்டைப் போக்கக் கூடிய அளவுக்கு பிற்பட்ட மாணவர்கள், அரிசன மாணவர்களுக்கு அவரவர்களுக்கு உண்டான உரிமைகளைக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்பதற்காக இந்த ஒத்தி

வைப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறேன். இதற்கான பதிலையும் அரசாங்கத்திடமிருந்து எதிர்பார்க்கிறேன் என்று கூறி முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. பெ. சௌந்தரபாண்டியன் அவர்கள் இதே பொருள் பற்றி 41-வது விதியின் கீழ் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அவர்களும் இதிலே தன்னுடைய கருத்தைத் தெரிவித்து விடலாம்.

* **திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவர் அவர்களே, இதே பொருள் பற்றி நானும் 41-வது விதியின் கீழ் ஒரு தீர்மானம் கொடுத்திருக்கிறேன். இதிலே கருத்தறிவிக்குமாறு தலைவர் அவர்கள் சொல்லியதற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு தமிழகத்தில் திருச்சி, தஞ்சை, கரூர், விருத்தாசலம், வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள வேலூர் போன்ற நகரங்களில் கல்லூரிகளில் படிக்கின்ற தாழ்த்தப்பட்ட மாணவர்கள் தங்களுக்குக் கொடுக்கப்படுகின்ற உபகாரச் சம்பளம் கடந்த நான்கு ஆண்டுகளைவிட இப்போது குறைந்திருக்கிறது என்றும், தங்களுக்கு அளிக்கப்பட்ட உபகாரச் சம்பளத்திலிருந்து விடுதிக் கட்டணம், இதர சலுகைகளுக்குரிய தொகை அத்தனைக்கும் அரசாங்கம் பிடித்துக்கொள்ள ஆணை பிறப்பித்திருக்கிறது என்றும், தங்களுக்குத் தேவையான உறைவிட வசதியும், கழிப்பறை, குளிப்பறை வசதிகளும் கிடைக்காமல் அவதிப்படுவதாகவும், கொடுக்கின்ற பணத்தில் வெட்டு மட்டும் போடுகிறார்கள் என்பதற்காகவும் போராடிக் கொண்டிருக்கிறார்கள். அங்குள்ள அதிகாரிகளைக் கேட்டால் ‘அரசாங்க ஆணைப்படி செய்கிறோம்; நாங்கள் என்ன செய்ய முடியும் ?’ என்று சொல்லுகிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர்களும் மாவட்ட நல அதிகாரிகளும் அப்படித்தான் சொல்லுகிறார்கள். மாணவர்கள் இதனால் பெரிதும் தவிக்கிறார்கள். ஆகவே, இப்படிப்பட்ட ஆணையை அரசாங்கமே திரும்பப் பெற்று மாணவர்களுக்கு ஏற்கனவே வழங்கிய உபகாரச் சம்பளத்தைக் குறைக்காமல் அப்படியே வழங்குவதற்கும், அவர்களுக்குத் தேவையான நல்ல வசதி வாய்ப்புகளை உருவாக்குவதற்கும் தகுந்த நட



வடிக்கை எடுப்பது அவசியமும் முக்கியமும் ஆகும். இதை அரசாங்கம் உடனடியாகக் கவனிக்க வேண்டுமென்று மாணவர்கள் சார்பாக மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** தலைவர் அவர்களே, கல்லூரியில் படிக்கும் இந்து அரிசன மாணவர்களுக்கு மத்திய அரசு விதிகளின்படி உதவித் தொகை வழங்கப்படுகின்றது. அரசு அல்லது பல்கலைக் கழகம் நடத்தும் ஒவ்வொரு வகைப் படிப்பின் ஆண்டு இறுதித் தேர்வில் 60 விழுக்காட்டிற்கு மேல் மதிப்பெண் பெற்ற மாணவருக்கு மாதம் ரூ. 60 விகிதத்திலும், அதற்குக் குறைவான விழுக்காட்டில் மதிப்பெண் பெற்ற மாணவருக்கு மாதம் ரூ. 40 விகிதத்திலும் உதவித் தொகை வழங்கப்படுகின்றது. இந்த விகிதம் புகுமுக வகுப்பு, கலைப்படிப்பு போன்றவைகளுக்குச் சாரும். மற்ற வகைப் படிப்புகளுக்கு அந்தந்தப் படிப்புகளுக்கென மைய அரசு நிர்ணயம் செய்துள்ள விகிதத்தில் உதவித் தொகை வழங்கப்படுகிறது. இதில் உண்டு, உறைவிடச் செலவும், புத்தகம், நோட்டு செலவும் அடங்கியுள்ளது. இதைத் தவிர அவர்களுக்குப் படிப்புக் கட்டணம், தேர்வுக் கட்டணம், சிறப்புக் கட்டணம் போன்றவையும் படிக்கும் பிரிவுக்கேற்றதுபோல் வழங்கப்படுகின்றது. இவ்வுதவித் தொகை மத்திய அரசு விதிகளின்படி வழங்கப்பட்டாலும், இதற்காகும் செலவு முழுவதையும் மத்திய அரசே ஏற்றுக் கொள்வதில்லை. ஒரு பகுதியைத்தான் மைய அரசு வழங்குகின்றது. நடப்பு ஆண்டில் இதற்காக சுமார் 86 லட்சம் ரூபாய் செலவாகும். ஆனால், மைய அரசு இதற்காக 20 லட்சம் ரூபாய் மட்டும் வழங்க முன்வந்துள்ளது. மீதமுள்ளதை மாநில அரசே ஏற்றுக்கொள்ள வேண்டியுள்ளது.

மேற்படி உதவித் தொகை ஆண்டொன்றுக்கு 10 மாதங்களுக்கு வழங்கப்படுகிறது. இவ்விதம் உதவித் தொகை பெறும் மாணவர்கள் அரிசன நல விடுதிகளில் தங்கிப் படித்தால் மாதம் ஒன்றுக்கு சாப்பாட்டுக் கட்டணம் ரூ. 39-ம், உறைவிடக் கட்டணம் ரூ. 5 ஆக ரூ. 44 குறைத்துத்தான் மீதியை உதவித் தொகையாக வழங்குவது வழக்கம். உதவித் தொகை இதற்குக் குறைவாக இருந்தால் அவரிடமிருந்து கூடுதலான தொகையை வசூலிப்பதில்லை. இது மாணவர்களின் வசதிக் குறைவைக் கருத்தில் கொண்டு நடைமுறையில்

இருக்கிறது. இம்முறை 1971-ம் ஆண்டு வரை அரிசன நல இயக்குநர் அலுவலகத்திலிருந்து எல்லா மாவட்டங்களுக்கும் உதவித் தொகை வழங்கி வந்த நாள் வரை ஒரே மாதிரியாகச் செய்யப்பட்டது. 1971-ம் ஆண்டில் உதவித் தொகை துரிதமாக வழங்கப்பட வேண்டுமென்ற நோக்கத்துடன், மாவட்டங்களில் உள்ள கல்லூரி மாணவர்களுக்கு அந்தந்த மாவட்ட நல அலுவலரே உதவித் தொகை வழங்கலாமென ஆணையிடப்பட்டது.

இம்மாதிரித் திட்டத்தை மாற்றியமைத்த பிறகு திருச்சி, தென் ஆற்காடு, தஞ்சை ஆகிய மாவட்டங்களில் தவறுதலாக அரிசன விடுதிகளில் தங்கிப் படித்த மாணவர்களிடமிருந்து உண்டு, உறை விடக் கட்டணம் குறைக்கப்படாமல் உணவு விடுதியில் தங்கிப் படிக்காத மாணவர்களுக்கு வழங்கும் விகிதத்தில் உதவித் தொகை யாக வழங்கப்பட்டு வந்துள்ளது. தற்போதுதான் இந்தத் தவறு உணரப்பட்டு சரியான முறை கையாளப்பட்டது. இதுதான் இந்த மாவட்டங்களில் உள்ள கல்லூரி அரிசன மாணவர்கள் கிளர்ச்சிக்கு முக்கிய காரணம். 1973-ம் ஆண்டு சனவரி திங்களில் அரிசன நல இயக்குநரால் இம்முறை தவறு, உண்டு, உறைவிட தொகையைக் குறைத்துக் கொண்டுதான் அரிசன விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு உதவித் தொகை கொடுக்க வேண்டும் என்று அறிவித்த பிறகு இந்த மாவட்டங்களில் உள்ள அரிசன நல அலுவலர்கள் தவறை உணர்ந்து மேற்படி தொகையைக் கழித்து மீதியை உதவித் தொகையாக வழங்க ஆரம்பித்தனர். திடீரென்று ஏற்பட்ட மாறுதலை ஆட்சேபித்து திருச்சி மாவட்டத்தில் திருச்சிராப் பள்ளியிலும், குரூரிலும் உள்ள அரிசனக் கல்லூரி மாணவர்கள் கிளர்ச்சி செய்ய ஆரம்பித்தனர். இதைத் தொடர்ந்து தஞ்சையிலும் கிளர்ச்சி துவங்கியது. இதில் தவறு மாவட்ட அலுவலரை சேர்ந்ததுதான். மாணவர்களைச் சார்ந்ததல்ல.

அண்மையில் இது குறித்து திருச்சி மாவட்ட அரிசன மாணவர் களின் பிரதிநிதிகள் என்னிடம் தொலைபேசி மூலம் முறையிட்டனர். இதற்கு முதலில் கிளர்ச்சியை நிறுத்திவிட்டு, சென்னைக்கு வந்து அவர்களுடைய கோரிக்கைகளை விவரமாகத் தெரிவிக்கும்படி கூறி னேன். இதுபற்றி உடனடியாகப் பரிசீலிப்பதாகவும் உறுதி யளித்தேன். மாவட்ட ஆட்சியாளர்கள் மூலமாகவும் மாணவர்



களுக்கு நிலைமையை விளக்கும்படி அறிவுறுத்தப்பட்டது. பிறகு, சமூக நலத் துறை செயலர், அரிசன நலத்துறை கூட்டு இயக்குநர் இவர்களுடன் கலந்து ஆலோசித்த பிறகு மாணவர்களைக் கண்டு உண்ணாவிரதத்தைக் கைவிடும்படி கூறினேன். இதற்கிணங்க 14—11—1973 அன்று திருச்சி மாணவர்கள் உண்ணாவிரதத்தைக் கைவிட்டார்கள். பிறகு தஞ்சை மாணவர்களும் கிளர்ச்சியைக் கைவிட்டனர்.

பிறகு நாலைந்து மாணவர்கள் 18—11—1973 அன்று சென்னைக்கு வந்து என்னைச் சந்தித்து தங்களது கோரிக்கைகளைத் தெரிவித்தார் கள். அவர்கள் திருச்சி, தஞ்சாவூர், தென்னாற்காடு ஆகிய மூன்று மாவட்டங்களில்தான் இப் பிரச்சினை எழுப்பப்பட்டுள்ளது என்று தெரிவித்தனர். இந்தத் தவறை மாணவர்களிடம் எடுத்துக் கூறி தெளிவுபடுத்தினேன். உதவித் தொகை வழங்குவதற்கென வகுத் துள்ள விதிமுறைகளின்படி தங்களுக்கு ஒதுக்கப்படும் பராமரிப்பு உதவித் தொகையிலிருந்து உண்டுறை, விடுதிக் கட்டணங்கள் கழிக்கப்பட்டு மீதி உள்ளதுதான் தங்களுக்குச் சேரவேண்டு மென்பதை மாணவர்கள் தெளிவாகப் புரிந்து கொண்டனர். இதை மாணவர்கள் புரிந்துகொண்டு ஏற்கனவே அவர்களுக்குத் தவறுத லாகக் கொடுக்கப்பட்ட உண்டு, உறைவிடத் தொகையைத் திரும்ப வசூலிக்கக் கூடாது, தவறுதல் தங்கள் பேரில் இல்லை, மாவட்ட நல அலுவலர்கள் பேரில்தான் என்று கோரினர். அவர்களுடைய கோரிக்கை அனுதாபத்துடன் கவனிக்கப்படும் என்றும், மாணவர் களுக்குக் குந்தகம் எதுவும் ஏற்படாத வகையில் பிரச்சினையை ஆராய்ந்து முடிவு எடுக்கப்படும் என்றும் கூறினேன். தவறு செய்த அதிகாரிகள் பேரில் தக்க ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதுபற்றி இப்போது ஆலோசிக்கப்பட்டு வருகிறது. தற்போது தஞ்சாவூர், திருச்சி மாவட்டங்களில் உள்ள பெற்றோர்களிடையே எவ்விதக் கொந்தளிப்பும் இல்லை. கல்லூரி அடைப்பும் இல்லை. தொடர்ந்து அமைதி நிலவி வருகிறது என்று மாவட்டத்திலிருந்து தகவல் வந் துள்ளது.

ஆகவே, இந்த ஒத்தி வைப்புப் பிரேரணைக்கு அவசியம் இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

[முற்பகல் 11-00]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு இப்பொருள் குறித்து விவாதிக்க அவையின் பிற அலுவல்களை ஒத்திவைக்கத் தேவையில்லை என்ற காரணத்தால் இதற்கு அனுமதி தர மறுக்கிறேன்.

மற்ற ஒத்திவைப்புத் தீர்மானங்கள் நாளை எடுத்துக்கொள்ளப் படும்.

(4) அறிவிப்புகள்.

(அ) தமிழ்நாடு 1973-ஆம் ஆண்டு ஆயத் தீர்வை (திருத்த) சட்ட முன்வடிவு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு, 1973-ஆம் ஆண்டு ஆயத் தீர்வை (திருத்த) சட்ட முன் வடிவை பேரவையில் அறிமுகம் செய்வதற்கு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

(5) அரசினர் சட்ட முன்வடிவுகள்

(அ) தமிழ்நாடு, 1973-ம் ஆண்டு, ஆயத் தீர்வை (திருத்த) சட்ட முன்வடிவு

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, தமிழ்நாடு, 1973ம் ஆண்டு, ஆயத் தீர்வை (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை நான் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.



(4) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) தமிழ்நாடு, 1973-ம் ஆண்டு, மதுவிலக்கு (செயல்திறனை நிறுத்திவைத்தல்) சட்ட முன்வடிவு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு, 1973-ம் ஆண்டு மதுவிலக்கு (செயல்திறனை நிறுத்தி வைத்தல்) சட்ட முன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்வதற்கு குடியரசுத் தலைவர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

(5) அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஆ) தமிழ்நாடு, 1973-ம் ஆண்டு, மதுவிலக்கு (செயல்திறனை நிறுத்திவைத்தல்) சட்ட முன்வடிவு

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, தமிழ்நாடு, 1973-ம் ஆண்டு, மதுவிலக்கு (செயல்திறனை நிறுத்திவைத்தல்) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை நான் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

(இ) தமிழ்நாடு, 1973-ம் ஆண்டு, பயிரிடும் குத்தகைதாரர்கள் பாதுகாப்பு (திருத்த) சட்ட முன்வடிவு

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, தமிழ்நாடு, 1973-ம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் பாதுகாப்பு (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை நான் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

### (ஈ) 1973-ம் ஆண்டு, மோட்டார் வண்டிகள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, 1973-ம் ஆண்டு, மோட்டார் வண்டிகள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை நான் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

## (6) தனியார் அலுவல்கள்

### (அ) சட்ட முன்வடிவு

**தமிழ்நாடு, 1973 ஆம் ஆண்டு, வரதட்சணைத் தடுப்புச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 24/73).**

THIRU N. K. PALANISAMY : Sir, I move—

"That the Tamil Nadu Dowry Prohibition Bill, 1973 (L.A. Bill No. 24 of 1973) be taken into consideration."

The motion was duly seconded.

**திரு. என். கே. பழனிசாமி :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த வரதட்சணை தடுப்பு மசோதா ஒரு முக்கியமான சமுதாய சீர்திருத்தத்திற்கு அடிப்படையாகக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டசபையில் முன்பு செல்ப் ரெஸ்பெக்ட் மாரியேஜஸ்ஸை



செல்லுபடியாக்கும் வகையில் ஒரு சிறிய சீர்திருத்த மசோதாவும் சட்டமாக்கப்பட்டிருக்கிறது. இந்த இரண்டும் ஒன்றுதான். ஏனெனில் பல ஆண்டுகளாகியும் ஒருவராவது இந்தச் சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட்டவர்களாக இல்லை. நம் சர்க்காரின் கொள்கையை எடுத்துக் கொண்டாலும் சரி, அல்லது மத்திய அரசாங்கத்தின் கொள்கையை எடுத்துக் கொண்டாலும் சரி, அடிப்படை சோஷலிசம்தான். சோஷலிசம் என்பதும் வரதட்சணை என்பதும் ஒன்றுக்கொன்று நேர் முரணானது. உலகப் பண்பாட்டை எடுத்துக் கொண்டாலும் அல்லது நம் நாட்டின் ஆதிகால பண்பாட்டை எடுத்துக் கொண்டாலும், தமிழர்களுடைய பண்பாட்டை எடுத்துக் கொண்டாலும் இம்மாதிரி வரதட்சணை வாங்கியதாகத் தெரியவில்லை.

எட்டு வகைகளில் கல்யாணங்கள் செய்யப்பட்டதாக வேதங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. காந்தர்வம், ஆசுரம், பௌர்ஷம் போன்ற எட்டு வகைகளில் கல்யாணங்கள் நடந்திருக்கின்றன. இராமர் வில்லை வளைத்ததற்குப் பிறகுதான் சீதையோடு கல்யாணமாயிற்று. இலங்கைக்கு சீதையை இராவணன் சிறை எடுத்துச் சென்றபோது அனுமான் அவர்கள் அங்கு சென்று சீதையைப் பார்த்துதான் உடனே அவர்களை இராமனிடம் சேர்ப்பிப்பதாகச்

(திரு. பெ. சௌந்தரபாண்டியன் தலைமை)

சொன்னபோது, சீதையானவர் இராமர் இலங்கைக்கு வந்து இராமருடைய வில்லின் சப்தம் இலங்கை பூராவும் கேட்டு அசுரர்கள் நடுங்க வேண்டும், அப்போதுதான் வருவேன் என்ற முறையில் அந்த விதத்தில்தான் அந்தக் காலத்தில் பௌர்ஷம், வீரத்திற்காகக் கல்யாணம் நடந்தது. காதலுக்காகவும் கல்யாணங்கள் நடந்துள்ளன. இப்படி எட்டு விதமான கல்யாணங்கள் நடந்துள்ளன. அவற்றைத் தவிர, பணத்திற்காக எந்தவிதமான கல்யாணமும் நடந்ததாகத் தெரியவில்லை. ஷேக்ஸ்பியர் காலத்தில் கூட—கிங் லியர் படித்தால் தெரியும். கார்டீலியோ என்ற பெண், தான் ப்ரெஞ்ச் மன்னனைத்தான் மணப்பேன் என்று சொல்லும் போது, பணம் பற்றிய பிரச்னை வந்தபோது அந்த மன்னன் சொல்கிறான். "She is herself a treasure, why a dowry?" என்று. ஆக, ஷேக்ஸ்பியர் காலத்தில்கூட இந்தமாதிரி பெண்ணுக்குப் பணம் கொடுத்ததாகக் கிடையாது. வேதங்களை எடுத்துக்

கொண்டாலும், வரம், தான், தட்சிணை என்று மாப்பிள்ளை பெண்ணுக்கு தட்சிணை கொடுப்பது என்றிருக்கிறது. பெண்ணுக்கு ஆண் தட்சிணை கொடுப்பதுதான் வரதட்சிணை. தட்சணை என்பது கூட பொருளாக அல்ல. கல்யாணம் முடிந்து அக்னியை மூன்று தரம் சுற்றி முடிந்ததற்குப் பிறகு அந்த மாப்பிள்ளையிடம் தேங்காயும் பழமும் கொடுப்பார்கள், அதைக் கொடுப்பது, அது தான் வரதட்சிணை என்பது.

அந்தக் காலத்தில் ரிக் வேதத்தில் என்ன சொல்லியிருக்கிறது என்றால்

"கிருகோ பஸ் கராணதி கரனே பாதினை ஸ்திரியாக்ருகபதிக ! யல்லப்தம் தத் சுல்கமாத்யர்த்தா, ஸ்திரியாக்ருகபதித, யல்லப்தம் தத சுல்கமாத்யர்த்தா"

அந்தக் கல்யாணம் முடிந்து, அந்தப் பெண்ணுக்கு ஒரு தொகை கொடுப்பார்கள். அதற்குச் சுல்கம் என்று பெயர். அந்த சுல்கம், பணத்தை வைத்துக் கொண்டு அந்தப் பெண் என்ன செலவு வேண்டுமானாலும் செய்து கொள்ளலாம். மாப்பிள்ளைக்கு அதில் எந்தவிதமான உரிமையும் கிடையாது. அதைக் கேட்பதற்கோ, அதைச் செலவு செய் என்று சொல்லுவதற்கோ உரிமை கிடையாது. அந்த மாதிரி அந்தக் காலத்தில் இருந்தது.

யஜுர் வேதத்தில் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால்

"மூர்தானம், பத்யு ராரோகா, பிரஜயாவிராட்பவ"

அதிலே கூட கல்யாண காலத்தில் ஆணுக்கும், பெண்ணுக்கும் சில உரிமைகள் இருந்தன. தர்மசாலி என்று அதற்குப் பெயர். பழைய காலத்தில் பாட்டு கூட பாடுவார்கள், "சித்தோலை கருகுமணி போதுமடி தாயே எனக்கு" என்று. எதற்காக இப்படிச் சொன்னார்கள் என்றால், மாப்பிள்ளை பெரிய பணக்காரனாக இருந்தால் மட்டும் போதாது, அவன் நல்ல குணவானாக இருக்க வேண்டு மென்று கூறுவார்கள். ஒரு காலத்தில் பெண்கள் எப்படி இருந்தார்கள் என்பதற்குக் கூட சான்றுகள் இருக்கின்றன. இந்திரன் கெட்டதும் பெண்ணாலே, சந்திரன் கெட்டதும் பெண்ணாலே என்று சொல்வார்கள். ஆகவே ஒவ்வொரு சமுதாயத்திலும், ஒவ்வொரு நிலையிலும் பெண்கள் எப்படி



இருந்தார்கள் என்று இருக்கிறது. அவர்களுடைய முறைகளில் மாற்றம் இருக்கிறது. அபிவிருத்தி இருக்கிறது. எந்த ஐடியலிசத்திலும் மாற்றம் இருப்பது போல் இதிலும் இருக்கிறது.

முன்பு எந்தவிதமான கருவியும் கிடையாது. மனிதன் கல்லைக் கொண்டு மரத்தை வெட்டினான். அந்தக் காலத்தில் குடும்பம் எப்படி இருந்தது? ஆணும் பெண்ணும் வித்தியாசம் இல்லாமல் இருந்தது. தகப்பன் பெண் என்ற வித்தியாசம் இல்லாமல் இருந்தது. அண்ணன் தங்கை தம்பி என்ற வித்தியாசம் இல்லாமல் இருந்தது. அதற்குப் பிறகு கொஞ்சம் தீ மூட்டி சமைத்துச் சாப்பிட ஆரம்பித்தவுடன் அந்தச் சமுதாயத்தில் ஒரு மாற்றம் ஏற்பட்டது. அவர்கள் மாமிசம் பச்சையாகச் சாப்பிடுவதற்குப் பதிலாகத் தீயிலிட்டுச் சாப்பிட்டார்கள். அதற்குப் பிறகு மரத்தை வெட்டி வில் தயாரித்து அதன் மூலம் இரையாடினார்கள். அதற்குப் பின்னாலே இரும்புக் கலப்பை போன்றவற்றை வைத்துப் பயிரிட்டுச் சாப்பிட ஆரம்பித்தார்கள்.

அப்போது எப்படிக் குடும்பம் இருந்தது என்றால் பாலியாண்ட்ரி இருந்தது. பாஞ்சாலி பஞ்ச பாண்டவர்களுக்கு மனைவியாக இருந்தார் என்று இருக்கிறது. அப்படியிருந்த குடும்ப அமைப்பு இன்றைக்கு எப்படி இருக்கிறது? பல மாற்றங்கள் ஏற்பட்டு இருக்கின்றன. அண்ணனும் தங்கையும் சேரக் கூடாது என்ற கட்டுப்பாடு வந்தது. தகப்பனும் பெண்ணும் சேரக் கூடாது என்று கட்டுப்பாடு வந்தது. தாயும் மகனும் சேரக் கூடாது என்று கட்டுப்பாடு வந்தது. பலதாரத் திருமணம் போய், ஒரு தாரத் திருமணம் வந்திருக்கிறது. அப்டக்ஷன், பலவந்தமாக எடுத்துச் செல்வது தவறு என்று வந்திருக்கிறது. இப்படிப் பல மாற்றங்கள் வந்திருக்கின்றன.

இன்றைக்கு ஒரு பெண் ஒருவனை மணந்து கொண்டு விட்டால் இறக்கும் வரையில் அவனுடனே இருக்க வேண்டுமென்று இருக்கிறது. இப்படிப் பல மாற்றங்கள் வந்திருக்கின்றன. க்ரீஸ் நாட்டில் ஆண்களுக்கும், பெண்களுக்கும் சம உரிமை தேவை என்று தீவிரமாகப் போராடி அவர்கள் எல்லா உரிமைகளையும் பெற்று இருக்கிறார்கள். பெண்களே அங்கு அநேக உற்பத்தி வேலைகளில் இருக்கிறார்கள். வீட்டிற்குக் காவலாக பெண் இருக்கிறாள். குழந்தைகளையும், அனிமல்களையும் பார்த்துக்

[திரு. என். கே. பழனிசாமி] [1973 நவம்பர் 22

கொள்ளும் வகையில் அவர்கள் வீட்டிலிருக்கிறாள். அந்த வகையில் குடும்பம் என்று வந்தது. பிறகு ஸ்டீம் கண்டுபிடித்தார்கள். அதனால் டிரான்ஸ்போர்ட் வந்தது. வெளியிடங்களுக்குச் சென்று அதிகமாகப் பணம் சம்பாதித்தார்கள். பல மெஷின்கள் வந்தன. பெண்கள் எல்லாம் ஒரு இடத்திற்கு ஒதுக்கப்பட்டார்கள். அப்போதுதான் பர்தா முறை வந்தது. குழந்தைக் கல்யாணம், குழந்தைகள் பேணி வளர்த்தல் முதலிய காரியங்களில் அவர்கள் ஈடுபட்டார்கள். இப்படி அவர்கள் கஷ்டப்பட்டும் எந்தவிதமான விமோசனமும் இல்லாமல் தனிமையாக அவர்கள் ஒரு பகுதியில் ஒதுக்கப்பட்டு இருந்தார்கள். அதற்குப் பிறகு வியாபாரிகள் வர்க்கம் ஏற்பட்டவுடனே அங்கே இருக்கிற பொருள்கள் வெளி நாடுகளுக்குப் போகக்கூடிய நிலைமையேற்பட்டது. அதற்காக ரோடு போட்டார்கள். இதனால் தொழில்கள் முன்னேறின. தொழிலாளர்கள் வர்க்கம், முதலாளிகள் வர்க்கம், நிலப்பிரபுக்கள் வர்க்கம் என்று ஏற்பட்டன. மற்ற நாட்டில் இருக்கக்கூடிய முதலாளிகள், நிலப்பிரபுக்களிடையே நடந்த போராட்டம், சார்லஸ் கொல்லப்பட்டார். பிரான்ஸில் நிலப்பிரபுக்களுக்கு எதிராக நடந்த போராட்டம். பூராவும் உலகில் இருக்கக்கூடிய முதலாளிகள் சேர்ந்து தங்களுக்குத் தேவையான, மில்களுக்குத் தேவையான ஆட்கள் இருக்கிறார்கள், அவர்களை வெளியில் கொண்டு வந்து குறைந்த கூலிக்கு அமர்த்தி, அதிகப்படியான பொருள்களை உற்பத்தி செய்து லாபம் அடைய வேண்டும் என்பதற்காக கோஷங்களை வைத்துக் கொண்டு, மற்றும் இருக்கிற நிலப்பிரபுக்களுக்கு எதிராக ஜனங்களைத் திரட்டி, பெரிய போராட்டம் நடத்தி, அந்த முறையில் நிலப்பிரபுத்துவ முறை மாறி முதலாளித்துவ முறை வந்தது. அது ராலியிங் பாயிண்டு.

லிபர்டி, ஃப்ரடனர்டி, ஈகுவாலிடி என்று சொல்லப்பட்டிருக்கிறது. எதற்காக? தங்களுடைய சொந்த நலனுக்காக சமத்துவம் என்று சொல்லக்கூடிய அதே சமயத்தில் அவர்களுக்குக் குறைந்த ஊதியம் கொடுத்து, உற்பத்தியில் எந்தவிதமான பங்கும் அதிகம் இல்லை, அதே சமயத்தில் குறைந்த கூலியைக் கொடுத்து அதிகமான வேலையை வாங்கக்கூடிய ஒரு நிலைமையைப் பார்க்கிறோம். அதனால் பெண்களுக்கு இருக்கக்கூடிய அந்தஸ்து என்ன? ஏற்கனவே நிலப்பிரபுக்களால் தனியாக ஒதுக்கப்பட்டு சமுதாயத்தில் பர்தா போட்டுக் கொண்டு இருந்தார்கள்.



1973 நவம்பர் 22] [திரு. என். கே. பழனிசாமி]

அந்தக் காலத்தில் சதி என்ற முறை இருந்தது, நமக்குத் தெரியும். புருஷன் இறந்தால் பெண்ணையும் சேர்த்து அவளுக்கு இஷ்டமோ, இஷ்டமில்லையோ கொளுத்திவிடுவார்கள். குழந்தைகளுக்கு 10, 15 வயதில் கலியாணம் நடத்தக்கூடிய கொடுமை. ஏன் என்றால் சொத்து உரிமை இருந்தது. அதற்குப் பின்னால் ராலியிங் பாயிண்ட். பெண்கள் வந்து வேலை செய்யக்கூடிய நிலைமை வந்தது. அவர்களுக்கு ஓரளவுக்கு கூலியும் கொடுக்கப்பட்டது. தங்களுடைய உழைப்பை விற்றார்கள். அடிமையாக இருந்ததற்குப் பதிலாக ஆலை முதலாளிகளிடத்தில் வந்து 'தங்களுக்கு இவ்வளவு கூலி கொடு' என்று தாங்கள் உழைக்கின்ற உழைப்பை விற்கக்கூடிய நிலைமை வந்தது. பெண்களைப் பொறுத்த மட்டில் உற்பத்தியில் எந்தவிதமான பங்கும் கொள்ளவில்லை.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

அவர்கள் வாழ்க்கையைப் பொறுத்தமட்டிலும் தங்களுடைய புருஷருக்கு ஒவ்வொருவரும் அடிமைப்பட வேண்டும். She is a servant of the husband. அதுமட்டுமல்ல. காண்டிராக்ட் லேபர் என்ற முறையில் அவர்கள் ஈடுபடுத்தப்பட்டார்கள். ஒரு பக்கத்தில் தங்களை தங்களுடைய புருஷர்களுக்கு அர்ப்பணித்துக் கொள்ள வேண்டிய நிலைமை. இன்னொரு பக்கத்தில் தொழிலுக்கு அடிமை. அதாவது 'டபிள் எக்ஸ்ப்ளாயிடேஷன்'. இரண்டு பக்கத்திலும் முதலாளித்துவ முறையிலே இம்மாதி நிலை இருந்தது.

வரதட்சணைக் கொடுமை சமூகத்தில் புரையோடி இருக்கக்கூடிய நிலைமை நிலவுகிறது. நாட்டில் லஞ்சம் வாங்கக்கூடிய நிலைமை, ஜனங்களே ஜனங்களிடத்தில் லஞ்சம் வாங்கக்கூடிய நிலைமை, லஞ்சத்தைவிட மோசமான நிலைமை ஏற்பட்டிருப்பதன் காரணமாகத்தான் இந்த மசோதா ஒரு முக்கியத்துவம் பெறுகிறது. சொத்துரிமை ரத்து செய்யப்பட்டது. பெண் அடிமைத்தனம் ரத்து செய்யப்பட்டது. சோஷலிஸ முறையில் சர்க்காரே குழந்தைகளுக்கு கல்விக்காக வேண்டிய பணம் கொடுப்பது, வைத்திய வசதிக்கு சர்க்காரே பணம் கொடுப்பது, பென்ஷனும் சர்க்காரே கொடுப்பது, அதுவும் ப்பளிக் கான்டீன் ஏராளமாக வைத்து நடத்துவது, காஸ் ஒவ்வொரு வீட்டிற்கும் கொடுப்பது, எலக்டிரிஸிடி ஒவ்வொரு வீட்டிற்கும் கொடுப்பது, இப்படி பெண்

[திரு. என். கே. பழனிசாமி] [1973 நவம்பர் 22

களுக்கு விட்டிலே அதிகமாக வேலை இல்லாதபடி லைட் வொர்க், பப்ளிக் வொர்க் ஜாஸ்தி, ப்ரொடக்ஷனில் பங்கு என்றெல்லாம் ஏற்பட்டது.

அரசியல் சட்டத்தில் பாதுகாப்பு இருக்கிறது. எல்லோருக்கும் பேசுவதற்கு சம உரிமை, எல்லோருக்கும் சம உரிமை, ஆண்களுக்கும், பெண்களுக்கும் ஒரே உரிமை, அரசியல் அமைப்புச் சட்டத்தில் அதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், நடைமுறையில் எத்தனை பேர்களுக்கு சமமாக உரிமை கிடைக்கிறது? உற்பத்தி வேலையில் எத்தனை பேர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள்? பெயர் அளவுக்குத் தான் சட்டம் இருக்கிறது. சட்டத்திற்கு முன்னால் எல்லோரும் சமம் என்பது பெயர் அளவுக்குத் தான் இருக்கிறது. நடைமுறையில் எப்படி இருக்கிறது? எல்லாப் பொறுப்புகளும் சர்க்காருடையது. கல்வி கொடுக்க வேண்டியது, சமையலுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டியது. வைத்திய வசதி செய்து கொடுக்க வேண்டியது இவைகளெல்லாம் சர்க்காரின் வேலை. ஆண்களாக இருந்தாலும் சரி, பெண்களாக இருந்தாலும் சரி சமத்துவம் நிலவ வேண்டும். சொத்து உரிமை கிடையாது. ஈகுவாலிடி, அதாவது எல்லோரும் சமம் என்பதை சோஷலிஸத்தில் பார்க்கிறோம். ஆணுக்கும், பெண்ணுக்கும் 'ஃபிலியல் லவ்' இணைந்து வேலை செய்யக்கூடிய நிலைமை. சமுதாயத்தில் இருக்கக்கூடிய பெண்கள் அந்தஸ்து எப்படி எப்படி மாறி வந்திருக்கிறது, சமுதாயத்தில் இது சம்பந்தமாக எவ்வளவு போராட்டங்கள் நடந்திருக்கின்றன என்றெல்லாம் பார்த்தோம். இப்பொழுது சட்டம் வந்துவிட்டது.

எப்படி வரதட்சணை வாங்கப்படுகிறது? ஒரு பெண் உத்தியோகத்தில் இருந்து கொண்டு ரூ. 500 சம்பளம் வாங்கினால் கூட, பெண்ணுக்கு மாப்பிள்ளை கேட்டால், பெண் ரூ. 500 சம்பாதித்தால் கூட, தங்களுக்கு ஒரு லட்சம் ரூபாய் கிடைக்குமா என்று தான் பிள்ளை வீட்டார் பார்க்கிறார்கள். மாப்பிள்ளை டாக்டராக இருந்தால் பெண் வீட்டார் நர்ஸிங் ஹோம் கட்டித் தரவேண்டும் என்கிறார்கள். வக்கீலாக இருந்தால் ரூ. 50,000 கொடுக்க வேண்டும். இல்லாவிட்டால் கலியாணம் இல்லை. அது மட்டுமல்ல. அந்தஸ்துக்குத் தகுந்தாற்போல் பணம் கொடுக்க வேண்டும். இன்னும் சில கம்யூனிடிகளில் கலியாணத்திற்கு



1973 நவம்பர் 22] [திரு. என். கே. பழனிசாமி]

ரூ. 10,000 செலவாகிறது. ஒரு பெட்டியில் போட்டு ரூ. 20,000, 30,000 கொடுக்க வேண்டும். அப்படிக் கொடுக்கவில்லையென்றால் கலியாணம் இல்லை. ஆயிரம் பொய் சொல்லி ஒரு கலியாணம் செய் என்று சொல்வார்கள். அதற்கெல்லாம் விடுவதில்லை. கலியாணம் நிச்சயம் செய்யப்படும்பொழுது பாதிப் பணம் கொடுத்துவிட வேண்டும். கலியாணத்திற்கு முன்னால் நகை, மற்ற சாமான்கள் வாங்கும்போது பூராப் பணமும் கொடுத்துவிட வேண்டும். இல்லாவிட்டால் கல்யாணத்திற்கு ஒத்துக்கொள்வதில்லை. அந்த முறையில் பணம் கொடுத்தால்தான் கலியாணம், இல்லாவிட்டால் கலியாணம் இல்லை. வரதட்சணை கொடுத்தால்தான் கலியாணம் என்றால், பணத்திற்கு எங்கே போவது? பிளாக் மனி இருக்கிறது, சொத்து இருக்கிறது என்றால், அப்படிப்பட்டவர்கள் பரவாயில்லை. மாதச் சம்பளம் வாங்கிக் கொண்டிருப்பவர்கள் பணத்திற்கு எங்கே போவது? ஒருவருக்கு நான்கு பெண்கள் இருக்கலாம் அல்லது தமக்கைமார்கள் இருக்கலாம். ஏற்கனவே ஒரு குடும்பத்தில் நான்கு பேர்கள் இருந்தால் ஒரு நல்ல புடவையை நான்கு பேர்களும் மாற்றி உடுத்திக் கொள்வார்கள். அம்மாதிரி நிலையில் விலைவாசி ஏற்றம், வாங்குகின்ற சம்பளம் போதாமல் கஷ்டம். அப்படியிருக்கும்பொழுது நான்கு பேர்களுக்கு எப்படிக் கலியாணம் செய்வது. ஆகவே, அவன் லஞ்சம் வாங்க வேண்டிய நிலைமை வந்து விடுகிறது. நியாயமாக, ஒழுங்காக இருக்கக்கூடிய நபர்களும் லஞ்சம் வாங்கக்கூடிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாகிறார்கள். டவுன் பக்கத்தில் கள்ளப் பணம் இருக்கிறது. அதை வைத்துச் சமாளிக்கிறார்கள். ஆனால் கிராமப்புறத்தில் இருக்கும் மக்கள் என்ன செய்வது? தோட்டத்தை விற்கிறார்கள். அல்லது மற்ற சொத்துக்களை விற்றுத் தான் கலியாணம் செய்யவேண்டியிருக்கிறது. இதனால் நூற்றுக்கணக்கான குடும்பங்கள் அழிந்து நாசமாகப் போய்விடுகின்றன. ஐந்து பவுன் நகை போட வேண்டும் என்று சொல்லி, பெண் வீட்டார் அப்படிப் போடவில்லை என்பதற்காக, ஐந்து வருஷ காலமாக புருஷன் மனைவியை அழைக்காமல் இருக்கக்கூடிய நிலைமை கூட இருக்கிறது. இதைப் பற்றி நாம் என்ன சொல்வது? முன்பெல்லாம் ஒரு பெண்ணுக்கு பாட்டு பாடத் தெரியுமா, சங்கீதம் இல்லாவிட்டாலும் நலங்குப் பாட்டாவது பாடத் தெரியுமா என்று தான் கேட்பார்கள். இல்லாவிட்டால் சமையல் நன்றாகச் செய்வார்களா, சாம்பார் வைக்கத்

[திரு. என். கே. பழனிசாமி] [1973 நவம்பர் 22

தெரியுமா என்று தான் கேட்பார்கள். கிராமப்புறங்களில் தோட்ட வேலை தெரியுமா என்று கேட்பார்கள். அது இப்பொழுது எப்படி டெவலப் ஆகிவிட்டது? பெண்ணுக்கு கார் ஓட்டத் தெரியுமா என்று கேட்கிறார்கள். வரதட்சணை கொடுக்காமல் கலியாணம் நடத்த முடியாமல் எத்தனையோ குடும்பங்கள் தவிக்கின்றன. ஒவ்வொரு குடும்பத்திலும் கலியாணம் ஆகாத பெண்கள் எத்தனையோ இருக்கின்றன.

அது மட்டுமல்ல. எஸ்.எஸ்.எல்.ஸி. பாஸ் செய்து விட்டு, அல்லது பி.ஏ. பாஸ் செய்துவிட்டு 5, 6 வருஷம் செகரடேரியட்டில் உத்தியோகம் பார்த்து, பணத்தைச் சேர்த்து வைத்துக் கலியாணம் செய்து கொள்ளக்கூடிய பெண்களும் இருக்கிறார்கள். அதற்குள் அந்தப் பெண்ணுக்கு வயது 25 ஆகிவிடுகிறது. சாதாரணமாக 14, 15 வயதில் கலியாணம் செய்துவிட வேண்டும். ஏதோ ஒரு செக்ஷன் தான் இப்படி இருக்கிறது என்பது இல்லை. எல்லோரும் தான் பணம் கேட்கிறார்கள். முகம்மதியர்கள் என்பது இல்லை, கிறிஸ்தவர்கள் என்பது இல்லை. அவர்களுக்கு பெர்ஸனல் லா இருக்கிறது. அதைப்பற்றி இங்கே பேச முடியாது. எல்லா ஜாதிகளிலும், கம்யூனிடிகளிலும் இது வந்தாகிவிட்டது. இந்த வரதட்சணை அப்படி புரையோடி விட்டிருக்கிறது. இதைத் தடுக்கக்கூடிய முறையில் தான் இந்த மசோதா கொண்டுவரப் பட்டிருக்கிறது. இம்மாதிரி ஒரு மசோதாவை 1959-ம் வருஷம் சட்டசபையில் பிரேரேபித்தேன். அது சம்பந்தமாக 1961-ல் மத்திய சர்க்கார் ஒரு சட்டம் கொண்டு வந்தது. நான் மூவ் பண்ணியதற்குப் பிறகு தான் அது எனக்குத் தெரியும். ஒரு சமயம் ஆந்திரா ஆக்டைப் பார்த்து, அவர்களே பின்னால் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கலாம். அவர்கள் கொண்டுவந்த சட்டத்தில் என்ன இருக்கிறது? அது ஒரு 'டெட் ஆக்ட்'-டாக இருக்கிறது. அந்தச் சட்டம் வந்து கிட்டத்தட்ட 11 வருஷம் ஆகிறது. இதுவரை என்ன செய்திருக்கிறார்கள்? வரதட்சணை சட்டத்தின்படி இதுவரை யார் மீதும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அப்படிப்பட்ட ஒரு சட்டம் தேவையே இல்லை என்று தோன்றுகிறது. ஒரு பக்கத்திலே 'டௌரி புரொகிபிஷன்' என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் எக்ஸ்பிளனேஷனில்,



1973 நவம்பர் 22] [திரு. என். கே. பழனிசாமி]

'In the removal of dowry, it is hereby declared that any presents made at the time of marriage in the form of cash, clothes, ornaments or other articles shall not be deemed to be dowry within the meaning of this Section'

என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படியானால் அது எல்லாம் டௌரி என்று வராது. அப்படியானால் அந்தச் சட்டத்தினால் என்ன பிரயோஜனம்? இவ்வளவு பணம்தான் கொடுக்க வேண்டுமென்ற வரையறை இல்லை.

'Any amount can be given'.

அதனால்தான் இது ஒரு 'டெட் ஆக்ட்' என்று சொல்கிறேன்.

அதுமட்டுமல்ல. அது 'நான்-காகனைசபிள்' ஆக இருக்கிறது. இந்தமாதிரியான கேஸ் வந்தாலும் 'செல்ஃப் ரெஸ்பெக்டுக்காக' யாரும் கோர்ட்டுக்குப் போவது கிடையாது. போனால் பெண்ணினுடையவும் அவர்கள் வீட்டாரினுடையவும் கௌரவம் பாதிக்கப்படும் என்று நினைக்கிறார்கள். அது மட்டுமல்ல. அந்த பெண்ணுக்கும் கெடுதலாக வரும்; அந்த மாப்பிள்ளைக்கும் கெடுதலாக வரும்; அந்தக் குடும்பங்களுக்கும் கெட்ட பெயர் வரலாம். அதனால் என்ன வந்தாலும் கோர்ட்டுக்குப் போகாமல் 'காம்ப்ரமைஸ்' செய்து கொள்கிறார்கள். அந்த முறையிலே இப்போதும் வரதட்சணை வாங்கிக் கொண்டுதானிருக்கிறார்கள்; கொடுத்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். சட்டத்தினால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

முன்பு 'சதி' இருந்தது. அதாவது பெண்கள் உயிரோடு கட்டை ஏறி எரிந்தார்கள். அதை எப்படித் தடை செய்ய முடிந்தது? ஜனங்கள் மத்தியிலே நல்லமுறையில் பிரச்சாரம் செய்து, அதற்கு ஒரு இயக்கம் ஏற்படுத்தப்பட்டு, மக்கள் உணரச் செய்து, அது தவறு என்று உணர்ந்த பின்னால் அந்த முறை தடை செய்யப்பட்டது. அதேமாதிரி இந்த விஷயத்திலும் ஒரு விழிப்புணர்ச்சி ஏற்பட வேண்டும். தவறு என்பதை ஜனங்கள் மத்தியில் எடுத்துச் சொல்ல வேண்டும்.

வரதட்சணை ஒழிப்புச் சட்டம் கொண்டு வந்ததே, இதனால் ஏற்படுகின்ற கெடுதலை ஒழிப்பதற்குத்தான். லாபம் தேடுவதற்கு அல்ல. ஆனால் இன்றைக்கு எப்படி நினைக்கிறார்கள்? 'To gain cheap popularity' என்ற அளவுக்கு ஜனங்கள் நடந்து கொள்கிறார்கள். அதனால்தான் நான் இதை 'காக்னைசபிள்

அஃபென்சாக' மாற்ற வேண்டுமென்று சொல்கிறேன். " Why not you change it as a cognizable offence " ? இப்போது லஞ்சம் வாங்கினால், அது தப்பு என்று எல்லோரும் உணருகிறார்கள். இன்னார் லஞ்சம் வாங்கினார் என்று சொன்னால் விசாரணை செய்து, உண்மையாக இருந்தால் நடவடிக்கை எடுக்கிறார்கள். காரணம் அது 'காக்னைசபிள்' ஆக இருக்கிறது. ஆனால் வரதட்சணை ஒழிப்புச் சட்டம் அப்படி இல்லை. 'நான்-காக்னைசபிள்' ஆக இருக்கிறது. அதனால் யாரும் ஒன்றும் செய்யவில்லை. 'டெபனிஷனில்' ஒன்றும் சரியாக குறிப்பிடப்படவில்லை. அதனால்தான் சென்ட்ரல் ஆக்ட் ஒரு டெட் ஆக்ட் என்று சொல்கிறேன். ஆகவே, அதைத் திருத்த வேண்டும்.

அதையெல்லாம் கருதிப் பார்த்துத்தான், நான் கொடுத்திருக்கின்ற திருத்தத்தில் இன்னின்ன அளவுக்குமேல் கொடுத்தால் அது வரதட்சணைதான் என்று குறிப்பிடப்பட வேண்டுமென்று சொல்லியிருக்கிறேன். இது ஒரு முக்கியமான மசோதா. இது ஜனங்கள் மத்தியிலே பெரிய அளவுக்குத் தெரியாது. ஆனால் புகைந்து கொண்டிருக்கும் விஷயம் இது. இது எப்படியாவது தடுக்கப்பட வேண்டும், அதற்கு ஜனங்களுக்கு உணர்ச்சி ஏற்பட வேண்டும் என்பதற்காக இந்த மசோதாவைக் கொடுத்திருக்கிறேன். சர்க்கார் இதைச் சட்டமாக ஆக்கித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

DR. H. V. HANDE: Mr. Speaker, Sir, in support of the Bill that has been brought forward by my hon. Friend Thiru N. K. Palanisamy, I would like to offer a few remarks.

At the outset, I would like to congratulate my hon. Friend on his bring forward such a progressive Bill which totally preclues offering and receiving of Dowry. It may be pertinent in this context to mention in this House that already a Bill was piloted first in the Rajya Sabha and taken to the Lok Sabha, if my memory is correct. It was the only Bill which was discussed in a joint session of both the Rajya Sabha and Lok Sabha, which was a rare thing. Even after it was passed by both the Houses, it has not found a place in the Statute Book. It is a tragedy that things totally vary in practice. There



is complete variance in practice in regard to implementation and enforcement of the various enactments that were passed years ago.

The point that I would like to drive home in this context is this. The State Government must see that it is enforced as far as possible. They must see that receiving and giving dowry should be totally done away with. According to me, the accepting and giving of dowry is much more abnoxious than accepting and offering bribery. There can be no two opinions on this subject in this august House. All the members in both the sections of the House would welcome this Bill. It should not be welcomed on paper but they should do it in practice. It should be strictly pursued by all. I would like to know whether this Bill was tested by the State Government at any time and whether any person was brought to book. During the past several years, there was not a single case in which the Government have taken deterrent action and given punishment.

Offering and taking of dowries are done openly in the presence of so many people. I know the dowry is offered in the presence of many people and contract is signed in the name ' Vetrilai pakku matruthal ' or ' nichayathambulam '. In such cases what the State Government is doing? Would it not be possible for the State Government to send some C.I.Ds. to find out such cases and take deterrent action against persons who are offering and receiving dowry? If such action was taken, the system of giving dowry can be reduced. In fact, I consider the passing of the Bill is not going to bring or confer any statutory obligation on the part of the Government, but it would only enable the Hon. Minister to act in the same fashion and bring in a legislation. I do not know the whip that has been given to the Members of the Ruling Party. I do suggest that in this particular Bill, they can do away with the whip. It is a Bill relating to social problem. I do not know what the Hon. the Chief Minister and the Minister for Education have instructed his party members. (The Government Whip was entering the House). Now the Government Whip is also entering the House.

Whatever the instructions may be, the hon. Members of the House are concerned with two important problems, namely, problems of girls and problems of parents. Here I would like to

point out that the very concept of marriage has completely changed. Modern society is thinking that the marriage is like buying a piece of article or commodity. It is not like buying a cow, calf or bull. Such a wrong impression has been created in the minds of people for a number of centuries. That should be changed. In every community dowry is now offered and received. It is not like that man alone earns and that women are not earning. It is not that men alone slog. The women are also working hard and attending to several domestic duties. In a family, she does a lot of work. She is cooking. She is attending on children. She looks after the aged people and children and attends to various other duties. She guides the children in their study. Just as it is done in Trade Unions or Labour Unions, it should be possible to evaluate their work. If they evaluate their work, ehey would know much of the work is being done by them. A major part of the domestic work is done by women. The man earns and gives the money to woman to look after the family. Man goes outside, works and brings money. A major part of work is done by house-wives. Some sort of job evaluation should be undertaken to know their value. She does more work than an office going woman. If such things are taken into consideration, it is quite possible to change the entire ideology of marriage.

The entire context of things should be changed and the present society should be changed like a Western Society. In the Western countries like England or America or Russia when some body says that dowry system should be practised, the people there would simply be scoffing at him. It is an ancient practice. It is the old Rip Van Winkle practice and it should be completely done away with. It is antediluvian and it is a relic of the old primordial system and it is also an obnoxious system and it should be completely and totally eliminated. I do not know why the educated person should fall a prey to this system. In fact, in the money market there is a sort of rate fixed. If the bridegroom is an Indian Administrative Service Officer there is a certain rate, if he is a doctor there is a certain rate and if he is a lawyer there is a certain rate. For a person belonging to such professions, a rate is fixed. As far as I am concerned, though I am a doctor having a substantial income, I did not take



a single pie from my father-in-law. In fact we are seven brothers and none of us has taken any dowry. Even a gold ornament of my wife I gave to the Reserve Bank at the time of the Chinese aggression and I took a receipt for it. So, it is for us, as Members of this House to set an example to others. For my hon. Friend, Thiru K. M. Subramaniam there is no problem and all his seven daughters had been married.

THIRU K. M. SUBRAMANIAM: I am prepared to marry without dowry?

DR. H. V. HANDE: Even at this ripe age, he has come forward to speak against the dowry system. But I do not want the Member again to marry. My point is that the Members of the Legislature should see to it that they create a new society and set the pace for it. After all, they are persons who represent more than a lakh of voters and it is possible for them to do it.

In this connection, I would like to mention another obnoxious system that is going on in our marriage system. Fabulous amount is spent on marriages. That is unnecessary and it is worse than giving dowry. Why should we bring this resolution to abolish the dowry system? It is only to enable the prospective father-in-law of the boy or the girl not to incur lot of expenditure. In fact, when girls are born, a large number of parents say,
பெண் வந்தால் செலவுக்குத்தான்

They consider it an expenditure item. Why should they consider it an expenditure, I do not know and God alone knows it. It is all because of this dowry system. Only in certin cases the parents of boys spend on marriages but in a majority of cases, the parents of girls spend on marriages. They spend Rs. 5,000, Rs. 10,000, Rs. 15,000 and even one or two lakhs of rupees, and that is a fantastic amount. I do not know where do they get such a huge amount. Even a sum of Rs. 5,000 is a large amount and a lot of foodstuffs are being wasted in such fabulous marriages. Also, I find a number of parents got frustrated because they have to spend a lot on marriages. Recently, in my constituency a lady who has got four daughters came to me and wept because her husband has coolly walked away from the family, and it has been a painful experience to me. One

daughter is aged 12 years and another 14 years and there is nobody to protect her now. So, this dowry system should be completely done away with.

In this connection, I wish to refer to another practice. If the parents get a daughter first, they will try for a boy. But if they get another daughter they will try for a boy again and thus they will attempt many times to get a boy. This practice to try to get a boy even after seven or eight daughters are born should be completely done away with.

Sir, the Sarada Act, and also so many Acts had been passed in the Lok Sabha and the Rajya Sabha but in practice they have not permeated into our society. So far as this Bill is concerned, it is a very good and sensible Bill which has come at the right moment. This has been brought forward to rouse the feelings of the people and to create an awareness among the people that the dowry system is an obnoxious system and it should be totally and summarily done away with.

Thank you, Sir.

*திரு. சௌடி. எஸ். சுந்தரபாரதி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அங்கத்தினர் திரு. பழனிசாமி கொண்டு வந்திருக்கக்கூடிய இந்த வரதட்சிணை தடுப்பு மசோதா இருக்கிறதே, இதன் நோக்கம் புனிதமானது என்பதில் யாரும் சந்தேகம் கொள்ள முடியாது. இந்தக் கேடு எந்த தேசத்திலே, எந்தச் சமுதாயத்திலே இருக்கிறதோ, அந்த தேசத்திலே, அந்தச் சமுதாயத்திலே கொண்டுவரப்படவேண்டிய ஒன்றாகும். இத்தகைய தீங்குகள் உள்ளபோது பலவிதமான சமுதாயச் சீர்திருத்தங்களைச் செய்வதற்குப் பல கிளர்ச்சிகளும், பல மனப்போராட்டங்களும் அந்த அந்த இடத்திலே நடந்து வந்திருப்பதை அறிவோம். அதை மறுக்க முடியாது.*

*இந்த மசோதாவை ஆதரித்துப் பேசியவர்கள் சில விஷயங்களைப் பற்றிச் சொன்னார்கள். சமுதாயத்தில் நாம் செய்ய வேண்டிய எந்த மாறுதலையும் சட்டமுறையில் எப்படிக் கொண்டுவர முடியும் என்பதைப்பற்றிக் குறிப்பிடுகையில் சதி என்ற வழக்கம் இருந்ததே, அதைத் தடுப்பதற்கு ஒரு சட்டம் கொண்டுவரப் பட்டது. அதன்மூலம் அந்த வழக்கம் ஒழிக்கப்பட்டது. அதைப்*



*போல இரு தாரம்—அதைத் தடுக்க மசோதா கொண்டுவந்து அதைத் தடை செய்திருக்கிறோம். அதுவும் ஒரு சமுதாய முன்னேற்றத்திற்கான அறிகுறி. அதைப்போல—சைல்ட் மாரியேஜ்—சிறுவயதிலேயே திருமணம் செய்வதைத் தடுக்க சாரதா சட்டம் கொண்டுவந்தோம். அதையும் பெருமளவு தடுத்திருக்கிறோம். அதே நிலையில் வரதட்சிணை தடுப்பும் அவசியம் என்பதை எந்தச் சமுதாயமும் ஒத்துக்கொள்ளும். இந்தக் குறையை, இந்த மாசை அது எந்தச் சமுதாயத்தில் இருந்தாலும் அதை எவ்வாறு சட்ட பூர்வமாகத் தடுக்க முடியும் என்பதைத்தான் நாம் ஓரளவு சிந்தித்தாகவேண்டி இருக்கிறது. இப்படி ஒரு சட்டம் கொண்டு வருவதன் மூலமாக இத்தகைய ஒரு பெரிய கேட்டை, ஒரு குறைபாட்டை நாம் நிச்சயமாக ஒழிக்க முடியுமா என்பது தான் நம் முன்னால் இருக்கக்கூடிய பிரச்சினை. அப்படி ஒழித்துவிட முடியும் என்கிற உறுதி இருந்தால் இதனால் நிச்சயமாக ஒரு பலன் ஏற்படும்.*

*எனக்கு முன்பு இந்த மசோதாவை ஆதரித்துப் பேசியவர்கள் கூடக் குறிப்பிட்டார்கள், இந்த மசோதாவைக் கொண்டு வருவதற்கு 10 வருடங்களுக்கு முன்பே ஆரம்பம் ஏற்பட்டும் எந்தவிதமான முன்னேற்றமும் சமுதாயத்திலே ஏற்படவில்லை யென்று. அது உண்மைதான். இந்த மசோதாவை நாம் ஏகமனதாக, ஒருமனதாக நிறைவேற்ற முடியும். இந்த மசோதாவை நிறை வேற்றுவதன் மூலமாக, நிச்சயமாக இந்தக் கொடுமைகள், கேடுகள் போய் விடுமோ என்று கேட்டால், நான் சொல்வேன், நிச்சயமாகப் போய் விடாது. ஏனென்றால், அந்தச் சிக்கலை, இதை நிறை வேற்றுவதன் மூலம் ஏற்படும் சிக்கலை நம்மால் போக்கிவிட முடியாது. சமுதாயப் பின்னணியிலே இருக்கிற சிக்கல் அவ்வளவு பெரிய சிக்கல். தனித்தனியாக இருந்தவர்கள் கணவன்-மனைவி ஆனபிறகு, அவர்களுக்குள் இந்தச் சட்டத்தை எப்படி அமுல் படுத்துவது, என்பது ஒரு பெரிய பிரச்சினையாக இருக்கும். இதனால், அவர்களுடைய வாழ்க்கை பாதிக்கப்படுமா என்பது ஒரு பெரிய பிரச்சினை. கல்யாணம் ஆவதற்கு முன்பாக எந்த வகையிலே இந்த மசோதா உதவும் என்பது ஒரு பிரச்சினை. அப்படி பலவிதமான பிரச்சினைகள் இருக்கின்றன.*

[திரு. சௌடி. எஸ். சுந்தரபாரதி] [1973 நவம்பர் 22

(திரு. பெ. சௌந்தரபாண்டியன் தலைமை)

அப்படி வளர்ந்து வரக்கூடிய பிரச்சினைகளிலே ஒன்று, இப்பொழுது செகண்டரி கிரேட் ஆசிரியர்களாக உள்ள படித்த பெண்கள் எல்லாம், ஆண்களிடம், இவ்வளவு தொகைக் கொடுத்தால் தான் உன்னை கல்யாணம் செய்துகொள்வேன் என்று ஆண்களிடம் கூறுகின்ற நிலை இருப்பதை நாம் மறந்து விட முடியாது. பெண்கள் தான் பணம் கொடுத்து கல்யாணம் செய்து கொள்ள வேண்டுமென்ற நிலை அதிகமாக இருந்தாலும், ஆண்கள் பணம் கொடுத்தால் தான் பெண்ணை கல்யாணம் செய்து கொள்ள முடியும் என்ற புதிய ஏற்பாடும் இந்தச் சமுதாயத்திலே இருந்து கொண்டிருக்கிறது.

இதிலே எல்லாவற்றையும் நாம் யோசித்துப் பார்த்து காரியங்களைச் செய்ய வேண்டியிருக்கிறது. அதனால்தான் இந்த மசோதாவைக் கொண்டு வந்தவர்கள் கூட, இரண்டு சாராரும், யாரும் பணம் கொடுத்தால்கூட, அந்தப் பணம் டௌரியாக, வரதட்சணையாகக் கருதப்பட்டு, அது தடுக்கப்பட வேண்டுமென்று சொன்னார்கள். அதன் நோக்கம், எண்ணம், சரிதான். ஆனால், இதன் மூலம் என்ன சாதிக்கப் போகிறோம் என்பதைப் பார்க்கும்போது, இந்த மசோதாவின் மூலமே அந்த எண்ணத்தை, நோக்கத்தை நிறைவேற்ற முடியுமா என்றால் நிச்சயமாக முடியாது. எனவே, இந்தக் கேட்டை எப்படி தடுப்பது, இந்தக் கேட்டை சமுதாயத்திலிருந்து நிச்சயமாக பூராவும் அகற்றுவதற்காக எந்த முறையிலே ஏற்பாட்டை செய்தால், எந்த முறையிலே இதைக் கொண்டு வந்தால் இதைப் பூரணமாகத் தடுக்க முடியும் என்பதைப்பற்றி ஆராய்ந்து, அதன்பிறகு இதைக்கொண்டு வந்தால் நன்றாக இருக்கும். அதற்குத் தூண்டுதலாக இது இருக்கிறது என்பதை மட்டும் நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொண்டு, இந்த மசோதாவின் நோக்கத்தை, எண்ணத்தை வரவேற்று என்னுடைய கருத்தை முடித்துக்கொள்கிறேன்.

திரு. கே. எ. வகாப்: மாண்புமிகு தலைவர் அவர்களே, வரதட்சணை தடுப்பு மசோதாவின் பேரிலே என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை இங்கே நான் சொல்லவிரும்புகிறேன்.



1973 நவம்பர் 22] [திரு. கே. எ. வகாப்]

வரதட்சணை என்பது இங்கே பல அங்கத்தினர்கள் எடுத்துக் காட்டியதுபோல் ஒரு சமுதாயத்திலே இருக்கிற பெரிய சாபக் கேடுகளிலே ஒன்று. மூடத்தனத்தின் முடைநாற்றம் வீசுகின்றது என்று புரட்சிக் கவிஞர் பாடியது போல், இந்த சமுதாயத்திலே இருக்கிற மூடத்தனங்களிலே ஒன்றாக அல்லது மூடத்தனமாக இருந்தாலும், தங்களுடைய சுய நலத்திற்காக, சுய ஆதாயத்திற்காக இதைப் பயன்படுத்துகின்ற ஒரு சமுதாய அமைப்பும் சமுதாய மக்களும் இருக்கின்ற வகையிலே இதைச் சட்டம் போட்டு மட்டும் திருத்தி விடமுடியாது என்று எனக்கு முன்னர் பேசிய அங்கத்தினர் அவர்கள் சொன்ன கருத்தை நானும் ஏற்றுக் கொள்கிறேன். இந்த சமுதாய சீர்கேடுகளிலே ஒன்றை நீக்க முக்கியமாக இன்றையதினம் பேசப்படுகிறது, ஆண்களுக்கும் பெண்களுக்கும் எல்லா துறைகளிலும் சமத்துவமும் சம அந்தஸ்தும் கொடுக்க வேண்டுமென்று. ஆனால், உண்மையான நிலவரங்களைப் பார்க்கும்போது, சமுதாயத்திலே பார்க்கும்போது, பெண்களுக்கென்று ஏற்பட்டிருக்கிற குறைகளைப் போக்க ஆண்கள் எவ்வளவுதூரம் முற்பட்டிருக்கிறோம் என்பதைப் பார்த்தால், அதிலே சில தவறுகளைச் செய்தவர்களாக இருக்கிறோம்.

ஆனால், நான் இங்கே திட்டமிட்டு சொல்லிக்கொள்கிறேன், இஸ்லாம் மார்க்கத்தைப் பொறுத்தவரையில், அப்படிப்பட்ட முறைகள் எல்லாம், மார்க்க சட்டமாக ஆக்கப்பட்டு, திருமறையான திருக்குரானிலே பதிவு செய்யப்பட்டு, அந்த முடிவுகளை நாங்கள் ஏற்று நடக்கிற அளவிலே, இருக்கிறது. ஏறத்தாழ 1,400 ஆண்டுகளுக்கு முன்பே திருக்குரானிலே வகுக்கப்பட்ட அந்தப் பொன்னானக் கருத்துக்களைத்தான் இன்றையதினம் சட்டமன்றத்திலே சட்டமாகக் கொண்டு வரவேண்டுமென்று விவாதிக்கிறோம்.

1,400 ஆண்டுகளுக்கு முன்னாலே எங்களுடைய மார்க்கத்தினுடைய நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி ஒ ஸல்லம் அவர்கள் தன்னுடைய வாழ்க்கையிலே மட்டுமல்ல, எதிர்கால சமுதாயத்திலே இது அமைய வேண்டுமென்று அப்படிப்பட்ட பலவிதமான சீர்திருத்தங்களை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். 1,400 ஆண்டுகளுக்கு முன்பே, நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி ஒ ஸல்லம் அரேபியாவில் தோன்றுவதற்கு முன்பே இப்படிப்பட்ட

பல சீர்கேடுகள் இருந்தன. தனக்குப் பிறந்த பெண் குழந்தையை உயிரோடு மண்ணிலே புதைத்துவிட்ட எத்தனையோ சமுதாயக் கேடுகள், சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றன. ஒரு சமயம் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் ஒரு நண்பரோடு பேசிக் கொண்டிருந்தபொழுது, நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அந்நண்பருக்கு அறிவுரைகள் கூறிக் கொண்டிருந்தபொழுது, அந்நண்பர் கண்ணீர் விட்டு அழுதாராம். நீங்கள் அழுவதற்குக் காரணம் என்ன என்று நண்பரை இவர் கேட்டாராம். இப்பொழுதுள்ள சமுதாய நிலைகளினால் நான் எனக்குப் பிறந்த ஒரு பெண் குழந்தையை நானே மண்ணிலே புதைத்தேன், அதை எண்ணுகின்றேன், இன்றைக்கு அழுது கொண்டிருக்கிறேன். அன்றைக்கு எங்களுக்குச் சொல்வதற்கு யாரும் இல்லையென்று குறைபட்டுக் கொண்டார்களாம். அப்படிப் பட்ட நிலை 1,400 ஆண்டுகளுக்கு முன்னால் அரேபியாவில் இருந்தது. ஆனால் அப்படிப்பட்ட பழக்கங்கள் இப்பொழுது இல்லையென்றாலும், இன்று நடைமுறையிலே பெண்கள் சமுதாயம் எப்படியெல்லாம் வருத்தப்படுகின்றது என்பதை எண்ணிப்பார்க்கின்றபொழுது, நிச்சயமாக இந்த 20 ஆம் நூற்றாண்டிலே இப்படிப்பட்ட நிலைகள் எல்லாம் இருக்க வேண்டியது தானா? பெண்களுக்கென்று ஒரு தனிநிலை ஆண்களுக்கென்று ஒரு தனி சலுகை என்ற நிலை இருக்க வேண்டியதுதானா? மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் எல்லாம் குறிப்பிட்டதுபோல், அவரவர்களுடைய கிரேடுக்குத் தகுந்தவாறு இதை மார்க்கெட்டாக ஆக்கிவிட்டிருக்கிறார்கள். எம்.பி.பி.எஸ். படித்தவராக இருந்தால், கார் கொடுக்கவேண்டும், ரூ. 10,000 தர வேண்டும், 100 பவுன் நகை போட வேண்டும். அபபடி கொடுத்தால் தான் பெண்ணை கல்யாணம் செய்துகொள்வேன். இன்ஜினீயராக இருந்தால் அதேபோல் ரேட், எஸ்.எஸ்.எல்.சி. படித்தால் கூட, ரூ. 5,000 என்று படிப்பை அடிப்படையாக வைத்து, பணம் கேட்கிற நிலை, அதைப்பெற்றால் திருமணம் செய்து கொள்வது என்ற அமைப்பு இருக்கிறது என்று நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இஸ்லாமிய சமுதாயத்திலே இந்நிலை இல்லையென்று சொல்கிற பொழுது, பழக்க தோஷத்தின் காரணமாக, அங்கே கூட, இப்பொழுது அந்தக் கைக்கூலி என்று சொல்லப்படுகிற, வரதட்சணை வந்து புகுந்து விட்டதை நாங்களும் தீவிரமாக





எதிர்த்து வருகிறோம். பெண்கள் சமுதாயத்தை இப்படி உரிமையற்றதாக மாற்றுவதை எங்களுடைய மார்க்கம் கடுமையாக்கியுள்ளது.

கல்யாண மார்க்கெட்டிலே, சந்தையிலே கால்நடைகள் விலை பேசப்படுவதைப்போல், பெண்களை விலை பேசுகின்ற நிலையெல்லாம் சமுதாய அமைப்பிலே இருக்கிறது. அதையெல்லாம் மாற்றுவதற்குச் சமுதாயத்திலே அப்படிப்பட்ட சீர்திருத்தங்களைக் கொண்டு வர, அதைச் சட்டமாக ஆக்கிவிடுவது மட்டும் வழி அல்ல. தீண்டாமையைக் கூடச் சட்டப்படி தடுத்து வைத்திருக்கிறோம். ஆனால், நடைமுறையிலே அது தடுக்கப்பட்டிருக்கிறதா? அதைப் பார்க்கும்போது நிச்சயமாக அந்த அளவுக்கு வளர்ச்சி அடையவில்லை. அப்படித்தான் இந்தக் கைக்கூலி அல்லது வரதட்சணை பிரச்சினையும். சட்டமாக ஆக்கிவிடலாம். ஆனால், நடைமுறையிலே சமுதாயத்திலே உள்ள மக்களிடத்திலே மன மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான முயற்சியைச் செய்யவேண்டும். அப்படி மனமாற்றத்தை ஏற்படுத்துவதற்குரிய முயற்சியை இஸ்லாம் மார்க்கத்தின் அடிப்படையிலே செய்கின்ற நேரத்திலே அங்கே கட்டுப்பாடு வந்து விடுகிறது. மார்க்கத்தின் அடிப்படையிலே வந்து விடுவதால், அப்படிப்பட்ட நிலையிலே மீறக்கூடிய வாய்ப்பு இல்லை. ஆனால், சட்டம் என்று கொண்டு வருகிறபொழுது சிக்கல்கள் வரும். ஆனால், அந்தச் சிக்கல்களை தீர்க்கக்கூடிய மனமாற்றம் சமுதாயத்திலே ஏற்படவேண்டும். ஆகவே, சட்டமாகக் கொண்டுவந்தால் மட்டும் போதாது. இதற்காகச் சமுதாயத்திலே ஒரு குழுவை அமைத்து ஆராய்ச்சி செய்யலாம் என்று கூட நான் கருதுகிறேன். சமுதாயத்திலே, மக்களிடத்திலே மனமாற்றத்தை ஏற்படுத்த முடியும். மார்க்கத்தின் அடிப்படையிலே சொல்வதா, அல்லது அவரவர்கள் சார்ந்துள்ள மதத்தின் அடிப்படையிலே, இப்படிச் செய்வது பாவம் என்று எடுத்துச் சொல்வதா? அல்லது, இப்படி செய்தால் பெரிய குறைபாடுகள் வரும் என்று எடுத்துச் சொல்வதா? திரு. சௌந்தரபாரதி அவர்கள் பெண்கள் கூட வரதட்சணை கேட்கிறார்கள் என்று சொல்கிறார்கள். அப்படிப்பட்ட நிலைமை இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. படித்த பெண்கள் இன்றையதினம் திருமணம் நடக்காதோ என்று பயப்படுகிறார்கள். படித்த பெண்களைக் கட்டிக்கொள்வதற்கே அஞ்சுகின்ற நிலைமையில் உள்ள

[திரு. கே. எ. வகாப்]   [1973 நவம்பர் 22

மணமகன்கள் அதிகமாக இருக்கிறார்கள். படித்த பெண்களுக்கு அதிகமாக வரதட்சணை கேட்கிறார்கள் என்ற நிலைமை இருப்பதால் அப்படிப்பட்ட நிலைமை ஏற்படுகிறது. இப்படிப்பட்ட அடிப்படைக் காரணங்களையெல்லாம் வைத்து சமுதாயத்திலே பரவலாக ஒரு ஆராய்ச்சி நடத்தி மக்கள் மன்றத்திலே மக்கள் மனத்திலே ஒரு மாற்றத்தை ஏற்படுத்திவிட்டதற்குப் பிறகு சட்டத்தைக் கொண்டு வந்தால், நலமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொண்டுவந்திருக்கின்ற மசோதாவிலே பல கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்களும் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். எல்லோருமே இங்கே ஒப்புக்கொண்ட கருத்து, டௌரி வாங்கக் கூடாது, வரதட்சிணை முறை ஒழிக்கப்பட வேண்டுமென்ற கருத்தைத் தெரிவித்தார்கள். அந்தக் கருத்திலே யாருக்கும் ஆட்சேபணை இல்லை. 1961 ஆம் ஆண்டு மத்திய அரசாங்கம் இதற்காக ஒரு சட்டத்தை இயற்றியிருக்கிறது. அந்தச் சட்டத்திலே குறைபாடுகள் உண்டு என்பதை அவர்கள் சுட்டிக் காட்டினார்கள்.

பொதுவாக, இதுபோன்ற சமூகச் சீர்திருத்தங்களையெல்லாம் நாட்டிலே அமல் நடத்தும்பொழுது, மக்களுடைய ஒத்துழைப்பு நமக்குத் தேவை. அதுவும் திருமணம் செய்து கொடுப்பதைப் பொறுத்தவரையில் அது ஆண்களானாலும் சரி, பெண்களானாலும் சரி, அந்த முறை கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது என்பதை அவர்கள் விளக்கமாகச் சொன்னார்கள். வரதட்சணை வாங்குகின்ற முறை சமுதாயத்திலே தீமையான ஒரு விளைவை ஏற்படுத்துகிறது ; குறிப்பாகப் பெண்களுக்குப் பெரிய கெடுதியை ஏற்படுத்தி வருகிறது என்பதை எல்லோரும் அறிவோம்.

தமிழ் நாட்டிலே இது ஒரு பெரிய பிரச்சினை என்று சொல்லிவிட முடியாது. ஏனென்றால், அறிவு இயக்க வளர்ச்சி, பகுத்தறிவுப் பிரச்சாரம், சமுதாயச் சீர்திருத்தம் இவைகள் எல்லாம் இங்கே பல்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்த தலைவர்களாலும் மற்றத் தலைவர்களாலும் தமிழகத்திலே பரப்பப்பட்டு வந்திருக்கிறது. அதனுடைய விளைவாக ஒரு விழிப்புணர்ச்சி, இதுபோன்ற



1973 நவம்பர் 22]   [திரு. செ. மாதவன்]

முறைகள் கூடாது என்ற உணர்வு நம்முடைய மக்களிடத்திலே பரவியிருக்கிறது. இப்படிப்பட்ட சமூகப் பிரச்சாரத்தின் வலிவைக் கொண்டுதான் இப்படிப்பட்ட தவறான முறைகளைக் களையலாம் என்பதை நாடு உணர்ந்திருக்கிறது. அப்படிப்பட்ட முயற்சிகளுக்கு அரசு உறுதுணையாக நிற்கும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

சட்டத்தாலே முடியுமா என்ற பிரச்சினை எழுப்பப்பட்டது. எப்படிப்பட்ட தீமையைத் தடுப்பதற்கும் சட்டத்தை நாம் பயன்படுத்துகிறோம். ஏற்கெனவே இருக்கின்ற சட்டத்தின் மூலமாக இதிலே நடவடிக்கை எடுப்பதற்கு அரசாங்கம் தயக்கம் காட்டுவதில்லை. வரதட்சணை வாங்குகின்ற முறை இந்தச் சட்டத்திலே இருந்து தப்பிக்கக்கூடிய நிலைமையில் இருக்கிறது என்பதுதான் இங்கே கவனிக்கத்தக்கதாக இருக்கிறது. சட்டத்திலே, கொடுக்கும்பொழுது இனாமாகவோ அல்லது எதிர்காலக் குடும்ப வாழ்வுக்கோ கொடுத்தால் அதற்கு விதிவிலக்கு அளிக்கலாமா என்ற கேள்வி எழுப்பப்படுகிறது ; அந்த இடத்திலே சட்டத்தினுடைய கடுமை குறைக்கப்படுகிறது.

பெற்றோர்கள் எப்படியாவது பெண்களைத் திருமணம் செய்து கொடுத்துவிட வேண்டுமென்று எண்ணுவது இயற்கைதான். தமிழ்நாட்டிலே அப்படிப்பட்ட நிலைமை அதிகமாக இல்லாவிட்டாலும் பெண்களைத் திருமணம் செய்து கொடுக்க வேண்டுமென்றால், குடும்பத்திலே ஒரு சுமை அதைப் பொறுத்து ஏற்படுகிறது என்பதை நாம் உணர்ந்திருக்கிறோம். அப்படிப்பட்ட நிலையை நாம் மாற்ற முயற்சிகள் மேற்கொள்ள வேண்டியதுதான்.

டாக்டர் ஹாண்டே அவர்கள் இப்பொழுது இங்கே இல்லை. அவர்கள் சுவையான செய்தியை சொன்னார்கள், அவர்கள் திருமணம் செய்தபொழுது எதையும் எதிர்பார்க்காமல் செய்துக் கொண்டோம் என்று சொன்னார்கள். அவர்கள் முறையை எல்லோரும் பின்பற்றினால் பிரச்சினை இல்லாமல் போய்விடும். ஆனால் அந்த நிலை எல்லோராலும் பின்பற்றப்படுகிறதா என்றால் பின்பற்றப்படுகிறது என்று தைரியமாகச் சொல்லிவிட முடியாது.

வசதி படைத்தவர்கள் இதுபோன்று செய்வதால்தான் இப்படிப்பட்ட தீமை விளைகிறது என்பதை நாம் உணர்கிறோம். அவர்கள் அழகாக எடுத்துக்கூறியதைப்போல் திருமணச்

செலவுகளின் அளவு சமுதாயத்தைக் கெடுக்கிறது. கிராமங்களிலே ஏழைகளினுடைய பெரும்பகுதியான சுமை இதுபோன்ற சடங்குகள் மூலமாகத்தான் ஏற்படுகின்றது என்பதை டாக்டர் ஹாண்டே அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அதைக் களைவதற்கு சமுதாய மாற்றத்தால் ஏற்பாடுகள் செய்ய முடியும். இப்பொழுது இருக்கிற சட்டத்தை அமல்படுத்துவதிலே நாம் வெற்றிகரமாகச் செயல்பட்டிருக்கிறோம் என்று தான் சொல்ல வேண்டும். ஏனென்றால் திருமணங்கள் செய்வதற்கு முன் ஏதாவது அப்படிப்பட்ட ஒப்பந்தங்கள் ஏற்பட்டால் அதையும் தடுப்பதற்கும், தண்டனைக்குள்ளாக்குவதற்கும் அதிகாரம் இந்தச் சட்டத்திலே இருக்கிறது, ஆனால் வரதட்சணை என்று சொல்லாமல் இனாம் என்று கொடுப்பது என்ற நிலை வந்தால் அதைத் தடுப்பதுதான் பிரச்னையாக இருக்கிறது. மத்திய அரசினுடைய சட்டத்திலே அதற்கு ஒரு விதிவிலக்கு இருப்பது போல் ஒரு விளக்கம் தரப்படுகிறது. அது நல்லதல்ல. அது இருப்பதால்தான் வேறு பெயர்களிலே இப்படிப்பட்ட முறை நீடிக்கிறது என்று திரு. என். கே. பழனிச்சாமி அவர்கள் சொன்னார்கள். தான் கொடுத்திருக்கிற கருத்தையும் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். வரதட்சணை எந்த முறையிலே இருந்தாலும் அது தடுக்கப்பட வேண்டுமென்பதிலே யாருக்கும் ஆட்சேபணை இல்லை. பெண் கொடுக்கின்றவர்களோ அல்லது வாங்குகிறவர்களோ சில முறைகளைக் கையாண்டு தங்களுடைய பெண்களுக்கு வசதிகளுக்கு என்று சிலவற்றைச் செய்கிறார்கள் என்ற நிலைமை வரும்பொழுதுதான் அதைச் சட்டப்படி தடுக்க முடியாமல் தோல்வியடைகிறோம்.

மக்களிடத்திலே மனமாற்றம் ஏற்படுத்த வேண்டுமென்று சொல்கின்ற அதே நேரத்தில் கட்டாயப்படுத்தி வரதட்சணை முறையைக் கையாண்டால் தண்டனைக்கு உள்ளாக்குவதற்கும், கட்டாயப்படுத்தி, ஒப்பந்தம் ஏற்படுத்தி யார் எந்த முறையைக் கையாண்டாலும் அதைத் தடுப்பதற்கு அதிகாரம் சட்டத்திலேயே இருக்கிறது என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது. அப்படிப் பட்ட முறையில்லாமல் வேறு முறையிலே, வேறு பெயரிலே கொடுக்கின்ற முறை இருக்குமானால் அதுதான் இப்பொழுது பெரிய பிரச்சினையாக இருக்கிறது. அது ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய பிரச்சினை, பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள்,



பல்வேறு சமுதாயத் தலைவர்கள் சேர்ந்து ஆராய்ந்து அதிலே கருத்தொருமித்த நிலைமை இருக்குமானால் நம்முடைய மாநிலத்திலே ஒரு சட்டம் கொண்டுவரத் தயக்கம் காட்ட மாட்டோம். ஆனால் இப்பொழுது இருக்கிற சட்டம் 10 ஆண்டுகளாக அமலில் இருக்கிறது, ஓரளவுக்கு வெற்றி பெற்றிருக்கிறோம், ஏனென்றால் கட்டாயப்படுத்துகிற நிலை இந்த நாட்டிலே இருப்பதாகச் சொல்ல முடியாது. அப்படி ஏதாவது இருக்குமானால் நடவடிக்கை எடுப்பதற்கு எந்தவிதமான தடையும் இல்லை.

கொள்கையளவிலே வரதட்சணை தவிர்க்கப்பட வேண்டும், ஒழிக்கப்பட வேண்டும் என்று ஏற்றுக்கொண்டாலும், சட்டத்தின் மூலமாக—அகில இந்திய நிலைமையிலே ஒரு சட்டம் ஏற்கெனவே இருக்கும்பொழுது—நம்முடைய மாநிலத்திலே ஒரு சட்டம் வேண்டுமா என்பதைப்பற்றி யோசிப்பதிலே எல்லாத் தரப்பினருக்கும் ஒருமித்த கருத்து ஏற்பட்டால் நல்லது. ஆனால் இப்பொழுது இருக்கின்ற சட்டத்தை அமல் நடத்துவதிலே எந்த முறைகளைப் பின்பற்ற வேண்டுமோ அதைப் பின்பற்ற அரசாங்கம் தயாராக இருக்கிறது. அதிலே சிக்கல்கள் ஏற்படுமானால் அதைப்பற்றிக் கவனிப்பதிலே ஆட்சேபணையில்லை. பெண் குலத்திற்காக நம்முடைய உறுப்பினர் அவர்கள் வாதாடியதற்காக நான் அவர்களுக்கு என்னுடைய பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் பேசும்பொழுது பழைய சம்பிரதாயங்கள், பழைய கருத்துக்கள் எல்லாவற்றையும் வெகு அழகாக எடுத்துச் சொன்னார்கள். திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்களே வலியவந்து அவர்கள் தயாராக இருப்பதாக டாக்டர் ஹாண்டே அவர்களுக்கு உறுதி சொன்னார்கள். சமுதாயச் சீர்திருத்தக் கருத்துக் கொண்டிருக்கிறவர்கள் இந்த முறை ஒழிக்கப்பட வேண்டும் என்ற நல்ல கருத்தில் இருக்கிறார்கள் என்ற அடிப்படையிலே இந்த மசோதாவை அவர்கள் வலியுறுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. என். கே. பழனிசாமி:** தலைவர் அவர்களே, மந்திரி அவர்கள் பதில் சொல்லக்கூடிய காலத்திலே வரதட்சணை ஒழிக்கப்பட வேண்டும் என்பது எல்லாத் தரப்பினரும் ஒத்துக் கொள்ளக்கூடிய விஷயம் என்பதை வலியுறுத்திச் சொன்னார்கள். ஆனால் அதற்கு ஒரு உத்திரவாதம் ஒரு வருஷத்திற்குள்ளாக,

அல்லது ஆறு மாதத்திற்குள்ளாக என்று கொண்டுவருவது தான் நல்லது. நானே கொண்டு வந்து இந்த மசோதாவை நிறைவேற்ற வேண்டுமென்று நான் சொல்லவில்லை. சர்க்கார் தரப்பிலேயிருந்து அம்மாதிரி ஒரு சட்டமியற்றி இந்த மாநிலத்திலே அமலாக்கும் முறையிலே செய்ய வேண்டும். ஏற்கனவே மத்திய சர்க்கார் சட்டம் இருக்கிறது. அதில் சில குறைபாடுகள் இருக்கின்றன. அந்தக் குறைபாடுகளைப் போக்கி இந்த மாநிலத்திலே அந்தச் சட்டத்தை அமல்படுத்தும் முறையிலே சர்க்காரே திருத்தம் கொண்டு வர முடியும். மத்திய சர்க்கார் சட்டம் போட்டாலும் இந்த மாநில சர்க்கார் அதிலே உள்ள குறைபாடுகளை நீக்கித் தகுந்த முறையில் சட்டத் திருத்தம் செய்ய அதிகாரம் இருக்கிறது. அந்த முறையில் கொண்டு வர முடியும். அதுமட்டுமல்லாமல் எப்படியும் ஒரு பத்து பேராவது கைது செய்யப்பட்டால், வரதட்சிணை வாங்கினார்கள் என்பதற்காகக் கைது செய்யப்பட்டால் அல்லது 'ஃபைன்' செய்யப்பட்டால் பாக்கியிருப்பவர்களும் இந்த வரதட்சிணையை வாங்குவதற்குப் பயப்படுவார்கள். அம்மாதிரி கடுமையான தண்டனை இருந்தால் தான் வரதட்சிணை வாங்க வேண்டுமென்ற எண்ணம் இருப்பவர்களுக்கும் பயம் ஏற்படும். எந்தச் சட்டத்தைக் கொண்டுவந்தாலும் தப்பிக்க வழி இருக்கிறது. அது ஒரு பக்கம் இருக்கிறது. அதுபற்றி சிறிய கதை ஒன்று சொல்வார்கள்.

ஒரு ஊரிலே ஒரு இராஜா இருந்தார். அந்த இராஜாவிடம் ஒருவன் வேலை வேண்டுமென்று கேட்டுப் போனான். வேலையில்லை என்று இராஜா சொல்லிவிட்டார். அதற்கு அவன், வேலை கொடுக்க வேண்டாம், ஆனால் நான் தினம் தினம் இங்கே வந்து போகிறேன், அதற்காகச் சம்பளம் வேண்டாமென்று சொல்லி விட்டு அவ்வாறே செய்தான். இப்படி 6 மாதங்கள் போயிற்று. ஊர் ஜனங்கள் இதைக் கவனித்தார்கள். இவன் இராஜாவிடம் போகிறான், அப்படிப் போவதால் இவனிடம் ஏதோ விஷயம் இருக்கிறது என்று அவர்கள் எண்ணி, இவன் சிபாரிசு செய்தால் காரியம் நடக்கும் என்று எண்ணினார்கள். அவனும் அந்த முறையிலே இவ்வளவு பணம் என்று கேட்க ஆரம்பித்தான். பிறகு அவன் திருமணமும் செய்து கொண்டான். இராஜா வீட்டில் திருமணம் செய்தால் எந்த அளவிற்குச் செலவு செய்ய முடியுமோ, அந்த அளவிற்குச் செலவு செய்து திருமணத்தைச் செய்தான்.



உனக்குத்தான் வேலையில்லையே, அவ்வளவு பணம் உனக்கு எப்படி வந்தது என்று இராஜா அவனிடம் கேட்டார். அதற்கு அவன் இம்மாதிரி சொன்னான், இம்மாதிரி கிடைத்தது என்று சொன்னான். உடனே இராஜா, உனக்கு இந்த வேலை வேண்டாம், வேறு வேலை தருகிறேன் என்று சொல்லி, ஒதுக்கமாக இருக்கும் ஒரு இடத்தில் கேட் கீப்பராகப் போட்டார். அங்கே ஒரு மணி இருக்கிறது. அந்த இராஜாவிற்கு இரண்டு மனைவிகள். எனவே, வேலைக்கு வந்த ஆள் அங்கிருக்கின்ற மணியை இரவு 10 மணிக்கு ஒரு முறையும், 1 மணிக்கு ஒரு முறையும் அடிக்க வேண்டுமென்று இராஜா சொல்லியிருந்தார். 10 மணியிலிருந்து 1 மணி வரையில் ஒரு மனைவியிடமும், மணியடித்தவுடன் ஒரு மணியிலிருந்து வேறொரு மனைவியுடனும் அந்த இராஜா இருப்பார். அதன்படியே அந்த ஆள் 10 மணிக்கும், 1 மணிக்கும் மணி அடித்துக் கொண்டிருந்தான். ஒரு நாள் ஒரு மணி நேரம் தாமதமாக மணியை அடித்துவிட்டான். அன்றைக்கு இராஜா ஒரு மணி நேரம் அதிகமாக அந்த மனைவியிடம் தங்கிவிட்டார். இதனால் அவளுக்கு மணி அடிப்பவனின் மேல் பிரியமாகி, உனக்கு ஆயிரம் ரூபாய் தருகிறேன், இதேமாதிரி தினமும் தாமதமாக மணியை அடி என்று சொன்னார். இதனால் இன்னொரு மனைவி ஏன் இராஜா வருவதற்கு தாமதம் ஆகிறது என்று நினைத்து அதன் காரணத்தை அறிந்து கொண்டாள். அதனால் அவனிடம் வந்து, உனக்கு நான் 2,000 ரூபாய் தருகிறேன், அம்மாதிரி அடிக்காதே என்றாள். இதையும் இராஜா அறிந்துகொண்டார். உடனே, இவனுக்கு இம்மாதிரி வேலை கூடாது என்று எண்ணி, அவனை 'சென்சஸ்' எடுக்கும் உத்தியோகத்தில் அமர்த்தினார். அவன் வீடு வீடாகப் போய், 'உங்கள் வீட்டில் எத்தனை பேர் இருக்கிறார்கள், ஆண்கள் எத்தனை பேர், பெண்கள் எத்தனை பேர் என்று கேட்டு, மிலிடரிக்குப் போகின்றவர்கள் யார் யார் என்று கேட்டான். உடனே அவர்கள் பயந்துபோய், என் பெயரைச் சொல்லிவிடாதே என்று சொல்லிப் பணத்தைக் கொடுத்தார்கள். இந்தக் கதையை எதற்காகச் சொல்கிறேன் என்றால், சட்டம் போட்டால் இப்படித்தான் வருகிறது. எப்படிச் சட்டம் போட்டாலும் லஞ்சம் வாங்குபவர்களையோ, வரதட்சிணை வாங்குபவர்களையோ தடுக்க முடியாது என்பது வாஸ்தவம்தான். ஆனால் இந்தச் சட்டத்தைத் திருத்துவதால் வரதட்சிணை வாங்குபவர்களுக்குப் பயம் ஏற்படும். சர்க்காரே அப்படிக்

கொண்டு வந்தாலும் சரி. அமைச்சரவர்கள் எல்லோரையும் கலந்து இதற்கு முயற்சி செய்கிறேன் என்று சொன்னார்கள், அதற்கு உத்தரவாதம் கொடுத்தால். . .

**திரு. எஸ். ஆறுமுகம் :** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் ஒரு இராஜா கதையைச் சொன்னார்கள். எந்த ஊர் இராஜா, என்ன பெயர் என்று சொல்லாமல் கதையைச் சொல்லலாமா, அதற்கு விளக்கம் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. என். கே. பழனிசாமி :** ஒரு கதை தானே. ஆகவே, அமைச்சரவர்கள் சொன்னார்கள், மற்றத் தலைவரவர்களைக் கலந்துகொண்டு நம்முடைய மாநிலத்திற்குத் தகுந்தாற்போல் கொண்டு வருகிறேன் என்று. அம்மாதிரி உத்தரவாதம் கொடுத்தால் நான் இதை வாபஸ் வாங்கிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இராஜா கதையை நம்பி அவசரமாக முடிவெடுக்க முடியாது. இந்தப் பிரச்னை ஆழ்ந்து பரிசீலிக்கப்பட வேண்டிய பிரச்னைதான். அவர்களே ஒப்புக் கொண்டதைப்போல், நாம் கடுமையான சட்டம் போட்டு, அதனால் பெண்களைப் பெற்றவர்கள் நம் மீது பாய்கின்ற சூழ்நிலை ஏற்படக்கூடும். அந்தச் சட்டத்தினாலே, இப்பொழுது நடந்து வருகின்ற திருமணங்களும் நின்றுவிடக்கூடிய வருத்தப்படக் கூடிய சூழ்நிலை ஏற்படக்கூடாது. இருந்தாலும் மாண்புமிகு அங்கத்தினர் அவர்களும், மற்றவர்களும் சொன்ன கருத்துக் களின் அடிப்படையிலே மத்திய அரசின் சட்டத்தை எந்தெந்த அளவிலே திருத்தியமைத்தால், முழுதும் தடுக்க முடியாவிட்டாலும் கூட இப்படி ஒரு பயத்தை ஊட்ட முடியும் என்ற முயற்சியைப் பற்றிக் கருத்தறிய வேண்டும். ஆனால் பெண் அங்கத்தினர்கள் ஒன்றுமே சொல்லமாட்டேன் என்கிறார்கள். ஆகவே, அவர்களையும், அதைப் போலவே பெண்கள் சங்கங்கள் இருந்தால் அந்தச் சங்கங்களையும் கேட்டு முடிவெடுப்பது நல்லது. திருமதி ஜோதி அம்மையார் அவர்களை நான் கேட்டேன். நான் கொடுக்கவும் இல்லை, கேட்கவும் இல்லை, எனவே, இந்த வரதட்சிணையைப் பற்றி எனக்குப் பிரச்னை இல்லை என்று சொல்லி விட்டார்கள்.



**திருமதி ஜோதி வெங்கடாசலம் :** தலைவரவர்களே, எனக்குப் பிரச்னை இல்லை என்று நான் கூறவில்லை. என் சம்பந்தப்பட்ட வரையில் டௌரி கொடுக்கவும் இல்லை, வாங்கவும் இல்லை என்று தான் கூறினேன். ஆனால் ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது என்ற காரணத்தினால்தான் பேசவில்லை.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** ஆகவே, பெண்கள் இயக்கத்தை நடத்துகின்றவர்களிடமும், இது சம்பந்தமாக சமுதாய சேவையிலே ஈடுபட்டிருப்பவர்களிடமும் கருத்துக்களைக் கேட்டு, அந்தக் கருத்துக்களை இந்த மன்றத்தின் முன்னால் வைத்து, அதற்குப் பிறகு மசோதா கொண்டு வரலாமா என்று முடிவெடுப்பதுதான் நல்லது. ஆகவே, இந்த உறுதியை நான் தருகிறேன். ஆகவே, இதை வற்புறுத்த வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** மாண்புமிகு அமைச்சரவர்கள் மத்திய சர்க்காரின் சட்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். சென்டிரல் ஆக்ட் இருக்கிறது. அதைத்தான் நானும் சொன்னேன். இப்பொழுது எந்த அளவில் அமல்படுத்துவது என்பது மாநில அரசாங்கத்தின் பொறுப்பு என்று கருதுகிறேன். சென்ற 6, 7 ஆண்டு காலமாக அமைச்சரவர்களுக்கு அனுபவம் இருக்கிறது. இந்த 6, 7 ஆண்டுக் காலத்தில் இந்தச் சட்டத்தை மீறி தவறுகள் நடந்திருந்தால் குற்றச்சாட்டுகளைச் சுமத்தி இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்று சொல்ல வேண்டும். அதன்மூலம் மற்றவர்கள் ஜாக்கிரதையாக இருப்பார்கள். அதைச் சொல்லுவார்களா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** மத்திய சர்க்காரின் சட்டத்தில் டௌரி வாங்கக்கூடாது என்று போட்டுவிட்டார்கள். அப்படிப் போட்டுவிட்டு அதற்கு ஒரு விளக்கம்.

" For the removal of doubts, it is hereby declared that any present made at the time of a marriage to either party to the marriage in the form of cash, ornaments, clothes or other articles, shall not be deemed to be dowry within the meaning of this section unless they are made as consideration for the marriage of the said parties. "

என்று சொல்லிவிட்டார்கள். ஆகவே, இந்தச் சட்டத்தை எப்படி அமல் நடத்த முடியுமென்பதை டாக்டர் ஹாண்டே அவர்கள் புரிந்துகொள்வார்கள் என்று கருதுகிறேன். ஆகவே, இங்கேயுள்ள பிரச்னைகளை அவர்களும் உணர்வார்கள். வரதட்சிணை என்ற பெயரால் ஒப்பந்தம் செய்து யாராவது கேட்டால் அதைத் தடுக்க கடுமையாகத் தண்டனை கொடுக்கலாம். அதே சமயத்தில் அந்தப் பெயரிலே இல்லாமல் தான் பெற்ற குழந்தைகளுக்கு—டாக்டர் ஹாண்டே அவர்களது மாமனார் நல்லவர், ஒரேயொரு மோதிரத்தோடு தப்பித்துக் கொண்டார், ஆனால் நாட்டிலே எல்லோரும் அப்படியிருக்க மாட்டார்கள்—தாங்களே முன் வந்து கொடுக்க வந்தால் சட்டப்படி தடுக்கலாமா என்ற சந்தேகத்தை பாராளுமன்றத்தில் கிளப்பியிருக்கிறார்கள். இதையும் தடுக்க நாம் விரும்புகிறோமா, தடுத்தால் என்ன ஆகும், அதைத் தாய்க்குலம் ஏற்றுக்கொள்ளுமா என்ற சந்தேகம் இருக்கிறது. ஆகவே, ஆழ்ந்து பரிசீலிக்க வேண்டுமென்றுதான் இந்தக் கருத்துக்களின் அடிப்படையிலே மேற்கொண்டு கருத்துக்களைச் சேகரித்து முடிவெடுக்கலாம்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** மோதிரத்தையும் கொடுத்து விட்டேன். ரிசர்வ் பேங்கிற்குக் கொடுத்துவிட்டேன். 'சைனீஸ் அக்ரஷனின்' போது கொடுத்து விட்டேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அப்படிக் கொடுத்தது நல்லது என்று கருதவில்லை. அதைக் கடைசி வரையிலே வைத்திருக்க வேண்டும்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** மோதிரத்தைக் கொடுத்தேன் என்றால், 'சைனீஸ் அக்ரஷன்' போது அவர்கள் தங்கம் வேண்டுமென்று, நாட்டுக்கு எல்லோரும் கொஞ்சம் கொஞ்சம் தங்கம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** மனைவியின் அனுமதி பெற்றுக் கொடுத்தீர்களா? அனுமதியில்லாமல் கொடுத்தீர்களா?

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** அனுமதியோடுதான், இரண்டு பேரும் சேர்ந்து, ஒன்றாகச் சேர்ந்து கொடுத்திருக்கிறோம். அந்த நேரத்தில் நாங்களும் இதற்காக ஏதாவது செய்ய வேண்டுமென்ற உணர்ச்சியின் அடிப்படையிலே செய்திருக்கிறோம். அதனால்



எந்தவிதமான ஆபத்தும் வரவில்லை. ஆபத்து வருவதற்காக எதையும் அவர்கள் சொல்ல வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய கருத்து என்னவென்றால் மத்திய அரசின் சட்டத்தின்படி நாம் இங்கே நடத்திக்கொண்டு வருகிறோம். ஆனால் மத்திய அரசின் சட்டத்திலே தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள், 'பிரசெண்டேஷன்' வரவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். பிரசெண்டேஷன் என்பது திருமணம் ஆனதற்குப் பிறகு கொடுக்கக்கூடிய பொருள். திருமணம் ஆனதற்குப் பிறகு, திருமணம் நடந்த சமயத்தில் வெளியிலேயிருந்து வருபவர்கள் பிரசெண்டேஷனைக் கொடுக்கிறார்கள்.

அதற்கு முன்பாகவே நிச்சயதாம்பூலம் நடக்கிறது. திருமணம் செய்து கொள்ள வேண்டுமென்று முடிவு செய்கிறார்கள். அந்த நேரத்தில் பணம் பெற்றுக் கொண்டுதான். நிச்சயதார்த்தம் நடத்துகிறார்கள். அதைத் தடுக்க இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தலாம். இதை அமல் செய்வதிலே எந்தவிதமான தொல்லையும் இருக்காது. அதை 'முதல் ஸ்டெப்' ஆகச் செய்யலாம் என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அதற்காகத்தான் அந்த விதியையே படித்துக் காண்பித்தேன். பணம் கொடுக்கப்படுகிறது; நகை கொடுக்கப்படுகிறது; உடைகள் வாங்கிக் கொடுக்கிறார்கள்; வேறு பொருள்கள் வாங்கிக் கொடுக்கிறார்கள். இவ்வளவுக்கு விதிவிலக்கு கொடுக்கப்படுகிறது "at the time of marriage". நிச்சயதாம்பூல சந்தர்ப்பத்தில் எந்த அளவு கொடுக்கிறார்கள் என்று தெரியவில்லை. திருமணம் நடைபெறும்போது இத்தகைய வசதிகளைக் கொடுக்கலாம் என்று சொல்லிவிட்டு வரதட்சிணை கொடுக்காதே என்றால் எப்படி இந்தச் சட்டத்தை அமல் செய்ய முடியும்? ஆகவே, இந்தச் சட்டத்தை மேலும் கடுமையாக்க வேண்டுமா என்பதைப் பற்றிப் பரிசீலித்துத்தான் செய்ய வேண்டும்.

திரு. என். கே. பழனிசாமி அவர்கள் தாம் முன்மொழிந்த சட்ட முன்வடிவை வற்புறுத்தாததால் அது பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது.

## (ஆ) தனித் தீர்மானம்.

### இன்றியமையாப் பொருள்களின் விலைகளை, இன்றியமையாப் பொருள்கள் சட்டத்தின்கீழ் வரையறுத்தல்

திரு. கே. டி. கே. தங்கமணி: அத்தியாவசியப் பொருள்களுக் என்னுடைய தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

"That this House recommends to the Government to take suitable steps to fix the prices of the essential commodities under the Essential Commodities Act."

The resolution was duly seconded.

திரு. கே. டி. கே. தங்கமணி:. அத்தியாவசியப் பொருள்களுக்கெல்லாம் சரியான விலை நிர்ணயம் பண்ணுகின்ற நடவடிக்கையைத் தமிழக அரசு உடனடியாக எடுக்க வேண்டுமென்பது இந்தத் தீர்மானத்தினுடைய சுருக்கமாகும். இன்றைக்கு நாட்டில் இருக்கக்கூடிய மிக மிக முக்கியமான பிரச்சினைகளில் இது ஒன்று. மக்களுக்குத் தேவையாக இருக்கக் கூடிய அத்தியாவசியப் பொருள்கள் அவர்களுக்கு நியாயமான விலையில் கிடைக்க வேண்டும். இது இன்றைக்கு இந்தியா பூராவிலும் உள்ள பிரச்சினையாக இருக்கிறது என்பதை நேற்று நாடாளுமன்றத்தில் நடைபெற்ற விவாதங்களில் இருந்து நாம் பார்க்க முடியும். ஓரளவுக்கு இந்திய அரசினுடைய கொள்கை காரணமாக இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது உண்மை என்றாலும் கூட, கிடைக்கின்ற சாமான்களை முறையாக விநியோகம் பண்ண வேண்டிய பொறுப்பு ஒவ்வொரு மாநில அரசுக்கும் இருக்கிறது என்பதை இந்த நாடு அறியும். ஆகவேதான் இந்தத் தீர்மானத்தின் மூலமாகச் சில விஷயங்களைக் கொண்டுவர ஆசைப்படுகிறேன். ஐந்தாண்டுத் திட்டங்களை ஆரம்பித்து நாம் கோடிக் கணக்கான ரூபாய்களைச் செலவழித்திருக்கிறோம். மக்களுக்குத் தேவையான பொருள்களை எல்லாம் உற்பத்தி செய்திருக்கிறோம். அப்படி உற்பத்தி செய்த பொருள்கள் எல்லாம் மக்களுக்குப் போய்க் கிடைக்கிறதா, நியாயமான விலைக்குக் கிடைக்கிறதா என்றால் இல்லை.

Whether there is equitable distribution, whether it reaches them at fair prices என்ற ஒரு கேள்வியை எழுப்பிய காரணத்தால் 1955-ம் ஆண்டு எஸென்ஷியல் கமாடிடிஸ்





ஆக்ட் என்ற சட்டத்தை நாடாளுமன்றத்தில் கொண்டு வந்து நிறைவேற்றினார்கள். 1955-ம் வருஷத்திய சட்டம் (ஆக்ட் 10—1955) சிறிய சட்டந்தான். 16 பிரிவுகள் கொண்ட சட்டந்தான். அந்தச் சட்டத்தினுடைய நோக்கத்தைப் பற்றிப் பல கோர்ட்டுகளிலே விவாதிக்கப்பட்டு கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். இந்தச் சட்டத்தினுடைய நோக்கம் என்னவென்று ஆந்திரா ஹைகோர்ட்டில் ஒரு பிரச்சினை எழும்பியது. 1958-ம் வருஷம் in Law Times, குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்தச் சட்டத்தின் நோக்கம் என்ன என்பதை இதைவிடத் தெளிவாக யாரும் சொல்லியிருக்க முடியாது. அவர்கள் சொல்லுவது :—

The dominant object and intention of the Act is to secure equitable distribution and availability at fair prices of all essential commodities in the interests of the general public; the interest of the general public necessarily connotes the interests of the consuming public and not the interests of the dealers.

அத்தியாவசியப் பொருள்களை விநியோகிக்கும்போது மக்கள் நன்மையை அடிப்படையாக வைத்துக் கொண்டு விநியோகிக்க வேண்டும். மக்கள் என்றால் யார்? வாங்கிச் சாப்பிடுகிறவர்கள் மக்கள். விற்கக்கூடிய பெரிய வியாபாரிகளோ, சிறிய வியாபாரிகளோ அல்ல.

For the sake of completeness, I will read it.

எந்தெந்தப் பொருள்கள் அத்தியாவசியப் பொருள்கள் என்றும் அப்போதே கூறியிருக்கிறார்கள். அப்படி அத்தியாவசியப் பொருள்கள் என்று 12 பிரிவுகளாகக் கொடுத்திருக்கிறார்கள். அவை—

(1) Cattle fodder including oil cakes and other concentrates;

கால்நடைத் தீவனங்கள்

(2) Coal including coke and other derivatives;

(3) Components and accessories of automobiles.

அப்போதே ஆட்டோமோபைல் இண்டஸ்ட்ரி வளர்ந்து கொண்டு வந்திருக்கிறது. அதிலே கள்ள மார்க்கெட் நடக்க ஏது இருக்கிறது என்று புரிந்துதான் மோட்டார் பார்ட்களுக்கும் விலை நிர்ணயம் செய்து ஒழுங்காகக் கொடுக்க வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1973 நவம்பர் 22

(4) Cotton and woolen textiles;
துணியாக இருக்கலாம்; உல்லன் போர்வைகளாக இருக்கலாம்.

(5) Foodstuffs including edible eoils and oil seeds;
உணவுப் பொருள்கள், உணவுக்காக உபயோகப்படுத்தக்கூடிய எண்ணெய்கள்.

(6) Iron and steel including manufactured products of iron and steel;

(7) Paper including newspapers, straw board;

(8) Petroleum and petroleum products;
பெட்ரோலியம் பிராடக்ட்ஸ் என்று சொல்லும்போது நம்முடைய மண்ணெண்ணெயும் அதில்தான் சேரும்.

(9) Raw cotton, ginned or unginned and cotton seed;
பருத்தி, பஞ்சு, பருத்தி விதை.

(10) Raw jute;

(11) Food crops including crops of sugarcane;
உணவு உற்பத்தி பண்ணக்கூடிய பண்டங்கள்; கமர்ஷியல் கிராப்ஸ்; குறிப்பாக நம்முடைய கரும்பு.

(12) Any other class of commodity declared so by the Government of India.

ஸ்டேட் கவர்ன்மென்டுக்கு சில விதிகள் இருக்கின்றன என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். 1955-ம் ஆண்டிலேயே இவைகளெல்லாம் அத்தியாவசியமான பண்டங்கள் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள் என்றால் அதற்குப் பிறகு அதிகமான சாமான்கள் லிஸ்டில் வந்திருக்கின்றன. மாநில சர்க்கார் அந்த லிஸ்ட் படி நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். நாமும் சில நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டுதான் வருகிறோம். அத்தியாவசியப் பொருள்கள் என்பது மனிதனின் தேவைக்கேற்ப காலத்திற்குக் காலம் மாறும்.

"அறமெனப் படுப் தியாதெனக்கேட்பின்
மறவா திதுகேண் மன்னுயிர்க்கெல்லாம்
உண்டியு முடையுமுறையுளுமல்லது
கண்டதில்லெனக் காவலனுரைக்கும். . ."



1973 நவம்பர் 22] [திரு. கே. டி. கே. தங்கமணி]

என்று ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் மணிமேகலையில் சொல்லியிருக்கிறார். ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் சொன்ன அந்தக் காரியமாவது இப்போது முழுமையாக நடைபெற்றிருக்கிறதா, நிறைவேற்றப் பெற்றிருக்கிறதா என்றால் இல்லை. 1955-ம் ஆண்டில் இருந்த எஸென்ஷியல்ஸ் கமாடிட்டீஸை விட 1973-ம் ஆண்டில் அதிகமாகும். இன்றைக்கு நமக்கு மின்சாரம் அத்தியாவசியமாக இருக்கிறது. பலவிதமான வசதிகள் வரலாம். வசதிகள் அதிகப்பட்டுக் கொண்டே போவது நாட்டின் வளர்ச்சியைக் காட்டுகிறதே தவிர, வேறல்ல.

[பிற்பகல் 12.50]

அப்படி தேவைகள் அதிகப்படும் காலத்தில் அந்தத் தேவைகள் சாதாரண மனிதனுக்கு எட்டும் என்ற முறையில் வரவேண்டும். அதற்கு அரசாங்கத்திற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அரசு உத்தரவு போட்டு சில கட்டுப்பாடுகள் செய்கிறோம் என்று வைத்துக்கொள்வோம். இங்குள்ள அரிசியை வெளி மாநிலங்களுக்குக் கொண்டு போகக் கூடாது என்று எஸென்ஷியல் கமாடிட்டீஸ் ஆக்ட் படி நமக்குக் கொடுத்திருக்கிற அதிகாரத்தின் கீழ் கொண்டு வருகிறோம். ஒரு குறிப்பிட்ட லாரி நம்பர் 40 என்று வைத்துக்கொள்வோம். தினசரி நூறு மூட்டைகள் போய்க் கொண்டிருக்கின்றன. இந்த எஸென்ஷியல் கமாடிட்டீஸ் ஆக்ட் படி அப்படி லாரியில் கொண்டு போனதை பறிமுதல் செய்கிறோம், பறிமுதல் செய்து எடுத்துக்கொள்கிறோம், அனுப்பியவருக்கு நூறு மூட்டை நஷ்டம். அது தினசரி போய்கொண்டிருக்கும். அதை ஒன்றும் செய்யமுடியாது. இந்தமாதிரி நிலையில் அன்று பாகிஸ்தானுக்கு அதிகமாகக் கொண்டு சென்று கொண்டிருந்தார்கள். அதைப் பார்த்து பஞ்சாப் அரசு ஒரு திருத்தத்தைக் கொண்டுவந்தார்கள். இந்த எஸென்ஷியல் கமாடிட்டீஸ் ஆக்டின் ஏழாவது பிரிவில் என்ன தண்டனை கொடுக்கவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. தண்டனை ரொம்ப நன்றாக இருக்கிறது. தண்டனை ஒரு ஆண்டு, அல்லது மூன்று ஆண்டுகள். சிறைத் தண்டனை தான் கொடுக்கவேண்டும். ரூ. 2.15-க்கு சீனி விற்கவேண்டுமென்று சொன்னால் ரூ. 2.20-க்கு விற்றால் கிடைக்க வேண்டியது ஒரு ஆண்டு தண்டனை. அபராதம் போடுவது என்றால் ஏன்

அபராதம் மட்டும் போடுகிறோம் என்பதற்குக் காரணம் சொல்ல வேண்டும் என்று 1955-ம் ஆண்டிலேயே அப்படியெல்லாம் வைத்திருக்கிறார்கள்.

இந்த எஸென்ஷியல் கமாடிட்டீஸ் ஆக்ட்க்கு கன்கரண்ட் ஜுரிஸ்டிக்ஷன் இருக்கிறது. திருத்தம் மாநில அரசும் கொண்டு வரலாம், மத்திய அரசும் கொண்டுவரலாம் என்ற நிலையில் மாநில அரசு மத்திய அரசுச் சட்டத்திற்கு ஒரு திருத்தம் கொண்டு வந்தார்கள்.

'Power to control production, supply and distribution of essential commodities and also forfeiture of certain property used in the commission of offence'

That is section 7 of the Punjab Act of 1959. Under this section, if a vehicle carries these articles, that vehicle also can be seized.

அந்த முறையில் பஞ்சாப் அரசாங்கம் சட்டத்தைத் திருத்தி தனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி லாரிகளை பறிமுதல் செய்யலாம் என்ற அதிகாரத்தைத் தங்களுக்கு எடுத்துக் கொண்டார்கள். நான் இதைக் குறிப்பிடக் காரணம் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போதோ அல்லது வேறு சமயத்திலோ எங்களுக்கு இதன்படி அதிகாரம் இல்லை என்ற வாதம் வருமானால் தக்க அதிகாரங்களை எடுத்துக்கொள்ள வசதி இருக்கிறது, வாய்ப்பிருக்கிறது என்று சொல்வதற்காகத்தான் இதைச் சொல்கிறேன்.

இன்னும் அதற்கு பலவிதமான வாதங்கள் உள்ளன. டி.ஐ.ஆர். இருக்கிறது. இன்று கூட மன்றத்தில் ஒரு கேள்வி எழுப்பப்பட்ட போது உரம் சம்பந்தமாகச் சொல்லப்பட்டது. மத்தியப் பிரதேசத்தில் உரத்தை எஸென்ஷியல் கமாடிட்டி என்று டிக்ளேர் செய்து அதை மாநிலத்தில் விநியோகம் செய்யவேண்டுமென்று செய்துவிட்டார்கள். அப்படி ஏன் இங்கு செய்யவில்லை என்று கேட்டபோது பதில் சொன்னார்கள், மூன்றில் ஒரு பங்கு உரத்தைத் தான், உற்பத்தி செய்யும் உரத்தைத்தான் விநியோகம் செய்ய அதிகாரம் இருக்கிறது. மீதியை ஷாவாலெஸ், பாரி போன்றவர்கள் விநியோகிக்கிறார்கள், நெய்வேலியில் பல டீலர்களுக்குக்



கொடுக்கிறார்கள், அதனால்தான் கஷ்டம் ஏற்படுகிறது என்று சொன்னார்கள். நான் சொல்வது, இதைப் பூராவையும் எடுத்துக் கொள்ள அதிகாரம் இருக்கிறது.

ஒரு ஆலோசனை கூற விரும்புகிறேன். இதற்கு முன்னால் மந்திரிசபைக்குள் நடந்த இரகசியத்தைச் சொல்லிவிடவில்லை. மத்திய அரசின் அனுமதி பெற்றுத்தான் மாநில அரசு நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்று வருகிறபோது 1967-க்குப் பிறகு இதே மந்திரிசபை இருந்த காலத்தில் ஒன்றிரண்டு சம்பவங்களில் நடவடிக்கைகள் எடுத்துவிட்டு நாம் இப்படி நடவடிக்கைகள் எடுத்திருக்கிறோம் என்று சொல்லி அப்ரூவல் வாங்கியிருக்கிறோம். அந்த அளவிற்குச் சொன்னால் போதும் என்று தான் நினைக்கிறேன்.

ஆக, மத்திய அரசுக்கும், மாநில அரசுகளுக்கும் அதிகாரம் உள்ளது. மாநில அரசுக்கு இந்தச் சட்டத்தைத் திருத்துவதற்கு அதிகாரம் இருக்கிறது. அதற்காகத்தான் பஞ்சாப் உதாரணத்தை எடுத்துக் காண்பித்தேன். இந்தச் சட்டத்திற்கு நாமே திருத்தம் கொண்டுவரலாம். வேண்டிய திருத்தங்கள் கொண்டுவந்து அமல் படுத்தலாம். டி.ஐ.ஆர்.-ல் எவ்வளவோ செக்ஷன்ஸ் உள்ளன. பலயிடங்களில் மத்திய அரசு அல்லது மாநில அரசு என்று சொல்லப்பட்டிருக்கிறது. சிலயிடங்களில் மத்திய அரசு சொன்னவைகளை மாநில அரசு செய்யவேண்டுமென்று இருக்கிறது. ஆக, மாநில அரசு அப்பேர்ப்பட்ட விஷயங்களில் நடவடிக்கைகள் எடுக்க ஆரம்பித்து இப்படி நடவடிக்கைகள் எடுக்கிறோம் என்று மத்திய அரசுக்குத் தெரிவித்தால் அதை மறுக்கக்கூடிய நிலை வரும் என்றால் அப்போது எல்லோரும் சேர்ந்து, இப்படி ஒரு நிலை எடுத்தோம், மத்திய அரசு இதை மறுக்கிறது என்று சொல்லி இதை மறுக்கக்கூடாது என்று எப்படி அன்று சட்டமன்றம் ஆரம்பித்த போது ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினோமோ அதேமாதிரி ஒரு தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றிட இச்சபையில் அநேகமாக எல்லோரும் தயாராயிருக்கிறார்கள். ஆகவே அதிகாரம் இல்லை என்ற பிரச்னைக்கே இடமில்லையென்பதை வலியுறுத்துவதற்காகத்தான் இப்படிச் சுற்றிவளைத்துச் சொல்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** லாரிகளில் இதுபோன்ற எஸென்ஷியல் கமாடிட்டீஸை ஏற்றிச்செல்லும்போது பறிமுதல் செய்வதற்கு வேறு மாநிலங்களில் சட்டம் நிறைவேற்றுகிறபோது

நம் மாநிலத்திலும் நிறைவேற்றி அதற்கு மத்திய அரசு அனுமதி பெற்றிருக்கலாமே என்று பேசிக்கொண்டிருக்கிறார்கள். நான் அவர்களின் கவனத்திற்கு ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன். இந்த அரசு ஏறத்தாழ ஒரு ஆண்டுக்கு முன்பு லாரிகளை பறிமுதல் செய்கிற அதிகாரம் வேண்டுமென்று மத்திய அரசுக்கு எழுதியும், தொடர்ந்து நாங்கள் அதுபற்றி பல முறையீடுகள் அனுப்பியும் ' It is under consideration ' என்ற பதில் வந்து கொண்டிருக்கிறதே தவிர இன்னும் அனுமதி கிடைக்கவில்லை.

*திரு. கே. டி. கே. தங்கமணி:* நான் தெரிவிப்பது என்னவென்றால்,

Section 7A says—

'7A. *Forfeiture of certain property used in the commission of the offence.*—Whenever any offence relating to Foodstuffs which is punishable under Section 7 has been committed, the court shall direct that all the packages, coverings or receptacles in which any property liable to be forfeited under the said section is found and all the animals, vehicles, vessels or other conveyances used in carrying the said property shall be forfeited to the Government.'

The Punjab Act of 1959 was passed on 27th August 1959. இதை 'ரெஃபர்' செய்து கொள்ளலாம்.

(அமைச்சர் அவர்கள் வேறொரு இருக்கையிலிருந்து பேச எழுந்தார்.)

*மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பெ. சௌந்தரபாண்டியன்):* எந்த ஒரு உறுப்பினரும் அவருடைய இருக்கையில் இருந்துதான் பேச வேண்டுமென்பது நம் மரபு. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவர்களுடைய இருக்கையிலிருந்துதான் பேச வேண்டும்.

*மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:* (தமது இருக்கையில் நின்றவாறு) அதைத்தான் நானும் சொல்கிறேன். பஞ்சாப் மாநிலத்திற்கு அனுமதி அளித்த மத்திய அரசு தமிழக அரசு கேட்டபோது கொடுக்கவில்லை என்றுதான் நான் தெரிவித்தேன்.

*திரு. கே. டி. கே. தங்கமணி:* சட்டப் பிரச்னையைத்தான் நான் சொல்கிறேன். உங்களுக்கு சிரமம் இல்லாமல் இருக்கவேண்டும் என்பதற்காகத்தான் ஒரு ப்ரைவேட் மெம்பர் தீர்மானம்





கொடுத்திருக்கிறேன். இது அநேகமாக இந்த செஷனில் வரும் என்று நினைக்கிறேன். அதை நிறைவேற்றலாமே. ப்ரைவேட் மெம்பர் பில் என்று வரும்போது பஞ்சாபில் இம்மாதிரி திருத்தம் கொண்டுவந்திருக்கிறார்கள் என்று சொல்லும்போது அதை அப்படியே கொடுத்திருக்கிறேன். அதை நாம் இங்கும் நிறைவேற்றலாம். அப்படி நிறைவேற்றிவிட்டால் அது அந்தச் சட்டத்தில் இடம் பெறத்தான் செய்யுமே தவிர இடம் பெறாமல் போகாது. பிறகு கன்கரன்ஸ் வேண்டுமென்று சொல்வோம், பிறகு பார்த்துக் கொள்ளலாம். லா டிப்பார்ட்மெண்ட் இதைப் பற்றி யோசிக்கலாம். இது ஒரு பொலிடிகல் இஷ்யூ. இதுமாதிரி வேறு பல திருத்தங்களையும் கொண்டுவரலாம். இந்தச் சட்டத்திலேயே வேறு பல திருத்தங்களைக் கொண்டுவரலாம். அதற்கு வசதி வாய்ப்பு இருக்கிறது.

அடுத்தபடியாக, அத்தியாவசியப் பொருள்கள் என்று வருகிறபோது டி.ஐ.ஆர்.-இல் உள்ள சில பிரிவுகளை மட்டும், அதன் நம்பர்களை மட்டும் சொல்லி நிறுத்திக்கொள்கிறேன். டி.ஐ.ஆர். பூராவையும் வாசிக்கவேண்டுமென்று விரும்பவில்லை. ரூல்ஸ் 125 (2), 107, 113, 114, 116. இவைகள் எல்லாம் எஸென்ஷியல் ஆர்டிகிள்ஸ் சம்பந்தமாகவும், கொண்டுபோகக் கூடிய கன்வேயன்ஸ் சம்பந்தமாகவும், விலை நிச்சயம் செய்வது சம்பந்தமாகவும் இருக்கக் கூடியவை. இந்த டிபன்ஸ் ஆப் இன்டியா ரூல்ஸ், எஸென்ஷியல் கம்மாடிட்டீஸ் ஆக்டைப் பயன்படுத்திக்கொண்டு மகாராஷ்டிரத்தில் சர்க்கார் 22 பொருள்களுக்கு விலை நிர்ணயம் செய்து இருக்கிறார்கள். இந்த நிர்ணயம் செய்த விலைக்கு அதிகமாக விற்றால் அவர்கள் குற்றம் செய்தவர்கள் என்று தண்டித்திருக்கிறார்கள். அதே மாதிரி கேரளாவில் 9 சாமான்களுக்கு இதே முறையில் விலை நிச்சயம் செய்து அதை அமல் நடத்தியிருக்கிறார்கள். சமீபகாலத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியை உதாரணமாகக் கூட கூற முடியும். தேங்காய் எண்ணெய் விலையை ரூ. 7.50 என்று நிச்சயித்தார்கள். வியாபாரிகள் நாங்கள் அதை ஏற்றுக் கொள்ள மாட்டோம் என்று சொல்லி ஸ்ட்ரைக் செய்தார்கள். அதற்குப் பிறகு இப்போது ரூ. 7.50-க்கு விற்பது என்றே ஒப்புக்கொண்டுள்ளதாகப் பத்திரிக்கையில் படித்தேன். பத்திரிக்கையில் வந்த செய்தியை வைத்துத்தான் நான் இதைச் சொல்கிறேன். அங்கேயிருக்கிற அமைச்சர்கள் யாரையும் சந்தித்துப்பேசி இது குறித்து

மத்திய சர்க்கார் இதற்கும் முரண்பாடு இல்லை என்று தெள்ளத் தெளிவாகச் சொன்னார்கள். உ.பி.-யில் பல உத்தரவுகளைப் போட்டு இருக்கிறார்கள். கரும்பு சம்பந்தமாகவும், சீனி சம்பந்தமாகவும் போட்டு இருக்கிறோம். கரும்பிலிருந்து தானே சீனி எடுக்கிறோம். கரும்பின் விலைக்கும், சீனியின் விலைக்கும் இணைப்பு இருக்க வேண்டும். உ.பி.-யில் அதிகமாக விலை இருக்கிறது. இதை விவசாயிகள் கிளப்பினார்கள். அப்படி வருகிறபோது மத்திய சர்க்கார் குறைந்த பட்சம் இவ்வளவு விற்கவேண்டும், ஒரு டன் கரும்பு இன்ன விலையென்றால் அதற்குக் குறைந்து வாங்க கூடாது என்று உத்தரவு போட்டார்கள். சென்ற ஆண்டு ரூ. 85 என்று நினைக்கிறேன். பொதுவாக இங்கே 85 என்று சொல்கிற நேரத்திலே கேரளத்திலே அதிகமாக விலைக்குக் கொடுக்கிறார்கள். நம்முடைய தமிழ்நாட்டிலே கோயம்புத்தூர் ஜில்லாவிற்குப் போனால் ஒரு பக்கத்திலே 85 ரூபாயும், மற்றொரு பக்கத்திலே—கேரளத்திற்குச் செல்லுகிறது—அங்கே ரூ. 115 கொடுக்கிறார்கள். இப்படி இருக்கிறபோது ஏன் தமிழக சர்க்கார் அந்த விலை கொடுக்கக்கூடாது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நாமே ரூ. 110 விலை கொடுத்து இருக்கிறோம். நீங்கள் சொல்வது கேரளத்திற்கும், நமக்கும் உள்ள பிரச்னை. நம்முடைய கோயம்புத்தூரின் ஒரு பகுதியை கேரளத்திற்கு என்று ஒதுக்கியிருக்கிறோம். அந்த இடத்தில் கரும்பு தயாரித்து அதை எடுத்துக்கொண்டு போகலாம் என்று கண்டிஷன் போட்டுக் கொடுத்து இருக்கிறோம். அவர்கள் கரும்பு உற்பத்தி செய்யவில்லை. ஆகவே, நம்முடைய அரசாங்கமே அதை எடுத்துக்கொள்ளலாம் என்று இருக்கிறது. நம்முடைய பொருளாதாரமே இதனால் பாதிக்கும் நிலைமை இருக்கிறது. இருந்தாலும் கேரள அமைச்சர் வேண்டுகோளுக்கிணங்க இந்த ஆண்டு மட்டும் விதி விலக்குக் கொடுத்து இருக்கிறோம். அதற்குப் பிறகு நாமே நம்முடைய கூட்டுறவு ஆலைக்கு அதை எடுத்துக் கொள்ளலாம்.

திரு. கே. டி. கே. தங்கமணி: நான் சொல்கிற இடம் எது என்பதை அமைச்சர் அவர்கள் புரிந்து கொண்டிருப்பார்கள் என்று நம்புகிறேன். சித்தூர் பகுதியில் இருக்கிறது. அமரா





வதியில் 110 கொடுக்கிறார்கள். நான் கேள்விப்பட்ட விவரத்தைத் தான் சொல்கிறேன். தவறு இருந்தால் திருத்திக்கொள்ளத் தயார்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நம்முடைய கூட்டுறவு ஆலையில் 110 கொடுத்து இருக்கிறோம். நாமே அவர்களுக்கு ஒரு இடத்தை அலாட் செய்துகொடுத்து, அந்தப் பகுதியில் விளையும் கரும்பை எடுத்துச் செல்லுங்கள் என்று சொன்னோம். ஒரு சுமுகமான உறவு ஏற்படவேண்டுமென்பதற்காக கேரள அமைச்சரின் வேண்டுகோளின்படி இந்த ஆண்டு கொடுத்து இருக்கிறோம். அதை அப்படியே கொடுத்து விட்டால் எதிர் காலத்தில் அங்கேயுள்ள கூட்டுறவு ஆலை அங்கே செயல்பட முடியாது.

திரு. கே. டி. கே. தங்கமணி: குறிப்பாக இதைப் பொறுத்த வரையில் I am on much stronger grounds. கூட்டுறவு ஆலைக்கு லாபம் இருக்கிறதா என்று பாருங்கள். நான்கு, ஐந்து ஆண்டுகளுக்கு முன்பாக நஷ்டம் இருந்தது. இப்பொழுது கூட்டுறவு ஆலைகளுக்கு லாபம் தான் இருந்துகொண்டு வருகிறது. சாதாரணமாக ஒரு டன் கரும்பில் கிட்டத்தட்ட ஒரு குவிண்டால் சீனி கிடைப்பதாக வைத்துக் கொள்ளலாம், ஆவரேஜாக வைத்துக் கொள்ளலாம். ப்ரொடக்ஷன் காஸ்டு என்ன? ரூ. 125 ஒரு டன்னுக்கு என்று வைத்துக்கொள்ளுங்கள். அவர்கள் கட்டவேண்டிய மத்திய வரி, மாநில வரி ரூ. 45-க்கு மேல் இல்லை. எல்லாவற்றையும் சேர்த்துப் பார்த்தால் ரூ. 150, 160-க்கு மேல் போகாது. ரூ. 175, 180-க்கு நாம் விற்கிறோம் கண்ட்ரோல் விலையிலேயே. ஆனால் நிலைமை என்ன? பெரும் பகுதி சீனி ரூ. 300, 350-க்குப் போகிறது. உண்மையிலேயே நாம் தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய கரும்பு விவசாயிகளுக்கு பெரிய அளவுக்கு உதவி செய்ய முடியும். நாம் அதற்கு ஒரு வரி [illegible] மகாராஷ்டிரா, கேரளா, உத்திரப் பிரதேசம் ஆகிய இடங்களில் இருக்கக்கூடிய விவசாயிகளுக்கு, [illegible] இருக்கக்கூடிய விவசாயிகளுக்கு அதிகமாக விலை கொடுக்கிறபோது நாம் ஏன் கொடுக்கவில்லை?

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்): மாநில அரசுக்கு உரிமைகள் இருந்த சமயத்தில் மாநில அரசு இது சம்பந்தமாக முடிவு எடுப்பதற்கு சாத்தியமாக இருந்தது. ஆனால் கரும்பு

[திரு. வி. கிருஷ்ணமூர்த்தி] [1973 நவம்பர் 22

விலை நிர்ணயம் செய்வது, அதே சமயத்தில் சர்க்கரை விலை நிர்ணயம் செய்வது இவற்றிற்கான உரிமைகளை மத்திய சர்க்காரில் 1949-ல் எடுத்துக்கொண்டு விட்டார்கள். அப்படி எடுத்துக் கொண்டதற்குப் பிறகு 1950-லிருந்து இந்த சிக்கல் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, மாநில சர்க்காருக்கே இந்த உரிமை இருக்க வேண்டும் என்று கனம் அங்கத்தினர் அவர்களும் பாராளுமன்றத்தில் இருக்கும் அவர்களின் கட்சியினரும் வற்புறுத்துவார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சொன்ன பிறகு தைரியம் வருகிறது. அந்தக் கருத்தை விளக்கிச் சொல்கிறேன். திரு. ஏ. எம். இராஜா அவர்களோடு கூட அதைப் பற்றி விவாதித்தோம். திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் எடுத்துக் காட்டியது போல, அது தான் உண்மையிலேயே சிக்கல். 70 சதவீதம் அவர்கள் லெவி என்று சொல்லிவிடுகிறார்கள். 30 சதவீதம் ஃப்ரீ மார்கெட் என்று சொல்லிவிடுகிறார்கள். விலை நிர்ணயம் செய்யும் அதிகாரம் மத்திய சர்க்காரிடத்தில் இருக்கிறது. அதன் விளைவாகத்தான் அதிலே ஏற்படுகின்ற நஷ்டத்தை, அல்லது லாபக் குறைவை 30 சதவிகிதத்தில் கொள்ளை அடிக்கின்ற வாய்ப்பு இருக்கிறது. இதைத்தான் நம்முடைய முதல் அமைச்சர் அவர்களும் நானும் மத்திய உணவு அமைச்சரிடத்தில் வாதாடினோம். 'ஏன் இந்த நிலைமை இருக்கிறது, மாநிலத்திடமே இந்த அதிகாரத்தை ஒப்படைத்துவிடுங்கள். விவசாயிகளுக்கும் அதிகமாக கரும்புக்கு விலை வாங்கிக்கொடுப்போம். அதிக விலை இல்லாமல் சர்க்கரை விலையையும் நிர்ணயிப்போம்' என்ற வாதத்தை வைத்தோம். ஆனால் அவர்கள் எங்களுக்குத் தந்த பதில் வாதம்

'This is an All-India Policy; I cannot interfere'

திரு. கே. டி. கே. தங்கமணி: கரும்பைப்பற்றியும், சீனியைப் பற்றியும் சொன்னதினாலே, நான் அதைப்பற்றி கொஞ்சம் அதிகமாக விவரங்களைச் சேகரித்து ஓரளவுக்கு வைத்திருக்கிறேன் என்ற முறையில் நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம், அமராவதியை எடுத்துக்கொள்ளுங்கள். 1969-ம் வருஷம் சுமார் ரூ. 69 லட்சம் கடன் . . .

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்): நான் சொன்ன கருத்தை ஒட்டி கம்யூனிஸ்டு கட்சியின் அபிப்பிராயம் என்ன . . .



1973 நவம்பர் 22]

திரு. கே. டி. கே. தங்கமணி: கரும்புக்கு ரூ. 130 விலை கொடுக்கப் பட்டது. மத்திய சர்க்கார் சொல்லவில்லை.

They have only fixed the minimum; when the minimum is fixed like that, today in U.P. they are gett:ng Rs. 130, in Maharashtra Rs. 123 and in Kerala Rs. 110.

என்னுடைய பாயின்டு என்னவென்றால், கரும்பு உற்பத்தி செய்யக் கூடிய விவசாயிகளுக்கு நீங்கள் நியாயம் வழங்கவில்லை என்பது தான். இந்த ஸப்ஜெட்டுக்கு அப்பாற்பட்டு இருந்தால்கூட கரும்பைப்பற்றி, சீனியைப் பற்றி எஸென்ஷியல் கமாடிட்டிஸ் ஆக்டில் பிரதானமாக வருகிறது என்ற காரணத்தினால் அதை விளக்கிச் சொன்னேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்): இது மாநில சர்க்காருக்கு இருக்கக்கூடிய ரெஸ்பான்சிபிலிடி இல்லை என்பதைச் சொல்லி, அதைச் செய்யவில்லை என்று சொன்னால் நலமாக இருக்கும். ரெஸ்பான்சிபிலிடி மத்திய சர்க்காரிடம் இருந்து வருகிறது. மாநில சர்க்காருக்கு அதை வாங்கித் தரவேண்டும் என்ற எண்ணம் இருந்தால், அதைச் செயல்படுத்தும் அதிகாரம் மாநில சர்க்காருக்கு இல்லை. அந்த அதிகாரத்தை வாங்கிக் கொடுப்பதற்கு, கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் அவர்களின் கருத்து என்ன? அதைப்பற்றி அவர் கட்சி உறுப்பினர்களைக் கொண்டு பாராளு மன்றத்தில் சொல்வார்களா? ஏனென்றால் சிபார்சு, ரெகமென்டேஷன் வேறு, ஆனால் இப்படித்தான் கொடுக்கவேண்டும் என்று வற்புறுத்துவது வேறு. அந்த அதிகாரத்தை மாநில அரசுக்குப் பெற்றுத் தருவதுபற்றி தங்களுடைய கருத்து என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அரசியல் ரீதியில் வாதாடுவதில் ஆட்சேபனை இல்லை. உண்மையிலேயே கரும்பு உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு நன்மை செய்யவேண்டும், சர்க்கரையையும் அதிக விலையில் விற்கக்கூடாது என்ற நோக்கத்தை வைத்துக்கொண்டு இருந்தாலும் நம்முடைய மாநில அரசு மட்டும் இதைச் செய்ய முடியவில்லை. கூட்டுறவு ஆலையில் பார்த்தோம். காஸ்டு ஆஃப் ப்ரொடக்ஷன் என்னவென்று போட்டுப் பார்த்தோம். 70 சதவீதத்தில் ஏற்படுகிற நஷ்டத்தையோ அல்லது லாபக் குறைவையோ 30 சதவீதம் உள்ள சர்க்கரையில் ஈடுகட்டி அதிக விலை பெறக்கூடிய வாய்ப்பு கொடுப்பது நியாயம் இல்லை. 'ஆன் தெட்'

பேஸிஸ்' அதைக் கொடுக்காதீர்கள். ஆகவே, 100 சதவீதம் உற்பத்தியையும் மாநில சர்க்காரிடம் ஒப்படைத்து, அதற்கு வேண்டிய கரும்பு விலையை நிர்ணயிக்கக்கூடிய அதிகாரத்தையும், சர்க்கரை விலையை நிர்ணயிக்கக்கூடிய அதிகாரத்தையும் மாநில சர்க்காருக்கே கொடுங்கள் என்று நாங்கள் கேட்டோம். இப்பொழுது இருக்கிற விதிகளை வைத்துக்கொண்டே நாங்கள் நன்மை செய்கிறோம். சென்ற ஆண்டு சொன்னோம். மத்திய சர்க்கார் ஒரு உத்தரவு போட்டிருக்கிறது. 90 ரூபாய்க்குக் குறைவாக யாருக்கும் கொடுக்கக்கூடாது என்று உத்தரவு போட்டிருக்கிறது. மத்திய சர்க்கார் என்ன விலை நிர்ணயித்தார்களோ, அதைவிட ரூ. 5 கூட கொடுக்கவேண்டும் என்று நாங்கள் ஒரு உத்தரவு போட்டோம். அதைக் கஷ்டப்பட்டு நிறைவேற்றினோம். இந்த ஆண்டு ரொம்பக் குறைத்துவிட்டார்கள். குறைத்துவிட்டாலும், சென்ற ஆண்டு மத்திய அரசு நிர்ணயித்த விலையைவிட ரூ. 5 கூட கொடுக்கவேண்டும், ப்ரொடக்ஷன் ஸீஸனில் எல்லோரும் உட்கார்ந்து பேசி லாபம் வந்தால் லாபத்தில் பங்காக ஒரு இன்செண்டிவ் விலை கொடுக்க வேண்டும் என்று முடிவு எடுத்திருக்கிறோம். அதை நிறைவேற்றி வருகிறோம். உண்மையிலேயே சிக்கல் என்னவென்றால் அகில இந்தியக் கொள்கை என்று சொல்லி மத்திய அரசு எடுத்த முடிவு தான். மத்திய அரசை ஒப்புக்கொள்ளும்படி திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் செய்தால், நிச்சயம் தமிழ்நாட்டு விவசாயிகளுக்கு நன்மை செய்யலாம்.

திருமதி த. ந. அனந்தநாயகி: ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தாராளமாக ரூ. 5 கூட வைத்து ரூ. 90 பிக்ஸ் செய்திருக்கிறோம் என்று சொன்னார்கள். தமிழ்நாட்டில் சில ஆலைகளில் ரூ. 110 கொடுக்கப்படுகிறது. சில ஆலைகளில் ரூ. 90 கொடுக்கப்படுகிறது. இந்த வேறுபாட்டிற்கு அவசியம் என்ன? பிற மாநிலங்களில் ரூ. 120, 130, 140 கொடுக்கும்பொழுது, தமிழக அரசு மாத்திரம் தாராளமாக நடந்துகொள்ளாமல், பொறுப்பை மத்திய அரசுக்குக் காட்டிவிட்டு ஏன் தப்பித்துக்கொள்ள முயற்சிக்கவேண்டும்? இவர்கள் கையில் இருக்கக்கூடிய அதிகாரத்தை இவர்கள் ஏன் பிரயோகிக்கக்கூடாது? மத்திய சர்க்கார் மினிமம்தான் பிக்ஸ் செய்திருக்கிறார்கள். இவ்வளவுக்குக் குறையாமல் கொடுக்கவேண்டும்



என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கு மேல் ரூ. 130, 140 என்று பிற மாநிலங்களில் கொடுக்கும்பொழுது ஏன் இந்த மாநில சர்க்கார் தாராளமாக கொடுக்கக்கூடாது என்று நான் கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: மத்திய சர்க்கார் ஆலைகளுக்கு விலை நிர்ணயிக்கிறார்கள் என்று அவர்கள் நினைக்கிறார்கள். ஆலைகளுக்கு விலை நிர்ணயிக்கவில்லை. ஆலைகள் உற்பத்தி செய்யும் சர்க்கரைக்கும், அதற்குத் தரப்படுகிற கரும்புக்கும், ஷுகர் ரெகவரி டன்னுக்கு எவ்வளவு என்று அந்த பேசிசில் கொடுக்கிறார்கள். சில ஆலைகளில் ரெகவரி கூடுதலாக இருக்கலாம், ஆகவே கூடுதலாகக் கொடுக்கலாம். கூட்டுறவு ஆலையைப் பொறுத்தவரையில் ஆம்பூரில் ரூ. 110 கொடுக்கப்படுகிறது. சர்க்கரை, கரும்பு விலையை இணைக்கின்ற அதிகாரம் நமக்கு வேண்டும். அதைத்தான் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சொன்னார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி: அரசு ஏன் கொஞ்சம் தாராளமாக நடந்துகொள்ளக்கூடாது என்று கேட்டால், எதை எதையோ பேசுகிறார்கள், முடியாததைப் பேசுகிறார்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி: நான் அமைச்சர் அவர்கள் இங்கே கொடுத்த விவரம், வெளியே கொடுத்த விவரத்தை வைத்தே, அமைச்சர் அவர்கள் சொல்லக் கூடிய வாதம் எப்படித் தவறானது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அவர்கள் இங்கே கொடுத்த விவரம்தான். தமிழகத்தில் 3 லட்சம் டன் சர்க்கரை வருஷத்திற்கு உற்பத்தியாகிறது. 3¼ லட்சம், இப்பொழுது 3½ லட்சம் டன் கூட இருக்கலாம். 3 லட்சம் டன்னுக்குக் குறையவில்லை. அதாவது 30 லட்சம் டன் கரும்பாவது அதற்குப் பயன்படுத்த வேண்டும் அல்லது 35 லட்சம் டன்னாகக்கூட இருக்கலாம். ஆக, ஒரு மாதத்திற்கு 25,000 டன். ஆக, ஒரு மாதத்திற்கு 25,000 டன் நம்முடைய கையில் இருக்கிறது. தமிழ்நாட்டின் தேவை என்ன? இதே மன்றத்தில் சொல்லப்பட்டது. 12,500 டன். நாம் உற்பத்தி செய்வது 25,000 டன். ஆனால் மத்திய சர்க்கார் இந்த வருஷம் எவ்வளவு ஒதுக்கியிருக்கிறது என்பது எனக்குத் தெரியாது. 12,500 டன் மாதத் தேவை. இதே சட்டமன்றத்தில் கொடுத்த விவரத்தை வைத்துத் தான் சொல்கிறேன். நாம் உற்பத்தி பண்ணுவதிலே பாதிதான் நமக்குத் தேவை. பொதுவாக

அவர்கள் நமக்கு பாதி கொடுக்கவில்லை. அதற்குப் பதிலாக 70 சதவீதம் கொடுக்கிறார்கள். அதாவது லெவி ஷுகர் 10,000 டன். 10,000 டன் ஷுகர் கையிலே கொடுத்துவிட்டு, தாங்கள் நிச்சயித்த விலையிலே விற்கவேண்டும் என்று சொல்கிறார்கள்—சீனி விலை சென்ற ஆண்டு 2.00, இந்த ஆண்டு 2.15. மீதியிருக்கக் கூடிய 15,000 டன். மத்திய சர்க்கார் கொஞ்சம் எடுத்துக்கொள்கிறார்கள். 8,000 டன் எடுத்துக்கொள்கிறார்கள். மீதி இருக்கக் கூடியதை இவர்கள் இஷ்டம்போல் விற்கலாம். பாக்டரி வைத்திருப்பவர்கள் கையில் 5,000, 6,000 டன் இருக்கிறது. என்னுடைய பாயின்டு என்னவென்றால், 12,500 டன் நமக்குத் தேவையாக இருக்கிறபொழுது, தமிழ்நாட்டில் இருப்பது அதற்கு மேலே அதிகமாக இருக்கிறது. ஆகவே, நமக்குக் கிடைத்த 10,000 டன்னையும் ஒழுங்காக விநியோகம் செய்து, மிச்சம் இருக்கக் கூடிய 5,000, 6,000 டன் அவர்கள் வைத்திருக்கிறார்களே அதையும் வாங்கி விநியோகியுங்கள். ஆகவே, பற்றாக்குறைக்கு இடம் கிடையாது.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இதிலே என்னுடைய வாதம் எப்படி தவறு என்று என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. 3½ லட்சம் உற்பத்தி. 17 ஆயிரம் தேவை. இரண்டு மடங்கு உற்பத்தி செய்தாலும், விநியோக உரிமை நமக்கு இல்லாததால் தவறு நடக்கிறது. எப்படி தவறு நடக்கிறது என்பதற்கு விளக்கம் சொன்னேன். மத்திய அரசு மொத்தத்தில் 70 சதவிகிதம் எடுத்துக்கொண்டு, மீதமுள்ள 30 சதவிகிதத்தை ஆலை முதலாளிகள் என்ன விலைக்கு வேண்டுமானாலும் விற்கலாம் என்று ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அதைத் தான் சொன்னேன். இது எப்படி தவறாகும்?

**திரு. கே. டி. கே. தங்கமணி:** இப்போது நமக்கு 10,000 டன் தருகிறார்கள். நமக்குத் தேவைப்படுவது 12,500 டன். அவர்கள் கொடுப்பதுபோக மீதித் தேவை 2,500 டன்தான். இந்த 2,500 டன்னை முதலாளிகளிடம் இருந்து பெற்றுக்கொண்டால் மீதமுள்ள சுமார் 7,000 டன்னை அவர்கள் விற்றுக்கொள்ளட்டுமே. 12,500 டன் நமக்கு கிடைத்தால் எல்லோருக்கும் நியாய விலையில் சர்க்கரை





விநியோகம் செய்யலாமே. இந்தச் சிறு குறைபாட்டினால் இரண்டு மடங்கு, 3 மடங்கு அதிகமாக விற்கப்படுகிறது. இது விநியோகத்தில் உள்ள குறைபாடு என்றுதான் நான் சொல்வேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இந்தப் பிரச்சினைப் பற்றியும் முதலமைச்சர் உணவு அமைச்சருடன் பேசினார்கள். 2¼ ரூபாய்க்கு விற்கவேண்டுமென்று சொல்கிறோம். அவர்கள் 4 ரூபாய்க்கு விற்கிறார்கள். இரண்டு மடங்கு அதிகமாக விற்கிறார்கள். ஆகையால்தான் குறை ஏற்படுகிறது என்று சொன்னார்கள். மத்திய அரசாங்கத்தின் நடைமுறைதான் இதற்குக் காரணம். அதனால்தான் அவர்கள் இது 'ஆல் இந்தியா பாலிஸி' என்று சொன்னார்கள்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** 100 சதவிகிதத்தையுமே பெற வேண்டும் என்பதுதான் எங்கள் கொள்கை. நாடாளுமன்றத்திலும் அதைத்தான் சொல்கிறோம். 70 சதவிகிதத்தையும் உங்களிடம் கொடுத்தாலும் உங்களால் சரியாக விநியோகம் செய்ய முடியாது. ஏனென்றால் இப்போது கிடைப்பதையே சரியாக விநியோகிக்காததால் கூட சில குறைபாடுகள் ஏற்படுகின்றன. எல்லா சர்க்கரையையும் உங்களிடமே கொடுத்துவிட்டால், பின் உங்களுக்குத் தேவைப்படும் 15,000 டன் கோதுமை கிடைக்காமல் போய்விடும். மற்ற மாநிலங்களிலிருந்து கோதுமையும் கோதுமைப் பொருட்களும் நமக்கு கிடைக்கின்றன. அவர்களுக்குத் தேவைப்படும் சீனியை இங்கிருந்து பெற்றுக் கொள்கிறார்கள். ஆக, 15,000 டன் கோதுமைப் பொருட்கள் நமக்கு வரவேண்டும்; அதோடு நமக்குத் தேவையான 12,500 டன் சீனியும் கிடைக்கவேண்டும். இதிலே எங்களுக்கு கருத்து வேறுபாடு கிடையாது.

ஆனால் இங்கே தனிப்பட்ட முதலாளிகள் செய்யும் கொள்ளை லாபத்தினால்—உங்களுடைய விநியோகம் சரியில்லாததினால் விலைவாசி ஏறிவிடுகிறது; இரண்டு மடங்குக்குமேல் ஏறிவிடுகிறது.

(பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

பூரா சீனியையும் கொடுத்தாலும் இதே நிலைமைதான் இங்கே ஏற்படும் இப்போது இருக்கின்ற நிலவரப்படி. 70-30 என்றாலும் அல்லது 80-20 என்றாலும் இதே நிலைமைதான். இதற்குக்

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1973 நவம்பர் 22

காரணம் இங்கே இருக்கக் கூடிய Distributing machinery is very, very defective என்பதை நான் அழுத்தித்தான் சொல்லவேண்டும்; விபரம் வேண்டுமென்றால் பல மாவட்டங்களில் நடைபெறும் விஷயங்களை நான் சொல்லமுடியும். சில இடங்களில் கோளாறு ஏற்படுகிறது. உதாரணமாக, கோவில்பட்டியில் நடைபெற்ற ஒரு சம்பவத்தைக் குறிப்பிடுகிறேன். அங்கே இரண்டு வார்டுகளுக்கு 33 மூட்டை சீனி ஒதுக்கியிருக்கிறார்கள். எல்லாக் கார்டுகளுக்கும் சீனி கொடுத்த பின்னாலும் மீதம் 20 மூட்டை, இருந்தது. இந்த 20 மூட்டை எங்கே போகிறது என்று தெரியவில்லை; எங்கோ போகிறது. அதனால்தான் விநியோக முறையே சரியில்லை என்று சொல்கிறேன்.

மதுரையில் ஒரு கடையில் 15,000 மூட்டை சீனி வைத்திருக்கிறார்கள் என்று சொன்னோம். 15,000 மூட்டை என்பது தப்பு, 25,000 மூட்டை வைத்திருக்கிறோம் என்று அவர்கள் சொன்னார்கள். ஓப்பன் மார்க்கெட்டில் வாங்கியது என்று சொன்னார்கள். 25,000 மூட்டைகளில் 10,000 ஓப்பன் மார்க்கெட், 15,000 லெவி என்கிறார்கள். இப்படிப்பட்ட குறைபாடுகள் இருக்கின்றன. நான் இதைச் சொல்வதற்கு காரணம் நிலைமை உங்களுக்குத் தெரிய வேண்டும் என்பதற்குதான். இதை வைத்துக்கொண்டு I do not want to gain a point. இந்த விநியோக முறையை இன்னும் கொஞ்சம் 'டோனிங் அப்' செய்ய வேண்டும்.

இப்போது சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் இருக்கிறது. அதனுடைய வேலைத் திட்டங்கள் இப்போது பரவாயில்லை. ஆறு மாத காலத்தில் ஒரு மாறுதல் ஏற்பட்டிருக்கிறது. அது போதாது. தேவையான சீனி கையில் இருக்கிறபோது, சென்னையிலே கூட, எல்லோருக்கும் கிடைக்காமல் இருக்கக்கூடிய நிலைமை மாற வேண்டும். அதற்கு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மிக மிகப் பொறுப்பு வாய்ந்ததாக இருக்கிறது. அதை உணர்ந்து இந்த கார்ப்பரேஷன் செயல்பட வேண்டும். தவறு செய்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். அதற்கு 'எசன்ஷியல் கமாடிட்டிஸ் ஆக்ட்' இருக்கிறது. அதை வைத்து தவறு செய்பவர்களைக் கண்டுபிடித்து, கைது செய்து, கடுமையாக தண்டிக்கவேண்டும். அதிக விலைக்கு சீனியை யார் விற்றாலும் அவர்கள் மீது தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும். சென்ற



1973 நவம்பர் 22] [திரு. கே. டி. கே. தங்கமணி]

சட்டமன்றத் தொடரில் கூட நான் கோதுமை, கோதுமைப் பொருள்கள் பற்றிப் பேசும்போது இந்த விஷயத்தைக் குறிப்பிட்டிருக்கிறேன். நமக்கு மத்திய அரசாங்கம் 15 அல்லது 16 ஆயிரம் டன் தருகிறது. விலையையும் அவர்களே நிர்ணயம் செய்கிறார்கள். ஒரு குவிண்டால் மைதா 107 ரூபாய்க்கு மேல் விற்கக்கூடாது என்று சொன்னார்கள். நாம் என்ன செய்தோம்? அந்த மைதாவை ஒரு ரூபாய், 2 ரூபாய் கமிஷன் வைத்து விற்கலாம் என்று முதலாளிகளிடம் கொடுத்தோம். 110 ரூபாய் என்று சொன்னார்கள். பின்னால் 120 என்று சொன்னார்கள். இப்போது 120 ரூபாய் கொடுத்தாலும் கிடைக்கவில்லை. ஆனால் 250 ரூபாய் என்றால் எவ்வளவு வேண்டுமானாலும் கிடைக்கிறது. பக்கத்திலே இருக்கிற ப்ராட்வே கடையிலே போய்ப் பார்த்தால் கூட இந்த விஷயம் தெரியும். குறிப்பிட்ட விலைக்கு மைதா, ரவை எதுவும் கிடைப்பதில்லை. நம்முடைய மாநிலத்திற்கு 15,000 டன் கொடுக்கிறார்கள். முறையாக விநியோகம் செய்யுங்கள். போதாது என்றால் போதுமான அளவு பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

நான் சொல்வதெல்லாம் விநியோகம் சரியாக இருக்கவேண்டுமென்பதுதான். அதிக விலைக்கு விற்பவர்கள், பதுக்கி வைப்பவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். தயக்கம் காட்டக்கூடாது. சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் இந்த விஷயத்தில் தீவிர நடவடிக்கை எடுக்கவேண்டும். அத்தியாவசியமாகத் தேவைப்படும் பொருட்களான சீனி, கோதுமை, ரவை, மைதா, இதர முக்கிய உணவுப்பொருட்கள் பற்றி விசாரித்துத் தீவிர நடவடிக்கை எடுக்கவேண்டும். பருப்பு வகைகளைப்பற்றிக் கூட அவர்கள் கேட்பதற்கு அதிகாரம் இருக்கிறது. ஒரு குறிப்பிட்ட அளவுக்குமேல் எங்கும் சேமித்து வைக்கக்கூடாது. அப்படி அதிகமாக சேமித்து வைக்கா விட்டால், அவர்கள் பதுக்கி வைத்திருக்கிற மூட்டைகளையும் 'ஸ்டாக்' வைத்திருக்கிறோம் என்று சொல்லிவிடுவார்கள். தேவைக்கு அதிகமாக இருப்பதை ஸ்டாக் என்று சொல்லமுடியாது. சிவில் சப்ளைஸ் கமிஷனர் அதில் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும்.

நானும் ஒரு வியாபாரி வீட்டுப் பிள்ளைதான். கொள்ளை லாபம் அடிப்பதற்காக மூட்டைகளைப் பதுக்கி வைத்திருப்பார்கள். கணக்குக் காட்டுவதற்காக இரண்டு புக் வைத்திருப்

பார்கள். ஆயிரம் முட்டைதான் வைத்துக்கொள்ளலாம் என்றால் அவர்கள் 2,000 முட்டைகளை ஆயிரம் ஆயிரமாக இரண்டு புக்குகளில் எழுதிவைத்துவிட்டு, ஸ்டாக் சரியாகத்தான் இருக்கிறது என்று சொல்லிவிடுவார்கள். இதையெல்லாம் கவனமாக ஆராய்ந்து சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும். புதிதாக இந்த கார்ப்பரேஷனுக்கு வந்திருக்கிற அதிகாரி துரிதமாக நடவடிக்கை எடுப்பதாகச் சொல்கிறார்கள். எங்களுடைய கொள்கை யாரானாலும் சரி, சட்ட விரோதமாக செயல்படுகிறவர்கள் மீது, பதுக்கல் காரர்கள் மீது, பிளாக் மார்க்கெட் காரர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

Such unsocial elements must be dealt with ruthlessly.

இதில் நாங்கள் யாருக்கும் சிபாரிசுக்கு வரவில்லை, அப்படிப் பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதை தவறு என்றும் நாங்கள் சொல்லவில்லை.

அண்மையில் மத்தியப் பிரதேசத்திலே சில நடவடிக்கைகளை எடுத்தார்கள். நான் ஒன்றைச் சொல்லும்போது, இங்கே இருக்கின்ற திருமதி அனந்தநாயகி அவர்கள் கோபித்துக் கொள்ளக் கூடாது. அது ரொம்ப ரொம்ப பிற்போக்கான ஒரு மாநிலம். அங்கே, கூட பதுக்கல்காரர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுத்தார்கள்; துப்பாக்கிப் பிரயோகம் கூட நடைபெற்றிருக்கிறது. 15,000 பேர் அரஸ்ட் செய்யப்பட்டார்கள். இந்த நடவடிக்கையினால் சிலபேர் செத்தார்கள். அப்பேர்ப்பட்ட மாநிலத்தில் கூட 'டிஃபென்ஸ் ஆப் இந்தியா ஆக்ட்டின்' கீழ் இந்த விதமான நடவடிக்கை எடுத்தார்கள். இங்கேயும் அதுமாதிரியான நடவடிக்கை எடுக்கப்பட்டால் நிச்சயமாக விலைவாசிகள் குறையும் என்ற நம்பிக்கை இருக்கிறது. அதற்கு உங்களுக்கு அதிகாரம் இருக்கிறது. பாதுகாப்புச் சட்டம் இருக்கிறது. அவர்களைப் பிடித்துப் போட முடியும். சட்டம் இல்லை என்று சொல்ல முடியாது. அதிகாரம் இல்லை என்று சொல்ல முடியாது. மனம் கொஞ்சம் வேண்டும். சில பேர்களைப் பிடிக்க தைரியம் கொஞ்சம் வேண்டும். ஒரு குறிப்பிட்ட ஆள்—நான் ஏற்கனவே சொன்னேன்—கள்ளக்கடத்தல் கும்பலுக்கே முக்கியமானவர்—கம்பம் சம்பவம் ஏற்பட்டதற்கே முக்கியமான நபர்—அவரைக் கைது செய்ய வேண்டுமென்று உத்தரவு போட்டிருக்கிறார்கள்.



வாரண்டு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. ஆயினும் இன்னும் கைது செய்யப்படவில்லை. நான் ஏற்கெனவே பேசினதை வைத்து இரண்டு மூன்று பேர்களைக் கைது செய்தார்கள். வாஸ்தவம். இவர்கள் கைது செய்யப்பட்டார்களே தவிர அந்த முக்கியமான ஆள் இன்னமும் மதுரையில் நடமாடிக்கொண்டிருக்கிறார், கைது செய்யப்படவில்லை. இதுபோல இல்லாமல் டிடரான்டாக நடவடிக்கை எடுக்கும்போதுதான் மக்களிடத்தில் ஒரு நம்பிக்கை ஏற்படும்.

இன்றைக்கு நான் பற்றாக்குறைக்குள் போக விரும்பவில்லை. எல்லாம் பற்றாக்குறையாக இருக்கிறது. நம் மாநிலத்தில் மட்டும் அல்ல. எங்கும் பற்றாக்குறையாகத்தான் இருக்கிறது. என்றாலும் நமக்குக் கிடைக்கின்றவைகள் ஒழுங்காக விநியோகம் செய்யப்படுகிறதா என்பதுதான் பிரச்சினை.

இன்றைக்கு தமிழ்நாட்டை எடுத்துக்கொள்ளுங்கள். உரம் மிக முக்கியமான பிரச்சினையாகிவிட்டது. முக்கியமான திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் ஒருவரே என்னிடம் தனியாகச் சொன்னார். நீங்கள் போய் சட்டமன்றத்தில் பேசுங்கள் என்றார்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** யார் என்று பெயரைச் சொல்லுங்கள்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** Please don't think I will expose anybody like that. அந்த விஷயம் முக்கியமானதாகையால் அதை நான் சொல்கிறேன். "1966 இல் நமது மாநிலத்தில் உணவுப் பற்றாக்குறை இருந்தது. பிறகு எடுத்த நடவடிக்கைகளின் காரணத்தினால் இன்றைக்கு நம் மாநிலம் சர்ப்ளசாக இருக்கிறது. உரம் கிடைக்காது இந்த வருஷம் போகிற போக்கைப் பார்த்தால் மறுபடியும் பற்றாக்குறை மாநிலமாகவே ஆகிவிடும். அப்படி ஆகிவிட்டால் ஆச்சரியப்படுவதற்கில்லை" என்றார். அது உண்மை. கார்த்திகை மாதம் வந்துவிட்டது. உரம் கிடையாது. போன அமைச்சர் இருந்தபோதுள்ள நிலைமையைக் காட்டிலும், இப்போதுள்ள அமைச்சர் நிர்வாகத்தில் ஒரு மாறுபாடு—உரத்திற்குக் கார்டு கொடுத்திருப்பதுதான். எனக்குத் தெரிந்த ஒருவர் 50 முட்டை உரத்திற்கு கார்டு வைத்திருக்கிறார். ஆனால் உரம் இல்லை. வெளியில் போய் யூரியாவை 115 ரூபாய் கொடுத்து 30

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1973 நவம்பர் 22

மூட்டை வாங்கி வந்தார். எப்படி வெளியே கிடைக்கிறது? சொல்லலாம். மூன்றில் 2 பங்கு தனியாருக்குக் கொடுக்கிற காரணத்தினால் கிடைக்கிறது என்று. முன்பு பஞ்சாயத்துத் தலைவர், யூனியன் தலைவர் கொடுத்தபோதாவது—சண்டைபோட்டால் எப்படியாவது வாங்கிக் கொடுத்து விடுவார்கள். இப்போது அப்படிக் கூட இல்லை. சமீபத்தில் விவசாயிகளைச் சந்தித்துப் பேசியதில் இருந்து 2 மாதகாலமாகவே உரம் இல்லை என்று தெரிகிறது. இது ஒரு முக்கியமான பிரச்சினை. தனிப்பட்ட அமைச்சர் கவனிப்பது என்றில்லாமல்—உர விநியோகத்தைப்பற்றி காபினெட் லெவலிலேயே விவாதித்து சீரான ஒரு விநியோக முறையைக் கொண்டு வந்தாக வேண்டும். இதற்கு ஹை ப்ரையாரிடி கொடுத்தாக வேண்டும்.

நான் பல்லடம் போயிருந்தேன். அங்கே பூராவும் பருத்தியும், புகையிலையும்தான். அங்கே உற்பத்தியாகிற பருத்தி பூராவும் திருப்பூருக்குப் போகிறது. "இந்த நேரத்தில் எங்களுக்கு உரம் கிடைக்காதுபோனால் எல்லாம் தீய்ந்துபோய்விடும்" என்கிறார்கள். பருத்தி, புகையிலை மூலமாக மத்திய சர்க்காருக்கும் சரி, மாநில சர்க்காருக்கும் சரி நிறைய வருமானம் இருக்கிறது. அதை அவர்களே எடுத்துக்காட்டினார்கள். ஆகவே உடனடியாக டாப் ப்ரையாரிடி கொடுத்து பல்லடம் பகுதிக்கு உரம் கிடைக்கச் செய்ய வழி செய்யவேண்டும்.

சமீபத்தில் மதுரை கிழக்கு, மேற்கு ஆகியவற்றின் மாவட்ட அபிவிருத்தி கவுன்சில் கூட்டம் நடந்தது. நான் அதில் உரப் பிரச்சினை சம்பந்தமாக லேசாக எழுப்பினேன். கட்சிப் பாகுபாடு இல்லாமல் எல்லோரும் சேர்ந்துகொண்டுவிட்டார்கள். அப்போது ஆயிரம் டன் உரம் வருகிறதென்று சொன்னார்கள்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** உரத்தைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள். உரம் நமக்குக் கிடைக்க வேண்டிய அளவு கிடைக்கவில்லை. கொடுப்பதாகச் சொன்னதைக் கூட கொடுக்கவில்லை. தமிழ்நாட்டிற்கு 8 ஆயிரம் டன் கப்பலில் வருவதாகச் சொன்னார்கள். கப்பலுக்காகக் காத்துக்கொண்டிருந்தோம். ஆனால் நடுக்கடலிலேயே அந்தக் கப்பலை விசாகப்பட்டினம் துறைமுகத்திற்குத் திருப்பி



1973 நவம்பர் 22] [திரு. ப. உ. சண்முகம்]

விட்டார்கள், உத்தரப் பிரதேசத்திற்கு அனுப்பிவைக்க. உடனடியாக ஆட்சேபித்ததற்கும் இந்தப் பிரதேசத்தைவிட அங்கே மிக முக்கியமாகத் தேவைப்படுகிறது என்று சொல்லிவிட்டார்கள். தற்போது ஒரு கப்பல் நாகப்பட்டினத்திற்கு வந்திருப்பதாகச் சொன்னார்கள். அங்கே போய் உரத்தைப் பார்த்தால் பாதிக்கு மேல் நனைந்து மூட்டை கெட்டிருக்கிறது. இறக்குவதா வேண்டாமா என்று யோசித்துக்கொண்டிருக்கிறோம். மத்திய அரசு தருகிற உரத்தை நமக்கு விநியோகிக்கிற பொறுப்பு இருக்கிறதே தவிர வேறு ஒன்றும் நம்மிடத்தில் இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. கந்தசாமி :** அமைச்சர் அவர்கள் உர சம்பந்தமாக இருக்கிற நிலைமையைத் தெளிவாகச் சொன்னார்கள். இப்போது நாகப்பட்டினத்திற்கு வந்திருக்கிற உரத்தையாவது உடனடியாக எல்லா மாவட்டங்களுக்கும் அனுப்பிவைக்க ஏற்பாடு செய்வார்களா? அதற்கு ஏற்கனவே செய்துகொள்ளப்பட்ட ஒரு அக்ரிமெண்டு இடைஞ்சலாக இருப்பதாக முன்பு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படி ஏதாவது அக்ரிமெண்டு இருந்தாலும் உடனடியாக அதை மாற்றி, அந்த உரத்தை எல்லா மாவட்டங்களுக்கும் உடனடியாக விநியோகிக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** மத்திய சர்க்காரிடம் இருந்து உரம் வரவில்லை என்று சொல்லி உரம் கிடைக்காது திண்டாடுகிறவர்களை நாம் திருப்தி செய்ய முடியாது. கேள்வி நேரத்தில் சொன்னார்கள், 3-இல் ஒரு பங்கு உரம்தான் இருக்கிறது, பாக்கி தனியாருக்கு விநியோகிக்கப்படுகிறது என்றார்கள். இந்த ஒரு பங்கும் கூட அதோடு போய்த்தான் சேர்ந்துவிடுகிறது. உடனடியாக நமது மாநிலத்தைப் பொறுத்தவரை—மெட்ராஸ் பெர்டிலைசர், நெய்வேலி யூரியா பாக்டரி இங்கே உற்பத்தியாகிற உரத்தை ஷா வாலஸ், பாரி கம்பெனிகளுக்குக் கொடுப்பதை நிறுத்த வேண்டும். அப்படி ஒரு உத்தரவைபோட்டு, மத்திய சர்க்காரோடு நீங்கள் சண்டை போடவேண்டும்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** அப்படி நாங்கள் மத்திய சர்க்காரோடு சண்டைபோடுவதாக இருந்தால் நீங்கள் எங்களை ஆதரிக்கத் தயாராய் இருக்கிறீர்களா?

**திரு. கே. டி. கே. தங்கமணி:** நிச்சயமாக ஆதரிப்போம். அதில் ஒன்றும் சந்தேகம் கிடையாது. மத்தியப் பிரதேசத்தில் அப்படிச் செய்திருக்கிறோம். அவர்கள் சண்டைபோட்டு வாங்கியிருக்கிறார்கள். அப்படிச் சண்டைபோட்டால் நமக்கும் கிடைக்கும்.

ஒரு பக்கம் உரம் இல்லை என்கிறபோது இன்னொரு பக்கம் எப்படி 120 ரூபாய், 130 ரூபாய்க்குக் கிடைக்கிறது? சாதாரணமாக மார்க்கெட்டிங் சொசைடி மூலமாக விநியோகிக்கிற உரமே தனியாருக்குத்தான் இப்போதுள்ள நிலைமையினால் போய்விடுகிறது.

ஓரிடத்தில் போய்ப் பிடித்தோம். அவருக்கும் உரத்திற்குமே சம்பந்தம் கிடையாது. அவர் ஒரு லேவாதேவிக்காரர். அவரிடம் 200 மூட்டைகள் கலப்புரம் இருக்கிறது. கலப்புரம் என்று இருக்கிற அந்த உரம் கலப்பட உரமாகவே இருந்தது. அதைத் தவிர 22 மூட்டை யூரியா உரம் இருந்தது. அவர் விழிக்கிறார். சிவில் சப்ளை இலாக்காவைச் சேர்ந்தவர் வந்து, சொல்லிக்கொடுக்கிறார், "மேலூரில் உள்ள என் நிலத்திற்காக வாங்கினேன் என்று சொல்லுங்கள்' என்பதாக. இப்படி பொதுமக்களுக்கு விநியோகிக்க வேண்டுமென்று மார்க்கெட்டிங் சொசைடிக்கு அனுப்புகிற உரம் கூட தனிப்பட்டவர்களின் கள்ளச் சந்தைக்குப் போய்விடுகிறது என்றால் அதை நாம் அனுமதிக்கக் கூடாது. மக்களுக்கு அத்தியவசியத் தேவையான உணவுப் பொருள், உரம், சீனி போன்றவற்றை இப்படிப் பறித்து கள்ளச் சந்தைக்குக் கொண்டு போகிறவர்கள் யாராக இருந்தாலும் அவர்களைப் பிடித்து எத்தனை வருஷம் வேண்டுமென்றாலும் ஜெயிலில் போடுவது நல்லது. அவர்களை வெளியில் விட்டுவைப்பதே ஆபத்து என்பது என் அபிப்பிராயம்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டுமென்பதிலே யாருக்கும் இரண்டு விதமான அபிப்பிராயம் கிடையாது. உரம் பற்றாக்குறை இருக்கிறது என்று சொன்னால், இந்திய கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் இங்கே ஒத்துக்கொள்ள மறுக்கிறார். ஆனால், பாராளுமன்றத்தில், மத்திய அமைச்சர் ஷிண்டே இந்தியாவிலே மட்டும் உரப் பற்றாக்குறை இல்லை, உலகத்திலே இருக்கிறது. ரஷியாவிலே இருக்கிறது என்று சொன்னால், அதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சித்





தலைவர் ஏற்றுக் கொள்கிறார். அங்கே இந்திய கம்யூனிஸ்ட் கட்சி பற்றாக்குறை இருக்கிறது என்று சொல்கிறது. ஆனால், தமிழ்நாட்டில் சொன்னால், மறுக்கிறது ஏன் என்று புரியவில்லை.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** உரப் பற்றாக்குறை என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். இருப்பதைச் சரியாக வினியோகிக்காமல், பிளாக் மார்க்கெட்டில் விற்கப்படுகிறதே, அதைத் தடுக்கிறோமா என்பதுதான் பிரச்சினை.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** அதைப்பற்றி காலையிலே அமைச்சர் அவர்கள் விளக்கினார்கள். அதைத்தான் இந்திய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் அவர்களும் விளக்குகிறார்கள். அரசாங்கப் பொறுப்பிலே கொடுக்கிற உரம் சரியாக வழங்கப்படுகிறதா என்பது கண்காணிக்கப்படுகிறதா என்பதுதானே. அவர்களுக்கு விற்கலாம் என்று அனுமதி கொடுக்கப்படுகிறது. அவர்கள் விற்கலாம் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். பாராளுமன்றத்தில் அமைச்சர் திரு. ஷிண்டே அவர்கள் உலகத்திலே உரப் பற்றாக்குறை இருக்கிறது, நமக்கு ரஷியா உரம் அனுப்பப் போகிறது என்று சொல்கிறபோது, இங்கு உரம் இல்லையென்று ஒத்துக்கொள்கிற இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தமிழ்நாட்டிலே சொன்னால் ஏன் ஒத்துக்கொள்ள மறுக்கிறது என்றுதான் நான் கேட்க விரும்புகிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** பொதுவாக நாட்டுக்கே கஷ்டம்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** நாட்டுக்கே கஷ்டம் என்றால், தமிழ்நாட்டிற்குக் கஷ்டம் என்று ஒத்துக் கொள்ளக் கூடாதா?

**திரு. கே. டி. கே. தங்கமணி:** பொதுவாக இங்கே கஷ்டம் இருக்கிறது என்று சொன்னால் நாட்டுக்குக் கஷ்டம், நாட்டுக்குக் கஷ்டம் என்று சொன்னால் உலகத்திற்குக் கஷ்டம் என்று சொல்கிறார்கள். முன்பு இங்கு விலைவாசி உயர்ந்திருக்கிறது என்று சொன்னால், விலைவாசி இங்கு மட்டுமா உயர்ந்திருக்கிறது, நாட்டிலே உயர்ந்திருக்கிறது, உலகத்திலே உயர்ந்திருக்கிறது என்று நீங்கள் சொல்வதைத்தான் நான் சொல்ல வேண்டியிருக்கிறது.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** விலைவாசி ஏற்றத்தைப் பற்றி இவ்வளவு நேரம் மாண்புமிகு கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் அவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டிலே விலை ஏறிவிட்டது என்று இவ்வளவு கடுமையாகப் பேசுகிறாரே, அங்கே அரசு மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்த பொழுது, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஒதுங்கி இருந்துவிட்டதே. நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு ஆதரவாக இல்லாமல் ஒதுங்கி இருந்துவிட்டதே அதற்கு என்ன காரணம்?

**திரு. கே. டி. கே. தங்கமணி:** நம்பிக்கையில்லாத் தீர்மானம் வந்த போது—பாயின்ட்டை கிளப்புவதாலே சொல்கிறேன்—அதை ஆதரித்து எழவில்லை. அதைப்பற்றி பேசியிருக்கிறோம். ஆனால், உங்களுடைய கட்சி என்ன செய்தது? சென்ற தடவை நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை முதலில் ஆதரித்துவிட்டு அவர்கள் இங்கே பந்த் நடத்திய பொழுது, நீங்கள் பிறகு ஆதரிக்காமல் ஒதுங்கி இருந்தீர்களே, நாங்கள் மெம்பர்ஸ் ஒதுங்கி இருக்கிறோம் என்று நீங்கள் சொன்னீர்களே . . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அப்படிச் சொன்னதற்கு என்ன ஆதாரம்? பிரதமர் அவர்கள் அப்படிப்பட்ட ஒரு கருத்தை வெளியிட்டிருக்கிறார்களா?

**திரு. கே. டி. கே. தங்கமணி:** ஏன் அதை நீங்கள் வற்புறுத்தாமல் இருந்தீர்கள் என்று அறிய விரும்புகிறேன். அந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்த பொழுது, அதை ஆதரித்ததை அப்படியே நிலை எடுப்பதற்கென்ன? தீவிரமாகச் செயல்படக் கூடிய அங்கே எதிர்க் கட்சியில் இருக்கிற--இங்கே ஆளும் கட்சியும் அதன் தலைமையும் தீர்மானத்தைக் கொண்டு வருவதற்கு ஆதரவு தெரிவித்துவிட்டு, நாளைக்கு வரப் போகிறது என்றவுடன் ஒதுங்கி இருந்ததே......

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை முதலிலே ஆதரிக்கவும் இல்லை, பிறகு அத் தீர்மானம் வற்புறுத்தப்படவும் இல்லை. அப்பொழுது பிரதமர் வெளி நாட்டுப் பயணம் மேற்கொள்வார் என்று சொன்ன காரணத்தினால், அப்பொழுதே நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு





வந்தவர்கள் அதை விட்டு விட்டார்களே தவிர, வேறொன்றுமல்ல. முதலிலே ஆதரித்துவிட்டு, பிறகு ஒதுங்கிவிட்டதாகச் சொல்வது தவறு.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** இன்றைக்கு நீங்கள் சொன்னீர்கள் இன்றைக்கு, ஆதரிக்கவில்லை என்று சொன்னீர்கள். நாங்கள் மொட்டையாக எதையும் ஆதரிக்கக் கூடியவர்கள் அல்ல. நாங்கள் மொட்டையாக எதையும் எதிர்க்கக் கூடியவர்களும் அல்ல. இன்றைக்குப் பத்திரிகையிலே பார்த்திருக்கலாம். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டுக் கட்சி உறுப்பினர் ஜோதிர்மாய் பாசு அதைப் பற்றி பேசியிருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர் கந்தப்பன் அவர்கள் ஒத்துக்கொள்வார்கள். ஹிரேன் முக்கர்ஜி அவர்களுடைய முழு பிரசங்கத்தையும் படித்தால் கொஞ்சம் வசதியாக இருக்கும்.

The cleanl'ness of public life, in which the public should be vitally interested must be matters of public importance. The people are entitled to know whether they have entrusted their affairs to an unworthy man.

என்று அந்த அரசையும் பார்த்துக் கேட்டார். அதையும் நாங்கள் அங்கே கேட்கிறோம். அதே நேரத்திலே பொதுவாக, இன்றைக்கு பெருமதிப்பிற்குரிய பிரதம மந்திரி போன்றவர்கள் ஜட்காவிலே வருவது போதாது. இது ஏமாற்றுவது என்று தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார். சொன்னது மாத்திரமல்லாமல்......

I call for str'ct observance of austerity by those in high cffices. Prime Minister's buggy ride or other divers:onary exhibitionism would not do. Every call to the people for sacrifice had to be princ'pled so as to make them feel that people at the top too shared their travail. There could no moratorium or strikes when a few dominating the economic life lived in Babylonian luxury.

மற்றவர்களைப் பார்த்து நீங்கள் 'ஆஸ்டரிட்டி' இருங்கள் என்று சொல்வது சரியல்ல என்று குறிப்பிட்டிருப்பது எங்கள் கட்சியினுடைய குரல்தான். இதே நம்பிக்கையில்லாத் தீர்மானம் வந்த பொழுது நாங்கள் தான் சொல்கிறோம். இன்றைக்கு நீங்கள் பற்றாக்குறை என்று சொல்கிறீர்கள். சரி. நீங்கள் கொடுக்கிற விவரம் மாதிரி நாங்கள் கொடுக்க முடியாது. ஆனால், இருப்பதை

இந்த முறையிலே வினியோகம் செய்யப்பட்டிருக்கிறது என்று விவரம் கொடுங்கள், இவ்வளவு பற்றாக்குறை என்று சொல்லுங்கள். பொதுவாகச் சொல்வார்கள், மின்சாரப் பற்றாக்குறை......

**திரு. செ. கந்தப்பன் :** தலைவர் அவர்களே, பேச்சின் இடையிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 'கந்தப்பன் அவர்கள் ஒத்துக் கொள்வார்கள்' என்று சொன்னார். நான் கூர்ந்து கவனித்து வந்தேன் அவரது உரையை. எதைக் குறித்து அப்படி சொன்னார்? எதைச் சொல்ல அப்படி சொன்னார்? ஏனென்றால், நாளைக்கு அது குறிப்பேட்டில் ஏறிவிடும். நான் எதையோ சொன்னது போலாகிவிடும்

**திரு. கே. டி. கே. தங்கமணி :** பாராளுமன்றத்தில் இருந்தவராயிற்றே, ஹிரேன் முக்கர்ஜியைப் பற்றித் தெரிந்திருக்கும். அதைப்பற்றிப் படித்திருப்பார் என்றுதான் சொன்னேன். நீங்கள் ஏன் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் கலந்துகொள்ளவில்லை யென்று சொன்னார்கள்......

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** கனம் உறுப்பினர் தங்கமணி அவர்களும், திரு. மாரிமுத்து அவர்களும் உர வினியோகத்தைப்பற்றிப் பேசினார்கள். அதுவும் உரம் அதிகமான விலைக்குக் கிடைக்கிறது என்று சொன்னார்கள். பொதுவாக பற்றாக்குறை இருப்பதையும் ஒப்புக்கொண்டார்கள். சென்ற ஆண்டை விட, இந்த ஆண்டு உர அளவு குறைந்திருக்கிறது என்பதைப்பற்றி புள்ளி விவரம் வேண்டுமானாலும் தரமுடியும். ஆகவே, தமிழ்நாடு பூராவும் கூட்டுறவு மூலமாக உரம் தர முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. குறைந்த அளவுதான் போடுகிறார்கள். மூட்டை என்று போடாமல், சில இடங்களிலே கிலோ அளவிலே போடப்படுகிறது. பொதுவாகப் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது. அதனால் மிகப் பெரிய பாதிப்பு ஏற்படவில்லை.

தனியார்கள் அதிக விலைக்கு விற்கிறார்கள் என்று சொல்கிறார்கள். தமிழ்நாட்டைப் பொறுத்த வரையிலும் யூரியா உற்பத்தி செய்யப்படுகிற அளவிலே. கிட்டத்தட்ட ஒரு பகுதி தான் மாநில சேமிப்பக்குத் தரப்படுகிறது. மற்றவற்றை தனியார்களுக்குத் தருகிறார்கள். அதையும் மத்திய சர்க்கார் தான் செய்கிறது. இந்த மாநிலத்திலே உற்பத்தி செய்கிற அத்தனையையும் அரசு தனக்கு எடுத்துக் கொள்ள முடியவில்லை.





காம்ப்ளெக்ஸ் போன்றவற்றை ஒரு மூட்டை, 2 மூட்டை என்று தனியாருக்குக் கொடுக்கப்படுவதை அவர்கள் அதிக விலைக்கு விற்கிறார்களே தவிர, சர்க்கார் மூட்டையை வாங்கி விற்கிறார்கள் என்று சொல்வதை முற்றும் ஒத்துக் கொள்ள முடியாது என்று நான் கூறிக்கொள்கிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** பிரதம மந்திரி வெளிநாடு சென்ற காரணத்தினாலே நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை தாங்கள் ஆதரிக்கவில்லை யென்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இப்பொழுது, பிரஷ்னேவ் இந்தியாவுக்கு வருகின்ற காரணத்தால் தான், அந்த மாதிரி சில நோக்கத்தோடு தீர்மானம் கொண்டு வந்திருக்கிற காரணத்தினால் நாங்கள் ஆதரிக்கவில்லை. ஆனால், அவர்கள் கிளப்பியிருக்கக்கூடிய பிரச்சினைகளை யெல்லாம் சரிதான் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். (குறுக்கீடு) இப்பொழுது டைவர்ஷன் அதிகமாக ஆகிவிட்டது.

ஆம், இந்த விஷயம் பற்றிப் பேசினேன். அத்தியாவசியமான பொருள்கள், அவசியமான பொருள்கள்பற்றித்தான் அதிகமாக வற்புறுத்தினேன். இன்றைக்குக் கூட, பல்சஸ், இன்னும் புட்கி ரெயின்ஸ் போன்றவற்றை யெல்லாம் பற்றி இதே முறையிலே நம்முடைய சிவில் சப்ளைஸ் இலாக்கா நடவடிக்கை எடுக்கும் என்று நான் நம்புகிறேன்.

பின்னால் பல உறுப்பினர்கள் பல விஷயங்களைச் சொல்வார்கள் என்ற முறையிலேதான் நான் இம்மாதிரியாக இருக்கக்கூடிய அத்தியாவசியப் பொருள்கள் பேரிலே சரியான விலை நிச்சயம் செய்ய, நமக்கு சில இடங்களில் அதிகாரம் இல்லாமல் இருந்தால், அந்த அதிகாரத்தைப் பெறவும், மக்களுக்குத் தேவையான முறையிலே பொருள்கள் கிடைக்கவும் ஏற்பாடு செய்ய வேண்டும்.

எசன்ஷியல் கமாடிட்டீஸ் சட்டமே தெளிவாக உள்ளது. மக்களுக்குத் தான் இந்த சட்டமேயொழிய விற்கக்கூடியவர்களுக்கு லாபம் கிடைக்க வேண்டிய முறையில் அல்ல. ஆகவே, விலை நிச்சயம் பண்ணும்போது, சில்லறை விலை நிச்சயம் பண்ணவும், ஹோல்சேல் விலை நிச்சயம் பண்ணவும் எக்ஸ்-பாக்டரி விலை நிச்சயம் பண்ணவும் முழுவதையுமே நிச்சயம் பண்ணவும் மக்களைப் பாதுகாக்க நிச்சயம் பண்ணலாம் என்று சுப்ரீம் கோர்ட்டிலே

[திரு. கே. டி. கே தங்கமணி] [1973 நவம்பர் 22

விவாதித்து முடிவு எடுத்திருக்கிறார்கள். ஆகவே, அரசு தேவைப் பொருள்கள், அத்தியாவசியப் பொருள்கள், இவற்றை யெல்லாம் சுலபமாகக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். இதைப் பற்றி எல்லாம் உறுப்பினர்கள் யோசித்து ஆலோசனைகள் கொடுக்க முடியும். அமைச்சர் அவர்கள் கொடுக்க முடியும். டிபன்ஸ் ஆப் இந்தியா ரூல்சிலே ரெஸ்டிரிக்ஷன் இருக்குமானால், எசன்ஷியல் கமாடிட்டீஸ் ஆக்டிலே ரெஸ்டிரிக்ஷன் இருக்குமானால், நடவடிக்கை எடுப்போம் என்ற அளவுக்கு நடவடிக்கை எடுப்பார்கள் என்று நினைக்கிறேன்.

[1-30 பிற்பகல்]

இது அரசு செய்த தவறு என்ற மாதிரி சுட்டிக்காட்டப்படு வதைவிட, தேவைப் பொருள்கள், மக்களுக்குக் கொடுக்கலாம், என்ற முறையில் எடுத்துக்கொள்ள வேண்டும். அநியாய முறை யிலே கொடுக்கும் சமுதாய விரோத சக்தி வேலை செய்து கொண்டி ருக்கிறது. இந்தப் பின்னணி எவ்வாறு என்று எங்களுடைய கட்சிக்குத் தெளிவாக இருக்கும் என்று சொன்னால், இந்த அரசு என்ன செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறேன். இந்தத் தீர்மானத்திலே நான் இந்த அளவிற்குப் பேசி முன்மொழிகிறேன் என்று சொல்லி என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: இப்பொழுது உரப் பற்றாக்குறை இருக்கிறது, சங்கடம் இருக்கிறது என்பதை உணர்ந்து நெய்வேலி யில் தயாராகிற உரத்தை மாநில சர்க்காருக்கே அவர்கள் விநியோகம் செய்வதற்காகக் கொடுக்க வேண்டுமென்று நான் மத்திய அமைச்சரைச் சந்தித்த நேரத்திலே சொல்லியிருக்கிறேன். ஆகவே அதைப்பற்றி மாநில சர்க்கார் மத்திய அரசுக்கு எழுதினால் அவர்கள் அதைக் கவனிப்பார்கள் என்று நினைக்கிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: அதைத்தான் நாங்கள் பல முறை மத்திய சர்க்காரிடம் வற்புறுத்திக் கேட்டிருக் கிறோம், நம்முடைய முதலமைச்சர் அவர்களும் கேட்டிருக் கிறார்கள், இங்கே உற்பத்தியாகிற யூரியா முழுமையும் இங்கேயே கொடுத்தால் கள்ளமார்க்கெட் வருவதற்கு இடம் இல்லை என்று சொல்லியிருக்கிறோம், அப்படிச் சொல்லியும் கூட அவர்கள் கேட்க



1973 நவம்பர் 22] [திரு. மன்னை ப. நாராயணசாமி]

வில்லை. நாங்கள் எவ்வளவுதான் முயற்சி செய்தாலும்கூட அவர்கள் நிலைமையை மாற்ற விரும்பவில்லை, நம்முடைய உறுப் பினர் திரு. ஏ. ஆர். மாரிமுத்து அவர்கள் முயற்சி செய்து அதை வாங்கித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : It is an important issue. Many members would like to participate in the discussion. We must be allowed to speak at least on the next non-official day.

MR. DEPUTY SPEAKER : We will be having one more non-official day before we adjourn.

THIRU K. M. SUBRAMANIAM : I want to speak on this Resolution, Sir.

MR. DEPUTY SPEAKER : I think you will have your say in the matter.

பேரவையின் நிகழ்ச்சிகள் இன்று இந்த அளவோடு முடிவுற்று மீண்டும் நாளைக் காலை 9 மணியளவில் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-32 மணிக்கு ஒத்திவைக்கப் பட்டது.

## (7) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders*

88. Notification issued with Roc. No. 188059/72-E4, dated the 7th August 1973, in regard to extension of certain provisions relating to Building Regulations under the Tamil Nadu District Municipalities Act, 1920 in the entire area of Madathukulam Town Panchayat in Coimbatore district. [Laid on the Table of the House under section 199 (2) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958)].

89. Notification issued with G.O. Ms. No. 612, Home, dated the 6th March 1973 in regard to an amendment to rule 454-A of the Tamil Nadu Motor Vehicles Rules, 1940. [Laid on the Table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Tamil Nadu Act IV 1939)].

90. Notification issued with G.O. Ms. No. 320, Excise and Prohibition, dated the 30th August 1973 in regard to prohibition of transport of toddy from any local area into any other local area in the State of Tamil Nadu on and from the 1st September 1973. [Laid on the Table of the House under section 34 (5) of the Tamil Nadu Excise Act, 1971 (Tamil Nadu Act 34 of 1971)].

91. Notification issued with G.O. Ms. No. 313, Excise and Prohibition, dated the 27th August 1973 in regard to prohibition of possession of toddy absolutely within the State of Tamil Nadu from the 1st September, 1973. [Laid on the Table of the House under section 34 (5) of the Tamil Nadu Excise Act, 1971 (Tamil Nadu Act 34 of 1971)].

92. Notification issued with G.O. Rt. No. 1683, Revenue, dated the 10th September 1973, in regard to extemption from liability to entertainments tax, show tax and additional surcharge on the benefit film show organised by Y'S Men's International Service Club of Y.M.C.A. [Laid on the Table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939)].

B. *Reports, Notifications and Other Papers*

@ 22. First Report of the Committee on Public Undertakings on the Audit Report on the Accounts of the Tamil Nadu Housing Board for the year 1964–65.

---

@ Laid on the Table of the House on 21st November 1973.

## HOW TO USE THE INDEX.

The Index is arranged alphabetically. The main Headings are printed from the margin and the sub-headings are indented from the main headings.

Under every main heading including various names, entries pertaining to proceedings other than questions are indicated by printing immediately after the subject matter within brackets, e.g., (M) for Motion, (C.A.) for Calling Attention, (R) for Resolution, (St.) for Statement, etc. An entry without any such indication will mean that it pertains to a question, except in the case of Bills and Financial Business, the entry in which cases will be self-explanatory.

All the Bills are alphabetically arranged under the main heading ' Bill(s) '.

Various bodies like Committees, Councils, Boards, Corporations etc., are consolidated under the said main headings, i.e.., ' Committee(s) ', ' Council(s) ' ' Corporation(s) ', etc.

Various subjects like Schools, Colleges, Conferences, Ports, Temples and similar other broad subjects are shown in alphabetical order under these very main headings.

All the papers laid on the Table of the House are indexed only under the main heading " Papers Laid on the Table ".

Rulings and Observations from the Chair are indexed under the main heading " Chair ".

A list of abbreviations used in the Index is given below :—

| | |
|---|---|
| A.M./Ad. Motion | ... Adjournment Motion. |
| Ann. | ... Announcement. |
| B.O.H. | ... Business of the House. |
| C.A. | ... Calling Attention to a Matter of Urgent Public Importance. |
| C. A. St. | ... Calling Attention Statement. |

| | |
|---|---|
| Consid. | ... Consideration stage of a Bill. This stage includes : (i) Motion to refer to Select/Joint Select Committee. (ii) Amendment to refer to Select/Joint Select Committee. (iii) Amendment to circulate. (iv) Motion to consider as reported by Select/Joint Select Committee. (v) Amendment to recommit to Select/Joint Select Committee, etc. |
| Consid. Cl. | ... Consideration of clauses of a Bill. |
| D. E. E. | ... Demands for Excess Expenditure. |
| Dis. S. D. or D.S.D. | ... Discussion for Short Duration on an urgent matter of Administration. |
| D.S.G. | ... Demands for Supplementary Grants. |
| G.A. | ... Governor's Address. |
| G.D. | ... General Discussion. |
| H.A.H. Dis./H.H.D. | ... Half-hour Discussion. |
| Int. | ... Introduction stage of a bill. |
| L.A. | ... Legislative Assembly. |
| L.C. | ... Legislative Council. |
| M. | ... Motion. |
| P.M. | ... Privilege Motion. |
| R/Res. | ... Resolution. |
| St. | ... Statement. |

# Index to Tamil Nadu Legislative Assembly Debates.

NINTH SESSION OF THE FIFTH LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

(19th to 22nd November 1973)

VOLUME XLIII (Nos. 1 to 4)

## A


PAGES

ABDUL JABBAR, THIRU V. M.—
- Electricity Board Budget, 1973-74, discussion ... 407-413, 428
- Pudukkotai District, inclusion of Aravakurichi and Karur Taluks ... ... ... ... ... 174-175

ACCIDENTS—
- Fall of sign board, death near Anna Salai ... 186

ADMINISTRATION—
- Government Offices in Madras, buildings ... 15-18
- I.A.S. Officers selected for Tamil Nadu ... 4
- Pudukkottai district, formation ... ... 174-175
- Statistical Inspectors, Post-Graduates ... 44

AGRICULTURE—
- Agricultural Research Station, Salem, setting up 464-466
- Coconut plantation, Madurai district ... ... 463-464

PAGES.

A—*cont.*

AGRICULTURE—*cont.*

- Cotton cultivation by Textile Corporation ... 487-488
- Dry land Agricultural Development Project ... 178–180
- Food and Agriculture team's visit ... ... 178
- Intensive Agricultural Production, Thanjavur district ... ... ... ... ... 450–459
- Potato cultivation, Madurai district, incentive ... 461–463
- Raddish cultivation, research ... ... ... 460
- Sapota, high yielding variety ... ... ... 461

ALAGARSAMY, THIRU S.—

- Enquiry into misappropriation of Madras Corporation funds (A.M.) ... ... ... ... 209
- Tools kit in Express buses ... ... ... 187–190

ANANDANAYAKI, THIRUMATHI T. N.—

- Arrest of Thirumathi T. N. Anandanayaki while proceeding to Assembly (Privilege Matter) 208–209
- Cancer units in district hospitals ... ... 441
- Dairy Project for South Madras ... ... 342–345
- Demonstration in front of the house of Thirumathi T. N Anandanayaki, M.L.A. ... ... 350–355
- Effluents from Buckingham and Carnatic Mills 12
- Electricity Board Budget, 1973–74, discussion ... 262–263, 418–419, 420–430
- Fixation of prices of essential commodities under Essential Commodities Act (R) ... ... 556–557, **572**



A—*cont.* PAGES

ANANDANAYAKI, THIRUMATHI T. N.—*cont.*

- Gas cylinders, production ... **321–323**
- Khadi and Village Industries Board, non-official as chairman ... ... ... ... ... **43**
- Madras Law College Hostel, expansion, ... **481–488**
- Mariamman temple, Salem, tower construction ... **191–192**
- Mylapore Kapaleeswarar Temple, Harijans as trustees ... **337**
- Opportunities to Members to speak in the absence of Leader or Deputy Leader of the parties (Point of Order) ... **203–204, 205–206**

ARCHAELOGY—

- Epigraphy Institute, opening ... ... **156–157**
- Idols, unearthed in Guddur ... ... **47–48**

B

BALASUNDARAM, THIRU V.—

- Coimbatore Municipality, upgrading as Corporation **470–473**

BANKS—

- Land Development Banks, share capital ... ... **33**

BILLS—

- Cultivating Tenants Protection (Amendment) Bill, 1973:
  - Int. ... ... ... ... ... **511–512**
- Dowry Prohibition Bill, 1973:
  - consid. ... ... ... ... ... **512–541**
- Excise (Amendment) Bill, 1973:
  - Message from Governor **510**
- Motor Vehicles (Tamil Nadu Amendment) Bill, 1973:
  - Int. **512**
- Prohibition (Suspension of Operation) Amendment Bill, 1973:
  - Message from President, Int. **511**

PAGES

B—*cont.*

BOARDS—
Watershed Management Board ... ... 165–166

BOMMAN, THIRU K. H.—
Bus stand (new), Ooty ... ... ... 330–331

BRIDGES—
Flyover near Gemini, lands acquired ... ... 318–319

BUILDINGS—
Construction by Madras Corporation in Thousand lights area ... ... ... ... ... 184–185
Government Offices, construction in the City of Madras ... ... ... ... ... 15–18
Structural Engineering Research Centre, functions 166–167

BUS STANDS—
Ooty ... ... ... ... ... 330–331
Tiruchirappalli, shifting ... ... ... ... 329–330

C

CHAIR—
Announcements :
B.O.H. ... ... ... ... ... 225
Panel of Chairman ... ... ... 54–55

Rulings and Observations—
Adjournment Motions.
*Appointment of an Enquiry Commission to enquire into the defalcations in the Electricity Department of the Madras Corporation.*
Consent was withheld on the ground that it was unnecessary to adjourn the other business of the House to discuss the subject in the light of the explanatory statements given by the Chief Minister and the Minister for Local Administration. 224



PAGES

C—*Cont.*

CHAIR—*cont.*
Rulings and Observations—*cont.*
Adjournment Motions—*cont.*
*Closure of colleges due to hunger strike of inmates of Government College Harijan Hostels in certain districts.*
Consent was withheld on the ground that it was unnecessary to adjourn the ther business of the House to discuss the matter in view of the explanatory statement by the Minister. 503–510

*Consideration* :
On 19th November 1974 after question hour, when the House proceeded to consider a Government Resolution, Points of Order were raised that as per the rules, Adjournment Motions given notice of should have been taken up immediately after question hour. The Chair observed that it was not proper to take up Adjournment Motions when a resolution had been duly taken up for consideration after question hour. Adjournment Motions would have to be dealt with immedately after question hour and before any other business was taken up. Information had already been furnished to the members about some Adjournment Motions. Adjournment Motions in respect of which Members had not been informed would be taken up the next day. 61–62

*General*
After the Leader of a Party had spoken, another member of that party could not speak. ... 219
On 22nd November 1973, when the House was considering notice of an Adjournment Motion on a particular subject, the Chair allowed a Member who had given notice of a Call Attention on the same subject to express his views on the subject. ... ... ... ... 506

C—Cont.

CHAIR—Cont.

Rulings and Observations—cont.

Adjournment Motions—cont.

*Labour strike in Harvey Mills, Vikramasingapuram.*

Consent was withheld on the ground that it was not necessary to adjourn the other business of the House, as there were other methods for settling labour disputes arising out of lockout or strike. 384

*Opportunity to explain.*

It was for the Chair to permit or not to permit the Member who had given notice of an Adjournment Motion to explain how the matter fell within the purview of an Adjournment Motion depending upon the importance of the incident. 385

*Unrest in Transport Department of Kanyakumari district affecting labour and public—*

Consent was withheld on the ground that it had been discussed for a longer time, than would have been allowed in case consent had been granted; also the Minister concerned had given a long explanatory statement. Hence, it was not necessary to adjourn the other business of the House to discuss that matter ... 369–384

*Allegations—*

There was no safer forum in the country than the House so far as freedom of speech was concerned where all matters could be talked about freely and frankly. But while doing so, one should speak with a sense of responsibility and should be prepared to prove his allegations, not instantaneously in the House itself or before a forum outside the jurisdiction of the House, but before the Speaker if he himself conducts an enquiry or before a Committee of Enquiry





C—cont.

CHAIR—cont.

Rulings and Observations—cont.

*Allegations*—cont.

appointed by him. There was ample protection to mention freely the names and other details when an allegation was made. Members need not be afraid on that score. But it was not proper to make vague allegations in the House against anybody, for it would reflect upon all the Members of the House. Making an allegation without giving the basis for the same was not proper, especially when the Members had protection to make any allegation with proof or basis for the same. While doing so, if anyone was adversely affected unlawfully, the House would afford protection and the Government would also be told about it. So, under the pretext that someone might be adversely affected, it was not in order to make baseless allegations and it was better not to make such allegations at all. Only if some clue was given, it would enable investigation. So, it was not in keeping with the dignity of the House to make baseless allegations. ... ... ... ... 260–263, 267–268

*Arrest of Members—*

With reference to a Point of Order raised about the arrest of a member, the Chair observed that if a Member was arrested when the House was in session, the details of the same would be furnished to the Speaker in due course who, in turn, would inform the House about it. 83–84

*Committees—*

*Presentation of Report:*

The Chairman of the Committee, if he was available, and in his absence, any other Member could present the Report of a Committee. 386

PAGES

C—*cont.*

CHAIR—*cont.*

Rulings and Observations—*cont.*

*Debate*—

*Members to speak with Chair's permission*—

Deprecating the practice of Members getting up and speaking without obtaining the permission of the Chair thus violating the usual procedure, and also the practice of two or three members speaking at the same time which was not heard by the Chair, the Speaker observed that under such circumstances, the speeches made without the permission of the Chair would not form part of the proceedings. Pointing out that such speeches were sometimes published in the Press, the Speaker observed that it was not in order for the Press to publish such speeches made by two or three Members at the same time without the permission of the Chair. ... ... ... ... ... 359–360

*Decorum*—

Generally it was not in order to comment upon personal matters relating to a Member and particularly about a person occupying the Chair ...... ... ... ... ... 264–265

Personal remarks should be avoided. ... 264

*Expression*—

The use of the expression—

"அப்பாவி" (artless) in the sentence

'இந்த அமைச்சர் பார்ப்பதற்கே அப்பாவியாக இருக்கிறார்'

(This Minister is having an artless appearance)—

Deprecated ... ... ... 243–244

*Members' seats*—

Just as a Member should speak from the seat allotted to him, a Minister also should speak from the seat allotted to him ... ... 548



PAGES

C—*cont.*

CHAIR—*cont.*

Rulings and Observations—*cont.*

*Point of Information*—

It was not in order for a Member to ask the Speaker in the House as to what happened to his notice of an Adjournment Motion and such information should be sought only in his Chamber. ... ... ... ... 38

*Point of Order*—

On 19th November 1973, the Chair expunged under Rule 83(8) a Point of Order which, in his opinion, was not a Point of Order. When exception was taken to this, the Chair observed as follows:

"If a member rose on a Point of Order and said something which was not a Point of Order and if the Chair held that it was not a Point of Order, but an abuse of the right of raising a Point of Order, and was not in keeping with the dignity of the House and the Member was wasting the time of the House, that portion which was so held to be not a Point of Order would not form part of the proceedings. Such a ruling was in accordance with the rules of procedure and it was for the House to amend the rule. The ruling should not be interpreted to mean that all Point of Order raised and ruled out by the Chair would not form part of the proceedings. ... ... ... 48–51

*Privilege Motion*—

*Against Dr. H. V. Hande*—

On 21st November 1973, the Chair named a member, Dr. H. V. Hande. While going out of the House, the member uttered the words "Coward" thrice. Thereupon, the Leader of the House moved that such utterance of Dr. H. V. Hande constituted a

CHAIR—*cont.*

Rulings and Observations—*cont.*

*Privilege Motion*—cont.

breach of privilege of the House and hence be referred to the Committee of Privileges. The House adopted the motion and the matter was accordingly referred to the Committee of Privileges." ... 359, 364–365

*Privilege Matter*—

*Arrest of a member (Thirumathi T. N. Anandanayaki) while proceeding to the House*—

On 20th November 1973, the Leader of the Congress Party raised a Matter of Privilege about the arrest of a Member of his party, Thirumathi T. N. Anandanayaki, while she was proceeding to the House and contended that as she had been thus prevented from attending the House, her privilege had been taken away and so the matter should be referred to the Committee of Privileges. After hearing the views of some Leaders of Parties and the Chief Minister, the Chair reserved its ruling. 194–199 206–209

On 21st November 1973, the Chair quoting earlier rulings in the Hosue, Lok Sabha and also the House of Commons, held that no *Prima facie* case of breach of privilege had been made out and observed as follows :

'It is a recognised principle of Parliamentary privilege that Members of the Legislature should have absolute freedom to attend the House to discharge their Parliamentary duties. Hence, they are exempt from arrest in execution of civil process. But this privilege of freedom from arrest does not extend to criminal offences. . .



CHAIR—*cont.*

RULINGS AND OBSERVATIONS—*cont.*

*Privilege Matter*—cont.

There can be no doubt about the fact that the privilege of free attendance of Legislature has not been infringed in this case, because, the arrest was in connection with an offence committed by the Member . . . .

The averment in the notice that she was coming not only to present a memorandum but also to attend the House does not alter the fact that she was arrested for having committed an offence, though she was on her way to the House . . . .

Thirumathi T. N. Anandanayaki was arrested under Section 41 of the Madras City Police Act for violating a prohibitory order and hence, the question of privilege of freedom from arrest cannot arise." ... ... 348–350

*Consideration*

A member who raised a Privilege Matter should briefly explain how the matter involved a breach of privilege of the House and it was not proper to go on explaining all the details about the incidents that happened outside. ... 354–355

If a Privilege Matter was raised about an incident that happened in the House then and there, a Motion for referring the matter to the Privileges Committee might be moved immediately and the House might adopt the motion. But, after some time lag, if a Matter of Privilege in respect of an incident that happened the previous day was raised on the next day, the Chair must be given some time to consider the same. Especially when it happened to be a matter with which the Business Advisory Committee was concerned, it was better to have a discussion about the same in the Business Advisory Committee and then decide. ... ... 505

PAGES

C—*cont.*

CHAIR—*cont.*

RULINGS AND OBSERVATIONS—*cont.*

Privilege Matter—*cont.*

*Demonstration before the residence of a member:*

On 21st November 1973, hon. Member Thirumathi T. N. Anandanayaki raised a Matter of Privilege regarding the demonstration before her residence and stated that the demonstrators used abusive and threatening slogans against her and as it prevented her from discharging her duties as a legislator it was necessary that the Members should be afforded adequate protection against such demonstrations. After hearing the Minister for Industries and some leaders of Opposition Parties, the Chair reserved its ruling for the next day ... ... 350–356

On 22nd November 1973, the Speaker holding that there could be no breach of privilege observed as follows:

"Insults offered to Members on their way to, or from the House have always been deemed high breaches of Privilege. So also, to molest a Member on account of his conduct in Parliament is a breach of privilege. . .

"The Member has not stated that the said demonstration was held with reference to her conduct in the Legislative Assembly. She has only stated that the said demonstration had indirectly threatend her from discharging her duties as an Opposition Member of this Assembly. She has not explained how that demonstration amounted to such an indirect threat. . . .

Such demonstrations cannot be held to be breaches of Privilege when the person concerned happens to be a Member of the Legislature or Parliament, unless it is proved that the said demonstration was intended as an intimidation or amounted to a molestation of a Member with a view to prevent him from discharging his duties as a Member.



PAGES.

C—*cont.*

CHAIR—*cont.*

RULINGS AND OBSERVATIONS—*cont.*

Privilege Matter—*cont.*

*Demonstration before the residence of a Member—cont.*

Hence, in the absence of any proof that the alleged demonstration has anything to do with the business of the Member relating to the House, I hold that there can be no breach of Privilege." ... ... 502–503

*Opportunity to express views:*

On 20th November 1973, Points of Order were raised when the Speaker did not allow a Member of the A.D.M.K. Party to express his views on a Matter of Privilege in the absence of the Deputy Leader, the Speaker observed:

"Though it was not obligatory on the part of the Speaker to hear the views of the Members on a Privilege issue raised by a Member, it was the practice to ascertain the views of the Leaders of Parties before the Speaker announced his decision. It was not done as a matter of right or in accordance with any rule. The views of the Leaders of Parties were ascertained to help the Speaker in arriving at a decision. In accordance with such an established practice, the views of the eLaders were ascertained ... ... 199–200, 201, 202

*Publication of news in the daily 'Thennagam' casting reflections on the Speaker*

On 21st November 1973, a member raised a Matter of Privilege against the Editor and Publisher of the daily 'Thennagam' and stated that the paper had published certain emarks made by a Member of the A.D.M.K. (Dr. H. V. Hande) without the permission of the Chair casting aspersions against the Chair and as such reflections on the character of the Speaker had been held to be breach of Privilege, the same be referred to the Committee of Privileges. The Chair reserved its ruling till the next day. ... ... ... 366–368

PAGES

C—*cont.*


CHAIR—*cont.*

RULINGS AND OBSERVATIONS—*cont.*

*Question Hear—*

It was for the Chair to declare that the question hour was over. ... ... ... ... 48

*Question and Answers—*

Importance :

Question hour being a very important one. Members should only ask questions and not be swayed away by emotions and should not use unparliamentary words. ... ... 494

*Supplementaries—*

With reference to a Point of Order that more number of supplementaries might be allowed on a particular question, considering its importance, the Chair observed that it was for the Chair to regulate the number of supplementaries taking into consideration the number of questions to be answered and their nature and importance. Members could not insist on more supplementaries to a particular question on the ground of its importance. If the Members wanted clarifications with reference to a particular question, they could ask for half-an-hour discussion on which the Speaker would take a decision. However, the matter might be discussed and decided later at the Business Advisor Committee meeting. ... ... 34–35

Should be in the form of questions and not contain suggestions. ... ... ... 18

CHELLADURAI, THIRU V.—

Arable lands, Omalur taluk ... ... ... 324–325

Bus routes, Salem-Semmankudel ... ... ... 334

Bus service, Bommidi–Mettur dam ... ... 333




PAGES

C—*cont.*


CHELLIAH, THIRU KUZHA—

Electricity Board Budget, 1973–74, discussion ... 257–259, 261, 268–270

COLLEGES—

Arts College at Ambasamudram, taking over ... 483–484

Government College (Men) for Mayuram ... 484–487

Government College (Men) for Theni ... ... 484

COMMISSION—

National Agricultural Commission's visit ... ... 29–30

COMMITTEE(S)—

Public Undertakings, first report—Presentation 385, 386

COMMUNITY DEVELOPMENT—

Programme, reorientation ... ... ... 32

CO-OPERATION—

Irrigation Societies ... ... ... ... 40–42

Madras–Chingleput Palm Products Co-operative Federation, expenditure ... ... ... ... 346–347

CORPORATION—

Handicrafts Development ... ... ... 26–27

COURTS—

Kokkirakulam, shifting of ... ... ... 171

Sub-Court for Ariyalur ... ... ... ... 172

Sub-Court for Srivilliputhur ... ... ... 173–174

D

DENNIS, THIRU N.—

Buildings, construction by Madras Corporation in Thousand Lights area ... ... ... 184–185

Cotton cultivation by Textile Corporation ... ... 487–488

PAGES

D—*cont.*

DENNIS, THIRU N.—*cont.*

Cycle rickshaws, production through Small Industries Corporation ... .. ... ... 169

Dairy unit (new) for Ambattur ... ... 337–341

Death due to fall of sign board near Anna Salai 186

Electricity charges, subsidy to panchayats ... 36–37

Electronic industry, report on requirements ... 319

Epigraphy Institute, opening ... ... ... 156–157

Feeder Industries, location near Tuticorin Petro-chemical Project ... ... ... ... 24–25

Fly-over near Gemini, lands acquired ... ... 318–319

Food and Agriculture Team's visit ... ... 178

Government Offices in Chepauk, construction of tiffin rooms, etc. ... ... ... ... 18–19

Gunaseelam temple, theft of jewels ... ... 47

Huts in Island Ground area ... ... ... 42–43

I.A.S. Officers selected from Tamil Nadu ... 4

Idols, unearthed in Guddur ... ... ... 47–48

Industrial growth around Tiruchirappalli district ... 25

Intensive Agricultural Production, Thanjavur district ... ... ... ... ... 450–459

Leprosy, eradication ... ... ... ... 302–304

Loans from Punjab National Bank ... ... 151–152

Madras Aluminium Company, lands ... 327

Madras Cricket Club, assistance ... ... 302

Madras-Kanyakumari Express Buses ... ... 332

Madras Museum, new additions ... ... ... 157–158



PAGES

D—*cont.*

DENNIS, THIRU N.—*cont.*

Malayalam Teachers Training School at Vilavancode, closure ... ... ... ... ... 299–301

Neyar water, sharing ... ... ... 19–20

Poisonous toddy, death at Mathur ... ... 176–177

Pottasium Chlorate Plant for Madurai ... 319–321

Raddish cultivation, research ... ... ... 460

Rural Electrification Corporation's loan to Electricity Board ... ... ... ... ... 45

Special Course in Botany ... ... ... 293–294

Stoneware Pipes Unit, Virudhachalam, market trust survey ... ... ... ... ... 322

Structural Engineering Research Centre, functions ... ... ... ... ... 166–167

Taxi stands in Madras, fees ... ... ... 185–186

Technical High Schools, location ... ... 301

Transport buses, concessional tickets for students 186–187

Watershed Management Board ... ... 165–166

World Bank Team's Visit ... ... .. 177

DEVENDIRAN, THIRU A.—

Herbs, Maruntuvazh Malai .. ... ... 158–159

Idol thefts ... ... ... ... ... 2–3

Temple employees, pay ... ... ... ... 335–336

Workers in cigar industry, uniform wages ... 475

DHARMALINGAM, THIRU A. P.—

Equiry into misappropriation of Madras Corporation funds (A.M.) ... ... ... 219–222

PAGES

D—*cont.*

DURAISAMY, THIRU S.—
Children Hospital for Coimbatore ... ... ... 10–11
Coimbatore Municipality, upgrading as Corporation 470–473
Drinking water supply, Tirupur ... ... 309–310
Express train, Madras-Coimbatore ... ... 167–168
Laboratories for Union schools ... ... ... 7
Loans for digging wells, Palladam Taluk ... 38–39
Sub-way near Marina ... ... ... 183–184

E

EDMUND, THIRU G. R.—
Demonstration in front of the house of Thirumathi T. N. Anandanayaki, M.L.A. ... ... 360, 361, 362, 363, 364
Strike by workers in Harvey Mills, Vikramasingapuram (A.M.) ... ... ... ... 384, 385

EDUCATION—
Audit Literacy Centres, number ... ... ... 294–296
Elementary Education, separate Director ... 5
Job Oriented Scheme ... ... ... ... 5–6
Laboratories for Union schools ... ... ... 7
Mobile Laboratories for schools ... ... 7
Special Course in Botany ... ... ... 293–294
Tamil medium students (P.U.C.), books allowance 155–156

ELECTRICITY—
Neyveli second mine cut, inclusion in Fifth Plan (R) ... ... ... ... ... 57–74
Thermal Power Stations ... ... ... ... 45–1



PAGES

E—*cont.*

ELECTRICITY BOARD—
Budget, 1973–74, discussion ... ... ... 74–94, 225–280, 386–430
Rural Electrification Corporation's loan to Electricity Board ... ... ... ... ... 45

F

FACTORIES—
Soap factory at Arumbakkam, expansion ... 480–481

FLOODS—
Kanyakumari district, impounding ... ... 317–318

G

GOVERNMENT OFFICES—
Buildings, construction for ... ... ... 15–18

GURUSAMI, THIRU N. V.—
Express Bus from Madurai to Gudalur, stopping at Andipatti, ... ... ... ... ... 480
Government College (Men) for Theni ... ... 484
Indian Medicine Hospital for Madurai ... ... 159
Physical Training teachers in Kallar Reclamation schools, pay ... ... ... ... ... 313–314
School building, Manjanaickanpatti Panchayat ... 327

H

HANDE, DR. H. V.—
Arrest of Thirumathi T. N. Anandanayaki and some others (Point of Order) ... ... 82–84
Demonstration in front of the house of Thirumathi T. N. Anandanayaki, M.L.A. ... ... 358, 359
Dowry prohibition Bill, 1973 ... ... ... 522–526, 539, 540–541

PAGES

H—*cont.*

HANDE, DR. H.V.—*cont.*

Electricity Board Budget, 1973–74, discussion ... 84–99, 267

Enquiry into misappropriation of Madras Corporation funds (A.M.) ... .. ... ... 212–214

Expunction of irrelevant points of order, Point of Order ... ... ... ... ... 48–50

Opportunities to Members to speak in the absence of Leader or Deputy Leader of the parties (Point of Order) ... ... ... ... ... ... 199–200, 202, 203

Statistical Inspectors, Post-Graduates ... ... 44

HARBOUR—

Madras, extension ... ... ... ... 444–445

HOSPITALS AND DISPENSARIES—

Cancer units in District Hospitals, ... ... 441

Dharmapuri, Blood Bank ... ... ... 441–442

Government Officers (Non-Gazetted) ... ... 9–10

Indian Medicine Hospital for Madurai ... ... 159

Kasturi Bai Hospital Singanallur, take over ... 11

Poovanthi Primary Health Centre, building ... 161–162

Radio-active atoms, use ... ... ... ... 163–164

Separate Children Hospital for Coimbatore ... 10–11

Thanjavur Medical College Hospital, mosquitos eradication ... ... ... ... ... 162–163

Tirunelveli, medicines ... ... ... ... 442–445

Women Medical Officers for Primary Health Centres 159–161

HOSTELS—

Backward class students, Mayuram ... ... 164–165

Backward class students, Tiruchirappalli District 164

Madras Law College Hostel, expansion ... ... 481–483

PAGES

I

INDUSTRIES—

Coir industry for Thiruppuvanam Block ... 322–325

Electronic industry, report on requirements ... 319

Feeder Industries, location near Tuticorin Petro-chemical Project ... ... ... ... 24–25

Gas cylinders, production ... ... ... 321–322

Growth around Tiruchirappalli District ... ... 25

Industrial Training Institute, opening by Wakf Board ... ... ... ... ... 175–176

Match Factories, Government's aid ... ... 27–29

Pottasium chlorate plant for Madurai ... 319–321

Small Car projects, location ... ... 169–171

Small Industries Corporation, Production of Cycle-rickshaws ... ... ... ... ... 169

Small Industries, exemptions ... ... ... 25–26

Stoneware pipes unit at Vridhachalam, market survey ... ... ... ... 322

IRRIGATION—

Kallanai Canal, utilisation of surplus water of Cauvery ... ... ... ... ... 22

Neyyaru waters, sharing ... ... ... ... 19–20

Noyyal water diversion ... ... ... 21–22

Parambikulam-Aliyar Project, extent ... 22–23

Seepage Harnessing Scheme, Bhawani Project area ... ... ... ... ... 316–317

Small Farmer's Lift Irrigtion Societies ... 39

Surplus water near Madras, utilisation. ... 445–446

Vaigai Canal, improvements ... ... 314

PAGES

J.

JAMES, THIRU J.—
Opportunities to put supplementaries (Point of Order) ... ... ... ... 33, 34, 35
Seat in front row to Thiru K. A. Mathialagan, (Point of Order) ... ... ... ... 50–51

JAYARAMAN, THIRU K.—
Cotton yarn, procurement and distribution, powers to State Government ... ... ... ... 488–498
Powerlooms, grant of licences ... ... 498–502
Small Industries, exemptions ... ... ... 25–26

JOTHI VENCATACHELLUM, THIRUMATHI—
Opportunities to Members to speak in the absence of Leader or Deputy Leader of Parties (Point of Order) ... ... ... ... 204

K.

KANDAPPAN, THIRU S.—
Fixation of prices of essential commodities under the Essential Commodities Act (R) ... 570

KANDASAMI, THIRU MANALI C.—
Arrest of Member Thirumathi T. N. Anandanayaki while proceeding to the Assembly (Privilege Matter) ... ... ... ... ... 206–207
Enquiry into misappropriation of Madras Corporation funds (A.M.) ... ... ... ... 209
Neyveli Second mine cut, inclusion in the Fifth Plan (R) ... ... ... ... 72
Opportunities to Members to speak in the absence of Leader or Deputy Leader of Parties (Point of Order) ... ... ... ... ... 206
Strike in the State Transport Department, Kanyakumari district (A.M.) ... ... ... 374–375



PAGES

K—*Cont.*

KANDASAMY, THIRU K.—
Fixation of prices of essential commodities under the Essential Commodities Act (R) ... ... 565

KANDASAMY, THIRU K. P.—
Electricity Board Budget, 1973–74, discussion ... 253–257

KARTHEESAN, THIRU V.—
Flood waters in Kanyakumari district, impounding 317–318

KARUNANIDHI, DR. M.—
Arrest of Member Thirumathi T. N. Anandanayaki while proceeding to the Assembly (Privilege Matter) ... ... ... ... ... 207–208
Enquiry into misappropriation of Madras Corporation funds (A.M.) ... ... ... 222–223, 224
Expunction of irrelevant points of order (Point of Order) ... ... ... ... ... 55–56
Fixation of prices of essential commodities under the Essential Commodities Act (R) ... 568–569
Neyveli Second mine cut, inclusion in Fifth Plan (R) ... ... ... ... ... 57–60, 60–61, 73
Opportunities to Members to speak in the absence of Leader or Deputy Leader Parties, Point of Order) ... ... ... ... ... ... 204–205

KAVERIMANIAM, THIRU C.—
Electricity Board Budget, 1973–74, discussion ... 93–97

KHADI—
Khadi and Village Industries Board, non-official as Chairman ... ... ... ... ... 48

KITTAPPA, THIRU N.—
Agricultural Research Station, Salem, setting up ... 464–466

PAGES

K—*Cont.*


KITTAPPA, THIRU N.—*Cont.*

Bus route between Mappadugai of Mayuram and Kodangudi ... ... . ... ... 334–335

Bus route new between Mayuram junction and Coleroon Pappakudi ... ... ... ... 334

Co-operative Irrigation Societies ... ... 40–42

Dry land agricultural development project ... 178–180

Effluents of Tiruchirappalli Distillaries and chemicals ... ... ... ... ... 12–15

Government College (Men) for Mayuram ... 484–487

Hostel for Backward Class students, Mayuram 164–165

Idol thefts, arrests ... ... ... ... 3–4

Madras Harbour, extension ... ... ... 444–445

Madras-Kanyakumari Express buses ... ... 332

Marriage Hall at Sitharkadu Panchayat ... 38

Match factories, Government's aid ... ... 27–29

Mayuram Municipality, wards delimitation ... 466–470

Pension to V.O. Chidambaranar's descendants ... 153

Profession tax, deduction from salaries ... ... 182–183

Pudukkottai District, inclusion of Aravakurichi and Karur Taluks ... ... ... ... 174–175

Pudukkottai Model School, buildings ... ... 8–9

Railways, laying of double lines ... ... ... 168

Road between Manalmedu and Pappa kudi Coleroon Bank, repairs ... ... ... ... ... 447–449

Roads, Mayuram taluk, ... ... ... ... 446

Roads, Mayuram Town, widening .. ... ... 446–447

Sub-Court for Srivilliputhur, ... ... ... 173–174




PAGES.

K—cont.


KITTAPPA THIRU N.—*Cont.*

Thanjavur Medical College Hospital, mosquitos eradication ... ... ... ... ... 162–163

KOTHANDARAMIAH, THIRU K. S.—

Writers among Linguistic Minorities, assistance ... 298–299

KOVAI CHEZHIAN, THIRU—

Electricity Board Budget, 1973–74, discussion ... 264

KRISHNAMOORTHY, THIRU V. (NELLIKUPPAM)—

Demonstration in front of the house of Thirumathi T. N. Anandanayaki, M.L.A., ... ... ... 354

Electricity Board Budget, 1973–74, discussion ... 230–238, 425

Expunction of irrelevant (point of order) point of order ... ... ... ... ... ... 52

Fixation of prices of essential commodities under the Essential Commodities Act (R) ... ... 553–554, 555

KUMARASAMI, THIRU K. N.—

Kasthuri Bai Hospital, Singanallur, take over 11

L

LABOUR—

Lay off compensation to workers ... ... ... 473–474

Workers in beedi industry, Provident Fund etc.. ... 475-478

Workers in Cigar industry, uniform wages ... 475

LANDS-

Arable, Omalur taluk ... ... ... ... 324–325

Harijans, Tirukandalar ... ... ... 325–326

Inam lands, pattas to ryots ... ... ... 31

PAGES.

L.—*Cont.*

LANDS—*cont.*

Madras Aluminium Company ... ... ... 327

Pattas, powers to Tahsildars ... ... ... 323–324

Ryots of Inam Lands ... ... ... ... 30

LANGUAGE—

Writers among linguistic minorities, assistance ... 298–299

LATHEEF, THIRU M. A.—

Demonstration in front of the house of Thirumathi T. N. Andanayaki, M.L.A. .... ... ... 362, 365, 366

Electricity Board Budget, 1973–74, discussion ... 262

Expunction of inrelevant points of order (point of order) ... ... ... ... ... ... 53

Opportunities to Members to speak in the absence of Leader or Deputy Leader of Parties, (Point of Order) ... ... ... ... ... 204–205

LEPROSY—

Eradication ... ... ... ... ... 302–304

Patients ... ... ... ... ... ... 304

Patients, increase in Madras City ... ... 304–307

LIQUOR—

Poisonous toddy, deaths at Mathur ... ... ... 176–177

LOANS AND ADVANCES—

Digging of wells, Palladam Taluk .. ... ... 38–39

Nallathur Potters, Society ... ... ... 345–346

Punjab National Bank ... ... ... ... 151–152



PAGES.

L.—*Cont*

LOCAL BODIES.—

Coimbatore Municipality, upgrading as Corporation 470–473

Electricity Charges, subsidy to Panchayats ... 36–37

Panchayats, reorganisation ... ... ... 32–33

Panchayat Unions, prize for best administered ... 35–36

Pilgrim tax, Thiruvarangam ... ... ... 182

Sanitary workers, allowances ... ... ... 307–308

M.

MADHAVAN, THIRU S.—

Demonstration in front of the house of Thirumathi T. N. Anandanayaki, M.L.A. ... ... ... 357

Dowry prohibition Bill, 1973 ... ... ... 532–541

Fixation of prices of essential commodities under the Essential Commodities Act (R) ... ... 552–553, 554, 555–556, 558

MARIMUTHU, THIRU A. R.—

Arrest of Member Thirumathi T. N. Anandanayaki, while proceeding to the Assembly (Privilege Matter) ... ... ... ... ... ... 194–195

Demonstration in front of the house of Thirumathi T. N. Anandanayaki, M.L.A. ... ... 362, 363

Enquiry into misappropriation of Madras Corporation funds (A.M.) ... ... ... ... 214–215

**Fixation of prices of essential commodities under the Essential Commodities Act (R) ... ... ... 567,572**

**Neyveli Second Mine Cut, inclusion in the Fifth Plan (R) ... ... ... ... 64—65**

PAGES.

M.—*Cont.*

MARUDACHALAM, Thiru N.
Enquiry into the misappropriation of Madras Corporation funds (A.M.) ... ... ... ... 209

MEDICINES—
Herbs, Maruntuvazh Malai ... ... ... 158–159

MILK—
Dairy Unit (new) for Ambattur ... ... ... 337–341
Dairy Unit (new) for South Madras ... ... 342–345

MOTION(S)—
Ad. Motion:
Closure of Government Arts Colleges in Tiruchirappalli and Thanjavur due to fast by Harijan Hostel Students ... ... ... .. 503—510
Enquiry into misappropriation of Madras Corporation funds ... ... ... ... ... 209–224
Strike by workers in Harvey Mills, Vikramasingapuram ... ... ... ... 384—385
Strike in the State Transport Department, Kanyakumari district ... ... ... ... 369–384
B.O.H., Change in order ... ... ... ... 57

PRVILEGE :
Remarks by Dr. H. V. Hande, while with drawing from the House ... ... ... ... ... 364, 365

MUNICIPALITIES—
Double-member wards, bifurcation ... ... ... 466–470
Mayuram Municipality, wards delimitation ... 466–470

MUNU ADHI, Thiru—
Demonstration in front of the house of Thirumathi T. N. Anandanayaki, M.L.A. ... ... 356, 362
Expunction of irrelevant points of order (Point of order) ... ... ... ... ... ... 52–53



PAGES.

M.—*Cont.*

MUNUSAMI, Thiru R. R.—
Agricultural Income-tax, collection ... ... 29
Coimbatore Municipality, upgrading as Corporation 470–473
Government Offices in Madras, buildings ... 15–18
Handicrafts Development Corporation, ... ... 26–27
Sanitary workers, allowances ... ... ... 307–308
Traffic survey in Madras conducted by Highways Research Station ... ... ... ... ... 167
World Bank officials, visit ... ... ... ... 43

MUSEUM—
Madras, new additions ... ... ... ... 157–158

N.

NARASIMHAN, Thiru A. C.—
Demonstration in front of the house of Thirumathi T. N. Anandanayaki, M.L.A. ... ... ... 353, 355 356

NARAYANASAMI, MANNAI Thiru P.—
Fixation of prices of essential commodities under the Essential Commodities Act (R) ... ... 570–571

NEDUNCHEZHIYAN, Dr. V. R.—
B.O.H. Change in the order ... ... ... 57
Expunction of irrelevant points of order (Point of order) ... ... ... ... ... ... 58
Remarks by Dr. H. V. Hande while withdrawing from the House (P.M.) ... ... ... ... 364, 365

NURSES—
Certificate course in nursing, conversion as Diploma Course ... ... ... ... ... ... 443–444

PAGES

O.

OBITUARY REFERENCE—

Chinniah Gounder, N. P. M., Appavu Pillai, K., Alladi Aaron Rao, Krishnaswamy Naidu R., Sasivarna Thevar, T. L., Periya Karuppan Ambalam, Dharmalinga Naicker, Barkathullah Khan, Chief Minister, Rajasthan State ... 1–2

OFFICES—

Government—in Chepauk, construction of tiffin rooms, etc. ... ... ... ... ... 18–19

Government—in Madras, construction of buildings 15–18

Sub-Registry for Tiruvalangadu ... ... ... 15

P

PALANIAPPAN, DR. S. M.

Electricity Board Budget, 1973–74 discussion ... 392–398

Public Undertakings Committee, First report, presentation ... ... ... ... ... ... 385

PALANISAMY, THIRU M.

Parambikulam—Aliyaru Irrigation Project extension ... ... ... ... 22–23

PALANISAMY THIRU N. K.—

Apprentice teachers for elementary schools ... 296–298

Artificial rain making ... ... ... ... 180

Cancer units in District Hospitals ... ... 441

Community Development Programme, reorientation ... ... ... ... ... ... 82

Cotton cultivation by Textile Corporation ... ... 487–488

Dowry Prohibition Bill, 1973 ... ... ... 512–522, 535–538

Electricity Board Budget, 1973–74, discussion ... 225–230

Government Offices in Madras, buildings ... 15–18

Idol thefts ... ... ... ... ... ... 2–3



PAGES.

P.—*Cont.*

PALANISAMY THIRU N. R.—*cont.*

Kallanai Canal, utilisation of surplus water of Cauvery ... ... ... ... ... 22

Lay off compensation to workers ... ... ... 473–474

Leprosy patients, increase in Madras city ... ... 304–307

Loans from Punjab National Bank ... ... 151–152

National Agricultural Commission's visit ... ... 29–30

Noyyal water to Polathur tank ... ... ... 21–22

Nursing, certificate course, conversion as Diploma course ... ... ... ... .. ... 443–444

Pilgrim tax, Tiruvarangam Municipality ... ... 182

Poultry Development Corporation ... ... 180–182

Radio-active atoms, use ... ... ... ... 163–164

Small Car project, location ... ... ... 169–171

Special buses for women, Madurai ... ... 190–191

Thermal Power Stations ... ... ... ... 45–46

Workers in beedi industry, Provident Fund ... 475–478

Yarn, raid to unearth hoarded stocks ... ... 498

PANCHAYAT UNIONS—

Separate Extension Officers (industries) ... ... 328–329

PAPERS LAID ON THE TABLE—

Agricultural Income tax Act, 1955 obligation ... 431

Agricultural Income Tax Rules 1955, notification 101

Agricultural Land Record of Tenancy Rights Act, 1969, notification ... ... ... ... 99–100

Agricultural Produce Market Act, 1959, notifications 102–103

PAGES

P—*cont.*

PAPERS LAID ON THE TABLE—*Cont.*

Agricultural Produce Markets Rules, 1962, Notifications ... ... ... ... ... 106–107, 108–109

Agricultural University, Annual Report ... ... 109

An Economic Appraisal, 1973 ... ... ... 112

Annual Financial Statement of the Electricity Board, Statement of action taken on the suggestions. ... ... ... ... 112

Central Sales Tax, notification ... ... 111

Cheran Transport Corporation Annual report and second report ... ... ... ... 110

Children Act, 1920, notification ... ... ... 102

Cinemas (Regulation) Rule 1957, notification ... 97

Co-operative Societies Act, 1961, notification ... 103–105, 109

Commission of Inquiry on the incidents relating to the assault on Professor A. Srinivasan at Palayamcottai, and the death of student Lourdhunathan report ... ... ... ... ... 113

Commission of Inquiry on the undersirable clashes between students, busmen and the police at Tiruchirappalli, report ... ... ... ... 113

Committee on Public Undertakings First Report on the Audit Report on the Accounts of the Tamil Nadu Housing Board ... ... ... ... 574

Companies Act, 1956, notification ... ... 481

District Municipalities Act, 1920, notification ... 104, 106

Electricity Board Budget, Speech of Thiru O. P. Raman ... ... ... ... ... 112

Electricity Board Fifteenth Annual Administration Report ... ... ... ... ... ... 110



PAGES.

P.—*Cont.*

PAPERS LAID ON THE TABLE—*cont.*

Entertainments Tax Act, 1939 and Local Authorities Finance Act, 1961, notification ... ... 281

Entertainments Tax Act, 1939, notifications ... 97, 100, 103, 104, 105, 430, 574

Erratum to notification II-1, No. 5518 of 1972 of Revenue Department ... ... ... ... 111

Excise Act, 1971, notifications ... ... ... 98, 109, 574

Excise (Amendment) Ordinance 1973, notification. 111

General Sales Tax Act, 1959, Notifications ... 101, 281

Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Rules 1965, notification ... ... 93

Industrial Investment Corporation Limited, Annual Report ... ... ... ... ... ... 110

Kanyakumari Sreepadam Lands (Abolition and Conversion into Ryotwari) Act, 1972, notification ... 107

Khadi and Village Industries Board Act, 1959, notifications ... ... ... ... 102, 108

Madras City Municipal Corporation Act, 1919, notification ... ... ... ... ... 281

Madras City Municipal Corporation and District Municipalities (Amendment and Extension of term of office) (Amendment) Ordinance, 1973 ... 112

Motor Vehicles Act, 1931, notification ... ... 104

Motor Vehicles Act, 1939, notifications ... ... 281, 573

Motor Vehicles Rules, 1940, notifications ... ... 97–104, 99

PAGES

P—*cont.*

PAPERS LAID ON THE TABLE—*cont.*

Motor Vehicles Rules, 1949, notification ... 106

Motor Vehicles Taxation Act, 1931, notification ... 106

Pallavan Transport Corporation, Annual Report ... 110

Panchayat Act, 1958, notifications ... ... 98, 100, 101, 104, 105, 107, 108, 281, 431, 573

Panchayat Buildings Rules, 1970, notification ... 100

Pandiyan Roadways Corporation, Annual Report ... 110

Payment of wages (Deduction for National Defence Fund and Defence Savings Scheme) Rules, 1973, notification ... ... ... ... ... 111

Plantation Labour Rules, 1955, notification ... 111

Prohibition (Suspension of Operation) Amendment Ordinance, 1973, notification ... ... ... 111

Public Service Commission, Annual Report ... 109

Public Service Commission Regulation, 1954, notification ... ... ... ... ... ... 99–106

Reply to rejoinder by Thiruvalargal M. G. Ramachandran, M.L.A., and M. Kalyanasundaram, M.P., ... ... ... ... ... 281

Resume of Work in the Tamil Nadu Legislative Assembly ... ... ... ... ... 111

Sales Tax (Surcharge) Act, 1971, notification ... 102

Shops and Establishment Rules, 1948, notification. 110

Small scale and Cottage Industries Loans and Subsidy Rules, 1956 ... ... ... ... 100



PAGES

P—*cont.*

PAPERS LAID ON THE TABLE—*cont.*

Stamp Act 1899, notifications ... ... ... 111–112

Theatre Corporation Annual Report ... ... 110

Town and Country Planning Act, 1971, notification. 107

Urban Land Tax Rules, 1966, notification ... 97

Warehousing Corporation Act, 1962, notification ... 102

PARANDHAMAN, THIRU A.—

Education, Job oriented system ... ... 5–6

Land Development Banks share capital ... 38

Leprosy patients ... ... ... ... ... 304

Mobile Laboratories for Schools ... ... 7

Nallathur Potters' Society Loans ... ... 345–346

Panchayats, reorganisation ... ... ... 32–33

Pattas, powers to Tahsildar ... ... ... 323–324

Small Farmers' Lift Irrigation Societies ... ... 39

Sub-Registrar Office for Thiruvelangadu ... ... 15

Surplus water near Madras, utilisation ... ... 445–446

PAULIAH, THIRU A.—

Electricity Board Budget, 1973–74 discussion ... 398–402

PENSIONS—

V. O. Chidambaranar's descendants ... 153

PAGES

P—*cont.*


PERUMAL, THIRU A. R.—

Neyveli Second mine cut, inclusion in the Fifth Plan (R) ... ... ... ... ... ... 64

POINTS OF ORDER—

Arrest of Thirumathi T. N. Anandanayaki M.L.A. and some others ... ... ... ... ... 82–84

Expunction of irrelevant Points of order ... ... 48–50, 51–54, 55–57

Seat to Thiru K. A. Mathialagan in front row ... 50–51

POLICE—

Idol thefts, arrest ... ... ... ... ... 3–4

Idol thefts, Special cell for prevention ... ... 2-3

PONNAPPA NADAR, THIRU R.—

Arrest of Member Thirumathi T. N. Anandanayaki while proceeding to the Assembly (Privilege Matter) ... ... .. ... ... 195–196

Demonstration in front of the house of Thirumathi T. N. Anandanayaki (Privilege Matter) ... ... 358–359, 362

Enquiry into the misappropriation of Madras Corporation funds (A.M.) ... ... ... ... 210–211

Neyveli Second mine cut inclusion in Fifth Plan (R) ... ... ... ... 62–63

Opportunities for Supplementary (Point of order) ... 34

Strike in the State Transport Department, Kanyakumari District (A.M.) ... ... ... 369–372, 382, 383




PAGES

P—*cont.*


POULTRY—

Development Corporation ... ... .. 180–182

POWERLOOMS—

Grant of licenses ... ... ... ... 498–502

PRIVILEGE—

Arrest of Member T. N. Anandanayaki while proceeding to the Assembly ... ... ... 194–199, 206–209, 348–350

Demonstration in front of the house of Thirumathi T. N. Anandanayaki, M.L.A. ... ... 502–503, 350–364

Publication in "Thennagam" reflecting on the character of the Speaker ... ... ... ... 366–368

Remarks by Dr. H. V. Hande while withdrawing from the House (M) ... ... ... 364-365

PUBLIC HEALTH—

Effluents from Buckingham and Carnatic Mills ... 12

Efflyents from Tiruchirappalli Distillaries and Chemicals ... ... ... .. ... 12–15


R.


RADHAKRISHNAN, THIRU M. S.—

Laboratory for Thanipadi Government High School ... ... ... ... ... ... 7–8

PAGES.

R—*cont.*

RAILWAYS—
Double lines, laying of ... ... ... ... 168
Express train, Madras–Coimbatore ... ... 167–168

RAINS—
Artificial rain making ... ... ... ... 180

RAJA, THIRU A. M.—
Seepage Harnessing Scheme, Bhavani Project area ... ... ... ... ... ... 316–317

RAJAMANICKAM, THIRU K.—
Electricity Board Budget, 1973–74, discussion ... 270–275
Roads, Kumbakonam to Tiruvarur, straightening 449–450

RAMACHANDRAN, THIRU S.—
Motor Vehicles (Tamil Nadu Amendment) Bill 1973 ... ... ... ... ... ... 512
Strike in State Transport Department, Kanyakumari district (A.M.) ... ... ... 375–382, 383

RAMAN, THIRU O. P.—
Electricity Board Budget, 1973–74, discussion ... 74–82, 40, 404, 414, 415, 420, 422.

RELIGIOUS ENDOWMENTS—
Vigilance cell in the Department ... ... 46–47

RESOLUTIONS—
Fixation of prices of essential commodities under the Essential Commodities Act ... ... 542–573
Neyveli Second mine cut, inclusion in Fifth Plan 57–74



PAGES

R—*cont.*

ROAD(S)—
Kumbakonam to Thiruvarur, straightening ... 449–450
Manalmedu to Papakudi Coloroom Bank, repairs 447–449
Mayuram Taluk ... ... ... ... ... 446
Mayuram Town, widening ... ... ... 446–447
Subway near Marina ... ... ... ... 183–184

S.

SADASIVAM, THIRU S.—
Sub-Court for Ariyalur ... ... ... 172

SADIQ PASHA THIRU S. J.—
Cultivating Tenants Protection (Amendment) Bill, 1973 ... ... ... ... ... 511–512
Excise (Amendment) Bill, 1973 int., ... ... 510
Prohibition (Suspension of Operation) Amendment Bill, 1973 ... ... ... ... ... 511

SALT—
Production through modern factories ... ... 27

SANGUMUTHU THEVAR, THIRU S.—
Arts College at Ambasamudram, taking over ... 483–484
Courts at Kokkirakulam, shifting of ... ... 171
Pattas to Ryots from Inam Lands ... ... ... 31
Ryots of Inam Lands ... ... ... ... 80
Sai Baba temple, Mylapore ... ... ... 336–337
Slum Clearance Scheme, lands ... ... ... 43–44
Vigilence Cell in Religious Endowments Department ... ... ... ... ... ... 46–47

PAGES.

S—*cont.*

SATHIAVANIMUTHU, THIRUMATHI—

Closure of Government Arts Colleges in Tiruchirappalli and Thanjavur, due to fast by Harijan Hostel Students (A.M.) ... ... ... 506–509

SCHOLARSHIPS—

Ezhuvar Community Students ... ... ... 310–313

SCHOOLS—

Buildings, Manjanaickanpatti Panchayat ... ... 327

Laboratories for Thanipadi Government High School ... ... ... ... ... 7–8

Malayalam Teachers Training School at Vilavancode, closure ... ... ... 299–301

Pudukkottai Model School, buildings ... ... 8–9

Technical High Schools, location ... ... 301

SHANMUGAM, THIRU P. U.—

Electricity Board Budget, 1973–74, discussion ... 425–426

Fixation of prices of essential commodities under the Essential Commidities Act (R) ... ... 547–548, 563, 564–565, 566–567

SIVAPRAKASAM, THIRU D. S. A.—

Medicines, Tirunelveli Medical College Hospital ... 442–443

Scholarships for Ezhuvar Community students 310–313

SLUM CLEARANCE—

Huts in Island Ground area ... ... ... 42–43

Lands ... ... ... ... ... 43–44

Visit by World Bank Officials ... ... ... 43



PAGES.

S.—*Cont.*

SMALL SCALE INDUSTRIES—

Mobile Training Unit for Gummudipoondi ... 328

SOCIAL WELFARE—

Marriage Hall at Sitharkadu Panchayat ... ... 33

SONAIAH, THIRU T.—

Coir Industry for Thiruppuvanam block ... ... 322–323

Express Bus from Madurai—Mandapam Road stopping at Tirupuvanam ... ... ... 479–480

Poovanthi Primary Health Centre, buildings ... 161–162

Vaigai ayacut inclusion of tanks ... ... ... 316

Vaigai ayacut, tanks ... ... ... ... 314–316

Vaigai Canal, improvements ... ... ... 314

SOUNDARAPANDIAN, THIRU P.—

Adult Literacy Centres, ... ... ... ... 294–296

Bus stand, Tiruchirappalli ... ... ... 329–330

Closure of Government Arts Colleges in Tiruchirappalli and Thanjavur due to fast by Harijan Hostel Students (A.M.) ... ... ... 506–507

Coconut Plantations, Madurai district ... ... 463–464

Coimbatore Municipality, upgrading as Corporation ... ... ... ... ... ... 470–473

Elementary Education, separate Director ... 5

Handicrafts Development Corporation ... ... 26–27

Hostels, for Backward Class students, Tiruchirappalli District ... ... ... ... ... 164

PAGES.

S—*cont.*

SOUNDARAPANDIAN THIRU P.—*Cont.*

Industrial Training Institute, opening by Wakf Board ... ... ... ... ... 175–176

Lands for Retired Military personnel ... 326

Marriage Hall, funds from Krishnarayapuram Thiru kanmaleeswarar temple ... ... ... 193

Mobile Laboratories for Schools ... ... ... 7

Municipalities bifurcation of double—Member wards ... ... ... ... ... 466–470

Neyveli Second mine cut, inclusion in the Fifth plan (R) ... ... ... ... ... 53

Non-Gazetted Government Officers, separate Dispensaries ... ... ... ... ... 9–10

Panchayat Unions, prize for best administered ... 35–36

Potato cultivation (Madurai district), incentive ... 461–463

Salt production through Modern factories ... 27

Sapota, high yielding variety ... ... ... 461

Travellers' Bungalow, funds from Krishnarayapuram, Thirukanmaleeswarar temple ... ... 192

Water Supply, schemes for Coimbatore ... ... 308–309

SPORTS—

Madras Cricket Club, assistance ... ... ... 302

SUBBIAH, THIRU A. K.—

Closure of Government Arts Colleges in Tiruchirappalli and Thanjavur due to fast by Harijan Hostel Students (A.M.) ... ... ... 504, 505–506



PAGES

S—*cont.*

SUBBIAH, THIRU A. K.—*cont.*

Enquiry into the misappropriation of Madras Corporation Funds (A.M.) ... ... 218–219

Electricity Board Budget, 1973–74, discussion ... 413–418

SUBRAMANIAM, THIRU A.—

Express buses, without conductors ... ... 332

SUBRAMANIAM, THIRU K. M.—

Electricity Board Budget, 1973–74, discussion ... 386–392

Expunction of irrelevant points of order (Point of Order) ... ... ... ... ... ... 511

Opportunities to Members to speak in the absence of Leader or Deputy Leader of the parties (Point of Order) ... ... ... ... ... ... 201–202

SUNDARA BHARATHI, THIRU SOWDI S.—

Dowry Prohibition Bill, 1973 ... ... ... 526–528

SURENDRAN, THIRU M.—

Blood Bank, Dharmapuri Hospital ... ... ... 441–442

Electricity Board Budget, 1973–74, discussion ... 245–253

Enquiry into the misappropriation of Madras Corporation funds (A.M.) ... ... ... ... 209

Opportunities to Members to speak in the absence of Leader or Deputy Leader of the parties (Point of Order) ... ... ... ... ... ... 205–206

Pages.

S—*cont.*

SWAMIDHAS, THIRU A.—
Electricity Board Budget, 1973–74, discussion ... 238–245

T

TANKS—
Under Vaigai Ayacut ... ... ... 314–316
Vaigai ayacut inclusion of tanks ... ... ... 316

TAXES—
Agricultural Income-tax, collection ... ... 29
Pilgrim tax, Tiruvarangam ... ... ... 182
Profession tax, deduction from salaries ... 182–183
Taxi stands in Madras, fees ... ... ... 185–186

TEACHERS—
Apprentice, for elementary schools ... ... 296–298
Physical Training teachers in Kallar Reclamation schools, pay ... ... ... ... 313–314

TEMPLES—
Employees, pay ... ... .. ... ... 335–336
Funds from Krishnarayapuram. Thirukanmaleeswarar temple ... ... ... ... ... 193
Gunaseelam temple, theft of jewels ... ... 47
Mariamman temple, Salem tower construction ... 191–192
Mylapore Kapaleeswarar temple, Harijans as trustees ... ... ... ... ... 337
Sai Baba temple, Mylapore ... ... ... 336–337



Pages.

T—*cont.*

TEXT BOOKS—
Publication in Tamil ... ... ... ... 153–155

TANGAMANI, THIRU K. T. K.—
Arrest of Member Thirumathi T. N. Anandanayaki while proceeding to the Assembly (privilege matter) ... ... ... ... ... ... 196–198
Closure of Government Arts Colleges in Tiruchirappalli and Thanjavur, due to fast by Harijan Hostel students (A.M.) .. ... ... 504–505
Demonstration in front of the house of Thirumathi T. N. Anandanayaki M.L.A. ... ... ... 356, 357, 360
Electricity Board Budget, 1973–74, discussion ... 265–267
Enquiry into the misappropriation of Madras Corporation funds (A.M.) ... ... ... ... 216–218, 223–224
Expunction of irrelevant points of order, (point of order ... ... ... ... ... ... 53
Fixation of prices of essential commodities under the Essential Commodities Act, (R) ... ... 542–547, 548–552, 553, 554, 555, 557–558, 559–564, 565, 566, 567, 568, 569–570, 571–572

PAGES.

T—*cont.*

TANGAMANI, THIRU K. T. K.—*cont.*

Neyveli Second mine cut, inclusion in Fifth Plan (R) ... ... ... ... 60, 67–70

Opportunities to Members to speak in the absence of Leader or Deputy Leader of the parties (Point of Order) ... ... ... ... ... ... 203

Strike in the State Transport Department, Kanyakumari district (A.M.) ... ... ... 372–374, 382, 383

THYAGARAJAN, THIRU E. S.—

Neyveli Second mine cut, inclusion in the Fifth Plan (R) ... ... ... ... ... 73

TRAFFIC—

Survey in Madras, conducted by Highways Research Station ... ... ... ... ... 167

TRANSPORT AND COMMUNICATIONS—

Bus Route, between Mappadugai and Kodangudi 334–335

Bus routes, nationalised in North Arcot district .. 331

Bus routes, new one between Mayuram junction and Coloroon Pappakudi ... ... ... 334

Bus routes, Salem-Semmankudal ... ... 334

Bus service, Bommidi-Mettur dam ... .. 333

Express Bus from Madurai-Mandapam Road, stopping at Tiruppuvanam, ... ... ... 479–480



PAGES

T—*cont.*

TRANSPORT AND COMMUNICATIONS—*cont.*

Express Bus from Madurai to Gudalur, stopping at Andipatti ... ... ... ... 480

Express buses, without conductors ... ... 332

Madras-Kanyakumari, express buses ... ... 332

Special buses for women, Madurai ... ... 190–191

Tools kit in Express buses ... ... ... 187–190

Transport buses, concessional tickets for students, 186–187

TRAVELLERS' BUNGALOW—

Funds from Krishnarayapuram, Thirukanmaleeswarar temple ... ... ... ... ... 192

VEERASAMI, THIRU N.—

Demonstration in front of the house of Thirumathi T. N. Anandanayaki, M.L.A. ... ... 353, 354

Electricity Board Budget, 1973–74, discussion ... 259–260, 263–264

Publication in "Thennagam" reflecting on the character of the Speaker (Privilege Matter) ... 366–368

VENKATASWAMY, Thiru B. —

Arrest of Member Thirumathi T. N. Anandanayaki while proceeding to the Assembly (Privilege Matter) ... ... ... ... 207

PAGES

V—*cont.*

VENKATASWAMY, THIRU B.—*cont.*

Demonstration in front of the House of Thirumathi T. N. Anandanayaki, M.L.A. ... ... ... 364

Electricity Board Budget, 1973–74, discussion 402–407

Enquiry into the misappropriation of Madras Corporation funds (A.M.) ... ... ... ... 215—216

Neiveli Second mini cut, inclusion in Fish Plan (R) 65–66

VEZHIVENDAN, Thiru K.—

Lands to Harijan, Thirukandalam ... ... 325—326

Panchayat Unions, separate Examination Officers for industries ... ... ... ... ... 328–329

Small scale industries training until for Gummudipoondi ... ... ... ... ... ... 328

Soap Factory at Arambakkam, expansion ... ... 480—481

Tamil medium (P.U.C.) students, books allowance 155–156

Text Books (College), Publication in Tamil ... 153–155

Women Medical Officers for Primary Heatlh Centres ... .. ... ... ... 159–161

VISITS—

World Bank Team ... ... ... ... ... 177

W.

WAHAB, THIRU K. A.—

Bus routes, nationalised in North Arcot district ... 331



PAGES

W—*cont.*

WAHAB, THIRU K. A.—

Dowry Prohibition Bill, 1973 ... ... ... 528–532

Electricity Board Budget, 1973–74, discussion ... 275–280

Madras-Chingleput Palm Products Co-operative Federation, expenditure ... ... ... 346–347

Neyveli Second Mine Cut inclusion in the Fifth Plan (R.) ... ... ... ... ... ... 66–67

WAKF BOARD—

Industrial Training Institute, opening ... ... 175–176

WATER SUPPLY—

Schemes for Coimbatore ... ... ... ... 308–309

Tirupur ... ... ... ... 309–310

V311,31 N73
31N73-15

YARN—

Cotton yarn, procurement and distribution, powers to State Government ... ... ... ... 488–498

Raids to unearth hoarded stocks ... 498

61628

*[திரு. கே. டி. கே. தங்கமணி]* *[1973 நவம்பர் 22*

விவரம் அறிய எனக்கு வாய்ப்பு ஏற்படவில்லை. இந்த மாதிரி அஸ்ஸாம், மகாராஷ்டிரா, கேரளா போன்ற இடங்களில் விலை நிர்ணயம் செய்து அதை அமல் நடத்தியிருக்கிறார்கள். பஞ்சாப் மாநிலத்தில் இதற்கு ஏற்ற வகையில் ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்த முறையில் இங்கேயும் விலை நிர்ணயம் செய்யலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொன்று இந்த அத்தியாவசியத் தேவைப்பொருள்கள் என்று வருகிறபோது சில கேள்விகள் எழலாம். இப்போது நாமே சில சமயத்தில் விலை நிச்சயம் செய்கிறோம். நமக்கு இருக்கிற அதிகாரத்தை வைத்துசெய்கிறோம். நெல் விலையை நிச்சயம் செய்கிறோம். அரிசி விலையை நிச்சயம் செய்கிறோம். இவ்வளவு அளவு தான் வைத்துக்கொள்ளலாம் என்றும் நிர்ணயம் செய்கிறோம். அதற்கு மேல் வைத்து இருந்தால் அரசாங்கம் எடுத்துக்கொள்ளும் என்றும் சொல்கிறோம். உதாரணமாக, 40 கலத்திற்கு மேல் ஒருவர் ஸ்டாக் வைத்து இருந்தால் அரசுக்குத் தெரிவிக்கவேண்டும் என்ற முறையில் இருக்கிறது. இதனுடைய நோக்கமென்ன? யாரும் 2,000 மூட்டை கூட வைத்து இருக்கலாம். அரசுக்குத் தேவை என்று இருக்கிறபோது, அந்த 40 கலத்திற்கு மேல் உள்ளதைக் கொடுத்து விடவேண்டும். அல்லது அரசு எடுத்துக்கொள்ளலாம் என்பதாகும். சில சமயத்தில் நாம் விலையைக் கூட நிர்ணயம் செய்யாமல் இருக்கலாம். அப்படி விலை நிர்ணயம் செய்யாமல் இருக்கிறபோது—நான் அனுபவத்தில் சொல்கிறேன்—30 மூட்டை நெல்லை அரசு எடுத்துக்கொள்கிறது என்று சொன்னால், அன்றைக்கு என்ன விலை கொடுப்பது, அன்று இருக்கும் மார்க்கெட் விலை கொடுப்பதா, அல்லது அரசாங்கம் நிர்ணயிக்கும் விலைக்குக் கொடுப்பதா என்ற பிரச்னை வந்தது. அப்படி வருகிறபோது மார்க்கெட் விலை கொடுக்கவேண்டுமென்று சொல்லப்பட்டது. நான் நாடாளுமன்றத்தில் இருந்த நேரத்தில் இது ரொம்ப அக்கிரமம், இரண்டுக்கும் பொதுவாக ஒரு விலையை நிர்ணயம் செய்து கொடுப்பதுதான் சரி என்று சொல்லி அந்த விவாதத்தில் பங்கெடுத்துக்கொண்டபோது தெரிவித்தேன். ஏனென்றால் போன மாதம் வரை விலை கம்மியாக இருந்தது, இன்றைக்கு ஜாஸ்தியாக இருக்கிறது, ஆகவேதான் இரண்டுக்கும் மத்தியாக ஒரு விலை நிர்ணயம் செய்யவேண்டுமென்று சொன்னேன். இதற்காக 1957-ம் ஆண்டு ஒரு அமெண்ட்மெண்ட் வந்தது,



*1973 நவம்பர் 22]* *[திரு. கே. டி. கே. தங்கமணி]*

Amendment 13 of 1957 of Essential Commodities Act of 1955 இந்தத் திருத்தத்தின் பிரதான நோக்கம் என்னவென்றால், மத்திய சர்க்கார்,

The Central Government can direct the person holding stocks of foodgrains to sell the whole or a specified part of it to any person or class of persons.

இந்த அளவுக்குத்தான் விற்க வேண்டுமென்று அவர்கள் தெளிவாகச் சொல்லலாம். அதிலே சந்தேகம் கிடையாது. அப்படிச் சந்தேகம் வருகிறபோதுதான் இந்தத் திருத்தத்திலே,

It is proposed in the absence of controlled pr ces the stockists shculd be entitled to receive the average market rate prevailing in the locality during the period of three mon hs preceding the date of the issue of the notification applying the new provisions

என்று ஒரு அம்சம் வந்தது.

ஏற்கனவே இந்திய சர்க்கார் இந்தச்சட்டம் போட்டு விட்டார்கள். மத்திய சர்க்கார் சட்டம் போட்டதை கவனிக்காமல் மாநில சர்க்கார் சில உத்தரவுகளைப் போட்டு அமல் நடத்துகிறது என்று வைத்துக்கொள்ளுங்கள். அது செல்லுமா செல்லாதா என்ற கேள்வி கிளம்புகிறது. மத்திய சர்க்கார்போட்டு இருக்கும் சட்டத்தின் நோக்கம் என்னவோ அந்த நோக்கத்திற்குட்பட்டு மாநில சர்க்கார் உத்தரவு போட்டு இருந்தால் அந்த உத்தரவு செல்லும் என்று சொல்லி சுப்ரீம் கோர்டில் இந்தப் பிரச்னை 2 தடவை எழுப்பப்பட்டு தீர்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. உதாரணமாகச் சொல்லவேண்டுமென்றால்,

The Madras Sugar Factories Control Act as amended by the Madras Sugar Factories Control (Mysore amendment) Act is not repugnant to Act X of 1955 or order dated 27th August 1955.

நம்முடைய சென்னை மாநிலம் இன்றைக்கு எல்லா வகைகளிலும் முன்னேறிச் சிறந்து இருக்கிறபோது சர்க்கரை சம்பந்தமாக எங்கேயோ போய் இருக்கிறோம். கரும்பு சம்பந்தமாக நாம் சில உத்தரவுகளைப் போட்டிருக்கிறோம். அந்த உத்தரவுகள் செல்லுமா செல்லாதா என்று முதலாளிகள் எழுப்பினார்கள். நாம் போட்ட சட்டத்தையொட்டி மைசூரில் அப்படியே போட்டார்கள். பிறகு